29 APR 1971
MADRAS

படம் : பி. ரங்கநாதன்

'பரிதி யே! பொருள் யாவிற்கும் முதலே!
பானு வே! பொன்செய் பேரொளித் திரளே!
கருதி நின்னை வணங்கிட வந்தேன்;
கதிர்கொள் வாள்முகம் காட்டுதி சற்றே!'

—பாரதியார்

# தவழும் விநாயகர்!

நமக்குத் தொழில், கவிதை; நாட்டிற் குழைத்தல்;
இமைப்பொழுதும் சோரா திருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான் :
சிந்தையே இம்மூன்றும் செய்.

—பாரதியார்

(இந்த அபூர்வச் சிற்பம் வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவில் தூண் ஒன்றில் காணப்படுகிறது).

# ஆடிக் களிக்கும் மயில்

[மைசூர் ராஜ்யத்தில் ஹளேபேடு ஹொய்சளேஸ்வரர் கோவில் சிற்பம்]

நாட்டிய சரஸ்வதி

# தமிழ் வட்டம்

(1860 ஆம் ஆண்டு xxi சட்டத்தின் கீழ்
பதிவு செய்யப்பட்டது)

## மலர் வெளியீட்டுக் குழு

**டி. எஸ். ராமலிங்கம்,** எம். ஏ., பி. எல்.
(தமிழ் வட்டத் தலைவர்)

**வி. எஸ். சுப்பையா,** ஐ. ஏ. எஸ்.
(தமிழ் வட்ட உபதலைவர்)

**கு. ராஜவேலு,** எம். ஏ.
(தமிழ் வட்ட உபதலைவர்)

**ஆர். ராமச்சந்திரன்**
(தமிழ் வட்டச் செயலாளர்)

**எஸ். நல்லபெருமாள்,** பி. ஏ., பி. எஸ்சி., ஏ. எம். ஐ. ஈ.
(தமிழ் வட்டப் பொருளாளர்)

**கு. அழகிரிசாமி**
(மலரின் பொறுப்பாசிரியர்)

# சமர்ப்பணம்

தமிழ் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு மலரைத் தமிழ் அன்னையின் தவப் புதல்வர், தமிழ்ப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட தமிழ் வட்டத்தின் முன்னுள் செயலாளர், அமரர் திரு. வி. கே. சி. நடராஜன் அவர்களுக்குச் சமர்ப்பிக் கிருேம்.

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய்''

என்ருர் வள்ளுவப் பெருந்தகை.

தன் மகனைச் சான்ருேன் என உலகம் புகழ் வதையும் கௌரவிப்பதையும் கண்டு இன்புருத தாய் உண்டா? எனவே, தமிழ் அன்னையே! தமிழ் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு மலரை, அன்பும் பண்பும் மிக்க உன் திருமகன் நடராஜன் அவர் களுக்குச் சமர்ப்பித்து, உன் பொற்பாத கமலங்களை வணங்குகிருேம்.

தமிழ் வட்டக் குழுவினர்.

# சகல கலாவல்லி

[தஞ்சைப் பெரிய கோவில் சிற்பம்]



தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம்
தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே! சகல
கலா வல்லியே!

— குமர குருபரர்

# பெருமாளும் பெரிய திருவடியும்

திருமாலும் கருடனும்
(ராமநாதபுரம் மாவட்டம், குன்றக்குடி குகைச் சிற்பம்)

# வள்ளி தெய்வானையுடன் முருகன்

மாகநாக குமாரி யாகிய
மாதினேடு கிராத நாயகி
மருவப் புளகரும்பு தோளனை—எனை
அருமைப் பணிகொளும் தயாளனை......

—காவடிச் சிந்து

(திருவொற்றியூர் வெண்கலச் சிலைகள்)

MADRAS

# திருக்குற்ருலம் சித்திர சபைச் சிற்பங்கள்

நீர்க்குடத்துடன் நேரிழை

நட்டுவனர்

நாட்டிய மங்கை

நடன சிங்காரி

# ந ன் றி யு ரை

தமிழ் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு மலர் சிறிது காலம் தாழ்த்தி வந்தாலும் இலக்கிய மணம் கமழ வெளிவருகிறது என்பதில் தமிழ் வட்டம் உவகை கொள்கிறது. இந்த மலரை அமரர் திரு. வி. கே. சி. நடராஜன் அவர்களுக்குச் சமர்ப்பித்துத் தமிழ் வட்டம் அவர் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறது. திருமதி வி.கே.சி. நடராஜன் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டபடி தமிழ்வட்டம், நடராஜன் தம்பதிகளுக்கு ஐந்தாவது குழந்தை. ஆகவே, அதன் வளர்ச்சியில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். அந்த அக்கறையும் ஆர்வமும் நம்மை எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

''நீலத் திரைகட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரி''

என்று பாரதியாரால் பாடப்பெற்ற குமரிதேவியும், அவள் கோயில் கொண்டிருக்கும் ஆலயமும் நகரமும் இந்த மலரின் அட்டைப் படத்தில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

காலஞ்சென்ற நண்பர் திரு. வி. கே. சி. நடராஜன், தமிழ் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு மலருக்குக் கன்னியாகுமரிக் காட்சியையே அட்டைப்படமாகப் போடவேண்டும் என்று விரும்பினர். அவர் தயாரித்து வைத்திருந்த படத்தையே இம்மலரின் அட்டைப் படமாகப் போட்டிருக்கிறோம். இதை நோக்கும்பொழுது நண்பரின் பிரிவால் ஏற்பட்ட துன்ப அலைகள் நம்மை வந்து மோதுகின்றன. கன்னியாகுமரியிலேயே அவர் குமரித் தெய்வத்தின் திருவடி நீழலை எய்தினர். அன்னையுடன் அவரும் குமரிமுனையில் நின்று, நாடும் மொழியும் நன்கு வாழத் தவம் செய்கிறார் என்பதில் எங்களுக்குச் சிறிதும் ஐயமில்லை.

மலரில் பல அறிஞர்களின் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. வெளிநாடுகளில் தமிழ் இலக்கிய முயற்சிகளும் வளர்ச்சிகளும் எவ்விதம் நடைபெற்று வருகின்றன என்பதைக் காட்டும் பல கட்டுரைகளையும் இம்மலரில் காணலாம். இலங்கை, மலேசியா எழுத்தாள நண்பர்களின் கட்டுரைகள் இதுவரை தமிழகத்தில் வெளிவந்த எந்தப் பெரிய மலரிலும் இடம் பெறாத அளவுக்கு அதிகப் பக்கங்களில் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

கட்டுரைகளும், கவிதைகளும், சித்திரங்களும், போட்டோக்களும் உதவி இந்த மலரை நன்கு கொணரத் துணைசெய்த நண்பர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மலரில் வெளியாகியுள்ள சிற்பப் புகைப் படங்களில், கீழே பெயர் குறிப்பிடப் பட்டிருப்பவற்றைத் தவிர, பிற யாவும் சென்னையில் உள்ள மத்திய தொல் பொருள்

இலாகாவினர் அன்போடு கொடுத்து உதவியவையாகும். நாங்கள் விரும்பிய படங்களைச் சிரமம் பாராது குறித்த காலத்தில் எங்களுக்குக் கொடுத்துதவிய அவர்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரித்தாகின்றன.

இம்மலருக்கு விளம்பரங்கள் கொடுத்துதவிய நிறுவனங்களுக்கு எங்கள் நன்றி.

மலரை மிக அழகிய முறையில் ஆர்வத்துடன் அச்சிட்டுக் கொடுத்த சென்னை ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட் உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எங்கள் நன்றியும் வணக்கமும். அச்சக நிர்வாகியான நண்பர் திரு. எஸ். பி. ஷண்முகம் அவர்களுக்கு நன்றி சொல்லி எங்கள் நன்றிக்கடனைத் தீர்த்துக் கொள்ள இயலாது. அன்னாருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த மலருக்குப் பொறுப்பாசிரியராக இருந்து நற்பணி புரிந்துள்ள திரு. கு. அழகிரிசாமி அவர்களுக்கு எங்கள் நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் இம் மலரின் பொருட்டு எடுத்துக்கொண்ட முயற்சியையும், ‘கருமமே கண்ணாயினார்’ என்ற கருத்துக்கு இலக்கணமாக அவர்கள் உழைத்ததையும் எண்ணி எண்ணி வியப்படைகிறோம். அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகுக.

தமிழ் வட்ட ஆண்டு விழாவை ஆண்டுதோறும் சிறப்பான முறையில் கொண்டாட, தமது ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தைக் கொடுத்துதவும் திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழை வளர்த்து வளப்படுத்த என்றும் ஊக்கம் காட்டிவரும் தமிழக அரசுக்கு எங்கள் நன்றி.

வணக்கம்

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு !

**ஆர். ராமச்சந்திரன்,**
செயலாளர்,
**தமிழ் வட்டம்.**



# MY TAMIL STUDIES

What the Tamils have done in the struggle * no other Indian community has done. So I thought that if for no other reason than to show my sincere gratefulness to them, I should seriously read their books. So I spent the last month in attentively studying their language. The more I studied the more I felt its beauties. It is an interesting and sweet language, and from what I read, I saw that the Tamils had in their midst, in the past and even now, many intelligent, clever and wise persons. Again, if there is to be one Nation in India, those who live outside the Madras Presidency, must know Tamil.

**—Mahatma Gandhi**

[From the book MAHATMA GANDHI'S JAIL EXPERIENCES TOLD BY HIMSELF first Published by Tagore & Co., Madras, 1922.]

* South African Struggle – Ed.

(தமிழாக்கம் மறுபக்கம் பார்க்க)

# என் தமிழ்ப் படிப்பு

* போராட்டத்தில் தமிழ் மக்கள் பங்கெடுத்துக் கொண்டதைப் போல் வேறு எந்த இந்திய சமூகமும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எனவே, வேறு எந்தக் காரணத்திற்காக இல்லாவிட்டாலும், அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கேனும் அவர்களுடைய நூல்களை நான் கருத்தூன்றி வாசிக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆகவே அவர்களுடைய மொழியைக் கவனமாகக் கற்பதில் கடைசி மாதத்தைச் செலவிட்டேன். கற்கக் கற்க அதன் அழகுகளை மேன்மேலும் நான் உணரலானேன். அது சுவாரஸ்யமும் இனிமையும் நிறைந்த ஒரு மொழி. நான் படித்தவரையில், தமிழர்களிடையே மதிநுட்பமும், அறிவுத் திறனும், விவேகமும் கொண்டவர்கள் பலர் முன்பு இருந்திருக்கிறார்கள், இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டேன். இந்தியாவில் அனைவரும் ஓரின மக்களாக வாழவேண்டும் என்றால், சென்னை மாகாணத்திற்கு வெளியே வாழ்கிறவர்கள் தமிழை அவசியம் கற்றாக வேண்டும் என்று கூறுவேன்.

—மகாத்மா காந்தி

[1922-ல் சென்னை, தாகூர் அண்டு கோ முதற்பதிப்பாக வெளியிட்ட, ''மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்—அவரே கூறியவை'' என்ற நூலிலிருந்து.]

---

* காந்திஜி இங்கே குறிப்பிட்டிருப்பது தென்னாப்பிரிக்கப் போராட்டத்தை.

## நன்றி

இம்மலரில் வெளியாகியுள்ள மகாத்மா காந்தி பட பிளாக்கைக் கொடுத்து உதவிய "நவசக்தி" காரியாலயத்தின ருக்கும், திரு. வி. கே. சி. நடராஜன் பட பிளாக்கைக் கொடுத்து உதவிய தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் லிமிடெட் காரியாலயத்தினருக்கும் தமிழ் வட்டம் நன்றி செலுத்துகிறது.

# இதோ ஒரு மனிதர்!

**எஸ். டி. சுந்தரம்**

எல்லோருக்கும் மனம் இருக்கிறது. மானிட அறிவைச் செயலுக்குத் தூண்டி மகத்தான சாதனை களைச் செய்துமுடிக்கும் பேராற்றல் கொண்டதல்லவா மனம்!

சினமும் செருக்கும் சேராதிருந்தால், சீரும் செம்மையும் பெற்று, அன்பும் அருளும் நிறைந்து ஆருயிர்ப் பணியில் முழுமை பெறுகிறது நல்ல மனம்.

அத்தகைய பண்பட்ட மனதைப் பெற்றவனே மாமனிதன்—பெரிய மனிதன்—நல்லவன்—நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்தரும் ஊருணி போன்றவன்! ஆயிர மாயிரம் ஆண்டுகள் வாழும் ஆலமரம் போல் அந்த மனிதன் பெயரும் வாழ்கிறது. அத்தகைய மனிதர்கள், பாரி, குமணன், கபிலர், காரி, அதியமான், கிள்ளி போன்றவர்களின் பட்டியலில் தமது பெயரையும் சேர்த்துக்கொள்ளும் பெரும் பேறு பெற்றுவிடுகிறார்கள்.

வாழ்வின் ஆதார கீதமாக, அகர ஒலியாக, உயிராக, உணர்வாக, உயர்வாக, ஒளியாக, ஆதியாக, அந்தமாக, அழகாக, விளங்கும் அன்பு என்னும் பண்பு அத்தகைய மானிடரிடம் அடைக்கலம் புகுந்துவிடுகிறது. அத்தகையவர்களிடம் சரணாகதியடைவதால் தான் பண்புகளுக்கும் மதிப்பு ஏற்படுகிறது போலும்! மாசு மறுவற்ற அன்பின் காவலர்கள் உலகின் எல்லா நிகழ்ச்சிகளையும் இரக்கம் நிறைந்த இதயத்தோடு காணுகிறார்கள். உலகத்தை பரிவு என்ற பார்வையோடு பார்க்கிறார்கள். அவர்தம் கண்களே கருணையின் காட்சியாக விளங்குகின்றன. அவர்தம் பேச்செல்லாம் ஏழை எளியவர்க்கு உயிர்தரும் மூச்சாகப் பயன்படுகின்றன.

வறுமைப் பேயின் தாக்குதலால், வாயிழந்து வாயிலில் வந்து நிற்கும் அபாக்யசாலிகளின் குறிப் பறிந்து கொடுக்கும் வள்ளல்களாகிவிடுகிறார்கள்! சொல்லாமலே செய்வர் பெரியர்! கேட்காமலே கொடுப்பவர் வள்ளல்! காணாமலே காப்பர் காவலர்! காலத்தாலும் அழியாதது அன்பு! நெஞ்சறிந்துயர்வது நட்பு! விளம்பரத்தை வேண்டாதது பண்பு! செயலாலே சிறப்பது வீரம்! எளிமையால் சிறப்பது ஆண்மை மேற்கண்ட பண்புடை மனிதன் எத்துறையில் ஈடுபட்டாலும் சிறந்துவிளங்குகிறான். அத்தகையோர் அதிகாரிகளாக இருந்தால் நல்ல அதிகாரியாக இருப்பார். அவர்கள் அரசு நடத்தினால் அது நல்லரசாக விளங்கும். அவர்கள் வீடு இன்பக் கோயிலாக இருக்கும். அவர்தம் குழந்தைகள் எல்லா நிறைவும் பெற்று வாழும். அவர்கள் காணும் இலட்சியக் கனவுகள் அதிக சிரமமின்றியே நனவாகிச் சிறக்கும்.

இதற்கொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது, நண்பர் வி. கே. சி. அவர்களின் வாழ்க்கை. தமிழ் வட்டம் என்றதொரு நல்ல நிறுவனம் அவரது நல்ல உள்ளத்தைக் காட்டப் போதுமானது! தெள்ளு தமிழ்க் கலைச் சிறப்பையெல்லாம் கொண்டு திகழும் துள்ளு மலர்ப் பொய்கையாக, திங்கள்தோறும் மகிழ்ச்சிதரும் கலைக் கற்பகமாக விளங்குகிறது அவர் கண்ட தமிழ் வட்டம். நற்குணங்களின் கூட்டுறவாக, கூட்டுறவின் முழு வடிவமாக, வடிவத்தின் விமர்சனமாக, வாழ்ந்தார். தமிழின் சிறப்பை வாழவைத்தார். எல்லோர்க்கும் இனியவராக, எளிமையின் இலக்கணமாக, எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல மனிதராக நம்மிடையே வாழ்ந்து, நம் உள்ளத்திலே வற்றாத பாசத்தை, வளர்கின்ற பேரன்பாக நிலை நாட்டிவிட்டு, அவர் காலத்தோடு காலமாகிவிட்டார்! கலையோடு கலையாகிவிட்டார்! கவிதையோடு கவிதையாகிவிட்டார்.

ஓராண்டுகூட ஆகவில்லை! நூற்றாண்டு பழகிய தொரு பாசம்! வாராது போல் வந்த அன்பின் மாமணி வந்தார்! தம்மையே தமிழ்வட்டத்துக்குத் தந்தார். வளர் பணிகள் ஆற்றினார். காற்றினும் கடிது சென்று கடமைகளை நிறைவேற்றினார். கண நேரம்! விதி விளையாடியது! விதியின் மடியிலே ஒரு சிறு குழந்தை போல இவர் விளையாடினார்! குமரிக் கடற் கரையிலே, குலவும் நீரலையிலே, குளிர்ந்துவிட்டது குமரனுடைய குன்றாத உடல்! என்று காண்போம் எம் நடராசரை? ஏக்கத்தை நமக்கு வைத்து, நீக்கமற நிறைந்துவிட்டார்! நமது மாமனிதர் வி. கே. சி. நடராஜன் அவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? நதியற்ற ஊரில் நதியாக வந்தார்! நிதியற்ற பெட்டிக்கு நிதியாக வந்தார்! விதி அதிக உரிமை பாராட்டிவிட்டது, வீரனைப் பறித்துவிட்டது. எனினும் அவன் அமரன், காரணம் மனிதன்! நாமும் மனிதர். ஆதலால் அவர் நம்மிலே என்றும் அன்பாய் வாழ்வார்! பண்பாய் வளர்வார்! வாழ்க அந்த அமர மனிதர் வி. கே. சி.! வாழ்க அவர் தம் நற்குடும்பம். வளர்க அவர் நினைவான தமிழ் வட்டம். வாழ்க மனித குலம்.

# சுற்றம் தழால்

ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்

அமரர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் எழுதி வைத்திருந்த இந்தக் கட்டுரை இப்பொழுதுதான் முதன் முதலாக அச்சேறுகிறது. தெய்வ வள்ளுவரின் திருக்குறட் பாக்கள் சிலவற்றிற்குத் தமக்கே உரிய அற்புதமான பாணியில் விளக்கம் கூறி ரஸிகமணி எழுதியுள்ள இந்தக் கட்டுரையைத் தமிழ்வட்டம் இரண்டாவது ஆண்டு மலருக்குக் கொடுத்து உதவியர், அவருடைய பேரர் திரு. தீப-நடராஜன் என்ற தீப-சிதம்பரநாதன் அவர்கள்.

சில பிராணிகளின் நடவடிக்கையைப் பார்த்தால் ஒரு விசித்திரமான உண்மை புலப்படும். ஒரு மாட்டு மந்தை என்று எடுத்துக் கொண்டால் அந்த மந்தைக்குளுள்ள மாடுகள் சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்கின்றன. இதர மந்தையைப் பார்த்தால் கோபம் வருகிறது, எதிர்க்கிறது. எப்படியோ ஒரு பகைமை ஏற்பட்டிருக்கிறது மந்தைக்கு.

இந்த உண்மையைக் குரங்குக் கூட்டத்தில் தெளிவாய்ப் பார்க்கலாம். அயலூர் குரங்கு ஒன்று உள்ளூர் குரங்கின் கூட்டத்துக்குள் வந்து விட்டால் தொலைந்தது காரியம். அது தப்பி உயிர் பிழைப்பதே கஷ்டம்.

இந்த விரோதம் என்னத்தைக் காட்டுகிறது :

ஒரு சிறு கூட்டத்துக்குள்த் தான் பழகிக் கொள்ள முடியும். அன்யோன்யம் அபிமானம் எல்லாம் உண்டாகும் என்பதைத் தான் காட்டுகிறது.

மக்களும் இத்தகைய பிராணி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஒரு சிறு கூட்டத்தில்த் தான் பழக்கம், அன்யோன்யம், அபிமானம் எல்லாம் உண்டாகும்.

பழகிய கூட்டத்தை விட்டு வெளியே போகிறது கொஞ்சம் கஷ்டமாய்த் தான் இருக்கிறது மனிதனுக்கு. சிரமப்பட்டுத்தான் அபிமானத்தை உண்டாக்க வேண்டியதிருக்கிறது.

மனுஷ சரித்திரம் எத்தனையோ விதத்தில் இந்த உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

உறவினர், சினேகிதர் என்றல் ஒரு அரிய மனப் பான்மையைக் காட்டுகிறது. அனுதாபம் அவர்களிடத்தில்த் தான் உண்டாகிறது. ஆம், உயிரைக் கொடுக்கவும் தோணும்.

உறவினன் ஒருவன் பகையாளியாய் இருந்தாலும் அவசியம் நேரும் போது பகைமையை மறந்து அவனுக்கு பழக்கமாய் ஏற்பட்ட உதவியை செய்யவே தோன்றும்.

**பற்றற்ற கண்ணும்**
**பழைமைபா ராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே**
**உள.**

மேலும் இந்த உண்மையைச் சோதித்துப் பார்க்கலாம்.

ஒருவனுக்குச் செல்வம் இருந்தால் அதை வைத்து என்ன செய்ய என்று கூட கேட்கத் தோன்றும். அதற்குப் பதில் சொல்லுகிறுர் குறளாசிரியர்.

"அப்பா! செல்வம் அப்படி கிடைத்து விடுகிற காரியம் அல்ல. அபூர்வமாகத் தான் ஒருவன் அதைப் பெறுகிறுன். தனிப்பெரும் பேறு என்று சொன்னுல்க் குற்றமில்லை. அதை எப்படி அனுபவிக்கிறது, சொல்லுகிறேன் கேள்.

"உன்னுேடு ஒட்டியவர்களாக உறவினர் இருக்கிறுர்கள். சினேகிதர்கள் இருக்கிறுர்கள். அவர்களோாடு சதா உண்டு உறவாடிக்கொண்டு இரு. அப்படியானுல் அவர்கள் உன்னைச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். உனக்கு அவர்கள் சுற்றத்தார் என்று ஆகிறுர்கள்."

**சுற்றத்தார் சுற்றப்**
**படவொழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தாற் பெற்ற**
**பயன்.**

[பெற்றத்தாற்: பெற்றத்தாற் என்ற சொல்லிலுள்ள வல்லோசையின் அழுத்தம் செல்வத்தைப் பெறுதல் மிக அருமை என்பதைக் குறிக்கிறது. வாஸ்தவந்தான், ஜனசங்கைக் கணக்கில் செல்வந்தர் எவ்வளவு குறைவு என்பதை நன்ருய்க் காட்டும்.]

குறிப்பு: அழகிய உண்மையை அழகாய்ச் சொல்லுகிறது குறள்.

* * *

இந்தச் சுற்றம் தழால் என்னும் உண்மையை காக்கையினிடத்தும் பார்க்கிறோம்.

சிறிதளவாய் உள்ள ஆகாரத்தைப் போட்ட போதிலும் ஒரு தனிப்பட்ட காக்கை கத்துகிறது. 'கா, கா' என்று கத்துகிறது. நாலைந்து காக்கைகள் வந்து விடுகின்றன. எல்லாம் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் கொத்தித் தின்கின்றன ஆகாரத்தை.

ஒகோ காக்கையும் நாமும் ஒரு இனந்தான்!

**காக்கை கரவா**
**கரைந்(து) உண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே**
**உள.**

[கரைந்து: 'கா, கா' என்று கத்தி; ஆக்கம் அன்ன நீரார்க்கே உள: சுக வாழ்க்கை காக்கையைப் போல் நடந்து கொள்ளுபவர்களுக்கே ஏற்படும்.]

* * *

விஸ்வாசம், நன்றி என்றெல்லாம் வார்த்தைகள்.

நெருங்கிப் பழகினுல்த்தானே அவைகள் உண்டு. இழக்கக்கூடிய காரியங்களா விஸ்வாசமும், நன்றியும். அவைகளை எந்த விதத்திலும் பாதுகாக்க வேண்டியது தான்.

நெருங்கிப் பழகி அன்பு செலுத்தும் மக்களையும் சம்பந்த மில்லாமல் எங்கேயோ எப்படியோ இருக்கிறவர்களையும் சமமாகக் கருதி அரசன் நடத்துவானுனுல் (ஏன் சாமானிய மக்களும் கூடத்தான்) மேலே சொன்ன விஸ்வாசம், நன்றி நிற்குமா உலகில்.

ஒரு பெரியவர் சொன்னுர்: "நன்மையை எல்லாம் வேற்று ஆளுக்குச் செய்து விட்டால் மிச்சம் என்ன இருக்கும் உற்ருருக்குச் செய்ய" என்பதாக.

**பொதுநோக்கான் வேந்தன்**
**வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார்**
**பலர்.**

[அது நோக்கி வாழ்வார் பலர்: அந்தத் தாரதம்மியம் பார்த்து நடத்துவதை உணர்ந்து உறவு கொண்டாடுவார்கள்.]

உறவு உரிமைகளை நோக்கி நடந்தால் பலரும் நம்மிடம் உறுதியான அபிமானத்துடன் இருப்பார்கள். திருவள்ளுவர் கண்ட அனுபவம் இது.

★

# உவமையின் சிகரம்

கவிதையின் உயிர் நாடி எது? எளிதாகப் பதில் கூற முடியாத கேள்வி. ஆனால், உவமைதான் கவிதைக்கு உயிர் நாடி என்று யாரும் விடை கூறமாட்டார்கள். கவிதையை அலங்கரித்து அழகுக்கு அழகு செய்கிறது உவமை என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. காட்சிப் பொருள்கள், புராண வரலாறுகள், கருத்துப் பொருள்கள், நீதிகள், தத்துவ உண்மைகள் ஆகிய பலவும் கவிகளுக்கு உவமைகள் ஆகின்றன. வெண்ணிற முத்துக்களைப் பதித்து, வெண்ணிற ஆடையாகிய 'ஐஸிங்'கை அணிவித்து, பிறந்த நாள் 'கேக்'கை சுவை மிகுமாறு செய்கின்றது போல, உவமை கவிதையைச் சுவைமிகுமாறு செய்கிறது. ஆங்கிலத்தில் உவமை 'Simile' என்றும் 'Metaphor'என்றும் பிரிக்கப்படுகின்றது. உருபு கொண்டது 'Simile'' என்றும் உருபு இல்லாதது 'Metaphor' என்றும் கொள்ளலாம், பால்மொழி என்பது 'Metaphor'. பால் போன்ற மொழி என்பது Simile. இலக்கணம் கூறுகிறது:

போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

கோவலன் கண்ணகியை அழைக்கின்ற பொழுது உருபு கொண்ட உவமையும் உருபு இல்லாத உவமையும் கையாளுகிருன். பின்வருமாறு:

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே!

.......................................................................

மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா விசையே யென்கோ!

உவமைக்கு எல்லாம் இலக்கணம் உண்டு என்று கம்பர் கூறுகின்ருர். இராம பிரானுடைய திருமேனியழகை இருபது பாடல்களில் சொல்லின் செல்வனை அனுமன் வர்ணிக்க முயல்கிருன். ''உவமைக் கெல்லாம் இலக்கணம் பண்பின் முடிவு உள'' என்று தெரிந்த அனுமனுக்கு உவமைகளைக் கொண்டு இராமனுடைய அடிமுதல் முடி ஈருக உள்ள அவயவங்களை நன்கு வர்ணிக்க முடியாது என்று தெரிகிறது. ''பெருமாள் அழகு அடியேனல் சொல்லப் படாது; சொன்னது கொண்டு தேவரீர் அறிந்தபடி அளவிட்டுக் கொள்ளும்'' என்றபடி.

### உவமையின் பிறப்பிடம்

கவிகள் ஏன் உவமையை நாடுகிருர்கள்? கையாளுகிருர்கள்? வேற்றுமையில் ஒற்றுமை காணும் விழைவே உவமையின் பிறப்பிடம். குழந்தைகள்

டி. எஸ். இராமலிங்கம்

விளையாடிக் கொண்டிருக்கிருர்கள். புதிர் போடுகிருன் ஒரு பையன்: "இரண்டு பேர் ஒன்று போல" என் கிருன். சற்று கூர்ந்து கவனித்தால் புதிருக்கு விடை கிடைக்கிறது. இரண்டு பையன்கள் அணிந்திருக்கும் உடை ஒரே வண்ணமாக இருக்கும்; அல்லது அங்கு உள்ளவர்களில் அவர்கள் மாத்திரம் குடுமி வைத்தவர் களாக இருப்பார்கள். இப்படிப் பலபல ஒற்றுமை காண்பார்கள். குழந்தைகளின் விளையாட்டிற்கும், புலவர்களுடைய சமத்காரத்திற்கும் மூலம் ஒன்றே தான். இந்த சமத்காரம்தான் சிலேடையாக உரு வெடுக்கிறது. சிலேடை என்பது மனிதனுடைய அடிப்படை இயல்பினேடு ஒட்டிய ஆசையின் பிறப்பு. மீனுக்கும் பேனுக்கும், யானைக்கும் வைக்கோல் போருக்கும்—இப்படி சம்பந்தமில்லாத பல பொருள் களின் இடையே உள்ள ஒப்புமையைக் கவிகளால் காண முடிகிறது. படிக்கின்றவர்களுக்கு அது மகிழ்ச்சி யளிக்கின்றது. காளமேகம் என்ற கவி வெற்றிலைக்கும் வேசைக்கும் ஒப்புமை கண்டார். தற்காலக்கவி ஒருவர், வெற்றிலைக்கும் சமாசாரப் பத்திரிகைக்கும் உள்ள சம்பந்தத்தைக் கூறுகிருர்:

மேவக் கரம்அடுக்கும்; மெல்லப் படிக்கநண்ணும்;
ஓவுதலில் பாகுசுதை ஒத்திருக்கும்—பூவுலகில்
வெற்றிலைக்குப் பத்திரிகை மேவுநிகர் கைலாச
நற்குண மேவியமன் ன.

சிலேடை அறிவிற்கு விருந்து ஊட்டுகிறது. உணர்ச்சிக்கு விருந்தாகிறது. உண்மையான கவிதை. கோவிலையடுத்த பசுமடத்தில் பல பசுக்கள் இருக் கின்றன. கிராமாந்தரம் ஆதலினலே தோல் கன்று களை உபயோகிக்காமல் பசுவின் கன்றுகளை வைத்துப் பால் கறக்கின்றுர்கள். பசுவிற்குத் தன் கன்று எது என்று தெரியும். கன்றிற்கும் தன் தாயைத் தெரியும். இதுபோன்ற பந்துத்துவம்தான் ஜீவராசிகளுக்கும் கடவுளுக்கு மிடையே இருக்கிறது என்பதை மிக்க அழனகா ஒரு பாடல் மூலம் கம்பர் அறிவுறுத்துகிருர்:

தாய்தன்னை அறியாத கன்றில்லை; தன்கன்றை
யாயும் அறியும் உலகின்தா யாகிஐய
நீஅறிதி எப்பொருளும்; அவைஉன்னை நிலையறியா
மாயைஇது என்கொலோ, வாராதே வரவல்லாய்!

"சூரியனுக்கு இதை நான் கற்பித்தேன்" என்று கண்ணன் அர்ச்சுனனிடம் கூறுகின்ற பொழுது, "உனக்கு முன் பிறந்த சூரியனுக்கு நீ எப்படிக் கற் பிக்க முடியும்?" என்ற சந்தேகம் வருகிறது அர்ச்சு னனுக்கு. அப்பொழுது கண்ணன் கூறிய விடை இதுவேதான்: "எப்பிறப்பு எடுத்தவர்களையும் நானறி வேன்; அவர்கள் என்னையறியார்."

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய அதிகாரிக்குப் பத்துப் பன்னிரண்டு குழந்தைகள் இருந் தார்கள். அவருடைய சகோதரிக்கும் அம்மாதிரியே நிறையக் குழந்தைகள். இரண்டு குடும்பங்களும் ஒன்றுகவே வசித்து வந்தன. யாராவது ஒருவர் வந்து, 'இது யார் குழந்தை?' என்று கேட்டால் அதி காரி தம்முடைய சேவகனை அழைத்து, 'அப்பா! இது என்னுடைய குழந்தையா அல்லது என் சகோதரி யுடைய குழந்தையா?' என்று கேட்பாராம். அதிகாரி யாக இருந்தாலும் நகைச்சுவை உடையவர் என்று அறிகிறேம். குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்திற்காக இந்தக் கதை சொல்லவில்லை; கத்தோலிக்க மதத் தைச் சார்ந்த அந்த அதிகாரிக்குப் பரம்பொருள் உல கத்தின் தாயாகத் தோன்றுகிறது என்பதை விளக்கு வதற்காகத்தான்.

**உவமைக்கு விதி**

எதற்கு எதை உவமையாகக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் விதி வகுக்கிருர். ஒன்றைப் புகழ்ந்து பேச வேண்டு மென்றுல் அது, அதாவது தாட்டாந்திகப் பொருள், திருஷ்டாந்தப் பொருளை விட மேம்பாடு உடையதாக இருக்க வேண்டும் என்றும், இழிவாகக் கூற வேண்டு மென்றுல் மாறுபட்ட முறையில் இருக்க வேண்டும் என்றும் கூறுகிருர். 'சொர்க்க நீக்கம்' என்ற இலக் கியத்தில் மில்டனுக்கு உவமைகளை உபயோகிப்பதற்குப் பெருந்தடையாக இருந்தது உபமானப் பொருள் களெல்லாம் உபமேயப் பொருள்களை விடச் சிறப்புக் குறைந்தவைகளாக இருந்தமையே. சிருஷ்டி கர்த் தாவாகிய கடவுளையும், கடவுளின் புதல்வனையும், சாத்தானையும் மனிதர்களுடன் ஒப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டது. நடக்கப் போகின்ற சம்பவங்களைப் பின்னல் நடந்த சம்பவங்களுக்கு ஒப்பிட்டுக் கூற வேண்டியதாயிற்று. சாத்தானுடைய பேர் உருவம் Chaos என்ற சூன்யத்தில் செல்கின்ற பொழுது திமிங் கிலம் கடலை நதியாக ஆக்குகின்றது போல என்கிருர். மில்டன் உவமையை வெகு அழகாகக் கையாளுகிருர். அந்தச் சம்பவம் அனுமன் கடலைத் தாவுகின்ற நிகழ்ச் சியை ஞாபகமூட்டுகின்றது. கம்பருக்கும் இதே மாதிரியான நிலை ஏற்படுகிறது. இராவணனை வென்று சீதையை மீட்பதற்காக விபீடணன் சென்று, அணி யத்தக்க ஆபரணங்களை அணிந்து கொண்டு வரும்படி யாகக் கூறுகின்றுன். தேவ மாதர்கள் சீதையை அலங்கரிக்க முன் வருகின்றனர். அது வரையிலும் பேணப்படாமல் இருந்தமையால் சீதையின் கூந்தல் சடையாயிருந்தது. அப்பொழுது அரம்பை மெல்ல மெல்ல, உரோமங்கள் சிதையாதபடி சிக்கெடுத்து வாரி, சீவி, சிறைவாசத்துக்கு முன்னிருந்தபடி ஒழுங்குபட வகிர்ந்து விட்டாள். இதைக் கம்பர் கூறுகிருர்:

காணியைப் பெண்மைக் கெல்லாம்
கற்பினுக் கணியைப் பொற்பின்
ஆணியை யமிழ்தின் வந்த
வமிழ்தினை யறத்தின் ருயைச்

சேணுயர் மறையை யெல்லா
முறைசெய்த செல்வ னென்ன
வேணியை யரம்பை மெல்ல
வரன்முறை சுகிர்ந்து விட்டாள்.

(காணி=நிலம்; சேண் உயர்=மிக உயர்ந்த; மறை=வேதம்; வேணி = சடை; சுகிர்தல்= வகிர்தல்).

சீதையினுடைய கூந்தலைச் சிக்கெடுத்து வகிர்ந்து விட்டது, ஒழுங்கு குலைந்து குழம்பியிருந்த வேதத்தை வகைப் படுத்தி ஒழுங்கு படச் செய்த வேதவியாச முனியின் பணி போன்று இருந்ததாம். திருக்குறளைப் பொய்யாமொழி என்கின்றோம். வேதத்தைச் செய்யா மொழி என்கின்றோம், அதாவது, அபௌருஷேய மானது. சீதை யோனி வழியாய்ப் பிறவாதவள்: அதாவது, அயோனிஜை. "அயோனிஜை ஆகிய பிராட்டிக்கு அபௌருஷேயமான வேதம் உவமை கூறப்படுவது" பொருத்தமே யென்று வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கூறுகின்றார். தான் அறிந்ததும் லோகப் பிரசித்தமும் ஆன எதையும் உவமை கூறலாம் என்கிறார்.

**அந்த இராம சௌந்தரியம்**

அந்த இராம சௌந்தரியத்தை விளக்கும் உவமை ஒன்றை ஆராயலாம். இராமனை இளவரசாக முடிசூட்டத் தீர்மானிக்கின்றான் தசரதன். பின்பு, விதியின் பயனாகக் கானகத்துக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டளை பிறக்கின்றது. விருப்பும் வெறுப்பும் இல்லாதவன் இராமன். மற்றவர் முகத்தை வாட வைக்கும் செய்தி அவனை வாடவைப்பதில்லை. மற்ற வர்களுடைய முகங்களை மகிழ்ச்சியால் மலரச் செய்யும் நிகழ்ச்சி அவனுக்கு மாறுதல் ஒன்றும் ஏற்படுத்து வதில்லை. ஏற்கெனவே மலர்ந்திருக்கும் முகம் மகிழ்ச் சியான செய்தியைக் கேட்டும் அதே நிலையில் தான் இருக்கும். இந்தச் சம்பவம் கம்பருடைய மனதில் மிக ஆழமாகப் பதிந்து விடுகிறது. அயோத்தியா காண்டத்தில் குறிப்பிடுகின்றார்; சுந்தர காண்டத்தில் இருவர் மூலம் பேசுகின்றார். இந்தப் பாடல்களைப் பார்க்கலாம்:

இப்பொழு தெம்ம னோரா
லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா—
மரையினை வென்ற தம்மா.

"பரதன் நாடாள்வான், நீ காடு ஏகு" என்று இராமனிடம் கூறுகிறாள் கைகேயி. சிறந்த குணத்தை யுடைய இராமனுடைய அழகிய முகத்தின் பொலிவு அப்பொழுது எப்படி இருந்தது என்று எம்மைப் போன்றவர்களால் இப்பொழுது சொல்ல முடியுமா? இந்த வார்த்தையைக் கேட்பதற்கு முன் இராமனு டைய முகம் மலர்ந்த செந்தாமரையைப் போன்றி ருந்தது. இந்த வார்த்தையை கேட்ட பின்னும் அவ் விதமே இருந்தது. இடையில், அதாவது, கேட்ட க்ஷணம் செந்தாமரையை ஒத்திருந்த முகம் அதற்கு மேலான பொலிவை அடைந்தது.—இப்படிச் சில புல வர்கள் பொருள் கொள்கிறார்கள்.

முடி சூட வேண்டும் என்று இராமனிடம் அவன் தந்தையும் அரசனுமாகிய தசரதன் கூறியவுடன் இராமன், "காதலுற்றிலன்; இகழ்ந்திலன்". முடி சூடுவது தன் கடமை, தனக்கு விதிக்கப்பட்ட சட்டம் என்று நினைக்கிறான். அவன் மனம் இந்தச் செய்தி யினாலே கிளர்ச்சி அடையவில்லை. கடமையிலிருந்து வழுவ வாய்ப்புக் கிடைத்ததால் "மனது கிளர்ச்சி யடைந்து முகப் பொலிவு வீறுற்று தாமரையினை வெற்றி கொண்டது" என்று கூறுவது யுக்தமாகத் தோன்றவில்லை. ஆங்கிலத்தில் கூறுவதென்றால் 'Not in character' என்று சொல்வார்கள். கர்மம் செய்வதனால் ஏற்படும் துன்பங்களை அடையாமல் இருக்க வேண்டுமென்று கர்மத்தைத் தியாகம் செய்வது சாத்வீக தியாகம் ஆகாது. ராஜசத் தியாகம் ஆகும். அப்படி நடக்கவில்லை என்பதற்கு சீதா பிராட்டியையே சாட்சியாக அழைக்கலாம் அசோகவனத்திலிருக்கும் பொழுது சீதை கூறு கின்றாள்:

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை யுன்னுவாள்.

அயோத்தியா காண்டத்தில் 'அன்று அலர்ந்த செந்தாமரை' என்று கூறி விட்டு சுந்தர காண்டத்தில் 'சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை' என்று கம்பர் ஏன் கூறுகிறார்? முன் சொன்ன உவமையை விடப் பின் சொல்லிய உவமை அதிக நயமுடையது என்று கூறலாம். தோற்றமுண்டேல், மரணமுண்டு. எனவே இயற்கைத் தாமரை வாடிவிடும்; செயற்கைத் தாமரை வாடாது. ஆங்கிலக் கவி கூறுகிறார்: "Lillies that fester small far worse than weeds". என்றும் வாடாத திருமுகத்திற்கு சித்திரத் தாமரை நல்ல உவமை ஆகிறது. அழகிய ஜாடியில் சித்திரங் கள் தீட்டப் பெற்றிருக்கின்றன. காதலனும் காதலியும் ஓடிப் பிடித்து விளையாடுகின்ற சித்திரம் வரையப் பெற்றிருக்கின்றது. பிடித்து விட்டால் ஓட்டம் நின்று விடுகிறது. காட்சியும் முடிவடைகிறது. ஆனால் ஜாடியில் நடக்கின்ற ஓட்டம் முடிவற்றது. அது போல

அக்காட்சியும் அந்தமில்லாதது. இந்தக் கருத்தை Keats என்ற ஆங்கிலக் கவி 'Ode on a Grecian Urn' என்ற பாடலில் விளக்கி இருக்கிறார்.

சிலருக்கு ஒரு சந்தேகம் வருகின்றது. கானகம் செல்ல வேண்டும் என்று கைகேயி கூறியவுடன் இராமனுடைய முகம் மூன்று மடங்கு பொலிவு அடைந்தது என்று சீதா பிராட்டியே கூறுகின்றாளே என்பார்கள். அசோக வனத்திலிருக்கும் பொழுது சீதைக்கு ஏற்பட்ட இன்னொரு ஞாபகத்தை நினைவூட்டும் பாட்டில் இந்தக் குறிப்பைக் காணலாம்:

தெம்ம டங்கிய சேணிலங் கேகயர்
தம்ம டந்தைநின் றம்பிய தாமென
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை யுன்னி வெதும்புவாள்.

'மும்மடங்கு பொலிந்த முகத்தினன்' என்றதனாலே இராம பிரான் அரசியலை ஏற்பதினும் கானில் சென்று தவ நியமத்தில் இருப்பதைப் பெரிதும் விரும்பினான் என்று சிலர் பொருள் கொள்கிறார்கள். அரசு ஆள்வது க்ஷத்திரிய தர்மம். அரசாள்வதற்கு இராமன் வெறுப்புக் கொண்டிருந்தான் என்றால் கம்பருடைய பாத்திரப் படைப்பின் ஆற்றலுக்கு இழுக்கு ஏற்படும். இராம பிரானுடைய தெய்வீகத் தன்மையில் ஐயம் கொண்டதாக ஏற்படும். 'மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமே' என்று கூறப்பட்ட இராமன் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டார் என்று சொல்வது பொருந்தாது.

உண்மையிலேயே இரண்டு பாடல்களுக்கும் முரண்பாடு ஒன்றுமில்லை. கைகேயி உரைத்த வாசகம் இதுவே:

ஆழிசூ ழுலக மெல்லாம்
 பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
 தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
 புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென்
 றியம்பின னரச னென்றாள்.

இந்த வாசகத்தில் இரண்டு கட்டளைகள் இருக்கின்றன. பரதன் அரசாள வேண்டும் என்று கேட்டவுடன் இராமருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. தம்பிக்கு நல்ல சம்பத்து கிடைத்ததென்றால் அண்ணனுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுதான் நியாயம். உலக வழக்கு எவ்விதமாக இருந்தாலும் கூட பரதனுக்கு அரசுரிமை கொடுத்ததால் தனக்கு இல்லை என்கிற பலனைப் பற்றி அவன் சிறிதும் சிந்திக்க வில்லை. முற்றும் துறந்த ஞானிக்கும் மகிழ்ச்சி ஏற்படக் கூடும்; அதைக் காட்டவும் கூடும். ஞானிகள் குழந்தைகளுக்கு ஒப்பு. முக்குணத்தால் கட்டுப்படாதவர்கள். ஆகவே பரதன் முடி சூடுகின்றான் என்று கேட்டு இராமன் மகிழ்ச்சியடைவதில் அவனுடைய விருப்பு வெறுப்பின்மைக்குக் குறை ஒன்றுமில்லை. வாசகத்தின் மறு பகுதியைக் கேட்ட பொழுது முகத்தில் யாதொரு பொலிவுக் குறைவும் ஏற்படவில்லை. வாசகம் முழுவதும் கேட்பதற்கு முன்பும் வாசகம் கேட்டதற்கப்பாலும் வதனம் ஒன்று போல இருந்தது. இந்த ஒப்புமையைத்தான் கவி அயோத்தியா காண்டப் பாடலில் கூறுகிறார். இந்த இரண்டு சமயங்களிலும் வதனம் இருந்த நிலை எதை ஒத்திருந்தது என்றால், அன்று அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்தது. ஆகவே இப்பாடலில் இரண்டு உவமைகள் இருக்கின்றன. ஒரு பொருள் வெவ்வேறு காலத்தில் இருந்த நிலை ஒன்றும், அவை எதை ஒத்திருந்தன என்பது ஒன்றும் ஆக இரண்டு உவமைகள் இருக்கின்றன.

## உவமையின் உச்சவரம்பு

உவமை ஓரளவிற்குத்தான் ஒப்புதலைக் காட்ட முடியும். ஒரு பொருளைக் குறித்துப் பல சொற்கள் இருந்தால் அவற்றை Synonyms என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். உண்மையாக Synonyms என்பது கிடையாது. ஒரு சொல்லிற்கு ஒரே பொருள்தான் உண்டு என்றும் கூறுவார்கள். அதுபோன்று ஒருவருக்கு முழுமையும் ஒப்பாக வேறொருவர் இருக்க முடியாது. தங்கம் எப்படி இருக்கும் என்று ஒருவரைக் கேட்டால், பொன்னால் செய்த அணிகலனைக் காட்டி இது போன்றிருக்கும் என்றுதான் சொல்ல முடியும். அனுமன் கூறுகின்றான்:

'பொன்னல தில்லைப் பொன்னை யொப்பென'

பொறுமையின் வடிவமாகிய சீதையைப் பார்க்கும் பொழுது வேறு ஒருவரையும் அவளுக்கு ஒப்பாகச் சொல்ல முடியாது என்று தெரிகிறது. அவளுக்கு நிகர் அவளே.

'பொறையி னின்றாள்
தன்னல தில்லைத் தன்னை
யொப்பென'

அப்பிராட்டியை மணக்க வந்த இராமபிரானுக்கும் வேறு ஒருவரையும் நிகராகச் சொல்ல முடியாது. கணவனும் மனைவியும் சில சமயங்களில் தனித்தனியாக அங்கலாய்த்துக் கொள்வார்கள்: "நமக்கு வந்து இப்படி வாச்சுதே" என்று. ஆனால் இராமனும் சீதையுமோ தம்மில் மிகப் பொருத்தமானவர்கள்; சரியான ஜோடி.

"தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை
யொப்பென நினக்கு நேர்ந்தாள்."

அவர்களுக்குச் சேவகம் செய்ய வந்த அனுமனுக்குத் தெரிகிறது, சேவையில் தன்னை மிஞ்ச ஒருவராலும் முடியாது என்று. இது தன்னுடைய பெருமையைக் குறிப்பது ஆகாது. தவம் செய்த தவமாம் தையலாகிய சீதையின் ஆசி கிடைத்ததால்தான் தனக்குத் தானே நிகர் ஆனுன் என்பதை உணருகிருன்.

"என்னல தில்லை யென்னை
யொப்பென வெனக்கு மீந்தாள்."

இப்பாட்டைச் சிதைக்காமல் படித்து உவமையின் உச்ச வரம்பைத் தெரிந்து கொள்வோம்; உவமையின் சிகரத்தைக் கண்டு மகிழ்வோம்.

பொன்னல தில்லைப் பொன்னை
யொப்பெனப் பொறையி னின்ருள்
தன்னல தில்லைத் தன்னை
யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை
யொப்பென நினக்கு நேர்ந்தாள்
என்னல தில்லை யென்னை
யொப்பென வெனக்கு மீந்தாள்."



## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இன்று நம்மை ஆளும் அந்நியர் நம்மை வெம்முனையில் வென்றதாகச் சரிதமில்லை. ஆளுபவர் நம் மொழியை நாம் வெறுக்கப் பணிக்கவில்லை. நாம் ஒருவரை ஒருவர் பழித்து அணைவருக்கும் சிறுமையினை விளைத்திடுமாறு அவர் நமக்கு விதிக்கவில்லை. நாட்டின் நிதியனைத்தும் நிதம் கவர்ந்து செல்லும் அந்நியருக்காளாகி நம்மவரை நாம் பகைத்து இகல் வளர்த்துப் பொரு தழியப் பேரார்வம் கொள்வதேனே? நெடுங்காலம் நின்றுவரும் காழ்த்தமரம் ஒரு கணத்தில் யாராலும் ஒடிவதில்லை. உள்ளுரத்தைச் செல்லரிக்கப் புறக்காழ் போல் நிற்குமரம் அலைப்பவரின்றியும் அழிந்துபடும். தமிழ்ச் சமுதாயம், ஒற்றுமையுரத்தைச், சாதிமதமாற்சரியச் செல்லினுக்கு விருந்தாக்கி உட்டுளைப்பட்டு உரன் அழிந்த புழை மூங்கிற் பண்ணையென நிற்கின்றது. இழிவுயர்வு படைத்த ஈரிரண்டு வருண முறை தமிழகம் முன்னறியாத இறும்பூதன்ருே? சோதரர்கள் நாரணனை வழிபட்டால் சைவருக்குப் பகைவரெனக் கருதுவானேன்? மறுமைநலங் கருதிவரு சமயங்கள் இகவாழ்வில் இன்னலெல்லாம் விளைக்க இகல் வளர்க்க இடந்தருவதற்கு அவசியமும் முறையும் உண்டோ? மாற்சரியக் குன்மத்தால் சமுதாயப் பெருவாழ்வின் நல்லுணவை நாம் இன்று வெறுக்கின்ருேம். உணவற்ற உடல் நாளும் மெலியும். அதனை நோயெளிதில் நலியும். தமிழ்ச் சமுதாயம் நின்ருேங்கித் தழைவதற்குப் பகையிடமாம் பல கலையும் வேரற நாம் பறித்தல்வேண்டும். உணவுகக்க உண்மையினில் நல்ல பசி வளர்த்தல் வேண்டும். ஒரு சிலரைக் கீழாக்கி நாமுயர்வோம் என்பார்க்கு விடுதலை நாள் என்றுமில்லை. தமிழரெலாம் சோதரராம் என்பது நம் எவர்க்கும் பொதுநின்று உயிர்ப்பிக்கும் மனப்பாங்காயமைதல் வேண்டும். பொய்ம்மை நமதாயிடினும் என்று மதைக்காயும் நிலை எய்தல் வேண்டும். மெய்ம்மை பிறரிடங் காணில் அதை மேற்கொள்ள விரைதல் வேண்டும்.

—ச. சோமசுந்தர பாரதியார் (1927)

காலத்தால் அழியாத கவின் மிகு கோபுரங்கள்
பண்டைத் தமிழரின் கட்டிடக் கலையின்
உறுதிக்கு எடுத்துக்காட்டு.
இன்றைய கட்டிடங்கள் என்றும்
எழிலுடன் நிலைத்து நிற்க எங்கள்

**''கோபுர மார்க்'', ''ராம்கோ பிராண்ட்''**

போர்ட்லண்ட் சிமிண்டை உபயோகியுங்கள்.
இப்பொழுது தென்னாடெங்கிலும் எளிதில்
தாராளமாய் கிடைக்கிறது.

MADRAS CEMENTS LIMITED
RAMCO BRAND
PORTLAND CEMENT

தயாரிப்பாளர் : **மதராஸ் சிமிண்ட்ஸ் லிமிடெட்,**
''ராம மந்திரம்'' இராஜபாளையம்.

தொழிற்சாலை : **ராமசாமி ராஜா நகர்,**
துலுக்கப்பட்டி, ராமநாதபுரம் ஜில்லா

விநியோகஸ்தர்கள் : **ராம்கோ சிமிண்ட் டிஸ்ட்ரிபியூஷன் கம்பெனி (பி) லிட்,**
''லக்ஷ்மி நிவாஸ்'' இராஜபாளையம்.

---

Ramco
ASBESTOS CEMENT
PRODUCTS

ஒரு நற்செய்தி!

# ''ராம்கோ'' ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்

## குழாய்களும் உபகரணங்களும் விற்பனைக்கு தயாராகிவிட்டன!

பிரசித்திபெற்ற ''ராம்கோ'' ஆஸ்பெஸ்டாஸ்
சிமெண்ட் தகடுகளும், உபகரணங்களும்
கிடைக்கும் இடமெல்லாம்
இனிமேல் ''ராம்கோ'' ஆஸ்பெஸ்டாஸ்
சிமெண்ட் குழாய்களும்
உபகரணங்களும் கிடைக்கும்.

உங்கள் பூரண தேவைகளையும்
''ராம்கோ'' ஸ்டாக்கிஸ்டுகளிட
மிருந்தே பெறலாம். ''ராம்கோ''
ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்

**தரத்தில் உயர்ந்தவை! விலையில் மலிந்தவை!**

தயாரிப்பாளர்கள் :
சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்ஸ்
லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
''ராம மந்திரம்''
ராஜபாளையம்.

விற்பனைக் காரியாலயம் :
''சோர்டியா மான்ஷன்,''
150-ஏ, மவுண்ட் ரோடு,
சென்னை-2.

தொழிற்சாலை :
அரக்கோணம் (வட ஆற்காடு மாவட்டம்)

தொலைபேசி எண்: 83232, 83443

# புரை தீர்ந்த பொய்

கு. ராஜவேலு, எம். ஏ.

இலக்கியம் என்பது வானகத்தே சுடர் விட்டு விளங்கும் காய் கதிர்ச் செல்வனையும், குளிர் நிலவையும், எரிகின்ற எண்ணற்ற விண் மீன்களையும், பன்னிற முகில்களையும், நம்மோடு விளையாட மண்ணகத்துக்கு வரவழைக்கும் ஒரு மந்திரக் கோல். வானையும் மண்ணையும் ஒன்றாக இணைக்கும் ஓர் ஒப்பற்ற ஏணி. கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையே நீண்டு கிடக்கும் ஓர் அன்புப் பாலம். சேய்மையால் பிரிந்து வாழும் மனித இனங்கள் மனம் வேறுபட்டு வாழாமல் அவர்கள் அனைவரையும் ஒன்றாகப் பிணிக்கும் இனிய உறவினன். காலத்தின் அற்புதக் கண்ணாடி. மனக் கவலையைப் போக்கும் மாமருந்து. வாழ்வுக் கடலில் வழிதவறிப் போகாமல் நம்மைக் கரையேற்றும் கலங் கரை விளக்கம். பாலை போல் வறண்டு போன மனித உள்ளத்தையும் பசுஞ்சோலைபோல் வளமாக்கும் வானமா மழை. அன்புக் கதிரைப் பரப்பும் இளந் தென்றல். அருள் உணர்வைப் பெருக்கும் அமுத ஊற்று. இயற்கையின் ஒப்பிலா அழகைக் காட்டி ஆண்டவனின் தாமரை அடிகளைக் காட்டும் ஒப்பிலாத தத்துவ ஞானி. இவை அனைத்திற்கும் மேலாக உள்ளத்தையும், அறிவையும் ஒழுக்க மெனும் அமுதப் பால் ஊட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் அன்புத் தாய்.

இங்ஙனம் மனிதனின் தோன்றாத் துணைவனாய் நின்று ஒளிரும் இலக்கியத்தின் வரலாறு எந்தக் காலத்திலாவது வளர்ச்சி பெறாது தேங்கி நின்றால் அந்தக் காலத்திலே அந்த நாடு எவ்விதமான வளர்ச்சியும் அடையவில்லை; அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் அறிவும் நின்ற இடத்திலேயே தேங்கி நின்றுவிட்டது என்றுதான் பொருள். ஆனால் சங்க இலக்கியங்களை நாம் படிக்கும்போது உண்மையிலேயே அக்காலத்தே, தமிழ் மொழியின் வளர்ச்சியும், மக்களின் அறிவுக்கூர்மையும், அவர்களுடைய வாழ்க்கை முறையும், பண்பாடும், வாய்மையும், வள்ளன்மையும், தூய்மையும் நம்மைப் பெரும் வியப்பில் ஆழ்த்துகின்றன.

நாட்டின் மண் வளத்திலே எவ்வளவு சாரம்! மக்களின் மனவளம் எவ்வளவு உயர்ந்து விளங்குகிறது! அறிஞர்கள் எப்படிப் போற்றப்பட்டு வாழ்ந்தனர்! அரசனும் அச்சான்றோர்களை எங்ஙனம் மதித்து ஒழுகினான்! நாடு என்றால் இது வல்லவோ நாடு! என்று போற்றிப் புகழ்ந்து மனம் விம்மிதமுறும் நிலையிலே அன்றைய தமிழகம் எழில் நாடாகக் காட்சி தருகிறது.

இவ்வளவு சீரும் சிறப்பும் அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு மலர்ந்தன? வாழ்க்கை, மிகப் பெரிய தியாகத்தினாலோ அல்லது செயற்கரிய கடமைகளைச் செய்வதனாலோ அமைக்கப்படுவதில்லை. அழகு எவ்வாறு சின்னஞ்சிறு மலரில் குடிபுகுந்து நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகிறதோ, உண்மை எவ்வாறு மழலை முற்றாத இளம் சொற்களைப் பேசும்

அழகுக் குழந்தைகளிடத்திலே அடைக்கலம் புகுந்திருக்கின்றதோ அவ்வாறுதான் வாழ்க்கையும் சின்னஞ் சிறிய செயல்களிலே அடங்கிக் கிடக்கிறது. முத்துப் போன்ற நீர்த்துளிகள் பல ஒன்று சேர்ந்த காட்சி தானே கரையற்று எல்லையற்றுப் பரந்து கிடக்கும் கடல்! நுண்ணிய அணுக்கள் ஒன்று சேர்ந்து கொடுக்கும் காட்சி தானே இக்கண்ணகன் ஞாலம்! வாழ்க்கையும் இவ்வாறே சிறு சிறு நிகழ்ச்சிகளால் அமைக்கப்பட்டதுதான். நம்முடைய உள்ளம் போர்க்களத்திலே அஞ்சாது பகைவர்களைக் கொன்று வீழ்த்திய வீரர்களைக் கண்டவுடன் ஆரவாரித்து எழலாம். ஆனல் அந்த உணர்ச்சி என்றும் நீடித்து நிற்பதில்லை. கால இருள் அவ்வீர நிகழ்ச்சிகளை மிக விரைவில் மறைத்து விடுகின்றது. ஆனல் நம் உள்ளம் வேதனைப்படும்போது ஒருவர் நம்மிடத்திலே காட்டிய அன்பு—அவர் ஓதிய பரிவுரை, துன்பவேளையில் அவர் கூறிய ஆறுதல் சொற்கள்—அவர் ஆற்றிய சிறு உதவி—இவைகள்தான் நம்முடைய உள்ளத்திலே அழிக்க முடியாத நினைவுகளாய் அமைந்து விடுகின்றன. உண்மையில் நாம் வாழ வேண்டிய முறையும் இதுதான் என்று இச்சிறு செயல்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இதனல்தான் நம்முடைய இலக்கியங்கள் சாகா வரம் பெற்று நிலைத்து நிற்கின்றன. இலக்கியத்தில் நாம் காண்பதெல்லாம் காதல், அன்பு, இரக்கம், மனிதன் மனிதனக நடந்து கொண்ட நிகழ்ச்சிகள், மனிதனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பண்புகள், ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து, இடையூறுகளை வென்று ஒருவர் நலனுக்காக மற்றவர் தம்மை மறந்து வாழும் வாழ்க்கை—ஆகிய இவை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. எனவேதான் இவைகளின் புகழை எல்லையற்றுப் பேசும் இலக்கியமும் கால வெள்ளத்தை எதிர்த்து இன்றளவும் நின்று நம் வாழ்விற்கு அருந்துணையாய்—ஆசானய் விளங்குகின்றது.

**சங்க இலக்கியத்தில் காணும் புதுமை**

உலகத்தில் மற்ற இலக்கியங்களிலே காணுத ஒரு புதுமையை நம் சங்க இலக்கியத்திலே நாம் காண்கின்றேம். சொல்லுக்குப் பொருளும், இலக்கணமும், வளர்ச்சி அடைந்த எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. ஆனல் வாழ்க்கைக்கும் வரம்பு கட்டி, இலக்கணம் கூறும் இலக்கியம் நம்முடைய இலக்கியந்தான். ஆணும், பெண்ணும் அன்போடியைந்து வாழும் அகத்தின் புகழை வானம்பாடியைப் போன்று இனிமையாக, மணங்கமழ் பூவைப் போன்று மென்மையாக, வானவில்லைப் போன்று பல்வேறு வண்ணங்களின் அழகுப்பிழம்பாக, புதுமணத்தென்றலைப் போன்று குளிர்ச்சியாக, கற்பனை ஊற்றுடன் நம்முடைய சங்க இலக்கியம் இயம்புகிறது. வாழ்க்கை என்ருல் அது ஆணின் வரலாற்றை மட்டும் கூறுவதன்று. ஒரு வீரன், செந்நீர் பெருக்கெடுத்தோடும் அடுகளத்திலே அரியபல வீரச் செயல்கள் புரிந்தாலும் அவன் வானையும் மண்ணையும் வெற்றி கொண்டு இராவணனைப் போல் இறுமாந்து வாழ்ந்தாலும், அவனுடைய வீர நிகழ்ச்சிகள் மட்டும் அவனுடைய வாழ்க்கையாக அமைந்துவிட முடியாது. வாழ்க்கை என்ருல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் அன்பு வாழ்க்கை. ஆண் இன்றிப் பெண் இல்லை. பெண் இன்றி ஆண் இல்லை. வீரம், ஈரம் ஆகிய இந்த இரண்டு பண்புகளும் கங்குலும் பகலும் போல் வாழ்க்கைக்குத் தேவை. இக்கருத்தைத்தான் நம்முடைய எல்லாத் தத்துவ நூல்களும் விளக்குகின்றன. சமய நூல்களும் அதையே முறையாகக் காட்டியுள்ளன.

சிவன் தன்னுடைய உடலினின்றும் பாதியை உமைக்குக் கொடுத்தான் என்று கூறுவதிலும் திருமால் தன்னுடைய நெஞ்சையே திருமகளின் உறைவிடமாக்க இசைந்தான் என்று சொல்வதிலும் நான்முகன் தனது நாவினையே கலைமகள் குடியிருக்கக் கோயிலாகச் செய்தான் என்று கூறுவதிலும் பெரும் உண்மைகள் அடங்கி இருக்கின்றன. சிவனுடைய தத்துவத்திலே வாழ்க்கை, ஆணும் பெண்ணும் சேர்ந்த வாழ்க்கையாக மட்டும் நில்லாமல் அது இரண்டறக் கலந்த ஒரு வாழ்வாக மலர்ந்து மணம் வீச வேண்டும் என்னும் உண்மையை நமக்கு விளக்குகிறது. திருமாலின் வாழ்விலே நம்முடைய உள்ளம் அழகு பூத்து அருள் நிறைந்து எழிலுடன் விளங்கவேண்டுமென்பதை எடுத்தியம்புகிறது. நம்முடைய நினைவு முழுவதும் நம்மைப் பற்றியே சார்ந்து இருக்காமல் மறஉணர்ச்சியோடு அறஉணர்ச்சியும் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற பேருண்மையை அறிவுறுத்துகிறது. நான்முகன் வரலாறு நம்முடைய நாக்கு கலைகளைப் பயின்று செவ்விய நாவாகத் திகழவேண்டும், நாக்கு புனித இடமாக இருக்கவேண்டுமென்பதைச் சாற்றுகிறது. பெண்ணின் பெருமையை நம் அனைவருக்கும் சாற்றும் பேரிலக்கியமாகத் திகழ்கின்றது. இந்த உண்மை அனைத்தையும் தேனினுமினிய சொற்களால் நேரடியாக உணர்த்தும் வாயில்கள்தான் இலக்கியங்கள்.

சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கியது. அக்காலத்திய தமிழன் சோர்வு என்பதையே அறியாதவன். தண்டமிழ் நாட்டின் நிலவளம் கன்னியின் அழகு போல் அன்று கவினெலாம் திரண்டு குலுங்கிய போதும் அவன் தன்நாட்டு வளத்தையே நம்பி வாழவில்லை. அந்த வளத்தோடு பிற நாட்டின் செல்வ வளமும் சேர வேண்டும் என்று விரும்பினன். கடல் கடந்து பல நாடுகளுக்கும் சென்று பொருள் ஈட்டி வந்தான். அவ்வாறு ஈட்டிய பொருளை மற்றவர்க்கும் வாரி வழங்கினன். இல்லையென்று வரும் இரவலர்க்குக்

கொடுப்பதற்காகவே அவன் வெளிநாடுகளுக்குச் சென்று திரண்ட பொருள் தேடி வந்தான் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆனால் தமிழனுடைய சிறப்பு அவன் போர்க்களத்திலே பெற்ற வெற்றியிலோ அல்லது திரைகடல் ஓடி, திரண்ட நிதியைக் கொண்டு வந்து குவித்ததிலோ பெரும்பாலும் அடங்கி இருக்கவில்லை. அவன் வாழ்ந்த அகவாழ்க்கையின் சிறப்புதான் இன்றும் நம்மை மட்டுமல்லாது உலகோர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகிறது.

### "வில்லன்" இல்லாத காதல்

அகப்பொருள் பற்றிக் கூறும் சங்க இலக்கியக் காட்சிகளை நாம் தொகுத்துப் பார்க்கும்போது அதிலே ஒரு புதுமையைக் காண்கிறோம். மக்களின் அன்றாட வாழ்க்கையை, தீந்தமிழில், தனித்தனிப் பாடல்களிலே புலவர்கள் செப்பமுறத் தீட்டியிருக்கின்றனர். நால் வகை நிலங்களின் எழிற் காட்சிகள். அங்கே தூய உள்ளம் உடைய நம்பி ஒருவனும், நங்கை ஒருத்தியும் காதல் செய்கின்றனர். அவர்களுடைய காதலுக்கு அங்கே இயற்கையே துணை நிற்கிறது. தோழியும் பாங்கனும் பிறரும் இருக்கின்றனர். வீட்டிலே உள்ள நற்றாய், செவிலித் தாய், தந்தை, அண்ணன் முதலியவர்கள் எல்லாம் வருகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய உள்ள உணர்ச்சிகள் அனைத்தையும் கவிஞர்கள் கன்னித் தமிழ் நாட்டின் சூழ்நிலையிலே நமக்குக் காட்டும்போது நம்முடைய உள்ளம் முழு நிலவைக் கண்ட முந்நீர்போல் களிப்பால் பொங்குகிறது. கொடியவன் (வில்லன்) இல்லாமல் சுவை நிறைந்த அழகிய காதல் கதையைச் சங்க இலக்கியம் நமக்குக் கொடுக்கிறது.

தலைவன் தலைவியைத் தவிர, பல பாத்திரங்களை நாம் அகப்பாடல்களிலே சந்திக்கிறோம். ஆனால் இப்பாத்திரங்கள் அனைத்திலும் மிக உயர்ந்த ஒரு பாத்திரமாகத் தோழி காட்சி அளிக்கிறாள். தோழியாக வரும் அவள் தன்னுடைய அறிவாலும் அனுபவத்தாலும் இன்சொல் கூறும் திறத்தாலும் கருதியதை முடிக்கும் செம்மல் உள்ளத்தாலும் எல்லோரினும் மேம்பட்டு விளங்குகின்றாள். இத்தனை இளவயதில் இவ்வளவு பெரிய அறிவை எப்படிப் பெற்றாள்? பயில் தொறும் நூல்நயம் போல் அல்லவா இவள் சொல்லாடும் திறம் அறிவுக்கருவூலமாக விளங்குகிறது? என்று எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறோம்.

தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி விதிகூட்ட ஒருவரை ஒருவர் சந்தித்து அன்பு கொள்ளுகின்றனர். அந்த அன்பு நிலத்தினும் பெரியதாய் வானினும் உயர்ந்ததாய் கடலினும் பரந்ததாய் நாளும் வளர்ந்து வருகிறது. அவ்வாறு வளர்ந்து வரும் அன்பைத் தோழி தாய்போல் பேணி வளர்க்கிறாள். அக்காதல்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டுகிறாள். கொஞ்சி மகிழவேண்டிய இடத்திலே கொஞ்சுகிறாள்; கடிந்து கூற வேண்டிய இடத்திலே கடிந்து கூறி அவர்கள் இருவர் நட்பும் இல்லறமாகிய நல்லறத்தைப் பற்றிப் படரும் வண்ணம் உதவி செய்கிறாள். உண்மையில் தோழியின் தோன்றாத் துணையால்தான் உயிரினும் சிறந்த கற்பைக் காப்பாற்றி நன்கலமாகிய நன் மக்களைப் பெற்று, தான் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் தன்னுடைய நாட்டிற்கும் ஏற்ற தொண்டு செய்கிறாள் தலைவி.

"புரை தீர்ந்த பொய்" என்னும் தலைப்பிலே சங்க இலக்கியத்திலே வரும் எல்லோருடைய சொல்லையும் நாம் அடக்கிக் கூறலாம் எனினும், தோழியின் உரையாடலில்தான் தலைப்பிற்கேற்ற நிகழ்ச்சிகள் நிறைந்து கிடக்கின்றன. உண்மைகள் பல பொதிந்து கிடக்கின்றன.

இல்லறம் என்னும் திருவிளக்கு ஒன்றை மனையில் மாண்புற ஏற்றிவைப்பதற்காக இவள் ஆற்றும் பணி கொஞ்ச நஞ்சமல்ல. அறம் வெல்ல வேண்டும் என்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டு தலைவன் முன்னிலையில் நின்று அறத்தின் கூறுகளை அஞ்சாது அவனுக்குக் கூறும் மாண்பிற்கு வேறு உவமையே இல்லை.

"அஞ்சுவது அஞ்சாமை பேதமை—அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

என்னும் குறளுக்கு இலக்கியமாகத் திகழுகின்றாள். தொல்காப்பியம் இச்சிறு முதுக்குறைவியை (சிறிய வயதிலே நிறைந்த அறிவுடையவள்) செவிலியின் மகள் எனக்கூறும். இது எவ்வாறாயினும் அறத்தின் காவற்கடவுளாகத் திகழும் இத்தோழியின் பாத்திரம் சங்க இலக்கியங்களிலே மிக அழகாக வருணிக்கப் பட்டிருக்கிறது.

### ஊர் திரும்பும் தலைவனுக்கு உரைத்தது

பிறர் தலையீடில்லாத தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் விரும்பிக் கூடினர், எனினும் அவர்களுடைய அன்பு வளர்வதற்கு—வளர்ந்து ஒழுக்க நெறியில் அது செல்வதற்கு, தோழி அரும்பாடு படுகிறாள். தோழியின் மூலமாகத் தலைவியை அடைந்த தலைவன் தன் ஊருக்குத் திரும்பிச் செல்கிறான். அப்பொழுது தோழி கடமையில் நிறைந்த கருத்து உடையவளாய் தலைவனுக்குக் கூறும் அறிவுரைகள் மிகவும் இன்புறத் தக்கவை. தன்னிடம் பன்முறை வேண்டி தன் மூலமாகத் தலைவியை அவன் அடைந்ததை அவள் சுட்டிக்காட்டுகிறாள். அவன் பிரிவதனால் தலைவியின் அழகு முகத்திலே படரும் வேதனை முகிலை அவனுக்குச் சுட்டிக் காட்டுகிறாள்.

"தலைவ, என் தலைவி மீது தண்டாத காதல் உண்டு என்று முன்னம் நீ கூறிய சொல்லை நான்

முற்றும் உண்மை என்று நம்பி என் தலைவியிடம் சொன்னேன். அவளும் என் சொல்லை மெய்யே என்று நம்பினாள். அதன் பயனாய்ப் பசுமை நிறம் பொருந்திய அரும்புகள் நிறைந்த பல கிளைகளையுடைய ஞாழல் மரத்தின் கீழ் ஓர் இடத்திலே, தன்னுடைய புது நலத்தை உன்னிடத்திலே இழந்து விட்டாள். இப்பொழுது உன்னுடைய பிரிவைக் கண்டு அஞ்சி துயரம் மிக உடையவளாய் நிற்கின்றாள். எங்களுடைய ஊரில் மடல்கள் தாழ்ந்த பனைமரங்கள் நிறைய உண்டு. மேலும், நிலவும் இருளும் போல் அலைகளையுடைய கடலும் கடற்கரைச் சோலையும் உடையது எம்மூர். எமது ஊரை நீ மறக்காது கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டு''மென்று கூறுகிறாள்.

இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறிப்
பசுநனை ஞாழல் பல்சினை ஒருசிறைப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுதிரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணையெம் சிறுநல் ஊரே.

(குறுந்-81)

தலைவனும் தலைவியும் கொண்ட காதல் அவளுக்குத் தெரியாதது அன்று. எனினும் அதை அறியாதவள் போல் தலைவனிடம் உரையாடுகின்றாள். அவள் செய்யவேண்டிய கடமைகளையும் அவன் முன்னின்று அஞ்சாது எடுத்துக் கூறுகின்றாள்: ''உன்னுடைய சொல்லை நான் உண்மை என்று நம்பினேன். அதனால் என் தலைவியும் என் சொல் தேறி உன்பால் கலந்த நட்புக் கொண்டாள். அதன் பயனாய் இப்போது அவள் தன் புது அழகை இழந்து தனிமைத் துயர் வருத்த நிற்கும் காட்சியை அதோ நீயே நன்கு பார்.

''எங்களுடைய ஊர் கடற்கரையிலே உள்ளது. அங்கே பசுமை நிறைந்த மரங்கள் அடர்ந்து இருப்பதால் பகற்காலத்திலும் இரவு போல் நிழல் மண்டி இருக்கும். எனவே பகற் காலத்தில் வந்தால்கூட என்னுடைய தலைவியை நீ தனிமையில் நன்கு சந்திக்கலாம். எனவே 'பகற்போதில் நான் வந்தால் என்னை அனைவரும் கண்டு கொள்வார்கள்' என்று சொல்லாது நீ அவளை நாள்தோறும் வந்து காண வேண்டும்'' என்று தன் உள்ளத்தை வெளிப்படையாகக் கூறாமல் கூறுகிறாள்.

மற்றோர் அழகான குறிப்பையும் அவள் நயம்பட இவ்வரிகளின் மூலம் உரைக்கிறாள். காதல் நோய் காலை அரும்பிப், பகலெல்லாம் போதாகி, மாலை மலரும் இயல்புடையது. ஆனால் ஊரை அடுத்துள்ள கானலில் படிந்துள்ள நிழல், பகல் ஒளியை மங்க வைத்து அப்பகலையும் அந்திமாலையாக மாற்றும் இயல்பு உள்ளது. இதனால் என் தலைவி என்றும் ஒழியாது உன்நினைவாகவே இருப்பாள். எனவே அவள் எவ்வநிலையை அறிந்து தவறாது வந்து காண்பது உன் கடமைஎனவும் கழறுகிறாள். சொல்லை அவள் ஆளும் திறமையும் தலைவன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறையை அவனுக்குத் திறம்பட உணர்த்தும் ஆற்றலும் நம்முடைய உள்ளத்தை விட்டு என்றும் நீங்காது. சங்க இலக்கியத்தில்தான் இந்த மாட்சி சுடர் விளக்காய் நின்று ஒளிர்கிறது.

# புலவன் சரித்திரம்

## (பிரமனூர் மிராசுக் கணக்கு வில்லியப்ப பிள்ளை)

1876-ல் நிலவிய கொடிய பஞ்சத்தைத் தாது வருஷப் பஞ்சம் என்று சொல்வார்கள். அந்தப் பஞ்சகாலத்தில் மக்கள் சொல்லொணாத கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். அதே சமயத்தில் சிலர் ஊரை ஏமாற்றிப் பிழைக்கவும் முற்பட்டார்கள். வியாபாரிகள், மற்றும் போலி வேடம் தாங்கிய சோதிடர்கள், வைத்தியர்கள், புலவர்கள் முதலியவர்களின் ஏமாற்று வித்தைகளை விவரித்து நகைச்சுவை ததும்பப் ''பஞ்சலட்சணத் திருமுக விலாசம்'' என்ற ஓர் அரியநூலை இயற்றினார் சிவகங்கை சமஸ்தானப் புலவரான பிரமனூர் மிராசுக் கணக்கு வில்லியப்ப பிள்ளை. 1899-ல் அரங்கேறிய இந்த நூலுக்கு இணையான நகைச்சுவை நூல் உலக இலக்கியத்திலேயே கிடையாது என்று துணிந்து சொல்லலாம். 'பஞ்சலட்சணத் திருமுக விலாச'த்தில் உள்ள ஒரு பகுதியே இங்கே கொடுக்கப்பட்டுள்ள போலிப் ''புலவன் சரித்திரம்.''

முன்சூ ழியற்படையைத் தட்டிக் கவிமுடிப்ப
வன்சூ ழியற்புலவன் வாறுசொல்வேன்:—பொன்சூழிக்

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும்அது போல்ஆடும் தன்மைபோல்—'ஞானகவி

வல்லார்போல் பாடி வளம்பெற்று நல்குரவாம்
இல்லாமை நீக்குதும்'என் றெண்ணியே,—கல்ஆரும்

காதில் தரிப்புக் கடுக்கன் ஒளியிலங்க,
சோதிமுலாம் பூசித் துலக்கியஓர்—மோதிரத்தைக்

கைவிரலில் பூண்டு, கனவல்ல வாட்டுடனே
ஒய்யாரமான உடை உடுத்தி,—மைஊர்வான்

தன்வடிவம் அன்ன தலைப்பாகின் பீற்றலைக்,கா-
மன்வடிவ மாக்கி வனைந்தியல்பாய்—மின்வடிம்புக்

கண்ணாடி பார்த்து, கவின்திலகம் தீட்டிமகிழ்ந்(து)
அண்ணாந்து காலை அகட்டிநடந்(து)—ஒண்ணார்ந்த

கையில் குடைபிடித்துக் கால்சோடு மாட்டி,ஒரு
பையல்கற்றுச் சொல்லிதன்பின் பற்றிவர—மெய்உணர்வுற்(று)

ஏ(டு)ஆய்ந்து சொல்லறியான் எல்லாம் அறிந்தவன்போல்
தாடாண்மை பேசித் தனைப்புகழ்ந்து—நீடுதமிழ்

கல்லாத மூடர்களைக் கற்றுயர்ந்த சேடன்என்றும்
பொல்லாரை நல்லதர்ம புத்ரன்என்றும்—இல்லாளுக்(கு)

அஞ்சி விழிப்பாரை அதிவீர சூரன்என்றும்
கெஞ்சி வெந்நிட்(டு) ஓடுவரைக் கிரீடிஎன்றும்—மிஞ்சிநிதம்

பொய்பேசும் வீணர்களைப் போஜன், அரிச் சந்த்ரன்என்றும்
கைநலம் இலாதவரைக் கன்னன் என்றும்—வெய்துயிர்க்கும்

தாரித்ரம் உள்ளவரைச் சம்பனகு பேரன்என்றும்,
பாரித்து முனிபுலவோர் பாடியதைப்—பாரா

மனப்பாடம் செய்(து)அந்த மால்பொன்னுச் சாமி
தனிப்பாட லில்சிலது சந்தத்(து)—இனிப்பான

செய்யுள்பல கற்றுச் சிலுக்கி இறுமாந்து
மெய்அணுவி லாமல் மிகப்புளுகி—எய்தரிய

ஊரொன்றுய்ச் சுற்றி உலைந்து, ஆங்(கு) உளான்ஒருவன்
பேர்அன்(று) ஆராய்ந்(து) அவன்பால் பின்சென்றே,—''யார்என்று

கேட்கிறீர் ? இப்புவியில் கீர்த்திதிகழ் சேதுஎனும்
தாக்கணங்கு மேவுசமஸ் தானமதில்—நோக்கமிகும்

கல்விப்ர சங்கக் கவிராஜர் நாம் ; நமது
நல்வித்தை கண்(டு) அயனும் நாணுவான்—பல்கலைநூல்

ஆசிரியர் நம்மை 'அதிகப்ர சங்கி'எனப்
பேசஉல கெங்கும் பெயர்பெற்றோம் !—'ஆசறுசீர்

விஞ்சைத் தமிழில்இவர் மெத்தப் படித்தவர்' என்(று)
ஒஞ்சிப் புலவர்நமக்(கு) ஓட்டமே !—கஞ்சன்இழி

பூத உடல்ஈவான் ; புலராப் புகழுடல்நாம்
ஈதலால் அன்னவற்(கு) யாம்அதிகம் !—வாதில்மன

மாசுறப்பொய்ச் சாக்ஷிசொன்ன மட்டிப் பயல்களெல்லாம்
நாசமுறத் தீட்டிவசை நாட்டினோம் !—வீசுதமிழ்க்(கு)

அஞ்சாது தீங்குபுரி வார்கள்அடி மாண்(டு)இலவம்
பஞ்சாய்ப் பறக்கஅறம் பாடினோம் !—விஞ்சலைசூழ்

அம்புவியில் நம்மைஅறி யார்இல்லை ! நம்பெயரோ
செம்பொன்மலை மேல்இட்ட தீபமாம் !—இம்பர்தனில்

தீர்க்கநலம் மேவும் சிவகெங்கை வாழ்உயர்சன்—
மார்க்கதுரைச் சிங்க மகராஜன்—ஏற்கையுடன்

சித்தமகிழ்ந்(து) அஞ்சாறு சீவிதக்ரா மங்கள்விட்டு
மெத்தமரி யாதைதந்தான் மேன்மையாய் ;—எத்தலத்தும்

சந்ததமும் மிக்கஉங்கள் சற்புகழ்கேட்(டு) அற்புதமாய்ப்
பைந்தமிழ்ப்ர பந்தம்ஒன்று பாடிவந்தோம்—சிந்தைவைத்துக்

கேட்டருள்வீர் '' என்று கிளத்தும் பொழுது,தலை
கோட்டிமுகம் பாராக் குறிப்பறிந்து—நாட்டில்உயர்

அஷ்டாவ தானகவி யாம்சரவ ணப்பெருமாள்
மட்டறமுன் சொன்ன வசைத்தமிழை—ஒட்டிஇவன்

தான்பா டினபோல் தடதடென்று மூட்ட, மகிழ்-
வான்போல் நகைத்(து), "இசையில் மாவலீர் !—யான் கருத்தில்

யாதுவே ருயிருந்தே னாகினும்நீர் நல்லகுண
சாதுவாய் வந்ததுவே சந்தோஷம் !—மேதையர்க்குத்

தான்ஈயும் நற்கொடையே தார்க்கியன்கா லில்சலங்கை
மா நாதம் போலும்இசை வாய்க்குமே ;—ஆனாலும்

நாடிவந்தீர் இப்போழ்து நல்ல சமயமில்லை
ஆடிகழித்(து) ஆவணிஅஞ் சாம்தேதி—ஓடி

அகத்தியமாய் வாரும் ; உமக்(கு) அச்சணமே செம்பொன்
தகட்டங்கி சால்வைகளும் தாரேன்—விகற்பமின்றிப்

போய்வருவீர்'' என்னப் புலவர் படபடத்(து), "இன்(று)
ஓய்வறநீர் சொன்ன(து) ஒழுங்காமோ ?—ஆயுங்கால்

'நாளை'என் பான்கொடையும், நம்பி நலமில்லாக்
காளைபின் போன கருங்குழலும்—பூளை

திடலில் குவித்த குவையும்இம் மூன்றும்
கடலில் கவிழ்த்த கலமாம்—இடருழந்த

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிதெனுமாப்—போலும்

தடையின்றி உங்கள்மனம் சந்தோஷித்(து) ஈயும்
கொடைதனையே கொள்வேன் குணமாய்—அடைவோர்க்(கு)

இடுக்கண்உற்ற போதில்உவந்(து) ஈயாத பேர்பின்
கொடுத்தென் ? 'கொடாமல்என்ன ? கூறும் !—படித்தவரே !

மாதயவு செய்யும்'' என்று மாரு(து) உரைக்க, அவன்
வேதனையாய் உள்ளம் மிகவருந்தி,—'ஏது, நம்மைச்

சும்மா விடான்புலவன்; தொந்தரவுக்(கு) என்புரிவோம் ?
நம்மாலே ஒன்றும் நடவாதே;—இம்மாற்றம்

இல்லவள்கண் டால்இவனை ஏன்அழைத்து வந்தாய்? என்(று)
எல்லையறப் பேசி இடிப்பாளே!—தொல்லைவினைக்(கு)

என்செய்வோம்?' என்றிங்(கு) இருதலையாம் கொள்ளியினில்
துன்பெய்தி வாடும் சுழல்எறும்பாய்—பின்புமன

ஊக்கமுடன் சென்றுமனை யுள்ளாட்(கு) எதிரில்நின்று
நாக்குளறி மெல்ல நவிலுவான்:—"பாக்யவதி!

சேது சமஸ்தானம் சிறந்திடு கவீசுரர், சங்-
கீதசா யித்யகலைக் யானம்உள்ளோர்—ஓதும்ப்ர-

பந்தம்ஒன்று பாடி,அதில் பாவாய்! உன் பேரைநல்லாய்
முந்திவைத்(து)என் பேரை முகனைவைத்துத்—தந்தியினால்

தம்புருவை மீட்டிச் சரளியொடு பண்பலவும்
கெம்பீர மாய்ப்படித்தார்; கேட்டனையோ?—கொம்பனையாய் !

ஏற்றமரி யாதைஅவர்க்(கு) ஈயா திருந்துவிட்டால்
மாற்றரிய பொல்லா வசைபடிப்பார்;—போற்றுநம(து)

ஐஸ்வர்யம் எல்லாம் அழிந்து கெடுவதன்றி
மொய்குழலாய்! ஆளுக்கே மோசம்வரும்;—தெய்வீக

வாதிசராம் பாவலர்கள் வாய்வசையி ஞல்அழிந்து
மேதினியில் கெட்டார் மிகஉண்டே;—ஏதேனும்

தா'' என்று கெஞ்சஅந்தச் சண்டாள நீலியவள்
''ஓ''என்று கூவி உரத்(து) எழும்பி—''மாவலன்போல்

நீதம்இனிப் பேசவந்தாய்! நீயும்ஓர் ஆண்பிள்ளையோ ?
கூதறையே! உன்னைக் கொடுப்பேனே!—சூதகமே!

வாகுகெட்ட சோதாய்! என் வாயில்நல்லாய் வந்துவிட்டுப்
போகு(து)! எதிர் நில்லாய் புறத்தொதுங்கு!—மூகைஓப்ப

நீட்ட முடக்கறியாய்! நீகெட்ட கேட்டுக்குப்
பாட்டொன்ருே! என்ன பகுமானம்!—வீட்டு

வருத்தம்அறி யாதநெடு மாடே! உனக்குக்
கருத்தில்அணு வுண்டோ கவலை?—பருத்ததன்றிப்

புத்தியில்லா நீவெளியே போபோ'' எனஇரைந்தங்(கு)
எத்தனையோபேசி எயி(று)அதுக்கி,—நத்திஉன்பின்

போக்கற்று வந்த புலவன்எங்கே? எங்கே?''என்(று)
ஆக்ரமித்துப் பேசி அதட்டினுள்;—தாக்கிப்

புலவன்எங்கே? என்று புடைபுடைத்துச் சீறும்
கலவரம்கேட் டுள்ளம் கலங்கி,—நிலை பெயர்ந்து,

'சட்டிவரு முன்னே தலைசாய்க்க வேண்டும்என
ஒட்டிமுன்னேர் சொன்னமொழி உண்மையே;—கிட்டி இங்கு

வந்தாலும் வந்திடுவள்; வந்திடில்ஓர் வேளை நம்மைத்
தன்தாபம் தீருமட்டும் தாக்குவள்'என்(று)—இந்தவிதம்

சந்தேக மாய்ப்புலவர் தான்ஓட்டம் கொள்வதற்கு
முந்திஉஷா ராக முழித்திருந்தார்—தன்தலைவன்,

''பெண்ணே! என் ஆசைப் பெருங்கே! மருக்குலவும்
கண்ணே! எனக்கிசைந்த காதலியே!—பண்ணிவைத்த

பாயாசம் போலும்நல்லாய்ப் பாடினவர்க்(கு)ஏதேனும்
ஈயா திருந்தால் இளப்பம்அன்ருே?—நீயே

உணர்ந்திடுவாய்'' என்றுபல ஓத, இவன்சொற்(கு)
இணங்கிஉளம் சற்றே இளகி—பிணங்குதலாய்ச்

சால நெடுநேரம் தனித்(து)அதி விசாரம்உற்றுக்
காலணு ஈந்தாள் கடுகடுப்பாய்;—ஏலும்இதை

நற்கொடைஎன் றேமதித்து நாவலன்பால் எய்தி,''நல்ல
லக்கனம்வந் தீர்!'' எனவும் நண்பாடி—மெய்க்க அவன்

கைத்தலத்தைப் பற்றிஉள்ளங் கையில்வைத்துத் தன்கையினுல்
பொத்தி, இனி தாகப் புகலுவான்:—''நத்தித்

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாய்க்
கொள்வர் பயன்தெரிவ ராம்'' என்(று)—இனிதுரைத்து

மெல்லஇவன் கைஎடுக்க, மெய்க்கொடை கண்(டு) உட்கிஇவன்
உல்லங் கனமாய் உரைபகர்வான் :—''நல்லவன் போல்

ஏன்காணும் நீர்தான் இருந்திருந்தும் இக்கொடையைத்
தாங்கா(து) அளிக்கத் தலைப்பட்டீர் ?—போம்காணும் !

திட்டிபடப் போகுதுகாண் ! சேலையினால் மூடியதைத்
திட்டிசுற்றி ஆங்கே செலுத்திவிடும் !—கட்டிஎம்ஊர்

செல்லும் வழிமார்க்கம் திருடர்பயம் உண்டுகண்டீர் !
நல்லதுணை கூட்டி நமைஅனுப்பும் !—வெல்லம்அன்ன

பேச்சைநம்பி நாமும்வெகு பேராசை கொண்டதெல்லாம்
ஆச்சரியச் சொப்பனம்போல் ஆனதுகாண் !—ராச்சியத்தில்

உம்மைப்போ லும்ப்ரபுக்கள் உண்டோ !மூ வேழுவள்ளல்
தம்மைத்தான் சொல்லத் தரமன்றே !—அம்மம்மா !

நேர்த்தி ! வெகு நேர்த்தி!'' என்று நிஷ்டூர மானசில
வார்த்தைபல பேசி மடமடத்தே—ஈர்த்து,

''வசைபாடு வோம் பயலே ! வாடா ! கொண் டாடா !
இசையும் எழுத்தாணி எடடா !—பசையற்ற

மூடனுட பேரை முதல்எழுத டா ! முதலில்
கீடென் றெழுத்தைக் கிறுக்கடா !—மாடே ! உன்

கைவிரசு வேண்டாமா ? கற்றவர்க்(கு)ஈ யாதஇவன்
ஐசுவர்ய மெல்லாம் அறிகிறேன் !—பொய்யோடா !

ஈரெட்டு நாளையில்பார் !'' என்றுகடை வாய்நுரைக்கப்
போரிட்டுக் கத்தும் பொழிதில், அவன்—நேரிட்டே

''என்ன, கடி நாய்ப்புலவீர் ! ஏது, பரி காசமுடன்
சின்னமொழி யால்இகழ்ச்சி செய்திட்டாய் ?—உன்னைத்

தலைமழுக்கம் பண்ணித் தகுந்தசிட்சை செய்வேன் ;
புலவன்என்ற தாலே பொறுத்தேன்;—'பலநூல்கள்

முற்றுணர்ந்தேம்' என்ன மொழிந்தாய் ! சபாஸ் ! உனது
கற்றறிமோ ழைத்தனத்தைக் காட்டினாய் !—மற்றும் 'வசை

பாடுவோம்' என்னப் பயமுறுத்தி னாய் ! அதுதான்
தேடிஎனை வந்தென்ன செய்துவிடும் ?—போடாபோ !

சாவத் துணிந்தால் சமுத்ரம்முழங் காலாம் ! உன்
பாவுக்குச் சற்றும் பயந்திடேன் ;—நீவலியப்

பல்லைப் பிளந்துகவி பாடிஇசைத் தாலும், இனிச்
சல்லிக்கா(சு) ஒன்று தரமாட்டேன் ;—நில்லாதே !

ஊரார் உடைமைகளை ஊசாடிச் சுற்றுதற்குப்
பேராசை கொண்ட பெரும்பதரே !—யார்யாரை

ஏமாத்தி வந்தாய் ? எவர்பொருளைக் கொள்ளையிட்டாய் ?
காமாட்டி ! உன்றன் கருத்தறிந்தேன் ;—ஆமா ; நீ

கொண்டிடும் அவாஅடங்கக் கோத்ததடிக் கம்பு"ப்ர-
சண்டு" செய்வேன் ; செய்வேன் ; தடையில்லை ;—கண்டாய் ! இத்

தக்கமரி யாதையுடன் தப்புவதே மெத்தநலம் !
கெக்லித்து நின்றால் கெடுதிவரும் ;—இக்கணமே

செல்வாய் ! செல் வாய் !" எனவே செப்ப, இந்தப் பொய்ப்புலவன்
ஒல்காமல் பின்னும் உளறிநிற்க,—புல்வாயை

மோதுபுலி போல்சினந்து முன்னே நெருங்கிவர,
பீதியுட னேபுலவர் பின்வாங்க,—வாதொ(டு) அவன்

தாவிப் பிடிக்க, இவன் தப்பித்து லாகுகொண்டு
கூவி, இரு கால்கதியைக் கூடினனே !—காவுலவும்

மான்ஓட்டம் மெத்த வலியில்லை ; வந்தகல்வி-
மான்ஓட்டம் மெத்த வலிஉளதே !—தானே

எசமானாய் வந்தவர்பா(டு) இவ்விதமா னாலோ,
சிசுவெனும்கற் றுச்சொலிஎன் செய்வான் ?—விசயன்விடும்

அஸ்திரமும் பின்னிட்(டு) அடங்க, அவன் கால்கதியை
விஸ்தரித்துச் சொல்லவுந்தான் வேண்டுமோ ?—மஸ்தளிகால்

செய்யமலர் விட்டுத் திரள்ஆர் அளியினங்கள்
கைதைமலர் உற்றுக் கவலுதல்போல்—வையகத்தில்

நல்லோர் பலர்இருக்க நாடா(து) உலுத்தர்எனும்
புல்லோரைச் சென்று புகழ்ந்து, கவி—சொல்லியும் ஓர்

நன்றிஅறி யாதவராய், 'நானும் புலவன்' என்றே
கன்றி உழன்றார் கனபேர்கள்.

# நாலடியாரின் அறத்துப்பால்

'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்பது நாட்டில் வழங்கும் பழமொழி. இதற்கு, நாலடியாரும் திருக்குறளும் சிறந்தன எனப் பொருள் காட்டி, இரண்டினையும் இணைத்துப் பேசுவர் அறிஞர். இரண்டும் மக்கள் வாழ அறம் கூறும் நூல்களே. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் நாலடி முதலாவதாக வைத்துப் பேசப் பெறுகிறது. குறளும் அவற்றுள் ஒன்றே. இரண்டும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளை உடையனவே. பல அதிகாரங்களின் தலைப்புக்கள் இரண்டிலும் ஒத்திருப்பதாகக் காண்கிறோம். போப் முதலிய மேலைநாட்டுப் பேரறிஞர்களும் இரண்டினையும் மொழி பெயர்த்துப் போற்றியுள்ளனர். எனினும் நாலடியைக் குறளுக்கு ஒப்பக் கொள்ளமுடியவில்லை. காரணம் என்ன?

நாலடி, குறள் இரண்டிலும் அறன் வலியுறுத்தப் பெறுகின்றது. 'அறன் வலியுறுத்தல்' என இரண்டிலும் நான்காவது அதிகாரம் உள்ளமை அறிவோம். அதற்குமுன் வள்ளுவர் குறளின் தொகுப்பில் 'கடவுள் வாழ்த்து' 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' என்ற மூன்றும் அமைய, நாலடியில் 'இளமை நிலையாமை,' 'யாக்கை நிலையாமை' 'செல்வ நிலையாமை' என்ற மூன்றும் உள்ளன. அறம் கூறத் தொடங்கும் காலை, முதலில் நிலையா வாழ்வை எடுக்காட்டுகிறது நாலடியார். ஆனால் குறளோ, அறத்துக்கும் அனைத்துக்கும் முதலாகிய ஆண்டவனையும் அவன் வழி அவன் அருளாகவே பெய்யும் மழையையும் அவரைப் போற்றும் 'நிறைமொழி மாந்தர் பெருமை'யினையும் காட்டுகிறது. பின் கூறும் அறன் வலியுறுத்தலிலும் வேறுபாடு காண்கிறோம். ஏன் இந்த வேறுபாடு?

இந்த இரண்டு நூல்களும் உண்டான காலங்களும் இவற்றை உண்டாக்கிய அறிஞர்தம் உளப் போக்குமே இந்த மாற்ற அடிப்படைக்குக் காரணங்களாக அமைகின்றன. இருவரும் தம் இயற்பெயரற்ற பெரும்புலவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் திருவள்ளுவர் தம்மை மறந்து சமுதாயத்தையே கருத்தில் வைத்து, அவர் வாழ்ந்த கடைச்சங்க காலத்திய தமிழர் அறத்தின் அடிப்படையில் உலக சமுதாயம் வாழத்தக்க அறத்தை ஆராய்ந்து தம் குறளை எழுதினர். மனிதன்-ஏன்-உயிரினம் ஒன்றையொன்று பற்றி, பிணக்கின்றி வாழ்வாங்கு வாழ வழி என்ன எனக் காணமுயன்று, அதில் வெற்றி பெற்றமை கண்டார்-கருத்தில் உணர்ந்தார். 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என வள்ளுவத்தை, வாரி வழங்கினர். ஆனல் நாலடியாரின் ஆசிரியர்களோ தம் சமயக் கோட்பாட்டினையும் தம் துறவுக் கொள்கையினையும் மனத்தில் வைத்தே நாலடியினை நாட்ட நினைத்தனர். 'சைன முனிவர்' நாலடியின் ஆசிரியர் என்பர். அவர் ஒருவரோ பலரோ என்பது முடிவு கட்டப்பெருத ஒன்று. நாட்டில் வழங்கும் கதையில், நாற்பதாயிரம் சமணமுனிவர் எழுதிய நாற்பதாயிரம் ஏடுகளில் இந்த நானூறு ஏடுகளே நீரில் எதிரேற்றுச் சென்ற நிலையினைக் கேட்கிறோம். அதன்படி தனித்தனி நானூறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல் எனக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் பஞ்சத்தின் காரணமாக வேற்று நாட்டில் இருந்து பாண்டி நாடு வந்தவர் என்பது கதை. கதை எப்படியாயினும் அவர்கள் அனைவரும் துறவியர் என்பதில் ஐயமில்லை. அன்று பாடியவர் ஒருவரேயாயினும் அல்லது பலராயினும் அவரோ அவர்களோ துறவுநிலை பெற்றவர்

அ. மு. பரமசிவானந்தம்

என்பதும் அவர் தம் சமயம் சமணம் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள். அவர்கள் தாம் பாடிய நாலடியைத் திருவள்ளுவர் போன்று, தம்மை மறந்து சமுதாயத்தை எண்ணிப் பாடவில்லை. மாருகத் தம் துறவுக் கொள்கையை நிலைநாட்டப் பாடிய பாட்டுக்களாகவே அவை அமைகின்றன. அவற்றுள் 'அறம்' பற்றிய பாடல்களுள் பல 'துறப்பதே அறம்' எனக் காட்டுகின்றன. 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற உலக நெறி காட்டும் வள்ளுவத்துக்கு மாருக 'மனைப்பாசம் கைவிடாய் மக்கட்கென்றேங்கி எனைத் தூழி வாழ்தியோ, நெஞ்சே' என்று துறவை வலியுறுத்தி நாலடி தன் அறத்துப்பாலை முடிக்கின்றது. வள்ளுவர் வாழ்வாங்கு வாழும் இல்லற வாழ்வை முதலாவதாகப் பல அதிகாரங்களால் விளக்கி, கடைசியில் சில அதிகாரங்களால் துறவியலைக் காட்ட, நாலடி துறவற இயலை முதலில் எடுத்துக்கொண்டு, அதற்கென ஆறு அதிகாரங்களும் பின்வரும் இல்லற இயலுக்கு ஏழு அதிகாரங்களும் கொண்டுள்ளது. இப்பிரிவு சில பதிப்புக்களில் இல்லை. எனினும் அறத்துப்பால் பதின் மூன்று அதிகார அளவிலேயே உள்ளமை தேற்றம்.

நாலடி பாடிய சமண முனிவர் தம் கொள்கையாகிய துறவையே முதல் மூன்று அதிகாரங்களில் வற்புறுத்துவர். உலக நெறிக்கு அவை முற்றும் மாறுபட்டமையின் மக்களிடையில் அவை சிறந்ததாகப்போற்றப் பெறவில்லை. அவர் வாழ்ந்த காலமும் கொண்டகருத்தும் அவர்களை அவ்வாறு எழுத வைத்தன. வள்ளுவரும் தவம், துறவு இவைகளைக் காட்டுகின்ருர். எனினும், இந்நாலடியாரைப் போன்று துறவே மேம்பட்டது என வரையறுக்கவில்லை. எனவே வள்ளுவர் குறளை ஒத்து நாலடி நாட்டில் பீடு நடையிட முடியாது பின் நிற்கின்றது எனலாம்; எனினும் நாலடியில் நல்ல அறப்பகுதிகளும் அறிவு ஊற்றங்களும் உள்ளமையை யாரும் மறுக்க இயலாது. அவற்றின் அடிப்படையில் தான் இது 'பதினெண்கீழ் கணக்கில்' முதலாவதாக இடம் பெறுகின்றது என்பது தேற்றம்.

நாலடியார் நானூறு பாடல்களால் ஆகிய நாற்பது அதிகாரங்களைக் கொண்ட ஒரு நூல். குறளில் உள்ளமை போன்றே இதிலும் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. கடைசியிலுள்ள காமத்துப் பாலுக்கு ஒரே அதிகாரம்தான் உள்ளது. அறத்துப்பாலுக்குப் பதின்மூன்று அதிகாரங்களும் பொருட்பாலுக்கு இருபத்து ஆறு அதிகாரங்களும் உள்ளன. ஈண்டு நாம் அறத்துப் பாலில் அமைந்துள்ள பாடல்கள் பற்றிச் சிறிது காணலாம்.

நாம் மேலே காட்டியவாறு ஆசிரியர் நூலை நிலையாமை அடியிட்டே தொடங்குகின்ருர். முதல்மூன்று அதிகாரங்களும் நிலையாத செல்வம்-நிலையா இளமை-நிலையா யாக்கை இவை பற்றியே கூறுகின்றன. நிலையாமை கூறுவது தமிழ் நாட்டு மரபுக்கு மாறுபட்டதன்று. ஆனல் அறிவே அந்த நிலையாமையைக் காட்டி, மக்களைத் தட்டி எழுப்பி, உள்ள சில நாட்களில் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பல பெருக்கி, மற்றவரையும் வாழவிட்டு, சமுதாயத்தை உயர்த்தி, தாமும் உளத்தாலும் உற்ற வாழ்வாலும் சிறக்க வேண்டும் என வற்புறுத்துவது தமிழ் மரபு. 'காஞ்சித் துறை'யே தமிழ் இலக்கணத்தில் மிகச் சிறந்த ஒரு துறையாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்ட வந்த மாங்குடி மருதனர் என்ற சங்ககாலத்துச் சிறந்த புலவர் அவனைக் 'காஞ்சி' பாடியே பாராட்டினர். அப்பாலுள் அவர் நிலையா வாழ்வை நினைவூட்டி, நிலைத்த இன்பமும் அறமும் பெற வழிகாட்டினர்.

> 'பணைகெழு பெருதிறல் பல்வேல் மன்னர்
> கரைபொழுது இரங்கும் கனைஇரு முந்நீர்த்
> திரையிடு மணலினும் பலரே ; உரைசெல
> மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே'
>
> (மதுரைக் காஞ்சி 234-37)

எனக்காட்டி உலகவாழ்வு அழியக் கூடியது என விளக்கி, அந்த அழியும் வாழ்வை அழியா வாழ்வாக்கும் முறையில் வாழ வேண்டும் என்ற அடிப்படையில்,

> 'பெரியகற்று இசைவிளக்கி
> முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
> பல்மீன் நடுவண் திங்கள் போலவும்
> பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி
> ..............................
> மறமிகு சிறப்பின் குறுநில மன்னர்
> அலரும் பிறரும் துவன்றி
> பொற்புவிளங்கு புகழ் அவைநிற் புகழ்ந்தேத்த
> இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
> மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
> மகிழ்ந்தினிது உறைதி பெரும'
>
> (மதுரை. 767-81)

என்று வாழ்த்துகின்ருர். இதுதான் தமிழ்முறை-சமுதாய முறையும் இதுதான். பெற்ற சில நாட்களுள் உற்ற செயலாற்றி, உலகம் உள்ளளவும் நிலைக்கும் புகழ்ச்சிக்குரிய செயல் செய்து, அறமாற்றிமறங்கடிந்து சிறந்து வாழ்தலே வேண்டுவது. இது எந்நாட்டுக்கும் ஏற்ற சமுதாய வாழ்க்கை நெறி. ஆயினும் நாலடியார் பாடிய முனிவர் தம் கொள்கையாகிய துறவையே அறத்துப்பாலில் முதலில் வற்புறுத்தி, செல்வத்தை, இளமை வாழ்வை, யாக்கையை வெறுத்து ஓட வேண்டுமெனக் கூறுகின்றனர். எனினும் அவற்றின் உள்ளீடாக, 'இந்த அழியும் செல்வத்தை வைத்துக் கொண்டு வாழநினைக்கார்கள் ; மற்றவர்களுக்கு வாரி வழங்குங்கள்' என்ற உண்மையினையும் அவர்கள் வற்புறுத்துவதே நாலடி நாட்டில் 'நல்லடி' யாக வாழ

வழிவகுக்கின்றது. 'கூற்றம் வருவது உறுதி. எனவே அறஞ்செய்மின்' என வற்புறுத்தும் பாடல்களும், 'நீவிரும் உண்டு உடுத்து வாழ்மின்' என உரைக்கும் பாடல்களும் உள்ளன.

'உடாஅதும் உண்ணாதும் தன்னுடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்—கெடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி'

(1-10)

என்பது செல்வ நிலையாமை என்ற அதிகாரத்தின் இறுதிப்பாட்டு. எனினும் அடுத்துவரும் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற இரண்டு அதிகாரங்களிலும் துறவையே வன்மையாக வற்புறுத்துகின்றார் ஆசிரியர்.

'நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார்
அற்புத் தளையும் அவிழ்ந்தன—உட்காணாய்
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம்? வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி'

(2-2)

என்றும்

'நாத்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்க் கடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்'

(3-6)

என்றும் நிலையா வாழ்வால் பயனிலை எனக் காட்டுவர். காட்டி துறவே மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றார். எனினும் இவற்றின் இடையிலே,

'மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாதே
கைத்துண்டாம் போதே கரவா தறம்செய்மின்'

(2-9)

'யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் [தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க'

(3-8)

'புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை [என்றெண்ணி
இன்னியே செய்க அறவினை'

(3-9)

என்பன போன்ற அறமுணர்த்தும் வாழச் சொல்லும் அடிகள் வந்து அறத்தையும் சமுதாய நெறியையும் வற்புறுத்துவதாலேயே இந்நூல் காலத்தை வென்று வாழும் நல்வாழ்வு பெற்றுச் சிறக்கின்றது.

நான்காவதாக உள்ள 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தை இனிக் காண்போம். திருவள்ளுவர் அறத்துக்கு விளக்கம் தரும் காலை,

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'

(4-4) என்பார். ஆனால் நாலடி அந்த அடிப்படை உண்மையை வலியுறுத்தவில்லை. அறம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றது என்றாலும் ஈண்டும் நிலையாமையை உணர்வதே அறம் என்னும் வகையிலும் சில பாடல்களை அமைத்துள்ளது.

'வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்'

(4-9) என்பது அறம். எனினும் இந்த நிலையாமை காரணமாக அறமாற்ற வேண்டும் எனச் சில பாடல்களில் நாலடி வற்புறுத்துகின்றது. 'அறம் என்பது யாது?' என்பதை வள்ளுவர் போன்று திறம்பட விளக்கா நிலையினை உணர்கிறோம்.

'ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்'

(4-6) என்று அறனைப்பற்றிச் சுட்டுகிறது. தக்காரிடம் அறம் சேரின் 'தினைத்துணையும் பனைத் துணையாக' நன்கு சிறக்கும் என வள்ளுவர் காட்டிய உண்மையை நாலடி விளக்குவது போற்றக்குரியது.

—'அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்'

(4-8) என்பது நாலடி.

இனி அடுத்துவருகின்ற 'தூய் தன்மை' என்னும் துறவறவியல் அதிகாரத்தில் நாலடியார், நிலையா வாழ்வை உணர்வதே 'தூய்தன்மை' என்ற அடிப்படையிலேயே செல்லுகின்றது. 'தூய்மை என்பது அவாவின்மை' என்ற வள்ளுவத்துக்கு மாறாக, அனைத்தையும் பொய்யெனவும் அழியக் கூடியவை எனவும் கொண்டு, துறவு கொள்ளலே சிறந்தது எனக் காட்டுவதைக் காண்கிறோம். இதில் ஆசிரியர் சிறப்பாகப் பெண்களைப் பழிப்பதையே தூய்தன்மை எனக் காட்ட நினைக்கிறார் என்று கொள்ள இடமுண்டாகின்றது.

'முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவனோ
எல்லாரும் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்'

என்பதும் (5-5)

'ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை—பேதை

பெருந்தோளி பெய்வளையாய் என்னுமீப் போந்த
கருந்தோலால் கண்விளக்கப் பட்டு'

என்பதும் எடுத்துக் காட்டு (5-7)

ஆனால் 'துறவு' அதிகாரத்தில் தவம், நிலையாமை, துறவு பற்றியே வற்புறுத்துகின்றதைக் காண்கிறோம். முந்திய அதிகாரங்களிலேயே துறவை வற்புறுத்தும் ஆசிரியர் இதில் அந்த அடிப்படையை கைவிடுவாரோ! எனினும் இந்த அதிகாரத்தில் ஆசிரியர் துறவின் அடிப்படையில் சில நல்ல உண்மைகளைச் சொல்லத் தவறவில்லை.

'திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று'

(16.7)

என்ற குறளுக்கு நல்விளக்கமாக நாலடி ஓர் உயர்ந்த பாடலை நமக்குத் தருகின்றது. 'நொந் நொந்து' என்ற குறள் தொடருக்கு விளக்கமே என்னுமாறு,

'தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்'

(6-8)

என்ற நாலடி அமைகின்றதன்றோ! இதன் அடியைத் தானே தம் விளக்கத்துக்குப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு 'நொந் நொந்து' வருந்த வேண்டுமென்று துறவற இயலில் காட்டிய நாலடியின் ஆசிரியர், இல்லற வியலில் நேர்மாறான மற்றொரு கருத்தைச் சொல்லுகிறார். 'தம்மை இகழ்வாரைத் தாம் அவரின் முன் இகழ்க' என்பதே அது. ஏன் அவ்வாறு சொல்லுகிறார் என்பது எண்ணத் தக்கது. ஒரு வேளை இல்லறத்தான் தன் வாழ்வு கருதி சுற்றத்திற்கு உண்டாகும் துன்பம் கருதி-பிற சூழல் கருதி அவ்வாறுமாறுபட நேருமாயினும் துறவி அவ்வாறு மாறுபடலாகாது என்று கருதினாரோ என எண்ண வேண்டியுள்ளது. எனினும் வள்ளுவர் உயர்ந்த பொருள் பொதிந்த தம் குறளை இல்லற இயலிலே வைத்திருப்பது நோக்கத் தக்கது.

'தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்இகழ்க
என்னை அவரோடு பட்டது'

(12-7)

என்று நாலடியில், 'மெய்ம்மை' என்பது இல்லற இயலைச் சார்ந்த அதிகாரத்தில் கூறப் பெற்றுள்ளது.

சினமின்மை என்பது அதிகாரத்தில் ஆசிரியர் கோபத்தினது கொடுமையினையும் அது இல்லாவிடத்து அமையும் சிறப்பையும் பிற இயல்புகளையும் நல்ல உவமைகளால் விளக்குகிறார். குறட் கருத்துக்கள் சில எடுத்துக் காட்டப் பெறுகின்றன; சில விளக்கப் பெறுகின்றன. வள்ளுவரை ஒத்தே இவ்வதிகாரம் துறவின்பால் சார்த்திக் கூறப்பெற்றுள்ளது. 'ஈயும் தலைமேல் இருத்தலால்,' 'இடுநீற்றால் பையவிந்த நாகம்,' 'நீர் கொண்ட வெப்பம்,' 'கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டு தம் வாயால் பேர்த்து நாய் கௌவினர்' போன்ற உவமைகளும் விளக்கங்களும், கொண்ட பொருளை நன்கு எடுத்துக் காட்ட உதவுகின்றன.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து'

(குறள் 125)

என்ற குறளின் கருத்தினை நாலடி இந்த அதிகாரத்தில்

ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை'

(நாலடி 7-5)

என்று விளக்கிக் காட்டுகின்றது. இன்னும் சினத்தை அடக்குதற்குரிய உபாயங்களையும் வழி வகைகளையும் எடுத்துக் காட்டி விளக்கும் நிலைகளும் போற்றற் குரியன. அற்பர் கொண்ட கோபம் அழியாது வளரும் நிலையும், நல்லார் கொண்ட சினம் நீர் கிழிய எய்த வடுப்போல மாறும் வகையும் விளக்கப் பெற்றுள்ளன. மேலும் இவ்வதிகாரத்தில் ஆசிரியர் கொண்ட பொருள் வள்ளுவர் கொள்ளும் அந்த அளவிலும் வகையிலும் நின்று மாறுமல் தெளிவாக உள்ளமை போற்ற குரியதாகும்.

அடுத்து வரும் பொறையுடைமை என்னும் அதிகாரம் சினமின்மை அடிப்படையிலே அமைய வேண்டியதால், பொறையினை வற்புறுத்துமாறு அமைவது சிறந்ததாகும். வள்ளுவர் பொறையுடைமையை இல்லறத்திலும் வெகுளாமையைத் துறவறத்திலும் வைத்தமை போன்று அல்லாது இங்கே இரண்டையும் ஒன்றையொன்று சாரவைத்திருப்பது பொருத்தமாக உள்ளது. சினத்தை அடக்குவதும் மாற்றுவதும் பொறையுடைமையாதலின் இந்த அமைப்பு வரவேற்கத் தக்கதேயாகும். பொறையுடையார் என்றும் துன்புறார் என்ற கருத்தினை 'பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்' என்றார் வள்ளுவர். நாலடி அக்கருத்தை இன்னும் நன்கு விளக்குகிறது.

'அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினர் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது'

(8.4) எனக் காட்டுகிறது.

நட்டார் மாறுபடின் பொறுக்க வேண்டுமெனவும், அப்பொறுமை எல்லைகடக்கும் நிலை உண்டாயின், அந்த நண்பனைத் தூற்றாதே விட்டுத் தூரவிலக

வேண்டும் எனவும் நாலடி காட்டும் வழி நாமெலாம் பின்பற்ற வேண்டிய நல்வழியாகும். இப்பொறை யுடைமை அடிப்படையிலே வேறு சில அறங்களையும்,

‘தான்கெடினும் தக்கார்கே டெண்ணற்க ;
தன்னுடம்பின்
ஊன்கொடினும் உண்ணுர்கைத் துண்ணற்க
வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.
(8-10)

என்று விளக்கும் திறன் போற்றற் குரியதாகும். மாற்ருர் நமக்கு இன்ன செய்தாலும் அது நமக்கு இனிமை பயக்கவே பயன்படும் என எண்ணிப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பார், ‘இன்ன செயினும் இனிய ஒழிக’ என்று கொள்ளும் அடியால் விளக்கு கிருர். இந்த நிலை இன்றும் பலர் வாழ்வில் நிகழ் வதைக் காண்கிருேம். மாற்ருர் செய்யும் தீமைகளால் பலர் நன்மையே பெறுவதை நம்மால் உணர முடி கின்றது.

சிலருடைய கருத்துப்படி பொறையுடைமையோடு துறவற இயல் முடிய அடுத்த ‘பிறர்மனை நயவாமை’ தொடங்கி இல்லற இயலாகின்றது. சில பதிப்புக் களில் இவ்வேறுபாட்டினைக் காட்டாது இரண்டனையும் இணைத்து அறத்துப்பால் என்றே காட்டிய உண்மை யைக் காண்கிருேம். எனினும் நிலையாமை, துறவு முதலியவைகளை வற்புறுத்தும் பகுதி இல்லறத்தினும் வேறுபட்டுத்தானுக வேண்டும். ஆயினும் வள்ளுவத் தைப் போன்று இந்நூலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு போன்ற இல்வாழ் வாழ்வின் அடிப்படைகள் இடம் பெறவில்லை. காரணம் நாம் முதலில் கண்டமைதான். பாவம்! சமணத் துறவியர் இல்லற வாழ்வின் இன்பத்தையும் ஏற்றத்தையும் எப்படி அறிவார்கள்? எங்கோ ஒரு திருத்தக்க தேவர் முற்றுந் துறந்த முனிவராயினும் சமுதாய வாழ்வினை உற்றறிந்து, அவ்வாழ்வோடு ஒட்டிய உயர்ந்த காப்பியத்தைப் பாடமுடிந்தது. அப்படியே இளங்கோவடிகளின் எழில் மிகு காப்பியம் அமைந் தமை உணர்வோம். எனினும் நாலடி பாடிய சமண முனிவர் நாடு விட்டு நாடு வந்த காரணத்தாலோ அன்றி ஏனே அறத்துப்பாலில் இல்லறத்துக்குரிய ஏற்றத்தைத் தர மறந்தனர். எனினும் வள்ளுவனுர் இல்லறத்தாருக்கு இன்றியமையாதிருக்க வேண்டிய சிலவற்றை இவர்களும் தொட்டுக் காட்டுவதால் நாலடி குறளொடு ஒப்ப மதிக்கப்பெறுகிறது.

‘பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்’
(குறள் 146)

என்ற குறளின் அடிப்படையில் நாலடி,

‘அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்’
(9-2)

என்கின்றது. இப்படியே பிறர் மனைவிழைவால் உண்டாகும் கேடுகளை நாலடி நன்கு காட்டிக் கண்டிக்கும் திறன் சிறந்ததாகும். இப்பகுதியில் காமத்தின் கொடுமையை இவர்கட்கே உரிய நிலை யில் வெறுக்கிருர்.

‘பரவா வெளிப்படா பல்லோர்கண் தங்கா
உரவோர்கண் காமநோய் ஓ!ஓ! கொடிதே
(9-8)

‘அம்பும் சுழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினி மஞ்சப் படும்’
(9-9)

‘நீருள் குளிப்பினும் காமம் சுடும்’
(9-10)

என்பன போன்றவை காமத்தின் கொடுமையை இப் பகுதியில் விளக்குகின்றன. இவை பொதுவாக நோக்குவோர்க்கு, நாலடி ‘காம’ இன்பத்தையே வெறுக்கின்றது என்ற உணர்வு உண்டாதல் இயற்கை யேயாகும். இவ்வடிகள் ‘பிறர் மனை நயவாமை’ என்ற அதிகார எல்லையிலே உள்ளமையின் அத் தகைய ‘காமத்’தையே இங்கே கண்டிக்கின்றனர் என்று கொள்வது பொருந்துவதாகும்.

அடுத்து ஈகை, பழவினை, தீவினை அச்சம், மெய்ம் மை என்ற நான்கு அதிகாரங்களும் உள்ளன. இவ் வதிகாரங்கள் தாம் தாம் காட்ட விரும்பிய கருத்துக் களை நன்கு விளக்கிக் காட்டுகின்றன என்பது தேற்றம். ஈகையை வற்புறுத்தும் ஆசிரியர், தம் கொள்கைப்படி உலகம் நிலையாதது-அழியக்கூடியது என்று விளக்கி, ஆகவே உள்ளதை மற்றவர்களுக்கு உடனே கொடுத்து விடுங்கள் என்றுதான் வற்புறுத்துகின்ருர்.

‘முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கும் நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போது’
(10-2)

என்பது ஒரு சான்று. ஒரு பாட்டில்.

‘ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்’
(10-5)

என்று ஆசிரியர் கூறுவது உயர்ந்த நிலையில் எண்ணத் தக்கதாகும். ‘கொடுத்தார் எனப்படும் சொல்

மூவுலகம் கேட்குமே' என்னும் போது கொடையின் திறன் எவ்வளவு உயர்கின்றது!

அடுத்து வரும் பழவினையை ஏன் நாலடி இங்கே காட்டுகிறது என எண்ண வேண்டியுள்ளது. அனைத்தும் முன்னை வினைப்படியே நடக்கும் என்பதை வலியுறுத்துவதே இப்பகுதி. எனவே 'ஆள்வினை யுடைமை பெற்று அற மாற்றி வாழ்' என ஊக்க வேண்டிய இல்லறத்தானை 'ஊழ்' அல்லது 'பழவினை' பற்றி வாழ் என்று சொல்லுவது முயற்சியைத் தடுப்ப தாக முடியுமல்லவா! அதனாலேயே வள்ளுவர் 'ஊழி'னை அறத்துப்பாலின் கடைசியிலே தனியாக வைத்துள்ளார். சிலர் அதை 'ஊழியல்' என்றே பிரித்தார்கள். இப்பகுதியில் நல்லவர் வீழ அல்லவர் நெடுங்காலம் வாழ ஆசிரியர் காட்டும் காரணம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

'பல்லான்ற கேள்விப் பலன்உணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத் தின்மையின்
கோதென்று கொள்ளாதாம் கூற்று'

(11-6)

என்ற பாடல் வழி ஆசிரியரின் நல்விளக்கம் புலப்படு மன்றோ!

அடுத்து வரும் மெய்ம்மை என்னும் அதிகாரம் வள்ளுவத்தின் 'வாய்மை' அடிப்படையில் எழுந்த தன்று. உலகியலின் 'மெய்ம்மை' வாழ்வை விளக்கு வதாகவே இந்த அதிகாரம் அமைந்துள்ளது. செய்ந் நன்றி கொல்லாவாழ்வு, நீர்மை நீங்கா வாழ்வு, இட ருற்ற நிலை, பொருளின் இன்றியமையாமை, நல்கூர்ந் தார் நிலை, அடங்காதார் அவலநிலை, உறற்பால உறுவது, அறநெறியின் ஒருமை, இன்பதுன்பங்கலந்த நிலை, மறுமைவாழ்வுக்கு நல்வினை செய்தல் ஆகிய பலவற்றையே இந்த அதிகாரத்தில் ஆசிரியர் விளக்கு கிறார். இவைதாம் உண்மையில் உணர வேண்டி யவை என்றும் உணர்ந்து 'நல்லது ஆற்றி அல்லவை கடிதலே' உண்மை வாழ்வு என்றும் ஆசிரியர் விளக்க நினைக்கிறார் போலும்.

இனி, கடைசியாக உள்ள 'தீவினை அச்சம்' என்னும் அதிகாரத்தில் ஆசிரியர் தீயவினைகள் இவை இவை எனக் காட்டி அவற்றுக்கு அஞ்ச வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துகிறார். பிற உயிர்களைக் கொன்று தின்னுதல், சிற்றுயிர்களைச் சிறைப்படுத்தல், தீயரொடு சேர்தல், எவரொடும் ஆராயாமல் நட்புக் கொள்ளுதல், மேலொடு காட்டும் போலி நட்பாளரிடம் பழகுதல், கல்லாத மூடரொடு சேர்தல் இவற்றையே தீவினை எனக்காட்டி அவைகளை யெல்லாம் மக்கள் செய்யாது நீக்க வேண்டும் என வற்புறுத்துகின்றார். இவற்றைக் கண்டிக்கும் போது சிலவிடங்களில் மிக வன்மையாகவே இவர் வாக்குப் புலப்படுதலைக் காண முடிகின்றது. இதனால் ஆசிரியர் இச் செயல் களை எவ்வளவு கொடுமையாக எதிர்க்கிறார் என்று உணர முடிகிறது. புலால் உணவைக் கண்டிக்கும் ஆசிரியர் அவ் உணவாளர் வயிற்றினைச் 'சுடுகாடு' எனச் சுட்டுகிறார்.

'துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்விலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்கு
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு'

(13-1)

என்பது அவர் வாக்கு. இதிலும் அவர்தம் கொள்கை யாகிய துறவறத்தை வற்புறுத்துவதைக் காணலாம்.

இவ்வாறு பல தீவினைகளைச் சொல்லி அவற்றிற்கு அஞ்சியே மனிதன் வாழ்ந்து, அவற்றை விட்டு விலக வேண்டும் என வற்புறுத்துகின்றார். 'அஞ்சுவது அஞ் சல் அறிவார் தொழில்' அல்லவா! அவ்வாறு தீவினை களுக்கு அஞ்சி, நல்வினையைச் செய்வார் வழியே உலகம் சிறக்கும் என்ற உண்மையினையும் அவ் வினையே என்றும்—இம்மையில் மட்டுமன்றி மறுமையி லும் கை கொடுக்கும் என்றும் காட்டித் தம் இல்லற இயலை முடிக்கின்றார் ஆசிரியர்.

இவ்வாறு நாலடி தனது பதின்மூன்று அதிகாரங் களிலும் அறத்துப் பாலை எல்லையிட்டு முடிக்கின்றது. வள்ளுவர் 'அறத்துப்பால்' போன்று இதில் தனித்தனி விளக்கங்கள் இல்லை எனினும் பல அறங்கள் வெவ் வேறு தலைப்புக்களிலே தொகுத்துக் காட்டப் பெறு கின்றன. அவற்றுக் கெல்லாம் மேலாக, ஆசிரியர் தம் கொள்கையாகிய 'துறவி'னை அதிகாரந் தோறும் மணியிடை நூலெனக் கோத்துக் குறித்தே செல்வ தைக் காணமுடிகின்றது. உலகில் உண்மையாக வாழும் வாழ்வின் அடிப்படையைக் குறிக்கின்ற ஆசிரியர், இவ்வுலகவாழ்வின் ஏற்றத்தை மேம்படுத்த வில்லை. எனினும் வாழ்வின் அடிப்படைகளை உணர்ந்து அவரும் உற்று அறிந்து விளக்குகின்ற காரணமே இந் நாலடியும் குறளை ஒட்டிக் குறளென வாழ வழி வகுக் கின்றது. இத்தகைய அறநெறியே, வாழ்வின்—உலக வாழ்வின் அடிப்படை என உணர்ந்து, அவ் வாழ்வுக் குத் தேவையானவற்றைத் தெளிந்து மக்கள் பின்பற்று வாராயின் வையம் வாழும்-வளம் கொழிக்கும்-பிற இன்பங்கள் ஊற்றெடுக்கும் எனக்கூறி அமை கின்றேன்.

★

# ★ கவி மயக்கம்

கோமுகி வேலன்

செங்குமுதம் இதழ்விரிந்து சிரித்த தோதான்!
செழுங்குவளை கோமுகியில் விழித்த தோதான்?
தெங்கிளநீர்ச் செவ்வாழைக் கரும்புச் சோலைத்
தென்றல்வந்து காதருகே இசைத்த தோதான்!
இங்கிதென்ன புதுமயக்கம்? அடடா! என்றன்
இதயத்தில் பொன்னூசல் ஆடும் கன்னி
பொங்கிவரும் தமிழ்க்குமரி புதுமைக் கம்பன்
பொன்னேட்டில் முன்னேட்டை விரித்து வைத்தாள்.

விண்ணுயர்ந்த மாடங்கள் விரியக் கண்டேன்;
வீறுயர்ந்த சித்திரங்கள் தெரியக் கண்டேன்;
பண்ணுயர்ந்த நாட்டியங்கள் ஆடக் கண்டேன்;
பாங்குயர்ந்த ஏழிசைகள் பாடக் கண்டேன்;
கண்ணுயர்ந்த கலைமன்றில் முருகன் வள்ளிக்
களியாட்டில் மிதிலைநகர் களித்தல் கண்டேன்;
பெண்ணுயர்ந்த திருவுருவில் கவிதை யென்னும்
பேரமுதை இராமனுடன் யானும் கண்டேன்.

பெண்ணிலே கவிதை கண்ட
பெருங்களி மயக்கில் என்றன்
கண்ணிலே ஒளியைச் சேர்த்த
கவிநிலா விரியக் கண்டேன்,
மண்ணிலே விண்ணைக் கண்டேன்;
மலரிலே மதுவைக் கண்டேன்;
விண்ணிலே என்னைக் கண்டேன்;
விரிந்ததோர் உலகம் கண்டேன்.

உரோமியோ ஜூலியத்தை உச்சி மோந்தான்;
ஊடிருந்தே அனங்கவேள் இரதியைப் பார்த்தான்;
பரவுபுகழ் உமையழகைச் சிவனும் பார்த்தான்;
பருகுதல்போல் லைலாவை மஜ்னு பார்த்தான்;
விராலிமலை வேலவனும் வள்ளி யென்னும்
வியன்குறத்தி விழிவேலை விரும்பிப் பார்த்தான்;
தராதலத்துத் தமிழ்க்கம்பன் கண்ட காதல்
தத்துவத்தில் தமிழ்க் கன்னி ஆடினளே!

திங்களின வெண்பிறையில் செங்கயல் புரண்டிட
சிலம்படி கலின்கலினென
பங்கய நெருங்கியிரு கிண்கிணி புரண்டசைய
பைங்குழை அசைந்துபொலிய
நுங்கின வகிர்ந்துவரு செம்பவள வெண்தரள
நுண்ணக இசைந்துகுலவ
செங்குரவை யாடுமொரு செந்தமிழ வல்லிதரு
சிந்திசைய ஆடுமனமே!
சிந்தையுறு கம்பனிசை சந்தமுற வல்லிதரு
சிந்திசைய ஆடுமனமே!

ஷெல்லியுடன் ஷேக்ஸ்பியரும் 'லிரிகல் பாலட்'*
சீர்தொடுக்கும் மேனாட்டுக் கவிஞர் தாமும்
வல்லவனும் தமிழ்க்கம்பன் காதல் பாட்டின்
வளமெல்லாம் தம்மொழியில் தழுவிக் கொண்டார்.

---

*Lyrical ballad

நல்லதமிழ்ப் பேரறிஞர் தந்தை பெஸ்கி
நற்றுணையால் 'தமிழ்வட்டம்' அங்கே கண்டார்.
வல்லிதமிழ்க் கன்னியவள் வாழ்த்தி சைத்தே
வளர்கம்பன் கவியேட்டைத் திருப்பி னாளே.

தண்டலையில் மயிலாடும் ; செவ்வி பூத்த
தாமரைகள் விளக்கேந்தும் ; வானில் நின்று
கொண்டலினம் முழவிசைக்கும் குவளை யென்னும்
கோலவிழிப் பூம்பொய்கை குளிர்ந்து நோக்கத்
தெண்டிரைகள் திரைகாட்டச் செவிகள் மாந்த
தேன்பிலிற்றி இசைமுரலும் மகர யாழின்
வண்டினங்கள் பண்பாட மருதம் என்னும்
வளர்கன்னி கொலுவிருக்கும் வண்ணம் கண்டேன்.

பருவமகள் அழகையெல்லாம் ரிதுசம் ஹாரப்
பாட்டரங்கில் அரங்கேற்றும் காளி தாசன்
உருவமகள் மருதவிள வரசி கம்பன்
ஒய்யாரக் கவியரங்கில் உவந்தி ருக்கும்
கருவமிகு பேரழகில் மெய்ம்ம றந்து
கண்மூடி யோகிருந்தாள் ; இயற்கை யென்னும்
திருவமர்ந்த கவியேட்டை இளைய கன்னி
திருப்பிவிட்டாள் புதுக்காட்சி தெரியக் கண்டேன்.

* * *

கருணைவளர் ஆசிரமம் முனிவர் எல்லாம்
கைவிரலால் மூக்கினையேன் புதைத்தி ருந்தார்?
அருணன்வரு வழிபாட்டில் பிராணு யாமம்
ஆற்றுமொரு அழகிதுவோ ! இல்லை ; அன்பில்
தருணம்இடம் நோக்காத கங்கை வேடன்
தாசரதி முன்படைத்த காய்ந்த மீனின்
பரிணமித்த நறுமணத்தில் முனிவர் பூண்ட
பரிதாபக் காட்சியிது ! கண்முன் கண்டேன்.

தனியிருக்கும் யோகியர்க்கும் எட்டான் ; வேடன்
தலையன்பில் ஆட்பட்ட கம்ப ராமன்
"கனிவருக்கம் யாவையினும் அன்பில் தோய்ந்த
கான்வேடன் மீன்அமுதே புனிதம்," என்றே
முனிவருக்கும் அறிவூட்டும் குறிப்பில் பூத்த
முறுவலெனும் மின்வீச்சைக் கவிதை செய்தான் ;
'தனிவருக்கம் தமிழ்க்கம்பன் கவிதை' யென்றே
தலைக்கவிஞன் வான்மீகி தலைய சைத்தான்.

* * *

இளங்குமரி புன்னகைத்தாள் ; கம்பன் ஏட்டை
எழிலாகத் திருப்பிவிட்டாள் ; என்னே ! என்னே !
உளங்குமுறி உயிரூசல் ஆடும் வாலி
உரையெல்லாம் கனல்பறக்கும் உணர்ச்சி கண்டேன்.
"வளம்தவறிச் சாய்ந்திங்கு வாலி யன்று ;
வற்றாத மெய்யறத்தின் வேலி," என்றே
அளந்தளந்து வாதமிட்ட வழக்கை யெல்லாம்
அடியோடு சாய்த்தகலை அரிதே அம்மா.

'துறக்கத்தின் நீக்கம்' எனும் காவியத்தைத்
துலங்கிடவே கவிசெய்த மில்டன், வாலி
இறக்கின்ற தருணத்தில் கம்பன் செய்த
இறவாத சித்திரத்தைக் குறித்துக் கொண்டான் ;
பிறக்கின்ற பயன் இங்குக் கம்பன் பாட்டை
பிடித்தபடி நடந்தால்தான் பிறக்கும் என்றே
பறக்கின்ற 'ராக்கெட்டில்' நிலாவை நோக்கிப்
பாட்டெழுதக் கம்பனையும் எடுத்துச் சென்றான்.

* * *

ஏந்திழையாள் கவியேட்டைத் திருப்பி வைத்தாள் ;
'இராம'எனும் மந்திரத்தின் ரீங்கா ரத்தை
நீந்திவரும் வான்வழியில் ஓதிக் கொண்டே
நெடுங்கடலைக் கடந்திட்ட அனுமன் ஆங்கே
காந்திவளர் ஓவியம்தான் புகையுண் டாற்போல்
கண்ணீரில் தவமிருந்த கற்பின் அன்னம்
ஏய்ந்திருந்த அசோகவனத் திருவின் செய்ய
இணையடிகள் தலைபுனைந்து நிற்றல் கண்டேன்.

பொற்பின் தலைவி அருளன்னை
பொங்கிப் பணித்த ஆணையின்கீழ்
அற்பில் அடங்கி அழற்கடவுள்
அனுமன் வாலில் குளிர்ந்தேறும்
கற்பின் திறத்தை உலகறியக்
கவியில் வடித்த தமிழ்க்கம்பன்
சிற்பம் துளசி தாசனிடம்
சிந்தைக் கோயில் கொண்டதுவே.

வான்மிகத்தின் வழிநூலாய்க் கவிதை செய்தான்
வடஇந்துஸ் தானியிலே துளசி தாசன்;
ஆன்மிகத்தின் செந்தமிழைக் கங்கை மேட்டில்
அன்றொருநாள் குமரகுரு பரனார் பெய்து
தேன்மழையில் உளம்நனைந்த துளசி தாசன்
தென்தமிழ்போல் தன்கவியைத் திருத்திக் கொண்டான்;
வான்புகுந்த தமிழ்த்தாத்தா உ. வே. சா. வின்
வளர்பதிப்பின் குறிப்பிங்குத் தெரியக் கண்டேன்.

* * *

ஈரம் நிறைந்த மழைக்கண்ணன்
என்பால் அருட்கண் விழிவீசி
வீரம் நிறைந்த அமர்க்களத்தின்
வெற்றி ஏட்டை விரித்திட்டாள் ;
சாரம் நிறைந்த கவிஹோமர்
சத்து நிறைந்த 'ஓடிஸி'யின்
பாரம் நிறைந்த காவியத்தின்
பக்கம் திருத்திக் கொக்கரித்தான்.

முரசதிர்ந்தன முழவதிர்ந்தன ;
முட்டிநின்றன பல்லியம் ;
உரசிநின்ற பெரும்படைக்கலம் ;
உற்றெழுந்தன தீப்பொறி ;

புரசையானை வெறித்தெழுந்தன ;
புரவிதேர்கள் புரண்டன ;
விரசிவிறிடு வீரர்ஆர்ப்படை
வெற்றிகாளி இசைக்குமே !

வடக்கின் எல்லைக் காளியொடு
வன்மை செறிந்த போர்ப்பாட்டில்
கடக்கும் செற்றம் கனிந்திட்டாள் ;
கடுகி ஓடி இமயத்தே
கிடக்கும் வீரர் பாசறையில்
கீதம் முழக்கி ஆடிட்டாள் ;
முடக்கிக் கிடந்த பாரதத்தார்
மூண்டார் வீரம் நீண்டாரே !

* * *

நெருப்பை அணைக்கத் தமிழ்க்கன்னி
நீரை வானில் பொழிந்திட்டாள் ;
திருப்பும் ஏட்டில் அயோத்திஎனும்
தெய்வ நகரில் செயராமன்
சிரிப்பு மலரச் சானகியார்
செய்த தவத்தால் வைரமெலாம்
விருப்பம் குலவ தமிழ்க்கம்பன்
வென்றி மகுடம் புனைந்தானே.

செம்பொன் பூத்த கற்பகமாய்ச்
செழித்த கவிதைப் பூங்காவில்
கம்பன் யாத்த பொன்னூசல்
கன்னித் தமிழ்ப்பெண் ஆடுகிறாள் ;
கொம்புத் தேன்சூழ் தமிழ்வனத்தில்
கூடி வையப் புலவரெல்லாம்
தும்பி யாகி மதுவருந்தித்
தோய்ந்தார் எழிலை ஆய்ந்தாரே.

* * *

ஏய்ந்த பெருங்களியில் என்னை மறந்திட்டேன்
வாய்ந்த கவியுலகில் வள்ளல் தமிழ்க்கம்பன்
செந்தமிழ்ச் சித்தன் செகத்தின் இரசவாதி
சந்தக் கவியமுதைத் தாயெனக்கு வார்த்திட்டாள்.
அம்மா அகிலமெலாம் அறம்வளர்க்கும் நாயகியே !
எம்மறிவைத் தூண்டுதற்கும் ஏதேனும் தாராயோ ?
என்றேன் நகைபூத்தாள் எடுத்தாள் கொடுத்திட்டாள்
நன்றே தமிழ்பயின்று நான்பெற்ற பேறிதுவோ !
நாட்டின் மணிமுடியை இராமனுக்குப் பூட்டியவள்
காட்டின் மரவுரியைக் கருணையுடன் நீட்டினாள் ;
கம்பன் இடையெழுந்தான் ; கனிந்து மரவுரியை
செம்பொன்னில் தோய்த்தென் செழுங்கரத்தே நீட்டினான்.
'காஷாயம்' போலுமென்று கண்பனித்தேன் ; சுக்குமல்லிக்
'கஷாயம்இங்கே ஆறு'தென்று கடிந்திட்டாள் என்மனையாள்
தடுத்தாண்ட பத்தினியால் தவசிநிலை தாராமல்
தொடுத்த தமிழ்க்கனவும் சுகமாய் முடிந்ததுவே.
ஒருமாத் திரைஅளவில் உள்ளப் புலன்களெல்லாம்
நிருமித்த மாய நெடுங்கனவு வாழியரோ !
வாழி கவிமயக்கம் ! வளரும் நெடுங்கனவில்
வாழியரோ வையம் ! வழங்குதமிழ் வாழியரோ !



# விமரிசனக் கலை

**க. நா. சுப்ரமண்யம்**

தமிழர்கள் மிகவும் பாக்கியசாலிகள்; அதே சமயம் தங்கள் பாக்கியத்தைப் பெருமளவுக்கு அறியாதவர்களாகவும் இருக்கிருர்கள். இது இன்று நேற்று ஏற்பட்ட நிலைமை என்றும் கொள்வதற்கில்லை. பல தலைமுறைகளாகவே இந்த பாக்கியமும் துர்ப்பாக்கியமும் அவர்களை விடேன், தொடேன் என்று தொடர்ந்து வந்துள்ளது.

உலகில் உள்ள மொழிகள் பல்லாயிரம்; அவற்றில் ஒரு சிலவற்றில்தான் ஓராயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளாக நல்ல கவிதை என்று சொல்லக்கூடிய அபூர்வமான வஸ்து படைக்கப்பட்டு வந்திருக்கிறது. எல்லா மொழிகளிலும் கவிதை என்று ஒன்று ஆரம்ப காலம் முதல் உண்டுதான்; ஆனுல் நல்ல கவிதை என்பது மிகவும் அபூர்வமான சரக்கு. இந்த அபூர்வமான சரக்கு தமிழ் மொழியில் சற்று மலிந்தே இருந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். இது இன்று நேற்று ஏற்பட்ட காரியம் அல்ல. ஓரளவுக்கு ஆரம்ப முதலே நல்ல கவிதை என்ருல் என்ன என்று தெரிந்து செய்த கவிகள் தமிழில் இருந்து வந்திருக்கிருர்கள் என்றுதான் தோன்றுகிறது. சங்க காலத்திலும் சரி, பின்னர் பக்தி, காவியம், சிறு காவியங்கள், மக்கள் கவிதை என்று ஒன்றன்பின் ஒன்ருகப் பல காலங்கள் சொல்லப்படுவதிலும் சரி, பாரதியார், பாரதியாருக்குப் பின் என்றும் சொல்லக்கூடிய அளவில் கவிதை தொடர்ந்து அறுபட்டுப் போகாமல் இருந்து வந்திருக்கிறது.

சமுதாய ரீதியான அளவில் இதற்குப் பல காரணங்கள் சொல்லலாம். கண்டு சொல்ல ஒருவரும் முன்வந்ததில்லை என்பதனுல் காரணங்கள் இல்லாது போய்விடாது அல்லவா? இப்படிப்பட்ட காரணங்களில் ஒன்று என்று சிறு பான்மையினரின் பண்பாடாகத் (minority culture) தமிழ் இருந்து வந்திருப்பதைச் சொல்லலாம். இந்தியாவின் முக்கியமான மொழி என்று சம்ஸ்கிருதம்...பெரும்பான்மைப் பண்பாட்டின் எதிரொலியாக அமைந்ததால் அதில் குறிப்பிட்ட சில பகுதிகளில் தவிர, காலங்களில் தவிர, நல்ல கவிதை உண்டாகவில்லை என்றும், அது காரணமாகவேகூடத் தமிழில் நல்ல கவிதைக்கு ஒரு இடம் இருந்து வந்துவிட்டது என்றும் கருதலாம். இதை உத்தேச பூர்வமான, ஓரளவுக்கு அனுமானித்துக் கொள்ளக்கூடிய ஒரு விமரிசனமாகவே (speculative criticism) நான் சொல்லுகிறேன். இது தமிழைப் பெருமைப்படுத்தியும், மற்ற மொழிகளைச் சிறுமைப்படுத்தியும் சொல்லுகிற காரியம் அல்ல. உலகில் இன்று வரை உள்ள கவிதையின் சரித்திரத்தை ஒப்பிட்டு நோக்கும்போது சிறுபான்மைப் பண்பாடு தந்த கவிதைகள்தான் சிறப்பாக இருப்பது ஓரளவு புலனுகும். இந்த நோக்கிலே தமிழ்க் கவிதையைக் கண்டு சொல்ல முயற்சிகள் நடைபெறவில்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும். இதனுலோ, அல்லது வேறு காரணத்தாலோ, வேறு பல காரணங்களினுலோ தமிழ்க் கவிதையில் ஒரு உயர்தரம் ஆரம்ப முதல் உயிர்பெற்று, உருப் பெற்று வந்திருக்கிறது என்பதை

விமரிசகன் இன்று காண முடிகிறது. இது மிகவும் பெரும்பாக்கியம்.

ஆனல் துர்ப்பாக்கியம் என்னவென்ருல், ஓரள வுக்கு எப்போதுமே சிறுபான்மைப் பண்பாட்டுக்கு எதிர்ப்பு இருக்கும் — தடையிருக்கும் — அத்தோடு எதை எந்த அளவில் கலந்தால் அது பெரும்பான்மைப் பண்பாட்டின் தரத்துக்குத் தாழ்ந்துவரும் என்கிற முயற்சியும் இருந்து வரும். பெரும்பான்மைப் பண் பாட்டின் முயற்சிக்குத்தான் சமுதாய ரீதியில் வெற்றி கிட்டும் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. அதிக பக்ஷ ஆதரவு பெரும்பான்மைப் பண்பாட்டுத் தரத்துக்குத் தான் கிட்டும். அந்த அளவில் சங்க காலம் தொடங்கி பாரதிக்குப் பிற்காலம் என்கிற இந்தக் காலம் வரையில் கவிதையில் தரம் அல்லாததும் கூடவேதான் வந்துகொண்டிருக்கும். இது இன்றும் சரி, நேற்றும் சரி உள்ள ஒரு காரியம். ஆனல் விமரிசன நோக்கு என்று ஒன்று ஏற்படுத்திக் கொள்ளாத கார ணத்தினுல்—இது ஏன் ஏற்படவில்லை என்பதற்கும் சரித்திர ரீதியில் பல காரணங்கள் சொல்லலாம்; அது இங்கே இப்போது வேண்டாம்—தமிழனின் துர்ப்பாக் கியம், தரமல்லாததுதான் அதிகமாகப் பாராட்டப் பெற்று நிலைத்து வந்துள்ளது. உதாரணமாக பக்திக் கவிதையை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தோ மானுல் பெரும்பகுதியும் தரமில்லாததாகவும், சிறு பகுதி தரமுள்ளதாகவும் காண முடிகிறது. ஆனல் இந்தப் பெரும் பகுதிதான் பாராட்டப்பெற்று வந்திருக் கிறது என்பதும் தெரிய வருகிறது. அதேபோல நாலைந்து நூற்ருண்டுகளாகத் தமிழரிடையே வழங்கி வந்த நாட்டுப் பாடல்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப் படாமலேயே போய், தரமற்ற பண்டிதர் பாடல்கள் எல்லாம் பாராட்டப் பெற்று வந்து விட்டன. இதனுல் எல்லா நாட்டுப்பாடல்களுமே தரமானவை என்று விமரிசகன் சொல்லிவிட முடியாது; நாட்டுப்பாடல் களில் பெரும்பகுதி நல்ல கவிதையாகவும், பிற கவிதை கள் ஸ்தலபுராணங்களாகவும் இருந்த காலம் என்று இந்த நாலைந்து நூற்ருண்டுகளை விமரிசகன் இனங் கண்டு கொள்ள முடிகிறது. சுலபமாகவே இனங் கண்டு கொள்ள முடிகிறது என்பதற்கு ஒரு விமரிசன நோக்கு நம்மிடையே—தெரிந்தோ, தெரியாமலோ, போதுமானதாகவோ, போதுமான அளவில்லா மலேயோ வளர்ந்து வந்திருக்கிறது.

இன்று நம்மிடையே உள்ள மனிதர்களைப் பார்த் தால் நமக்கு நன்ருகவே தெரிகிறது; மக்களில் பெரும் பாலானவர்கள் வாழ்க்கையை அனுபவிக்காமலே வாழ்ந்துவிட்டும் போய் விடுபவர்கள்தான். அதே போலக் கவிதை, கவிதை என்று கூப்பாடு போடுகிற வர்களில் பெரும்பகுதியினரும் கவிதையை, தரம் தெரிந்து அனுபவியாமலே இருந்துவிட்டுப் போய்விடு பவர்கள் தான் என்பது தெரிகிறது. இதற்கு ஒரு முக்கியமான காரணம் நல்லது, தரமானது என்று கவிதையை நேரடியாக அனுபவித்துப் பார்த்து அறிய மாட்டாத பாமரத்தனம் ஒன்று; இரண்டாவது, நல்ல பக்தியெல்லாம், நல்ல புத்திமதிகள் எல்லாம், சரித்திரச் சான்று தோன்றும் செய்யுள்கள் எல்லாம், நல்ல கவிதை என்கிற இலக்கியத் தரமல்லாத அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது; மூன்ருவது, காலத்தைக் கடந்து நின்றுவிட்டதனுலேயே சில கவிதைகள் நித்திய மானவை என்று பழமை பாராட்டும் மனப்பான்மை ஏற்பட்டு விட்டது; நான்காவது, எல்லோரும் சொல் கிருர்களே, நாமும் சொல்லுவோம்—நமக்கெதற்கு வீண் வம்பு என்கிற ஒரு விமரிசன எதிர்ப்புக் கண் ணேட்டம்—என்று பல காரணங்கள், இன்னும் பலவும் சொல்லலாம், விமரிசன நோக்குக்குப் பதில், உரை காரர் நோக்கு, பக்தி நோக்கு, சரித்திர நோக்கு முத லியவை ஏற்பட்டு நல்ல கவிதையை இனங் கண்டு கொள்ளக்கூடாது, இனங் கண்டு கொண்டால் பாபம் என்கிற அளவுக்கும்கூட வளர்ந்து விட்டது. இலக்கிய நோக்குக்கு உள்ளதுபோல, பக்தி நோக்கு, உரை காரர் நோக்கு, இத்யாதிக்கும் வாழ்க்கையில் இடம் உண்டு, இலக்கியத்தில் இல்லை என்பதுதான் விமரிச கனின் கூற்று—விமரிசனக் கலையின் அடிப்படைத் தத்துவம்.

இந்த இலக்கியமல்லாத பல நோக்குகளிலெல் லாம் இருந்து இலக்கியத்தை விடுதலை செய்ய ஆங் காங்கே அவ்வப்போது முயற்சிகள் செய்யப்பட்டு வந்து கொண்டேதான் இருந்திருக்க வேண்டும்—சங்க காலம் முதற்கொண்டு. ஆனல் இந்த இலக்கிய நோக்கு பெரும்பான்மைப் பண்பாட்டில் எடுபடாமல் அடிபட்டுப் போயிருக்கிறது என்றும், மற்ற நோக்கு கள் பலித்துப் பலன் தந்த அளவு இலக்கிய நோக்கு பலன் தராமல் போய்விட்டது என்றும் கொள்ள இடம் உண்டு. மற்றக்காலங்கள் எப்படிப் போனுலும் சமீப காலத்தில் தமிழில் ஏற்பட்ட ஒரு இலக்கிய. நோக்கை, ஒருவருடைய விமரிசன நோக்கை, இன் றைய இலக்கிய விமரிசனக் கலைஞன் மறக்க இயலாது. அது தமிழ் நாட்டின் இன்றைய முதல் அல்லது இரண் டாவது இலக்கிய விமரிசகராகச் செயல்பட்டு, தைரிய மாகச் சில விஷயங்களைத் தெளிவாகச் சொன்ன டி. கே. சி. யின் நோக்கு.

[முதல் அல்லது இரண்டாவது இலக்கிய விமரிசகர் என்று நிச்சயமல்லாத வகையில் நான் சொன்னதற்கும் ஒரு காரணம் உண்டு. டி. கே. சி. செய்த காரியங்கள் சிலவற்றை ஓரளவுக்கேனும் சுயப் பிரக்ஞையுடன் செய்ய முயன்றவர் என்று வ.வே.ஸு. ஐயர் அவர்களையும் சொல்ல வேண்டும். டி. கே. சி. பெற்ற வெற்றியை வ. வே. ஸு. ஐயர், காலத்தால் முந்தியவரானுலும் பெறவில்லை என்பது வெளிப்படை. அதற்கு இரண்டு காரணங்கள் விமரிசன பூரணமாகச் சொல்லலாம். ஒன்று, முன்னவர் கவிதையில் மட்டும் ஈடுபாடு கொண்டவர் அல்ல; இரண்டாவது, அவர்

முழுக்க முழுக்கத் தன் கவிதைத் தரம் காணும் திறமைக்கு தன் மேல்நாட்டுப் படிப்பையும், பயிற்சியையுமே நம்பி இருந்து விட்டார். விமரிசனக் கலைக்கும் ஒரு தேசவர்த்தமானப் பின்னணி — இலக்கியத்தில் எந்தத் துறைக்கும் தேவைப்படுவது போலத் தேவைப்படுகிறது. இந்தப் பின்னணி டி.கே.சி.க்கு அமைந்தது போல வ.வே.ஸு. அய்யருக்கு அமைந்ததாகத் தெரியவில்லை. இதையெல்லாம் இலக்கிய விமரிசகன் என்கிற ரீதியிலேயானாலும், அனுமானமாக, (speculative) விமரிசனமாகவேதான் நான் சொல்லுகிறேன். பத்திரிகை என்கிற கருத்துக்களை ஏற்றிச் செல்லும் வாகனமும் வ. வே. ஸு. அய்யருக்குச் சரிவர அமையவில்லை. உதாரணமாக ஆனந்தரங்கம் பிள்ளை, காலத்தினால் மற்ற தமிழ் வசன நடையாளர்களைவிட முன்னவர்தான் எனினும் அவர் வசனம் பின் வந்தவர்களை, இன்று வரையிலும்கூடப் பாதிக்கவில்லை என்பது போல, வ.வே.ஸு. அய்யரின் விமரிசனக் கூற்றுக்கள் இன்றும்கூட நமக்குத் திரட்டப்பட்டுக் கிடைக்கவில்லை.]

டி. கே. சி. யின் விமரிசனப் பார்வையில் கோளாறுகள் பல இருந்தன என்று பலரும் விவாதிப்பதை நான் கேட்டிருக்கிறேன்—நானே அவற்றைப் பூரணமாக ஏற்றுக் கொள்பவனில்லை—ஆனால் அவருடைய பார்வை முழுதும் இலக்கியமானதாக இருந்தது என்பதில் யாருக்கும் ஒரு துளியும் சந்தேகம் ஏற்பட நியாயமில்லை. நேரில் கேட்டவர்களுக்கு மட்டுமல்ல—அவர் நூல்கள் மூலம் காணக்கூடியதிலிருந்து தெரிந்து கொள்ளக்கிடக்கிற விஷயம் இது. விமரிசன நோக்குகள் எல்லாவற்றிலுமே கோளாறுகள் இருக்கத்தான் இருக்கும். மெத்த வளர்ந்துள்ள மேலை நாட்டு விமரிசகர்களைப் பார்த்துக் கொண்டு வருபவர்களுக்கு இது நிதரிசனமாகத் தெரிகிற ஒரு உண்மை. ஷேக்ஸ்பியரைப்பற்றிப் பூரணமான ஒரு விமரிசன நூல் ஒருவன் எழுதிவிட்டானால் அதற்குப் பின் வேறு விமரிசனங்கள் எதற்கு? முந்நூறு ஆண்டுகளில் மூவாயிரம் விமரிசன நூல்கள்-அதற்கும் அதிகமாகவும்...தோன்றுவதற்குக் காரணம் ஒருவரும்—எவ்விமரிசகனும்—ஷேக்ஸ்பியரைப்பற்றிய பூரணமான விமரிசனத்தைச் சொல்லிவிட முடியாது என்பதனால்தான். இலக்கியப் பார்வையை எடுத்துச் சொல்கிற ஒரு விமரிசகன் ஒரு நோக்கைத்தான் எடுத்துக் கூறுகிறான்—அவசியமானபோது சிலவற்றை மிகைப் படுத்தியும் கூறுகிறான்—சிலவற்றைக் குறைத்தும் கூறுகிறான். விமரிசனக் கலை பெரும் அளவுக்கு அறிவியலைப் பயன்படுத்துவது. பூரணமாக அனுபவத்தைப் பயன்படுத்துபவன் கவி, கலைஞன், நூலாசிரியனும்தான்.

தமிழ்க் கவிதையைப் பற்றிய பூரா விஷயத்தையுமோ, கம்பனைப் பற்றிச் சொல்ல வேண்டியது எல்லாவற்றையுமோ டி. கே. சி. கூறிவிட்டார் என்று கருதிவிடுவது பேதமையாகும். ஆனால் தமிழ்க் கவிதையின் பால் இலக்கிய நோக்கை விமரிசன பூர்வமாகத் திருப்பிவிட்டார் டி. கே. சி. என்று சொல்வது அவர் சேவையை மிகைப்படுத்துவது ஆகாது. ஆகா, ஊகு என்று சுவைத்து நாக்கைச் சப்பிட்டுக் கொண்டிருந்த தமிழர்களில் சிலரை இதைவிட இது நன்றாக இருக்கிறது பார், இப்படித் தரம் தெரிந்து கொள்ளக் கற்றுக்கொள் என்று சொல்லிச் செய்து காட்டிய டி. கே. சி. தமிழில் இன்றைய இலக்கிய விமரிசனத்துக்கு வழி காட்டித் தந்தார் என்று சொல்வது மிகையாகாது.

விமரிசனக் கலையின் ஒரு பெரு அம்சத்தை டி. கே. சி. அவர்களிடமிருந்து தமிழ் விமரிசகர்கள் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். வாழ்க்கையில் எந்த அம்சத்தை எவன் எப்படி அனுபவிக்கிறான் என்பது அவனவன் விஷயமாகும். அதே போல இலக்கியம் சிருஷ்டியிலும் சரி அனுபவிக்கப்படுவதிலும் சரி, தனி மனித விஷயமாகவே இன்றும் இருக்கிறது. பொது மேடையில், நாடகத்தில். கதாகாலக்ஷேபத்தில் சமுதாயமாக, அரசாங்கமாக, ராஜரீகமாக அனுபவிப்பது ஒன்று. இந்த காலக் கட்டத்தில் இதுவென்று வேறு எதையும் இல்லாதபடி செய்துவிட்டதுபோலத் தோன்றினாலும்கூட, அது வெறும் தோற்றமே தவிர, வெறும் பிரமையே தவிர வேறு அல்ல. கவிதையை, தனித்தனியாகத்தான், அனுபவிக்கிற காரியம் நடக்க முடியும். (கவிதை என்று நான் சொல்லுகிறபோது இன்றைய வசனக் கலைத்துறைகள் பலவற்றையும் சேர்த்தேதான் சொல்லுகிறேன்). இது இலக்கிய நோக்கில் விமரிசனக் கலையின் அடிப்படையான ஒரு உண்மை. தன் உள்ளத்தில் ஏற்பட்ட வெளிச்சத்தைத் தயவு தாட்சண்யமில்லாமல் எடுத்துப் பிறருக்கும் பங்கிட்டுச் சொல்கிற காரியம் டி. கே. சி. யிடமிருந்து விமரிசனக் கலைஞன் இன்று அறிந்து கொள்ள வேண்டிய ஒரு பாடமாகும்.

•

இரண்டாவதகாகவும் ஒரு பாடம் உண்டு. இலக்கியத்தில்—கவிதையில் உண்மையில் மிகமிகமிகமிக (இன்னும் எத்தனை மிக வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங்கள்) உயர்ந்த தரத்திற்குத் தவிர வேறு எதற்கும் இடம் தந்துவிடக்கூடாது. வேறு எதில் வேண்டுமானாலும் சமரஸம் (compromise) பேசலாம்; இலக்கியத்தின் தரத்தில் சமரஸம் பேசி முடிவு கட்டக் கூடாது.

தமிழர்கள் பாக்கியசாலிகள். டி. கே. சி. யுடன் தமிழில் விமரிசனக் கலை பிறந்துவிட்டது. ஆனால் அதை அறிந்து கொள்ளாத தமிழர்கள் மிகமிக துர்ப்பாக்கியசாலிகள்தான்.

★

# ஆண்டார் கோவில் சிற்பச் செல்வங்கள்

சி. டி. எஸ். பாண்டியன்



மேற்குப்புறத்திலிருந்து திருவாண்டார் கோவில் கருவறை கோபுரத் தோற்றம்

திருவாண்டார் கோவில் முந்தைய சோழர் காலத் திருப்பணியாகும். இந்தக் கோவிலில் கண்கவர் சிற்பங்கள் பல உள்ளன. முற்காலத்தில் இந்த ஊரின் பெயர் திருவடுகூர் என்று வழங்கி வந்தது.

## தேவாரத் திருமுறை

கோவிலைப் பற்றித் திருஞானசம்பந்தர் பாடியிருக்கிருர். தேவாரம் முதல் திருமுறைப் பாட்டு வடுகூரடிகளைப் பின்வருமாறு போற்றுகிறது :

'சுடு கூரெறி மாலையணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழு வாளொன்றுடையார்
விடையூர்வர்
கடுகூர் பசி காமங்கவலை பிணியிலார்
வடுகூர் புனல் சூழ்ந்த வடுகூரடிகளே.'

புதுச்சேரிப் பகுதியிலுள்ள திருவாண்டார் கோவில், புதுச்சேரியிலிருந்து 12 மைல் தூரத்தில் விழுப்புரம் பிரதான சாலையில் கிழக்குத்திசை நோக்கி அமைந்துள்ளது. சாலையை ஒட்டியே கோவில் உள்ளது. ரயிலில் வருவதானல் சின்னபாபுசமுத்திரம் ஸ்டேஷனில் இறங்கி இரண்டு மைல்கள் வண்டியில் வரவேண்டும்.

கோவிலைச் சுற்றிச் சிதைந்து போன கற்கள் நிறையக் கிடக்கின்றன. கோவிலுக்கு முன் கோபுரமில்லை. கோவிலின் முன்மண்டபம் சமீபகாலத்தில் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பெரிய துவார பாலகர் சிலைகள் சோழர்காலப் பாணியில் அமைந்துள்ளன. கருவறையில் லிங்கம் இருக்கிறது.

## பொன் வேய்ந்தவன்

கோவில், முதல் பராந்தக சோழன் (கி. பி. 907-953) காலத்தில் அமைக்கப்பட்டதாகும். பொன்வேய்ந்த பராந்தகன் என்று பெயர் பெற்ற



அர்த்தநாரீஸ்வரர்

உமையுடன் சிவபெருமான்



பிட்சாடனர்

இந்தச் சோழமன்னன் திருவாவடுதுறை, உடையார் கோவில், சீனிவாச நல்லூர், எறும்பூர் கோவில்களைக் கட்டிப் பெயர் பெற்றவன்.

பிரதான கோவிலுக்குக் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் எல்லாம் உள்ளன. ஒரே வரிசையாக இந்த மண்டபச் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

புராணச் சிற்பங்கள்

கல்லாலான அடித்தளத்தில் மாடங்களுக்குக் கீழாகச் சிறிய வடிவில் புராணச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மார்க்கண்டேயனைக் காக்க வந்த சிவபெருமானை ஒரு சிற்பத்தில் காணலாம்.

விநாயகர், தட்சிணு மூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை போன்ற வழக்கமான சிற்பங்

எமனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயரைக் காக்க வந்த ஆண்டவன்

களுடன் பிட்சாடனர், அர்த்தநாரீஸ்வரர், ரிஷப வாகன மூர்த்தி சிற்பங்களும் உள்ளன.

**நகாசு வேலை**

பிட்சாடனர் நாகத்தை அரைஞாணாக அணிந்திருக்கிறார். தலையின் சுருள் முடிகள் முதல் கைநகம் வரை சிற்பி நகாசு வேலை செய்திருக்கிறார். உட்கார்ந்திருக்கும் விநாயகர் பெரிய தொந்தியுடையவராக இருக்கிறார். காதுகளில் உள்ள நரம்புகளைக் காட்டவும் சிற்பி மறக்கவில்லை.

தட்சிணாமூர்த்தி அமர்ந்திருக்கும் நிலை நல்ல வேலைப்பாடுடையது. முனிவர்களும் நல்லபடியாக உருவாக்கப்பட்டுள்ளனர். பிரம்மா மூன்று தலைகளுடன் நின்று கொண்டிருக்கிறார்.

மகிஷனின் துண்டிக்கப்பட்ட தலையின் மீது நிற்கும் துர்க்காதேவி பல கைகளுடனும், பலவகை ஆபரணங்களுடனும் காணப்படுகிறார். அர்த்தநாரீஸ்வரர் காளை மீது சாய்ந்து கொண்டு ஒரு கையில் தாமரை மலரை முகர்ந்து பார்க்கும் பாவனையில் காணப்படுகிறார்.

**உமையுடன் ஈசர்**

ரிஷபவாகன மூர்த்தி மானும் மழுவும் தாங்கி உமா தேவியின் இடுப்பில் கை வைத்து அணைத்துக் கொண்டு நிற்கிறார். பின்புறச் சுவரில் உள்ள லிங்கோத்பவர் சிற்பம் அபூர்வமானது. அன்னமும், வராகமும் சிவபெருமானின் அடி, முடியைத் தேடுவது தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கோவில் சுவரின் மேற்புறத்தில், கூரைக்குக் கீழாகத் தொடர்ந்து பூதகணவரிசை காணப்படுகிறது. பலவகை அபூர்வ உருவங்களுடன் பூதகணங்கள் சங்கீதவாத்தியங்களை முழக்கியும், அபிநயம் பிடித்துக் கொண்டும் காணப்படுகின்றன.

**கலசம் இல்லை**

கருவறைக் கோபுரம் செங்கல்லாலும் சுதையாலும் ஆனது. மூன்று தட்டுக்களை உடைய இந்த கோபுரத்துக்குக் கலசம் இல்லை.

பாடல் பெற்றதும், புராதனச் சிறப்பு மிக்கதும், சிற்பங்கள் நிறைந்ததுமான திருவடுகூர் ஆண்டவன் பெயர் வடுகூர்நாதர். அம்மன் பெயர் வடுவகிர்க் கண்ணி அம்மை.

கோவிலைப் பிரெஞ்சுக்காரர்கள் பாதுகாக்கப்பட்ட ஞாபகச் சின்னமாக அறிவித்துப் பாதுகாத்து வந்தார்கள், இப்போது இந்த வேலையை இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் செய்து வருகின்றனர்.

சமீபகாலத்தில் கோவிலில் திருஞான சம்பந்தருக்காகச் சிறிய சன்னதி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. ★

# முதுபெரும் புலவர்

தீப. நடராஜன்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் இலக்கிய உலகில் 'முதலியார்' என்று சொன்னல் அது முதுபெரும்புலவர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களையே குறிப்பதாகும். எப்படி 'பிள்ளை' என்ருல் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களையும், 'ஐயர்' என்ருல் மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்களையும் குறித்துச் சொல்லப்பட்டனவோ அப்படி வெ. ப. சு. அவர்களையும் 'முதலியார்' என்று அழைத்து வந்தனர்.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 19-ம் நூற்ருண்டின் பிற்பாதியிலும், 20-ம் நூற்ருண்டின் முற்பாதியிலும் இலக்கியத் தொண்டாற்றிய தமிழ்ப் புலவர்கள் பலரை நேரில் அறிந்தவர்கள். பழைய கவி ராயர் பரம்பரையைச் சேர்ந்தவர்களோடு இளம் வயதில் தொடர்பு கொண்டிருந்த காரணத்தாலும், பின்பு 'ஸ்காலர்கள்' என்று அழைக்கப்பட்ட ஆங்கிலம் படித்த தமிழறிஞர்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்ததாலும், இரண்டு விதமான இலக்கிய நோக்குகளும் அவர்களிடம் சங்கமித்தன என்று சொல்லலாம்.

பெரும் புலவர்களோடு நெடுகிலும் பழகியதன் காரணமாகவும், தமிழ் இலக்கியச் செல்வங்களில் மூழ்கி எழுந்ததனுலும் அவர்களிடம் அடக்கமும், இனிமையும் கலந்த ஒரு பண்பாடு மிகுந்திருந்தது.

எந்தச் செயலானுலும் ஒரு திட்டத்தின்படியே நடக்க வேண்டும் என்னும் குறிக்கோள் உள்ளவர்கள். உணவு உட்கொள்வதில் சில விதிகளைக் கடைப் பிடித்து வந்தார்கள். அதே போல் குறித்த நேரத்தில் படுக்கைக்குச் சென்று உறங்கி விடுவார்கள்.

முதலியார் அவர்கள் தாம் வாழ்ந்த தொண்ணூறு வயது வரையிலும் மிகவும் ஆரோக்கியமாயும், சுறு சுறுப்புடனும், உற்சாகமாயும் இருந்ததற்கு அப்படி உணவுக் கட்டுப்பாடும், குறித்த காலத்தில் நித்திரைக் குச் சென்றதும், ஒழுக்க நெறி நின்றதும், விடாத தேகாப்பியாசமுந்தான் காரணம் என்ருல் மிகை யல்ல.

**கவிமணியின் வாழ்த்து**

1—8—1937 அன்று திருநெல்வேலி இந்துக் கல்லூரி கட்டடத்தில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் தலைமையில் வெ. ப. சு அவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா வெகு சிறப்பாய் நடைபெற்றது.

முதலியார் அவர்களை வாழ்த்தித் தமிழ் நாட்டின் முக்கியமான பிரமுகர்களும், புலவர்களும், கவிஞர் களும் செய்திகள் அனுப்பியிருந்தனர். அவைகளில் எல்லாம் இன்றும் பாடி அனுபவிக்கப்படுவது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய வாழ்த்துக் கவியாகும்.

''எண்பதாண் டான
இளைஞனே! இன்னமுதப்
பண்பெலாம் காட்டுதமிழ்ப்
பாவலனே! — நண்பனே!
வெள்ளகால் செல்வனே!
வேள்சுப் பிரமணிய
வள்ளலே வாழ்க
மகிழ்ந்து.''

எண்பது பிராயம் கடந்தவரைப் பார்த்து 'இளைஞனே' என்று கவிமணியவர்கள் கூறியது கவிஞனுக்கு உரிய சுதந்திரம் காரணமாகச் சொன்ன விந்நியாசமான வார்த்தை அல்ல. உண்மை பொருந்திய வார்த்தையே அது என்பது வெள்ளகால் முதலியார் அவர்களை நேரில் பார்த்துப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும்.

நெல்லை மாவட்டத்தில் இயற்கை வளம் மிக்க அழகான சிறு கிராமம் வெள்ளகால். ஊரைச் சுற்றிலும் எங்கு நோக்கினும் தென்னந் தோப்புக்களும் அவைகளினிடையே நன்செய் நிலங்களும். ஊரை அடுத்து ஒரு சிறு வாய்க்கால் ஓடிக் கொண்டிருக்கும். ரயில், பஸ் போக்கு வரத்தெல்லாம் நான்கு மைல்களுக்கு அப்பால்த் தான். (இப்போது பஸ் ஊரினுள் நுழைந்து விட்டது!). அமைதி நிலவும் சூழ் நிலை.

கால் நடை இலாகாவில் நற்பணி ஆற்றி விட்டு ஓய்வு பெற்றதும் தமது சொந்த ஊரான வெள்ள காலில் வந்து தங்கி தம் மனதுக்குகந்த தமிழாராய்ச்சியில் ஈடு பட்டார்கள்.

முதலியார் அவர்கள் சிறு பையனுக இருந்த போதே விளையாட்டையும் மறந்து புராணக் கதைகளைக் கேட்பதில் ஈடுபாடு அதிகம் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக இலக்கியங்களைப் படிப்பதில் அவர்களுக்கு ஒன்பது வயதிலேயே ஆர்வம் ஏற்பட்டு விட்டது.

தாமாகவே அல்லியரசாணி மாலை, பவளக் கொடி மாலை போன்ற சிறு நூல்களைக் கற்ருர்கள். அச்சமயத்தில் சிறந்த புலவரான அழகிய சொக்க நாத பிள்ளை என்பவரது நட்பு முதலியாரவர்களுக்கு ஏற்பட்டது.

## சவுக்கைப் புலவர்கள்

திருநெல்வேலி தெற்குப் புதுத் தெருவில் கவிராஜ நெல்லையப்ப பிள்ளை அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் அமைந்திருந்த சவுக்கை தமிழ் வளர்க்கும் பண்ணையாக இருந்து வந்தது. அங்கு கூடி தமிழை ஆராய்ந்த புலவர்களுள் முகவூர் கந்தசாமிக் கவிராயர், அருணுசலக் கவிராயர், வேம்பத்தூர் பிச்சுவையர், காவடிச் சிந்து பாடிப் புகழ் பெற்ற சென்னிகுளம் அண்ணுமலை ரெட்டியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

அழகிய சொக்கநாத பிள்ளையின் தொடர்பால் இதர ''சவுக்கைப் புலவர்''களோடும் முதலியார் அவர்களுக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டது. அவர்களோடு சேர்ந்து தமிழ்க் கவியை அனுபவிப்பதும், பொருள் காண்பதும், இலக்கிய சர்ச்சைகளில் ஈடு படுவதும் வெ. ப. சு. அவர்களுக்குச் சுவையான பொழுது போக்காக இருந்து வந்தது.

அப்போது திருவிளையாடற் புராணம், கந்த புராணம், பாரதம், நைடதம், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, மற்றும் காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் போன்ற நூல்களையும் பல இலக்கண நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்கள்.

சிலேடை, யமகம், திரிபு முதலிய உத்திகளைக் கையாண்டே அக்காலத்தில் பலரும் செய்யுள் இயற்றி வந்தனர். அப்படிச் செய்தால்த்தான் புலவர்களின் மதிப்பைப் பெறலாம் என்றும், அதுதான் சிறப்பென்றும் நம்பிய காலம் அது.

நமது முதலியார் அவர்களும் அத்தகைய சித்திரக் கவிகளில் உள்ள முடிச்சுகளை அவிழ்ப்பதிலும், பொருள் கண்டு பிடிப்பதிலும் நாட்டம் கொண்டிருந்தார்கள். அத்தகைய ஈடுபாடு காரணமாக அவர்களுக்கு அதே போன்ற செய்யுட்கள் இயற்ற வேண்டும் என்னும் அவா எழுந்தது.

வெ. ப. சு. அவர்கள் தாமியற்றிய கவிதைகளை 'சவுக்கைப் புலவர்கள்' முன்வைத்து அவர்கள் கூறும் திருத்தங்களையும் அறிவுரைகளையும் ஏற்றுக்கொள்வார்கள். இளைஞராய் இருந்த சமயம் மேற்கொண்ட அந்தப் பழக்கம் பெரும்புலவரான பின்பும் அவர்களிடத்துக் காணப்பட்டது. தாமியற்றும் ஒவ்வொரு நூலையும் சில தமிழறிஞர்களிடத்துக் காட்டி அவர்கள் ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே பதிப்பித்து வந்தார்கள்.

'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கு ஏற்பக் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பே ''நெல்லைச்சிலேடை வெண்பா'' எனும் நூலை இயற்றி விட்டார்கள். கல்லூரியில் மேல் வகுப்பு மாணவர்களும் முதலியார் அவர்களிடம் தமிழ் இலக்கியம் கற்க வந்தார்கள் என்ருல் வியப்பதற்கு ஒன்று மில்லை.

## பரீட்சையில் தவறினுர்!

கல்லூரியில் இவர்களுக்கு ஆங்கிலப் பாடம் தவறி விட்டது. அது பற்றி பின்னர் கூறும் போது, ''ஆங்கிலப் பாடத்தில் குருட்டுப் பாடம் பண்ண வேண்டியிருந்தது. அது என்னுல் முடியவில்லை. இதனுல் தான் பரீட்சையில் ஒரு முறையல்ல, இரண்டு முறை தவறி விட்டேன். பரீட்சையில் ஒரு சிறு துளையைக் காட்டி இதற்குள் நுழை என்கிருர்கள். மூளைக்கு வேலையில்லாமல் நெட்டுருப் போட்டவன்தான் அப்படிச் செய்ய முடியும். கொஞ்சம் விஷயம் தெரிந்து படித்தவன் பெயிலாகி விடலாம். அதே துளை நமக்குப் போதுகிறதில்லை'' என்ருர்கள்.

கல்லூரிப் பாடத் திட்டம் பற்றியும், பரீட்சை முறை பற்றியும் அவர்கள் சொன்ன கருத்தை எவ்வளவு உண்மையானது என்று தம் வாழ்க்கையிலேயே நிரூபித்துக் காட்டி விட்டார்கள்.

ஆங்கிலப் பெருங் கவிஞன் ஜான் மில்டனின் காவியமான "சுவர்க்க நீக்கம்" ஒரு கருங்கற் பாறை என்று ஆங்கிலப் புலவர்களே வர்ணித்துள்ளார்கள். அக் காப்பியத்தின் முதற் காண்டத்தைத் தமிழ்த் விருத்தப் பாவிலேயே முதலியார் அவர்கள் மொழி பெயர்த்து விட்டார்கள்.

கல்லூரியில் ஆங்கிலப் பாடத்தில் தோல்வி கண்டவர் இம்மொழி பெயர்ப்பைச் செய்தார் என்பதால் புலவர் உலகம் அதை ஏற்காது இருந்து விட்டதா? ஆங்கிலத்தில் திருவாசகத்தை மொழி பெயர்த்த ஜி. யூ. போப் அவர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்றவர், சுவர்க்க நீக்கம் தமிழாக்கத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளார் என்றுல் அதை விடவும் முதலியார் அவர்களின் ஆங்கிலப் புலமைக்கு வேறு ஒரு அத்தாட்சி வேண்டுமா, என்ன?

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று பாரதியார் கூறுவதற்கு முன்னமேயே அந்தப் பணியில் இறங்கியவர்கள் வெ. ப. சு. அவர்கள்.

பச்சோந்தி பற்றிய ஆங்கிலக் கவிதையைத் தழுவி முதலியார் அவர்கள் தமிழில் எழுதிய "கோம்பி விருத்தம்" தமிழ்ப் புலவர்கள் பலராலும் வரவேற்றுப் பாராட்டப் பெற்றது. ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்ற ஆங்கில அறிஞன் எழுதிய "கல்வி விளக்கம்" என்னும் நூலை உரை நடையில் தமிழில் தந்தார்கள்.

முதலியார் அவர்கள் அலுவலகப் பணியாற்றிய முறையில் பல ஊர்களுக்கும் போய்ப் பெற்ற அனுபவங்களாலும் ஆங்கில நூல்களைக் கற்று வந்ததனாலும் நமது கல்வி முறையில் உபயோகமற்றதைக் களைந்து, வாழ்க்கைக்குப் பயன் தரக் கூடியவைகளைச் சொல்லித் தருதல் எத்தனை அவசியம் என்பதையும், இனி வருங்காலம் விஞ்ஞான யுகமாய் இருக்கும் என்பதால் விஞ்ஞான அறிவு பல துறைகளிலும் நமக்குத் தேவை என்பதையும் அறிந்ததனுல் ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் கருத்துக்களை தமிழர்க்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார்கள்.

அதே நோக்கத்துடன்தான் கால்நடை வைத்தியம் பற்றியும் சிறு நூல்கள் சில எழுதினுர்கள். இந்த முறையில் அவர்கள் அனுபவங்களையும், ஆற்றலையும் தமிழ் வசனத்தில் தேக்கி இன்னும் பல நூல்கள் இயற்றியிருந்தார்களேயானுல் இன்றையத் தமிழகம் எவ்வளவோ கடப்பாடு உடையதாய் இருக்கும்.

ஆனுல் அவர்கள் வாழ்ந்த காலத்தில் வசன நூல்கள் மிகுதியாய் வராததாலும், கவிதை நூல்களையே கற்றோர் போற்றி வந்ததாலும் முதலியார் அவர்களது கவனம் முழுவதும் கவிதை நூல்கள் இயற்றுவதிலேயே சென்றது.

"நெல்லைச் சிலேடை வெண்பா" தவிர "அகலிகை வெண்பா" என்னும் நூலும் அவர்களால் இயற்றப் பட்டது. வால்மீகியும், கம்பரும் கூட அகலிகைக்கும் அவளுக்கு ஏற்பட்ட இழுக்கில் பங்குண்டு என்று சொல்லியிருப்பதை ஒப்புக் கொள்ளாத முதலியார் அவர்கள் அகலிகை உடல், உள்ளம் இரண்டாலும் தூய்மையானவள் என்னும் கூற்றை இச்சிறு காவியத்தில் நிலைநாட்ட முயன்றுள்ளார்கள்.

தனிப்பாடல்களாக அவர்கள் இயற்றிய கவிதைகளெல்லாம் தொகுக்கப் பெற்று 'தனிக்கவித் திரட்டு' என்று வெளி வந்துள்ளது.

யாப்பிலக்கண நெறி பிறழாமல் செய்யுட்கள் எழுதினுர்கள். சிலேடை, யமகம், திரிபு போன்ற உத்திகளை வெகுலாகவமாகக் கையாண்டு அவர்கள் இயற்றிய பாடல்களைப் படித்து பொருளுணர்ந்து அனுபவிப்பது என் போன்றேர்க்கு கொஞ்சம் ஆயாசமான காரியந்தான்.

பாரதியும் கவிமணியும் எளிமையாகவும் உணர்ச்சி மயமாகவும் கருத்துக்களை உண்மை உணர்ச்சியோடு அனுயாசமாய் வெளியிட்டுப் பாடிய கவிதைகளைப் பருகிய இதயம் முதலியார் அவர்களது கவிதைகளில் இன்புறுவது என்பது சங்கடமே.

சாதாரண ஆடவர், பெண்டிர், குழந்தைகளுக்குப் புரியாத வகையில் புலவர்களின் பாராட்டுதலைப் பெறவென்றே எழுதிய காலத்தில் வாழ்ந்த வெ. ப. சு. அவர்களின் கவிதையும் அப்படி கடினமாகவும், பதம் பிரிக்காமலும், கருத்தை வார்த்தைகளுள் பின்னி வைத்துமே பெரும்பாலும் அமைந்திருந்தன.

**'ராவ் சாகிப்'**

அரிய தமிழ்ப் புலமை வாய்த்தவராயும், இலக்கிய ரஸிகராயும், பண்பாளராகவும், ஒழுக்க சீலராகவும், கவிஞருமாகவும் திகழ்ந்த வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஆங்கில அரசினரால் பாராட்டப் பெற்றவர்கள். 'ராவ் சாகிப்' பட்டமும் பெற்றவர்கள்.

ஆனுல் தமிழ்ப் பற்றே அவர்களுக்கு எல்லாவற்றையும் விட மேலாக இருந்தது என்பதை எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் நன்றி தெரிவிக்கையில் சொன்னுர்கள். "இவ்விழாவுக்கு மகாமகோபாத்தியாய சாமிநாதய்யர் அவர்கள் தலைமை தாங்கியதானது எனக்குப் பெரு மகிழ்ச்சி தருகிறது; பெருமை தருகிறது. ஜார்ஜ் சக்கரவர்த்தி தலைமை தாங்கியிருந்தாலும் எனக்கு இதுபோல் மகிழ்ச்சி தந்திருக்காது" என்று உணர்ச்சியோடு சொன்னுர்கள்.

தமிழ், தமிழ் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். தமிழுக்காகவே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டார்கள். தமிழ் மக்களிடையே தமிழ் கற்பதற்கான ஆவலைப் பல வகையிலும் தூண்டி வந்தார்கள். அன்னுரது நினைவைப் போற்றி, அவர்களது வழிச் சென்று தமிழைப் பேணுவது எல்லாருடைய கடமையுமாகும்.

★

# நமது அகத்துறைப் பாடல்கள்

கு. அருணசலக் கவுண்டர்

### சங்க நூல்களில்

நாகரிகம் எய்திய மக்களின் தாய் மொழிகளிலே காதலைப் பொருளாக உடைய கவிதைகள் தோன்றுவது இயல்பே; இவை மக்களின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடிதான் அமையும்; எனினும் மொழிகளின் வளர்ச்சிக்கும் புலவரின் மேதைக்கும் தகுந்தவாறு இருக்கும்.

பண்டைய தமிழ்ப்புலவர்கள் ஆண்மை பெண்மைகளின் தவிர்க்க முடியாத தெய்வீகப் பிணைப்பே, வாழ்க்கையின் முக்கிய அம்சம் என்று கருதி, அதையே தங்கள் இலக்கியத்துக்குரிய சிறந்த பொருளாகக் கொண்டவர்கள். பாலுணர்ச்சியால் தூண்டப்பட்டுக் காதலர் துய்க்கும் இன்பத்தைப் பொருளாகக் கொண்டு எழுதப் பெறும் பாடல்கள் அகத்துறையைச் சார்ந்தன; மற்றவை எல்லாம் புறப்பொருள் பற்றியவை, என்பது அவர்கள் கோட்பாடு. ஆதலின் இலக்கியப் பொருளை அகம், புறம் என்று பகுத்து அவற்றிற்குரிய திணை, துறைகளை விரிவாக ஆராய்ந்திருக்கிருர்கள். எனினும், தொல்காப்பியர் புறப்பொருளைக் கூறியிருப்பது போல் அகப்பொருளைக் குறிஞ்சி முல்லை முதலிய திணை வகையிலே கூறவில்லை. கைக்கோள் வகையாக, களவு கற்பு எனக் கொண்டு ஒவ்வொன்றிலும் தலைவி கூற்று, தலைவன் கூற்று, தோழி கூற்று, என்று கிளவிகளைத் தொகுத்துச் சொல்லுகிருர். கதைப் போக்கிலே விவரிக்கவில்லை, இவரைத் தழுவி சங்க காலப் புலவர்கள் அகத்துறைப் பாடல்களைப் பாத்திரங்களின் பேச்சாலே அமைத்துள்ளனர். காதல் இன்பத்தைத் துய்த்தவர்தானே அதைச் சொல்லக்கூடும்? இதைக் கதை முறையிலே கோவையாகக் கூறுவது பிற்கால மரபு.

அகன் ஐந்திணை என்ற காதல் வாழ்விலே காதலரும்பி மலர்ந்து மணமாகும் வரை உள்ளத்துணர்வாலே நுகரும் இன்பத்தைக் களவென்றும், மணமான பின் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பென்றும் வாழ்க்கையின் பல திறப்பட்ட உணர்ச்சிகளை வெட்கமோ கூச்சமோ இன்றி இவர்கள் பாடியிருக்கிற அற்புதமான காதற் கவிதைகள் வெறும் புனைந்துரை அல்ல. காதல் இன்பத்தின் நானாவித உணர்ச்சிகளையும் கவிதையில் வடிப்பதே அகத்துறைப் பாடல்களின் நோக்கம். இதை நிறைவேற்றும் முயற்சியிலே பாடியிருப்பது, இவர்களது கலைப்பண்பையும் மனத்தூய்மையையும் காட்டுகிறது. அதனுல் இப்பாடல்கள் தனியொருவனுடைய புலன் நுகர்ச்சிகளுக்கு மட்டும் உருவம் கொடுக்காமல் மானிடரனைவரது ஆன்மீக அனுபவங்கட்கும் வடிவு கொடுப்பன போல் அமைந்திருக்கின்றன. இதுவே பண்டைய நம் காதல் இலக்கியத்தின் தனிச் சிறப்பு. இதைத் ‘தென் தமிழ் மெய்ப் பொருள்’ என்பர் சிந்தாமணி ஆசிரியர். வேதத்தை உலகுக்கு விரித்து விளக்கும் வைதிக வாணரை நோக்கி, ‘‘கேண்மின் சிறந்தது’’ என்று இதைக் கூறிய புலவர்களும் தமிழில் உண்டு.

நான் மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய்
கொள்ளார் இக்குன்று பயன். [வந்திலார்
(பரிபாடல். 1)

காதல் என்றால் என்ன? அது ஒரு நோய் அல்ல. துயரமும் அல்ல. மக்களிடம் மறைந்து கிடக்கும் உணர்வே அது. அது கூடுதலும் குறைதலும் இல்லாதது. யானைக்கு மதம் உண்டாவது போல, விதி வசத்தால் ஒருவரையொருவர் சந்திக்கும் போது அது வெளிப்படுகிறதாம்,

காமம் காமம் என்ப, காமம்
அணங்கும் பிணியும் அன்றே, நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே. யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்துஅது காணுநர்ப் பெறினே.
(குறு. 136)

என்று, காதல் வசப்படல் தகாது என்ற பாங்கனை நோக்கி, தலைவன் யாரிடத்தும் அது இயல்பாக உள்ளதே என்கிறான்.

காதல் கொள்வதற்குப் பலநாள் சந்தித்து அளவளாவிப் பழக வேண்டும் என்பதில்லை. தலைமகன் கூறுகின்றான்: என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் என்ன உறவினர்? ஓர் உறவும் உடையர் அல்லரே. இது போலவே, என் தந்தையும் உன் தந்தையும் எந்த விதத்திலே சொந்தமானவர்கள்? அவர்களும் பந்துக்கள் இல்லையே. இப்படி இருந்தும் செந்நிலத்திலே பெய்த மழை நீர், அந்நிலத்தோடு இயைவது போல, நம் இருவரது நெஞ்சமும் கலந்து விட்டனவே, இது என்ன வியப்பு?

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.
(குறு. 40)

என்று, தங்களிடையே பிரிவு தோன்றுமோ என அஞ்சிய தலைவியைத் தலைவன் தேற்றுகிறான்.

## திருக்குறளிலே

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது
தாமரைக் கண்ணான் உலகு. [கொல்

அதாவது காதலியின் தோள்மீது தூங்கும் துயிலினும் சுகமானது தானா மோட்ச இன்பம் என்று வள்ளுவரோடு நாமும் ஐயுறுகிறோம். இல்லையா? இவருடைய காமத்துப் பாலின் 25 அதிகாரங்களும் 250 காதல் துறைகளைத் தாங்கி நிற்கும் 250 சிறு கதைகளே. ஒன்றே முக்கால் அடியிலே இதை எப்படித் தான் சாதிக்கமுடிந்ததோ? காதல் விளக்கமே ஒவ்வொரு குறளிலும் வெவ்வேறு பாங்கில் ஒளிர்கிறது. பருகினால்தான் கள் மகிழ்ச்சி தரும்; நினைத்தாலே போதும், காதல் இன்பம் பயக்குமாம்.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

தொட்டால்தான் தீ சுடும்; காதல் போல் நீங்கினும் சுடவா செய்யும்?

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ?

அறிவுக்கு எல்லை இல்லை, மேன் மேல் அறிய அறிய முன்னைய அறிவு அறியாமையாக முடிகிறது. இது போன்றதுதானும் காதலும்.

அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

## பக்திப் பனுவல்களில்

இடைக்காலத்திலே பக்தி இயக்கம் ஓங்கி, காதல் இன்பத்தையும் அதை நுகரும் புலன்களையும் அடக்கிக் கடவுள் மீதே மக்கள் பக்தி செலுத்தவேண்டும் என்று பாடிய ஆழ்வாராதியர் கூட, கடவுளை அடைதலாகிய மோட்சத்தை விளக்குவதற்கு அகப் பொருள் துறைகளையே மிகுதியும் பயன்படுத்தியிருக்கிறார்கள். நாயக-நாயகி பாவத்திலேயே உயர்வற உயர்ந்த கவிதைகளைச் சமைத்திருக்கிறார்கள். இவற்றின் 'சொல் புதிது, சுவை புதிது. 'கவிதைக் கலைக்கே எல்லையாய் இருக்கக்கூடிய, 'நவகவிதை' எந்நாளும் அழியாத மாகவிதை' என்று இவற்றைத் தயக்கம் இன்றிக் கூறலாம்.

கண்ணன் எங்கே? பசு மேய்க்கப் போய்விட்டான் என்று பெருமூச்சு விடுகிறாள். மாலை நேரம். மல்லிகை, மணத்தைப் பரப்புகிறது. 'பசுக்களும் திரும்பிவிட்டனவே, கண்ணா இது உனக்கு நியாயமில்லை. பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குத் துன்பம் செய்யத்தான் நீ பிறந்திருக்கிறாயா? பசுக்கள் மீது வைத்த கருணை கூட எனக்கு இல்லையா?' என்று ஏங்குகிறாள். இப்படித் தவிப்பவள் கோபிகை இல்லை. நம்மாழ்வார்தான். இந்த இரவு என்ன விடியாதா? நீண்டுகொண்டே போகிறதே!

ஊரெல்லாம் துஞ்சி
உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாம் தேற
நீளிரவாய் நீண்டதோ?

சூரியனும் தோன்றாமல் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டானே என்கிறாள். எரிந்துகொண்டிருக்கிற விளக்கைப் பார்த்து,

செந்தாமரைத் தடங்கண்
செங்கனிவாய் எம்பெருமான்
அந்தாமத் தண்துழாய்
ஆசையால் வேவாயே.

அதாவது, 'அவன்மேல் ஆசைகொண்டுதான் தீபமே நீயும் வெந்துகொண்டிருக்கிருயோ ?' என்று கேட்கிருள்.

சமாசாரம் தோழிகளுக்குத் தெரியும். தாய்க்குத் தான் தெரியாது. நோயோ பேயோ என்று தாய் குறி கேட்க, ஆட்டைப் பலியிட்டுத் தெய்வங்களுக்குக் கண்ணைப் படைக்கிருள். இது கண்ட தோழியர்,

இதுகாண்மின், அன்னைமீர் இக்
கட்டுவிச்சிசொல் கொண்டுநீர்
எதுவானும் செய்து அங்கோர் கள்ளும்
இறைச்சியும் தூவல்மின்

என்று தாயைக் கண்டித்து, அவளுடைய காதல், தெய்வக் காதல் என்கிருர்கள். இதைப் புரிந்து கொண்ட தாய், தன் மகள் துரும்பாய் மெலிந்து விட்டாளே, அவளுடைய சுபாவம் கூட மாறிவிட்டதே என்று பிற பெண்களிடம் பிரஸ்தாபிக்கிருள்: 'என் மகளுக்கு மண்ணும் விண்ணும் கடலுமே காதலனை ஞாபகப்படுத்துகிறது. கண்ணீர் பெருக்குகிருள். இதற்கு நான் என்ன செய்வேன் ?'

மண்ணை இருந்து துழாவி
வாமனன் மண்இது என்னும்
விண்ணைத் தொழுது, அவன்மேவு
வைகுந்தம் என்று கைகாட்டும்
கண்ணைஉள் நீர்மல்க நின்று
கடல்வண்ணன் என்னும் அன்னேஎன்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு
என்செய்கேன் பெய்வளை யீரே ?

இப்படி நம்மாழ்வார் தம் பாவனு சக்தியால், காதலியாய்த் தோழியாய்த் தாயாய், மாறி மாறிப் பிறந்து, கடவுள்மீது எல்லையில்லாத பக்தி செலுத்துகிருர். இதற்கு நிகரான கவிதை வேறு எம்மொழியிலும் இல்லை.

## கோவை இலக்கியத்தில்

அகத்துறைப் பாடல்களுக்குக் காதலின் மலர்ச்சியும் வளர்ச்சியும் அது இயங்கும் முறைகளும் முக்கியம். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வெறும் சிருங்கார ரசப் பாடல்கள் அகப்பொருள் இலக்கியம் ஆகா. சில சம்பவங்கள் மூலமாய் தலைவன் தலைவி பாங்கி அனைய பாத்திரங்களின் வாய்மொழியாய் காதலுணர்ச்சிகளைத் தொடர்பருது நாடகப் பாங்கில் கதைப்போக்கிலே விவரிப்பது தான் சிறப்பென்பது பின் வந்தோர் கொள்கை. இதைப் படைப்பதற்கு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம்—என்றிப்படி ஓர் ஒழுங்கு முறையை வகுத்துக்கொண்டார்கள். நம்பி அகப்பொருளை இலக்கணமாய்க்கொண்டு கதைப்போக்கிலே பாடல்களை இயற்றினர்கள், இதனுல் நானூற்றுக்கு மேற்பட்ட துறைகளுடன் கோவை என்ற தனிப் பிரபந்த வகை தோன்றியது. இது பொருளற்ற ஓர் இலக்கிய முயற்சி அல்ல. தற்போது இது வழக்கொழிந்த இலக்கணமா யிருப்பினும் இதைப் பின்பற்றி நூல்கள் எழுதப்படாவிடினும் இதை ஊன்றி ஆராய்ந்தால் மனித இயற்கையை அவர்கள் எவ்வளவு தூரம் துருவிப் பார்த்திருக்கிருர்கள் என்பதும், பெண் மனத்தை அவர்கள் எவ்வளவு துல்லியமாய்ப் படம்பிடித்திருக்கிருர்கள் என்பதும் புலனுகாமற் போகா. இலக்கண வரம்பிற்குட்பட்ட கோவை நூல்களின் அகத்துறைப் பாடல்கள் ஒரே அச்சில் வார்த்தாற்போல ஒரே விதமான சொல்லும் பொருளும் அடுத்தடுத்துக் காணப்படுவது இயல்பே. எனினும் புலவர்கள் தமது கற்பனைத் திறனுல் விதவிதமான பாவங்களில் கலைப்பாங்குடன் கற்றேர்க்கும் மற்றேர்க்கும் இன்பம் அளிக்கக்கூடிய காதல் கவிதைகளைச் சாதுரியமாய்ச் சமைத்திருக்கிருர்கள். இலக்கண விதிகள் அவர்களுடைய கவிச் சக்தியின் மலர்ச்சிக்கும் கற்பனைக்கும் இடையூருய் இல்லாத அளவிலே அவர்களது புலமை ஓங்கியிருந்தது. இதற்கு உதாரணமாக, பாண்டிக் கோவை, தஞ்சை வாணன் கோவைகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் பல துறைகள் உலகியல் வழக்குக்குப் புறம்பானதாகத் தோன்றலாம். காட்சி, ஐயம், தெளிதல் போன்ற துறைகள் வெறும் நாடக வழக்காகக் காணப்படினும் அழகிய கவிதைகளைச் சமைப்பதற்கு இவை உதவாமல் இல்லை. காதலுணர்ச்சிகளையும் நிகழ்ச்சிகளையும் அதனுல் நேரும் மெய்ப்பாடுகளையும் துல்லியமாய்ச் சித்திரிக்கும் கோவையின் இசை மலிந்த கட்டளைக் கலித்துறைகள் முழுவதுமே வெறும் புல நெறி வழக்கோ நாடக வழக்கோ அல்ல.

தலைவியை அடையப்பெற்ற தலைவன் மகிழ்கிருன்: 'என்னைப்போல இவ்வுலகத்திலேயே இந்திர பதவி இன்பம் நுகர்ந்தார் யார் ? வையை சூழ்ந்த தஞ்சை வாணனுடைய பொதிய மலையிலே ஆராயும் போதெல்லாம் இன்பந்தரும் தமிழே போல், இவள் கனிவாயைப் பருகுந் தோறும் இன்பம். அதுமட்டுமா? உயிர் உடலைவிட்டுப் போகாமற் காக்கும் அமிழ்தாகவும் இருக்கிறது.'

யார்உம்பர் தம்பதம் என்போல எய்தினர்
இம்பர் அம்பொன்
வாரும் துறைவையை சூழ்தஞ்சை வாணன்
மலைய வெற்பில்

தேரும் தொறும்இனி தாம்தமிழ் போன்றிவள்
செங்கனி வாய்
ஆரும் தொறும்கனி தாம்அமிழ் தாம்எனது
ஆரு யிர்க்கே.

நாணிக் கண் புதைத்தல் என்பது ஒரு துறை. பாரதி கேட்கிறார்: 'அடி கண்ணம்மா, என்ன கருத்திலே நீ இப்படிக் கண்களைப் பொத்திக் கொள்கிறாய்? சின்னக் குழந்தை என்ற எண்ணமா? அல்லது நீ வெட்கப் படும்படி தகாத காரியத்தை யாரேனும் செய்தார் களா? அழகிய உன் முகத்தை மூடிக் கிடக்கும் முக்காட்டை நீக்கினேன்; அவ்வளவு தானே?'

என்ன கருத்திலடி
கண்புதைக்கிறாய்—எனக்கு
எண்ணப் படுவதில்லை
ஏடி, கண்ணம்மா!
கன்னி வயதில்உனைக்
கண்டதில்லையோ?—கன்னம்
கன்றிச் சிவக்கமுத்தம்
இட்டதில்லையோ?
வன்ன முகத்திரையைக்
களைந்திடென்றே—நின்றன்
மதங்கண்டு துகிலினை
வலிதுரிந்தேன்.

இதையே நானூறு விதமாய்ப் பாடி, ஒரு புலவர் தமது கவித்துவ சக்தியை மெய்ப்பித்திருக்கிறார் என்றால் அதை நம்ப முடியாதுதான். 'ஏன் இப்படி? கைகளை எடு என்று கேட்பதிலே நானூறு விதமா?' என்று ஆச்சரியப்படுகிறோம். இரகுநாத சேதுபதி மீது அமிர்த கவிராயர் இயற்றிய ஒரு துறைக் கோவை யிலே நானூறு பாடலும் நாணிக் கண் புதைத்தலே. இதைப் பார்க்கிற யாரும் புலவருடைய அகன்ற கற்பனை ஆற்றலைப் போற்றாமல் இருக்க முடியாது.

'படைவேந்தர் எல்லாம் தலை வாசலிலே வந்து கை கூப்பி வணங்கும் சேதுபதி மலையிலே, இடை தான் குறைந்து விட்டது. மச்சத்தையாவது காட்டா விட்டால் உங்கள் தனத்தை நான் எப்படி மதிப்பிடக் கூடும்?' என்கிறான்.

கடைமுன்னர் நின்று முடிமேல்
தமதுஇரு கை குவித்து
படைமன்னர் போற்றும் ரகுநாத
சேது பதிவரை வாய்
இடைதான் குறைந்தது. மச்சமும்
காட்டுவது இல்லை யென்றால்
மடவீர் உமது தனத்தைஎவ்—
வாறு மதிப்பது வே.

இப்பாட்டில் வியாபார பரிபாஷையிலே 'எடை குறைந்தது; மச்சமும் இல்லை; தனத்தை (தங்கத்தை) மதிப்பிடுவது எப்படி?' என்று கேட்பது போலத் தோன்றுகிறது இல்லையா? மெய்யாக அவன் சொல் வது 'இடை (இடுப்பு) தேய்ந்து சிறுத்திருக்கிறது, மச்சம் (மீன்) போன்ற கண்களைக் காட்டாவிட்டால் உங்கள் தனத்தை (கொங்கைகளை) மதிப்பிடுவது எப்படி?' என்பதே.

மற்றொரு பாடல்: விரக தாபத்தால் தோன்றிய தாகத்தைத் தீர்த்துக் கொள்ள உங்களிடமுள்ள இள நீரைத் தருகின்றீர்கள்; கண் திறந்தால் தானே அதனால் பயன்? விஷயம் விளங்குகிறதல்லவா?

உளமேவு காம சுரதாகம் தீர்ந்திட
உம்மி டத்தாம்
இளநீரைத் தந்தினிக் கண்திற வாவிடில்
என்பய னே.

## காதல் பிரபந்தத்தில்

'இன் தமிழ் இயற்கை இன்பம்' அதாவது இனிய தமிழ் கூறும் இன்பம் என்று சிந்தாமணி ஆசிரியர் போற்றும் காதல் வாழ்க்கை, களவொழுக்கம் என்றும் கற்பொழுக்கம் என்றும் இருவகைப்படும் என்கிறோம். அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தலைவனும் தலை வியும் விதி வசத்தால் எதிர்ப்பட்டுத் தாமே காதல் கொள்வது தான் களவு. இக்காதல், பிறவி தோறும் தொடரும் என்பது முன்னோர் கொள்கை.

இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை எனஒன்று இன்றி
மறுமை உலகத்து மன்னுதல் பெறுமே.

(குறு. 199)

அதாவது, 'இப் பிறவியுடனே இக்காதல் முடிந்து விடுவதில்லை. மறு பிறப்பிலும் மன்னுதல் பெறும். ஆதலின் நீ வருந்த வேண்டா' என்று தலைவன் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறான். இவ்வாறு பிறவி தோறும் தொடரும் காதல், விதி வசத்தால் காத லரைச் சேர்த்து வைக்கிறது.

பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்
சால்புஅளந்து அறிதற்கு யாம் யாரே.

(குறு. 366)

அதாவது, 'தலைவனது குணநலங்களை அளந்தறி தற்குரிய தகுதி நமக்கேது? இது நல்லூழால் அமைக் கப்பட்ட தொடர்பு' என்கிறாள் தலைவி.

இவ்வாறு அமையும் காதலை இயற்கைப் புணர்ச்சி என்பது நூல் வழக்கு. காதலர் முதன் முதல் சந்தித்து அளவளாவும் நிகழ்ச்சியே அது. தற்செயலாய் நேரும் சந்திப்பிலே அன்புடை நெஞ்சங்கள் ஒன்று படு கின்றன. அளவளாவி இருந்த தலைவன், நலம் பாராட்டிப் பிரிந்து, விரைவிலே வந்து சேர்வதாகக் கூறிச் செல்கிறான். இந்த நிகழ்ச்சியே காதல் பிரபந்

தத்துக்குரிய பொருள். கோவை நூல்கள் இத்துடன் நில்லாது பல நூறு நிகழ்ச்சிகளைப் பெய்து, பலநாள் கழித்துத் திருமணத்தை முடித்து வைக்கும். காதல் பிரபந்தமோ முதல் நாள் சந்திப்புடன் முடிந்து விடுகிறது. இதைப் பல்லலங்காரப் பண்புடன் வித்தாரமாகச் சித்தரித்து, முதன் முதல் சிற்றிலக்கிய வகை ஒன்றைத் தோற்றுவித்த பெருமை திருச்செங்கோட்டு வீரபத்திரக் கவிராயர்க்கே உரியது. இவர் நல்லதம்பிச் சக்கரையால் அபிமானிக்கப்பட்டவர் என்பதற்கு மேல் இவரைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. பதினெட்டாம் நூற்றாண்டிலே ஒரு துறையை நானூறு விதமாகக் கூறி, கோவை நூல் பாடுவதிலே ஒரு புது வழி காட்டிய அமிர்த கவிராயர் போலவே இவரும் இயற்கைப் புணர்ச்சியை மட்டும் பாடி, அகத் துறைப் பாடலிலே ஒரு புதிய பாதையை வகுத்தார். இவர் பாடியது நல்ல தம்பிச் சக்கரை மன்றாடியார் காதல். இதுதான் காதல் பிரபந்தத்தின் முன்னோடி.

கோவை நூல் மிகவும் விரிவானது என்றோம். நானூற்றுக்கு மேற்பட்ட கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டது. எழுத்தெண்ணிப் பாடப்பெறும் இந்த யாப்பு, உணர்ச்சி வேகத்தையோ கற்பனை விரிவையோ நிகழ்ச்சியின் விறுவிறுப்பையோ வெளிப்படுத்துவதற்கு உதவா என்று, அதை ஒதுக்கிவிட்டு, வீரபத்திரக் கவிராயர் லளிதமான கலி வெண்பாவைக் கருவியாய்க் கொண்டு, லகுவான ஆனால் ரச புஞ்சமான காதல் பிரபந்தத்தைப் படைத்து, தமிழ்த் தாய்க்கு ஒரு புதிய படையலைச் சமர்ப்பித்தார். இது தோன்றியதும் இப் பிரபந்த வகை நாடெங்கும் பரவியது, இதன் சிறப்புக்குச் சான்று. இதைத் தழுவி, கூளப்ப நாயக்கன் காதல் தோன்றியது. நிலக்கோட்டையின் பாளையக்காரனாகிய நாகம கூளப்ப நாயக்கன்மீது (கி.பி. 1706—1732) சுப்பிரதீபக் கவிராயர் அதைப் பாடினார். காதல் என்ற பெயரே அதன் போக்கை ஓரளவு தெரிவிக்கும். பிரபந்த இலக்கணங்கூறும் பாட்டியல் எதுவும் இதற்கு விதி கூறாதது குறிப்பிடத்தக்கது.

தசாங்கத்திலே பாட்டுடைத் தலைவனின் குதிரையைக் கூறுகிறார். பகைவர்கள் தலைமீது அது நடனம் செய்து உலாவி வருகிறதாம்.

செறுநர்தங்கள் தலையினின்று
திமிதிதொந்தம் எனநடஞ்செய்(து)
உறுவஎன்பு தசைநொறுங்க
உலவுகொண்ட லனதுரங்கன்.

தலைவன் முரசு அதிர்கிறது;

வாரிஒலி மீறிமுகில் நேரலஇ தேதெனச்சொல்
பேரிடியுள் நாணமுறப் பேசுமணி மும்முரசான்.

அவனுடைய வாசல் வளம் இது:

அன்னம் வழங்கி
அருள்வழங்கி வாணருக்குச்
சொன்னம் வழங்கித்
துகில்வழங்கும் வாசலினான்

நண்புரிய மின்னார்
நடம்புரியப் பாவலர்கள்
பண்புரியப் பூமான்
பதம்புரியும் வாசலினான்.

வேட்டையிலே வீழ்த்தப்பட்ட புலி வாய் பிளந்து கிடக்கிறதாம்:

கால்துவண்டு நாவறண்டு
கானுமூன்று வாய்பிளந்து
வால்நொறுங்கி வேல்புகுந்த-
வாறுகண்டு வீரர்மிஞ்ச.

மான்கள் ஓடுகின்றன. பறவைகள் பறக்கின்றன. எப்படி?

புள்ளிமான் கூட்டம்
புல்லரைக்கண் டோடுவபோல்
வள்ளிமா னைத்தேடி
வாய்வெருவித் தானோட.

நாடிரைபுள் கூட்டம்
நல்லதம்பிச் சக்கரையைப்
பாடியநா வாணர்தங்கள்
பாழ்ங்கலிபோ லேபறக்க.

தலைவி தோன்றுகிறாள். அவள்,

மாரன் உயர்தீபம்! மாரன் பிரதாபம்!
மாரன் அணிதூபம்! மாரன்மகிழ் நிட்சேபம்!

மதனன்! அபிஷேகம்! மதனன் அதிமோகம்!
மதனன் பிரதாபம்! மதனன் பணிதேகம்!

முனிவோர்க்(கு) ஒரு சாத்ரம்!
முனிவோர்க்கு இரு நேத்ரம்!
முனிவோர்கள் சற்பாத்ரம்!
முனிவோர் குருச்சேத்ரம்!

இதைவிடச் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது?



*With best compliments from*

# THE TRAVANCORE RAYONS LIMITED

*Pioneer Manufacturers of*

RAYON YARN AND CELLULOSE FILM
IN INDIA

*Factory :* Rayonpuram, Kerala

*Sales Office :* Indian Overseas Bank Building
3rd floor, 151, Mount Road, Madras-2.

# குணங்குடி மஸ்தான் சாஹிபு கவிச்சிறப்பு

மாண்புமிகு நீதிபதி மு. மு. இஸ்மாயில்

குணங்குடி மஸ்தான் சாஹிபு என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிற மகானுடைய இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பதாகும். நபிகள் நாயக மவர்களின் இறுதிநாள் அறிவுரைகள் அனைத்தையும் தொகுத்துப் 'பொன்னரிய மாலை' என்ற காவிய வடிவில் வெளிக் கொணர்ந்த மின்னு நூருத்தீன் என்ற என்ற பெரும் புலவரின் மரபில் வந்தவர்கள் இவர்கள். இவர்களின் தந்தையார் பெயர் நயினுர் முஹம்மது என்பதாகும். இவர்கள் பிறந்த ஊரைப்பற்றி மூன்று விதமான கருத்துக்கள் உலவுகின்றன. தந்தை, தொண்டியைச் சேர்ந்தவரென்றும், தாய், தேவ கோட்டைக்கு அருகிலுள்ள குணங்குடி என்ற குக் கிராமத்தைச் சேர்ந்தவரென்றும், நாட்டு வழக்கப்படி, தாய் பிரசவத்திற்காகத் தம் தாய் வீடு சென்று இவர்களைப் பெற்றெடுத்தார் என்றும் வழங்குவது ஒன்று. தந்தையின் ஊராகிய தொண்டியிலேயே பிறந்தார் என்பது வேறொன்று.

குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களின் பாடல்களைத் திருப்பாடற்றிரட்டு என்ற பெயரில் பிரபன்ன வித்வான், காஞ்சிபுரம், மகாராய ராய ஸ்ரீ. இராம சுவாமி நாயுடு அவர்களுடைய பதவுரையுடன் 1911-ல் அச்சிட்ட இட்டா கன்னைய நாயுடு அவர்கள் தம்முடைய முன்னுரையில், இவர்கள் பாண்டி மண்டிலத்திலுள்ள காயற்பட்டினத்தில் அவதரித்தார்கள் என்று கூறுகிறுர்கள். 1790-ல் இவர்கள் பிறந்ததாகக் கூறப்படுகிறது. நல்ல வசதியும் வாய்ப்பும் பெற்ற குடும்பத்திலே பிறந்தவர்களாயினும் இளம் வயதிலேயே இவ்வுலக இன்பங்களில் ஆசையற்றவர்களாக இறை நாட்டத்தையே தங்கள் முழுமூச்சாகக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக, முறைப் பெண்ணுகிய தம்முடைய மாமன் மகளைத் தமக்குத் திருமணம் செய்துவைக்கச் செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டுக்கு இணங்காமல் துறவியாக வெளியேறி விட்டார்கள். ஆரம்பத்தில், கீழக்கரையில் ஹலரத் தைக்கா சாஹிபு என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலிம் என்ற பேரறிஞரிடத்தில் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொண்டார்கள். பின்னர், ஹலரத் ஷாம் சாஹிபு என்ற மகானிடம் 'முரீது' என்னும் உபதேசம் பெற்று, இவ்வுலகின் ஆசாபாசங்களை முற்றிலும் துறந்த துறவியானுர்கள்.

மஸ்தான் சாஹிபவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவங்கள் அனைத்தையும் நன்ருக அறிந்திருந்தவர்கள். ஏகத்துவம் என்ற அதனுடைய அசைக்க முடியாத அடிப்படைக் கொள்கையில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டவர்கள். உலக மதமாக வெளிவந்ததன் காரணமாக உலக மக்கள் அனைவருக்கும் பொருத்தமான வாழ்க்கை நெறியினை வகுத்தளித்த இஸ்லாம், மனிதனுக்கு இயற்கையான வாழ்வான, சமுதாயத்திற்கு அஸ்திவாரமாக அமைகின்ற, இல்லற வாழ்வையே மேற் கொள்ளுமாறு பொதுவாகப் பணிக்கிறது. ஆனுல், சாதாரண மக்களுக்காக விதிக்கப்பட்டிருக்கும் வாழ்வு நெறியும் வழி முறையும் ஒரு சில குறிப்பிட்ட தனி நபர்களுக்கு வேண்டாதனவாகவும் தேவையற்றனவாகவும் தோன்றக்கூடும். இல்லற வாழ்வை வகுத்திருக்கும்

இஸ்லாம், இறைவனை எண்ணுவதற்கும் ஏற்றுவதற்கும் தொழுவதற்கும் விதிகளை வகுத்திருக்கிறது. யாராவது ஒருவன் இல்லறத்தைத் தூய்மையும் திடமும் நிறைந்த மனத்துடன் துறந்து வேறெந்த நினைவுமின்றி இறைவனுடைய நினைவிலேயே தன் மூச்சுமுழுவதையும் விடுவதற்கு முனைந்து அந்த முயற்சியில் வெற்றியும் பெறுவானாயின், அத்தகையவனுடைய நிலை தனி நிலையேயாகும். எண்ணம் எல்லாம், உணர்வு முழுவதும், அறிவு அனைத்தும் இறைவன் பக்கலிலேயே செலுத்தப்படுமாயின், அறிவதற்கும் உணர்வதற்கும் உன்னுவதற்கும் இறைவனேயன்றி வேறெதுவுமே இல்லாத நிலையொன்று வந்து விடுகிறது. உடலுமில்லை, இடமுமில்லை, உயிருமில்லை, உணர்வுமில்லை, இருப்பதெல்லாம் இறையொளியே அல்லது இறையுணர்வே என்ற கட்டம் வரும்பொழுது பகுத்தறிவைக் கொண்டு பாகுபடுத்துவதற்கு வாய்ப்பேயின்றி இறையின் ஓர்மை ஒன்றே தனித்து நிலைபெற்றுவிடுகிறது. இந்த நிலையை அனுபவித்தவர்களுடைய சொல்லும் செயலும் வாழ்வும் வழியும் விநோதமாகவும் வேருகவும் தான் இருக்கும். அவற்றைச் சாதாரண அறிவைக் கொண்டும் உணர்வைக் கொண்டும் அறிவதும் உணர்வதும் கூடக் கஷ்டம். அத்தகைய நிலையை எய்துவதற்கு உறுதியும் திடமும் தூய்மையும் இல்லாதவிடத்தும் அத்தகைய நிலையொன்று இருக்கமுடியும் என்பதை அறிவினுலும் உணர்வினுலும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பாயினும் இருக்கவேண்டும். அதுவும் இல்லாதவிடத்து, அந்த மகான்கள் நம்மால் பின்பற்ற முடியாதவர்களாக மாத்திரமில்லாமல் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் ஆகிவிடுவார்கள். இந்தப் பின்னணியில்தான் அத்தகை மகான்களுடைய சொல்லையும் செயலையும் அறிந்து கொள்ள வேண்டும். இந்தப் பின்னணி இல்லாதவிடத்து, மார்க்கம் வகுத்திருக்கின்ற சாதாரண வழியைப் பின்பற்றுகின்ற எல்லோருக்கும் அவர்களுடைய வாழ்வும் சொல்லும் விபரீதமாகவே தோன்றும்.

### மஸ்தான் என்ற சொல்

'மஸ்தான் என்ற சொல்லே அவர்களுடைய இயல்பையும் தன்மையையும் குறிப்பதாக உள்ளது. 'மஸ்து' என்ற வார்த்தை மயக்கம் தரக்கூடிய பொருளை, உள்ளக் கிளர்ச்சியூட்டக்கூடிய சத்துவைத்தான் குறிக்கும். இறைவனுடைய நினைவிலேயே தம் நினைவு மறந்து, தம் உணர்வு இழந்து, தம்மையே அழித்துக்கொண்ட இறைப் பித்தர்களைத்தான் 'மஸ்தான்' என்ற பெயர் குறிக்கிறது. இந்த வகையில், சுல்தான் அப்துல் காதிர் அவர்களுக்கு, மஸ்தான் என்ற பெயர் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை அவர்களுடைய பாடல்களைப் படித்த அளவிலேயே தெரிந்துகொள்ள முடியும்.

இறையுணர்விலேயே தங்களைக் கரைத்துவிட்ட ஞானப் பெருவள்ளல்களில் தலை சிறந்தவர்களில் ஒருவராகக் கருதப்படக்கூடியவர்கள் குணங்குடி மஸ்தான் சாஹிபவர்கள். அவர்களுடைய பாடல்களனைத்தும் அறவுரைகள் நிரம்பிய ஞானக்கருவூலங்களாக விளங்குகின்றன. இறைவனுடைய முழுமையையும் ஒருமையையும் வல்லமையையும் கருணையையும் பெருமையையும் சௌந்தரியத்தையும் தெவிட்டாத தீஞ்சொற்களால் பன்னிப் பன்னிப் பாடியிருக்கிருர்கள். இறை நினைவிலேயே தங்களை நிர்மூலமாக்கிக் கொண்ட ஞானச் செல்வர்களுடைய உணர்வுக்கு எல்லாம் இறைவனாகவும் தோன்றும்; எதுவும் இறைவனில்லாததாகவும் தோன்றும். இவைகளைப் பற்றிய அவர்களுடைய பாடல்களையும் அவைகளில் தொனிக்கும் கருத்துக்களையும் சாதாரண மக்கள் தங்களுடைய உணர்வுக்கும் வழிபாட்டுக்கும் போதுமானவையாகக் கொள்ளமுடியாது; ஏனெனில், இருவர் நிலையுமே வேறு. குணங்குடி மஸ்தான் சாஹிப் அவர்களுடைய ஞானப்பாடல்கள் கற்கக் கற்க இன்பமூட்டும் கவித்துவத்துடன் அமைந்து சொல்லும் பொருளும் இயைந்து மஸ்தான் சாஹிப் அவர்களுடைய மனப்பக்குவத்தைத் தெளிவுடனும் அழகுடனும் பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன. அந்தக் கவிச்சிறப்புக்குச் சில உதாரணங்களை எடுத்துக்காட்டுவதுதான் இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம்.

### கவிச்சிறப்பு

இறைவனை, உடல், பொருள், ஆவி, உள், புறம் எல்லாமாகவும், காணும் பொருள் அனைத்துமாகவும், காணுப்பொருள் எவையிருப்பினும் அவையுமாகவும் காண்பது இறை நேசச் செல்வர்களின் கற்பனை நிலைகளில் ஒன்று. குணங்குடி மஸ்தான் சாஹிபவர்களுடைய பாடல்களில் இதற்குப் பல உதாரணங்களைக் காணலாம்.

" ஊனுகி யூனிலுயி ராகியெவ் வுலகுமா
யொன்ரு யிரண்டு மாகி
உள்ளாகி வெளியாகி யொளியாகி யிருளாகி
யூருடன் பேரு மாகிக்
காணுகி மலையாகி வளைகடலு மாகிமலை
கானக விலங்கு'மாகிக்
கங்குல்பக லாகிமதி யாகிரவி யாகிவெளி
கண்டபொரு ளெவையு மாகி
நானுகி நீயாகி யவனுகி யவளாகி
நாதமொடு பூதமாகி, "

" பாராகி யெப்பொருளு மாகியப் பார்தனிற்
பஞ்சவன் னங்க ளாகிப்
பற்பல விதங்கொண்ட விந்துநா தத்துட்
பதிந்துமுளை பருவ மாகி, "

" பார்த்ததிக் கெங்குமொரு வெளியாகி யென்பரா
பரப்பிரம வெளியு மாகிப்

பற்றுமன வெளியாகி மனவெளி கடந்தமுப்
பாழான வெளியு மாகிக்
கூர்த்தவறி வத்தனையு மேற்றபடி கொள்ளையே
கொண்டகடு வெளியு மாகிக்
கோடானு கோடிபல வண்டபகி ரண்டமுங்
கொண்டபெரு வெளியு மாகி, ''

என்று பரம்பொருளை வர்ணிக்கிருர்கள். உரை விளக்கம் தேவையற்ற அளவுக்கு எளிய அழகிய தமிழில் இந்த உயர்ந்த தத்துவங்கள் அமைத்திருப்பதைக் காணலாம். ''பலவுமாய் ஒன்றுமாய் என்றுமாய் நின்ற தற்பரம்'' என்றும் பரம்பொருளை அவர்கள் குறிக்கிருர்கள். இதே மனேபாவத்திலிருந்துகொண்டு தான்,

'' பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும்
ஆர்க்குந் தெரியாம லாளுய் பராபரமே ''

என்றும்,

'' ஈறு முதலுமற்ற இயங்குகின்ற முச்சுடராய்க்
காரணிக்கும் பூரணமே கண்ணே றகுமானே ''

என்றும், ''புத்திக்கும் எட்டாது புத்திக்குள் உற்ற வான்பொருள்'' என்றும் இறைவனைக் குறிக்கின்ருர்கள்.

இறைவன் எங்கே இருக்கிருன் என்று கேட்குமாப் போல்,

'' கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ
வடிமையிரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ வுடலிலோ வுயிரிலோ
கதியான பூமி தனிலோ
அல்லிலோ பகலிலோ நல்லபத வில்லிலோ
அருவிலோ வுருமீ திலோ
அறிவிலோ வறியொணு மறையிலோ
மறைகண்முத
லாகம புராணத் திலோ ''

என்ற பாடல் அமைந்துள்ளது. மேலும்,

'' கண்டபொரு ளத்தனையு மாகிநின் றவைகளுங்
காணுத கார ணத்தைக்
கருதரிய சித்தாய்வி சித்ரமாய் நின்றிலங்
கா நின்ற காரணத்தை
அண்டகோ டிகளையுந் தன்னுள்வைத் தணுவினுக்
கணுவான காரணத்தை
அறியாம லென்றெய்வ முன்றெய்வ மென்பார்க்கு
மவ்வகைக் காரணத்தை
யெண்டிசை விளக்கின்ற வித்தா யிருந்துமோ
ரிடமற்ற காரணத்தை ''

என்றும் பரம்பொருளின் தன்மையைக் குறிப்பிடுகிருர்கள். இறைவனிடத்துப் பிறந்த எல்லையற்ற ஆசையின் காரணமாக,

''முத்தைநவ மணியையொளி பத்திபா யும்மணியை
மோனமணி ஞான மணியை
மொய்த்தகதிர் மாசிலா மணியைவா னுதியா
மூவுலகு மான மணியைச்
சித்திமணி யைச்சித்தி தருமுத்தி மணியையென்
சிந்தைகுடி கொண்ட மணியைத்
திவ்யகுரு மணியா லிழைத்தசிங் காசனச்
சிகரத்தி னுச்சி மணியைப்
பத்தர்கட் கெய்துகூ டாமணியை நிறைபார்த்த
பரமார்த்த மான மணியை ''

என்று கொண்டாடுகிருர்கள்.

### சமாதி நிலை

சித்தர்களுக்கும் ஞானிகளுக்கும் சமாதிநிலை என்பது கைவந்த நிலையாகும். அனைத்தையும் அடக்கித் தன்னையும் மறந்து இறைநினைவில் தன்னையே ஐக்கியப்படுத்த முயலுகின்ற நிலையே சமாதி நிலையாகும். இந்தச் சமாதி, எது வெதுவாகு மென்று குணங்குடி மஸ்தான் அவர்கள் பலவாருகக் கூறுகின்ருர்கள்.

''பழவினை யிறக்கவுஞ் சுழுமுனை திறக்கவும்
பழகிவரு வதுச மாதி''

என்றும்,

''ஒன்றிரண் டென்றுமன முற்றுமுள றுதலைவிட்
டொன்றுபடு வதுச மாதி''

என்றும்,

''ஓவியம் போலிருந் துள்ளுருகு நல்லமிர்த
மொழுகவுண் பதுச மாதி''

என்றும்,

''ஏவலொடு விலகலெனு மிருவினையு மற்றசை
விலாதிருப் பதுச மாதி''

என்றும்,

''எதுவந்து நேரினும் மாறினு மிரண்டுமொன்
றென்றிருப் பதுச மாதி ''

என்றும், சமாதிநிலையைக் குறிப்பிட்டுவிட்டு, சாதாரண மக்களும் கூட மேற்கொள்ளத்தக்க சமாதிநிலைகள் சிலவற்றையும் மஸ்தான் சாஹிபவர்கள் அருளிச் செய்திருக்கிருர்கள்.

''ஈயெறும் பாதிக டமக்குடல் குழைந்துமு
னின்புருகு வதுச மாதி''

என்றும்,

'' சாதிபே தத்தையும் மாதர்போ கத்தையுந்
தள்ளிநிற் பதுச மாதி''

என்றும்,

"வதியுஞ்சவ் வாதுசந் தனமுமொன் றென்று
வைத்துநிகழ் வதுச மாதி" [மனம்

என்றும்,

"வாராது வாராது வருவனவும் வருமென்று
வாட்டமொழி வீதுச மாதி"

என்றும் நமக்கு அறவுரை பகர்கிறார்கள். எல்லா உயிர்களையும் உயிர்களாக மதித்து நடப்பதும் சாதி பேதத்தையும் காமவெறியையும் உதறித்தள்ளுவதும் சமநோக்குடன் எல்லாவற்றையும் பார்ப்பதும், இட்டது வரும், இடாதது கிடைக்காது என்று மன அமைதிபெறுவதும் எல்லோராலும் முயன்று பார்க்கக் கூடியவைகளேயாகும். ஆகையால்தான்,

"எந்த வுயிரு மெமதுயிரென் றெண்ணியெண்ணி
சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே"

என்றும் மஸ்தான் சாஹிபவர்கள் பாடுகிறார்கள்.

இத்தகைய ஞானிகளுடைய மனநிலை என்றும் எப்பொழுதும் பரம்பொருளின் பக்கலிலேயே இருக்கும். அப்பரம்பொருளோடு தாங்கள் ஐக்கியமாகி ஒன்றுகிற நிலையையே அவர்கள் எப்பொழுதும் விழைவார்கள். இந்த ஐக்கிய நிலையின் மேலுள்ள ஆசையின் காரணமாகத்தான் பரம்பொருளைத் தலைவன், தொண்டன், துணைவன், காதலன், காதலி, அன்னை, தந்தை எனப் பலவாறாக உறவுமுறை பாராட்டிப் பாடியிருக்கிறார்கள். இத்தகைய பாடல்கள் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது வெறும் உலக நடைக் கருத்துக் கொண்டதாகத் தோன்றக்கூடும். ஆனால், அவையனைத்துக்கும் உட்பொருள் ஒன்று இருப்பதைக் கூர்ந்து நோக்கினால் கண்டுகொள்ள இயலும். குணங்குடி மஸ்தான் சாஹிபவர்களின் பாடல்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்கள் இறைவனைப் பல பாவங்களில் வைத்தும் அழைக்கிறார்கள். மனோன்மணிக்கண்ணி என்ற பகுதி இவ்வகையைச் சேர்ந்ததாகும். அவர்கள் கையாண்டுள்ள பல அழகிய சொற்றொடர்கள் அவர்களின் மனநிலையை எடுத்துக்காட்ட வல்லனவாய் உள்ளன. இவ்வுலகை,

"எந்தைமுதல் யாவரும் வந்துகலை யுஞ்சந்தை
யென்றெண்ண வருள் புரியவும்"

எனப் பரம்பொருளை வேண்டுகிறார்கள். அஃதே போல்

"தங்கத்தை யுஞ்செங்க லென்றெண்ணி யேதள்ளு
தள்ளௌனற்கு"

அருள்புரிய வேண்டுமென்றும் பரம்பொருளை வேண்டிக் கொள்கிறார்கள்.

"உன்னையன்றி யாவு முளவோவென் றோதியபின்
என்னையென்னத் தில்வைத் திசைப்பாய்
நிராமயமே"

என்றும்,

"எப்பொருளுந் தானு யிலங்குமுனைப் பூசைசெய்ய
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே"

என்றும்,

"உயிர்க்குள்ளியி ராயென் னுள்ளுள் ளுலாவியநீ
தயிர்க்குளுறு வெண்ணெயெனத் தானே
நிராமயமே"

என்றும்,

ஒன்றாய்ப் பலவா யுருவருவா யும்முயிராய்
நின்றவுனை யாரறிய நின்றாய் நிராமயமே"

என்றும் கேட்கிறார்கள். இறை நினைவிலும் இறையுணர்விலும் தங்களை நிர்மூலமாக்கிக் கொள்வதே நிரந்தரமான பேரின்பம் என்று உணர்த்தி,

"ஆதியின்மே லாசை யடர்ந்தெரித்த அக்கினியின்
சோதியினால் வெந்து சுகம் பெறுவ தெக்காலம்"

என்று கேட்கிறார்கள்.

## இனிய சொல்லாட்சி

இத்தகைய தத்துவார்த்தக் கருத்துக்களையெல்லாம், குணங்குடி மஸ்தான் சாஹிப் அவர்களுடைய அழகு பொருந்திய எளிய தமிழ்ப்பாக்கள் பொதிந்து விளங்குகின்றன. பொருள் இன்ன தென்பதையே உணர்ந்து கொள்ளத் தேவையின்றி, இனிய சொல்லாட்சியின் மாட்சியாலேயே இன்ப நுகர்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் பாடல்கள் பலவற்றைக் குணங்குடி மஸ்தான் சாஹிப் அவர்கள் படைத்துத் தந்திருக்கிறார்கள்.

உதாரணமாக,

"கடன்மடை திறந்தென வருண்மடை திறந்தடிமை
கண்குளிர்வ தெக்கா லமோ
கங்கற்ற பேரின்ப வெள்ளத்தின் மூழ்கியென்
கலிதீர்வ தெக்கா லமோ
உடல் குழைய நெக்குருகி விழிநீரு மாருக
ஆறுவது மெக்கா லமோ
உள்ளுளே பற்றியெரி யுந்தீயமர்ந் துளமு
முட்குளிர்வ தெக்கா லமோ
சடைவனே மிடைகொண்டு மிடைவனே தேவரீர்
தாம்வருவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வடுவேது மற்றவடி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு* மென்னிருகண்
மணியே முகியித்தீனே. †

என்ற பாடலைக் குறிப்பிடலாம். மஸ்தான் சாஹிபவர்களுடைய அற்புதமான சொல்லாட்சிக்குச் சிறந்த

* 'குணங்குடிவாழ்' என்று இங்கு குறிப்பிடும் பொழுது, தாம் பிறந்த ஊரென்று சொல்லப்படுகிற குணங்குடியைப் பற்றி மஸ்தான் சாஹிப் அவர்கள் சொல்லவில்லை. குணங்கள் குடியாகியிருக்கும்

உதாரணங்களாக அடியிற் கண்டவற்றையும் கூற லாம்.

“பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்கு போற்கரணம்
புத்திதனை யலைக்கப் போமோ நிராமயமே.”

தற்பரமே சிற்பரமே தானென்று நின்றுதவுங்
கற்பகமே வற்புதமே கண்ணே பராபரமே.”

“உடலே யுயிரே யுளங்குளிர்ந்த செந்தேனே
கடலே நிறையமுதே கண்ணே பராபரமே.”

“கொட்டிவைத்த முத்தே குவித்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேயென் கண்ணே
பராபரமே.”

“மைச்சினிச்சி போலு மணக்கோலப் பெண்
போலுங்
கைச்சரசஞ் செய்தருளாய் கண்ணே பராபரமே.”

“குவலயத்தோ ரும்வாழி குணங்குடியா ரும்வாழி
கவலையற்றோ ரும்வாழி கண்ணே பராபரமே.”

மேற்கண்ட பாடல்களில் சொல்லமைப்பும் அழகும் மட்டுமின்றி கருத்துச் செறிவும் உயர்வும் ஒருங் கமைந்து சிறப்புற விளங்குவதைக் காணலாம்.

### வழக்குச் சொற்கள்

தங்களுடைய பாடல்களின் ஊடே மஸ்தான் சாஹிபவர்கள் பல வழக்குச் சொற்களையும் சொற்றொடர்களையும் எடுத்தாண்டிருக்கிறார்கள். இத் துடன் எளிமையின் அழகும் சேர்ந்து அவர்களுடைய பாடல்களுக்கு மெருகேற்றிப் புதியதொரு கவர்ச்சி யைக் கொடுத்து விடுகிறது.

“அரிசிவிலை யுலையறியு மோவென்ற கதைபோல.”

“கொட்டாவி விட்டுவிட் டேங்கி யேங்கிக்
குந்தியுட் கார்ந்த மூவனே.” [கொண்டு

“எட்டாத கொம்பினி லிருக்கின்ற தேனே
யிறங்கிடா யென்ற மூவனே.”

“கையில்வெண் ணெயைவைத்து நெய்க்கழா
கலிதீர்த்து னருள் புரியவும்.” [வண்ணமென்

என்ற சொற்றொடர்கள் அவர்கள் பாட்டின் இந்தப் பண்பை நன்கு விளக்குகின்றன. அடியிற்கண்ட பாடல் இத்தகைய சொற்றொடர்களாலேயே முழுக்க முழுக்க அமைந்திருப்பதைக் காணலாம்.

“கானுக் கெறித்தநில வாகாத வண்ணங்
கடாக்ஷித்து னருள் புரியவும்
கல்லுக் கிரங்குமழை யாகாத வண்ணங்
கரங்கொடுத் தருள் புரியவும்
ஆலைவாய்க் குட்கரும் பாகாத வண்ணமு
மணைத்தாண்டு னருள் புரியவும்
ஆழித் துரும்பெனவு மாகாத வண்ணமு
மடுக்கவைத் தருள் புரியவும்
கோணைப் பழித்தகுடி யாகாத வண்ணமென்
குறைதீர்த்து னருள் புரியவுங்
குருவற்ற சீடனென வாகாத வண்ணநற்
குணமேற்றி யருள் புரியவும்
மானம்வைத் துதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.”

இன்னும், கீழ்க்காணும் பாடல்களும் அவர்கள் வழக்குச் சொற்களின் வகையறிந்து தம் பாக் களினூடே பயன் படுத்தியிருக்கிற பாங்கினை எடுத்துக் காட்டும்:

“தொல்லுலகி லல்லற் றுயரமெல்லாந் தீர்க்கவொரு
சொல்லருள வந்த துரையே நிராமயமே”

“உயிர்த்துணைவ ரேனு முளந்தெளியா வுலுத்தரை
யோர்
மயிர்க்கு நிகர்குறிக்க மாட்டே னிராமயமே”

“கொல்லா விரதத்தைக் கொல்லக் கொலைஞருள்ளங்
கல்லாகத் தானோ கணித்தாய் நிராமயமே”

“தேசிகனு னென்னுந் திருட்டுகுருக்கள்
சொல்லோர்
காசாய் மதியேனென் கண்ணே றகுமானே”

மஸ்தான் சாஹிபவர்களுடைய பாடல்கள் பிறநலங்களோடு உவமை நயமும் நிரம்பி மிளிர்பவை. மேலே, எடுத்துக்காட்டப் பட்ட பாடல்களிலேயே அது நன்கு வெளிப்படுதலைக் காணலாம். அவற்றோடு இன்னும் ஒன்றிரண்டு உதாரணங்களையும் ஈண்டு எடுத்துச் சொல்லுதல் தகும். ஆணவம் என்பது இறையறிவை மறைக்கும் திரை எனப் பெரியோர்கள் கூறுவர். அத்தகைய தமது ஆணவத்தினிடையேயும் இறையறிவு நிறைந்திருப்பதைக் குறிப்பிடும் மஸ்தான் சாஹிபவர்கள், கோணலான கரும்பிலிருந்து வெளிப் படும் சாறுயினும் அது தன் சுவையில் குன்றுமலி ருப்பது போல என்று ஓர் இனிய உவமையைக் கூறுகின்றார்கள்.

---

ஒன்றை உருவகப்படுத்தியே மஸ்தான் சாஹிப் அவர்கள் குறிப்பிடு கிறார்கள்.

† முஸ்லிம்களிலேயே சூபிகள் எனப்படுவோர் பல பிரிவினராக இருக்கிறார்கள். அந்தப் பிரிவுகளில் ஒன்றுக்குத் தலைவராகக் கருதப் படுபவர், முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி என்று அழைக்கப்படும் பெருந் தகையாவார்கள். அவர்களையே தங்கள் தலைவராகக் கொண்ட மையால், குணங்குடி மஸ்தான் சாஹிபவர்கள் அவர்களின் பெயரை இவ்வாறு தங்களுடைய பாடல்களில் பலவிடங்களில் வரிக்கிறார்கள்.

" கோணற் கருப்பிரசங் கோணாத கொள்கை
யென்றன்
ஆணவத்தி லுந்த னறிவா னிராமயமே."

கொளுத்தும்போது பிரகாசத்தைக் கொடுத்துக் தூக்கொண்டே கரைகின்ற கற்பூரத்தினை இறையுணர்வினல் கரைகின்ற ஞானிகளுக்கு ஒப்பிட்டு, அந்த நிலையினை அருளுமாறு இறைவனை வேண்டும் பாடல் மஸ்தான் சாஹிபவர்களின் உவமை நயத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

" கற்பூர வுண்டை கரைவதுபோ லக்கரையுந்
தற்போத கர்க்கருளைத் தந்தா ணிராமயமே."

" உடுக்கையிழந்தவன் கை " என்பது தமிழர்களுடைய உணர்விலே கலந்த சொற்றொடர். அதனை மஸ்தான் சாஹிபவர்கள் வேறொரு கருத்துக்கு உவமானமாகக் கையாளுகிருர்கள். நழுவுகின்ற ஆடையைச் சரிப்படுத்தும் கையானது எப்படி இயற்கையாகவே தனது வேலையைச் செய்கின்றதோ, எவ்வாறு அந்தக் கை அதற்காக உபசாரத்தையோ வெகுமானத்தையோ எதிர்பார்ப்பதில்லையோ, அவ்வாறேதான் மனிதன் பரம்பொருளை நாடுவதும் உள்ளது என்பதை மிக்க அழகாக,

" நிற்கும் பொழுதாடை நெகிழ்ந்தா லுபசாரங்
கைக்குஞ் சொலுவதுண்டோ கண்ணே
பராபரமே "

என்ற பாடலில் கூறுகிருர்கள்.

இறுதியாக, எல்லோருடைய அனுபவத்திலும் உணரக்கூடிய ஒன்றை அடிப்படையாக வைத்து அருமையான கருத்தொன்றை வெளிப்படுத்தும் மஸ்தான் சாஹிபவர்களுடைய பாடலொன்றைக் காண்போம். குளிருகிறதென்று எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் போர்த்துக் கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகக் குளிர் இருப்பதையும், அதே சமயத்தில், கந்தல்துணிகூட இல்லாமல் குளிரை லட்சியம் செய்யாமல் வேறு பலர் இருப்பதையும் கண்டிருக்கிறோம். போர்த்துக்கொண்டிருப்பவர்களும் தங்களுடைய போர்வையைத் தைரியமாகத் தூக்கி யெறிவார்களானல் குளிர் தங்களை ஒன்றும் செய்யாமையை உணர்வார்கள். உலகப் பற்றின் தன்மையும் இதுவேதான். பற்று இருக்குமளவுக்குத் தேவைகள் அதிகரித்துக்கொண்டேபோகும். பற்றற்ற நிலை எய்தினல், எதுவும் தேவையிருக்காது. இறையுணர்வு பெற்ற இறைநேசச் செல்வர்களுடைய நிலையும் இதுதான் என்பதை அடியிற்கண்ட அழகிய பாடலில் மஸ்தான் சாஹிபு அவர்கள் அற்புதமாக எடுத்துக்காட்டுகிருர்கள்:

" மெத்தத் துணிபோர்க்க மெத்தமெத் தக்குளிருஞ்
சற்றுதுணி போர்த்துவரச் சற்றுகுளிர்-இற்றதுணி
இல்லைக் குளிருமிலை யில்லையிது தானுளமே
செல்லக் குணங்குடியார் † சீர்."

† இந்தப்பாட்டிலுங்கூட குணங்குடியார் என்ற சொல் குணங்களைக் குடியாகப்பெற்ற இறையுணர்வு நிறைந்த இறைநேசச் செல்வர்களையே குறிக்கின்றது. பாடுகின்ற மஸ்தான் சாஹிபவர்களைக் குறிக்கிறது என்று கொள்ளினும் பொருந்தும். குணங்குடியார் என்னும் சொல் மஸ்தான் சாஹிபவர்களைக் குறிப்பதாக வேறு பாடல்களிலும் அமைந்திருக்கிறது.

### ' கம்பன் காவியத்திற்கு ஈடாகா '

கம்பருக்கு முன்பாக நக்கீரர், இளங்கோவடிகள், சாத்தனார், திருத்தக்க தேவர் முதலாகவுள்ள நல்லிசைப் புலவர்கள் நறுஞ்சுவைக் கவிகளை இயற்றியிருக்கின்றனர். இயற்றி இருப்பினும் என்? அவைகளெல்லாம் கம்பன் காவியத்திற்கு ஈடாகா. கம்பன் காலத்தில் பிற்பட்டவனாயினும் கவிச்சக்கரவர்த்தி என்ற வகையில் முதன்மையுற்றிருக்கிருன். ஒருவன் ஒரு நாட்டில் பிறர் ஒருவரும் காவியம் இயற்ருத காலத்தில், காவியம் இயற்றுவது எளிது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி போன்ற உயரிய நூல்கள் தோன்றிய பின்னர் கம்பன் காவிய கர்த்தா என்ற பெயரைப் பெற்றதுதான் அரிதினும் அரிது. மற்றப் புலவர்களை மறந்தாலும் மறப்பர்; கம்பனைக் கருதாதார் ஒருவருமில்லை. பிரமசிருஷ்டியைப் போன்று நவநவமான நயங்களோடு கவிதைகளை இயற்றும் திறன்படைத்தவன் கம்பன். பாக்களில் ஆகர்ஷண உணர்ச்சி வளரும் தன்மையைக் காணலாம். படிப்பவர் மனத்தை ஈர்த்துச் செல்லும் தன்மை எல்லாக் கவிகளுக்கும் அமைவது எளிதல்ல. கம்பனுக்கு அச்சக்தி மிக எளிது. கம்பன் கவியடிகள் தோறும் தித்திக்கும். பாக்கள் தோறும் மணக்கும். படலங்கள் தோறும் இன்சுவை ததும்பும். மணிமேகலை, சிலப்பதிகாரம், கந்தபுராணம் முதலியன பெரிய காவியங்கள் என்ற பெயர்களைப் பெறினும் முற்றும் சுவை ததும்பிக் கிடக்கின்றன வென்று கூறமுடியாது.

—எஸ். சோமசுந்தர பாரதியார்

(குரோதன, ஆவணி மாத ''குமரன்'' இதழிலிருந்து)

# 'குணங்குடி மேவும் குருவே'

[சிவகங்கை பொன்னையசாமி]

[இந்தப் பாடல்கள் இப்பொழுதுதான் பழைய ஓலை ஏட்டுப் பிரதியிலிருந்து முதன் முதலாக அச்சுவாகனம் ஏறுகின்றன. குணங்குடி மஸ்தான் சாகிபைப் போற்றும் இப்பாடல்களையும், இவை போன்ற இன்னும் சில பாடல்களையும் இயற்றியவர் 1812-ம் ஆண்டில் காலமான பொன்னையசாமி, என்ற சைவத்துறவி. இவர் சிவகங்கையில் ஒரு குளம் வெட்டுவித்து, அன்னசத்திரமும் கட்டி, காளிபக்தராக வாழ்ந்தவர்; கடைசிக் காலத்தில் துறவு பூண்டவர். குணங்குடி மஸ்தான் சாகிபினிடம் இவர் உபதேசம் பெற்று அவரைத் தம்முடைய குருவாகப் போற்றி வணங்கியவர். —கு. அ.]

### குணங்குடியார் பெருமை

சேய்கபுதுல் காதிர்நயி னூர்என்ற குணங்குடியார் செய்கைதன்னை
வாய்கொளவு மேவழுத்தி மனம்கொளவு மேநினைத்து வந்தபேர்க்கு
நோய்கொளா திருந்துலகில் தவம்பெருகி மிகவாழ்ந்து நோம்பும்பெற்று
பேய்கொளா திருப்பரென்றால் அவர்பெருமை எவராலும் பேசலாமோ? 1

மணங்குடி நேச மாதர்தந் தையரை மக்களை மனைகளை மறந்து
பணங்குடி சேர்க்கும் பாசமும் அகற்றிப் பரவெளி யுற்றவான் பரியில்
இணங்குடி யேறி முச்சுடர் மீதிங்(கு) எம்பிரான் என்னவீற் றிருக்கும்
குணங்குடி மேவும் மவுனமுத் திரையறி கோலினால் துறந்தஎன் குருவே. 2

### பொன்னையசாமி வீட்டுக்குக் குணங்குடியார் வந்தது

ஈசனைப் பிரியா இறைவனே! நீயும் என்னுடை இல்லில்வந் தெய்தப்
பூசனை என்ன புரிந்தனே? யான்உன் பொற்பதம் பணிந்திடும் பொருட்டோ?
காசினி தனிலே ஏகமாய் நிறையும் காரணா! கருணையா னந்த
வாசனை சேரும் குணங்குடி மேவும் மவுனமுத் திரைஅறி குருவே. 3

### புறவேடங்களால் யாது பயன்?

தலையைச் சிரைத்ததில்என்? தாடி வளர்த்தென்?
சிலைகுறையச் சுன்னத்துச் செய்தென்? — நிலையதனில்
நில்லென்வொஷத் தாதுரைத்த நீதிநசீ கத்ததனை
அல்லும் பகல்கல்வி லாய். 4

எந்த மதத்தில் இருந்தாலும் ஆண்டவனைச்
சந்ததம்உள் போற்றத் தவமாகும் — சிந்தையினுள்
போற்றாமல் விட்டுவிட்டுப் பூதலத்தில் வேசமட்டும்
மாற்றுவதில் என்னவரு மாம்? 5

வந்தவர்கள் எந்த மதத்தும் இறையவனைச்
சிந்தையினுள் போற்றச் சிறப்பாகும் — அந்தந்த
மார்க்கம் தவறி மறுவேடம் பூணுவதில்
மூர்க்கமன்றி மற்றென்? மொழி. 6

[குணங்குடியார் சில ஆண்டுகள் சென்னையில் தங்கியிருந்தார். அவரை ஊருக்குத் திரும்பி வருமாறு அழைத்துப் பொன்னையசாமி பாடிய ஒரு பாடலின் பின்பாதி கீழ் வருமாறு.]

மிக்கமக நீபம்விட் டப்பால் முகப்பதை மேவியா கூவையுன்னி
மேலாம் சுவர்க்கபதி தாண்டிஈ ரேழ்புவி விளங்கிநிறை வேதவடிவே!
மக்கமென நீயுற்ற சென்னபட் டணம்விட்டு வரவேணும் இதுதருணமே,
மவுனகுரு தேசிஎனும் வளர்பீர் குணங்குடி மஸ்தானி சாயுபொலியே. 7

# சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலை

## தமிழ் நாட்டின் தனிச் சிறப்பு

★ அகில இந்தியாவிலும் தன்னம்பிக்கையிலேயே வளர்ந்து வரும் கிராமப் பண்டகசாலை இது ஒன்றே!

★★ அகில இந்தியாவிலும் மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட பண்டகசாலைகளில், சர்க்காரிடமிருந்து மூலதனமோ, மானியமோ வாங்காத பண்டகசாலை இது ஒன்றே!!

★★★ உற்பத்தியாளர்கள் உபயோகிப்போர்களின் நலன்களைப் பாதுகாத்து வரும் ஸ்தாபனம் இது ஒன்றே!!!

ஆண்டுதோறும் வியாபாரம் சுமார் ரூ. 2 கோடி.

## சந்திரசேகரபுரம் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட்.

தலைமை அலுவலகம் :
சந்திரசேகரபுரம்

மத்திய அலுவலகம் :
கும்பகோணம்

தலைவர்:
G. கருப்பையா மூப்பனர்

கௌரவ காரியதரிசி:
C. S. இராமச்சந்திரன்

பொருளாளர்:
திரு. D. S இபனேசர்

# "காமம் செப்பாது கண்டது மொழிமோ"

வி. எஸ். சுப்பையா ஐ. ஏ. எஸ்.

தமிழ் மொழியின் தொன்மையையும் அதன் இலக்கியச் சிறப்பையும் சீரிய முறையில் உலகுக்கு எடுத்து இயம்பவேண்டிய நிலை இப்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உலகின் பல பாகங்களிலுமுள்ள அறிஞர்களும், மொழிவல்லுநர்களும் தமிழ் மொழியின் பெருமையை அறிய முற்பட்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் அந்த முயற்சிக்கு ஆதரவாகச் செயல் ஆற்றவேண்டியது தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்போரின் கடமையாகும். அவ்வாறு பகுத்தறிவுக்கு ஒப்பச் செயல் ஆற்றத் தவறிவிடுவார்களேயானால் தக்க சமயத்தில் மொழிக்குச் செய்யவேண்டிய கடமையிலிருந்தும் பிறழ்வதோடு நம் தாய் நாட்டிலேயே மொழி வளர்ச்சிக்கு ஊறு விளைவித்ததாகவும் ஏற்படும்.

தமிழ்மொழி இறைவனாலேயே படைக்கப்பட்டது; இறைவன் தமிழ்ப்புலவர்களோடு வீற்றிருந்து தமிழ் ஆய்ந்தான்; 'கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்' என்றெல்லாம் சொல்லி அந்த அடிப்படையிலேயே தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்தையும் வளர்க்கவும், பரப்பவும் முற்படுதல், மொழி ஆராய்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பொருந்தாத செயலாகிவிடும்.

கி. மு. நூற்றாண்டில் இயற்றிய தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை ஆதாரமாகவும் அளவு கோலாகவும் கொண்டு தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் எளிதில் வகுத்துவிடலாம். மொழித்திறனும் இலக்கியச்சிறப்பும், ஒரு மக்கள் இனத்தின் நாகரிகம், பண்பாடு ஆகியவைகளின் அளவைக் காட்டக்கூடிய கருவிகள் அல்லவா?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

'உண்டால் அம்மஇவ் வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே'

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

'ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர்'

என்றெல்லாம் விழுமிய கருத்துக்கள் ஒலித்திருக்குமானால் அந்த மக்களின் நாகரிகம் எவ்வளவு உயர்ந்த லட்சியத்தைக் கொண்டிருந்தது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். இந்த லட்சியத்தையும் அதோடு இணைந்த உயர் சிறப்புக்களையும் புறக்கணித்து விட்டு, மொழியின் சிறப்பையும் பண்பாட்டின் பெருமையையும்

விளக்க 'இறைவனே மனித உருவில் வந்தான்' என்று பொருந்தாக் கதைகளைப் புனைந்து அந்தக் கட்டுக் கதைகளின் அடிப்படையிலும் சார்பிலும் நிலைத்து நிற்க முயலுவது பகுத்தறிவுக்கும், விஞ்ஞான அறிவுக்கும் பொருந்துமாறு எங்ஙனம்?

### அவல நிலைக்குக் காரணம்

ஒரு சிறிது ஆராய்ந்தாலே இந்த நிலை உருவாவ தற்குக் காரணம் என்னவென்று எளிதில் விளங்கும். மேனாடுகளில் போன்று முறையான இலக்கிய விமர் சனம் தமிழ்நாட்டில் உருவாகாததே இந்த அவல நிலைக்குக் காரணம்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்', 'எப் பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு,' என்ற தலைசிறந்த கொள்கை ஏட்டளவோடுதான் நின்று போய் விட்டதோ என்று ஐயுறும் வண்ணம் இடைக்காலத் தில் நூல்கள் புனையப்பட்டன. 'சங்கப்பலகை' போன்ற இலக்கிய ஆய்வாளர்கள் உரிய காலத்தில் தோன்றி யும், அவர்களின் வழித்தோன்றியவர்கள் எழுத்து, சொல், யாப்பு முதலியவைகளில் குற்றம் குறைபாடுகளை நுணுகி நுணுகிக் கண்டுபிடித்தார்களே அல்லாமல், பொருளிலும் அமைப்பிலும் கவனம் செலுத்தியதாகவே தெரியவில்லை. நூல் அரங்கேற்றம் என்று ஒன்றைக் கேள்விப்படுகிறோம்; பட்டி மண்டபம் என்று கேள்விப் படுகிறோம். ஆனால் இந்த அரங்கங்களும், மண்டபங் களும் இலக்கிய விமர்சனம் என்று முறைப்படி எதை யும் சீர்திருத்தியதாக வரலாறும் இல்லை; சான்றுகளும் இல்லை. கவிச் சக்கரவர்த்தி கம்பரின் இராம காதை திருவரங்கத்தில் அரங்கேறிய போது இரணிய வதைப் படலம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அதன் சிறப் பைக் கேட்டு அங்கே கல் தூணில் உள்ள நரசிம்ம உருவம் கல கல வென்று சிரித்தது என்று ஒரு பொருந் தாக் கதையைத்தான் வழி வழியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஏழு மதம், பத்து அழகு, முப்பத்திரண்டு உத்தி என்றெல்லாம் நூல்களை இயற்றுவதற்கு வழி வகுத் தார்களே அல்லாமல், இயற்றிய நூற்பொருளில் 'குணம் நாடி குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்ற கொள்கையைப் பின்பற்றி இலக்கிய விமர்சனத்தை வளர்த்தார்களில்லை.

இந்தக் காரணத்தினால் வரையறை இல்லாத வகையில் புனை கதை நூல்கள் தோன்றி நிலைத்து விட்டன. மேனாட்டில் உருவாகியதைப் போல விமர் சனக்கலை இங்கும் உருவாகி இருக்குமேயானால் தமிழ் இலக்கியத்தில் புனை கதைகள் இது இது என்று மக்கள் அறியும் வாய்ப்புக் கிட்டி இருக்கும்; பகுத்தறிவு அடிப் படையில் மென்மேலும் இலக்கியம் பலதுறைகளிலும் வளர மிக உதவியாக அமைந்திருக்கும்.

'இது தெய்வத்தன்மை வாய்ந்தது; நம்பித்தான் ஆகவேண்டும்,' 'இவர் சொல்லியருளி விட்டார்; சப்பைக்கட்டுக் கட்டியே தீரவேண்டும்' என்று வெல் வெட் கவசம் அணிந்த ஒரு கொள்கையானது நடை முறையில் இருக்குமானால், உயர்ந்த கருத்துக்களுக்கும் உண்மை இலக்கியத்துக்கும் உய்வு உண்டா? கருத் துக்களைச் சுதந்திரமாக வெளியிட வாய்ப்புக் கிட்டுமா? பகுத்தறிவுக்குச் சற்றும் பொருந்தாத கூற்றுக்களிலேயே மக்களை நாளும் ஆழ்த்தி வைத்து விட்டுப் பின்னர் அம்மக்களிடமிருந்து உன்னத நடை உடை பாவனைகளை எதிர்பார்த்தல் எங்ஙனம்?

எனவே, தமிழ் இலக்கியம் மீண்டும் முறைப்பட்ட இலக்கிய ஆய்வுக்கு உட்பட வேண்டிய ஒரு நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இவர் சொல்லி விட்டார்; இனி மறுமொழி இல்லை என்ற நிலையிலிருந்து தமிழ் இலக்கியம் மீட்கப்பட வேண்டும்.

'சங்கப் பலகை' எந்த இலட்சியத்துக்காக ஆதி யில் அமைக்கப்பட்டதோ அந்த இலட்சியத்தோடு இலக்கிய விமர்சனம் வளர்ந்தால்தான் தமிழ் இலக் கியம் அதற்கு உரிய நிலையை அடைந்து அதன் மகோன்னத கருத்துக்கள் உலகுக்கே வழிகாட்டியாக அமைய முடியும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் உலகத்தில் தோன்றிய கருத்துக்களை இன்று உலகின் முன் வைத்தால், உலகம், வியப்பில் மயங்கும் என்பது உயர்வு நவிற்சி அன்று; வெறும் புகழ்ச்சி இல்லை; உண்மை.

### ஒரு சங்கப் பாடல்

தமிழ் நாகரிகத்தில் மலர்ந்த ஒரு சங்கப்பாடலை உதாரணத்துக்காக எடுத்துக் கொள்வோம்.

தமிழ் மக்களின் நாகரிகத்துக்கு அளவுகோலாக அமைந்துள்ள சங்க இலக்கியங்களில் குறுந்தொகை என்னும் தொகைநூலில் இரண்டாவது பாடல்:

> கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
> காமம் செப்பாது கண்டது மொழிமோ:
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
> செறிஎயிற்று அரிவை கூந்தலின்
> நறியவும் உளவோநீ யறியும் பூவே?

தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐம்பெரும் பிரிவு களாகப் பிரித்து தம் நாகரிகத்தையும் பண்பாட்டை யும் ஒழுக்கத்தையும், இலக்கியத்தையும் அப்பிரிவு களை ஒட்டி வளர்த்திருப்பதை இங்கு விவரிக்க வேண்டியதில்லை.

அந்த நிலையில் இந்த 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடல் குறிஞ்சித் திணையில் 'பெரு நயப்பு உரைத்தல்' என்ற துறையைச் சார்ந்தது என்று நூல்

## ‘உண்மையைச் சொல், வண்டே!’

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ :
பயிலியஃது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே?

—குறுந்தொகை

# கனிச்சுளைக்கும் கால்விரலுக்கும் வேற்றுமை தெரியாத 'பேதைக் குழந்தை'!?

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே!
பவளவா யீர்!வந்து காணீரே!

— பெரியாழ்வார்

# அசோதையின் ஆனந்த பரவசம்!

தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயி ருர விழுங்கிய,
அத்தன்வந்(து) என்னைப் புறம்புல்குவான் !
ஆழியான் என்னைப் புறம்புல்குவான் !

—பெரியாழ்வார்

[புறம்புல்குவான் - முதுகைக் கட்டிக்கொள்வான்]

## கார்காலம் வந்தது; காதலன் வரவில்லை

குவளை மலரில் மதுவாரும் வண்டுகாள் !
குமிழி சுழியில் விளையாடு தும்பியே !
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே !
அவரும் அவதி சொனநாளும் வந்ததே !
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்;
கணவர் உறவு கதையாய் முடிந்ததே !

—நந்திக் கலம்பகம்

வல்லோர் வகுத்திருக்கிருர்கள். இறையஞர் என்ற பெரும் புலவர் பாடிய பாடல் இது.

நாணி நின்ற தலைவியை நாணத்தினின்றும் நீக்குவதற்காக அவளுடைய உடலைத் தொட்டுப் பயின்று தனது பேரன்பு தோற்றும்படி அவளுடைய பெரு நலங்களைக் கூறித் தலைவன் பாராட்டுவதாக இறையனர் என்ற புலவர் இயற்றிய அகத்துறைப் பாடல் இந்த "கொங்குதேர் வாழ்க்கை."

நாணி நிற்கும் தலைவிக்குத்தான் சொல்லுகிருன் தலைவன். ஆனல் அவளைப் பார்த்து நேர்முகமாகச் சொல்லவில்லை. அங்கே அவர்கள் சந்தித்த ஒரு பூம்பொழிலில் பறந்து திரியும் ஒரு வண்டைக் கருவியாகக்கொண்டு சொல்லுகிருன். பூக்களோடேயே வண்டின் வாழ்க்கை இணைந்திருக்கிறது. எனவே அந்த வண்டைக் காட்டிலும் பல்விதப் பூக்களின் தன்மையை அறிந்தவர் வேறுயாரும் இருக்கமுடியாது. எந்நேரமும் மலர்களையும் அவைகளிலுள்ள மகரந்தப் பொடிகளையும் ஆய்ந்துகொண்டிருக்கும் அதன் வாழ்க்கையைப் புகழ்ந்து பேசுகிருன் தலைவன்: "ஏ, தும்பியே, என் விருப்பத்தை ஆதரித்து எனக்காகச் சொல்லாமல் உள்ளதை உள்ளபடியே சொல். (காமம் செப்பாது கண்டது மொழிமோ)" - இந்த முகப்புரையோடு தலைவியின்மீது தான் கொண்டிருக்கும் பெரு மதிப்பை வெளியிடுகிருன். அதாவது தலைவி அறிந்து கொள்ளுமாறு வாய்விட்டுச் சொல்லுகிருன்.

"ஏ தும்பியே! இவள் எத்தகையவள் என்பதை நீ அறிவாயா? பிறவிகள் தோறும் என்னேடு பயிலும் நட்பினள் அல்லவா? மயிலினது சாயலையும் முத்தொளி வீசும் பல் அழகையும் கொண்ட இவளுடைய கூந்தலில் ஒரு புதுவித நறுமணம் கமழ்கிறது. இந்த நறுமணத்தை மிஞ்சும் நறுமணம் கொண்ட பூக்கள் வேறு ஏதாயினும் உண்டா? (நறியவும் உளவோ, நீ யறியும் பூவே?)"—இது வண்டுகளில் சிறந்த இனத்தைச் சேர்ந்த ஒரு தும்பியைப் பார்த்துக் கேட்கும் விஞ. அதற்கு விடை என்ன என்பது வெளிப்படை.

என்ன நயமான, விடை எதிர்பார்க்காத, விஞ, அதுவும் ஒரு வண்டினிடத்தில்! காதலியின் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் சொல் இதைவிட வேறு ஏதாவது இருக்கமுடியுமா?

பல நூற்ருண்டுகளின் இலக்கியச் சிந்தனையில் மலர்ந்த பாடல்களில் இந்த 'கொங்குதேர் வாழ்க்கைப்' பாடலும் ஒன்று. மக்கள் இதன் கவிநயத்தையும் கற்பனைச் சிறப்பையும் உணர்ந்து போற்ற இது ஒரு பிரசித்தி பெற்ற பாடலாகப் பரவியிருக்க வேண்டும். ஆனல் காலப்போக்கில் மக்கள் அறிந்து இன்புற இயலாத வகையில் அவசியம் இல்லாத ஒரு கற்பனைக் கதை இந்தப் பாடலைச் சுற்றிப் புனையப்பட்டு நிலைத்துவிட்டது.

**பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதை**

இந்த அழகான பாடலை, இறையனர் என்ற மானிடப்புலவர் அல்ல, இறைவனே, சிவபெருமானே இயற்றியிருக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை எப்படியோ நாளடைவில் எழுந்துவிட்டது. புலவர் பெயர் இறையனர் என்பதால் இறைவன் என்று ஆக்கிவிட்டார்கள் போலும்! புனையப்பட்ட கதையோ பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஒன்று.

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகச் செய்யுள் ஒன்றிலும் இதைப்பற்றி ஒரு குறிப்பு வந்துவிட்டது.

மின்காட்டுக் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலி சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளி ஞேன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்று
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவன்என் சிந்தை யானே.

திருநாவுக்கரசர் வாழ்ந்து சமயத்தொண்டு செய்த காலம், சமயப்பூசல்கள் மலிந்த காலம். சமயத்தைச் சார்ந்து இலக்கியம் வளரத் தலைப்பட்ட காலம். அவருடைய பாட்டில், 'நன்பாட்டுப்புலவனுய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினன்' என்ற வரைக்கும் இருக்கிறதே அல்லாமல், வாதம் விவாதம் சர்ச்சை முதலியவைகள் நிகழ்த்திஞர் என்று இல்லை. 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகைப் பாடலைப் பற்றிப் பேச்சே இல்லை.

ஆனல் கல்லாடம் இயற்றிய கல்லாடர்,

பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
'கொங்குதேர் வாழ்க்கை' செந்தமிழ் கூறி
பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி
என்னுளம் குடிகொண்டு இரும்பயன் அளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணைஎம் பெருமான்

என்று தம்முடைய கல்லாடத்தின் இறை வணக்கப் பாட்டில் 'கொங்குதேர் வாழ்க்கை'ப் பாடலையும் கதையில் சேர்த்திருக்கிருர்.

இப்படியாக 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடல் தருமி என்ற அந்தணச் சிறுவன் ஆயிரம்பொன் பரிசு பெறுவதற்குச் சிவபெருமானே இயற்றிய பாடல் என்ற எண்ணம் ஊறி ஊறி, பின்பு, பரஞ்சோதி முனிவர் மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப்பற்றிப் பாடிய திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் விரிவாக இடம் பெற்றது.

### வேறு தலைவன்; வேறு தலைவி

இந்தப் புராணத்தில் சங்க இலக்கிய காலத்துத் தலைவனும் தலைவியும் மறைந்து, மதுரையை ஆண்ட மன்னர் மன்னன் வங்கிய சூடாமணி மாறன் என்ற பாண்டியனும் அவனுடைய அரசியும் சோலையில் உலாவுகிருர்கள். அப்போது, மன்னன் அதுவரை அறியாத ஓர் அபூர்வ நறுமணம் கமழ்கிறது. ''ஆ, இது என்ன வாசனை? என்ன ஆச்சரியம்! எந்தப் பூவின் பரிமள கந்தமோ!'' என்று பிரமித்து, பின்னர் அந்த அபூர்வ நறுமணம் அரசியின் கூந்தலிலிருந்து தான் வந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிருன். உடனே அவன் உள்ளத்தில் ஓர் ஐயப்பாடு எழுகிறது. அதாவது அரசியின் கூந்தலிலிருந்து கமழும் இந்தப் புதுவித நறுமணம் இயற்கை மணமா? அல்லது செயற்கை மணமா? என்ற ஐயப்பாடு.

அந்த ஐயத்தைத் தீர்ப்பவருக்கு ஆயிரம் பொன் பரிசு தருவதாக மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் மூலம் அறிவிக்கிருன் பாண்டிய மன்னன் வங்கிய சூடாமணி மாறன்.

ஆலயத்தில் பூசை புரிந்துவரும் தருமி என்ற அந்தண இளைஞன் கடவுளையே தனக்கு உதவி செய்யுமாறு வேண்டுகிருன்; பாண்டியமன்னன் தரும் பரிசாகிய ஆயிரம் பொன்களைக் கொண்டு திருமணம் செய்துகொள்ள விரும்புகிருன்.

தந்தை தாயிலேன்; தனியன் ஆகிய
மைந்த னேன்; புது வதுவை வேட்கையேன்;
சிந்தை நோய்செயும் செல்லன் தீர்ப்பதற்கு
எந்தை யேஇது பதம்என்று ஏத்தியே.

இந்த விண்ணப்பத்தைக் கேட்டலும் இறைவன் 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் பாடலை இயற்றி அவனிடம் தருகிருர். பாண்டிய மன்னன் உள்ளத்தில் உற்ற ஐயப்பாட்டை, அரசியின் கூந்தலினின்று கமழும் நறுமணம் இயற்கை மணமா அல்லது செயற்கை மணமா என்ற ஐயப்பாட்டைத் தீர்த்து அது இயற்கை மணம்தான் என்று கூருமற் கூறும் விடை அடங்கியுள்ள பாடல் அது:

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ யறியும் பூவே?''

தருமி இந்தப் பாடலை சங்கத்தாரிடம் கொண்டு போய்க் கொடுக்கிருன். சங்கப்புலவர்களாலும் வங்கிய சூடாமணி மாறனுலும் இந்தப்பாடல் பரிசுக்கு உரியது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, தருமி ஆயிரம் பொன்னைப் பெறப்போகும் சமயத்தில் சங்கத்தலைவர் நக்கீரனர், 'கொங்கு தேர் வாழ்க்கைப் பாடலில் குற்றம் உளது' என்று கூறிப் பரிசு அளிப்பைத் தடுத்து விடுகிருர். ஏமாற்றம் அடைந்த தருமி இறைவனிடத்தில் வந்து முறையிடுகிருன்:

வறுமைநோய் பிணிப்பப் பன்னுள்
வழிபடும் அடியேன் நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று
பேசிலேன்; யார்க்கும் மேலாம்
கறைகெழு மிடற்ருேய் நின்றன்
கவிக்குற்றம் சில்வாழ் நாள்சிற்-
றறிவுடைப் புலவர் சொன்னுல்
ஆர்உனை மதிக்க வல்லார்?

தருமியும் 'நறியவும் உளவோ?' என்ற கேள்வியைப் போல, 'ஆர் உன்னை மதிப்பார்கள்?' என்ற கேள்வியை விடுக்கிருன்.

''இறைவனே, எனக்குப் பரிசு கிட்டவில்லை என்பதற்காகச் சொல்லவில்லை. ஆனுல் சில நாட்களை வாழ் நாட்களாக உடைய சிற்றறிவுள்ள புலவர், நீ இயற்றிய பாடலுக்குக் குற்றம் சொல்லல் ஆயிற்றே'' என்று இரங்கியதும் இறைவனுகிய சுந்தர விடங்கன் ஒரு புலவர் உருக்கொண்டு சங்கத்துக்கு எழுந்தருளி ''நம் கவிக்குக் குற்றம் சொன்னவர் யார்?'' என்று வினவுகிருர்.

சங்கத் தலைவர் நக்கீரனர் அஞ்சாமல், ''நானே குற்றம் சொன்னேன். பாடலில் சொற்குற்றம் இல்லை; ஆனுல் பொருட் குற்றம் உளது'' என்கிருர்.

''பொருட் குற்றம் என்ன?'' என்று கேட்கிருர் இறைவன்.

''அணிந்து கொள்ளும் மலரால் அல்லாமல் கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லை'' என்று சொல்லுகிருர் சங்கத்தலைவர்.

மேலும் வாதம் தொடர்கிறது. இயற்கை மணம் உண்டு என்ற கொள்கையை நிலைநிறுத்தப் பார்க்கிருர் இறைவன்.

ஆனுல் நக்கீரரோ, ''எந்தப் பெண்டிரானுலும்-மானிடப் பெண்டிராயினும் தெய்வப் பெண்டிராயினும்-கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை. நான் வழிபடும் தெய்வமாகிய திருக்காளத்தியில் உறையும் சிவபெருமானின் பாகத்தமர்ந்த உமாதேவிஞானப் பூங்கோதையின் கூந்தலிலும் செயற்கை மணமே'' என்று சாதித்து விடுகிருர்.

இறைவன் வெகுண்டு தாம் இன்னுர் என்பதனை நக்கீரருக்கு அறிவிக்க வேண்டி தமது நெற்றிக் கண்ணைச் சற்றே திறந்து காட்டுகிருர். ஆனுல் நக்கீரரோ சற்றும் அஞ்சாமல், ''இந்திரனைப் போல்

நீர் உடல் முழுவதும் கண்களைக் கொண்டாலும், நீர் இயற்றிய பாடல் குற்றம் குற்றமே'' என்று சொல்லி விடுகிறார்.

சற்றே திறந்த நெற்றிக் கண்ணில் சினம் பொங்கிச் செந்தீ பாய, அது பொறுக்கமாட்டாமல் நக்கீரர் பொற்றாமரைக் குளத்தில் விழுந்து விடுகிறார்.

இந்தக் கதையில் இன்னொரு புதுமை என்ன வென்றால் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளை யாடற் புராணத்துக்கு மூலநூல் ஆலாசிய மான்மியம் என்ற ஒரு சமஸ்கிருத நூல் என்று சொல்லப்படுகிறது. வடமொழி நூலாகிய ஆலாசிய மான்மியத்தில் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற தூய தமிழ்ப் பாடல் இடம் பெற்றது எங்ஙனமோ ?

இவ்வாறு ஒரு சிறந்த சங்க இலக்கியப் பாடலின் பொருளைச் சிதைத்தது போக, கதை இன்னும் தொடர்கிறது. பெண்டிர் கூந்தலில் உள்ள மணம் இயற்கை மணமா அல்லது செயற்கை மணமா என்ற ஐயப்பாடு தீர்ந்த பாடில்லை. ஆனால் இறைவன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டித் தண்டித்து, பின்னர் அவரை மன்னித்து விட்டதாகத் திருவிளை யாடற் புராணம் கூறுகிறது. அதிலிருந்து பிழை செய் தது நக்கீரரே என்று ஆகிறது.

ஆனால் மனோன்மணீயம் இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தமிழ் மொழியின் பெருமையை உணர்த்த ஒரு கேள்விக்கணை தொடுக்கிறார்:

ஒருபிழைக்கா அரனார்முன்
உரைஇழந்து நிற்பரேல்,
அரியதுஉன் இலக்கணம்என்று
அறைவதும்அற் புதமாமே !

இங்கே இறைவனுக்கும் நக்கீரருக்கும் நிகழ்ந்த இலக்கிய சர்ச்சையில் பிழை செய்தது சிவபெரு மானே என்று அடித்துச் சொல்கிறார் பேராசிரியர். 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று பழமொழி உண்டாகும் அளவுக்குக் கதை உரம் பெற்று விட்டது !

**அர்த்தம் இல்லாத கதை**

ஒரு சிறந்த பாடலை அதுவும் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னே இயற்றப்பட்டு ஒரு நாகரிகத்தின் அளவுக்குச் சான்றாக அமையும் பாடல்களில் ஒன்றை, மனம்போன போக்கில் புனைந்த ஒரு கதையில் புகுத்தி அந்தப் பாடல் சிறப்பைவிட அர்த்தம் இல்லாத கதையைக் கொண்டு மக்கள் மனத்தைத் திரிப்பதனால் இலக்கியம் சிறப்படைய முடியுமா என்பதைத் தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்கள் சிந்திக்க வேண்டியது இன்றியமையாததல்லவா ?

மேற்சொன்னது எடுத்துக்காட்டாக ஒன்று. இப்படிப்பட்ட அர்த்தமில்லாத கதைகள் எண்ணற்ற புராணங்களில் மலிந்து கிடக்கின்றன. இவையாவும் சங்க இலக்கிய காலத்துக்குப்பின் தோன்றியவை. இத்தகைய கதைகள் இலக்கியம் செம்மையான முறையில் வளர்ந்தோங்க உதவிசெய்யவில்லை. இறை வனைச் சம்பந்தப்படுத்திய கதைகளுக்குச் சமய வல்லு நர்கள் வேண்டுமானால் உள்ளர்த்தம் ஏதாவது சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இலக்கியம் என்ற துறையில் இறைவன் திருப்பெயரைக் கொண்டுவந்து சேர்ப்பது முறை ஆகுமா என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

உலகம் புகழும் திருக்குறளை இயற்றிய திருவள்ளு வரும் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் இப்படிப்பட்ட புனைகதைகளுக்குத் தப்பினார் இல்லை. திருவள்ளுவர் பிறப்பும், கம்பரின் இளமைக்கால வரலாறும் அறிவுக்குச் சற்றும் பொருந்தாதவை என்பதை விளக்கவேண்டியதில்லை. அவ்வாறே திருக்குறளும் மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மிதந்த சங்கப் பலகையில் அமர்ந்ததுவும்.

சொல்லழகும் பொருளழகும் உருவமும் அணியும் அமைந்த எத்தனையோ தனிப்பாடல்களுக்கு இவ்வாறு கட்டுக் கதைகள் புனையப்பட்டு நாளடைவில் அந்தப் பாடல்களின் நயத்தை மக்கள் உணர்ந்து இன்புற விடாமல், அந்தப் புனைகதைகளே மனத்தை தம் வயப்படுத்திக் கொண்டிருக்க விடுவது முறை அன்று.

இக்கதைகள் ஏதோ நாடோடிக் கதைகள் செவி வழிக்கதைகள் என்று பாமர மக்களிடையே மட்டும் பரவி இருக்குமானால் அதைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தவேண்டியது இல்லை. ஆனால் பெரிய மேதை களும் இவைகளைப் பாராட்டி இவைகளுக்கு இலக்கிய உயர்வு கொடுக்கும் ஒரு நிலை உள்ளது என்றால், உண்மை என்ன என்பதை ஆய்ந்து உயர்ந்த சிந்தனையிலும் சிறந்த கற்பனையிலும் முயற்சியிலும் வாழ்க்கையை ஆதாரமாகக்கொண்டு எழுந்த படைப் புக்களுக்கு அதனதன் உரிய இடத்தைக் கொடுக்க வேண்டியதும் மனம் போன போக்கில் புனையப்பட்டு இலக்கியம் என்ற உருவில் உலாவும் கதைகளை வன்மையாகக் கண்டிக்கவேண்டியதும் தமிழ்ப் பற்றுள் ளவர்களின் தலை சிறந்த கடமையாகும்.

*With best compliments from:*

# WHEELS INDIA LIMITED

PADI

**MADRAS-50.**

போன்: 4093

எமது தொழிற்சாலையில் தயாராகும்

L. R. சர்பத் & கடலை மிட்டாய்

முதல்தரமானவை

தயாரிப்பாளர்:

M/s. L. ராமையா நாடார்

L. R. சர்பத் & கடலை மிட்டாய் கம்பெனி

32, சின்னக்கம்மாளத் தெரு, திருச்சி-8.

பிராஞ்சு: தஞ்சாவூர்.

*With best compliments from:*

**VIJAYA MINERALS CORPORATION**

26, MAILAN CHANDAI, TIRUCHI.

Manufacturers of:

ACTIVE CARBON

GRAPHITE CARBON ETC.

# ஈழத்தின் கிராமிய நாடகங்கள்

கலாநிதி சு. வித்தியானந்தன்
(இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை, இலங்கை)

எமது நாட்டின் நாகரிகத்தையும் பண்பையும் உயிரையும் ஓம்பி வளர்த்த பெருமை கிராமங்களுக் குரியது. இயற்கைக்கு மிக அருகாமையில் இருப்பதன் காரணமாக வாழ்வு என்னும் உயிருற்றுடன் கிராமங் கள் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கிராமங்களில்வாழும் மக்கள் வளர்த்த அழகுக் கலையே கிராமிய நாடகம். இது பல்லாயிரக்கணக்கான பொது மக்களின் விலை மதிக்க முடியாத சொத்து; அவர்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளியிடும் சாதனம். அவர்களின் உள்ளத்துக்கு அழகையும் இன்பத்தை யும் அளிக்கும் ஆற்றல் இதற்குண்டு. கிராமிய நாடகத் திற்குத் தேசிய முக்கியத்துவம் உண்டு; அது நாட்டின் கலாசார பாரம்பரியத்தின் முக்கிய அம்சம். நாட்டு மக் களின் உள்ளக் கருத்து, குணச் சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கைமுறை முதலியவற்றை எடுத்து விளக்குவது அக்கலை.

ஆனால், இக்காலத் தமிழ்ச் சமூகம் தனது பழைய கலைச் செல்வங்களை மறந்து விட்டது; தன் பெருமை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகின்றது. மறக்கப்பட்டு மறைந்து கொண் டிருக்கும் கலைகளில் ஒன்று, மக் கள் வளர்த்த கிராமிய நாடகக் கலை. மேலைத் தேயப் பண்பாடு கல்வி ஆகியவற்றின் தாக்குத லால் பல பழைய கிராமிய நாட கங்கள் இன்று கைவிடப்படுகின் றன; சில இறந்து விட்டன. இவை பழங்காலத்து மோடி யன, பண்பாடற்றன, இக்கால வளர்ச்சியோடு முரண்பட்டன எனக் கொண்டு. இவற் றின் கலை மதிப்பையோ, நாடக உலகில் இவற்றிற்குரிய முக்கியத்துவத்தையோ அறியாது இவற்றைப் புறக் கணிக்கின்றனர் மக்கள்.

பல நூற்றாண்டுகளாக ஈழத்திலே யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலே கிராமிய நாடகங்கள் ஆடப்பட்டுவந்தன. யாழ்ப் பாணத்திலும் சிலாபத்திலும் இவற்றை ஆடுவோர் தொகை இன்று மிகக் குறைவென்றே கூறவேண்டும். ஆனால், மட்டக்களப்பிலும் மன்னாரிலும் பொருளா தாரம் இன்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது; மக்களின் சமூக வாழ்க்கை சமயத்தோடு பின்னிக் கிடக்கின்றது. எனவே, மன்னார்ப் பகுதியிற் கிறித்தவ மத அடிப்படையிற் பாடப்பட்ட வட பாங்கு, தென்பாங்கு நாடகங்களும், சபாக்களும் வாசாப்புக் களும் ஆடப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பிலே தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும் விலாசங் களும் ஆடப்படுகின்றன. ஈழத்தில் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் ஆடப்படும் கிராமிய நாடகங்களைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாடக மேடை

கிராமிய நாடகங்களை ஈழத்தில் நாட்டுக்கூத்து என்றே வழங்குவர். இவை பெரும்பாலும் கோயில் களின் முன் நடிக்கப்படுகின்றன. கிராமிய நாடகம் ஆடுவதற்கென அமைக்கப்படும் மேடை, கூத்துக் களரி என அழைக்கப்படும். இது 40 அடி விட்டமுள்ள வட்டமாக இருக்கும். 3 அடி உயரத்திற்கு வட்டம் நிரம்ப மண்ணை உயர்த்தி மண் சிதருமல் வளைத்து ஓலை களினாற் கட்டி மேடையாக்குவர். பின்பு அதன் மீது புல்லு (புல்லாங்கத்தை) வெட்டிப்போட்டு ஆடுவதற்கு ஏற்ப இறுக்கமான களரியாக அமைப்பர். வட்டத்தைச் சுற்றிப் பதினாலு கம்புகள் (கால்கள்) நாட்டப்பட்டு உச்சியில் அவை வளைத்துக் கட்டப்படும். அதன் மேற் குடை விரித்ததுபோலச் சீலைகளைக் கொய்து தொங்க விடுவர். மேடைக்கு அடைப்புக் கிடையாது. எல்லாப் பக்கமும் திறந்தே இருக்கும். களரியை வளைத்திருந்து மக்கள் கூத்தாட்டம் பார்ப்பர். இரவிரவாக நாடகம் நடிக்கப்படுவதாற் சிலர் பாய் தலையணையுடன் வந்து சேருவர். இடையிடையே சிறு பாத்திரங்கள் நடிக்கும் போது சிலர் வெளியே சென்று உணவு அருந்துவதும் படுத்துத் தூங்குவதும் உண்டு.

ஒவ்வொரு காலுக்கும் இடையில் ஒவ்வொரு வாழைக் குத்தி நாட்டித் தேங்காய்ப் பாதியை அதன் மேல் வைத்துத் தேங்காய் எண்ணெயில் நனைத்த சீலைத் திரணையைத் தேங்காய்ப் பாதியினுள் வைத்து

விடிய விடிய எரிய வைப்பர். அந்த ஒளியிலேயே கூத்து நடைபெறும். சில இடங்களில் இருவர் களரியிலே தீப்பந்தங்களோடு தோன்றி, நடிகர் ஆடும் போது அவர்க்கு முன்னும் பின்னும் சென்று தீப்பந்தம் பிடிப்பது வழக்கம். மக்கள் தரையில் வீற்றிருப்பதனுற் களரிக்குத் திரைச்சீலை கிடையாது. ஆனல் ஒவ்வொரு பாத்திரத்தின் வரவுக்கும் சீலை பிடிப்பார்கள். அதனை அவ்வூரைச் சேர்ந்த இரு சலவையாளர் செய்வர். அது 'திரை பிடித்தல்' எனப்படும். உடுப்பு அணிந்தவரை உடுப்புப்போட்ட இடத்திலிருந்து களரிக்கு அழைத்து வருகையில் அவருக்கு முன்பு தீவட்டி பிடித்துக் கோலாகலமாகக் கொண்டுவருவர். திரையைப் பிடித்தவுடன் வரவுக்குரியவர் அதன் பின்னுல் நிற்பர். அப்பொழுது அவரின் உறவினர் வெடி. மத்தாப்பு முதலியன கொளுத்துவர்.

இந்தச் சந்தர்ப்பத்திற்குன் சால்வை கட்டுதல், மோதிரம் கொடுத்தல் முதலியன நடைபெறும். முதன் முதலாக ஆடுகின்ற போதே இவை இடம்பெறும். ஒவ்வொரு புது வரவுக்கும் திரை பிடித்து இவ்வாறு செய்வர். பின் கூத்து கதைக்கேற்ப நடைபெற்றுக் கொண்டு போகும். கூத்துப் பழக்கி நடத்துபவர் அண்ணுவியார் எனப்படுவர். இவரே பெரும்பாலும் மத்தளம் அடிப்பர். இவர் களரியின் நடுவிலே நின்று பாத்திரங்கள் ஆடும் போது அவர்களின் பின்னுற் சென்று மத்தளம் அடிப்பர். சல்லரிக்காரர், ஏடுபடிப்போர், பக்கப்பாட்டுக் காரர் ஆகியோரும் அண்ணுவியாரோடு நடுவில் நிற்பர். இவர்கள் எல்லோரையும் 'சபையோர்' என்றழைப்பது மரபு. பாத்திரங்கள் ஒன்று சேர்ந்து களரியிலே தோன்றுவது கொலு எனப்படும். இராமர் கொலு, தருமர் கொலு என்ற பிரயோகங்கள் இதனை விளக்கும். பாத்திரத்தின் முதற்ருேற்றம் வரவு எனப்படும். அப்போதுதான் வரவுப் பாட்டும் வரவு ஆட்டமும் இடம்பெறும்.

கிராமிய நாடகத்தில் இசை, ஆட்டம், உரையாடல் ஆகிய மூன்றும் இடம் பெறும். ஆயினும், பாட்டும் ஆட்டமுமே முக்கியமானவை. கதைத் தொடர்ச்சிக்கும் விளக்கத்திற்குமே இடையிடையே உரையாடல் இடம் பெறுகின்றது. ஆட்டமே சந்தர்ப்பங்களையும் பாத்திரங்களின் பண்புகளையும் கதைப் போக்கினையும் விளக்குகின்றது. கிராமிய நாடகம் ஆட்டத்தை அடித்தளமாகக் கொண்டது. கூத்தாடினுன், நாடகம் ஆடினுன் என்ற தொடர்ப் பிரயோகங்கள் நாட்டுக் கூத்துக்கும் ஆட்டத்திற்கு முள்ள தொடர்பைக் காட்டுகின்றன. மட்டக்களப்பு நாட்டுக் கூத்தில் இன்றும் ஆட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. மத்தள அடிக்கும் சல்லரியின் இசைக்கும் ஏற்ப நடிகர் ஆடுவர். நாட்டுக் கூத்துக்கு மத்தளம் இன்றியமையாதது. மத்தள அடியே பாத்திரங்களின் ஆட்டமாற்றங்களையும் இட மாற்றங்களையும் காட்சி மாற்றங்களையும் குறிக்கின்றது. மத்தளம் இல்லாது கூத்தில்லை; அதே கூத்தின் உயிர்.

கூத்து முடிந்ததும் கூத்தாடிய அத்தனை பேரும் களரிக்கு வந்து நின்று சாமி மேற் பாட்டுப் பாடி ஆடுவர். அண்ணுவியார் வாழி சொல்லி முடித்தவுடன், தொட்டுக்கும்பிடு, தொட்டுக்கும்பிடு என்று மத்தளத்தில் அடித்து வாயாற்சொல்லுவர். அதன் பின் அனைவரும் தாம் கூத்தாடிய களரியைத் தெய்வமாக எண்ணித் தொட்டுக் கும்பிட்டுவிட்டுச் செல்லுவர். அதன் பின், ஊர்க்கோயிலுக்குச் சென்று பத்துப் பதினைந்து நிமிடம் கூத்திலே வந்த சில கட்டங்களை ஆடுவர். பின், முதலில் ஊர்ப் பெரிய மனிதர் வீடுகளில் ஆடுவர் ; தொடர்ந்து ஊர் முழுவதும் வீட்டுக்கு வீடு ஆடுவர். இது, 'வீட்டுக்கு வீடு ஆடுதல்' எனப்படும்.

### கூத்துப் பழகும் மரபு

கூத்துப் பழகுவது பற்றிய மரபும் கவனிக்கத்தக்கது. அதிகமாக அரிவி வெட்டு முடிந்த பின்பே கூத்து ஆரம்பமாகும். வேளாண்மை வெட்டி முடிந்ததும் ஆரம்பிக்கும் கூத்துக்கு ஆட்களைத் தெரிவது 'சட்டம் கொடுத்தல்' எனப்படும். விரும்புபவர்களை அழைத்துப் பாடச் சொல்லி, குரலுக்கும் தோற்றத்திற்குமேற்பப் பாத்திரங்களை அமைப்பர். பாத்திரத்திற்குரிய பாடங்கள் ஓலையில் எழுதப்பட்டுப் பாத்திரத்திற் குரியவரின் கையில் ஊரிற் பெரியவர் ஒருவராற் கொடுபடும். தொடக்கத்தில் ஒவ்வொரு இரவும் 10 மணிவரை கூத்துப் பழகுவர். 4, 5 மாதம் பழகிய பின் சதங்கை அணிதல் நடைபெறும். இது ஒரு விழாவாகக் கொண்டாடப்படும். இவ்விழாப் பகலிலேயே நடைபெறும். முதன் முதலிலே சதங்கை அணியும் இவ்வைபவத்திற்கு ஏனைய கிராமங்களிலுள்ளவரையும் அழைப்பர். காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இது நடைபெறும். இதன் பின் கிழமைக்கு ஒரு தடவை பகலிற் சதங்கை அணிந்து ஆடுவர். இது 'கிழமைக் கூத்து' எனப்படும்.

அரங்கேற்றத்திற்கு ஒரு கிழமைக்கு முன் உடுப்பு அணியாமல் முழுக் கூத்தினையும் இரவு முழுவதும் ஆடுவர். இது 'அடுக்குப் பார்த்தல்' எனப்படும். இவ்வளவும் நிகழ்ந்த பின்னர், குறிப்பிட்ட நன்னுளில் அரங்கேற்றம் நடைபெறும். இது முதலாம் களரி எனப்படும். சில நாட்களுக்குப் பின் இரண்டாம் களரி இடம் பெறும். இரண்டாம் களரிக்குப் பின் ஊருக்குள் ஆடும் வழக்கம் இல்லை. கூத்து முடிந்தும், மணமாகாதவர், மணம் முடிப்பதுண்டு.

### தென்மோடி, வடமோடி

மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் கிராமிய நாடகம் தென்மோடிக் கூத்து, வட மோடிக் கூத்து, விலாசம் என மூவகைப்படும். இவற்றுள் இப்பொழுது தென் மோடி, வடமோடி நாடகங்களே பெரு வழக்

கிலுள்ளன. தென் மோடிக்கும் வட மோடிக்கும் கதைப் போக்கு, இசை, ஆடல், உடை முதலிய வற்றில் வேறுபாடு உண்டு. வடநாட்டுப் புராதன இதி காசக் கதைகளைக் கொண்டவை வட மோடி நாடகங் கள். இராம நாடகம், தர்மபுத்திர நாடகம், பப்பிர வாக நாடகம், பதினெட்டாம் போர், குருக்கேத்திரன் போர், சூர சம்மாரம், குசலவ நாடகம், பாண்டவர் வனவாசம், கர்ணன் போர் போன்றவை இன்று ஈழத் தில் ஆடப்படும் வட மோடி நாடகங்கள். இவை போர் செய்து வெற்றி பெறுவதைக் கூறுவன. இவற்றில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகள் விரவி வரும். ஈழத்தில் நடிக்கப்படும் தென்மோடி நாடகங்களில் பவளவல்லி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வாளபிமன் நாடகம், நொண்டி நாடகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை பெரும் பாலும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கூறுவனவாய், காதற் சுவை பயந்து, காதல் கைகூடுவதோடு முடி கின்றன. இவற்றில் நகை, வியப்பு போன்ற சுவை களே பெரும்பாலும் வரும். மேலும், தென் மோடியின் பழைய முறைப்படியே இசை அமைந்திருக்கும்.

ஆட்டத்திலும் பாட்டிலும் இரு மோடிக்கும் வேறு பாடுண்டு. தென் மோடி ஆட்டங்கள் வட மோடி ஆட்டங்களிலும் நுணுக்கமானவை; கடினமானவை. இதனுலே தென் மோடி நடிகர் வரவு—ஆட்டம் ஆடி யதும் களைத்துப் போவதனுல், வரவைக் குறிக்கும் பாட்டை அண்ணுவியார் அல்லது பக்கப் பாட்டுக் காரர் பாடுவர். வடமோடி ஆட்டம் நுணுக்கமற்ற காரணத்தினுலே வரவு—ஆட்டத்தின் பின்னர் தமது வரவுப் பாட்டை நடிகரே பாடுவர். தென் மோடியிற் பாட்டுக்களை இழுத்துப் பாட, வட மோடியிற் சாதா ரணமாகப் படிப்பர். வசனங்களும் இவ்வாறே தென் மோடியில் இழுத்தும் வட மோடியிற் சாதாரணமாக வும் சொல்லப்படும் வடமோடியில் நடிகர் ஒரு பாட் டைப் படிக்கப் பக்கப் பாட்டுக்காரர் தொடர்ந்து அதனை முழுதாகப் படிப்பர். தென் மோடியிற் கடை சிப் பகுதியை மட்டும் பிற் பாட்டுக்காரர் தொடர்ந்து படித்துவிட்டுப் பாட்டு முழுவதற்குரிய தருவைப் பாடு வர். கூத்துப் பாட்டுக்களைப் பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவிதச் சொற்கோப்பே தரு. உதாரணமாக,

> பதினுறு வயதுமக னுருவம் - அவன்
> பாவையரோ டனுபவிக்கும் பருவம்

என்ற பாட்டுக்கு,

> நன்னநன்ன நானநன்ன நானு - நன்ன
> நானநன்ன நானநன்ன நானு

என்று தரு அமையும். இவ்வாறு தரு பாடப்படும் போது, தருவின் தாளத்திற் கேற்ப நடிகர் ஆடுவர். தருப் பாடும் இவ்வழக்கம் தென் மோடிக்கே யுண்டு. வட மோடியில் இல்லை.

ஒவ்வொரு மோடிக் கூத்துக்கும் உடையும் வேறு வேருக அமையும். தென் மோடியார் உடல் வருந்த வளைந்து ஆடுவது வழக்கம்; எனவே, அவர்களின் உடைகள் வட மோடியார் உடையிலும் பாரங்குறைந் தனவாய் இருக்கும். வட மோடி அரசருடைய முடி கெருடமாகவும், தென் மோடி அரசருடைய முடி பூ முடியாகவும் இருக்கும். கெருடம் பலாமரம், நச்சு மரம் ஆகிய மரங்களைக் கோதிச் செய்யப்படும். அதன் உச்சியில் ஒரு குடை இருக்கும். அதற்குச் சந்திர வட்டக் குடை என்று பெயர். கெருடத்தில் யானை, யாளி, அன்னம் ஆகியவற்றின் தலைகள் உருவமாக அமைக்கப்படும். வட மோடியில் வில்லும் அம்பும், தண்டாயுதமும், கட்டாரியும் ஆயுதங்களாக அமை யும். தென் மோடியில் வாள் ஒன்றே ஆயுதமாகும், வட மோடியார் அணியும் உடுப்பு பெரும்பாலும் கரப்பு உடுப்பாகும். இது வில்லுடுப்பு எனவும் படும். முழு உடுப்பு ஐந்து தட்டினைக் கொண்டதாகவும் அரை உடுப்பு மூன்று தட்டினைக் கொண்டதாகவும் இருக் கும். ஒவ்வொரு தட்டாகச் செய்து பின்னர்ச் சீலை யில் ஒட்டிக் கொள்வர். ஒவ்வொரு தட்டுக்கும் ஒவ் வொரு கம்பு வளையம் வைத்துப் பொம்மி நிற்கச் செய்வர்.

## தாளக்கட்டு

ஒவ்வொரு பாத்திரத்தின் வரவும் நடைபெறும் போது வெவ்வேறு வகையான தாளங்களை மத்தளத் தில் இசைப்பர். அத்தாளங்கள் வாயாற் சொல்லப் படும் போது, பத வரிசைகள் தாளக் கட்டு எனப்படும். ஆட்டத்திற்குரிய தாளங்களைச் சொற்கோப்பினுலே தொடுத்து அல்லது கட்டி அமைத்தலே தாளக்கட்டு. தாளக் கட்டின் முதற் பகுதியை நடிகரின் வரவுத் தொடக்கத்திலே எட்டு முறை முதற் பன்னிரண்டு முறை வரை அண்ணுவியார் திருப்பித் திருப்பித் படிக்க, அதற்குரிய அபிநயம் காட்டி நடிகர் நடிப்பர். இத்தாளக் கட்டுக்களுக்கு ஏற்ப ஆடும் ஆட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேருனவை. ஆண் களுக்குரிய ஆட்டங்கள் உலா (நின்ற நிலையிலும் பக்க வாட்டிலும் நடந்து அபிநயம் பிடித்தல்), பொடியடி (மெல்ல மெல்ல முன்நோக்கி ஆடிச் செல்லுதல்), வீசாணம் (வளைந்து வளைந்து பக்கத்திற்குச் சென்று ஆடுதல்), எட்டு (8 என்ற இலக்கத்திற்கு அமைய வளைந்து ஆடுதல்), நாலடி (இரு கைக்கும் திரும்பி முறையே நாலு முறை குதித்து மிதித்தாடுதல்), குத்து மிதி (காலின் முன் புறத்தாலும் குதிக்காலினுலும் மாறி மாறி முறையே 4 முறை குத்தி மிதித்தல்), பாய்ச்சல் (முன்னும் பின்னும் பாய்ந்து ஆடுதல்) முதலியன. தாளக் கட்டுக்கு ஏற்பப் பெண்கள் ஆடும் ஆட்டங் கள் ஒய்யாரம் (நின்ற நிலையிற் கால்களை அகல விரித் துத் தாழ்ந்து இரு கைகளையும் அழகுற முத்திரை பிடித்துக் காட்டுதல்), பொடியடி, வீசாணம், எட்டு, தட்டடி (இருகால்களாலும் தனித்தனி தட்டிக் கை

அபிநயத்தோடு உடலை நெளித்தாடுதல்), அடந்தை (அட தாளம் தொனிக்க ஆடும் துரித ஆட்டம்), குத்து நிலை (நாலடி போட்டுக் குந்தி எழும்புதல்) போன்றவை யாகும். நடிகருடைய ஆட்டச் சிறப்பினைக் காட்டு வன தாளக் கட்டுக்கு ஏற்ப அவர்கள் ஆடும் ஆட்டங்களே.

ஒவ்வொரு பாத்திரத்திற்குமேற்பத் தாளக்கட்டு வேறுபடும். உதாரணமாக, வட மோடியில் அரசன் களரிக்கு வரும்போது,

தகதிகதா தெய்யத் தெய்தெய்
தாத் தெய்யத் தோம் தகதிகதா

என்ற தாளக் கட்டு முதலிற் பாடப்பட்டு எட்டு முறை தொடங்கி 12 முறை வரை உலா ஆட்டம் ஆடப் பாடப்படும். அதன் பின் பொடியடி, வீசாணம், எட்டு முதலிய ஆட்டங்கள் இடம்பெறும். அதன் பின் நடு அரங்கில் ஆடி, இறுதியாக,

தாம் தாம்தக தந்தரிகிடதக
தீந்தாரத் தில்லானு சுந்தரி
தகனக சுந்தரி ததிமிர்த கிடதெய்
தளங்கு தித்தக தகததிங்கிண தோம்
தகததிங்கிணதோம் தந்ததிங்கிணதோம்

என்ற தாளக்கட்டிற்கு ஏற்ப முன் களரியிலும் பக்கங் களிலும் சென்று ஆடுவர். முடிவுறும்போது, 'தகததிங் கிணதோம்' என்ற கடைசித் தாளம் இரண்டு மூன்று முறை மத்தளத்தில் இறுக்கி அடிக்கப்படும். இது 'தாளம் தீர்தல்' எனப்படும். தாளக் கட்டு மட்டக் களப்பு நாட்டுக் கூத்தின் அச்சாணியாகும்.

### நாடக வகைகள்

மன்னூர்ப்பகுதியில் வழங்கும் கிராமிய நாடகங் களின் வகைகளை இங்கு சிறிது நோக்குதல் வேண்டும். அவை மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என இரு வகைப்படும். மாதோட்டப் பாங்கைத் தென் பாங்கென்றும் தென்மெட்டென்றும், யாழ்ப்பாணப் பாங்கை வட பாங்கென்றும் வட மெட்டென்றும் வழங்குவதுண்டு. வட பாங்கிற் கடவுள் வாழ்த்து விருத்தப் பாவிலமையத் தென்பாங்கில் வெண்பாவில் அமையும். தென்பாங்கிற் பாத்திரங்களுக்குச் சபைத் தரு (ஆடல்தரு) கிடையாது. மேலும் தெய்வ வணக் கமும் செயற்படுபொருளும் கதைச் சுருக்கமும் கூறும் தோடையம் என்னும் பாவகை வடபாங்கிலே உண்டு; தென் பாங்கிலே இல்லை. தென் பாங்கில் நாடகக் கதை கவி இன்னிசை மற்றும் பாவகைகளாற் கூறப் படும். தென் பாங்கிற் பாக்கள் பெரும்பாலும் வல்லோசை உடையனவாகவும் வட பாங்கிற் பெரும் பாலும் மெல்லோசை உடையனவாகவும் அமையும்.

தென்பாங்கிற் பாத்திரங்கள் தத்தம் நிகழ்ச்சி முடியப் போய்வரும். ஒரு பாத்திரம் எத்தனை முறையும் போய்வரலாம். ஒவ்வொரு வரவுக்கும் செலவுக்கும் தனித்தனித் தருக்களும் சிந்துக்களும் அவற்றிற்குரிய ஆடல் முறைகளும் உண்டு. உதாரணமாக ஞான சவுந்தரி நாடகத்தில் தருமர் ஏழு தடவையும் பிலேந் திரன் பதினொரு தடவையும் தோன்றுவர். அங்கு ஒவ் வொரு முறை தோன்றும்போதும் தரு, சிந்து, ஆடல் முறைகள் உண்டு. வட பாங்கில் ஒவ்வொரு பாத்திரத் திற்கும் ஒரு வரவேற்பு உண்டு. பாத்திர நிகழ்ச்சி மீண்டும் இருந்தால் வரவில்லாமலும் ஆடல் தரு இல்லாமலும் கலந்து கொள்ளும்.

இந்நாடகங்களின் சுருக்கமாக அமைவன வாசகப் பாக்கள். வாசகப்பா என்ற சொல், வசனம் கலந்த பாட்டு எனப் பொருள்படும். ஒரே கதையை நாடக மாகவும் வாசகப்பாவாகவும் பாடுதல் உண்டு. உதா ரணமாக அந்தோனியார் நாடகம், அந்தோனியார் வாசகப்பா, சந்தொம்மையார் நாடகம், சந்தொம்மை யார் வாசகப்பா, மூவிராசாக்கள் நாடகம், மூன்றிரா சாக்கள் வாசகப்பா எனக் கூத்து நூல்கள் இருப்ப தைக் காணலாம். ஒரே கதையை ஒருவர் மாதோட்டப் பாங்கிற் பாட, இன்னொருவர் யாழ்ப்பாணப் பாங்கிற் பாடுதலுமுண்டு. எண்டிறிக்கு எம்பரதோர் வரலாற் றைக் குருகுல நாட்டுத் தேவர் மாதோட்டப் பாங்கிற் பாடக் கீத்தாம்பிள்ளை யாழ்ப்பாணப் பாங்கிற் பாடினர்.

### சிங்கள மொழியில் தமிழ் நாடகங்கள்

மன்னூர் மாவட்டத்தில் வழங்கும் நாடகங்கள் சிங்கள மொழியினும் காணப்படுகின்றன. அம் மொழியிலும் வழங்கும் 'நாடகம' எனும் நாடக முறை இந்நாடகங்களின் அமைப்பினைப் பின்பற்றியதே. தென்பாங்கு வடபாங்கு என்ற நாடக முறை சிங்கள நாடகங்களிற் காணப்படாதபோதும், நாடக அமைப் பும் பாவகைகளும் மன்னூர்ப் பகுதிக் கூத்துக்கள் போன்றவையே. விருத்தம், இன்னிசை, கலிப்பா, கவி, கொச்சகம், வெண்பா, தோடையம் போன்ற பாக்களும் பாவினங்களும் சிங்கள நாடகங்களிலும் அதே பெயர்களுடன் வழங்குகின்றன. தமிழிலே உள்ள எஸ்தாக்கியார் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசவுந்தரி முதலியன, ஸ்தாக்கியார், ராஜ துங் கட்டுவ, ஞானசவுந்தரி என்ற பெயர்களிலே, தமிழ் நாடகங்களின் மொழி பெயர்ப்புக்களாக, அமைந்துள்ளன.

தென்னிந்தியக் கிராமிய நாடகங்கள் ஈழத்துக் கிராமிய நாடகங்களுடன் சில அம்சங்களிலே தொடர் புடையன. கன்னட தேசத்து யக்ஷகான நாடகத் திற்கும் மட்டக்களப்பு வட மோடி நாடகத்திற்கும் பல ஒற்றுமைகள் உள. ஒப்பனை, உடை, விறுவிறுப்பு ஆட்டம், களரி போன்றவை இரு வகை நாடகத்திலும் ஒத்திருக்கின்றன. வடமோடி அண்ணாவி அங்குள்ள பாகவத என்பவரை ஒத்திருக்கின்றார். அங்கும் அவரே

வாழ்த்துப் பாடிப் பாத்திரங்களை அறிமுகப்படுத்துவர். நடிகர் வரவுக்கு அங்கும் இந்த மாதிரிச் சிலையைத் திரையாகப் பிடிப்பர். தீவட்டி ஒளியே அங்கும் பாத்திரங்களைக் களரியிலே தெரியவைக்கின்றது. அங்கும் முற்காலத்திற் பாத்திரங்களுக்கு முன்பும் பின்பும் தீவட்டி பிடித்தனர். மகாபாரத இராமாயணக் கதைகளே நாடகங்களுக்குக் கருவாக அங்கும் அமைந்தன.

கதகளிக்கும் வடமோடிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. வடமோடி போலவே கதகளியும் ஆட்டம், இசை, அபிநயம் ஆகியவற்றின் மூலம் கதையை உணர்த்துகின்றது. வடமோடி போலவே வீரம் கோபம் போன்ற சுவைகள் மூலம் இதிகாசக் கதைகளைக் காட்சியாகக் கதகளி அமைக்கின்றது. உடையலங்காரம், தயாரிப்பு, களரி அமைப்பு, ஒளி அமைப்பு முதலியவற்றிலும் ஒப்புமையைக் காணலாம்.

தமிழகத்திலே தெருக்கூத்துப் பல்லாண்டாக இருந்து வந்தும் இப்போது வழக்கற்றுப் போகின்றது. வீதிநாடகம் எனவும் வழங்கும் இத் தெருக்கூத்து இப்போது கிராம வீதிகளின் மத்தியிலே ஆடப்படுவது வழக்கம். தெருக் கூத்து ஈழத்துக் கிராமிய நாடகங்களைக் கதைப் பொருளிலும் வேறு அம்சங்களிலும் ஒத்திருந்தபோதும் பொது மக்கள் வாழ்க்கையோடு தொடர்பற்றுப் போய்விட்டது. ஆனால், ஈழத்தில் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் கிராமிய நாடகம் இன்றும் பொது மக்கள் வாழ்க்கையோடு பின்னிக் கிடக்கின்றது; அவர்களின் அழகுக் கலைகளில் ஒன்றாக விளங்குகின்றது.



## கதைச் சிறப்பா? காவியச் சிறப்பா?

ராமாயணம் புண்ணிய கதையாகையால் கதையை உத்தேசித்துப் பக்தர்கள் அதற்குத் தனிமரியாதை செலுத்துகிறார்கள் என்று சொல்லப்படலாம். ஆனால் வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, ஆரியப்ப புலவர் என்னப்படுகிற அனதாரிப் புலவரின் பாகவதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, கச்சியப்பருடைய ஸ்காந்தபுராணத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது யாருக்கும் கியாதி வந்து நாம் கேட்டதில்லை. ஆகவே இந்தப் புகழும் புகழிலுள்ள விருப்பமும் கம்பன் எழுதிய காவியத்தின் சிறப்பைத்தான் காட்டுகின்றனவே ஒழிய கதையின் சிறப்பைக் காட்டவில்லை. கம்பனுடைய ராமாயணமானது மற்ற கவிகள் எழுதிய ராம சரிதைகளையும் தமிழில் எழுதப்பட்ட இதர காவியங்களிற் பெரும்பாலானவற்றையும் கூட 'வெயிலிடைத் தந்த விளக்' கொளி போலாக்கி விட்டது.

இதுமாத்திரமில்லை. கம்பராமாயணமானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கீலியன் எழுதிய ஏனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாஸ பாரதத்தையும், தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையுங்கூட பெருங்காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம்.

வ. வே. சு. ஐயர்

('பாலபாரதி')

நல்வாழ்த்துக்கள்

M. சிக்குத்தம்ம செட்டியார்

வெல்லம் & சர்க்கரை மண்டி

ரங்கே கவுண்டர் வீதி

கோயம்புத்தூர்-1.

எல்லாவிதமான எலக்ட்ரிகல் சாமான்கள் தேவைக்கு

NEW ERA TRADERS

24, காக்ஸ் வீதி, கோயமுத்தூர்-9.

கடைக்கு விஜயம் செய்யுங்கள். மொத்தமாகவும் சில்லரையாகவும் குறைந்த விலையுடனும் திருப்திகரமாகவும் சாமான்கள் கிடைக்கும்.

ஆபீஸ் போன்: 25456.
இருப்பிடம் போன்: 25362.

ELLURA கம்பெனி சாமான்களுக்கு மதராஸ், கேரளா, மைசூர், மாகாணங்களுக்கும் ஏஜண்டு.
A. E. I. கம்பெனிலேம்ஸ். பேன்ஸ் விற்பனைக்கு உரிமையாளர்கள்.

Tel: 'KUBERAN'

Phone: Rice Mill: 22
Mandy: 42
Residence: 42 A
Talkies: 82

E. L. NAVANEETHAM CHETTIAR & SONS.,

Meenakshi Talkies, Meenakshi Rice Mill & General Merchant.

TINDIVANAM, S. A. Dt.

குறைந்த செலவில் அதிக மகசூலை அடைய ஸ்டேன்ஸ் கலப்பு உரத்தை உபயோகியுங்கள்

கிடைக்குமிடம்:

E. L. நவநீதம் செட்டியார்

திண்டிவனம்.

# திருவிளையாடற் புராணம்

ச. தண்டபாணி தேசிகர்

புராணம் என்றாலே பழமையானது என்ற கருத்துப் பரவலாக எங்கும் உள்ளது. சங்க காலத்தில் இலக்கண நூல்கள்கூடப் புராணம் என்ற பட்டத்தோடு வழங்கியதை மா புராணம், பூத புராணம் என்னும் பெயர்களால் அறிகிறோம். அன்பு நெறியை வளர்க்கும் வரலாற்று நூல்கள் புராணங்கள் ஆயின. காப்பிய உலகில் இடைப்பட்ட காலத்தில் உண்டான தொடர்நிலைச் செய்யுள் அனைத்துமே புராணங்கள் என அழைக்கப்பட்டன.

பொதுவாக, புண்ணிய வசத்தால் ஒருவனுக்கு வாய்த்த நண்பன், அவனைத் தன் இனிமைப் பண்பினால் வசப்படுத்திக் கதை சொல்லி நல்வழி நடக்கச் செய்வது போலப் புராணங்கள் பழைய வரலாறுகளைச் சொல்லி அதன் வாயிலாக மக்களைத் திருத்துவன. ஆகையால் புராணங்கள், நீதிகளைத் தம் மைய ஒளியாகக் கொண்டு, இறைவனிடம் செலுத்தப் பெறும் அன்பு நெறியைப் பரப்பி அறிவை அழகு செய்யும் வைர மணி மாலைகளாம்.

ஆனால், இன்றோ! ''கால வளர்ச்சிக்குத் தக்க கருத்துக்களைத் தருவனவாக இல்லை. இன்றைய சமுதாயப் போக்கிற்குப் பொருந்தாத இலக்கியங்களாற் பயன் என்ன? அதுவும் ஊருக்கு ஒன்றாக, ஒன்று போல் மலிந்து இராமாயணம், பாரதம், கந்த புராணம் இவற்றினிருந்து கிளைத்த வரலாறுகளாகவே உள்ளனவே'' என்ற கருத்துப் பரவி புராணப் பெருமையை இளைய உள்ளங்கள் ஏற்காமற் செய்கின்றது.

ஒன்று எண்ண வேண்டும்; ஒருண்மையை, அதற்கு உரிய குறியீட்டுச் சொற்களையே இட்டு, அப்படியே சொன்னால், இலக்கணம் படிப்பது போல, அக்கருத்துச் சமுதாயத்தில் செல்வாக்கு இழந்துவிடும். அதனையே வரலாற்றில் வைத்து, நடையழகும், அணியழகும், வருணனைகளும் அமைய, நல்ல ஓட்டமுள்ள கவிதைகளாகக் கொடுத்தால் சமுதாயம் இவைகளில் ஏதாவது ஒன்றில் மனத்தைப் பறிகொடுத்து, ஒன்றால் ஒன்றாக அனைத்திலும் ஊன்றி நற்பயனை எய்தும். திருமூலர் முப்புரம் எரித்த வரலாற்றைப் பற்றி,'' அப்பு அணி, செஞ்சடை ஆதிபுராணன், முப்புரம் எரித்தனன் என்பர்கள் மூடர்கள்; முப்புரம் என்பது மும்மல காரியம், அப்புரம் எரித்தமை யாரறிவார்களே,'' என்று கூறுகிறார். இதனால் அறியப்படுவது என்ன? சிவபெருமான் பறக்கும் கோட்டைகள் மூன்றை எரித்தார் என்றால், ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாய் அமைந்துள்ள அறியாமைக் கோட்டையையும், கன்ம வினைகளாகிற கோட்டையையும், மயக்கமாகிற கோட்டையையும் எரித்தார் என்பதுதானே? இவை போன்ற உயர்ந்ததோர் கருத்துக்களை உற்று நோக்கும் போது புராணங்கள், பக்தி நெறியை அடிப்படையாகக் கொண்டு, அந்தந்தக் காலங்களின் சமுதாய வளர்ச்சிக்குத் தக கருத்துகள் தோன்ற அமைக்கப் பெற்றக் காலக் கண்ணாடிகள் என்பது பெறப்படும். இந்த அடிப்படையில் திருவிளையாடற் புராணத்தை அணுகுவோம்.

திருவிளையாடல் என்பது வருத்தம் தோன்றாத படிப் பெரிய காரியங்களைச் சாதித்தல். ''ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு'' என்றால், பாரம் இல்லை என்பது பொருளன்று. பாரம் பாரந்தான். சுமத்தலால் வருத்தந் தோன்றவில்லை; அவ்வளவு இலேசாகவும் மனக்கிளர்ச்சி தரும் செயலாகவும் சாத்தன் தன் மன ஆற்றலால் மாற்றி அமைத்துக் கொண்டான் என்பதே. அதுபோல ஆண்டவன் பல அரிய செயல்களை அன்பர்களுக்காக இலேசாக அருளினர் என்பதை வரலாறுகளில் வைத்து வழங்குவதே திருவிளையாடற் புராணம்.

இறைவன் செய்தருளிய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு. அவற்றைத் தொகுத்தும் விரித்தும் உணர்த்தும் இலக்கியங்கள் செந்தமிழ் மொழியிலே பல உள்ளன. அவை பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், திருவிளையாடற் 'பயகரமாலை,' திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா என்பன முதலாகப் பலவாம். அவற்றுள் இன்று மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குவது பரஞ்சோதியார் திருவிளையாடலே.

அது செம்பாகமான செய்யுள் நடையும், அன்பு சுரக்கச் செய்யும் சொல்லமைப்பும், படிப்பவர்கட்குச் சோர்வுண்டாகாமல் அழைத்துச் செல்லும் இசையல்லது சந்த ஒழுங்கும் உடையது. அதனையே ஆதாரமாகக் கொண்டு பலகோணங்களிற் கண்டு ஆராய்வதே சிறந்த நூலறிமுகம் ஆயினும், இக்காலத் தேவைக்கும் மனப் போக்கிற்கும் ஏற்பச் சில கோணங்களில் இப்போது சிந்திப்போம்.

## மொழிப்பற்று

மொழிப்பற்று சமுதாயத்தின் குருதியோட்டம். அது தடைபட்டால் உடல் வலியிழப்பது போல மொழிப்பற்றிற்குத் தடையான சூழ்நிலைகள் அமையுமாயின் சமுதாயத்தின் வலிமை குன்றும். வலி குன்றாமல் சமுதாயத்தை வாழவைக்க வேண்டும்-வாழவிட வேண்டும் என்ற அருள் உள்ளம் ஆண்டவனுக்கு எப்போதும் உண்டு.

மொழிப்பற்றுக்கு உளதாம் தடை என்ன ? அதன் வளர்ச்சிக்குத் தடையான செயல்களைச் செய்தல், அதன் அடிப்படையான, தொன்மையான பண்பாடு கள் அழிந்தொழிய வெந்நீர் வார்த்துத் தாமே வளர்ப் பதாகப் பறைசாற்றல், மொழியை, மொழியறிந்த புலவனை அவமதித்தல் முதலியன. இவ்வாறு செய் பவன் வேற்று நாட்டவனாகவோ, வேற்றுமொழிக் காரனாகவோ இருந்தால், பிற மொழிப் பெருமையையும் அருமையையும், அகலத்தையும் அறியாமற் செய்தான் என்று மன்னித்துவிடலாம். செல்வச் செருக்காலும்- தீய சார்புகளாலும் அம்மொழிக்காரனே தன் மொழியை அவமதித்துக் குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு ஆகலாம். அவனைத் திருத்த மனித னாலாகாது. கடவுளேதான் திருத்த வேண்டும். திருத்துகிறார் பாருங்கள் !

இடைக்காடன் ஓர் இயற்றமிழ்ப் புலவன். பாண்டிய மன்னனுடைய அவைக்களக் கவிஞன். ஒரு நாள் அவனுடைய மனமலர் பூத்தது; கவித் தேனைச் சுரந்தது. அவனே அறிவு - நாவாற் சுவைத்துப் பார்த்துத் தனக்குள்ளே தானே மகிழ்ந்தான். இத் தேனைச் சுவைக்க வேண்டியவன் செந்தமிழ்ப் பாண்டிய மன்னன் அல்லவா ? என்று எண்ணினான். கருத்துக் குடுவையில் கவிதைத் தேனைக் கொண்டு மன்னன் முன் சென்றான். மன்னனோ மமதைக் கள்ளைக் குடித்து, பணமதமுங் கொண்டு கவிதை யையும் கவிஞனையும் அவமதித்தான். 'உனக்கும் நமக்கும் ஒத்துக் கொள்ளாது போ' என்றான். அரசன் முன்னே கவிஞன் தலை நிமிர்ந்து 'உன்னை நம்பியோ தமிழை ஓதினேன்' என்று சொல்ல எண்ணுகிறான். கற்றவர் பண்பாடு அது அன்று எனத் தன்னறிவு தடுக்கிறது. செந்தமிழ்ச் சொக்கன் இருக்கிறான்; அவனுக்குமா தமிழருமை தெரியாமற் போகும் என்று எண்ணித் திருமுன் சென்று, 'பெருமானே! நீர் சொல்; பொருள் உம்மை விட்டுப் பிரியாத உமையம்மை. சொற்பொருட் சேர்க் கையான கவிதையைக் காவலன் அவமதித்தான். தமிழறியும் பெருமானாகிய உம்மையும், அன்னையையும் அல்லவா அவமதித்தான். மதியாத இடத்தில் புலவன் இருக்க மாட்டான். ஆதலால் இதோ மதுரையை விட்டுப் போகிறேன்' என்று புறப்பட்டான். செந்த மிழ்ச் சொக்கரும் உமையம்மையோடு புறப்பட்டார். அன்றிரவு வையைக் கரையில் ஓரிரவு இருக்கை என்னும் ஊரில் தங்கினர். மறுநாள் அருச்சகர் ஆல யத்தைத் திறந்தார். பெருமானும் இல்லை; பெரு மாட்டியும் இல்லை. வருந்தினர். மன்னனிடம் தெரிவித் தனர். மன்னன் சிலர் வாயிலாகத் தெரிந்து அவ் விடம் சென்று மன்னிப்பு வேண்டிப் பெற்றுத் திரும்ப அழைத்து வந்தான். இந்த அருளாடல் எதனைத் தெரிவிக்கிறது ? மன்னனாயிருந்தாலும், மதத்தலைவனா யிருந்தாலும், மக்கள் தலைவனாயிருந்தாலும் மொழிப் பற்றும், மொழியறி புலவனிடத்து நன்மதிப்பும் வேண்டும் என்பதை யன்றோ வலியுறுத்துகிறது?

### மற்றொரு நிகழ்ச்சி

செந்தமிழ்க் கவிதையை செவிமடுத்து மனமகிழும் பாண்டியன் ஒருவன் ஒருநாள், மாலைப் பொழுதில் அரண்மனை நிலா முற்றத்திலே மனைவியோடு உலா வினான். தென்றல் இது வரை கண்டறியாத புதிய மணத்தைச் சுமந்து வந்தது. அது தன் மனைவியின் கூந்தலில் இருந்து வருவதாக அறிந்து அறிவு ஒப்புக் காணப் புலவர்களை நாடினான். கருத்துக்கியைந்த கவி தையைத் தரும் புலவர்க்கு உரியதென ஆயிரம் பொன் அடைத்த கிழி ஒன்றையும் அரசவையில் தொங்க விட்டான். புலவர் பலர் முயன்றனர். ஏழைகளுக்கு இரங்கும் இறைவன் தானே நன்பாட்டுப் புலவனாய் ''கொங்கு தேர் வாழ்க்கை'' என்னும் செய்யுளைப் பாடி அந்தணச் சிறுவனாகியத் தருமியின் கையில் தந்து, ''சிறுவ! நீ அரசவைக்குச் சென்று கவிதையைக் காட்டி பரிசிலைப் பெற்றுக் கொள்'' என்று சொன்னார்; அங் ஙனமே தருமி சொன்னான். கவிதையைக் காட்டினான். கருத்தறியும் பெருமான் செய்த கவிதை அல்லவா ? அரசன் உள்ளம் உவகை பூத்தது. ஆனால், கவிஞர் உலகம் ஒத்துக் கொள்ளவில்லை. தருமியின் வேண்டு கோளின் வண்ணம் புலவனாய்ச் சங்கமேறிப் பொருள் நயத்தை விளக்கி பரிசிலைப் பெற்றுத் தந்தார் என்பது ஒரு விளையாடல்.

சிவபெருமான் செந்தமிழைப் பாதுகாப்பதற்காக புலவர்கள் அனைவரும், ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொண்டு கலகமற்று கலந்து பழக சங்கப் பலகையை அளித்தார் என்பது ஒரு விளையாடல். ஊமைச் செட்டி மகனாகிய உருத்திர சன்மனைக் கொண்டு இறையனார் அகப்பொருளின் உரை நயத்தை உணர்த்தினார் என்பது ஒரு விளையாடல். இலக்கணம் பயிலாத கீரனுக்கு அகத்தியரைக்கொண்டு இலக் கணம் பயிற்றுவித்தார் என்பது ஒரு விளையாடல். இவையனைத்தும் தாய் மொழியாயினும் தக்க ஆசிரிய னிடத்து மரபு வழுவாதபடிக் கற்க வேண்டுமென்ப தனையும், உண்மை உணராது யாரையும் இழித்தும், பழித்தும் உரைக்கலாகாது என்பதனையும், மொழிக்கும் புலவர்க்கும் தீங்கு செய்பவர்கள் யாராயினும் அவர்கள் வெறுக்கவும், ஒறுக்கவும் தக்கவர்கள் என்ற உண்மையையும் உணர்த்துவன.

மொழி என்றால் இயற்றமிழ்க் கவிதை மட்டுமன்று; அதனைத் தழுவி நிற்கும் இசையையும் உணர்த்துவது. கவிதைக் கன்னி தாள நயத்தோடு சந்த நடையிட்டு நாவரங்கில் நடனமாடுகிறாள். ஆதலால் இசையின் உயர்வைப் பாதுகாக்க இறைவன் பாணபத்திரனுக்கு பொற்கிழி அளித்தார். தமிழிசை தாழக் கூடாது என்பதனை இசை வாது வென்ற நிகழ்ச்சியால்

அறிவித்தார். இவை இறைவன் இசைத் தமிழை வளர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகள்.

அங்ஙனமே மனக் கருத்து அல்லது மனோபாவம் இசையோடு கலந்து கூத்துக் கலையாக விரிந்து மொழியையும் சமுதாயத்தையும் வளர்க்கிறது என்ற உண்மையைக் கால் மாறி ஆடிய திருவிளையாடல் காட்டுகிறது. ஆகவே இவ்வண்ணம் முத்தமிழ்ப் பற்றும், செந்தமிழ் மக்களுக்கு மிகமிக இன்றியமையாதது என்பதை விளக்குவன அரனார் ஆடல்களில் பல. இவ்வளவையும் நூல் வாயிலாகத் தொகுத்துத் தந்த பரஞ்சோதியார் தமிழ்ப்பற்றைத்

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக
கண்டதும் மறைக்கதவினை திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்

என்ற அறைகூவல் அறிவிக்கின்றது.

கடவுள் வேண்டுதல் வேண்டாமை இலான் என்பது வள்ளுவம். அவர் கருணை எங்கும் யார்க்கும் எவற்றிற்கும் சொந்தமானது என்பது செந்தமிழ்ச் சித்தாந்த மரபு. வீடு, பேறு அல்லது மோட்சம் மக்களில் உயர்ந்தோர்க்கன்றி மகளிர்க்கும் மற்றையோர்க்கும் கிட்டாது, விலங்கினங்களுக்கும் இல்லை என்பது புறவழக்கம். சௌந்திர பாண்டியனாக வந்து நீதியையும் நேர்மையையும் காத்த காவற் கடவுளுக்கு அத்தகைய ஓரவஞ்சனை இருக்குமா? இல்லவே இல்லை என்பதனை எடுத்துக்காட்டுவனவே நாரைக்கும், கரிக்குருவிக்கும், பன்றிக்கும் முக்தி அருளிய திருவிளையாடல்கள்.

நம்மிடையே வாழ்ந்த பாரதியார் கூட இனப் பற்றுடையவர் எனலாம். அவரும் ஒரு மனிதர் தானே! ''தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று மனித சமுதாயத்தின் பட்டினியை மட்டும் போக்க வீறுகொண்டார். வடலூர் வள்ளலாரோ 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் உள்ளம் வாடியதாக' உரைக்கின்றார். இவர்கள் அனைவரையும் ஆக்கி உலகத் தொண்டிற்காக உதவிய இறைவனோ, எறும்பு முதல் யானை ஈறாக எல்லா உயிர்களின் பசிக்காகவும் கவலைப்படுகின்றவர். அதனால் ஒரு நாள் காட்டிலே தாய்ப்பன்றி வேடனால் கொல்லப்பட, பன்னிரண்டு பன்றிக் குட்டிகளும் பசியால் வாடின. இறைவன் உள்ளம் கருணையால் கனிந்தது. பன்றிக் குட்டிகளின் பசியை எப்படிப் போக்குவது? வேறு வழி இன்மையால் தானே பன்றியானார். பால் நினைந்து ஊட்டினார். இந்த அனைத்துயிர்ப் பொதுவுடைமையைப் புகல்வது பன்றிக் குட்டிக்குப் பால் ஊட்டிய திருவிளையாடல்.

ஆட்சியின் ஆற்றல் எங்கே இருக்கிறது? பகையும் பிணியும் நீங்கி வசியும் வளமும் சிறந்த நாட்டில் தானே ஆட்சி சிறக்கும். பகைமை இல்லாத ஆட்சியே சிறந்த ஆட்சி. அடக்குமுறையினாலோ சட்டத் திட்டங்களாலோ அல்லது அன்பினாலோ மனித சமுதாயத்தில் பகைமையைப் போக்கிவிடலாம். விலங்குகளிலோ புலிக்குப் பகை மான்; சிங்கத்துக்குப் பகை யானை; நரிக்குப் பகை நண்டு. இப்படி பகையே பிறவிக்குணமாக அவைகளிடத்தே அமைந்துவிடுகிறது. அதைப் போக்கமுடியுமா? மதுரையின் தனிச் சிறப்பை வணிகன் வாயிலாக அறிந்த மன்னன் மதுரையின் எல்லையிலே ஒரு பெண்புலி படுத்துக் கிடப்பதை நோக்கினான். அதன் மடியிலே மான்குட்டிகள் சில ஊட்டிக்கொண்டிருந்தன. பிறவிப் பகையாகிய இவைகள் கூட இப்படிக் கூடிக் குலாவுகின்றனவே! இந்த இடம் எவ்வளவு சிறந்தது! இதன் எல்லை எவ்வளவோ என்று ஐயுற்றபோது சிவபெருமான் சித்த நாதனாக வந்து எல்லையைக் காட்டினார் என்பது ஒரு விளையாடல். புலமைக் காய்ச்சல் பொல்லாதது. இழிப்பும், பழிப்பும் அதன் ஆயுதங்கள். ஒரு காலத்துச் சங்கப் புலவர்கள் புலமைக் காய்ச்சலால் கலகம் செய்தார்கள். தாழ்ச்சடைப் பெருமான் தமிழ் அறிஞர்களின் தரம் தாழக்கூடாது என்ற கருணையால் கலகம் தீர்த்தார். இது ஒரு திருவிளையாடல். இங்ஙனம் ஆட்சியின் ஆற்றலை விளக்கும் அருளாடல்கள் பல.

வடநாட்டுப் பாடகன் ஒருவன்; இசையில் தனக்கு இணை யாருமில்லை என்பதைத் தானே அறிந்தவன். இசையில் வாது செய்யப் பாண்டிய நாட்டிற்கு வந்தான். அரசன் தன் அவைப்புலவரான பாணபத்திரரை அழைத்து 'நாளை வாதில் வடவனை வெல்லுக' என்று ஆணை வழங்கினான். பாணபத்திரரோ எதிரியின் இயல்பு தெரியாதபோது அவனை வெல்வது எப்படி? என்று சிந்தித்துத் திருக்கோவிலுக்குச் சென்று சொக்கலிங்கப் பெருமானிடம் விண்ணப்பித்துக்கொண்டார். மறுநாள் பொழுது புலரும் நேரம்; ஒரு விறகுவெட்டி சுமையைக் கொண்டுவந்து வடநாட்டு இசைஞன் தங்கியிருந்த வீட்டின்முன் இறக்கிவிட்டுச் சாதாரிப் பண்ணைப் பாடிக் கொண்டிருந்தான். உள்ளிருந்து ஒருவரொருவராக ஓடி வந்து பார்த்தனர்; பாடலில் மயங்கினர். நீ யாரென்று வினவினர். விறகுத் தலையனோ 'அடியேன் பாணபத்திரனுடைய மாணக்கன். நான் கிழமாகி விட்டதால் இசைக்கு ஏலாய் என்று விலக்கி விட்டார். அதனால் விறகு வெட்டிப் பிழைத்து வருகிறேன்' என்று சொன்னான். விலக்கப் பட்டவனே இவ்வாறு என்றால்... என்று எண்ணிய வடவன் சுவடு தெரியாமல் ஓடிப்போனான். இது சாதாரி பாடிய விளையாடல். இது தமிழிசைக்கும் தமிழ் நாட்டிசைப் புலவனுக்கும் பிற நாட்டவனால் வர இருந்த தாழ்மையைப் போக்கிய அருளாடல் அல்லவா?

இவ்வண்ணமே இந்நூலுள் மாணிக்க வாசகர் தொடர்புடைய அருளாடல்கள் மூன்றும், திருஞான சம்பந்தரோடு தொடர்புடைய அருளாடல்கள் இரண்டும், நீதி வழங்கியது ஒன்றும், மெலியார்க்காக வலியாரை வாட்டியது மூன்றும், அடியாரை அரசராக்கியது ஒன்றும், எல்லாம் வல்ல சித்தராய் அட்டமாசித்தியை அறிவித்ததும் முதலாகப் பல விளையாடல்கள் சமுதாய ஒழுங்கையும் மரபையும் நிலைநாட்டுவன.

இங்ஙனம் அனைத்துமே நாட்டுப்பற்று, மொழிப் பற்று, மொழிப் பாதுகாப்பும் வளர்ச்சியும், பழி போக்கல், பகை போக்கல், பழி வராமல் தடுத்தல், பழி செய்தாரை ஒறுத்தல் முதலான ஆட்சித் திறன்களை அறிவிப்பனவாம். இவை யனைத்தையும் இறைவன் நமக்காகச் செய்தார் என்று எண்ணுகிற போது நம்மனைவர்க்கும் அவரிடம் உறுதியான அன்பு பிறக்கும். அன்பு ஆற்றலைப் பெருக்கும். இன்பை அருளும். இந்த அடிப்படையில் எழுந்ததே திருவிளையாடற் புராணம்.

---

# சிவ சிந்தாமணி ஆறுமுக நாவலர்

(திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

[இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுச்சாமித் தேவர் வேண்டுகோளின்படி ஆறுமுக நாவலர் பிலவ வருடம் புரட்டாசியில் பதிப்பித்த "திருக்கோவையார்" நூலுக்கு அளித்த சிறப்புப்பாயிரத்தின் இறுதிப் பகுதியே கீழ்க்காணும் செய்யுள்.]

மன்னுகோ ணசலம் மாகே தீச்சரம்*
என்னும் இரண்டும் இரண்டுகண் ணகப்
பெற்றஈ ழத்தில் பிறங்கும்யாழ்ப் பாணத்(து)
உற்றபல் வளனுக்(கு) உறைஇடன் ஆகிச்
சொல்ஊர் கழனி சூழ்தரக் கொண்டு
செல்ஊர் பொழிலால் சேணுல(கு) அளந்து
வில்ஊர் மாடம் மிகக்கொடு பொலியும்
நல்லூர் வாழ்க்கை நயந்தருள் அறிஞன் ;
கந்தவேள் தவத்தில் கரு(து)அரன் பால்முன்
வந்தவேள் என்ன வந்(து)அவ தரித்தோன் ;
நீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றொடு பொலியும் புண்ணிய புருடன் ;
அவநெறி யாய அனைத்தும் களைந்து
சிவநெறி வளர்க்கும் திப்பிய குணத்தன் ;
எழுத்துமு தலாக இயம்பிலக் கணமும்
வழுத்(து)இலக் கியமும் வரம்புகண்(டு) எழுந்தோன்;
சமயம் விசேடம் தகுநிரு வாணம் என்(று)
அமையும்முத் தீக்கையும் அடைவுறப் பெற்றோன்;
சுமங்கல விசேடச் சுருதியாம் மூலா—
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்;
யுத்தியின் அமைத்துணர்ந்(து) ஓங்(கு)அனு பூதி
சித்தியுற்(று) அமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவர்உள் களிக்கும்
முற்றுணர் ஆறு முகநா வலனே.

* கோணசலம், கேதீச்சரம் - முறையே இலங்கையின் வடகிழக்குக் கரையிலும், வடமேற்குக் கரையிலும் உள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களான திருக்கோணமலையும் திருக்கேதீஸ்வரமும்.

With best compliments from:

**THE NARASIMHA MILLS PRIVATE LIMITED.**

I, V. PALANISWAMY NAIDU STREET,

AVANASHI ROAD, : : COIMBATORE-18.

Telephones : 24051 / 52

Telegrams : LION - COIMBATORE

Telex : 042-217 (LION CB)

*Greetings from*

**M. R. RAMASAMY GOUNDAR** M. C.

JAGGERY MERCHANT

K. K. BLOCK

**COIMBATORE.**

Phone: 23546

Resi : 25943

நல்வாழ்த்துக்கள்

**Ps. V. கம்பெனி**

பார்ட்னர்ஸ் :

B. விருப்பாட்சி, B. A., K. பார்த்தசாரதி

வெல்ல வியாபாரம்

K. K. பிளாக்

கோயம்புத்தூர்-1.

போன் : கடை : 26786
வீடு : 25104

தங்களது இங்நன் முயற்சி
வெல்க — வளர்க
என
வா
ழ்
த்
து
ம்

## கார்த்திகேயா பவுண்டரி

பாப்ப நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர்-18.

தயாரிப்பாளர்கள் :

எலக்ட்ரிக் மோட்டார்கள், பம்புகள்
&
மானோ பிளாக் செட்டுகள்

விற்பனை கிளைகள் :

சென்னை — விழுப்புரம்
பெங்களூர்.

With best compliments from :

## M/s. MOULI & SONS ENGINEERS (P) LTD.,

Regd. Office :
43, Rajaji Road, COIMBATORE-9.

*Manufacturers of :*

ELECTRIC MOTORS, MONOBLOCK PUMPSETS BOTH FOR DOMESTIC AND AGRICULTURAL PURPOSES AND ELEC. SIRENS.

# THIRU AROORAN SUGARS LTD.,

VADAPATHIMANGALAM
THANJAVUR DIST.

*Manufacturers of :*

**BEST QUALITY
WHITE CRYSTAL
SUGAR**

*Managing Agents :*

## VENKATESA TYAGARAJAN PRIVATE LTD.,

55-A/1, PETERS ROAD,
MADRAS-6.

Telegram : "FINESUGAR" MADRAS. Telephone : 85273.

# மகாவித்துவானும் மகாமகோபாத்யாயரும்

ரா. விசுவநாத ஐயர்

கடந்த ஒரு நூருண்டுகளுள் தமிழகம் பற்பல புரட்சிகளைப் பெற்றுள்ளமையை நாம் உணர்வோம். அவற்றுள், கவிதை உலகத்தில் மகாகவி பாரதியாரையும், ஆத்மீக உலகத்தில் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளையும், தமிழ் ஆராய்ச்சி உலகத்தில் மகாமகோபாத்யாய ஐயரவர்களையும் நினைவுபடுத்திக்கொள்வது ஏற்றதாகும். இவர்களும் இவர்களைப் போன்று பலரும் பல துறைகளில் முயன்று தமிழகத்திலே முன்னென்றும் ஏற்படாத பலவகை இயக்கங்களையும் முன்னேற்றங்களையும் தோற்றுவித்துள்ளார்கள் என்றுலும் இக் கட்டுரைக்குப் பொருளாகத் 'தமிழிலக்கிய ஆராய்ச்சியையும் பதிப்புக்களையுமே' கொள்கின்ரேம்.

நல்ல மலரையோ கனியையோ நாம் காணும்போது அதன் மூலமான மரத்தையும் விதையையும் கருதுகிரேம். அவை ஒன்ரேடொன்று இணைபிரியாமல் ஒன்றியே இருப்பதாலும் ஒன்று காரணமாகவும் மற்றது அதன் காரியமாகவும் இருத்தலாலும், இரண்டையும் ஒருமிக்கக் கண்டு அவ்விரண்டுக்கும் உள்ள மதிப்பை அறிவதே நம் கடமையாகிறது. அவ்வாறு கருதும்போது, மறந்துபோன பண்டைத் தமிழ் நூல்களை மிக அரிதில் முயன்று கண்டுபிடித்து, அவற்றின் உண்மை உருவங்களை அரும்பாடுபட்டு, நிர்ணயித்து, பலகாலப் பழக்கங்களால் நூற்பதிப்பு முறைகளைச் செப்பனிட்டு ஒழுங்குபடுத்தி நிறுவின மேல்நாட்டுப் பதிப்பாசிரியர்கள்கூட வியக்கும்படியான முறையில் பதிப்பித்து உதவிய உ. வே. சாமிநாதையர் அவர்களை இக்காலத் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கு வழிகாட்டிய மகோபகாரி என்று கூறுவதை எவரும் ஒப்புக்கொள்வர். அவருக்குப் பின் வந்த பல்லோரும் அவர் சென்ற வழியே சென்று மேலும் காலத்தால் அழிந்துபோன நூல்களைக் கண்டெடுத்து உலகுக்கு அளிக்காவிட்டாலும், நூலாராய்ச்சி முறைகளில் அவர் வகுத்த முறைகளையே பின்பற்றி நல்ல பயன்களைக் கண்டுள்ளார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. தமிழின் பழம் பண்பாடுகள் உலக மக்களால் இன்று பேரளவில் போற்றப்படுவதற்கும், தமிழறிவு உலகத்தில் பல்வேறு பகுதிகளில் முன்னேறிக் கொண்டுவருவதற்கும், தமிழிலக்கிய ஆராய்ச்சி உலக நாடுகளிலும் நம் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் பல முகங்களாகப் பெருகிக்கொண்டு வருவதற்கும் ஐயர் உ. வே. சா. வின் கண்டெடுப்புக்களும் பதிப்புத் திறமைகளுமே காரணமாகும்.

நிற்க, ஹிந்து மதத்தின் தத்துவங்களையும் பெருநோக்கங்களையும் உலகமறியச் செய்தவர் ஸ்வாமி விவேகாநந்தர் என்பதை யாவரும் அறிவார். ஆனல் அவருக்கு ஆன்ம ஞானத்தையும் ஆற்றலையும் அருளியவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்பதையும் உலகம் அறியும். உலகம் பெற்ற பெரும்பயனை எண்ணும்போது பரமஹம்ஸரையும் ஸ்வாமியையும் பிரித்தெண்ண முடியாது. பரமஹம்ஸர் விதை; ஸ்வாமி பழம். உலகம் பெற்றது வற்ரு ஆத்மஞான ஊற்று.

### வித்தும் கனியும்

அதே போல மகாமகோபாத்யாய ஐயரவர்கள் தமிழ்த் தொண்டைப் பற்றி எண்ணும்போது, அவருக்குத் தமிழ் ஊற்றின் ஆழத்தையும், அதன் நீரின் சுவையையும் உணரச் செய்த மகாவித்வானை நாம் நினைக்கவே வேண்டியிருக்கிறது. மகாவித்வானைத் தனியே நிறுத்திவிட்டு அவர்தம் மாணவரின் சாதனைகளின் தன்மைகளை ஆராயத்தொடங்குவோமானல் விதையின் தன்மைகளையும் வீரியங்களையும் மறந்து பழத்தின் சுவையை மட்டும் ஆராயத் தலைப்பட்டவர்களாவோம். ஆகவே, இருபதாம் நூற்ருண்டில் தமிழகத்தில் தோன்றிய பழைய இலக்கிய நூலாராய்ச்சி சகாப்தத்திற்குக் காரணம் ஆனவர் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் மகாமகோபாத்யாய சாமிநாதையரவர்களுமான இருவரே யாவர் என்பது நாம் காணத்தக்கது.

மகாவித்துவான் அவர்கள் பரம்பரையாக வந்த கவிமரபின் கடைசியாக அண்மையில் தோன்றிய மிகப்பெரிய மரம்போன்றவர் ஆவார். ஆனுல் கல்வியின் ஆழமும், கருத்தின் தெளிவும், எடுத்துக்கொண்ட முயற்சியை சிறந்த கலைஞன் எவ்வளவு திறமையுடனும் முழுமையுடனும் கையாளக் கூடுமோ அவ்வளவு திறமையுடனும், ஒவ்வொரு பகுதியையும் அலசி ஆராய்ந்து ஒப்புயர்வற்றதும் தமக்கே உரியதுமான ஒரு தனிநிலையில் அமைக்கக்கூடுமோ அவ்வாறே அமைக்கும் ஆர்வமும் ஆற்றலும் அவரிடத்தில்தான் காணப்பெற்றன. ஐயரவர்களின் தமிழ் உழைப்புக்கு அடிப்படையாக வேண்டியது தமிழறிவு. அது மிக ஆழ்ந்ததாகவும், அகன்றதாகவும், இருந்தது. இன்ன நூலைச் சார்ந்தது என்று சொல்லமுடியாத ஓர் ஏட்டை எங்காவது காண நேர்ந்தால் அதை இன்ன நூலினுடையது அல்லது அதன் உரையினுடையது என்றறிந்துகொள்ள எவ்வளவு ஆழ்ந்த கல்வி இருந்திருக்கவேண்டும். அரை குறையாகக் கிடைத்தவற்றைப் பூர்த்தியாகக் காண்பதற்கு அவர் எவ்வளவு இடங்களுக்கு அலைந்திருக்கவேண்டும்; எவ்வளவு ஏமாற்றங்களையும் இகழ்ச்சிகளையும் ஏற்றிருக்க வேண்டும். ஞாபகசக்தியும் விடாமுயற்சியும் சலியாத உழைப்பும் எடுத்த காரியத்தின் பயனில் நம்பிக்கையும் இவைபோன்ற ஆன்மசக்திகளும் அவரிடம் எவ்வளவு தூரம் பதிந்திருக்கவேண்டும். இவ்வளவையும் அவருக்குப் புகட்டினவர் அவருடைய ஆசிரியர் அல்லரோ? ஸ்ரீ பிள்ளையவர்களிடம் அமைந்த ஆற்றல்கள் யாவும் ஸ்ரீ ஐயரவர்களிடமும் அமைந்தமையாலன்ருே வேறெவரும் செய்தறியாத பெருஞ்சாதனைகளை ஐயரவர்கள் நிறைவேற்றினுர்கள். இந்த இயற்கை இயல்புகளைப் போற்றி வளர்த்த திறமைகள் இன்ன இன்னவை என்று பிரித்துப் பேசத்தான் முடியுமோ? மகாகவிஞருக்குப் பயன்பட்ட அந்த இயல்புகளும் திறமைகளும் அவருக்குப் பயன்பட்டனபோலவே, ஆராய்ச்சித் துறையிலும் கண்டறியும் துறையிலும் உழைத்த அவர் மாணவரிடம் ஆசிரியர்க்குப் பயன்பட்ட அதே முறையில் பயன்பட்டன என்று கேட்கப்படலாமோ? அவரவரிடம் அமைந்த இயல்புகளும் திறமைகளும் ஒருவரின் அறிவையும் முயற்சிகளையும் ஒரு புறமாகத் திருப்பித் தொழில் புரிந்து பயனளித்தன. ஒரேவித இயல்புகளும் திறமைகளும் மகாவித்வானை மகாகவிஞராக ஆக்கின: அவ்வியல்புகளும் திறமைகளுமே அவருடைய சீடரை மிகப்பெரும் ஆராய்ச்சியாளராக ஆக்கின. இந்த உண்மையை நாம் ஒப்புக்கொண்டால், இக்கட்டுரையின் தலைப்பிற்கூறிய இரு பெரியார்களுமே ஒருவரை ஒருவர் சார்ந்து நாம் காணும் இலக்கிய சகாப்தத்தைத் தோற்றுவித்தனர் என்பதை நாம் உறுதியாகக் கொள்ளலாம்.

இவ்வாறு பிள்ளையவர்களிடம் இயல்பாக அமைந்தனவும் தாம் பெற்றனவுமான இயல்புகளும் திறமைகளும் யாவை? அவற்றை அவர்கள் இயற்றிய 73 நூல்கள் ஒவ்வொன்றிலும் நாம் காண்கிரேம். அவர்களுடைய தெய்வபக்தி, கல்விப்பெருமை, தமிழன்பு, கவித்திறன் ஆகியவற்றை நாம் அவர்களால் இயற்றப்பெற்ற ஒவ்வொரு நூலிலும் காணலாம். இவை சிறிதும் குறைவுருமல் அவர்களிடம் படிந்திருந்தமையால்தான் அவர்களின் நூல்கள் ஒப்புயர்வற்றனவாக விளங்குகின்றன. இவற்ருேடு அவர்களிடம் இயற்கையாகப் பொறுமை, திருப்தி, தம்மை வியந்து கொள்ளாமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, அன்பு ஆகிய ஆன்ம குணங்கள் அளவற்ற முறையில் அமைந்திருந்தமை அவர்களுடைய கவிதைகளைப் பொன்மலர் நாற்றம் பெற்றனவாக ஆக்கின.

### திருநாகைக் காரோணப் புராணம்

இவ்வளவு குணங்களும் ஓரிடத்தில் சேர்ந்திருந்தமையாலே மகாவித்வான் அவர்களின் காவியங்களுக்குத் தனிச்சிறப்புக்கள் அமைந்தன. உதாரணமாக அவர்களுடைய திருநாகைக் காரோணப் புராணத்தின் அமைப்பைப்பற்றி அவர்களுடைய சரித்திரம் (பக். 322-323) கூறுவனவற்றைக் காண்போம்:-

"மிகவும் உழைத்து எல்லா அழகுகளும் செறியும் வண்ணம் இயற்றப் பெற்றதாதலின் இந்நூலினிடத்து இக்கவிஞருக்கே ஒரு தனி அன்பு இருந்து வந்தது. சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் என்பவர்களைப்போல் இவருக்குள்ள அநுபவ முதிர்ச்சியும், கவி இயற்றுவதில் இவருக்குள்ள போற்றலும், வியத்தகும் கற்பனுசக்தியும் இந்நூலின்கண் நன்ருக வெளிப்படும். இவர் செய்த நூல்களுள் ஒவ்வொன்றிற் சில சில அமைப்புக்கள் சிறப்பெய்தி விளங்கும். இந்நூலிலோ

ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையிற் சிறப்புற்று விளங்கும்.

"உழைகுலாம் நயனத் தார்மாட்
டொன்றென்றே கருதற் கொத்த
தழகெலாம் ஒருங்கே கண்டால்
ஆரதை யாற்ற வல்லார்"

என்ற கம்பராமாயணச் செய்யுள் இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது. தமிழ்க் காப்பியங்களிற் பரந்து கிடக்கும் பலவகை அணிநயங்களும் இதன் கண்ணே ஒவ்வோரிடத்தில் அமைந்து இலங்கும். சொல்லணி, பொருளணி, தொடைநயம், பொருட்சிறப்பு, சுவை நயம், நீதி, சிவபக்திச் சிறப்பு, சிவஸ்தலச் சிறப்பு, நாயன்மார் பெருமை முதலிய பலவும் இதன்கண் நிரம்பி யுள்ளன. தமிழ்க் காப்பியத்தின் இலக்கணம் முழுவதும் உள்ளதாய்ப் பலவகையிலும் நயம் சிறந்து, சுவைப் பிழம்பாக விளங்கும் இக்காப்பியத்தைப் பெறுதற்குத் தமிழ்நாடு தவம் செய்திருத்தல் வேண்டும். பல பழைய புலவர்கள் வாக்கினை ஒருங்கே பார்த்து மகிழ வேண்டுவோர் இந்நூலைப் படித்தாற் போதும். அந்த அந்தப் புலவர்களின் நடை நயமும் பொருளின் பழும் இடையிடையே இப்புராணத்தில் விளங்கித் தோன்றும். இந்நூலைப்பற்றி எவ்வளவு பக்கம் எழுதினாலும் இதன் பெருமையை ஆராய்ந்து கூறிவிட்டதாக ஆகாது. யார் யாருக்கு எந்த எந்த நயங்களில் விருப்பமோ அந்த அந்த நயங்களை இதன்பாற் கண்டு இன்புறலாம்."

இவ்வளவு சிறந்த விமர்சனம் பெற ஒரு நூலை யாக்க, அவரிடம் அமைந்துள்ள பலவித நயன்களையும் இலக்கணங்களையும் ஒருங்கு எடுத்துக்கூற இயலுமோ? ஆனால் அவை யாவும் ஆசிரியர் மகாவித்துவான் பிள்ளையவர்களிடம் பரிபூரணமாக அமைந்திருந்தன என்பதை எவரும் காணக்கூடும். அவை அனைத்தையும் அவர் தம் மாணவரான ஸ்ரீ ஐயரவர்கள் சிறிதும் எஞ்சாமல் தாம் அடைந்ததால் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிப் பாதையை ஒப்புயர்வற்ற வகையில் செப்பனிட்டு அதனிடம் பிரயாணம் செய்து எல்லையையும் அடைந்தார் என்று சொல்வதில் பிழை என்ன?

கர்த்தர் இயேசுவும் ஸெயிண்ட் பாலும்; குரு ராமதாஸரும் வீரர் சிவாஜி மன்னனும்; பரமஹம்ஸரும் விவேகாநந்தரும் என்று கூறுவது இயலுமானால் மகாவித்துவானும் மகாமஹோபாத்யாயரும் என்று கூட்டுவது பொருந்துவதுதானே!

### ஐயரவர்களிடம் விளங்கின தன்மைகள்

இனி, ஸ்ரீ ஐயரவர்கள் தாம் வகுத்துக் கொண்ட பெருநெறியிற் செல்வதற்கு அவர்பால் விளங்கின தன்மைகள் யாவையென்று காண முயல்வோம்.

தமிழன்பு அவரிடம் இயற்கையாகவே அசைக்க முடியாத அளவில் அமைந்திருந்தது. ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி, கணக்கு ஆகியவை தமிழின் முன் பொருளாகப் படவேயில்லை. குடும்பச் சொத்தாக அவருக்குக் கிடைத்த சங்கீதத்தையும் அவர் கை விட்டார். தமிழ் அறிவைப் பெற ஊர் ஊராகத் தக்க ஆசிரியரை நாடி அவர் அலைந்தார். தேனுக்காகப் பூக்களை நாடி அலையும் தேனீயின் நிலையில் அவர் நின்றார். மகாவித்துவான் பிள்ளையவர்களின் பெயரை முதன்முதல் கேட்டபோதே, காளத்தி மலையில் சிவலிங்கத்தைக் கண்ட கண்ணப்பரின் பரவசத்தை அவர் பெற்று, அப்பெரியாரிடம் தமிழ் படிக்கும் பேறு தமக்குக் கிடைக்குமோவென்று பெரிதும் அங்கலாய்த்தார். தம்மிடமிருந்த திருவிளையாடற் புராணத்தில் கயிறு சார்த்திச் சாதகமான செய்யுளொன்று தென்பட்டவுடன் 'மிகவும் நல்ல நிமித்தம் உண்டாகி விட்டது' என்று மனமகிழ்ச்சி கொண்டார்.

அவர்பால் அமைந்த தமிழார்வத்திற்கு இவை உதாரணங்கள். தம் 17 ஆவது பிராயத்தில் (1872 ஏப்ரல்) ஓரளவு தமிழ் அடிப்படைக் கல்விப் பயிற்சி பெற்றவராக மகாவித்வான் அவர்களிடம் மாணவராக அடைக்கலம் புகுந்தார். அன்று முதல் (1-2-1876) ஸ்ரீ பிள்ளையவர்கள் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் குஞ்சித பாதத்தை அடைந்த அன்று வரையில் அவருடன் அவரது நீங்காத நிழல்போல இருந்து தமிழ்க் கல்வியில் நிறைவை அடைந்தார். நாலு வருஷங்களும் முழுமையாக நிரம்பாத கால அளவில் ஸ்ரீ ஐயரவர்கள் திருவாவடுதுறை மடாதிபதிகள் தாம் எழுதும் கடிதங்களில் 'மகாவித்வான்' என்று இவரை அழைக்கக் கூடுமானால், அக்குறுகிய காலத்தில் இவர் பெற்ற கல்வியின் ஆழத்தையும் பரப்பையும் அளவிடக் கூடுமோ? தமிழறிவில் அவர் தம் 21ஆவது பிராயத்திலேயே நிறைவடைந்திருந்தாரென்பதற்கு அவருடைய 'என் சரித்திர'த்திலிருந்து ஒரு மேற்கோளைச் சுட்டுவோம்.

### சேலம் இராமசாமி முதலியார்

ஸ்ரீ ஐயரவர்களுடைய கருத்தை, நூதனமாகப் பழைய தமிழ் நூல்களுக்குரிய சுவடிகளைத் தேடச் செய்யும் உள்ளத் திருப்பம் அமைந்தது இறைவன் செயலேயாகும். சேலம் ஸ்ரீ இராமசாமி முதலியார் அதற்கு உலகம் காணும் காரணராக அமைந்தார். ஸ்ரீ ஐயரவர்களின் தமிழறிவின் பெருக்கத்தை அவர் அறிவதற்காக "'என்ன என்ன பாடம் கேட்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு, 'அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழ்களில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள்'—இப்படியே பிரபந்தங்களை அடுக்கிக் கொண்டு போனேன்... (பிறகு) புராண வரிசையைத் தொடங்கினேன்: திருவிளையாடற் புராணம், திருநாகைக்காரோணப் புராணம், மாயூரப்

புராணம், கந்த புராணம், பெரிய புராணம், குற்ருலப் புராணம்...... நைடதம், பிரபுலிங்கலீலே, சிவஞான போதம், சிவஞான சித்தியார் உரை... கம்ப ராமாயணம் முழுவதும் இரண்டு மூன்று முறை படித்திருக்கிறேன். பிள்ளையவர்களிடமும் சில காண்டங்களைப் பாடம் கேட்டிருக்கிறேன்' என்றேன்.'' (பக் 728-30)

தமிழறிவின் நிறைவுக்கு வேறு உதாரணம் வேண்டுவதில்லை. இவற்ருேடு பிள்ளையவர்கள் நூல்களை இயற்றுங் காலங்களிலும் அவற்றை விளக்கிக் கூறுங்காலங்களிலும், அவர் பாடம் சொல்லி கவிகளின் நயன்களை விளக்கிக் கூறும் காலங்களிலும் இடைவிடாமல் உடனிருந்த பயிற்சியினுல் தமிழ் நூலாராய்ச்சி நுட்பங்களிலும் அவர் கடைத் தேறியிருந்தார்.

இவ்வாறு தமிழார்வம், தமிழாழம், ஆராய்ச்சித் திறம் இவற்றை ஆசிரியர் மாணவருக்கு அனுக்கிரகித்து உலகுக்குப் பயன்படும் முறையைத் தாமே தேடிக்கொள்ளுமாறு விடுவித்தார். ஸ்ரீ பரமஹம்சர் விவேகாந்தருக்குச் செய்த அருளும். இவ்வளவே அன்ருே! ஐயரவர்களின் உள்ளத்தில் சுவடிகளைத் தேடுவதற்கு ஊக்கத்தை அளித்தவர் சீவகசிந்தாமணியின் உரையாசிரியர் நச்சினுர்க்கினியர். இதைப் பற்றி ஸ்ரீ ஐயரவர்கள் கூறுவதைக் காண்போம் :—

"நச்சினுர்க்கினியர் இடையிடையே மேற்கோளாகக் காட்டும் செய்யுட் பகுதிகள் இன்ன நூலைச் சார்ந்தவையென்று சீவகசிந்தாமணியை நான் ஆராய்ந்து வந்தபோது தெரிந்து கொள்ளவே முடியவில்லை. தொல்காப்பியச் சூத்திரங்களை மாத்திரம் தெரிந்து கொண்டேன், திருக்கோவையாரிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் சில செய்யுட் பகுதிகளை அவர் எடுத்துக் காட்டுகிருர். அவற்றையும் அறிந்து கொண்டேன். மற்ற மேற்கோள்களைப் படித்தபோது ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதாக இருந்ததே ஒழிய இன்ன நூலில் உள்ளது, இன்ன விஷயத்துக்காக மேற்கோள் என்ற செய்திகள் தெளிவாகவில்லை.

சிந்தாமணியைப் போலத் தமிழ் நாட்டில் வழங்காத வேறு நூல்கள் என்ன என்ன உள்ளன என்ற ஆராய்ச்சிலேயே என் மனம் சென்றது.'' (பக், 762-763)

இவ்வாறு தொடங்கிய நூல் தேடும் தாகம் அவரை அவருடைய ஆயுள் முழுமையும் பீடித்தது. ''எட்டுத்தொகை என்ற பெயரை எட்டுத் தொகையாகக் காண அவர் பட்ட துன்பந்தான் யாதோ? 'பஞ்சாட்சரம்' என்ற உரை 'பஞ்சநமஸ்காரங்களை'ச் சுட்டியது என்றறிய எவ்வளவு ஏங்கினுரோ?

''இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் பேதந் தெரியாமல் தடுக்கி நின்று இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இது என்ற வேறுபாடு தெரியாமல் முட்டுப்பட்ட சந்தர்ப்பங்கள் பல. நச்சினுர்க்கினியருடைய அன்வயத்திலே வரும் பாடற் பகுதிகளைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் மயங்கிய சமயங்கள் பல. ஓர் ஏட்டுக்கும் மற்ருேர் ஏட்டுக்கும் இடையே உள்ள பாட பேதங்களால் அடைந்த கலக்கத்திலிருந்து மீள வழியின்றி மயங்கிய நிகழ்ச்சிகள் பல. உரைக்கு மூலமும் மூலத்துக்கு உரையும் கிடைக்காமல் பலமுறை இடர்ப்பட்டேன். மேற்கோள் எதற்காக உரையாசிரியர் காட்டுகிருரென்பது விளங்காமல் பல தடவை மயங்கினேன், ஜைன விஷயங்களில் நுணுக்கமான சில செய்திகள் விளங்காமையால் மேலே வாசிக்க முடியாமல் பல காலம் தடுமாறி நின்றேன். இலக்கணச் செய்திகளை அமைத்துக்கொள்ள வகை தெரியாமல் பலவாறு யோசித்து யோசித்துப் பல சமயங்களில் சுழம்பினேன்'' (பக். 770)

இன்னும் அவர் பட்ட இன்னல்கள் எவ்வளவோ?

**ஆழ்வார் திருநகரியில்**

நூல் தேடுவதற்காக இவர்கள் மேற்கொண்ட முயற்சியின் அருமையை விளக்க ஒரு மேற்கோள் காட்டுவோம்:

'ஒரு சமயம் ஆவணியவிட்டத்தோடு தொடர்ந்து ஒரு வாரம் விடுமுறை கிடைத்தது. அவ்விடுமுறையில்...(சில) ஊர்களுக்குச் சென்றுவர நிச்சயித்திருந்தேன் என் தந்தையார், சிராவணத்திற்கு இங்கே இராமல் வெளியூருக்குப் போக வேண்டாம் என்று எனது எண்ணத்திற்குத் தடையை உண்டாக்கினுர்...சிராவணத்தைக் காட்டிலும் பத்துப் பாட்டு எனக்குப் பெரிதாக இருந்தமையால் மிகவும் சிரமப்பட்டு அவரிடம் தக்க சமாதானம் கூறி விடை பெற்றுப் புறப்பட்டேன்.

மூன்று நாட்கள் ஆழ்வார் திருநகரில் இருந்தேன்.

...ஏடுகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கையும் மனமும் சோர்ந்து (ஒரு வீட்டுத் திண்ணையில்) உட்கார்ந்தேன். அவ்வூரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவப் பெரியார் சிலர் நான் விரும்பியபடி திவ்யப்ரபந்தத்திலுள்ள சில பாசுரங்களின் பழைய வியாக்கியானங்களைச் சொல்லிக்கொண்டிருந்தனர்....

இப்படி இருக்கையில், அன்று ஏதோ விசேஷமாதலின், திருவீதியில் பெருமாளும் சடகோபாழ்வாரும் எழுந்தருளினுர்கள்............அப்பொழுது நம்மாழ்வார் திருக்கோலத்தைத் தரிசித்தேன். அவரைப் பார்த்து ''ஸ்வாமி, தமிழ் வேதம் செய்தவரென்று தேவரீரைப் பாராட்டுகின்ருர்கள். தேவரீருடைய ஊருக்குத் தமிழ் நூலொன்றைத்

தேடி வந்திருக்கிறேன். தமிழுக்குப் பெருமை யருளும் தேவரீருக்கு, நான்படும் சிரமம் தெரியாத தன்றே! நான் தேடி வந்தது கிடைக்கும்படி கருணை செய்யாமல் இருப்பது நியாயமா!'' என்று சொல்லிப் பிரார்த்தித்தேன். உள்ளம் அயர்ந்து போய், 'இனிமேல் செய்வது ஒன்றும் இல்லை' என்ற முடிவுக்கு வந்தமையால் இங்ஙனம் பிரார்த்தனை செய்தேன்.

ஆழ்வாரைப் பிரார்த்தித்தது வீண்போகவில்லை. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர் எதையோ தம் மேலாடையில் மறைத்துக்கொண்டு மிகவும் வேக மாக எங்களை நோக்கிவந்தார். வந்தவர் 'இந்தப் புஸ்தகத்தைப் பாருங்கள்' என்று கூறி மேல் வஸ்தி ரத்தால் மூடியிருந்த சுவடியை எடுத்தார். அவர் என்னிடம் கொடுப்பதற்கு முன்பே ஆத்திரத்தால் நான் அதனைப்பிடுங்கினேன். மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து அந்த நிலாவின் ஒளியிலேயே பிரித்தேன். சட்டென்று முல்லைப் பாட்டு என்ற பெயர் என் கண்ணிற்பட்டது. நிலவில் மலர்ந்த அம் முல்லையினால் என் உள்ளம் மலர்ந்தது.......... அந்தச் சமயத்தில் மட்டும் என்னை யாரேனும் புதி தாகப் பார்த்திருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித் திருப்பதாகவே கருதியிருப்பார். என்னுடைய மன உணர்ச்சி அவ்வளவு தீவிரமாக இருந்தது (நல்லு ரைக் கோவை II பக். 99—101.)

மேற்கு இந்தியத் தீவுக்கரையைக் கண்டுபிடித்த கொலம்பஸின் மன உணர்ச்சியின் தீவிரத்திற்கு இஃது எவ்வளவேனும் தாழ்ந்ததாகுமோ!

## பதிப்பின் சிறப்புக்கள்

இதுகாறும் ஏடு தேடுதலைப்பற்றிச் சில கூறினோம். இனி பதிப்பு விஷயத்தைப்பற்றி இரண்டொன்று கூற முயல்வோம். ஸ்ரீ ஐயரவர்கள் பதிப்புத் துறையில் நுழைந்ததற்குமுன் வரையில் நூற்பதிப்பென்பது ஏட்டி லுள்ளவற்றைப் பிழை நீக்கி அச்சில் கொண்டுவருவ தோடு நின்றது. குறிப்புக்கள், மேற்கோள்கள், ஒப்புமை கள், அரும்பத முதலியவற்றின் அகராதிகள், விமர்சன முறையில் எழுதிய முகவுரைகள் பெரும்பாலான தமிழ்ப் பதிப்புக்கள் அறியாதனவாகவே இருந்தன. பண்டை உரையாசிரியர்கள் மேலே குறித்த பண்பு களைத் தத்தம் உரைகளில் திறம்படக் கையாண்டிருந் தாலும், பிற உதவிகளை நாடாமல் பதிப்புக்கள் தாம் கூறுவனவற்றைச் செப்பமாகக் கூறும் வழக்கம் அப் பண்டை உரையாசிரியர்களிடம் அருகியே காணப் பட்டது. 'நச்சினர்க்கினியர் தாம் காட்டும் மேற் கோள்கள் இன்ன நூலைச் சார்ந்தவை என்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை' என்று ஸ்ரீ ஐயரவர்கள் கூறியுள்ளதை முன்னமே காட்டியிருக்கிறோம்.

இத் துறையில் ஸ்ரீ ஐயரவர்கள் செய்த சீர்திருத் தம் தமிழுக்குப் புதுமையானது. அன்றியும் ஒப்பு மைகளைக் காட்டல் ஐயரின் பதிப்புக்களின் ஒரு தனிச் சிறப்பு. ஒரு முறை ஸ்ரீ ஐயரவர்கள் தம் நண்பர் ஒருவர் கையிலிருந்த ''பைபிள்'' என்ற புத்தகத்தின் ஒரு விசேடப் பதிப்பில் 'ஒப்புமைப் பகுதி' (Concordance) அமைந்திருந்த தன்மையை முதன் முதலாகக் கண்டு தாமும் தம் பதிப்புக்களில் அம்முறையைக் கையாள வேண்டுமென்று உறுதி கொண்ட சுவையான ஒரு நிகழ்ச்சியை 'என் சரித்திரம்' 986 *a*, *b* பக்கங்களிற் காண்கிறோம். அங்குக்கூறப் பெறுவதாவது :- ''அப்போது எனக்குப் புறநானூற்று ஆராய்ச்சியில் புது முறை ஒன்று தோற்றி யது. புறநானூற்றிலுள்ள விஷயங்களையும் சொற் களையும் முதலிலே அகராதியாகச் செய்துகொண்டு ஆராய்ச்சிசெய்தால் உண்மை யுருவத்தைக் கண்டு பிடிப்பது சுலபமாக இருக்குமென்று அறிந்தேன். அங்ஙனமே செய்து வைத்துக்கொண்டேன்'' (பக் 986 *b*)

## மேற்கோளாட்சிகள்

அடுத்தபடியாக மேற்கோளாட்சிகளைத் தம் பதிப்பிற் காட்டியது ஸ்ரீ ஐயரவர்களின் பதிப்புக் களின் தனிச் சிறப்பு' ''இப்படி மேற்கோளாராய்ச்சி யிலே சென்றகாலம் மிக அதிகம். பிரயோகங்களைத் தொகுத்து வகைப்படுத்துவதிலே உண்டான சிரமம் எவ்வளவோ மிகுதியாக இருந்தாலும் ஒரு முறை பட்ட கஷ்டம் பல நூற்பதிப்புக்கு உபயோகமாக இருந்தது. அக்காலத்தில் நான் செய்து வைத்துக் கொண்ட பலவகை அகராதிகளே இன்றும் எனக்கு மூல நிதியாக உதவுகின்றன. அவற்றைக் காணும் போது 'எவ்வளவு காலம், எவ்வளவு அன்பர்களு டைய உழைப்பு இவற்றில் சென்றிருக்கின்றன?' என்று எண்ணி வியப்புறுவேன். அவற்றின் அருமை பெருமையை அச்சிட்ட புத்தகங்களைப் படிப்பவர்கள் சிறிதும் அறியார். மிக உயர்ந்த அலங்காரமான மாளி கையைக் கண்டு அதன் அழகில் ஈடுபடுபவர்கள் அம் மாளிகை எந்த அஸ்திவாரத்தின்மேல் எழுப்பப்பட்ட தென்பதைக் கவனிப்பதில்லை. மிகவும் ஜாக்கிரதை யாய்ப் போட்ட அந்த அஸ்திவாரம் பூமிக்குள் மறைந்து கிடக்கிறது.'' (பக் 986 *d*, *e*)

இவ்வாறு புதிய ஏடுகளைக் கண்டெடுத்து, அவற்றை இன்ன நூலின் ஏடுகள் என்பதை அறிந்து, அவற்றைச் செப்பனிட்டு மிக உயர்ந்த பயனளிக்கும் வகையில் பதிப்பித்து அச்சிட்டு உதவுதலாகிய புதிய முறையும், பழந்தமிழரின் வரலாறுகளையும் பண்பாடு களையும் இலக்கிய வகைகளையும் அறிதலான புதுமை யும் கொண்ட ஒரு சகாப்தமே மகாமகோபாத்யாய டாக்டர் ஐயர்வர்களால் இந்நூற்றுண்டில் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பெற்றது. இதற்கு மூலமாய் இருந்து அனுக்கிரகித்தவர் மகாவித்வான் பிள்ளையவர்கள். இவ்விரு மகோபகாரிகளின் பெயர்கள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எந்நாளும் வாழ்வதாகுக.

*For any kind of*

# PRINTING

*Contact*

Phone 113

# THE SARASWATHI PRESS

## CUDDALORE-2

★

**SERVICE OUR MOTTO**

**AND**

**SATISFACTION OUR ONLY AIM**

*Prop: T. V. Devarajen.*

# பஞ்சதந்திரமும் சிலப்பதிகாரமும்

வி. ஐ. சுப்பிரமணியம்

சிலப்பதிகாரத்தின் பதினைந்தாவது கதையிற் பிராமணப் பெண்ணொருத்தி, கீரிப்பிள்ளை ஒன்றைத் தவருகக் கொன்ற கதை கூறப்படுகிறது.

அந்நூலுக்கு உரைசெய்த அரும்பத உரையாசிரியர் 'அபரீக்ஷய...' என்று தொடங்கும் சமஸ்கிருத ஸ்லோகம் ஒன்றை ஐம்பத்தெட்டாம் வரியின் கீழ்க் குறித்துள்ளார்.

அவர்பின் உரை செய்த அடியார்க்கு நல்லாரும் கீரிப்பிள்ளை கதையை விரிவாகக் கூறி, மேலே குறிப்பிட்ட ஸ்லோகத்தையும் குறிப்பிட்டுள்ளார். அந்த ஸ்லோகம் பஞ்சதந்திரத்தில் வருவது என்று சிலப்பதிகாரத்தைப் பதித்த உ.வே. சாமிநாதையர் கூறியுள்ளார்.

நீலகிரிமலையில் வாழும் கோதர் எனும் பழைய மலைவாழ் ஜாதியினரும் இத்தகைய கதையொன்றைக் காப்பாற்றிவருகின்றனர். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இதை யொத்த கதையொன்று காணப்படுகிறது.

பலமொழிகளில் வழங்கிவரும் கீரிக்கதையின் செய்திகளை ஒத்து நோக்கி எந்தக்கூறு முன்னது, எது பின்னது என்று தெளிவதுதான் இக்கட்டுரையின் நோக்கம். எஸ். வையாபுரிப் பிள்ளை, பஞ்சதந்திர ஸ்லோகம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டிருப்பதால் அதன் காலம் பஞ்சதந்திரத்தின் பின்தான் என்று வாதிப்பது தக்கதா என்று ஆராய்வதும் இக்கட்டுரையின் இரண்டாவது நோக்கமாகும்.

சிலப்பதிகார வரிகளிற் காணப்படும் செய்திகள் ; (1) கீரிப்பிள்ளையின் சாவு (2) பிராமணன் ஒருவன் பாவஞ் செய்த தன் மனைவியைத் துறந்து வடநாடு செல்வது (3) அவன் மனைவி அவனைப் பின்தொடர்வது (4) அவன் அதனைப் பொறுக்காமல் வடமொழி வாசகம் ஒன்றை ஏட்டில் எழுதிக்கொடுப்பது (5) அவ் வேட்டை வாங்கித் தன் பாவத்தைப் போக்கப் பொருள் தருமாறு செல்வந்தர்களை அவள் இரப்பது (6) கோவலன் அவ்வேட்டைப் பெற்று போதிய பொருள் கொடுத்தல் (7) அவள் கணவனை வரவழைத்து இருவரையும் வாழ வைத்தல். இவ்வேழு செய்திகளும் காணப்படுகின்றன.

அரும்பத உரையாசிரியர் மிகச் சுருக்கமாகத் தமது உரையை அமைத்துள்ளதால் அடியார்க்கு நல்லார் உரையில் மட்டும் சில புதிய செய்திகள் காணப்படுகின்றன. கீரிப்பிள்ளை எவ்வாறு இறந்தது என்பதை (*a*) கீரிப்பிள்ளை பிராமணப் பெண்ணின் குழந்தையைக் காத்து நின்றது (*b*) அணுகிய பாம்பைப் பல துண்டுகளாக வெட்டியது (*c*) குருதி தோய்ந்த வாயுடன் பிராமணப் பெண்ணின் வரவிற்குக் காத்து நின்றது. (*d*) வந்தவள் கீரி தனது குழந்தையைக் கொன்றது என்று சந்தேகித்தது (*e*) கை மணையால் அதனைக் கொன்றது. (*f*) தனது குழந்தை உயிருடன் இருப்பதைக் கண்டு வருந்துதல் ஆகிய ஆறு செய்திகளால் விரிவுபடுத்தியுள்ளார். இவற்றையடுத்து, அவள் கணவன் இப் பாவச்செயலால் அவளைத் துறப்பதும் நூலிற் காண்பதுபோலவே கூறியிருக்கிருர். அரும்பத உரையாசிரியர் குறித்த ஸ்லோகத்தை அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுகிருர்.

சிலப்பதிகார நூலில் கீரி இறந்த செய்தி மட்டும் காணப்படுகிறது. பிள்ளையைக் காத்தல், பாம்பின் வருகை, அதனைக் கொல்லுதல், அதன் இரத்தம்படிந்த

வாய், பிராமணப் பெண் சந்தேகித்துக் கொல்லுதல், தன் குழந்தையைக் காணல், சிந்தியாது செய்த தவறுக்கு வருந்துதல் ஆகிய அனைத்தும் அடியார்க்கு நல்லார் உரையால் மட்டும் தெரியவருகின்றன.

பிராமணப் பெண் கீரியின் கையில் தன் குழந்தையை ஒப்படைத்துவிட்டு எங்கே சென்றாள்? அந்நேரத்தில் பிராமணன் என்ன செய்துகொண்டிருந்தான்? ஆகிய கேள்விகளுக்கு அடியார்க்கு நல்லார் உரையிலும் விடையில்லை. ஆனால் பஞ்சதந்திர நூலில் இக்கேள்விகளுக்கு விளக்கம் கிடைக்கிறது.

பஞ்சதந்திரக் கதைகள் இந்திய நாட்டிலும் வெளி நாட்டிலும் பரவியுள்ளன. கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் பால்வி மொழியில் இந்நூல் மொழி பெயர்க்கப் பட்டது. அதன் மூலம் மத்திய கிழக்குப் பிரதேசங்களிற் பரவியது. இவ்வாறு தூர தேசங்களிற் பரவியதால் பஞ்சதந்திரக் கதைகளில் பல மாற்றங்கள் நேர்ந்தன. இம்மாற்றங்கள் அனைத்தையும் தொகுத்தால் பூர்வகதை எதுவாக இருக்கும் என்று ஊகிப்பது எளிது. ஹெர்ட்டல், (Hertel das panchatantra) 1914 ஆம் ஆண்டில், பூர்வ கதையை ஊகிக்கமுயன்றார். பின்னர் எட் ஜர்ட்டன் (F. Ed Gerton, the Panchatantra Reconstructed) 1934-ம் ஆண்டில் அதனைத் திருத்தி ஆதார பூர்வமாக்கினார், அதில் கீழ்க்காணும் கூறுகள் கீரிக்கதையிற் காணப்படுகின்றன. (அ) பிராமணப் பொண்ணொருத்தி, பேறு கழிந்து பத்தாம் நாள் தன்னைத் தூய்மை செய்துகொள்வதற்காக ஆற்றுக்குச் செல்லும்போது தன் குழந்தையைத் தனது கணவனிடம் ஒப்படைத்திருக்கிறாள் (ஆ) அந்நாட்டு அரசி பிராமணனை அழைத்துவர ஆள் அனுப்புகிறாள். (இ) அரசிதரும் தானத்தைப் பெறுவதற்காக பிராமணன் அரண்மனை செல்கிறான். (ஈ) தனியாகக் கிடக்கும் குழந்தையிடம் பாம்பொன்று நெருங்குகிறது (உ) அதனைக் கீரிப்பிள்ளை கடித்துத் துண்டாக்குகிறது (ஊ) திரும்பிவரும் பிராமணனிடம் தான் செய்த வீரச் செயலைக்காட்டுவதற்கு இரத்தம் படிந்த வாயுடன் எதிரோடிச் செல்கிறது (எ) தன் குழந்தையைக் கீரி கடித்ததென சந்தேகித்து அதனைத் தன் கோலால் கொல்கிறான் (ஏ) வீட்டினுள்ளே சென்றதும் குழந்தை ஊனமற்று இருப்பதும் பாம்பொன்று அருகில் துண்டு பட்டுக்கிடப்பதும் காண்கிறான் (ஐ) அவள் மனைவி ஆற்றிலிருந்து திரும்பியதும் நடந்ததத்தனையும் கூறி வருந்துகிறான் (ஒ) சிந்தித்துச் செயல்படாவிட்டால் துயரம் பெருகும் என்று அவன் மனைவி அவனுக்கு உபதேசம் செய்கிறாள். இக்கூறுகள் மட்டுமே ஆதார பூர்வமான மூலக் கதையில் காணப்படுகின்றன.

கீரியைக் கொன்றது, இக்கதையில் பிராமணன்; பிராமணப் பெண்ணன்று. பிராமணன் உபதேசம் செய்யவில்லை. பிராமணப் பெண்தான் அவனுக்கு உபதேசம் செய்கிறாள். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர்கள் இருவரும் காட்டிய அபரீக்ஷய......என்று தொடங்கும் ஸ்லோகம், இம் மூலக்கதையிற் காணப்படவில்லை. இச் செய்தி நம் கவனத்திற்குரியது. பின்னர் எழுந்த இரு ஏடுகளில் (பூர்ணபத்ரர் ஏட்டிலும் பின்னொன்றிலும்) இந்த ஸ்லோகம் காணப்படுகிறது. ஆனால் கீரிக்கதையின் முகப்பாக இந்த ஸ்லோகம் அவற்றில் இடம்பெறுகின்றன. கீரியைக் கொன்றதும் பிராமணப் பெண்தான் இவ்வேடுகளில். ஆனால் பிராமணன் பேராசையால் குழந்தையைத் தனியாக விட்டுச்சென்றதால் இது நடந்தது என்று அவள் தனது கணவனை இவ்வேடுகளில் நோகின்றாள்.

நீலகிரி மலையில் வாழ்ந்துவரும் கோதர் (Kotas) என்னும் பழங்குடி மக்கள் இக்கதையைத் தற்போது நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கூறிவிடுகின்றனர். இவர்கள் கதையிலும் கீரியைக் கொன்றது ஒரு பெண்தான். தனது கணவன் சினம்கொண்டு தன்னை அடிப்பான் என்று பயந்து அவள் தனது குழந்தையுடன் தன் தந்தை வீட்டிற்குச் சென்றுவிடுகின்றாள். காட்டிலிருந்து திரும்பிய கணவன் தனது மனைவியும் மகனும் காணுமல் இருப்பதையும், கீரி இறந்து கிடப்பதையும் பார்த்துத் தனது எதிரியைச் சந்தேகித்து அவனுடன் சண்டையிடுகிறான். அதனால் ஊர்ச்சபை அவனுக்குத் தண்டம் விதிக்கிறது. சிந்திக்காமல் செயல்படக் கூடாது என்று அவன் மனைவியையும் எச்சரிக்கிறது. இவ்வாறு எமனோ (M.B. Emeneau, 1947) இக்கதையைத் தொகுத்துக் கூறியிருக்கிறார்.

கோதர்களிடையே காணும் கதைக்கும் அடியார்க்கு நல்லார் உரையிற் காணும் கதைக்கும் பின்னருள்ள பஞ்சதந்திர ஏடுகளிற் காணும் கதைக்கும் சில பொருத்தங்கள் இருக்கின்றன. கொல்லுவதற்குக் கருவியாக அடியார்க்கு நல்லார் மணையைக் கூறுகிறார். ஆனால் கோதர் கதையில், தண்ணீர்க் குடம் பயன்படுகிறது. பிராமணன் பிரிவதும், பிராமணப் பெண் அவனைப் பின் தொடர்வதும், பிராமணன் வடமொழி வாசகம் ஒன்றை எழுதிக் கொடுப்பதும், தன் பாவத்தைப் போக்கப் பொருள் தருமாறு செல்வந்தர்களை இரப்பதும், கோவலன் பொருள் கொடுப்பதும் ஆகியவை சிலப்பதிகாரத்திலும் அதன் உரைகளிலும் காணப்படுகின்றன. வேறெங்கும் இல்லை, பிராமணப் பெண்ணுற் கீரி இறப்பது பின்னுள்ள பஞ்சதந்திர ஏடுகளிலும் கோதர் கதையிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது. இது ஒன்றே பஞ்சதந்திர ஏட்டிற்கும் சிலப்பதிகாரத்திற்கும் உள்ள நெருங்கிய பொருத்தம். உரையாசிரியர்கள் குறிக்கும் ஸ்லோகம், "வடமொழி வாசகம் செய்த நல்லேடு" என்னும் வரியை விளக்கும் போது காணப்படுகிறது. ஸ்லோகப் பொருளைக் கவனித்தால், இவ்வடியை விளக்க அது பயனுகுமா என்று சந்தேகிக்க நேரிடும். அதன் பொருள் வருமாறு:- 'தெளிந்தவற்றைச் செய்ய வேண்டும்; தெளியாதவற்றைத் தொடங்கக் கூடாது.

# பிள்ளைக் கனியமுதே! பேசும்பொற் சித்திரமே!

29 APR 1971 MADRAS



'இன்பக் கதைகளெல்லாம் — உன்னைப்போல் — ஏடுகள் சொல்வதுண்டோ ?
அன்பு தருவதிலே — உனைநேர் — ஆகுமோர் தெய்வம்உண்டோ ?' —பாரதியார்



படங்கள் : பி. ரங்கநாதன்

# மகிஷாசுர மர்த்தனி

படம்: பி. ரங்கநாதன்

'பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி'

—சிலப்பதிகாரம்

[காஞ்சிபுரம் சிற்பம்]

## 'வள்ளிக் கிசைந்த முருகேசன்'

[எட்டயபுரம் அருகே மேலக்கரந்தை கிராமத்தில் பூமிக்குள் இருந்து கிடைத்த தெய்வச் சிலைகள்]

# வீராங்கனைகளின் உடற்பயிற்சி

பெண்களும், சிலம்பம், மற்போர் போன்ற உடற்பயிற்சிகளைச் செய்துவர விஜயநகர மன்னர்கள் ஊக்கம் கொடுத்தார்கள்.

ஹம்பி ராமர் கோவிலின் சுவர்ச் சிற்பங்கள். [17-ம் நூற்றுண்டு]

# உள்ளம் கவர் கள்வனின் உலா



‘பெற்றோர் பிடிக்கப் பிழைத்து, செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழாநிற்கும் — ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகில் பேதைக் குழாம்.’ —பட்டினத்துப் பிள்ளையார்

மேலே உள்ள படத்தில் காணும் அதே பெண்களின் வரிசை — வேறொரு திசையில்.

[தஞ்சைக் கலைக்கூடச் சிற்பங்கள்]

# திருப்புன்கூரில் நந்தனார் திருவுருவம்

## வேந்தனும் துறவியும்

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய ராஜ ராஜ சோழனும் கோவிலின் மூர்த்தி மீது திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவரும்.

[தஞ்சைப் பெரிய கோவில் சிற்பம்]

'நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை......'

— பாரதியார்

## துலாபாரம்



தனது எடைக்குப் பொன்னை நிறுத்து வழங்கும் அரசன்.

[கும்பகோணம் மகாமகக் குளத்தைச் சேர்ந்த ஒரு மண்டபத்தில் காணும் சிற்பம்]

நாகயட்சன்

நாக கன்னி

'சூரர மின்னுளோ ! சுரலோக நாயகியோ !
நீரர மின்னுளோ ! நிலநாகர் கன்னிகையோ ?'

—சுப்ரதீபக் கவிராயர்

[திருநெல்வேலி மாவட்டம் பேச்சிப் பேறை சிற்பங்கள்]

# கங்கைத் தாய்

'இன்நறு நீர்க்கங்கை யாறெங்கள் ஆறே'

—பாரதியார்

[எல்லோராச் சிற்பம்]

இல்லையெனில் பெண்ணும் கீரியும் போன்று துயரம் பெருகும்' என்பதாகும். இந்த ஸ்லோகம் கீரிக் கதையின் முகப்பில், பின் கதையொன்றின் இறுதியில் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகார நூலிற் கீரியைச் கொன்றதால் ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்குத் துணைபெற, ஒரு செய்தியைப் பனைவோலையில் பிராமணன் எழுதி அவன் மனைவியின் கையிற் கொடுக்கிறான். அவ்விடத்தில் மேலே கூறிய ஸ்லோகம் பொருத்தமாகத் தோன்றவில்லை. அப் பெண்ணின் துயரமும், பாவம் நீங்குவதற்குரிய மார்க்கங்களையும் தருவது பொருத்தமாக இருக்கும். உரையாசிரியர்கள் இருவரும் விரைந்து வடமொழி ஸ்லோகம் ஒன்றைக் கூறியதாகத் தெரிகிறது. பொருத்தமற்ற ஸ்லோகம் இக்கதையின் கீழ் இடம் பெற்றதால் பஞ்சதந்திரக் கதையே இது என்ற முடிவிற்கு வருமாறு பின்னுள்ளவர்களுக்குத் துணையாக நின்றது. ஆனால் பஞ்சதந்திரத்திற்கும் சிலப்பதிகார நூற்கதைக்கும் மிக அகன்ற உறவே காணப்படுகிறது என்று முன்பு கண்டோம். ஆனால் இரு உரையாசிரியர்களும் பஞ்சதந்திரக் கதையின் பின் தோன்றலே சிலப்பதிகாரக்கதை என்று கொண்டனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை இரண்டிற்கும் வேறுபாடுகள் நிறைய இருப்பதையும் நாம் பார்த்தோம். அவை ஒன்றை ஒன்று தழுவியன என்று கூறுவதற்குரிய சான்றுகள் மிகச் சொற்பமாகவே கிடைக்கின்றன. இவ்வாறு முடிவு கூறும்போது, நாளாவட்டத்தில் ஒரு கதை மாறுபடும் என்பதை நாம் மறந்து விடவில்லை.

பஞ்சதந்திரக் கதைகள் ஒரு நூலாகத் தொகுப்பதற்கு முன் இந்தியாவில் சமஸ்கிருதம் பேசுவோரிடையேயும் வேறுள்ளவர்களிடையேயும் வழங்கி வந்தன என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. சிபி சக்கரவர்த்தியின் கதை மகாபாரதத்தில் மூன்று இடங்களில் காணப்படுகிறது. பஞ்சதந்திரத்தின் பின்னுள்ள ஏடுகளிலும் காணப்படுகிறது. புறநானூற்றில் மூன்று பாடல்களில் (39, 43, 467) இக்கதை காணப்படுகிறது, அதைப் போலவே கீரிக்கதையும் பழைய ஒரு கதையாக இருக்கலாம், பின்னர் பஞ்ச தந்திரத்தில் இடம் பெற்றிருக்கலாம். இவ்வாறு கூறுவதற்கும் போதிய சான்றுகள் இன்று கிடைக்கவில்லை. ஆனால் எளிதில் மறுக்கத்தக்க ஒன்றன்று.

உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய ஸ்லோக அடிப்படையிற் சிலப்பதிகாரம் பஞ்சதந்திர ஸ்லோகத்தைக் கையாள்கிறது என்று தவருகக் கொண்டு, எஸ். வையாபுரிப் பிள்ளை அதன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டின் பின்னர் என்று, தாம் எழுதிய 'தமிழ் மொழி இலக்கிய வரலா'ற்றிற் (1956) கூறியுள்ளார். பஞ்சதந்திரத்திற் காணும் சிபியின் கதை புற நானூற்றில் மூன்று பாக்களில் வருவதை முன்னர் குறிப்பிட்டோம். அந்நூல் கி. பி. மூன்றும் நூற்றுண்டு என்று வையாபுரிப்பிள்ளை குறித்துள்ளார். பஞ்சதந்திரக் காலத்திற்கு இது முன்னராகும். புறநானூற்றுப் பாக்கள் பிற்சேர்க்கை என்று வாதிக்க இயலாது. அப் பாடல்களைப் பாடிய நப்பசலையாரும், தாமப்பல் கண்ணனாரும், கோவூர் கிழாரும் கபிலர் வாழ்ந்த காலத்தவர்கள். கபிலர் பதிற்றுப் பத்தில் ஏழாவது பத்தைப் பாடியவர். சமீபத்தில் வெளியான புகழூர் கல்வெட்டால் பதிற்றுப்பத்தின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகத் தெளிய இயலும். எனவே இடைச்செருகல் வாதம் வலியற்றுப் போகும்.

இந்திய மொழிகளிற் காணும் ஒத்த கதைகளைப் பஞ்சதந்திரத்தின் வழித்தோன்றல் என்று தக்க தெளிவின்றிக் கூறுவது இடர் தரும். அவ்வடிப்படையில், ஒரு நூலின் காலத்தை அறுதியிடுவது அதை விடவும் இடர் தரும்.

★

## செந்தமிழ்ப் பிராட்டி வருகை

போற்றும் முப்பா லமுதருளும்
பொய்யா மொழியைப் பொற்சிலம்பு
புனைந்த சேரல் இளங்கோவைப்
புகழ்சேர் கம்ப னெனுங்கவியைக்

கூற்ற மிகுமே கலைதொடுத்த
கூல வணிகன் சாத்தனைக்
கோது குலவா முச்சங்கப்
புலவர் குழுவை யடிமைநெறி

தேற்றுந் தெய்வக் கவிமொழிந்த
சேக்கி ழாரைக் கச்சிவரு
தெய்வ முனியைச் சிவஞான
தேவன் தன்னை யுலகிவருள்

சாற்றும் பெருமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே.

—நாவாலி க. சோமசுந்தரப் புலவர்

("கலா நிலயம்" : 31-1-1935)

தமிழ் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு
நிறைவுக்கு எங்களது வாழ்த்துக்கள்

**பெரி அன் கம்பெனி**

பிஸ்கட் & மிட்டாய்
தயாரிப்பாளர்கள்

உசிலம்பட்டி S. Ry.
மதுரை மாவட்டம்

எல்லோரும் விரும்புவது

**"அசோகா"**

சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பாளர்கள்,

எம் கெ. கிருஷ்ண செட்டி,
தபால் பெட்டி எண் 1506, கோயமுத்தூர்-18.
போன்: 22006. தந்தி: "ASOKA"

தமிழ் வட்டம் ஆண்டு விழாவிற்கு எங்களது
நல்வாழ்த்துக்கள்

**எ ல் ல ன்**

**மோட்டார், பம்பு செட்டுகள்**

(அரசாங்க அங்கீகாரம் பெற்றவை)

தயாரிப்பாளர்கள்

லக்ஷ்மீ நாராயண இண்டஸ்ட்ரீஸ்,
287, சத்திரோடு, காந்திபுரம்,
கோயம்புத்தூர்-12.

*With the best compliments of:*

**LEO**

BISCUITS
&
SWEETS

*Manufactured By:*

**LEO BISCUITS & CONFECTIONERY**
PERAIYUR ROAD
USALAMPATTI

# மனையியல் மாண்பு — மனையாட்சி

டாக்டர் (திருமதி) இராசம்மாள் தேவதாஸ், எம்.ஏ., எம்.எஸ்ஸி.,
பி.எச்டி., (ஓஹியோ பல்கலைக் கழகம்)

"இல்லம்" ஒரு சமூகத்தின் பண்பாட்டினையும், அதில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை நிலைகளையும் காட்டும் கண்ணாடியாகும். இல்லத்தின் பொருளும் தோற்றமும் குறிப்பிட்ட காலத்திற்கும், நாட்டுக்கும், சமூகத்துக்கும் ஏற்றவாறு வேறுபடலாம். ஆனால், மக்களின் ஆர்வங்களும், அவர்கள் மனை வாழ்க்கைக்கு அளித்திருக்கும் முக்கியத்துவமும், நாகரிகம் ஏற்பட்ட காலத்திலிருந்து, மாறுமலேயே நிலைத்து வந்துள்ளன. 'மனை' என்ற தமிழ்ச் சொல்லுக்கே மனைக்குரிய மனையாள் என்ற பொருள் அமைந்திருக்கிறது. 'பெண் கொடியாக நடந்துலகே' என்ற திருமூலர் வாக்கின்படி, பெண்ணே தொன்று தொட்டு இல்லத்தின் தாயாகவும், 'மனைக்கு விளக்கம் மடவர்' என்றபடி குடும்பத்தின் விளக்காகவும், சமூகத்தின் உயிர்நாடியாகவும் இருந்து வந்திருக்கின்றுள். அவள் தன் துணைவரின் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்து, குழந்தைகள், உறவினர், நண்பர் அனைவரும் நிறைவைப் பெற உதவி செய்கிருள். உலக வரலாற்றில், எல்லாக் காலங்களிலும், பெண்கள் சுய நலமின்றிப் பணியாற்றி வந்திருப்பதைப் பல நீதி நூல்களினின்றும் அறிந்து கொள்ளலாம். இதனுல்தான் வான்புகழ் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, பெண்ணின் பெருமையையும், பொறுப்பையும்,

> "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை"

என்று சுட்டிக் காட்டியிருக்கிருர். திறமையுடன் பெண்ணின் தலைமையிலியங்கும் குடும்ப வாழ்க்கையின் விளைவு புகழ்; ஏறு போலப் பீடு நடை. ஒருவன், பிறர் தன்னை மதிக்கும் வண்ணம் பெருமையுடன் வாழ்ந்து, மகத்தானவற்றைச் சாதிக்க வேண்டுமாளுல், அவன் மனைவி சிறந்த குணங்களை உடையவளாக அமைய வேண்டும். அத்தகைய பெண்களை ஆக்கிச் சமூகத்திற்கு அளிப்பதே மனையியல் கல்வியின் குறிக்கோளாகும்.

### மனையியலுக்கு விளக்கம்

'மனையியல்' என்பதற்குப் பலர் பலவாறு விளக்கம் தந்துள்ளனர். சென்ற நூற்ருண்டின் இறுதியில் அமெரிக்க நாட்டில் - சிகாகோ நகரத்தில் உலகச் சமய மாநாட்டில் பாரதத்தின் புகழை நிலை நிறுத்திய அறிவியல் ஞானியும் துறவியுமான சுவாமி விவேகானந்தர், நம் பெண்களுக்கு சமையல், விஞ்ஞானம், கலைகள், மனை நடத்துதல், தையல், சுகாதாரம் ஆகியவற்றை மனையியல் கல்வியாக வரலாறு - புராணங்களின் அடிப்படையில் புகட்ட வேண்டும் என்றும், அவர்கள் குடும்ப வாழ்வின் உயர்ந்த கடமைகளையும், நற்பண்புகளை வளர்க்கும் கருத்துக்களையும் இக்கால விஞ்ஞான அறிவின் மூலமாகப் பெறும் வண்ணம் அவர்கள் கல்வி அமைய வேண்டும் என்று கூறியுள்ளார். அடிகளாரின் விளக்கத்திலிருந்து, 'மனையியல்' என்பது மனை வாழ்க்

கைக்குரிய ஆன்மீக, விஞ்ஞான, அறிவியல் கல்வி என்பது புலனாகும்.

கல்வித் திட்டங்களில் மனையியலை ஒரு தனித் துறையாக ஏற்படுத்திய பெருமை முதன் முதலாக அமெரிக்காவுக்குத் தான் சாரும். அமெரிக்க நாட்டின் மனையியற் சங்கத்தை நிறுவிய டாக்டர் எல்லன் எச். ரிச்சர்ட் என்ற அம்மையார், 1912-ம் ஆண்டில் மனையியலுக்குக்கொடுத்த விளக்கத்தின்படி மனையியற் கல்வி, வாழ்க்கையை வளப்படுத்தி, அதற்கு உயர்ந்த லட்சியங்களையும், குறிக்கோள்களையும் வகுப்பதும், ஆடம்பர வாழ்க்கையின் தளைகளிலிருந்து மனிதனை விடுவித்து அவனது உள்ளத்திற்கும், சமுதாயத்திற்கும் என்றும் அழியாத ஆன்மீகத்தை அளிப்பதும், எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, உயர்ந்த சிந்தனைகளில் திளைக்க வைப்பதும், தொன்று தொட்டு கையாளப்பட்டு வந்துள்ளவற்றில் நல்லன வெல்லாம் நிலைக்கவைத்து, ஒவ்வாதவற்றை விளக்க உதவுவதும், மனிதனை ஆண்டவனிடத்தில் அழைத்துச் செல்வது மாகும்.

இன்றைய விஞ்ஞான உலகில், மனித வாழ்க்கையில் ஓயாமல் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. கல்வி, தொழில், வாழ்க்கைத் தரம், விஞ்ஞான வளர்ச்சி, போக்குவரத்து ஆகியவற்றால் மனிதப் பண்புகள் மோதப்படுகின்றன. மாறுகின்ற வாழ்க்கையின் மாறாத அடிப்படையில் பண்புகளான கற்பு, அன்பு, ஆன்மீகம், தியாகம், உழைப்பு, உறுதி ஆகியவற்றையே வளர்ப்பதும் மனையியல். அக்கல்வியைப் பெற்ற பெண்டிர் வாழ்க்கையை உயர்ந்த நெறியில் செலுத்தி, தம் துணைவருக்கும், குழந்தைகளுக்கும் சிறந்த வழிகாட்டிகளாக இருக்க முடிகிறது. இல்லறத்தை இனிது நடத்த உதவக்கூடிய அறிவைத் தரும் பல துறைகளையும் கற்று, அவற்றை நன்முறையில் செயல்படுத்தி, நிறைந்த பயன்களைப் பெற்று, வளர்ச்சியையும் நிறைவையும் பெறச்செய்வது மனையியல்.

வாழ்க்கையின் உண்மை நிலைகளை உள்ளவாறு அறிந்து, அதன் இன்ப துன்பங்களுக்கிடையே அமைதியும் இன்பமும் நிறைந்த இல்லற வாழ்வைப் பெறுவது மனையியல் வழங்கும் பயனாகும். தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும், குடும்ப வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் வேண்டிய எல்லா ஆற்றல்களையும் திறமைகளையும் தருவது மனையியல். உடல் உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதும், சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், அறிவியலையும், அறிவியல் முறைகளையும் பயன்படுத்தி, அன்றாட வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வழி காட்டுவதும், மனையியலின் மற்றக் குறிக்கோள்களாகும்.

இறைவழிபாடு, பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு சிறந்த குடும்பங்களை உருவாக்குவதும், அவற்றிற்கு வேண்டிய உணவு, உடை, ஆரோக்கியம் ஆகியவற்றைக் குறைவின்றித் தருவதும், மனை அமைத்தல், மனையை அலங்கரித்தல் ஆகியவற்றை அறிவுடன் சேர்ந்த முயற்சியுடன் செயல் புரிந்து அதன் மூலமாகக் கிடைக்கும் உழைப்பு, பணம் முதலியவற்றை உயர்ந்த பணிகளுக்கு அளிப்பதும் குடும்ப வருவாய்க்குள் வாழ்வதும், குழந்தை பராமரிப்பையும், சமூக வாழ்க்கையையும் வளப்படுத்த, தகுந்த முறைகளை—சத்துணவு தயாரித்தல், உணவைப் பாதுகாத்தல், ஆடைகளைத் தைத்தல், பாதுகாத்தல், நோய் தடுத்தல், சேமித்தல் ஆகியவற்றில் மேற்கொள்வதும், சமூக முன்னேற்றம், சமுதாய நலத் திட்டம், மகளிர் சங்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு, மகளிர் தம் பங்கைச் சிறப்புடன் ஏற்று நடத்தவும் உதவுகின்றது.

### கல்வியும் மனையியலும்

கல்வி, மனிதனுக்குள் மறைந்துள்ள தெய்வீகச் சக்தியை வளப்படுத்தி, அவனுடைய பார்வையை விரிவாக்கிச், சமூகத்தை முன்னேற்றுவதாக அமைய வேண்டும். அத்தகைய கல்வியே மனையியல். இல்லத்தரசிகளாகவும், தாய்மார்களாகவும் விளங்கும் பெண்களுக்குத் தம் கடமைகளைச் சரிவரச் செய்ய விஞ்ஞானத்தின் அடிப்படையில் மனையியல் பெரிதும் உதவுகிறது. நிறைவுதரும் இல்லங்களைச் சமுதாயத்திற்கு உருவாக்கித் தருவது மனையியலின் பெரும் தொண்டாகும். பெண்கள் மகிழ்ச்சிகரமான குடும்பங்களை அமைப்பதின் மூலம், வருங்காலத் தலைவர்களை உருவாக்கி நாட்டிற்கு நலம்புரிய உதவுகிறது மனையியல். மக்களிடத்தே நாட்டுப் பற்றையும் உணர்ச்சியையும் வளர்த்து, சேவைசெய்யும் ஆர்வத்தை எழுப்பி அனைத்துலக அமைதியை நாடச் செய்வதும் மனையியல் ஆற்றும் அரிய பணியாகும்.

நமது நாட்டில், விவசாய விளைச்சலின் பெரும் பகுதி வீணாகின்றது. உணவு தயாரித்தல், பரிமாறுதல், பயன்படுத்தல், சேமித்தல் முதலியவற்றில் தவறான முறைகளை மேற்கொள்ளுவதால் ஏற்படும் விரயமும் அதிகம். ஆகவே, உணவைச் சேமித்து வைக்க வேண்டிய முறைகள், பருவ காலத்து உணவுகளைப் பாதுகாக்கும் வழிகள், எலிகளை எதிர்த்து, பல எளிய விஞ்ஞான முறைகளைக் கையாளுவதால் உணவு விரயம் குறையும். இங்ஙனம் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஒழிய, மனையியல் பெரிதும் உதவுகிறது.

ஆரோக்கிய வாழ்வு மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். எனினும், ஏழ்மையாலும், அறியாமையாலும், நம் நாட்டில் பலர் நோய்களின் பிடியில் சிக்கியுள்ளனர். சுகாதாரம், சத்துணவு ஆகிய துறைகளில் அறிவை வளர்ப்பதின் மூலம், மனை

யியல் மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கின்றது, அவர்களுடைய உழைக்கும் சக்தியை அதிகரித்து, நாட்டின் செல்வத்தை அதிகரிக்கிறது. இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு மனையியல் பெரிதும் உதவுகிறது. மேலும், பெண்கள் பல துறைகளில் பணி புரிவதற்கேற்ற பயிற்சியை அளித்து, அவர்கள் சமூக நல ஊழியர்களாகவும், ஆசிரியைகளாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், நிர்வாகிகளாகவும் இன்னும் பல துறைகளிலும் பணிபுரிய வாய்ப்புக்களைத் தருகிறது. மனையியல் கற்றவர்கள் தொழில் துறைகளில் ஆலோசகர்களாகவும், விற்பனையாளர்களாகவும், பொருள் அமைப்பாளர்களாகவும் பணிபுரிகின்றனர். புதிய தயாரிப்புகளை விளம்பரப் படுத்தவும், அவற்றை விளக்கும் சிறு புத்தகங்கள், படங்கள், கட்டுரைகளைத் தயாரிக்கவும் உதவி செய்கின்றனர்.

### அடிப்படைத் தத்துவம்

பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி நடத்தி, அவற்றின் முடிவுகளை நடைமுறையில் பயன்படுத்த உதவுகின்றனர். சமூக நலப் பணித் துறையில் அனாதைகளுக்கும், அங்கஹீனர்களுக்கும், வலுக் குன்றிய தாய்மார்களுக்கும் அவரவர் பிரச்சினைகளைத் தீர்க்க ஆலோசனை கூற மனையியல் கற்ற பெண்டிர் மிகவும் பொருத்தமானவர்கள்.

தேடித், தேடியவற்றை அறிந்து,
அறிந்தவற்றை உணர்ந்து,
உணர்ந்தவற்றை அனுபவித்து,
அனுபவித்த உண்மையில் அன்புகாட்டி,
உயர்ந்த உண்மைக்காக உழைத்து,
உழைப்பில் தன்னை மறந்து
பணியாற்றும் பண்பே வாழ்வின் குறிக்கோள்.

இத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மனையியல், பெண்ணினத்தையும், சமுதாயத்தையும், நாட்டையும் மேம்படுத்துகிறது.

### இலக்கியம் சம்பந்தமாகப் பேரமா ?

வாழ்க்கையில் வேறு எந்தத் துறையில் ...................... பேரம் பண்ணிக்கொண்டிருந்தாலும், கலை இலக்கியம் சம்பந்தமாகப் பேரம் பண்ணவே கூடாது. இதை எப்படியோ நம்முடைய முன்னோர்கள் உணர்ந்து அழகாகக் கதை கற்பித்துவிட்டார்கள். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்றால் வேறென்ன ?

ஆனாலும் சமீபத்தில், நாற்பது ஐம்பது வருஷமாகத்தான், இலக்கிய சம்பந்தமாக வேண்டாத சில கொள்கைகள் வந்து நமக்குள் புகுந்து கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு வார்த்தையும் இலக்கணமும் வழக்கொழிந்திருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு உயர்ந்த இலக்கியம் என்று மதிப்பேறிவிட்டது. அப்பேர்பட்ட நூல்களையோ பகுதிகளையோ பாடமாக வைத்து, வியாக்கியானம் விமரிசனம் எல்லாம் சொல்லிப் பிரமாதப்படுத்தி விடுகிறார்கள்......

ஆகையால், நூல்களை மதிப்பிடும்போது பழமையென்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது; உருவம் என்று சொல்ல இடமில்லாத செய்யுட்களைத் தள்ளிவிடத் தயாராயிருக்கவேண்டும். பழைய நூல்கள் என்றால் கவிப்பண்பும் இதயப்பண்பும் இருந்தால்தான் ஒப்புக்கொள்ள வேண்டும். மற்றபடி மதிப்புக் கொடுத்துவிடக் கூடாது.

—டி. கே. சிதம்பரநாத முதலியார்
("இதய ஒலி")

தமிழ் வட்டத்திற்கு எங்கள்
நல்வாழ்த்துக்கள்!

**காவேரி**

**செங்கல்**

**தொழிற்சாலை**

77, மதுரைசாலை

திருச்சிராப்பள்ளி-8.

தொலைபேசி எண்: 5456/பிரிவு-1.

பானங்களில் சிறந்த

**ஸ்ரீ மல்லீஸ்வரி**

சோடா, ஆரஞ்சு, லெமன்

பெஸ்ட்-ஓ முதலிய

பானங்களை அருந்தி இன்புறுங்கள்

எமது பிரத்தியேக தயாரிப்பு :—

அட்லாஸ் 'லவ்-ஓ'

தந்தி : GOLDSYRUP போன் : 4889

ஸ்ரீ மல்லீஸ்வரி எரேடட் வாட்டர் பேக்டரி,
உறையூர், திருச்சி-3.

தந்தி: "அரிஸ்டோ" போன்: 3201 (4 Lines)

**ஹோட்டல் அரிஸ்டோ**

போர்டிங் & லாட்ஜிங்

2, திண்டுக்கல் ரோடு, திருச்சி-1.

★

- சகல வசதிகள் ஒருங்கே அமையப்பெற்ற அறைகள்.
- சுவையான உணவு.
- முகமலர்ந்த உபசரிப்பு.

*With best compliments of:*

**M|s. V. K. SAMY**

CONFECTIONERS & BISCUIT
MANUFACTURERS

USALAMPATTI

*Manufacturers of:*

**HIGH CLASS "VKS"
SWEETS & BISCUITS**

# தமிழரும் தமிழ் நாடகங்களும்

கார்த்திகேசு சிவத்தம்பி
(பர்மிங்காம் பல்கலைக் கழகம்)

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கட் கூட்டத்தினர், மொழி முதல் வாழ்க்கை முறை வரை பல்வேறு வேறுபாடுகள் உடையவர்களாகக் காணப்படுவது உண்மையெனினும் அவர்களின் சமூக நிறுவனங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராயுமிடத்துச் சில அடிப்படை ஒற்றுமைகள் காணப் படுவதும் உண்மையே. மனித இனத்தின் ஒருமை யிலும், ஒற்றுமையிலும் நம்பிக்கை வைப்பதற்கு இவ் வுண்மை காரணமாகவும் உதாரணமாகவும் விளங்கு கின்றது. குறிப்பிட்ட பொருளியல், சமூக நிலைமைகள் காரணமாகவே, குறிப்பிட்ட பண்புகள் தோன்றும்.

நாடகம், மக்களின் கூட்டு வாழ்விலும், கலைத் துறை முன்னேற்றத்திலும் முக்கிய இடம் வகிப்பது. உலகின் பல பாகங்களிலும் உள்ள நாடகங்களின் தோற்ற வளர்ச்சிகளை அவதானிக்கும் பொழுது மேற் குறிப்பிட்ட உண்மை மேலும் நிருபணமாகின்றது.

நாடகம் சமயச் சடங்கினடியாகவே தோன்றுவது என்ற பொது விதிக்குத் தமிழ் நாடகமும் உட்பட்டதே. ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி போன்றவை கூத் தும் மதச்சடங்கும் கலந்து நிற்கும் உருவங்களாம்.

தோற்றத்திற் காணப்படும் ஒற்றுமையை, வளர்ச்சி யிற் காண முடியாதிருக்கின்றது. சில மொழிகளில் நாடகங்கள் வளர்ச்சியுற்றும் சிலவற்றில் சிறப்பான வளர்ச்சியற்றும் சில மொழிகளில் வளராமலும் இருப் பதை நாம் காணலாம்.

சிறப்பான வளர்ச்சி பெற்ற நாடகங்களையுடைய மொழியினதும், மொழிக் கூட்டத்தினரதும் வர லாற்றை நோக்கும் பொழுதும், நாடக வளர்ச்சியற்ற மொழிக் கூட்டத்தினரின் வரலாற்றை நோக்கும் பொழுதும், நாடக வளர்ச்சிக்கு வேண்டிய அத்தியா வசிய அரசியல், பொருளியல், சமூகப் பின்னணி துல்லியமாகத் தெரியவரும்.

### கிரேக்க, ஆங்கில நாடகங்கள்

மேனுட்டு நாடக வளர்ச்சியின் இரு முக்கிய கட் டங்களாக அமையும் கிரேக்க நாடக வளர்ச்சியையும் (கி. மு. 6ம், 5ம் நூற்றுண்டுகள்) எலிசபெத் கால ஆங்கில நாடக வளர்ச்சியையும் (கி. பி. 17ம் நூற் ருண்டு) ஒப்பு நோக்கினல் நாடகம் மக்கள் கலையாக விரிந்து உன்னத நிலையையடைவதற்கு வேண்டிய அரசியல், பொருளாதார, சமூகச் சூழ் நிலைகளை அறிந்து கொள்ளலாம்.

புராதன கிரீசில், பிரபுத்துவக்குழு ஆட்சியை முறி யடித்து மக்களாட்சியை நிறுவ முனைந்த காலத் திலும், மக்களாட்சி ஓங்கி வளர்ந்த காலத்திலுமே கிரேக்க நாடகம் தலை சிறந்த கலாவடிவமாக வளர்ந் தது. குழு ஆட்சியை வீழ்த்திச் சன நாயகத்தை நிறுவியபொழுது, பொது மக்களின், சமய சமூக வாழ் விற் காணப்பட்ட சடங்குகளும் சம்பிரதாயங்களும் அரசாங்கத்தாற் போற்றப்பட்டன. ஒலிம்பியத் தெய் வங்கள் மதிப்பிழந்தன. கீழ்நிலை வகுப்பினரின் தெய் வமான தயோனிசசின் வணக்கம் மேல் நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. தயோனிசசுக்கான திருவிழா வின் பொழுதே நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன; வளர்ந்தன. குழு ஆட்சியின் அதிகாரத்தை எதிர்த் துப் புதிய ஆட்சி முறையை வளர்த்தவர்களுக்கும் ஏதென்சின் வணிக வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர் புண்டு.

இங்கிலாந்திலோ 1485க்குப்பின் அதிகாரத் துக்குவந்த தியூடர்கள், அக்காலத்திலிருந்த இங்கி

லாந்தின் முக்கிய நிலப்பிரபுத்துவக் குடும்பங்களுக் கெதிராகப் போராடினர். அக்குடும்பங்களின் அதிகார வலுவைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் மேற் கொண்டனர். ஏழாம் ஹென்றி, எட்டாம் ஹென்றி மன்னர்கள் காலத்திலே தோன்றிய இப்பண்பு, எலிச பெத் காலத்தில் ஏற்பட்ட வணிக வளர்ச்சி காரண மாகச் சிறக்கத் தொடங்கிற்று. வணிகக் குழுக்கள் வளர்ந்தன. பிரபுத்துவத்தை எதிர்ப்பதில், மக்களின் உதவியைப் பெறுவதில் வணிகக் குழுக்களும் அர சாங்கமும் கவனஞ் செலுத்தின. மக்களும் ஆட்சி யாளரும் இலட்சிய ஒருமைப்பாடு உடையவர்களாகக் காணப்பட்டனர். இக்காலத்திலேயே ஆங்கில நாட கம் சிறந்தோங்கி வளர்ந்தது. ஷேக்ஸ்பியர் இவ் வளர்ச்சி வளத்தின் சின்னம்.

கால, இடவேறுபாடுகளிடையேயும் பண்பு ஒற் றுமை நிலவுவதை இவ் ஒப்புநோக்கு புலப்படுத்து கின்றது.

நாடக வளர்ச்சிக்கான சூழ்நிலைகள்

நாடகம் எனும் கலை வளரும் பொழுது, முழுச் சமு தாயமும் அவ்வளர்ச்சியிற் பங்கு கொள்வதைக் காண் கின்றோம். ஆட்சி யதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒருமைப்பாடு காணப்படும் பொழுது அப்பொதுமையின் சின்னமாக நாடகம் வளருகின்றது. நாடகக்களரியில் மக்கள் யாவரும் ஒருங்கு திரளவேண்டும். நாடகத்திற் காட்டப்படுவது குழுமியிருக்கின்ற மக்களின் பாரம்பரியத்துடன் இயைந்ததாகவும் அவர்களுக்கு விளங்கக் கூடியதாக வும் இருத்தல் வேண்டும். சமுதாய ஒருமைப்பாட் டிற் கவனம் செல்லும் பொழுதும் செலுத்தப்படும் பொழுதும் நாடகம் வளருகின்றது. இவ் ஒருமைப் பாடு வேறுபட்ட காரணங்களுக்காக வேண்டப்பட லாம். ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்படுத்திய சமு தாய வேற்றுமைகளை அழிப்பதற்கும், வணிகத்தை வளர்ப்பதற்கும், அரசியல், பொருளாதார சன நாய கத்தை நிறுவுவதற்கும் இவ் ஒருமைப்பாடு அவசிய மாகின்றது. எனவே கூட்டுவாழ்வின் வளர்ச்சியிலும் தேவையுணர்விலும் நாடக வளர்ச்சிக்கான சூழ் நிலை யைக் காணலாம்.

நாடகம் எனும் துறை வளர்ந்த நிலையிலேதான் நாடக எழுத்து முக்கிய இடம் பெறும். நாடகத்தின் முக்கியத்துவத்தில் அதனை எழுதுபவனும், நடிப்பவ னும் முக்கிய இடம் பெறுவர். எனவே நாடகத்தை இலக்கியமாக மாத்திரம் பார்த்தல் உண்மையைத் திரி புறுத்திக் காட்டும்.

நாடகம் வளர்ச்சியடைவதற்கான அடிப்படைப் பண்பைப் பார்த்த நாம், அப்பண்பு தமிழர் வரலாற்றில் இடம் பெறும் முறையினைப் பார்த்தல் வேண்டும்.

தமிழ் நாடு இந்தியாவின் பிரதேசங்களில் ஒன்று பிற இந்திய பிரதேசங்களைப்போன்று இங்கும், இந்திய பொதுப் பண்பும் பிரதேசச் சிறப்புப் பண்புகளும் இணைந்து இப்பகுதிக்கும் இப்பகுதியில் உள்ள மொழிக் கும், இம்மொழியைப் பேசுவோர்க்கும் ஒரு தனித் துவத்தை அளித்துள்ளன.

சரித்திர காலம் முதல் இன்றுவரை நிலவும் சமு தாயப் பண்புகளைப் பார்ப்போம்.

முதலாவது தமிழர் சமுதாயத்தில் சாதி வேறுபாடு உண்டு. ஆரம்பத்தில் காணப்படாத உயர்வு தாழ்வுக் கோட்பாடு, பிரதேச, தொழிற் குழுக்களைச் சாதி களாக வகுத்து விட்டது. இக்குழுக்கள் ஒவ்வொன் றும் தம்முள் சமத்துவமுடையவை. மத, தொழில், சம்பிரதாய ஒருமையுடையவை. பல்வேறு காலப் பிரிவுகளில் இவற்றுக்கிருந்த வலிமைக் கேற்ப இவற் றின் முன்னேற்றமும் தாழ்வும் ஏற்பட்டன.

இரண்டாவது, இச்சாதிக் குழுக்கள் ஒவ்வொன் றும் அதிகாரத்திலும் அந்தஸ்திலும் முன்னேற்ற மடைந்த பொழுது, மிக மேல் நிலையிலுள்ள சாதி யினரின் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மேற் கொள்வதே வளர்ச்சியின் அறிகுறி எனக் கொண் டன.

மூன்றாவது, மிகமேல் நிலையில் விளங்கிய சாதி யினர், தம் வாழ்க்கையை வட இந்திய இலட்சியங் களுக்கும் நெறிகளுக்கும் இசைய அமைத்துக் கொண் டனர். அந்தணர், அரசர், வேளாளர் ஆகிய மூன்று பிரிவினரிடத்தும் இப்பண்பு காணப்படுகின்றது.

இப்பண்புகள் இந்தியாவில், தமிழரிடத்தே மட்டும் காணப்படுபவையல்ல; இந்திய உபகண்டத்தின் ஒவ் வொரு பிரதேசத்திலும் காணப்படுவது. இப்பண் பைப் பேராசிரியர் சிறிநிவாஸ் “சமஸ்கிருத நெறிப் படுகை' (Sanskritisation) என்பர். பிரதேசச் சிறப்புப் பண்புக்கும் இந்தியப் பொதுப் பண்புக்குமுள்ள முர ணிலையையும், இயைபையும், அவை ஒருங் குறையும் முறையையும், அமெரிக்க மானிடவியலார் சிலர், பேராசிரியர் நெட்ஃபீல்ட் என்பாரைப் பின்பற்றிச் “சிறு பாரம்பரியம்” (The Little Tradition), “பெரும் பாரம்பரியம்” (The Great Tradition), என்பர். எப் பெயர் கொண்டு அழைத்தாலும், பண்பு உள்ளது உண்மையே.

ஒவ்வொரு குழுவினரும், மேல் நிலையிலுள்ளவர் களின் முறைப்படி வாழ விரும்புவதனால், இவர்களது வாழ்க்கையில் இரு முனைப்பட்ட பண்புகள் காணப் படுவதை அவதானிக்கலாம். இவ் விருமுனைப்பட்ட நிலையை அரசியலில். சனநாயகப் பண்புக்கும் சாதித் தனித்துவத்துக்கும் இயைபு காண விழையும் முயற்சி யிற் காணலாம். மதத்துறையில் கோயில் வழிபாட்

டிலும், குல வணக்க முறைகளை நெருக்கடி வேளை களில் தவருது செய்வதிலும் காணலாம்.

இச்சமூகவியற் பண்புகள் காரணமாகத் தமிழ் நாட்டாரிடையே சமத்துவ உணர்ச்சி நிலவவில்லை. அதிகார வலுவிலும் அந்தஸ்துச் சிறப்பிலும் முன்னே றும் பொழுது தமது புராதன குல வழக்கங்களைக் கை விட்டனர்.

### நாடகமும் கூத்தும்

கூட்டுக் கலையான நாடகம் இதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டது. தமிழ் மக்கள் என்ற பொது நிலையில் நாடகம் வளரவில்லை யெனினும் குழு அடிப்படையில் இயங்கும் பொழுது கூட்டு வாழ்வின் அம்சமாகக் கூத்தும், கூத்தை மருவி நிற்கும் சமய சடங்குகளும் போற்றப்பட்டன.

தமிழ் நாட்டின் வரலாறு இவ்வுண்மையை எடுத் துக் காட்டுகின்றது.

நாண்மகிழிருக்கையில், சுற்றத்தார் சூழ, பாணர், பொருநர், கோடியர், வயிரியருடன் கள்ளுண்டு மகிழ்ந்த பண்டைய தமிழ் மன்னன் தன் அரச நிலை மையையும் உரிமையையும் வட புல நெறிப்படி வலி யுடையதாக ஆக்க விரும்பியும், ஆக்கிக் கொள்ளு மாறு ஊக்கப்பட்டும் யாகங்கள் செய்வதையும், ''கல்லா வாய்ப் பாணனை'' நீக்கிப் ''புலவனை'' வர வேற்பதையும் நாம் சங்க கால வரலாற்றிலேயே காண்கின்ருேம். பாணர், கூத்தர், பொருநர் எனப் பல திறப்பட்டு நின்ற கலைஞர் குழு படிப்படியாக ஒருங்கு சேர்வதையும், பாண்சேரி நகர்ப்புறத்தில் அமைவதையும், விறலியர் பரத்தையராக மாறுவதை யும், அரசவையிலிருந்தகற்றப்பட்ட பாணன் நிலக்கிழா னின் கையாளாக மாறுவதையும் நாம், தமிழர் வரலாற்றின் ஆரம்பக் கட்டங்களிலேயே காணக் கூடியதாக இருக்கின்றது. இலக்கியம், மத இலக் கியமாக மாறுவதையும், சமூகப் பொதுமையைக் கடி வதையும் இவ்வளர்ச்சியினூடே அவதானிக்கலாம்.

மதத்துறையில், வைதீக மதக்கோட்பாடுகள், பிர தேச வழிபாட்டு முறைகளுடன் இணைகின்றன என் பது உண்மையே. இது முக்கியமாகச் சமணம், பௌத் தம் ஆகிய புற மதங்கள் ஏற்படுத்திய நிலைமையால் வந்தது. பிரதேச ஐதீகங்கள் (Myths) தனிவாழ்வு பெறவில்லை யென்பதை வன்மையுடன் எடுத்துக்காட்டு கின்றன. சங்க இலக்கியங்களில் மகாபாரதம், இராம யணம் பற்றிவரும் குறிப்புக்கள். சமண, பௌத்த மதங்கள் மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையினை மாற்ற முனைவதைக் கண்டு அப்பாரம்பரிய மரபு களுடன் இணைந்து அவற்றைத் தனது ஐதீகத் துடன் இணைத்துக் கொண்ட வைதீக மதம், அரசியலா தரவு பெற்று, கல்லாலான கட்டிடங்களில் நிறுவப் பெற்று, சமுதாய வாழ்வைக் கட்டுப்படுத்தத் (சமண, பௌத்த மதங்கள் போன்று) தொடங்கிய பொழுது, பிரதேசக் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் கோயிலில் இடம் கிடைத்ததெனினும், இவ் இணைப்பும் இயைபும் அதிக காலம் நீடிக்கவில்லை. வெகு விரைவில் அவை சாஸ்திரங்களாயின. கலைஞர்கள் தெய்வ அடியா ராயினர்.

கோயில், சமுதாயத்தின் சமூக, கலை வாழ்வின் நிலையமாக விளங்கியது உண்மையெனினும் அக் கோயிலுக்குள் நுழைய முடியாதிருந்த தமிழரைப் பற்றிப் பல்லவர் சோழர் கால இலக்கியங்களிற் குறிப்புக்களை காண்பதரிது.

### சிலப்பதிகாரம் காட்டும் காலம்

வைதிக நெறிகளும், பிரதேச மரபுகளும் இணைந்து கலைகள் வளர்ச்சியுற்ற நிலைக்கும் அடுத்த கட்டமான கோவிற் கலை நிலைக்கும் இடைப்பட்ட காலத்தைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. அக்காலத்திலும் தமிழர் வாழ்க்கை குழுமுறைப் பட்டுக் கிடந்தது என்பதை ஆய்ச்சியர் குரவைக்கும், வேட்டுவ வரிக் கும் மாதவியின் பதினெரு ஆடலுக்கு முள்ள வேறு பாட்டின் மூலம் அறியக் கூடியதாக விருக்கின்றது. ஆனல் இந்திர விழா கொண்டாடப்பட்ட சூழ்நிலையும் அங்கு மாதவி ஆடும் நடனங்களும் நாட்டியத்தை மதச்சடங்கு நிலையிலிருந்து வேறு படுத்திப் பொதுக் கலையாக மாற்றும் தன்மையை யுடையனவாக உள்ளன. புகார் நகரம் என்ற அடிப்படையில் ஒரு சமூக ஒருமை காணப்படுகின்றது. இந்நிலைமை வலியுடை அரசாங்கம் ஏற்படும் வரையில்தான் நின்றது. வந்த பல்லவர்கள் தம் சாசனங்களை முதலில் சமஸ்கிருதத்திலேயே பொறித்தனர் என்பதை அவதானித்தல் வேண்டும். மேலும் அவர்கள் தமிழர்களுமல்லர். ஆனல் அவ்விடைக் காலத்திற் காணப்பட்ட வளர்ச்சி, வணிக மக்களின் ஆதரவுடன் தொடர்புற்றுக் கிடந்தது என்பதைக் கோவலனின் வரலாறு கூறும்.

சோழர் காலத்தில் நடனமும், நாடகமும் தெய்வம் பற்றிய கலைகளாக விளங்கியதுண்மையே. ஆனல் இவற்றை ஆடிய கலைஞர்களுக்கு மத நிறுவனத்தில் முக்கிய இடமிருக்கவில்லை. காணிகள் மானியமாக அளிக்கப்பட்டமை கூலி அடிப்படையிலே யன்றிச் சமூக அந்தஸ்து அடிப்படையிற் செய்யப்பட்டதன்று. தனக்களிக்கப்பட்ட காணியில் தன் பரம்பரையின ருக்கு உரிமை இருக்கவேண்டு மென்பதற்காகக் கோயிற் கோபுரத்திலிருந்து கீழே விழுந்த சதுரி மாணிக்கம் பற்றிக் குறிப்பிடும் சோழர்காலக் கோயிற் கல்வெட்டு உண்மை நிலைமையைப் புலப்படுத்து கின்றது.

### பள்ளு, குறவஞ்சி

சோழ, பாண்டியப் பேரரசுகளின் பின்னர்வந்த முஸ்லிம் ஆட்சிக்காலத்திலும், தெலுங்கர் ஆட்சிக்

காலத்திலும் கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்ட தமிழர்களின் கூத்துமுறைகளே, மதத்தைப் போற்றுவதற்கான இலக்கியங்களுக்கு உரு அளிப்பனவாகக் கிடக்கின்றனை. பள்ளு குறவஞ்சி இலக்கியங்களுக்கும், தமிழ்நாட்டுச் சாதி வகுப்பு முறைக்குமுள்ள தொர்டபை மறத்தலாகாது.

மேனுட்டு ஆட்சி முறைகள் வருவதற்கு முன்னர் தமிழ்நாட்டின் கலையுருவங்களாகப் போற்றப்பட்டவை வடமொழிக் கோட்பாடுகளும் பிரதேச முறைகளும் இணைந்து வளர்ந்ததனடியாகத் தோன்றியவையே. கோயிற்சிற்பம், நடராஜ சிலை, சதிர் நடனம், காவியம் ஆகிய யாவுமே இவ்வுண்மையை விளக்குவன.

### சாதி அடிப்படையால் கலைகள் வளரவில்லை

கலைஞர்களைச் சாதி அடிப்படைகொண்டு வகுத்ததால் கூட்டுக் கலைகள் வளர்வதற்கோ அவை நாட்டின் சின்னமாகச் சிறப்புறுவதற்கோ வாய்ப்பிருக்கவில்லை.

மேலும் சமுதாய ஏற்றத் தாழ்வுக் கோட்பாடு காரணமாகக் கீழ்நிலையில் உள்ளவர்களின் கலைகளைத் தூய்மையற்றவையாகக் கருதும் வழக்கமும் வளர்ந்தது.

ஆங்கில ஆட்சியின் பின்னர் நிலைமை மேலும் மோசமாயிற்று. ஆங்கில ஆட்சி நிறுவிய நிலவாட்சி முறைமை முன்னர் நிறுவிய சமுதாய ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நிலவுவதற்கான வழியை ஏற்படுத்திற்று. எனவே கீழ் நிலையில் வாழ்ந்தோர் நிலைமை மாருது இருந்தது. ஆனுல் மேனிலையிலிருந்தவர்கள் "மேனுட்டு வழி" செல்ல முனைய, அந் நிலையில் வாழ்ந்தோரின் குடும்ப அமைப்பும் வாழ்க்கை முறைகளும் மாறலாயின.

ஆங்கில ஆட்சி திணித்த ஆங்கிலக்கல்வி ஆங்கில ஆட்சியை அழிப்பதற்கு வழியமைத்தது. தேசியம் வளர்ந்தது. தேசியம் காரணமாக மேல் நிலையிலிருந்த புராதன கலைகள் புத்தூக்கம் பெற்றன. புதிய சமூக நிலைகளுக்கேற்ப அவை புனருத்தாரணம் செய்யப்பட்டன. சதிர் ஆட்டம் பரதநாட்டியமாகிப் பொதுக்கலையாயிற்று. கோயிற்கலை, வெளிநாட்டுத் தூதுவர்கள் முன்னிலையில் ஆடப்பட்டது. ஆனுல் இவ்விழிப்புத் தெருக்கூத்தையும், வில்லுப்பாட்டையும், லாவணியையும், கரகத்தையும் தலைசிறந்த கலை வடிவங்களாக்கவில்லை. அதாவது பிற நாட்டவர்கள் பார்த்து இந்தியப் பண்பாட்டைப் பற்றிப் பிரமிப்பு அடைவதற்கு ஏற்றவையாக இவை கருதப்படவில்லை.

இவ்விழிப்புணர்ச்சி நாடகத்துறையில் பழந்தமிழ் நாடக மரபுகளை மேல் நிலைக்குக் கொண்டு வராது விட்டது மாத்திர மல்லாது, ஆங்கிலம் பேசும் நகரவாசிகளான மத்தியதர வர்க்கத் தமிழரிடையே புதிய ஒரு நாடக முறையையும் ஏற்படுத்திற்று. அரங்கேற்ற முடியாத நாடகங்களைச் சிலர் எழுதினர். சிலர் ஷேக்ஸ்பியரைச் செக சிற்பியராக்கினர். தமது புதிய முயற்சிகளுக்குச் சக மத்தியதரவர்க்கத்தினரிடையே மதிப்புப் பெறுவதற்காகத் தமது நாடகங்களில் தப்பியொட்டிக் கிடந்த தமிழ்நாடக மரபுகளையும் ஒதுக்கினர்.

இதே வேளையில், கோயில்களிலிருந்து அகற்றப்பட்ட கலைஞர்களும், அவர்கள் வழி வந்தோரும், சம்பந்தப்பட்டோரும், பொது மக்கள் நிலையில் பெரிதும் மதிக்கப்பட்ட மரபுவழிக் கதைகளை, பாட்டும் நடனமும் சேர, மேனுட்டு முறையினடியாகப் பிறந்து, பார்சிகளிடத்து "இந்தியப் பண்பு" பெற்று விளங்கிய அரங்க முறைப்படி, நாடகங்களாக நடித்தனர். தெருக்கூத்து மல்லாது, பூரண மேனுட்டு முறையுடையதாகவும் அல்லாது திரிசங்கு நிலைப் பட்டுக் கிடந்த இந்நாடக முறைமையில் பாரம்பரிய இசையும், கதையும் இடம் பெற்றதால், இக் கலைவடிவம் மக்களிடையே செல்வாக்கைப் பெற்றது. இக்கலை வடிவத்தைச் செம்மைப் படுத்தினர் சங்கரதாஸ் சுவாமிகள். இந்நாடக மரபு ஆங்கிலம் கற்காத தமிழரிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்றது. ஆனுல் இது பொதுக் கலை வடிவமாகப் பரிணமிப்பதற்கு வேண்டிய அதிகார உதவி கிடைக்கவில்லை.

### திரைப்படம்

இந்தச் சூழ் நிலையிற்ருன் தமிழ் நாட்டிற்குத் திரைப்படம் வந்து சேர்ந்தது. மேலே குறிப்பிட்ட கலைஞர்களை நடிகர்களாகக் கொண்டு வளர ஆரம்பித்தது. இனம் முழுவதுக்கும் பொதுவான நாடக மரபு ஒன்றைப் பெற்றிராத மக்களிடையே திரைப்படம் பொதுக்கலை வடிவமாக உருப்பெற்றது. தமிழ் நாட்டின் பரம்பரைச் சமுதாய வேறுபாடுகளைப் புறங் கண்டு, தமிழ் மக்களின் கலைப் பெருமையை நிறுவியது திரைப்படமே. இப்பண்பை விளக்கும் முறையில் அதன் அமைப்பு இருந்தது.

முதலில் பாரம்பரியப் பொதுவான கதைகளைக் காட்டிய திரைப்படங்கள், சுதந்திர காலத்தின் பின்னர் அரசியற் கதைகளையும் சேர்த்துக் கொண்டன. சமூகப் பிரச்சினைகளையும், அரசியற் பிரச்சினைகளையும் தனி மனிதப் பிரச்சினைகளாக்கிக் காட்டும் கதைகள் படம் பிடிக்கப்பட்டன. தமிழர் வரலாற்றில் முதற்றடவையாக படித்தோரும் படியாதோரும் விளங்கிக் கொள்ளத்தக்க (typical) தமிழ்க் கதாநாயகன் உருப்பெற்ருன்.

தமிழ்மொழிக் கல்வி பெற்று வளர்ந்து, நகர்ப்புறங்களில் தொழிலின்றியும், கிராமப் புறங்களில் வாய்ப் பற்றும் கிடந்து தவித்த பல இளைஞருக்கு இப்புது

மரபே நாடக மரபாயிற்று. சினிமாவில் வந்த கதை வசனத்தைக்கொண்டே நாடகங்கள் அமைத்தனர். கதை முதல் காட்சியமைப்பு வரை நாடகம் திரைப் படத்தைப் பின்பற்றிற்று. திரைப்படத்தால் ஏற்பட்ட இந் நாடகத்துறை ஊக்கம் திரைப்பட நடிகர்கள் பலரை நாடகக் குழுக்களை நிறுவச் செய்தது.

தமிழ் நாடகத்தின் இன்றைய நிலை இது.

இன்றுள்ள தமிழ் நாடகம், தமிழ் மக்களின் பாரம் பரிய நாடக அமைப்பினின்றும் மாறுபட்டதாகவும் மேனாட்டு மரபினின்றும் மாறுபட்டதாகவும் காணப் படுகின்றது. இந்நிலை தவிர்க்க முடியாத காரணங் களால் ஏற்பட்டது என்பதை மறத்தலாகாது.

### முன்னேறுவது பற்றிய சிந்தனைகள்

இந்நிலையில் தமிழ் நாடகம் முன்னேற வேண்டிய வழிவகைகள் பற்றிச் சிந்தனைகள் தோன்றுவது இயல்பே.

தமிழ் மக்கள் தனியொரு இனமாக வளருவதற் கான சூழ்நிலைகள் அதிகம் தென்படத் தென்பட, கூட்டுக் கலை வடிவமான நாடகம் ஆக்க இலக்கிய கர்த்தர்களின் கவனத்தைப் பெறுவது இயல்பே.

தமிழ் நாட்டில் இன்று நாடகத் துறையில் உள்ள பிரச்சினை நாடகத்தைத் தமிழ் மக்கள் யாவரினதும் பொதுக்கலை வடிவமாக்கும் பிரச்சினைதான். திரைப் படத்தைச் சாராது தனக்கென ஒரு வழியில் (உருவில்) நாடகம் வளர வேண்டுமென்பது தான் பலருடைய அவா.

திரைபட நெறிச்சாராத வளர்ச்சிக்கான சாத்திய கூறுகள் இரண்டு உள்ளன: ஒன்று, மேனாட்டு நாடக மரபை முற்றிலும் பின்பற்றுதல். மற்றது, தமிழரின் புராதன நாடக உருவமான தெருக்கூத்து உத்தியைப் பயன்படுத்தல்.

மேனாட்டு நாடக மரபை நன்கு அறிந்து அதனை விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள் மேனாட்டு மொழியறிவுள்ள நகரவாசிகளே. இம்மரபு தமிழ் நாட்டுக் கிராம வாசிகளுக்குப் பூரண ஈடுபாட்டைக் கொடுக்காது.

இன்னும், மேனாட்டில் இன்று நிலவும் நாடக மரபு ஏறத்தாழ 2400 வருட கால வளர்ச்சியின் முடிவு. அவர்கள் நாடக மரபில் இன்றும் இசை நாடகத்துக்கும் (Opera) நாட்டிய நாடகத்துக்கும் (Ballet) முக்கிய இடமுண்டு. நாம் மேனாட்டு நாடகம் என்று கொள்வது அவர்களது நாடக மரபின் ஒரு அம்சமே. இவ்வுண்மையை மறந்து விடலாகாது.

தெருக் கூத்து முறை எத்துணை பயன்படும்?

தெருக் கூத்து என்று நினைத்தவுடனேயே முகஞ் சுளித்தால், அவ்வாறு செய்பவர் பேராசிரியர் சிறிநி வாஸ் கூறும் 'சமஸ்கிருத நெறிப் படுகை'யின் தலை சிறந்த உதாரணமாகிவிடுகிறர்.

தற்காலத் தேவைகட் கியையப் பரத நாட்டியத் திலும், வில்லுப்பாட்டிலும், கதாகாலட்சேபத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தியதுபோன்று தெருக்கூத்து மரபில் மாற்றங்கள் செய்யமுடியாதா?

தமிழ்க்கலை வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும்பொழுது நகர வாசிகளைப் பற்றி மட்டும் சிந்திப்பது வரலாற்று நெறிக்கும் சன நாயகப் பண்புக்கும் விரோதமான செய லாகும்.

ஈழத்திற் சிங்கள மக்கள் சிங்கள நாடகத்தின் உருவத்தைப் பழைய கூத்து மரபுப்படிதான் செப்பம் செய்துள்ளனர். கைத்தொழிற் றுறையில் மேற்கு நாடுகளைத் தோற்கடிக்கும் யப்பான், "நோஹ்" "கபுக்கி" முறைகளைக் கைவிடவில்லை. அம்முறைகள், புதிய பொருளைக் கையாள்வதற்குத் தடைசெய்யும் நிலையில் அவற்றை வைத்திருக்கவுமில்லை. தாகூர் வங்காள நாடகத்திற்கு மரபுவழி வரும் உருவும் புதுப் பொருளும் வழங்கினர்.

### கூத்தை மறந்து நாடகத்தை வளர்க்கமுடியாது

திரைப்படங்களைக் குறை கூறுவதனாலும், திரைப் பட நெறியைப் பின்பற்றுவதனாலும் தமிழில் நாடகத் துக்கான தனியுருவம் வளராது. பாரம்பரியத்துக்கு மதிப்பும் புதுமைக்கு இடமும் கொடுப்பவர்களே மாற் றத்தை ஏற்படுத்த முடியும். கூத்தை மறந்தும் மறைத் தும் தமிழில் நாடகத்தை வளர்த்துவிட முடியாது. தமிழ்த் திரைப்படங்களின் வளர்ச்சியே இவ்வுண் மையை உணர்த்துகின்றது.

சென்னையை முதலாகக்கொண்டு தமிழ்க்கலை களுக்கு உருவும் பொருளும் கொடுப்பதைவிட்டு, தமிழ் நாட்டை அடிப்படையாகக் கொண்டு சென்னையிலும், பிற நகரங்களிலும் தமிழ்க்கலைகளை வழிப்படுத்தி உருப் படுத்துதல் வேண்டும்.

# ஞான அந்தாதி

வேதநாயக சாஸ்திரியார்

ஞான முதல்வி எனும்தேவ நாயகி நன்குபெற
வான நவமணி முத்தாரம் பூண்டுநல் வன்னமுயர்
தானத் துயர்கலை வெண்கலை யாடை தரித்தனள்;பின் 1
கோனக் கருங்குழல் கோதினள்; புஸ்பமும் கொண்டனளே.

வேகம்கொண் டாள்; அதி ரூபம்கொண் டாள்;விர காசையினால்
மோகம்கொண் டாள்; சுதன் மேல்மயல் கொண்(டு)அவர் முத்திபெறத்
தாகம்கொண் டாள்; திடன் தானும்கொண் டாள்; பின் சரசவகைப் 2
போகம்கொண் டாள்; அருள் கொண்டாள்; எழுந்து புலம்பினளே.

மென்குயி லே! என் விகாரத்தைக் கேள்: வெகு நாள்வரையாய்
என்தவக் கேள்வன் எனும்ஏசு நாதன் எனைப்பிரிந்தான்;
பின்புற வோஇல்லை; ஆதரம் ஒன்றிலை; பேதைஎன்மேல் 3
அன்புசெய் வார்இலை; ஆரும் துணைஇலை அன்றுதொட்டே.

கோடி வருடசந் தோடம்ஓர் நாழிகைக்(கு) ஒப்பெனவும்
நாடி அவர்எனக் கன்புசெய் தேஅவர் நற்கரத்தால்
கூடி எனைஅணைத் தாற்றி அருந்தயை கொண்டுகையால் 4
மோடி புரிந்த விதங்களைச் சொல்லிடின் மோகிக்குமே.

[ஞான முதல்வியும் தேவநாயகியும் ஆன சீயோனின் குமாரத்தி கேட்டுக்கொண்டபடி அவளுடைய தோழிகளான கன்னிமார்கள் இயேசுநாதரிடம் சென்று பின் வருமாறு அவரை வேண்டுகிறார்கள் :]

கொற்றவனே! வலக் கள்ளனுக் கன்பு கொடுத்தனையே!
மற்று மகதல ஊர்மரி யாட்கும் மலையனுக்கும்
சிற்றுசந் தேகத்(து) உளதோமை யற்கும்சின் னப்பனுக்கும் 5
நற்றவம் உற்ற படிஇவட் கன்புசெய் நாட்டினிலே.

நாட்டில் உனையன்றி யார்துணை செய்வர்? சொல்! நாற்றிசையும்
வீட்டினும் நீ; வெளி எங்கணும் நீ; உயர் மேருவினும்
காட்டினும் நீ; கக னத்தினும் நீ; கவி ராயர்செப்பும் 6
பாட்டினும் நீயல வோ? மண வாளியைப் பார்த்தருளே.

நாசியின் வாசம் கொழிஞ்சிப் பழம் ;கரு ணாகரியின்
மாசணு காக்கன்னம் மாதளை யின்வெடிப் பானகனி;
நேச மிகும்இதழ் நற்சிவப் பின்இழை லீலியப்பூ; 7
பாசம் அடர்தந்தம் வெள்ளாட்டுக் குட்டியின் பாங்கதுவே.

[கன்னிமார்கள் வேண்ட தேவன் தலைவியிடம் வந்தார். அவரை நோக்கித் தலைவி கூறுவது :]

ஆபத்தைக் கண்டும் எனக்கென்ன என்றிருந் தால்உனை நான்
மாபத்தி யாய்விடு கேன் ;உனைச் சேர்ந்து மயங்குவனே;
சாபத்தை நீக்கிட வந்தாய்என்(று) உன்றன் சரண்புகுந்தால் 8
கோபத்தைக் காட்டக் கடன்உனக்(கு) ஏ(து)? என் குலதெய்வமே!

(நள வருடம்—1796)

2. சுதன் - மனித குமாரனாக அவதரித்த இயேசு கிறிஸ்து. முத்தி - முத்தம். அருள்-ஆவேசம்.
5. இந்தப் பாட்டில் காணும் செய்திகளை விவிலியநூல் புதிய ஏற்பாட்டில் காண்க.
7. லீலியப்பூ – அல்லிப்பூ ; Lily என்ற ஆங்கில வார்த்தை லீலியம் என்று வழங்கப் பட்டுள்ளது.
8. மாபத்தி – மிகுந்த பக்தி.

# விஞ்ஞானமும் தமிழிலக்கியமும்

டாக்டர் பொ. திருஞானசம்பந்தம்,
பௌதிகத்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி, சென்னை

இன்றைய உலகில் விஞ்ஞானம் பெரிதும் போற்றப்படுகிறது. தனி மனிதன் வாழ்விலும், தனி நாடுகளின் வாழ்விலும், அனைத்து நாடுகளின் கூட்டு வாழ்விலும் இந்த விஞ்ஞானமே பெரும் பங்கு ஏற்கிறது. விஞ்ஞானம் இல்லாவிட்டால் மக்கள் வாழ்வு முழுமை பெறாது என்ற நிலை உருவாகி வருகிறது. இந்த வளர்ச்சியில் விஞ்ஞானத் துறைகளும் தொழில் நுட்பத்துறைகளும் ஒன்றோடொன்று இணைந்து தொண்டாற்றி வந்திருக்கின்றன. அண்மை நூற்றாண்டுகளில் மேல் நாடுகளில் தொடங்கிய இந்த விஞ்ஞானயுகம் இந்த நூற்றாண்டில் பீடு நடை போட்டு வருகிறது. நீராவி எந்திரம், நெய்யாவி எந்திரம், மின்சார நிலயம், ஒளி மின்கலம், தொலைபேசி, தொலைக்கேள்வி, தொலைக் காட்சி, பல்வகை பிளாஸ்டிக் பொருள்கள், பல்திறச் செயற்கை உரங்கள், பல்திறச் செயற்கைத் துணிகள், வானவூர்தி வகைகள், அணு உலைகள் முதலிய அரிய வளர்ச்சிகளெல்லாம் விஞ்ஞான யுகத்திற்குச் சான்றுகள் பகர்கின்றன. அவை உலக வாழ்வு நலத்தைப் படிப்படியே உயர்த்தி வருகின்றன என்று கூறலாம். அம்மட்டோ! மனிதன் பெருமுயற்சியினால் விண்வழிச் சென்று தண்மதியினை வலம்வந்து மீண்டுவந்த பெருமையைக் கண்டுவிட்டோம். இந்த நிலைமையில் பழம் பெரும் இனம் என்று பேசப்படும் தமிழினத்தின் தனிப் பெரும் சிறப்புக்களை ஓர்தல் நன்று. நந்தமிழ் இனத்தின் கருவூலங்களான இலக்கியப் பெருங்கடல்களில் ஆங்காங்குக் காணப்படும் விஞ்ஞானக் கருத்துக்கள் நமக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கின்றன. அவைகளைக் காணும் வகையால் நாம் விரைவாக முன்னேற முடியும்; புதியன புனைதல்கூடும்; அரியன காணல் ஆகும்.

தமிழ் மொழியானது என்று தோன்றிற்று என்று வரையறுக்கக் கூடவில்லை. நம்மொழி உயர்தனிச் செம்மொழி என்றும், இயல், இசை, நாடகம் என்ற மூன்று பெரும் பகுதிகள் கொண்டது என்றும் அறிவோம். இப்பகுப்பு முறையினை உற்று நோக்குங்கால் அரியதொரு உண்மை புலனாகும். மனிதன் அறிவு நிலையின் மேம்பாட்டினை இயல் தமிழில் காணலாம். அவனுடைய மனநிலையின் மாண்பினைக் கூறுவது இனிய இசைத்தமிழ். மூன்றாவதாகிய நாடகத் தமிழ் நவில்வது மனிதன் செயல் நிலையின் சிறப்பு ஆகும். எனவே, அறிவு, மனம், செயல் ஆகிய முத்துறைகளும் இணைந்து அமையும் சிறந்த வாழ்வே தமிழ் போல் விழுமியதாகும் என்று எண்ண இடமுண்டு. அத்தகைய சிறந்த வாழ்வு இந்த நாட்டில் மட்டுமன்று எந்த நாட்டிலும் மலரும் வகையில் விஞ்ஞானம் வளர வேண்டும்; வளர்க்கவேண்டும்.

### மெய்ஞ்ஞானம்

இந்த நாட்டின், இந்த இனத்தின் தனிப்பெருஞ் செல்வம் மெய்ஞ்ஞானம் என்று கூறப்படுவதுண்டு. இந்த மெய்ஞ்ஞானத்தை இயற்கை வழிநிலை என்று அழைத்தல் பொருந்தும். இயற்கையினை வணங்குவதில் தமிழன் தலைசிறந்தவன். இயற்கை எழிலினைத் துய்ப்பதில் அவனுக்கு இணைகாண்பது அரிது. இயற்கையாகிய புது நறவினை மாந்தும்போதெல்லாம் தமிழ்ச் சாதி வீறுகொண்டு எழுகிறது என்பது வரலாறு கூறும் பாடம். இயற்கைத் தேனை இன்றைய விஞ்ஞான வித்துக்களுடன் குழைத்து இனிய வலிய உணவாகக் கொள்ளவேண்டும்.

இயற்கையின் எழிலார்ந்த சிறப்பினைக் 'கைபுனை ந் தியற்றுக் கவின்பெறு வனப்பு' என்பது முருக மந்திரம். இயற்கையில் முகிழ்க்கும் இந்த வனப்பில் பல்வேறு வண்ணங்கள் பல்வேறு நிலைகளில் பண்ணிசைக்கின் றன. அவ்வண்ணங்களை எல்லாம் தனித் தனியாக, ஏகநிலைகளில், பிரித்துப் பிரித்து, உயர்த்தி உயர்த்தி, ஓடி ஓடி, நாவார நவில்வதுதான் இந்த இருபதாம் நூற்றுண்டின் விஞ்ஞானம். வண்ணங்களை மட்டும் கண்ட மேல்நாட்டு நாகரிகம் வனப்பினையும் கண்ட போதுதான் உண்மைக் காட்சி உள்ளூறும். நம்மைப் பொறுத்தவரையில், வனப்புக் காட்சி இன்று கனவுல கத்தில் இருக்கிறது. வண்ணக்காட்சிகளோ மயக்கும் நிலைகளில் உள்ளன. உடனடியாக வண்ணக்காட்சி களின் திட்பங்களை உணரவேண்டும். அதன் பின்னர், வனப்புக் காட்சியின் மாட்சியினைக் காணவும் பிறர் ஏற்கும் வகையில் காட்டவும் வழி பிறக்கும். அந்த நாள் விரைவில் உருவாகும் வகையில் இங்கு விஞ்ஞா னம் விரவுதல் வேண்டும். இப்பணியில் நம்மை ஊக்கு வதற்கு நம் இலக்கியங்களில் காணப்பெறும் அறிவியற் கருத்துக்களும் பெருந்துணை புரியும் என்று துணிந்து கூறலாம்.

### பூதங்கள்பற்றிப் புறம்

பூதங்களைப்பற்றியும் அவைகளின் இயற்கையினைப் பற்றியும் புறநானூறு கூறுவதை முதலில் காண்போம்.

'மண் திணிந்த நிலமும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றுங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போல'

முரஞ்சியூர் முடிநாகனுர் என்ற புலவர் இந்த அடிகள் வாயிலாக நமக்கு இயற்கை விருந்தளிக்கிருர். திணிந்த நிலம், ஏந்திய விசும்பு, தைவருவளி, தலைஇய தீ, முரணிய நீர் என்ற வகைகளிலே பூதங் களின் உறவு நிலைகளைக் கண்ட தமிழனுக்கு அறிவியல் உறவு எத்தகையது என்பதுபற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இனி,

'புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'

என்று மணிநாவர் உயிரின வரலாற்றினையே ஒருங்கே கூறுவது விஞ்ஞானம் ஆகாது என்ருல் வேறெது விஞ்ஞானம் என்று கேட்க விழைகிறேம். ஒருக்கால் இதனை விஞ்ஞானத்தின் வடித்தெடுத்த தேன் சாறு என்று வேண்டுமானுல் கூறலாம். திருமால் அவதாரங்கள் காட்டும் உட்பொருள்களும் இங்கு நினைவுகூரற்பாலன. இக்கருத்துக்களை விஞ்ஞானத் தோடு இணைத்து மெய்க்காட்சிகளைக் காண விழைந்த தமிழ் முனிவர் திரு-வி. க. அவர்கள் இவ்வழியில் தமிழ னுக்கு இந்த நூற்ருண்டில் வாழ்வளித்தார்கள். இக் கருத்துக்களையே தொல்காப்பியமும்,

'புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

என்றவாறு கூறுமாயின், தொன்மைத் தமிழன் அறி வியல் தமிழன் என்று கூறுவதில் ஐயமும் உண்டோ?

மேலும்,

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனெடு நாவே
மூன்றறி வதுவே அவற்றெடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றெடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றெடு செவியே
ஆறறி வதுவே அவற்றெடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'

என்றவாறு அறிவு நெறியினை அன்றே நெறிப்படுத் திய தமிழன் எவ்வாறு அறிவியலை மறந்தான் என்பது ஒரு புதிர். இப்புதிரையும் இப்புதிர் காட்டும் திரிபுகளை யும் இரிந்தோடச் செய்யவேண்டும். உலக வாழ்வினை மெய்யென நம்பி வாழ்க்கை வசதிகளை விஞ்ஞான வழியில் பெருக்கி வளர்த்து உயர்ந்து இம் முயற்சியில் வெற்றி பெறலாம். புதிய சமுதாயம், இனிய சமுதாயம், நல்ல சமுதாயம் தானே உருவாகும்.

### அண்டங்கள்

இனி, அண்டங்களின் பெருமையைப்பற்றி ஆங் காங்குக் காணப்படும் உரைகளைக் காண்போமானுல் தமிழில் என்ன முடியாது என்ற கேள்வி பிறக்கும். எண்ண முடிந்தால் எதுவும் முடியும் என்ற துணிவும் முகிழ்க்கும். இதனை எண்ணிப் பார்ப்பதில் ஏன் காலம் பார்க்கவேண்டும் என்பது புரியவில்லை.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி

ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'

என்ற மாணிக்கவாசகம் மறக்கப் போமோ?

இன்னும்,

'பெருபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல் அளவாக'

என்று திருமந்திரம் காட்டும் நல் தந்திரம் பொது.

மேலும்,

திருவருட்பிரகாச வள்ளல் யார் என்று உசாவி அன்பர்களை உய்வித்த திருவருட்பிரகாச வள்ளலார் விளக்கும் இயற்கைப் பெருமையை என்னென்பது? எவ்வாறு உரைப்பது?

'குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுது
நிகழ்ந்தபற் பலபொருட் டிரளும்
விலகுரு தகத்தும் புறத்துமே விடத்தும்
மெய்யறி வானநத்தம் விளங்க
அலகுரு தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே'

என்ற வகையில் புறக்காட்சி, அகக்காட்சி, உயர் நிலைக் காட்சி ஆகிய சிறப்புக் காட்சிகளைக் கண்ட தமிழன் மேல்நாட்டு விஞ்ஞான முறையில் காணும் காட்சிகளைக் காண்பது எளிதே. முயற்சியும் வளர்ச்சியும் துணையும் உறுதியும் இருந்தால் வெற்றி உறுதி. அந்த வெற்றித் திருநாளில் நாம் மட்டுமன்று, நானிலமே மகிழ்வுறும். எனவே, அறிவியல் இந்த நாட்டில் விரைவில் வளரவேண்டும். அறிவியல் மணம் கமழ வேண்டும். அறிவியல் காற்று வீசவேண்டும். அறிவியல் ஒளி பரவவேண்டும். யாண்டும் தூய்மை நிலவ வேண்டும். இனியும் தமிழன் இறுமாந்தோ, ஏமாந்தோ இருந்தால் இழப்பாவது உறுதி.

**இசைப் பெருமை**

இயற்கை வாழ்வு வாழும் போதெல்லாம் தமிழன் இசைபட வாழ்கிறன், 'ஏழிசையாய், இசைப்பயனுய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்னும் தம்பிரான் தோழர் வாக்கில் பிறக்கும் இசைப் பெருமையை என்னென்பது? குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவையே ஏழிசை என்பது என்றுமுள்ள தமிழிசை. இவையே ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற வடமொழிப் பெயர்களால் குறிக்கப் படுகின்றன, மேலும், இப்பெயர்களின் முதலெழுத்துக்களே சரிகமபதநி என்ற குறியீட்டினைத் தருகின்றன. மேலே கூறப்பட்ட ஏழிசைகளுள் 'தாரம்' என்னும் இசையே இசை வளர்ச்சிக்குக் காரணம் என்ப. மேலும், ஆண் மகன் குரலில் புலப்படுவது தாரம் என்றும், பெண் மகள் அளிப்பது குரல் என்றும் அழைக்கப்பெறும், இன்னும். தாரம் தருவது உழை என்றும் உழை தருவது குரல் என்றும் கூறப்படும். தவிர, குரலின் வழியிசை இளி என்றும் இளியின் வழியிசை துத்தம் என்றும் வகுக்கப்படும். தவிர, துத்தத்தின் வழி விளரியும் விளரியின்வழி கைக்கிளையும் தோன்றும். இவ்வகையில் ஏழிசையின் பிறப்பு முறையினை வகுத்தவன் தமிழன். நுண்ணுணர்விலே அமையும் உட்பொருள்களை வகுத்த தமிழன் கட்புலனுகும் பொருள்களைப்பற்றிய விஞ்ஞானத்தை இன்று எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இசைக் கருவிகளைப்பற்றி தமிழன் கண்ட காட்சிகள் இனிய காட்சிகளாகக் காணப்படுகின்றன. குழலும் யாழும் என்று தோன்றினவோ, யாம் அறியோம்.

'ஓங்கிய மூங்கில் உயர்சாந்து வெண்கலமே
பாங்குறு செங்காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ணன் உவந்த கழைக்கிவைகள் ஆமென்ருர்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து.'

என்ற பாட்டு சொல்லுவதிலிருந்து குழல் செய்திறம் விளங்கலாகும். குழல் செய்வதற்கு செங்காலியும் கருங்காலியும் பயன்படும் என்றும், அவைகளைவிட வெண்கலம் சிறந்தது என்றும், இவைகள் எல்லாவற்றையும்விட மூங்கில் தலைசிறந்தது என்றும் அறியப்படும். கழைக்குழல் செய்யும் விதமும் பின்வருமாறு விளக்கப்படும்: இளமையோ முதுமையோ இல்லாத பெரிய மரத்தை வெட்டி நிழலிலே ஆறவைக்க வேண்டும். ஓர் ஆண்டு சென்ற பின்னர் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதல் இல்லாததைப் பொறுக்கி குழல் செய்யப்படும். இதன் நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல். இருபது விரலில் தூப முகத்தில் இரண்டு விரலின் பின் ஏழங்குலம் விட்டுக் கடைசியில் இரண்டு விரல் நீக்கி, பின் நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை என்று கழித்து நீக்கி மீதப்பட்ட ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். ஒரு துளைக்கும் மற்றொரு துளைக்கும் நடுவே ஒரு விரல் அகலமிருக்கும். ஏழு விரலாவன, இடக்கையில் நடுவில் உள்ள மூன்று விரல்களும் வலக்கையில் பெருவிரல் நீக்கி ஏனைய நான்கு விரல்களுமாகும். இத் துளைகளில் இசை பிறக்கும்.

இனி, குழலினும் சிறந்த யாழின் சிறப்புபற்றிச் சிறிது கூறுதும். பண்வகைகளை யாழின் பகுதி என்றே தொல்காப்பியம் கூறும். யாழ் எனும் இன்னிசைக் கருவி மொகெஞ்சதாரோ புதை பொருள்களுள் காணப்படுகிறது. இவ்வாறு மிகப் பழமை வாய்ந்த இந்த யாழ் பெரும்பாணாற்றுப்படையில் வில்யாழ்

என்று குறிக்கப்பெறும். குமிழ மரக்கொம்பினை வில்லாக்கொண்டு மரல் மர நாரினை நரம்பாகக் கட்டி யாழ் அமைத்து, இதன் வழி குறிஞ்சிப்பண் பாடி ஆனிரைகளை மயக்கினுன் ஆயனச் சிறுவன் என்ற செய்தி தமிழனின் பெருமையை நன்கு விளக்குவதாகும்.

இந்த வில்யாழ் வழியாகத் தோன்றினவே இலக்கியம் போற்றும் நால்வகை யாழ்க் கருவிகள் என்று இலங்கை தந்த செம்மல், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்த்த பேராசிரியர் விபுலாநந்த அடிகள் கூறுவார். அவைகள் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பனவாகும். பேரியாழில் இருபத்தொரு நரம்புகளும் மகரயாழில் பத்தொன்பது நரம்புகளும் அமையும். சகோடயாழில் பதினுன்கு நரம்புகள் இருக்கும். செங்கோட்டியாழிலோ ஏழு நரம்புகளே சாலும். நிற்க, ஆயிரம் நரம்புகள் அமைந்த பேரியாழ் பெருங்கலம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு இசை நுணுக்கங்கள் வாய்ந்த நல்லிசைக் கருவிகள் நம் இசை பற்றிய விஞ்ஞானத்திற்கு உதாரணங்களாகும். இதனையும்விட சாலச் சிறந்த சிறப்பு ஒன்று உண்டு என்பது நோக்கற்பாலது. 'யாழிடைப் பிறவா இசையே' என்று கூறும் இளங்கோவடிகள் விஞ்ஞானம் கடந்த மெய்ஞ்ஞானம் பேசுகிருர். கருவிகளின் செம்மையால் பெறப்படும் கருத்துக் கோவை விஞ்ஞானம் என்று கூறப்படுமாளுல் கருவிகளுக்கும் அப்பாற்பட்ட இயற்கையறிவில் தெளிவாகும் கருத்துக் கோவைக்கு மெய்ஞ்ஞானம் என்று பெயரிடுதல் பொருத்தமாகும். இன்றைய நிலையில் நமக்கு விஞ்ஞானமும் வேண்டும். மெய்ஞ்ஞானமும் தேவை. வண்ணங்களை உடனடியாக நாம் வளர்க்க வேண்டும். அவைகளுக்கும் அப்பாற்பட்ட வனப்பும் நமக்கு வழி காட்டவேண்டும்.

**நவமணிகள்**

முற்காலத்தில் தமிழகம் செல்வத்தில் சிறந்தோங்கி இருந்தது என்பதனை விளக்கப் பல விஞ்ஞானச் சான்றுகள் கூறலாம். எனினும், இங்கு ஒரு துறையினைப்பற்றி நினைவு கூர்தல் அமையும். நிலத்திலும் நீலக் கடலிலும் அரிதே கிடைக்கும் பொருள்களுள் சிறந்தவை நவமணிகள் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றன. அவைகள் வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புஷ்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் எனப் பெயர் பெற்றனவாகும். செல்வர்கள் அரிதின் முயன்று விரும்பி வாங்கும் விலையுயர்ந்த இந்த மணிகளைப்பற்றிப் பல காவியங்களில் பல இடங்களில் கூறப்படுகிறது. காட்டாக, வைரத்தைப் பற்றி மட்டும் இங்குச் சில குறிப்புகள் கூறலாம். வைரக் கல்லின் வகைகள், அவைகளின் பண்புகள், குறைபாடுகள், பயன்கள் எல்லாம் மிக விளக்கமாகப் பேசப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது இத்துறையில் தமிழன் விஞ்ஞான நோக்கத்துடன் இருந்திருக்கிருன் என்று துணிந்து கூறலாம். பொதுவாக, நால்வகை வைரங்கள் உள்ளன என்று அறிகிருேம். அவைகள் வெண்மை, சிவப்பு, பச்சை, கருமை என்ற வகையில் நிறம்பற்றிப் பாகுபடுத்தப்படுகின்றன. வைரத்தின் குணங்கள் ஐந்து என்று அறியக் கிடக்கிறது.

'பலகை எட்டும் கோணம் ஆறும்
இலகிய தாரையும் சுத்தியும் தராசமும்
ஐந்தும் குணமென்(று) அறைந்தனர் புலவர்'

என்ற பழஞ்சூத்திரத்தின் படி எட்டு பட்டைகள், ஆறு கோணங்கள், எடைக் குறைவு, ஒளியுடைமை, தூய்மை உடைமை ஆகிய ஐந்து குணங்களாலும் வைரத்தின் சிறப்பு தெரியவரும். வைரத்தின் குற்றங்கள் பல. ஆனுலும் தீய குற்றங்கள் காகபாதம், களங்கம், விந்து, இரேகை ஆவன என்பதை

'காகபாதமும் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி...'

என்ற சிலப்பதிகாரக் குறிப்பு கூறுகிறது.

தவிர,

'சரைமலம் கீற்று சப்படி பிளத்தல்
துளைகரி விந்து காக பாதம்
இருத்துக் கோடிகள் இலாதன முரிதல்
தாரை மழுங்கல் தன்னேடு
ஈராறும் வயிரத்(து) இழிபென மொழிப'

என்ற பழஞ்சூத்திரம் பன்னிரண்டு வகையான குற்ற விளக்கங்களைப் பற்றிக் கூறுவது நோக்கற் பாலது. இது போலவே பிற மணிகளைப் பற்றியும் இதர சிறப்புப் பொருள்களைப் பற்றியும் தமிழிலக்கியத்தில் விளக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். தற்காலத்தில் வைரத்தினைப் பற்றிப் பல கோணங்களில் பௌதிக ஆராய்ச்சி செய்த பெருமை நமது விஞ்ஞான வித்தகர் பெரும் பேராசிரியர் இராமன் அவர்களைச் சாரும். எனவே, மீண்டும் செல்வநிலை உயரவும், வறுமைநிலை நீங்கவும், அறிவு வளரவும், ஆராய்ச்சி ஓங்கவும் இந்த நாட்டில் அறிவியல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டும்.

தமிழ்மொழியில் உருவான சொற்கள் தமிழனுடைய அறிவியல் நோக்கைப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்று கூறலாம். முகை, போது, மலர், அலர் முதலிய சொற்கள் ஆழ்ந்த பொருள் கூறுகின்றன. திருமணம், மனைவி, இல்லறம் என்ற சொற்களின் அமைப்பும் மகிழ்ச்சி தருகின்றன. ஊருணி, ஞாலம், இறைவன் முதலிய சொற்கள் அரிய கருத்துக்களைக் கூறுநிற்கின்றன.

இறுதியாக, விஞ்ஞானம், விஞ்ஞான மனப்பான்மை இரண்டுமே முக்கியம் என்று கூறவேண்டும். இன்றைய விஞ்ஞானம் அப்படியே அன்றைய தமிழ்

நாட்டில் இருந்ததா இல்லையா என்ற ஆராய்ச்சிக்குப் பொருளில்லை, ஆயினும் விஞ்ஞானத்தை வளர்க்கும் விஞ்ஞான நோக்கு அன்று இருந்தது என்று தமிழிலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. எனவே, இளைஞர்கள் விஞ்ஞான நோக்கினையும் விஞ்ஞானத்தையும் ஒருங்கே வளர்த்துத் தமிழ் நாட்டிற்கு ஒளியூட்ட வேண்டும். அப்பொழுது அறிவுலகம் பூத்துக் குலுங்கும். உலக மேதையாம் வள்ளுவப் பெருந்தகை,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற குறளின் வழியாக விஞ்ஞானத்திற்கு வரையறை கூறுகிறார். மேலும்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்ற குறளின் வழியாக மெய்ஞ்ஞானத்திற்கு விளக்கம் தருகின்றார் போலும். எனவே, தமிழிலக்கியம் தரும் செல்வங்களுள் விஞ்ஞான நோக்கும் ஒன்றாகும் என்று கூறவேண்டும்.

## அவை பேசினால்!

(கலைவாணன்)

**வண்டு :**

தாவித் தளர்ந்து தலைசுற்ற இன்ப
தாபத்தில் வந்த என்னை
வாவிங் கெனத்தன் வாய்ப்பந்தல் காட்டி
வழியோர மாக நின்று
கூவிக் கலக்க மேவிட்ட போது
கொல்லக் கிளம்பி விட்டாய்
பாவிச் சிலந்தி! பாழாவ துன்னைப்
பரிவோ டணைத்த பலனோ?

**சிலந்தி :**

கோவிக்க வந்த குறைஎன்ன? இங்கு
கூடிச் சுகிக்க வென்றே
காவில் புகுந்து ககனத்தி லேறி
காற்றோடு வந்த வண்டே!
ஆவிக்கு இன்பம் சாவிற்கு நன்றி
அணுவேனும் மண்ணி லில்லை,
சீவித் திருந்து இனியாவ தென்ன?
செல்லங்கு சாந்த முண்டு.

VISIT

SRI RAMA'S CAFE
TIRUKOILUR

FOR BEST COFFEE & MEALS

PROP : K. RAMAN.

FOR QUALITY PICTURE VARNISHING

CONTACT
S. P. SUBHAS CHANDRA BOSE
8-4-169-A, MUNDAGA NADAR ST.,
SIVAKASI (S INDIA)

தமிழ் வட்டத்திற்கு
அன்பான வாழ்த்துக்கள்!

★

ஸ்ரீ கண்ணன் டாக்கீஸ்
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்.

தமிழுக்குத் தொண்டுபுரியும்
தமிழ் வட்டத்திற்கு
எனது அன்புகனிந்த
வாழ்த்துக்கள்

★

M. C. A. RATHNASAMY THEVAR
PANCHAYAT UNION CHAIRMAN,
THIRUMANGALAM.

# தமிழில் வைணவம்

சி. வேங்கடசாமி

"மாயோன் மேய காடுறை உலகம்" என்பது தொல்காப்பியச் சூத்திரம். முல்லை நிலக் கடவுளாகப் போற்றப்படும் திருமால் வழிபாட்டின் தொன்மைக்கு, இது மிகச் சிறந்த சான்றாகும். அதையொட்டி, சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் போன்ற பைந் தமிழ்க் காவியங்களிலும் திருமால் பெருமை தீந்தமிழில் பாடப்பட்டுள்ளது. குறிப்பாக, பரிபாடல், ஆய்ச்சியர் குரவை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள இசைத் தமிழ்ப் பாக்கள் இறவாப் புகழ் பெற்றவையாகும்.

"திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

"கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே"

"நாராயணா என்னா நாவென்ன நாவே"

என்ற வரிப்பாடல்கள், தமிழ் மக்கள் செவியில் தேன் பாய்ச்சுகின்றன.

இலக்கிய உலகிலிருந்து, சமய உலகுக்குத் திருமாலை அழைத்துச் சென்று, அருள் கனிந்த பாமாலைகளை அவருக்கு அணிந்து மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியிலேயே திளைத்தவர்கள், ஆழ்வார்கள் ஆவர்.

குறிப்பாக, 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று போற்றப்படும் நம்மாழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் முத்தமிழின் சுவைக்கு முத்தாய்ப்பு வைப்பனவாகும். தமிழுக்கே தனிச் சிறப்பளிக்கும் அகத்துறைப் பாக்களில், இறைவனே பாட்டுடைத் தலைவனாக விளங்கும் போது, அவற்றின் உயர்வும், சுவையும் ஓங்கி வளர்கின்றன.

### ஒரு புதிய படலம்

சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள், இலக்கிய மரபை அடிப்படையாகக் கொண்டு, கலை வடிவம் பெறும்போது, புதிய பொலிவையும், வலிமையும் பெறுகின்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடியருளிய திவ்வியப் பிரபந்த, தேவாரத் திருமுறைப் பாடல்கள், இத்தகைய ஒரு மறுமலர்ச்சி இயக்கத்திற்குக் காரணமாக அமைந்தன என்று கூறலாம். தமிழிலக்கிய வரலாற்றிலேயே, இது ஒரு புதிய படலத்தை ஏற்படுத்தியதை, ஆராய்ச்சியாளர் அனைவரும் ஏற்றுக்கொள்வர். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ், சமய, இலக்கிய, மெய்யுணர்வுத் துறைகளிலும் முரசு கொட்டியதை, இந்த முயற்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

'தத்துவம்' என்ற பதம் விளக்கும் கருத்தை, "மெய்யுணர்தல்". என்ற அழகிய தீந்தமிழ்ச் சொல்லால் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இது பற்றி ஒரு தனி அதிகாரம் அமைத்துள்ளார். எப்போதும் உள்ள உண்மைகளை, தக்கவாறு உணர்ந்து அறியும் ஆய்வுத் துறை (தத்துவ இயல்-Philosophy) தமிழ் மக்களுக்குப் புதியதன்று என்பதற்கு, இந்தச் சொற்றொடரே சிறந்த

சான்ருகும். ஆராய்வோரின் பல்வேறு கண்ணேட்டங்களின் காரணமாக, "மெய்யுணர்வு" முடிவுகளும் பலவாக இருப்பது இயற்கை. குறிப்பாக, இறைவன், உயிர், உலகம் ஆகிய பொருள்களைப் பற்றிய விளக்கங்களும், தொடர்பும் மனித சமுதாயத்தின் ஆராய்ச்சிக்கு, என்றும் உரிய பொருள்களாய் அமைந்துள்ளன. இவற்றைப் பற்றிய கருத்துக்களும் ஆய்வுத் துறைகளும் பல்வேருக இருந்து வருகின்றன.

தத்துவத் துறையிலே அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம் ஆகிய மூன்று முக்கிய கண்ணேட்டங்கள் இருப்பது அனைவரும் அறிவர். இவற்றுள் விசிஷ்டாத்துவைதக் கருத்தை உலகுக்கு விளக்கிச் சொன்ன பெருமை பெரும்பூதூர் மாமுனிவர் எனப்படும் ஸ்ரீ ராமனுசரையே சாரும். அவர் சொன்ன தத்துவ விளக்கத்திற்கு வித்தாக அமைந்தவை, ஆழ்வார் அருளிச் செயல்களேயாகும். அவற்றுள் சிறப்பாக, நம்மாழ்வார் பாசுரங்கள் விசிஷ்டாத்துவைதக் கொள்கைக்கு, 'வைத்த மாநிதி'யாக விளங்கி வருகின்றன. "ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத் தாய் இராமாநுசன்" என்று இக்கருத்தை, ஆன்ருேர் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

தத்துவ விளக்கம் அறிவியல் ஆராய்ச்சியாளர்க்கு மட்டும் பயன்பட்டால் போதாது. பாமர மக்கள் அனைவரும் அவற்றைத் தக்கமுறையில் அறிந்து, தம் வாழ்க்கையில் சரியாக உணர்ந்து, சந்தேக விபரீதங்களை நீக்கி, உண்மைகளைத் தெளிந்து, அவற்றை வாழ்க்கையில் உறுதியாகக் கடைப்பிடிக்க வழி வகுத்தவர்களுள் ஸ்ரீ ராமானுசர் முக்கியமானவர் ஆவர். சமய நம்பிக்கை என்பது, இறைவனிடம் பற்று ஏற்படச் செய்கிறது; கோயில் வழிபாட்டுக்கும் சமுதாயச் சடங்குகளுக்கும் காரணமாக அமைகிறது. ஆனல் தத்துவ ஆராய்ச்சிக்கு அது அதிகம் பயன்படும் என்று சொல்ல இயலாது. அதே போல, தத்துவ ஆராய்ச்சி என்பது முடிவுகாண இயலாத முயற்சியாகத் தொடர்ந்து நீடிக்கக்கூடியது. கால நிலைக்கு ஏற்றபடி விரிந்து செல்வது. ஆனல், இலக்கிய மரபு என்பது, இந்த இரண்டுக்கும் இடையில் நிற்கக்கூடியது. வாழையடி வாழையாக வரும் பழைய மரபுக்கும் கால வெள்ளத்தால் தோன்றும் புதுமை நெறிக்கும் இணைப்புப் பாலம் அமைத்த பெருமை சமயக் குரவர்களைச் சாரும் என்று கூறலாம். மக்கள் சமுதாயத்தில் நல்வாழ்வுக்கான தெளிந்த கருத்துக்களை, மக்கள் மனதில் பதியும் வகையில் எடுத்துக்கூறிய பெரும் பணி, மிகவும் போற்றத்தக்கதாகும். மக்கள் பேசும் மொழியிலேயே, பழைய சமயக் கொள்கைகளை, கலைநயத்துடன் விளக்கும் திறமை ஒரு சிலருக்கே உண்டு. அத்தகைய ஆற்றல் பெற்ற அருளாளரே, ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்று தமிழ் உலகம் பாராட்டிப் போற்றி வருகிறது.

அவற்றுள், திருமால் வழிபாட்டில் உறுதிகொண்ட மக்கள் வைணவர் எனப்படுகின்றனர். அவர்களின் சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ற தத்துவ விளக்கம் கண்டு, உலகுக்கு உணர்த்தியவர் இராமானுசர். இலக்கிய உருவம் அமைத்துத் தந்தவர்களுள் தலைமையானவர்கள் ஆழ்வார்கள்.

### ஐம்பொருள் விளக்கம்

வைணவ தத்துவத்தின் முக்கிய கருத்துக்களை, ஐந்தாக வகுத்துக் கூறுவர். இதை ஐம்பொருள் விளக்கம் (அர்த்த பஞ்சக ஞானம்) என்று மெய்யுணர்வுத் துறையுள் குறிப்பிடுவர். இவற்றை மிகச் சுருங்கிய முறையில் ஓர் அழகான வெண்பா—திருவாய்மொழியில் தனியன்—தொகுத்துக் கூறுகிறது.

> மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்
> தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
> ஊழ்வினையும், வாழ்வினையும், ஓதும் குருகையர்கோன்
> யாழின் இசை வேதத்து இயல்.

இப்பாட்டில் கையாளப்பட்டுள்ள சொற்கள், மிகத் திட்பமாகவும், நுட்பமாகவும், சூத்திரம் போல் சிறப்பாக அமைந்துள்ளன.

கடவுளைப் பற்றியது, முதல் விளக்கம். இதை 'இறைநிலை' என்ற சொல் குறிப்பிடுகின்றது. அதற்கு அடைமொழியாக, 'மிக்க' என்ற சொல் உள்ளது. உயர்வற உயர் நலம் உடைய செம்பொருளை, இச்சொற்ருெடர் மிக அருமையாக விளக்குகிறது.

இரண்டாவதாக இருப்பது, 'உயிர்நிலை' யாகும். ஜீவன் எனப்படும் உயிரியல் பண்பை அறிதல், இரண்டாவது முக்கிய கருத்தாகும். இதற்குள்ள 'மெய்யாம்' என்ற அடைமொழி, பொய்யான விளக்கத்தை நீக்கி, என்றும் நிலைத்து நீடூழி வாழும் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. ஜீவனும், பரம்பொருளும் ஒன்றே என்ற அத்துவைத கொள்கைக்கு, இது மாறுபட்டதாகும்.

மூன்ருவதாக, மெய்யான ஜீவன், உயர்ந்த பரம்பொருளை அடைவதற்கான வழியை அறிவதாகும். நான்காவதாக, அந்த வழிக்கு விரோதமாக உள்ளனவற்றை உணர்வதாகும். கடைசியாக, வாழ்வாங்கு வாழும் நெறிமுறையை அறிந்து ஒழுகுவதாகும்.

இறைவனின் பெயரைப் பொறுத்த வரையில், வைணவம், சைவம் ஆகியவற்றிடையே, பெயர் மாறுபாடு உள்ளது. பரம்பொருளை, வைணவர்கள் திருமால் என்கின்றனர்; சைவர்கள் சிவபெருமான் என்கின்றனர். உயிர் நிலையிலுள்ள அனைவரும் இறைவனின் அடிபணிந்து, அவனுக்கும் அவன் அடியார்க்கும் பணிசெய்து வாழ்வதே வீடு பெறுவதற்கான ஒ

வழி என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இறைவனையும், அடியாரையும் வழிபாட்டுப் பணி புரியும் நடைமுறை வழக்கங்களே சமயச் சடங்குகளாகப் பெருகியுள்ளன.

மக்கள் வாழ்வின் உயிர்மூச்சாகத் தமிழ்மொழி வழங்குவது போன்று, சமுதாய வாழ்வின் உயிர்நாடியாகச் சமயப் பண்பு நம் நாட்டில் மிகப் பழங்காலத் தொட்டு வளர்ந்தோங்கி வருகிறது. என்றும் உள செந்தமிழின் சீரிளமைத் திறம் போன்று, சமுதாய வாழ்வின் துருவ நட்சத்திரமாக, நமது மெய்யுணர்வுப் பண்பாடு நிலைத்து வாழும் ஆற்றல் வாய்ந்தது.

இயல், இசை, நாடகம் என வழங்கும் முத்தமிழ் போன்றே, சமய, இலக்கிய, தத்துவ உருவில், மெய்யுணர்வுப் பண்பாடு, தமிழ் மொழி வாயிலாகக் காட்சியளிப்பதை வைணவர்கள் மிகவும் ஈடுபட்டு அனுபவித்துள்ளனர். இதையே ''யாழின் இசை வேதத்து இயல்'' என்ற தனியன் நினைவுபடுத்துகிறது. வைணவ சமயத்தில் ஐம்பொருள் விளக்கத்திற்கான தொகுப்புரை கொண்ட மேற்சொன்ன வெண்பாவில், செந்தமிழ்ச் சொற்களையும், நடையழகையும், பொருள் ஆழத்தையும் கூர்ந்து கவனித்தால், தமிழின் பண்டைய மரபும், இலக்கிய மெருகும் இனிது புலப்படும்.



## கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள்

மனோன்மணிய நாடகத்தில் சுந்தர முனிவர் என்ற ஒரு முக்கியமான பாத்திரத்தை ஆசிரியர் சுந்தரம் பிள்ளை படைத்துள்ளமை அனைவரும் அறிந்ததே. சுந்தரம் பிள்ளை தமக்கு வேதாந்த தத்துவங்களைப் போதித்த கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளையே சுந்தர முனிவராகத் தமது நூலில் சித்திரித்துப் போற்றியிருக்கிறார் என்பதும் மனோன்மணீயம் கற்றவர்களுக்குத் தெரியும். ஆனால் சுந்தர சுவாமிகளின் வரலாற்றை அறிந்தோர் ஒரு சிலரே. சுந்தர சுவாமிகள் மொத்தம் 22 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் லக்ஷதீப விழா நடைபெற முதல் முதலில் (1864-ல்) ஏற்பாடு செய்தவர் இவரே. இவர் தமிழில் சில வேதாந்த நூல்களும் இயற்றியிருக்கிறார். அவற்றுள் ஒன்று, ஆசிரியர் சுந்தரம் பிள்ளையினுடைய வேண்டுகோளின் பேரில் இயற்றப்பட்ட தாகும்.

சுந்தர சுவாமிகளின் உருவச்சிலை ஒன்று காசி மணிகர்ணிகா கட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டையைச்சேர்ந்த அரிமளத்தில், அவர் சமாதியான இடத்தில், சிவராமன் செட்டியார் என்ற தனவந்தர் ஒரு சிவாலயம் கட்டியிருக்கிறார். இன்று வரையிலும், அங்கே சிறப்பாகப் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன. சுவாமிகளின் உறுதுணைவர்களாகவும் பரமபக்தர்களாகவும் விளங்கியவர்களில் முக்கியமானவர் அரிமளம் சிவராமன் செட்டியாரே. சுந்தர சுவாமிகள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள கங்கைகொண்டான் என்னும் ஊரில், பிரசித்தி பெற்ற அப்பைய தீக்ஷிதரின் பெண்வழிச் சந்ததியில் 5-வது பரம்பரையில் யக்ஞேஸ்வர சிவன்-காமாக்ஷியம்மாள் என்ற தம்பதிகளின் இரண்டாவது குமாரராக 3-12-1831-ல் பிறந்தார். இவருக்குக் குருநாதர்களாக விளங்கியவர்கள் வீரவநல்லூர் சுந்தர சாஸ்திரிகளும், அடைச்சாணி விசுவேசுர சாஸ்திரிகளும் ஆவர். அடைச்சாணி கிராமத்திலேயே ஜானகியம்மாள் என்னும் பெண்மணியை இவர் திருமணம் செய்து கொண்டார். பின்பு பத்தமடை, கோடகநல்லூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று அங்கேயே வசித்து வரலானார். பக்தர்கள் கூட்டத்தில் வேதாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி ஞானோபதேசம் செய்வதையே தம் வாழ்க்கையாகக் கொண்டு விட்ட இவர் தமது 23-வது வயதிலேயே துறவு பூண்டார்.

பெண்களுக்கும், பிராமணரல்லாதாருக்கும் இவர் வேதாந்த ஞானம் போதித்ததைச் சில வைதீகர்கள் ஆட்சேபித்ததும் உண்டு. ஞானம் அனைவருக்கும் பொது என்று கூறி அவர்களுடைய ஆட்சேபத்தை யெல்லாம் புறக்கணித்தவர் சுந்தர சுவாமிகள்.

பல அருஞ்செயல்கள் புரிந்து, இறுதியில் அரிமளத்தில் காலமானபோது இவருக்கு வயது 47.

—இந்தக் கட்டுரையில் காணும் தகவல்களுக்கு ஆதாரம்: கங்கைகொண்டான் ஜி. கே. சுப்பய்யர் எழுதிய ''கோடகநல்லூர் சுந்தர ஸ்வாமிகள் திவ்விய சரித்திரம்'' என்ற நூலின் முதற் பதிப்பு (1940).

தமிழ் வட்டத்திற்கு

எங்களது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்கொள்கிறோம்.

# P. கருப்பண்ண கவுண்டர் & கோ.,

## கார்த்திகேயா ஆயில் & ரைஸ் மில்,

**17 c, மங்கலம் ரோடு,**

**திருப்பூர்.**

# மலாய், தமிழ்: மொழி உறவுகள்

சி. வேலுசுவாமி, கோலாலும்பூர்

தமிழ் நாட்டுக்கும் மலேசியத் தீபகற்பத்துக்கும் உள்ள தொடர்பு நெடுங்காலத்ததாகும். கிறித்துவுக்குப் பின் முதலாம் நூற்ருண்டில் தமிழகத்திலிருந்து மக்கள் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு வந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது. 'பரதவர்' களாகிய அவர்கள் பருவக்காற்றின் துணையோடு கலஞ் செலுத்தி வந்தவர்களாதலின், உடனே திரும்பிச் செல்ல இயலாதிருந்தது. வணிக நோக்குடன் வந்த இவர்கள், அந்நாளில் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களுடன் வணிகத் தொடர்பு கொண்டனர். நாளடைவில் இங்ஙனம் வந்த இவர்கள் எண்ணிக்கையிற் பெருகி மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ வேண்டியவர்களாக மாறினர். இவர்களுடைய சமயம், கலை, நாகரிகம், பழக்க வழக்கம் போன்றவை நாகரிகத்திற் குறைந்திருந்த இப்பகுதி மக்களை ஈர்த்ததில் வியப்பில்லை யெனலாம். இவ்வாறு வணிக நோக்குடன் முன்னும் பின்னும் வந்தவர்கள் நாளடைவில் தங்கள் இராஜ்யங்களையும், பட்டணங்களையும், கோவில்களையும் ஆங்காங்கு அமைத்துக்கொண்டனர். இவ்வாறு ஏற்பட்ட ஓர் இந்து ராஜ்யமே ஸ்ரீ விஜயா. ஸ்ரீ விஜயாவின் காலத்தில் சுமத்ரா, பங்கா தீவுகள், மலேசியத் தீபகற்பம், ஜாவா (சாவகம்), போர்னியோ, பிலிப்பைன்ஸ், ஸெலிபிஸ், பார்மோஸா, இலங்கையின் தென்பகுதி ஆகிய யாவும் அதற்குட்பட்டிருந்தன. சுமத்ராவிலுள்ள பலெம்பாங், ஸ்ரீ விஜயாவின் தலைநகராயிருந்தது. அரேபியா, பாரசீகம், சீனு, சயாம், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து கப்பல்கள் பலெம்பாங் துறைமுகத்துக்கு எந்நேரமும் வந்துபோன வண்ணமிருந்தன.

கிறித்துவுக்குப் பின் முதல் நூற்ருண்டில் ஏற்பட்ட இத்தொடர்பு இரண்டாம் மூன்ரும் நூற்ருண்டுகளில் தென்கிழக்காசியா முழுமையும் பரவிற்று. இதனுல் இந்தியக் கலாசாரமும், நாகரிகமும், ஸம்ஸ்கிருத மொழியும் இங்கு வாழ்ந்த மக்களிடையில் வேரூன்றலாயிற்று. பதினுன்காம் நூற்ருண்டுவரை ஸ்ரீ விஜயா சாம்ராஜ்யம் செழித்து விளங்கியது.

ஸம்ஸ்கிருதம் மலாய் மொழியில் பேரளவில் கலந்துள்ளதற்கான காரணத்தை மேற்கூறியவற்றிலிருந்து உணரலாம். ஆம், ஸம்ஸ்கிருதம் அக்காலத்தில் மலாயர்கள் தங்கள் பேச்சு மொழியை வரிவடிவில் எழுதுவதற்குப் பயன்பட்டுள்ளது. இதனை ஒஸ்மாஸ் சுலைமான் என்ற மலாய் ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

''முதன் முதலில் மலாய் மொழி ஸம்ஸ்கிருத எழுத்துக்களால் எழுதப்பட்டது. இதற்குக் காரணம் இப் பகுதியை ஆண்ட மன்னர்கள் இந்து சமயத்தைத் தழுவியவர்களாக இருந்ததே. 14-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் இஸ்லாம் சமயம் இங்குப் பரவத் தொடங்கியபோது, அரபு எழுத்து உபயோகத்துக்கு வந்தது. பின்னர் 16-ம் நூற்ருண்டில் ஐரோப்பியர்கள் வந்ததும் ஆங்கில எழுத்தை உபயோகிக்கத் தொடங்கினர். இன்று மலாய் ஜாவி (அரபு எழுத்து), ரூமி (ரோமனைஸ்டு) எழுத்துக்கள் எழுதப்படுகின்றன.''

திரு. ஒஸ்மாஸ் சுலைமானின் கருத்து உண்மையானது என்பதைச் சீன யாத்திரிகர் இட்ஸிங்கின் குறிப்பும் உறுதிப்படுத்துவதா யிருக்கின்றது. இவர் கி. பி. 671ல் பலெம்பாங் வந்து ஆறு திங்கள் வரை தங்கியவராவார். ஸம்ஸ்கிருதத்தைப் பயிலவே இவர் வந்தார் என வரலாறு குறிப்பிடுகின்றது. அவர் ஸ்ரீ விஜயாவை 'சோ-லி-போச்சி' என்று குறிப்பிட்டுள்

ளார். ஏழாம் நூற்றுண்டில் வந்த அராபிய எழுத்தாளர்களும், யாத்திரிகர்களும் ஸ்ரீ விஜயாவைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். "ஸ்ரீ புஸா" என்று அவர்கள் ஸ்ரீ விஜயாவைக் குறித்துள்ளனர். ஐரோப்பியரான மார்க்கோ போலோ சிலோனுக்குப் போகும் வழியில் கிழக்கிந்தியத் தீவுக் கூட்டங்கள் சிலவற்றைப் பார்த்துள்ளதாகவும், ஸ்ரீ விஜயாவைப் பற்றிக் கேள்வியுற்றதாகவும் தம் குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

இவற்றிலிருந்து இந்தியாவின் பூர்வீக மொழியான ஸம்ஸ்கிருத மொழித் தொடர்பும், நாகரிகம், கலை, கலாசாரத் தொடர்பும் மலேசியத் தீபகற்பத்திலும் சுற்றியுள்ள நாடுகளிலும் வெகு நீண்ட காலமாக இருந்து வருகின்றன என்ற பேருண்மை தெள்ளத் தெளிய விளங்குகின்றதல்லவா? இதனுல்தான் இன்றும் மலாய் மக்களிடையே இந்தியச் சாயல் பரந்து கிடப்பதைக் காண முடிகின்றது.

## தொன்று தொட்ட உறவுகள்

அந்தக் காலந் தொட்டு ஏற்பட்ட பழக்க வழக்கம் காரணமாக மலாய்க்காரர்களிடையே எத்தனையோ வழக்கங்கள் படிந்துவிட்டதைக் காணலாம். வெற்றிலை போடுதல், திருமணச் சடங்கு நடத்துதல், பெண் பேசுதல், மாப்பிள்ளை ஊர்வலம் வருதல், கை கூப்பி வணக்கம் செய்தல், சம்மணமிட்டு அமர்தல், திருமண வீட்டுக்கு வந்து செல்பவர்கட்குக் கையுறை கொடுத்தனுப்புதல், கையால் சாப்பிடுதல், மந்திரத்தில் நம்பிக்கை கொள்ளுதல், பேய் பிசாசு ஓட்டுதல் முதலிய யாவும் இந்தியப் பழக்க வழக்கங்களை ஒட்டியனவே ஆகும் என்பதில் ஐயமில்லை.

அரச முடி சூட்டு விழா, பட்டப் பிரகடனம் செய்யும் விழா ஆகியவற்றில் இந்துக்களின் முறைகளே இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன. சுல்தான்களைப் பற்றிய வரலாறுகளைப் படிக்கும்போது இவ்வுண்மைகள் தெரியவருகின்றன. சுலோகங்கள் சில ஸம்ஸ்கிருதச் சுலோகங்களாக உள்ளனவென்பதும் தெரிய வருகின்றது.

## இலக்கிய உறவு

இராமாயணமும், மாபாரதமும் எவ்வாறு இந்துக்களின் சிறப்புக்குரிய இரு காவியங்களாக உள்ளனவோ, அவ்வாறே அவை மலாய்க்காரர்களின் இலக்கியத்திலும் அமைந்துள்ளன. ஆதிகாலந் தொட்டே இவ்விரு காவியக் கதைகளும் கிழக்கிந்திய தீவுப் பகுதிகளில் பரவத் தொடங்கிவிட்டன. ஸம்ஸ்கிருதத்திலிருந்தே இவை சிறு சிறு பகுதிக் கதைகளாக அமைந்திருக்க வேண்டும் என எண்ண வேண்டியிருக்கின்றது. இதுபற்றிப் போதிய ஆய்வின்றி எதுவும் கூறமுடியாது. எனினும், மலாய் மொழியில் இன்று வெளி வந்துள்ள இராமாயண, மாபாரதக் கதைகள் ஸம்ஸ்கிருதத்திலிருந்தோ, தமிழிலிருந்தோ நேர் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டவையன்று என்பதை மட்டும் உறுதியாகக் கூறமுடியும்.

இன்று கிடைக்கும் குறிப்புக்களின்படி இராமாயணம் "ஸ்ரீ ராமா" என்ற பெயரில் 15ம் நூற்றுண்டில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இதுவும் முழுமையான கதையன்று. கதைக் கருவை எடுத்துக் கொண்டு மலாய் மொழியில் எழுதப்பட்டது. ஆதலால் சில இடங்களில் கருத்தே வேறுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. 'மலேசியா பப்ளிஷிங் ஹௌஸ்' வெளியிட்டுள்ள 'ஹிக்காயட் ஸ்ரீ ராமா' (ஸ்ரீ ராமர் கதை) என்னும் நூலில் இத்தகைய கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. நூல் முழுவதையும் படித்தவர்கட்கு இவ்வுண்மை தெரியவரும்.

இராமாயணத்தை 925ம் ஆண்டில் யோகீஸ்வரா என்பவர் ஜாவானிய மொழியில் எழுதியதாக ஒரு குறிப்புக் கூறுகின்றது. ஆனல், 'ஜாவானிய இராமாயணமும், மலாய் இராமாயணமும் ஒன்றுபோல் இல்லை. எனவே இது ஜாவானிய மொழியிலிருந்து மலாயில் மொழி பெயர்க்கப்பட்டதல்ல' என மற்றெரு குறிப்புக் கூறுகின்றது. மலாய் இராமாயணம் எங்ஙனம் எழுதப்பட்டதென்பது பற்றி ஐயப்பாடு இருப்பினும் அது பழைய மலாய் இலக்கியமாகக் கருதப்படுகின்றது என்பதே நமக்குத் தேவையானது.

இராமாயணத்தில் வரும் கதை மாந்தர்கள் பெயரும் மாறுபட்டுள்ளன. ஒரு மொழியைப் படியாதவர் அம்மொழியைச் சரிவர ஒலிக்க முடியாததால் ஏற்பட்ட பிழை இது. சில பெயர்கள் எவ்வாறு மலாய் மொழியில் குறிக்கப்பட்டுள்ளன என்பதைக் காணலாம்:

ஜெண்டாயு (ஜடாயு), டேவி ஸ்ரீ ஜதி (திரிசடை), சுர்கீவா (சுக்ரீவன்), ஜம்புவனு (ஜாம்பவான்), லக்ஸமனு (லக்ஷ்மணன்), கம்பகமா (கும்பகர்ணன்).

இராமாயணத்தைப் போலவே மாபாரதமும் மலாய் மொழியில் எழுதப்பட்டுள்ளது. மொழி வளர்ப்பு நிறுவனத்தின் (டேவான் பாஹாஸா டான் புஸ்தகா) வெளியீடாக 'செரித்திரா பாண்டவா லீமா' என்னும் நூல் வெளி வந்துள்ளது. இந்நூலின் முகவுரையில் இந்நூலின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறியுள்ளார் அதன் ஆசிரியரான ஹலீத் ஹஸான் என்பவர். இவர் அரவிந்தர், ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸர்க்கார், ரமேஷ் ஸி. டட், சுக்தாங்கர் போன்றவர்களும், இரண்டொரு இந்தோனேஷ்ய ஆசிரியர்களும் எழுதிய நூல்களைத் துணையாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.

இன்று இந்நூல் 'பழைய மலாய் இலக்கியம்' என்ற பெயரால் மாணவர்களுக்குப் பாட நூலாக அமைந்துள்ளது. இதிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

பெயர்களும் மலாய் ஒலிக்கேற்பத் திரித்து எழுதப்பட்டுள்ளன. சிலவற்றைக் காணலாம்:

பரிகஸ்து (பரீட்சித்து), ரஜூனு (அர்ஜுனன்), ஸகுலா (நகுலன்), ஸாடேவா (சகாதேவன்), சங்குனி (சகுனி), கொரவா (கௌரவர்), டுர்யுடனு (துரியோதனன்), டர்மவங்ஸா (தருமர்), நிகர்ணன் (விகர்ணன்), டுர்சனு (துர்ச்சாதனன்).

இந்த இருநூல்களும் 'பழைய மலாய் இலக்கியங்கள்' எனக்கொள்ளப்பட்டுள்ளன. இதிலுள்ள கதைகள் நாடகங்களாக நடிக்கப்படுகின்றன என்பதுடன், பொம்மலாட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. கிழக்கு மலேசியாவில் ஒரு மாநிலமான கிளந்தானில் இராமாயணக் கதையைப் பொம்மலாட்டத்திற் பயன்படுத்துபவர்கள் இன்றும் உள்ளனர். விசேஷ நிகழ்ச்சிகளில் இதனைக் காணலாம். இதனையும் இவர்கள் இந்தியர்களிடமிருந்தே கற்றுக் கொண்டனர் என்பதில் சந்தேகமில்லை. இராமாயணமும் மாபாரதமும் இந்த அளவில்தான் மலாய்க்காரர்களுடன் தொடர்பு கொண்டுள்ளன.

இலக்கிய உறவு என்ற வகையில் இந்த நூல்களை எழுதியவர்களைப்பற்றி ஆராய்வதானால் அது விரியும். பலரால் இவை எழுதப்பட்டுள்ளன. முதலில் இவை சுலோகங்களாகவே எழுதப்பட்டதாக அறியமுடிகிறது எனினும், அதற்கான சான்றுகள் இப்போது கிடைப்பது அரிதாயுள்ளது. செய்யுள் வடிவிலும் (பாந்தூன்) இராமாயண, மாபாரதக் கதைகள் எழுதப்பட்டுள்ளன வென்பதை ஸெஜாரா மலாயு (மலாய் வரலாறு) மூலம் அறியக் கிடக்கிறது. அவையும் இப்போது கிடைப்பதாயில்லை.

18ம் நூற்றாண்டில் மற்றொரு நூல் தமிழிலிருந்தே மலாய் மொழியில் எழுதப்பட்டது. அதுவே பஞ்சதந்திரம். இதனை எழுதியவர் 'முன்ஷி' (பன்மொழி அறிந்தவர்) அப்துல்லாஹ்.

## அப்துல்லாஹ்வும் மலாய் இலக்கியமும்

"அப்துல்லாஹ் அசல் மலாய்க்காரர் அல்லர். அவரை எப்படி மலாய் இலக்கியத்தின் தந்தையெனக் கூறமுடியும்? அவருக்கு மலாய்ச் சமூகத்தைப் பற்றியோ, மலாய் சுல்தான்களின் ஆட்சி முறைகளைப் பற்றியோ ஏதும் தெரியாது" என்று சிலர் கூறி அவரை ஒதுக்குகின்றனர் இன்று. இக்கருத்துக்கள் முற்றாக ஏற்றுக்கொள்ளக் கூடியனவல்ல. "ஸெஜாரா மலாயு" என்ற நூலைப் படித்தால் சுல்தான்களின் ஆட்சிமுறையை அப்துல்லாஹ் அறிந்திருந்தார் என்றே எவரும் முடிவு செய்வர்.

1796ம் ஆண்டில் மலாக்காவில் 'கம்பொங்' பாலி, எனத் தமிழர்களால் வழங்குபட்டு வந்த 'கம்பொங் மஸ்ஜிட்'டில் அப்துல்லாஹ் பிறந்தார். இவருடைய பெற்றோர் அசல் மலாய் இனத்தவரல்லர். தந்தையார் அப்துல் காதிர் அரபு இனத்தவர்; தாயார் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்; பெயர் ஆச்சி. அப்துல்லாஹ் அரபு, தமிழ், மலாய், இந்துஸ்தானி, ஆங்கிலம் முதலிய மொழிகளை அறிந்திருந்தார். அதிலும் மலாயிலும் அரபுவிலும் நல்ல புலமையைத் தேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து பெற்றிருந்தார். இவர் பஞ்சதந்திரத்தை 1835ம் ஆண்டில் மலாயில் எழுதி முடித்தார். அப்துல்லாஹ்வின் வரலாறு (சுயசரிதை), அப்துல்லாஹ்வின் யாத்திரை ஆகிய நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவரைத் தவிர வேறு யாரும் தமிழிலிருந்து மலாய் மொழிக்கு எந்த நூலையும் மொழி பெயர்த்ததாக வரலாறு இல்லை.

அப்துல்லாஹ் எழுதிய ஸெஜாரா மலாயு மலாய் நூலாயிருந்தாலும் தமிழ்-இந்து தொடர்பான பெயர்கள், கதைகள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியன அந்நூலில் ஆங்காங்கு காணக்கிடக்கின்றன. ஸ்ரீ விஜயா சாம்ராஜ்யத்தின் தலைநகரமான பலெம்பாங், சிங்கப்பூரின் வரலாறு, மலாக்காவின் வரலாறு, அரச மரியாதை, வணக்க முறைகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இந்நூலிற் குறிக்கப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ள சில பெயர்கள் தமிழ்த் தொடர்புள்ளவையாக உள்ளன. அவற்றுள் சில: ராஜசூரன், கிருஷ்ண பண்டிதர், ராஜசோழன், வான்மாலினி, சந்திராதேவி, ஸ்ரீ தேவி, இந்திரா பூபாலன், ஆர்ய பூபாலன், நீல உத்தமன், விரராமராஜ முதலியார், ஜம்புகராம முதலியார், நீல பஞ்சடை, ஸ்ரீ திரிபுவனர், மஹா இந்திர பூபாலர், ஸ்ரீ விக்ரமவீரன், ஸ்ரீ ராணு வீர கர்மன், விஜய விக்ரமன், பிரமதேவன், மணி புரிண்டன்.........

## இரு மொழிகளுக்கிடையிலும் ஏற்பட்டுள்ள சொல் பரிமாற்றம்

மலாய்மொழி தேசிய மொழியாகவும், அரசியல் மொழியாகவும் ஆன பின்னர்தான் அதற்கும் தமிழுக்கும் அல்லது ஸம்ஸ்கிருதத்துக்கும் உள்ள நெடுந்தொடர்பை அறிய முடிந்தது. மலாய் நூல்களைப் படித்தால் பல ஸம்ஸ்கிருதச் சொற்கள் தற்சமமாகவோ, தற்பவமாகவோ சற்று ஒலி வேறுபாட்டுடன் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். தமிழ்ச் சொற்கள்-தனித்தமிழ்-சிலவே. வடமொழிச் சொற்களே ஏராளம். எல்லாவற்றையும் இங்கு எடுத்துக்காட்டல் இயலாதாதலின் சிலவற்றை மட்டும் காணுவோம்:

தமிழைப் போன்றே ஒலிக்கும் சொற்கள்: அச்சு, அம்மா, அமர், அம்பல், அடு (சண்டை), அய்யா, எம்பி (என் தம்பி), இது, ஓய், ஓ, கஞ்சி, கப்பல், கறி, கட்டை, காவி, காவல், கட்டில், கூடை, கூலி, குப்பி, கோயில், கொண்டை, செட்டி, சொத்தை, சுருட்டு, தாலம் (தட்டு), தாலி, தாளி, திரை, தோழன், மாமன், மாமி, மணு, மாங்காய், முத்து, மீசை, மெட்டு, முடி, பங்கு, பொடி, நொண்டி.

## வாயறியா இன்பம்

பெ. தூரன்

உண்மைக்கோ காலில்லை ; பொய்யெங்கும்
பாய்ந்துலவும்.
வன்மைக்கோ நாவில்லை ; வாய்வீரம் விண்முட்டும்.
பண்ணுக்கோ சொல்லில்லை ; பரமனுக்கோ மூச்சில்லை.
கண்ணுக்கோ ஒளியில்லாக் காலனவன் வாலைப்பெண்.
படைத்தவற்றைச் சுட்டெரிக்கும் பாட்டாளி ;
பொறிவாயில்
கடந்தவனை விழுங்கியங்கு கந்தழியில் ஒன்றிவிடில்
உண்மையில்லை; பொய்யில்லை; உயர்பரமன் பேருமில்லை;
வன்மையதே; மென்மையதே; வாயறியா இன்பமதே.

வடமொழி போன்றே ஒலிக்கும் சொற்கள்: அநேக, ஆத்மா, கர்மா, காலி, கஜானு, கார்யா, கும்பல், ஹனுமான், ஸ்ரீ சிந்தாமணி, மஹா, மஹாராஜு, மகரிஷி, மஹாமேரு, மஹாதேவி, மஹாதேவன், மஹாத்மா, மஹசூல், மாளிகை, மணி, மாணிக்கம், மாயா, நிரை, நிலை, பக்ஷி, சக்தி, ஸமாதி, ஸர்வ, உபதி...

'வ' ஒலி 'Ba' ஒலியாக மாறி ஒலிக்கும் சொற்கள்: பட்டில் (வட்டில்), பெலாச (விளாச), பீரா (வீரன்), பகை (வகை), பாகு (வாகு-தோள்), பைடூரி (வைடூரியம்), பாடை (வாடை), பெடுவான் (வித்துவான்)...

'ப' ஒலி 'Ba' ஒலியாக மாறி ஒலிக்கும் சொற்கள். புவனு (புவனம்), பூதலா (பூதலம்) பூஷணு, (பூஷணம்), பூபதி (பூபதி), பூமி (பூமி), பூடி (புத்தி), பூங்கா (பூங்கா).

பலவகையாக மாறி ஒலிக்கும் சொற்கள்: பிரதான (பெர்டான), பதுமம் (பட்மா), நரகம் (நெரகா), அனுக்கிரகம் (நுரகா), தக்ஷிணம் (பக்ஷினு), உதரம் (உடாரா), தமாஷ் (தெமாஷா), கோபாலா (கெம்பாலா), இளைய (பெலியா), சகோதரன் (ஸவுடாரா) சகோதரி (ஸவுடாரி.)

வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் மலாய் மொழியில் கலந்துள்ளன. எனினும், ஓராயிரம் சொற்களாயினும் வடமொழிச் சொற்களாகலாம் என்று கூறலாம். சில சொற்கள் இன்ன மொழிச் சொல் என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்குத் திரிபு பெற்றுள்ளன. கெம்பாலா (கோபாலா), பிச்சாரா (விசாரணை), கம்பகமா (கும்ப கர்ணன்), ஸ்ரீஜதி (திரிசடை), சிந்தாதேவி (சீதாதேவி) போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஆய்வின் மூலம் இன்னும் பல சொற்கள் நமக்குக் கிடைக்கக் கூடும்.

**தமிழில் வழங்கும் மலாய்ச் சொற்கள் சில:** தமிழ், ஸம்ஸ்கிருதச் சொற்களை மலாய்க்காரர்கள் பயன்படுத்துவது போன்றே தமிழர்களும் மலாய்ச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். எனினும், பேச்சு வழக்கில் பயன்படுத்துமளவுக்கு அவை எழுத்து வழக்கில் இல்லை. இந்தப் பேச்சு வழக்குச் சொல்லும் அதிகமாகக் கிராமப்புறங்களில் வழங்கப்படுகிறதே தவிர நகரப்புறங்களில் அல்ல. சில சொற்களைக் காணுங்கள்:

அவுட்டா (பொய்), பிளாஞ்சா (இனும்), ஸம்சா (சிறு கரண்டி), சுக்கை (வரி), ஜஞ்சி (உறுதிமொழி), ஜவாப் (பதில்), கிளாம்பர் (கொசு வலை), கிராணி (குமாஸ்தா), லாலாங் (ஒரு வகை நீண்டபுல்), லொம்போங் (ஈயச் சுரங்கம்), மபோக் (மயக்கம்), மங்கு (ஒரு வகைக் கிண்ணம்), பாக்கார் (முள்வேலி), பாராங் (வெட்டுக் கத்தி), பாடாங் (புல்வெளி, விளையாட்டுத் திடல்), பக்காய் (அணிதல்), சிலுவார் (காற் சட்டை), சப்பாத்து (காலணி), சூரா (கடிதம்), சிம்பாங் (முச் சந்தி), தவுக்கை (முதலாளி), தாங்கா (ஏணிக்கைப் பிடி), சின்னுங் (சுலபம்), பெரா‌ஞ்சா (விசுப்பலகை), மண்டூர் (மேற்பார்வையாளர்) ரஸாலா (குற்றம்)

**இன்றைய நிலை**

மலேசியா விடுதலையடைந்த பிறகு மலாய்-தமிழ் உறவு வளரத் தொடங்கியுள்ள தென்றே கூறலாம். பள்ளிகளில் மலாய் கட்டாய பாடம். அலுவலகங்களில் மலாய் மொழியே முதலிடம் பெறுகிறது. இத் தகைய காரணங்களால் மலாய் படிப்போர் எண்ணிக்கை பெருகிவருகிறது. ஆசிரியர் பயிற்சி வகுப்புக்களிலும் மலாய் முக்கிய இடம் வகிக்கின்றது. அதனால் மலாய் இலக்கியங்களையும், மலாய்ச் சிறு கதைகளையும், மலாய் நாவல்களையும், மலாய்க் கவிதைகளையும் படிப்போர் வளர்ந்து வருகின்றனர். தமிழ் எழுத்தாளர்களுள் இரண்டொருவர் மலாய்ச் சிறு கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர், நாளிதழ்களிலும், மாத, வார இதழ்களிலும். அவர்களுள் ஒருவர் திரு. கிருஷ்ணன். மற்றொருவர் இக்கட்டுரை ஆசிரியர். இதைத் தவிரப் பல்கலைக் கழக மாணவர் திரு. க. நாராயணசாமி, பி. ஏ., (ஹானர்ஸ்) பாரதியாரைப்பற்றி அருமையான கட்டுரையொன்றை மலாய் நாளிதழான 'பெரித்தா ஹரியானி'ல் வெளியிட்டுள்ளார். தற்போது 'தமிழ்நேசன்' புதன், ஞாயிறு இதழ்களில் தேசிய மொழிப் பாடம் எழுதிவருபவரும், அமினுடின் பாக்கி மலாய் உயர் நிலைப்பள்ளியில் மலாய் ஆசிரியராக உள்ளவருமான திரு. ஜி. சூசை என்பவர் தமிழ் இலக்கிய சம்பந்தமான கட்டுரைகளை அவ்வப்போது 'மஸ்திகா' என்

னும் மாத இதழிலும் பிற இதழ்களிலும் எழுதி வருகின்ருர். திரு. சி. கமலநாதன் சில மலாய்க் கவிஞர்களுடைய வரலாற்றைக் கவிதைக் குறிப்புக்களுடன் வானொலியில் ஒலிபரப்பச் செய்துள்ளார். இதுவரை எந்தத் தமிழ் நூலும் முற்ருக மலாய் மொழியில் மொழி பெயர்க்கப்படவில்லை என்ற குறையும் இப்போது நீங்கிவிட்டது.

உலகம் புகழும் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் பலவற்றின் துணையுடன் மலாய்மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த மொழி பெயர்ப்பைச் செய்தவர் மலாயாப் பல்கலைக் கழகத்தின் மலாய்ப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் இஸ்மாயில் உஸேன் என்பவராவார். நான் முன்பே குறிப்பிட்டுள்ள 'ஸெஜாரா மலாயு' (மலாய் வரலாறு) என்ற நூலும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இந்த மொழி பெயர்ப்பைச் செய்து வருபவர் மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்தியப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் இராம சுப்பையா அவர்களாவார். இவர் "மலாக்கா மன்னர்களின் வரலாறு" என்ற நூலையும் மொழி பெயர்த்துள்ளார்.

மொழி இலக்கிய நிறுவனத்தினர் மலாய் எழுத்தாளர்களிடையே சிறு கதைப் போட்டி ஒன்றை நடத்திப் பரிசுக்கான கதைகளையும், சிறப்புக்குரிய கதைகளையும் வெளியிட்டுள்ளனர் நூலாக. "செரித்தா பேண்டேக்" (சிறுகதைகள்) என்ற அந் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இக்கட்டுரை ஆசிரியரால் மொழியாக்கம் செய்யப்பட்டு நிறைவுறும் நிலையிலுள்ளது. இதுவும் விரைவில் 'மலாய்ச் சிறுகதைகள்' என்ற பெயரில் வெளிவரும். இவையே இன்றைய நிலையில் மலாய்—தமிழ் இலக்கிய உறவுகளாக வளர்கின்றன. எதிர் காலத்தில் தமிழ் இலக்கியங்கள் மலாய் மொழியில் நேரடி மொழிபெயர்ப்பிலும், மலாய் இலக்கியங்கள் தமிழிலும் வரமுடியும் என்ற நம்பிக்கை வளர்ந்து வருகின்றது. மொழி இலக்கிய நிறுவனத்தில் (டேவான் பாஹஸா டான் புஸ்தகா) இப்போது மலாய், ஆங்கிலப் பகுதிகள் மட்டுமே உள்ளன. விரைவில் தமிழ்ப்பகுதி ஒன்றும் அமைய விருக்கின்றது. அஃதமைந்ததும் தமிழ்-மலாய் இலக்கிய உறவுகள் மன நிறைவு அளிக்கும் வகையில் சிறப்பாக அமைந்து விளங்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

மலாய் மொழியைத் தமிழர்கள் அவசியம் படிக்க வேண்டிய நிலை இன்று உருவாகிவிட்டது. குடியுரிமை பெற மலாய் மொழிச் சோதனையில் தேர்வுபெற வேண்டும். இதற்கு உதவியாகத் தமிழர்கள் மலாய் மொழியைக் கற்றுக்கொள்வதற்கான நூல்களும், தமிழ் மலாய் அகராதிகளும், மலாய்-தமிழ் அகராதிகளும் சிலரால் வெளியிடப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் இன்னும் பல மலாய்-தமிழ், தமிழ்-மலாய் தொடர்புடைய நூல்கள் வெளிவந்து, உள்ள உறவை மேலும் வளர்க்கும் என்றே நம்புகின்றேன்.

Bahasa Jiwa Bangsa (மொழியே இனத்தின் உயிர்.)

நூல் தொடர்பு :

Munshi Abdullah
Hikayat Seri Rama
Sejarah Melayu
Cheritera Pandawa Lima
Hikayat Abdullah
The Story of Malaya-Morgan
Malaya 1958-1959
தமிழ் ஒளி 1965-1966
The Story of Malaya-Margerry Morris
Puisi Melayu
Sastera Melayu Bahru

★

### உயரிய நூல்களுக்கு ஏற்பட்டுள்ள கதி

உயரிய நூல்கள் உலகத்தில் இல்லாமல் இல்லை; ஆயினும், மக்கள் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதில் பதினுயிரத்தில் ஓரளவுகூடப் பயன் படுத்திக் கொள்வதும் இல்லை...... மாணிக்க வாசகப் பெருமானைக் கால ஆராய்ச்சியின் கையில் காட்டிக் கொடுத்து விட்டனர்; திருவள்ளுவர் 'நாள்' கொண்டாட்ட முழக்கத்தில் கலந்துகொள்ள வேண்டியவராகி விட்டார். கம்பர் நூலைக் கைக்கொள்வதெல்லாம் இடைச் செருகல்களைத் தேடிப் பிடிப்பதற்கும், பாட பேதங்களைப் பற்றிக்கொள்வதற்குமே. இனி, உச்சி மேற் புகழ்வதற்கும் அல்காப் புகழிற்கும் எதுகையாவதற்கன்றி, நச்சினுர்க்கினியரும் தொல்காப்பியமும் தோன்றியதில்லை என்றெண்ணும்படி முடிய நேர்ந்ததே; தமிழ் மாணவர்களாக இருக்க வேண்டியவர் தமிழ் அன்பர்களாகத் திரிந்து விட்டனர்.

—டி. என். சேஷாசலம்
(கலாநிலையம்: 2, மே, 1935)

# பேபீஸ்

## பிஸ்கட்ஸ் அன் மிட்டாய்கள்

தயாரிப்பாளர்கள் :

**பேபி அன் கோ**

உசிலம்பட்டி

மதுரை மாவட்டம்

பிராஞ்சு :

10/280, மொய்தீன் பள்ளி ரோடு

காலிக்கட்—1. (கேரளா)

*With the best compliments of:*

Phone: 21.

R. C. No. 9110
C. S. T. No. 1391

**K. P. NAGAMAIAH CHETTIAR SONS,**

MALIGAI, TIRUKOILUR (S. A. Dt.)

**கொ. பெ. நாகமய்ய செட்டியார் சன்ஸ்,**

மளிகை, திருக்கோவலூர். (தெ. ஆ. மா.)

* கடல் கடந்து தொழில் நடாத்தியது பண்டைத்தமிழகம்!
* கலன் செலுத்தி கடாரம் முதல் பல நாடுகளில் வாணிபத்தால் பொருளீட்டினான் பண்டைத்தமிழன்!
* மீண்டும் அந்நன்னாளைக் காண விரைவோம்!
* இழந்த பெருமையைத் தமிழகம் மீட்ட அனைவரும் செயல் புரிவோம்!

## "சார்லீஸ்"

உயர்தர பிஸ்கட், மிட்டாய் தயாரித்து உலகுக்களிப்பவர்கள்

சார்லி அன் கம்பெனி
உசிலம்பட்டி.
மதுரை மாவட்டம், தமிழகம்.

விற்பனை நிலையம் :
எத்தனூர்-கேரளா.

எங்களிடம் வெல்லம் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்வதுடன் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு ராலி, குமார் கம்பெனிகளின் ஸ்டாண்டர்டு உரங்களும், யூரியாவும் சில்லரையில் விற்கப்படும்.

போன் நெ. 1

**வீ. பூங்கோவில் பிள்ளை,**

கமிஷன் மண்டி,

திருக்கோவலூர், (தெ. ஆ.)

# புலவர் ஆற்றுப் படை

ஒரு வள்ளலிடம் போய் ஏராளமான பரிசுகள் பெற்றுத் தம் ஊருக்குத் திரும்பிவருகிருர் ஒரு புலவர். வழியில் மற்ருெரு புலவர் எதிரே நடந்து வருவதைப் பார்க்கிருர். அந்தப் புலவர் வறுமையில் வாடி, திக்குத் திசை தெரியாமல் தத்தளித்து, ஒருவித நோக்கமும் இன்றிக் கால்போன போக்கில் நடந்து வருகிருர். பரிசுபெற்ற புலவர் அவரைப் பார்த்து, ''நான் அந்த வள்ளலிடம் போய்ப் பரிசுகள் பெற்று வருகிறேன். நீரும் போனுல் என்னைப் போல் ஏராளமான பரிசுகள் பெறலாம்'' என்று தெரிவித்து எந்தெந்த வழியாகப் போய், எப்படி எப்படி அந்த வள்ளலை அணுக வேண்டும் என்று வழிப்படுத்தி விடுகிருர். இப்படி வழிப்படுத்துவதுதான் ''ஆற்றுப் படை'' என்பது. தமிழில் பழம் புலவர்கள் சில ஆற்றுப் படைகளை இயற்றியிருக்கிருர்கள். அந்த வரிசையில் கடைசியாகத் தோன்றியதே மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப் படை.

இந்தப் புலவராற்றுப் படையை இயற்றியவர் நாகூர் 'தர்கா' வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவரும், மகாவித்துவான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் மாணுக்கருமான குலாம் காதிறு நாவலர். பாண்டித்துரைத் தேவர் தோற்றுவித்த நான்காம் தமிழ்ச் சங்கத்திற்குப் போக வழி வகைகள் சொல்லும் இந்த ஆற்றுப்படை 220 அடிகள் கொண்டது ; தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டு 1903-ல் அச்சிடப் பட்டது ; பெரும் புலவரான திருமயிலை சண்முகம் பிள்ளையின் சிறப்புப் பாயிரமும் பெற்றது.

வழியில் கண்ட ஏழைப் புலவரை நோக்கிப் பரிசில் பெற்ற புலவர் கூறுகிருர்:

'' நீரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் செல்லும். கால் நடையாகச் சென்ருல் பலநாள் பிடிக்கும். எனவே

— அ. சீதா —

ரயில் வண்டியில் செல்லும். ஒரு நாள் பிரயாணந் தான். ஆட்கள் ஏறி இறங்கும் ஸ்டேஷன்களில் அமிழ்தம் போன்ற உணவும் கிடைக்கும். வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ளும். மதுரைக்குப் போய்த் தமிழ்ச் சங்கம் சென்று அடைந்ததும், அங்கே புலவர்களுக்குத் தலைமை தாங்கி வீற்றிருக்கும் பாண்டித்துரைத் தேவரை பாரும். 'நீர் யாரோ?' என்று அவர் கேட்கும் போது, 'பெரும! உம் சபைக்கு வந்தேன்' என்று கூறும். உடனே உம்மை வரவேற்று அருகில் அமரச் செய்து உமது கவியையும் ஏற்று மகிழ்வார். சங்கத்தே உள்ள மற்றப் புலவர்கள் எல்லோரும் உம் கவிதையை மெச்சி, 'சொல்வன்மை கொண்ட புலவர், பெருங்கவிராயர், பாவலர், வித்துவான், நாவலர்' என்ற பட்டங்களுள் ஒன்றை உமக்குச்சூட்டுவார்கள். வானத்தே சந்திரனைச் சுற்றி ஒளிக் கோட்டையாகச் சில சமயங்களில் காணப் படும் ஊர்கோளின் நடுவே ஒரு நட்சத்திரம் இருப்பது போன்று காட்சிதரும் வயிரம் பதித்த தங்க மோதிர மும், தங்கச் சங்கிலியில் கோத்துக் கட்டிய கடிகாரமும், காஷ்மீர் கம்பளிச் சால்வையும், கழுத்தளவுக்கு நம் அரசருடைய தலை உருவம் பொறித்த ரூபாய்களும் இணையற்ற விதத்தில் அங்கே நீர் பெறுவீர். இவற்றை வாங்கிக் கொண்டு, தங்கத்தால் ஆன ஒரு மரம் நறு மணம் வீசிக் கொண்டு வந்தது போல் நீர் திரும்பி வருவீர்.''

இவ்வாறு பொருள் கொண்ட குலாம் காதிறு நாவலர் வாக்குப் பின்வருமாறு :

'' நீயிரும் செல்லியர்! ஆண்டுப் பலபெற
மேயினிர் எனினே, இன்னே விட்(டு) இவண்
காலின் செல்லின் நாளில் செல்லும்;
உரும்உறுமோ(டு) உறழ்ஒலியின்
இருபுறனும் இருப்புருளை
நான்குருளக் கான்குழுமும்
வாஅய்க்கொள்ளிப் பேஎய்உயிர்ப்பின்
ஒலித்துமிழும் கலித்தூமம்
குழல்வாயில் சுழல்கொள்ள
மரவட்டைச் செலவொப்பச்
செல்பாண்டில் பல்கோத்த
நெடுந்தொடரின் நிரைநீண்டு
கடுங்காலில் கழிவிசையின்
எந்திர ஊர்தி இவர்ந்தனிர் படர்மின்!
அந்தமில் காட்சி அணிபல காண்பீர்!
வீறிய மாக்கள் ஏ(று)இறங்(கு) இடன்தொறும்
ஊறிய அமிழ்தின் உண்டிபல் பெறுகுவிர்!
பன்னுள் நடந்தனிர் மன்னு(து) எய்க்கும்
கால்உழப்(பு) அறியா மால்உறு செலவின்
மலைப்புறு நெடுவழி ஒருநாள் தொலைச்சிச்
சூடிய நறுமலர் வாடியல் உருமுன்
நிதிமலி கூடல்அம் பதிவயின் புகுவிர் ''

[உரும் உறுமோடு......படர்மின்! —இது ரயில் வண்டியின் வருணனை. இதன் பொருள் : இடியின் சத்தம் போன்ற சத்தத்தையுடைய நான்கு இரும்பு உருளைகள் இருபக்கமும் உருளவும், காட்டில் கூடிய கொள்ளிவாய்ப் பேயின் மூச்சைப் போல் ஒலித்து இயந்திரம் கக்குகின்ற புகை, குழலின் வாயில் சுழல வும், மரவட்டை நடப்பதைப் போல் செல்லும் பெட்டி களின் தொடரினைக் கொண்டு காற்றைப் போல் ஓடும் வேகம் கொண்ட இயந்திர வாகனத்தில்-புகை வண்டி யில்-ஏறிச் செல்லுவீராக.]

'' கூடுறு சங்கம் நாடினிர் செலினே.......
கருங்கடலில் செஞ்ஞாயிறும்
பொரத்தலைமை கொளத்தவிசில்
விரைப்பாண்டித் துரைத்தேவன்
ஆற்றல்சால் சிறப்பின் ஆங்கவீற் றிருக்கும்
காட்சி கண்டனிர் களித்தனர் அண்மின்,
மாட்சியின் அவனே மலர்ந்த முகத்தினன்,
'யாரை நீ யிர்?'என வினவும்; 'ஓரையில்,
போந்தனென், பெரும!நின் அவைக்களம் ஓர்ந்(து)'
எனின்,
'வரு'மெனத் தழீஇ, 'இருக்'கென் அரு(கு) இரீஇப்,
போற்றினிர் சென்றநும் கவிஅரங் கேற்று,
நச்சிஆங்(கு) இருக்குநர் உளப்பட மெச்சி,
'வாய்அரும் புலவன், பெருங்கவி ராயன்,
பாவலன், வித்துவான், இயல்தெரி நாவலன்'
என்றுயர் பெயர்களுள் ஒன்றுற நுமக்குக்
களிவர நல்கி, ஊர்கோள் ஒருதலை
மீன்இருந் தென்ன வால்நிற வயிர
மின்செய் தொளிறும் பொன்செய் ஆழியும்,
பொலந்தகடு குழித்துப் பொற்புற அமைத்த
வலந்தபொற் றெடரின் மாண்பிற் றுகிப்
பழுதறச் சமைந்த பொழுதறி கருவியும்,
நொய்ம்மயிர் ஆய்ந்து துய்யென நெய்த
மின்இவர்ந் தென்ன பொன்இழை நுழைத்த
மாசுகெடச் சிறந்த காசு மீரமும்,
விழுத்தலை அமைந்த கழுத்தள(வு) அரையன்
பணயம் பலவும் இணையறத் தரீஇப்
பெருகிய மகிழ்வின் பேணுபு விடுக்கும்;
வருகுவிர் மாதோ, வளமலி தன்மையின்
செம்பொன் பழுநிய செழுமரன்
வம்பொடும் பொலிந்து வந்ததால் எனவே!''

[விரை - நறுமணம். ஆங்க - அசை. ஓரையில் -நல்ல நேரத்தில். நச்சி-விரும்பி. வால்நிற-வெண்ணிற. ஆழி - மோதிரம். பொலந்தகடு - தங்கத் தகடு. வலந்த- கட்டிய. தொடர் - சங்கிலி. விழுத்தலை - சிறந்த தலை. அரையன் - அரசன். பணயம் - பணம். பேணுபு விடுக் கும் - பேணி அனுப்புவான். பழுநிய - முற்றுப் பெற்ற. வம்பு - வாசனை.]

★

தமிழ் வட்டத்திற்கு

எ ங் க ள து

மனப்பூர்வமான

வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்

கொள்கிறோம்

# ஸ்ரீ கருணாம்பிகா ஸ்டோர்,

பாத்திர வியாபாரம்,

பல்லடம் ரோடு,

## திருப்பூர்–2.

. ருசியிலும், தரத்திலும் சிறந்தது

★

"சுதா"

மிட்டாய் அன் பிஸ்கட்கள் ஒன்றே.

தயாரிப்பாளர்கள்

சுதா அன் கம்பெனி
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்.

# இன்றைய தமிழ் இலக்கியம் — புதிய போக்குகள்

**கலாநிதி க. கைலாசபதி**

தமிழ்ப் பேராசிரியர், கொழும்பு பல்கலைக் கழகம்

இன்றைய தமிழிலக்கியத்திற் காணும் சில போக்குகளைக் குறிப்பிட முற்படும் பொழுது, நான் தமிழகத்திற்கு அப்பால் கடல் கடந்த நாடொன்றிலே வாழ்பவன் என்ற எண்ணம் மேலிடுகிறது. தமிழ் தாய்மொழியாக எனக்கு இருப்பினும் என்னைப் பொறுத்தவரையில் அது வழங்கும் பூமி, சம்பிரதாய மான "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலக"த்துக்கு அப்பாற்பட்டதால், மொழி யிலக்கியம் பற்றிய நோக்குநிலை ஓரளவு வேறுபடுகிற தென்றே தோன்றுகிறது. இக்குறிப்பு நான் கூறுவன வற்றிற்குப் பீடிகையாக மாத்திரமன்றி, இன்றைய தமிழிலக்கியத்திற் காணப்படும் முக்கியமான போக் கொன்றின் பிரதிபலிப்பாகவும் அமைந்திருக்கிறது.

இன்றைய தமிழிலக்கியத்தின் வளர்ச்சிப் போக் கைக் கூட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து, இலங்கை, மலாயா முதலிய நாடுகளில் உரமாக வளர்ந்து வரும் இலக்கியங்களைக் கணித்தே யாக வேண்டும். இவ்விலக்கியத்தை என்ன பெயர் சூட்டி யழைக்கலாம் என்பது குறித்துக் கருத்து வேறுபாடு தோன்றல் கூடும். அது பார்ப்போர் நிலையைப் பொறுத்தது. தமிழ் நாட்டில் வாழுமொருவர் இவற் றைத் 'திசை' யிலக்கியமென்றோ, பிரதேச இலக்கிய மென்றோ வழங்கினுல் ஆச்சரியப் படுவதற்கில்லை. அது போலவே, கடல் கடந்த இந்நாடுகளில் வாழ் பவர்கள் இவற்றைப் பொதுவாகத் 'தேசிய' இலக்கிய மென்றோ அன்றித் தத்தம் நாட்டுப் பெயரால் இலங்கை இலக்கியமென்றோ, மலாயா இலக்கிய மென்றோ குறியிட்டாலும் ஆச்சரியப்பட வேண்டிய தில்லை. ஆக, திசை, பிரதேசம், தேசியம், இலங்கை, மலாயா முதலிய சொற்கள் குறித்து நிற்கும் பண்புகள் இன்றைய தமிழ் இலக்கியத்திற்கு புதிய சோபை அளிக்கின்றன என்பதில் ஐயமில்லை. இது கேவலம் வெறும் பெயர்ப்பாகுபாடு மட்டுமன்று, இலக்கியக் கொள்கை சம்பந்தமானது ; இலக்கிய இரசனைக்கு இன்றியமையாததாயுள்ளது. இலக்கியத்துக்கு உகந்த மொழி, நடை, இலக்கியப் பொருள், மரபு, இலக்கிய வெளிப்பாடு முதலிய பிரச்சினைகள் பலவும் இதனுடன் தொடர்புடையன. அவற்றையெல்லாம் விரித்தல் இங்கு இயலாது. ஆயினும் ஒன்றை மட்டும் கூறலாம்; இலக்கிய ஆக்கத்திலும், திறனாய்விலும் புதிய பார்வை யும் மதிப்பீடும் தோன்றக் காரணமானவற்றுள் வீறுற்ற அப்பிறநாட்டு (தமிழ்) இலக்கிய முயற்சிக ளுக்கு முக்கிய இடமுண்டு. நுண்ணுணர்வுடைய தமிழ் நாட்டுத் திறனாய்வாளர் சிலர் இச் செய்தியைச் சமீப காலத்தில் எடுத்துரைத்துள்ள போதும், இது போதிய அளவு உணரப்பட்டிருப்பதாகக் கூறவியலாது.

## புதிய பிரதேசங்கள்

உதாரண விளக்கங் கூறுவதாயின், கடந்த நான்கு தசாப்தங்களாகத் தமிழ் நாட்டின் மாவட்டத்

தமிழ் அதிகமதிகமாக இலக்கியத்தில் இடம் பெற்று வந்தமையைப் போல, முற்றிலும் புதிய பிரதேசங்கள் இப்பொழுது இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. ஆனல் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், வழக்குத் தமிழ் மாவட்டந்தோறும் வேறுபடினும், அவ் வேறுபாடுகளை யெல்லாம் உள்ளடக்கும் பண்பாட்டு ஒருமைப்பாடு நிலவுகிறது. இலங்கை, மலாயா முதலிய நாடுகளிலே வசிக்குந் தமிழர்க்கு அத்தகைய ஒருமைப்பாடு இயல்பாக இருக்க நியாயமில்லை. அது மாத்திரமன்றிப் பண்பாட்டு முரண்பாட்டிற்கும் இடமுண்டு. இப்பிரச்சினைகள் எழுத்தாளனது ஆத்மானுபவத்தி னடிப்படையில் இலக்கிய வடிவம் பெறும்போது புதிய பொருண்மை சுட்டுவன அன்ருே? இத்தகைய புதுப்பண்பே இன்று கடல் கடந்த பிரதேச இலக்கியங்களின் வாயிலாகத் தமிழிற்குக் கிடைக்கிறது என எண்ணுகிறேன்.

ஆக்க இலக்கியத் தொடர்பில் மேலே நான் குறிப்பிட்ட போக்கு ஆராய்ச்சித் துறையிலும் ஆங்காங்கே புலப்படுகிறது. இதனைப் பண்பாடு பற்றிய ஆய்வு அல்லது அக்கறை அல்லது நாட்டம் என்று வேண்டுமானுற் குறிப்பிடலாம். தமிழ் நாட்டிலே எழுந்த கலை, இலக்கியம்-இவற்றின் பின்னணியான சமயம்-ஆகியவற்றைத் தனி முதற் பண்பாடு எனக் கொண்டால், அது பிறதேசங்களுக்குச் சென்று பிற பண்பாடுகளுடன் சங்கமித்துப் புது வடிவம் பெற்ற பொழுது சார்புநிலை எய்துகிறது. முதற்பண்பாடு பலருக்கு இரண்டாவது நிலையிலுள்ள பண்பாடாகத் தோற்றமளிக்கிறது. பொதுவாகவே பண்பாடு, மனித சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஊடுருவிப் பாதிப்பனவாதலால், இப்பண்பாட்டு மாற்றங்கள் கலை இலக்கியத்தில் எவ்வாறு இடம் பெற்றுப் பிரதிபலிக்கின்றன என்பதை ஆராய்வது பயனுள்ள பணியாகும்.

இத்தகைய உணர்வுடனேயே இன்று மலாயாவிலும் இலங்கையிலும் முறையே இராமசரிதமும், கண்ணகி வரலாறும் இந்நாடுகளிற் பெற்ற விகற்பங்களின் அடிப்படையில் விரிவாக ஆராயப்பெற்று வருகின்றன. உயர் இலக்கியங்களில் மாத்திரமன்றி, நாட்டுப் பாடல்களிலும் மேற்கூறிய பண்பாட்டுப் பரவலும் மாற்றமும் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன என்பதைச் சிலர் ஆராய்ந்து வருகின்றனர். கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் இதுகாலம்வரை தமிழரது தனிப்பெருஞ் சொத்துக்களாகவும் செம்மைசால் இலக்கியச் செல்வங்களாகவுமே பெரும்பாலும் கற்றுச் சுவைக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனல் இப்படைப்புக்களை மலாய்க்காரரும், சயாமியரும், இந்தோனேஷியர்களும், சிங்கள மக்களும் எவ்வாறு நோக்கிக் கற்றுத் தமதாக்கிக் கொண்டனர் என்பதை இப்பொழுதான் அறியத் தொடங்கியிருக்கிருேம். சமூகவியல் ஆய்வைப் பற்றுக் கோடாகக் கொண்ட இப்புது ஆராய்ச்சிகள் எமது பழைய இலக்கியங்கள் சிலவற்றுக்குப் புதிய பொருள் வளத்தையும், மதிப்பையும், பரிமாணத்தையும் அளிக்கப் போகின்றன என்பதில் எதுவித ஐயுறவுமில்லை.

## ஒப்பியல் இலக்கிய ஆய்வு

கடந்த சில வருடங்களாக இயங்கிவரும் உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்குகளைக் கவனிக்கும் பொழுது மேற்கூறிய ஆராய்ச்சிகளுடன் நெருங்கிய தொடர்புடைய மற்ருேர் அம்சம் புலனுகும். அதுதான் துரிதமாக வளர்ந்துவரும் ஒப்பியல் இலக்கிய ஆய்வு. ஏறத்தாழ ஒரு நூற்றுண்டிற்கு முன்னரே, கால்டுவெல் பாதிரியார் ஒப்பியல் இலக்கணத்தை எமக்கு அறிமுகப்படுத்தி அதன் முக்கியத்தை உணர்த்திச் சென்றனரெனினும், மிகச் சமீபத்திலேயே ஒப்பியல் ஆய்வு பருவமடைந்தது. வ.வே.சு. ஐயரின் நூல் பலகாலம் கழிந்த பின்னரே பயனீட்டத் தொடங்கியுள்ளது போலும். குவாலாலம்பூரிலும், சென்னையிலும் நடந்தேறிய கருத்தரங்குகளிலே ஒப்பியல் இலக்கியக் கட்டுரைகள் தமிழியல் ஆய்வின் புதிய போக்கைக் கோடிட்டுக் காட்டுவனவாயமைந்தன. கம்பராமாயணத்தை மாத்திரமன்றி, பாரதியார் படைப்புக்களையும், சித்தர் பாடல்களையும் பழந்தமிழ்ச் சான்ருேர் செய்யுட்களையும் அவற்றுக்குச் சமமான பிறநாட்டிலக்கியங்களுடன் ஒப்புநோக்கி ஆராயும் போக்கு உலகின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ் ஆய்வாளரைப் பற்றிக் கொண்டுளது. இது நல்ல சகுனமாகும். பலகாலமாக ஒரே தடத்தில் ஓடிவந்த தமிழாராய்ச்சி இப் புதிய பார்வையால் புத்தழகும் புதிய வலுவும் பெறும். எமது திருக்குறள் அன்பர்கள் இப்போக்கினை ஊன்றிக் கவனித்தல் தகும்.

## கவிதைத் துறை

ஆராய்ச்சித்துறை இவ்வாருக, ஆக்க இலக்கியத்தை மீண்டும் நோக்கும்பொழுது கவிதை பற்றிச் சில வார்த்தைகள் கூருதிருக்க இயலவில்லை. தற்காலத் தமிழ்க் கவிதையிலே இரு முரணுன போக்குகள் தெரிகின்றன. இவை இரண்டும் ஒன்றற்கொன்று எதிர்வினைவானவை. ஒருபுறம் அதீத ஆங்கிலச் செல்வாக்கு. புதுக்கவிதை என்ற பொதுத் தலைப்பில் எத்தனையோ பிறவிகள். ந. பிச்சமூர்த்தி போன்ற சிலர் தமது இலக்கிய வாழ்வின் முற்பகுதியிலிருந்தே இப் போக்கிற்கு எடுத்துக்காட்டாக இருந்து வந்திருக்கின்றனர். ஆயினும் இலக்கிய உலகிலே குறிப்பிடத் தக்க செய்தியாக இப்போக்கு இக்காலத்திலேதான் காணப்படுகிறது. பண்புகளை விவரிக்கும் இக்கட்டுரையிலே, கவிதையுலகிற் கருத்து வேறுபாடுகளுக்கு இடமான இப்புது பரிசிலனைகள் பற்றி கருத்துக்கூற நான் விரும்பவில்லை. ஆனல் இப்போக்கினுல் தமிழ்க் கவிதை பெருவளம் பெறும் என்னும் நம்பிக்கை எனக்கில்லை. அதீத ஆங்கில இலக்கியச் செல்வாக்கு தமிழின்

ஆத்மாவையே அமுக்கிக் கொன்றுவிடுகிறது என்பது என் கருத்து. இப்போக்கிற்கு எதிரிடையாகச் சில கவிஞர்கள் சான்றோர் செய்யுட்களின் ஒரு பகுதியாம் அகத்திணைப் பாக்களை வெட்டியும் கொத்தியும் புதிதாக்கி வருகின்றனர். இது மரபு உணர்வு அன்று. தன்னுணர்வான படியெடுத்தலாகும். பாரதிதாசன் வழிவரும் கவிஞரிடத்து இப் புதிய போக்கைக் காணலாம். இன்றைய நிலையிலே இத்தகைய மீட்டுயிர்ப்பு முயற்சிகளுக்கு வாழ்த்தும் வரவேற்பும் கிடைத்தாலும், இவற்றால் நிலையான—நீடிக்கும்—பலன் கிடைப்பது ஐயமே. இப்போக்குகள் இரண்டுமே வெவ்வேறு வகையில் பாரதிபாதையை மறுதலிப்பன; புதுமையையும் பழமையையும் அளவறிந்து கூட்டிச் சுருதிசேர்த்த அப்பெருங் கவிஞனது கவிதா நெறி போதிய அளவு கைக்கொள்ளப்படாமையே, இன்றைய கவிதையின் பொதுவான மந்த நிலைமைக்குக் காரணமெனல் வேண்டும். ஆயினும் கவிதையிற் காணப்படும் இப்பிளவுபட்ட நிலை நாவலிலக்கியத்திலும் ஓரளவு தலைகாட்டத் தொடங்கியுள்ளது. சிறுத்தும் சுருங்கியும் வரும் உலகப்போக்குவரத்துக்கள் பொதுவாகவே ஒரு வகையான அகலுலகத் தொடர்பு மனோபாவத்தை (Cosmopolitan Outlook) எம்மிடையும் உண்டாக்கி வருகின்றனவாயினும், மிதமிஞ்சிய ஆங்கிலச் சொற் பிரயோகமும், மேற்குலகச் சாய்வுடைய நோக்கமும் இலக்கிய நெறிக்கும் வளர்ச்சிக்கும் பாதகமாக அமைகின்றன என்பதில் தடையில்லை. இப் 'புதிய' போக்கும் அவசியம் குறிப்பிடப்படவேண்டிய தொன்றே.

## சிறுகதை

ஆற்றலிலக்கியஞ் சம்பந்தமாக இன்னுமொரு செய்தியும் குறிப்பிடத்தக்கது. சுமார் இருபத்து ஐந்து ஆண்டுகளாக நவீன இலக்கியத்தின் நடுநாயகமாக வீற்றிருந்த சிறுகதை தற்சமயம் மங்குதசை அடைந்திருக்கிறது. ''மணிக்கொடி'' காலத்தையடுத்து சிறுகதையே தமிழ் எழுத்தாளரின் பேராதரவு பெற்ற இலக்கிய வடிவமாகத் திகழ்ந்தது. பழைய தமிழ்ச் செய்யுட்களிற் காணப்பட்ட செறிவையும் அழகையும் சிறுகதையிற் காணவும் காட்டவும் முயன்று பெருமளவு வெற்றியும் பெற்றனர். கடந்த சில வருடங்களாக இந்நிலை மாறி, நாவல் ஓங்குதசை யடைந்து வருகிறது எனலாம். மலாயாவில் இப்போக்கு அத்துணை துலக்கமாகாது விடினும், இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் இப்போக்கின் உண்மையை எவரும் மறுக்கமாட்டார். எமது கண்முன்னே முன்னாட் சிறுகதையாசிரியரெல்லாம், இன்று நாவலாசிரியராக மாறிக்கொண்டிருக்கின்றனர். எழுத்தாளர், பிரசுரகர்த்தர், வாசகர், திறனாய்வாளர் என்ற இவர்கள் யாவரும் இம்மாற்றத்தை ஒரு மனதாக வரவேற்றுள்ளனர் என்பது உறுதி. எமது எழுத்தாளரது இலக்கிய நோக்கும் போக்கும் விரிவடைவதையே இது காட்டுகிறது. நாவலிலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாவலிலக்கியம் பற்றிய கட்டுரைகளும், நூல்களும் வெளிவருவது மகிழ்ச்சி தருஞ் செய்தியாகும். நாவல்களை எடுத்தாராயும் கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன. இது போன்ற விஷயங்களிற் பொதுவாகவே பின்னிற்கும் எமது பல்கலைக் கழகங்களும் நாவலுக்கு ஏற்பட்டுள்ள நல்வாழ்வைக் கண்டு அதனையும் தமது ஆய்வறிவு முயற்சிகளுக்குள் அடக்கியுள்ளன. சென்னை, கொழும்பு, குவாலாலம்பூர் முதலிய நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழ் நாவலிலக்கியம் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்துவருவது தற்செயல் நிகழ்வுகளல்ல. இலக்கியப் போக்கின் பிரதிபலிப்பு என்றே கூறுதல் பொருந்தும். உலகத்தமிழாராய்ச்சிக் கருத்தரங்கிலும் நாவலிலக்கியம் நாளுக்குநாள் அடைந்து வரும் சிறப்பைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. சிறுகதையிலும் நாவல் இவ்விஷயத்தில் நற்பேறு வாய்க்கப்பெற்றிருப்பது வெளிப்படை. சிறுகதை 'பட்டொளி வீசிப் பறந்த' காலப் பகுதியிலே அவ்விலக்கியப் பிரிவு குறித்து அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்தோர் மிகச்சிலரே. சமீபத்திலேயே இலக்கியக் கொள்கையின் அடிப்படையிலும், இலக்கிய வரலாற்று அடிப்படையிலும் சிறுகதை பின்னோக்கி ஆராயப்பட்டு வருகிறது. ஆனால் நாவலுக்கோ இலக்கிய ஆய்வு பக்கத்துணையாக இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையிலே தமிழ் நாவலாசிரியர்கள் அடுத்து முயன்றால், கு. அழகிரிசாமி கூறுவது போல, ''உலக அரங்கில் இடம் பெறக்கூடிய உயர்ந்த நாவல்களை நிச்சயம் எழுதமுடியும்.'' இன்று இலங்கையில் இலக்கியத் துறைகள் யாவற்றினும் நாவலே பிரதான இலக்கிய வடிவமாக மேலோங்கி வருகிறது என்பதும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியே.

## இலக்கிய மொழி

இறுதியாக, இலக்கியமொழி சம்பந்தமாக ஒரு குறிப்பைக் கூறி இக்கட்டுரையை முடிக்க நினைக்கிறேன். தமிழ்மொழி இலக்கிய சாதனமாக வழங்குமிடங்களிலெல்லாம், இன்று இலக்கிய மொழிபற்றிய சர்ச்சைகள் காணப்படுவது கண்கூடு. மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை காலத்திலிருந்து எமது மொழியுணர்வானது பழம்பெருமை நோக்கிலும், பிராணதாரணப் பிரயத்தன நோக்கிலுமே செயற்பட்டு வந்திருக்கிறது. பாரதி, வ. ரா., புதுமைப்பித்தன் போன்ற சிலர் அவ்வப்போது மொழியையும் மொழி நடையையும் இலக்கியப் பிரச்சினையாகக்கொண்டு எழுதியுள்ளபோதும் பொதுவாக மொழியுணர்வு இலக்கியத்துக்குப் புறம்பான விஷயங்களையே தழுவியிருந்தது. எம்மவரின் மொழியாராய்ச்சிகூடப் பல வகைகளில் இப்போக்கிற்குப் பலியாகியது.

எனினும், நான் மேலே கூறிய ''பிரதேச'' உணர்வு, ஒப்பியல் ஆய்வு, புதுக்கவிதை முயற்சி,

பண்பாட்டுப் பரவல், இலக்கியத் திறனுய்வு என்பன வற்றின் உடனிகழ்ச்சியாகவும் விளைவாகவும் இலக்கிய ஆக்கத்திற்கும் மொழிக்குமுள்ள நுண்ணிய தொடர்புகள் மெல்ல மெல்ல விளக்கமாகி வருகின்றன. லா.ச.ரா., மௌனி போன்ருேரது மொழிப் பயன்பாடு சர்ச்சைக்குரிய தெனினும், புதிய உணர்வின் தோற்றத்தைத் துரிதப்படுத்த உதவியுள்ளது. பாணினி, தொல்காப்பியர் முதலிய பண்டை மொழி நூலோர் சொற்பொருள் ஆய்வில் உலகிலேயே முன்ேடிகளாய் விளங்கினர் என்பது உண்மையே. ஆனல் அம்மரபுத் தொடர்ச்சி பிற்காலத்தில் அறுபட்டிருந்ததும் ஒப்பவேண்டிய உண்மையே. நவீன மொழியியல் வழிவரும் சொற்பொருள் ஆய்வுக்கும் இப்புதிய உணர்வு தோன்றத் துணைசெய்துள்ளன எனலாம். காரணிகள் எவ்வாருயினும் எமது இலக்கிய கர்த்தாக்கள் சிலரிடத்துக் காணப்படும் மொழியுணர்வு நல்லதோர் அறிகுறி என்பதில் ஐயமில்லை. ''எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளாய்வின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' எனக் கவன்ற அன்றைய பாண்டிய மன்னன் போன்று, புதிய சூழமைவுக்கும் அறிவு நிலைக்கும் ஏற்பச் சொற்பொருள் ஆய்வு நடாத்த இன்னும் பலர் முனைதல் விரும்பத்தக்கது. இது மொழிநூலாய்வாளருக்கும், சிறுபான்மை இலக்கியத் திறனுய்வாளருக்கும் வேண்டப்படும் துறை என்றெண்ணுதல் தவறு. உயர்ந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கும் இன்றியமையாதது. எமது இலக்கிய உலகில் ஆங்காங்கு தலைகாட்டும் இவ்வுணர்வு புதிய போக்குகளிலொன்று என்பதில் சந்தேகமில்லை.

இதுவரை கூறிய இலக்கியப் போக்குகள் தமிழிலக்கியம் வழங்கும் பகுதிகளிலெல்லாம் ஒரே தன்மையன வாகக் காணப்படும் என்று நான் கருதவில்லை. பொதுப் படையாகக் காண்டல் கூடும் என்றே கூறுகிறேன். தமிழ்நாட்டிற்குப் 'புறத்தே' உள்ளவன் என்ற வரையில் இவற்றிற் சில எனக்கு மிக முக்கியமானவை யாகவும் தோன்றக் கூடும். ஆயினும் இப்போக்குகளுக்கு விலக்காக இன்று 'தமிழ்கூறு நுலகத்தில்' இலக்கிய முயற்சிகள் நடப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. இவற்றின் பலாபலன்கள் எதிர் காலத்திலே மதிப்பிட வேண்டியவை. ஆனல் இப் போக்குகளை ஓரளவாகிலும் இனங் கண்டுகொள்வது இலக்கிய உலகில் நடமாடும் எமது கடமையும் பொறுப்பும் அல்லவா ?

## நூலாராய்ச்சி

தான் சத்திய விரதியாயும், ஏனைய போலி அபிமானங்களை ஒழித்தவனுயும், தன் ஆராய்ச்சியால் வெளிப்பட்ட உண்மை யாதே ஆயினும் துணிந்தேற்கும் பேராண்மை உடையவனுயும் இருப்பதும் அன்றி, நூலாராயப் புகுவான், சாமானிய மாந்தருக்குள் எங்குமே பொதுவாயும், நம்மவருக்குள் அதிகமாயும் பரக்க விளங்கும் சில போலி அபிப்பிராயங்களை அறநீக்கிவிடுதலும் அவசியமாம். அவற்றுள் சில ஆவன :—ஒன்று, பண்டைக்காலத்தினும் இப்பொழுது அறிவு குன்றியிருக்கிறது என்பது. இது பொய்யன்றேல், நம் முன்னேரையும் கடவுளையும் பழிக்கும் உரையாம். என்னை ? தலைமுறைதோறும் அறிவு மேன்மேலும் பெருகாது குன்றிவரின், நம்முன்னேர் தந்தை மகற்காற்றும் கடனிற் பிழைத்தவராவர்; கடவுளும் தம் அருளுடைமை ஞானம் முதலிய குணங்களில் தவறினவராவர். முன்னைய பின்னைய நிலைமைகளை மதித்து நோக்கின், சிற்சில விஷயங்களில் அறிவு வளர்ந்தும் தளர்ந்தும் காணினும், ஆண்டுகள் செல்லச் செல்ல அறிவுப் பெருங்கடல் பெருகிவருவது நன்கு விளங்கும். இதுவே இயற்கை நியாயமும் ஆம். இப்போலி உரையைத் தழுவி வருவனவே பழைய கிரந்தங்களில் உள்ளனவெல்லாம் கேவலம் உண்மையென்பதும், இப்பொழுது புதிதாய் அறியப்படுவன எல்லாம் முன்னரே அறிந்து அவற்றிற் கூறப்பட்டுள்ளன என்பதும்.

—அ. மாதவையர்,

'' நூலாராய்ச்சி '' என்ற கட்டுரையில்:
'' செந்தமிழ் '', தொகுதி 3, பகுதி 11

தமிழ் வட்டத்திற்கு
எங்களது மனப்பூர்வமான
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★


## P. கருப்பண்ண கவுண்டர் அன் கோ

மளிகைஸ்டோர்ஸ்

திருப்பூர்

## P. கருப்பண்ண கவுண்டர் அன் கோ

டைமண்ட் மில்ஸ்

திருப்பூர்

## டைமண்ட் தியேட்டர்

திருப்பூர்

# M/s. A.K. CHINNASAMY GOUNDER,

SRI KRISHNA & MANI RICE MILL,

**UTTUKULI (S. RY.)**

COIMBATORE DT.

★

எங்களது அரிசி ஆலேகள் 1960-ம் வருடம் வேலே துவக்கப்பட்டது. எங்களிடம் அரசினருக்குத் தினம் ஒன்றுக்கு 600 மூட்டை நெல் அரவை செய்யப் போதுமான குடோன் வசதிகள் உள்ளன. எங்களிடம் நெ: 1 நெல் அரவை செய்யும் இரண்டு இயந்திரங்கள் உள்ளன. இவை நாள் ஒன்றுக்கு 600 மூட்டை நெல் அரவை செய்யும். நாங்கள் அரசினர் ஏஜண்டாக மாவட்டக் கலேக்டர் அவர்களுக்கும், உணவுத் தானியக் கார்ப்பரேஷனுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியார் கணக்கிலும், கவர்ண்மெண்ட் கணக்கிலும் நல்ல முறையில் அரவை செய்து அரிசி விநியோகம் செய்து வருகிறோம்.

**தமிழ் வட்டத்திற்கு எங்களது மேலான நல்வாழ்த்துக்கள் !**

# நாட்டுப் பாடலில் சமூகப் பிரச்சினைகள்

நா. வானமாமலை

நாட்டுப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவை. கதைப் பாடல்கள் தவிர மற்றப் பாடல்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் அன்றாட சம்பவங்களைப் பொருளாகக் கொண்டவை. சமூகப் பிரச்சினைகளை நாட்டுப் பாடல்கள் சித்திரிக்கும் முறையை நாம் கவனிக்க வேண்டும். உழைப் பாளிகள் முதலாளிகளை நயந்து கூலி கேட்பதையும், நிலவுடைமைக்காரன் இல்லாதபோது தங்களுக்குள் தங்கள் வேலைச் சிரமத்தைப் பற்றிப் பேசிக் கொள் வதையும் நாட்டுப் பாடல்களில் கேட்கலாம். இவ் வகையான பாடல்கள் இரண்டைக் கீழே தருவோம்.

உழவன் எவ்வளவு நேரம் வேலை செய்தாலும் ஒரு நிலச்சுவானுக்கு திருப்தி ஏற்படுவதே இல்லை. அவ ருடைய மனப்போக்கை ஒரு உருவகத்தால் விளக்கு கிறான் உழவுத் தொழிலாளி. ஏழு வண்டி பாரத்தை ஒரு வண்டியில் ஏற்றிவிட்டு மாடு இழுக்கவில்லையே என்று கவலைப்பட்டானும் ஒரு வண்டிக்காரன். அவனைப் போலவே ஏழுபேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவனைக் கொண்டே செய்யச் சொல்லு கிறார் நிலச்சுவான். தொழிலாளி அவ்வேலையைச் செய்ய முடியாதபோது தொழிலாளியைச் சோம்பேறி என்று திட்டுகிறார். வேலையை ஒழுங்காகச் செய்து முடித்தாலும் அவனுக்குக் கூலி ஒழுங்காகக் கொடுப் பதில்லை. குறைந்த அளவுள்ள பொட்டை நாழியால் அளந்து கொடுக்கிறார். இதனைத் தன் சகதொழிலாளி களிடம் சொல்லி வருத்தப்படுகிறான் கூலித் தொழிலாளி.

எருக்கலாங் கட்டைவெட்டி
ஏழுவண்டிப் பாரமேத்தி
மாடு இழுக்கலேண்ணு
மாயுறுரே நம்ம சாமி!

முக்காப்படி கேப்பைக்காக
முந்திருந்து வாடுதனே
ஐயா முதலாளி—அவுங்க
அளக்கறது பொட்ட நாழி.

(எருக்கலாங் கட்டை—எருக்கஞ் செடி; தழை உரம்)

இவனைப் போலவே வேறோர் தொழிலாளி. பெரிய முதலாளி வீட்டில் பண்ணைவேலை பார்க்கிறான். அறுவடைக் காலம். வேலை அதிகம். நேரம் காலம் என்று கிடையாது. சேவல் கூவு முன் எழுந்து காகம் அடையும்போதுகூட வேலை முடிவதில்லை. கிடைக்கும் கூலியோ அரை வயிற்றுக்கும் பற்றுது. கூலி அதிகம் வேண்டுமென்று கேட்டாலோ முதலாளி வேலையிலிருந்து தள்ளிவிடுவார். வேலையில்லாமல் விவசாயக் கூலிகள் மலிந்திருக்கும் காலத்தில் வேலை போய்விட்டால் பட்டினிதானே கிடக்க வேண்டும். முதலாளிக்குக் கோபம் வரக்கூடாது; வயிற்றுப்பசியை தணிக்கக் கூலியும் கேட்க வேண்டும். தொழிலாளி தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம்பிக்கிறான். அவரைப் புகழ்ந்து பேசுகிறான். இரக்கமுள்ள அவர் மனத் திற்கு, கட்டாயம் ஆண் குழந்தை பிறக்குமென்று சொல்லுகிறான். இவ்வாறெல்லாம் அவரைக் குளிர் வித்துக் கடைசியில் தான் சொல்ல வந்ததைச் சொல்லிவிடுகிறான். அவனது அச்சத்தையும் மீறிக் கொண்டுப் பசி அவனைப் பேசத் தூண்டுகிறது :

வீடுரெண்டுங் காரவீடு
வேட்டிரெண்டும் வெள்ளைவேட்டி

இரக்கமுள்ள புண்ணியர்க்கு
பிறக்கிறது ஆண்குழந்தை

சம்பளமும் கட்டுதில்லை
சாதியுள்ள மாணிக்கமே
எங்க இரக்கம்பார்த்து
ஏத்தகூலி போடுமையா!

பொழுது அடைஞ்சிருச்சே
பூமரமும் சாஞ்சிருச்சே
இன்னம் இரங்கலியோ
எசமானே ஒங்கமனம்?

கிராமத்தில் இவ்வாறு அரை வயிற்றுக் கஞ்சிக்கு வேலை செய்வோரைவிட, வேலையில்லாமல் சில காலங்களில் பட்டினி கிடக்கும் தொழிலாளிகள் அனுபவிக்கும் வேதனை விவரிக்க இயலாதது. பல வேலைகள் செய்து பார்த்துக் கடைசியில் வேலையில்லா மலிருக்கும் ஒரு தொழிலாளியின் கவலை தோய்ந்த குரலை ஒரு நாட்டுப் பாடலில் கேட்கிறோம்:

வண்டி அடிச்சுப் பார்த்தேன்
வயக்காட்டை உழுது பார்த்தேன்
பெண்டுகளை மேய்ச்சுப் பார்த்தேன்
பிழைப்பு ஒண்ணும் நடக்கலையே!

இப்பாடல் ஒரு உழவனின் கூற்று. அவன் என்னென்னவோ வேலைகளையெல்லாம் செய்து பார்த்தான். பெண்களை சாலை போடுவதற்கு அழைத்துச் சென்று அவர்கள் வாயை அடக்கி வேலை வாங்கினான். இந்த வேலைதான் எல்லா வேலைகளிலும் கஷ்டமானது என்பது அவன் கருத்து. எந்த வேலையும் சில நாட்களுக்கு மேல் ஓடவில்லை. எந்த வேலை செய்தாலும் பிழைப்பு நடக்கவில்லையே என்று அவன் வருந்துகிறான்.

### சக்களத்திப் பாடல்கள்

பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர், பல காரணங்களுக்காக ஆண்மகன், மனைவி வாழும் போதே மறுமணம் செய்து கொள்ளலாம். குழந்தையில்லாத காரணம், சொத்துள்ள முறைப்பெண் இருக்கும் காரணம், குடும்பப்பூசல்—இத்தகைய காரணங்களால் அவன் மறுமணம் செய்து கொள்ளலாம். மறுமணம் செய்து கொள்ளப் போகும் தன் கணவனை நினைக்கும் மனைவியின் எண்ணங்களும், உணர்ச்சிகளும் பல நாட்டுப் பாடல்களில் வெளியாகின்றன. தான் முதலில் சூடிய பூ வாடிய பின் வேறொருத்தி அதனைச் சூடப் போகிறாள் என்று அவள் சிறிது ஆறுதலடைகிறாள். ஆனால் இவ்வாறுதல் வாழ்க்கை முழுதும் நிலைக்குமா? இக்கேள்விக்கு விடை அவளுக்குத் தெரியாது. ஆண் மறுமணம் அல்லது இருதார மணம் தமிழ் நாட்டில் ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையாக இருந்தது. இதனைப் பொருளாகக் கொண்டு பல நாட்டு பாடல்கள் தோன்றியுள்ளன.

மஞ்சள் மலையேறி
மாலையிடப் போறசாமி
கொஞ்ச வயசிலேயே
கூடினவ வாடுறனே.

அஞ்சிலென்ன மிஞ்சினது?
அழகிலென்ன மீறியது?
கொஞ்ச வயசிலயே
கூடினது பொய்யாச்சே!

நான்முடிஞ்சு நாள்கழிச்ச
நல்லதொரு சண்பகப்பூ
ஆர்முடிஞ்சு என்னசெய்ய? - பழைய
அன்பிருந்தால் போதுமையா!

மறுமணம் செய்து கொள்ளப் போகிறவனின் மனைவி இவ்வாறு ஆறுதல் அடையாமல் அவனையும் அவனது இளைய தாரத்தையும் சபிப்பதும் உண்டு. அப்பொழுது கடுமையான சொற்கள் அவள் வாயினின்றும் உதிரும்.

வருவாரு போவாரு
வாசலில நிப்பாரு
சிரிச்சாலும் பேசுவாரு
சிறுக்கிவச்ச கைமருந்து.

மறந்தா மறப்பதில்லை
மருந்துதின்னால் ஆறுதில்லை
செத்தால் மறப்பதில்லை.
செவலோகம் சேருமட்டும்

என்னை விட்டுட்டு
இளையதாரம் கட்டினயே
போற வழியிலே—உன்னைப்
பூநாகம் தீண்டாதோ?

தன்னை மறந்து விட்டு, இளைய தாரத்தோடு வாழும் பொழுது அவளை மட்டும் கடுமையாகப் பாடும் பாடல்கள், சக்களத்திப்பாடல்கள் எனப்படும். இவற்றில் சில:

சிறுவீடு சிறுகதவு
சேர்ந்திருந்தோம் சிலகாலம்
என்னை மறப்பதற்கு
என்னபொடி தூவுனளோ?

ஈருவலிக் குச்சிபோல
இடுப்பொடிஞ்ச சக்களத்தி
நல்லபாம்புக் குட்டிபோல
வல்லவரைக் கைபோட்டா.

அடிக்கணும் குளிருகாய்ச்சல்
ஆறுமாசம், ஒருவருசம்
எடுக்கணும் பாடைகட்டி
என்மனசு பாலாக.

### சாதிக் கலகங்கள்

கிராம வாழ்க்கையில் சாதிக்கலகங்கள் நெடுநாட்களுக்கு ஒரு முறை நிகழ்வதுண்டு. இவற்றை அந்தந்தச் சாதியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தூண்டி விடுவதும் உண்டு, கலகம் முடிந்த பின் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார்கள் ஏழை எளியவர்களே. இவ்வாறு அமைதி குலையும் போது சிறு குழந்தைகள் கூட அதற்குப் பலியாகும். இந்நிகழ்ச்சிகளைப் பற்றிய நாட்டுப் பாடல்கள் பல உள்ளன. அவை சாதிக் கலகங்களைக் கண்டிக்கின்றன. உயிர்ச் சேதத்தைச் சுட்டிக் காட்டி, அவற்றைத் தடுக்கக் கோருகின்றன. குழந்தைகள் கூட சாதி வெறிக்குப் பலியாவதை எடுத்துக் காட்டி இரு சாதியாரிடமும் மனிதாபிமானத்தை வளர்க்க முயலுகின்றன.

ஒரு கலகத்தில் இளைஞன் ஒருவன் குத்துப்பட்டு இறந்துவிட்டான். அவனுடைய காதலி அவனுக்கு அளித்த பட்டு லேஞ்சி இரத்தத்தில் நனைந்து போகிறது. அவனது பிணத்தைக் கண்டு கதறியழும் காதலியின் பாட்டு வருமாறு :

ராமனுத புரத்துலேஞ்சி
　　ராமம்போட்ட பட்டுலேஞ்சி
தோளுல போட்டவுடன்
　　சுத்துருளாம் லட்சம்பேரு!

கள்ளி இடைஞ்சலிலே
　　கட்சிப்போர் நடக்கயிலே
நான்கொடுத்த நல்லலேஞ்சி
　　நனையுதையா ரத்தத்துல.

கலகத்தில் காதலனைக் காதலி பிரிந்து துன்பப்படுகிருள். இது எந்தக் கலகமென்று நாட்டுப்பாடல் குறிப்பிடவில்லை. ஆனல் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன், கழுகுமலையிலும் சிவகாசியிலும் நடந்த கலகங்களைப் பற்றிப் பல பாடல்கள் இருக்கின்றன. இவை சாதி வெறியைத் தூண்டுவதாக இல்லாமல் கலகத்தினல் ஏற்படும் சேதத்தைச் சுட்டிக் காட்டி, சாதிப் பிரிவுகள் அகன்று மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமென அறிவுரை கூறுகின்றன. இப்பாடல்களுக்கு உதாரணங்களாக ஒன்றிரண்டு காட்டுவோம்:

உருண்ட திரண்டமலை
　　ஒய்யாரக் கழுகுமலை
பாசி படர்ந்தமலை
　　பங்குனித்தேர் ஓடுமலை.

பங்குனி மாத்தையிலே
　　பதினெட்டாம் தேதியிலே
கரும்புதிங்கற நாளையிலே
　　கலகம்வந்த நியாயமென்ன ?

அமர்க்களமாம் சமர்க்களமாம்
　　அடுகளத்துப் படுகளமாம்
படுகளத்தில் மாளலாமா
　　பாலன் சிறுகுழந்தை ?

சிவகாசிக் கலகத்தில் இறந்தவர்களைப்பற்றி நாட்டுப் பாடல் வருத்தம் தெரிவிக்கிறது :

ஜாதியிலே மறக்குலமாம்
சாந்தகுண ஐயாத்துரை
பண்டாரச் செட்டியால
பட்டு மடிந்தாரய்யா.

பழனியாண்டித் தேவர்மகன்
பாண்டியமன்னன் அய்யாத்துரை
பங்குவாங்கப் போகப்போயி
பழிவிழுந்தே மாண்டாரய்யா !

வேட்டிரெண்டும் வெள்ளவேட்டி
வீடுரெண்டுங் காரவீடு
பூஞ்செகப்பு ஐயாத்துரை
பொன்னுயிர் போக்கழிக்க.

பொண்டாட்டியத் தவிக்கவிட்டு
புள்ளைகள மறுகவிட்டு
போய்விழுந்தான் நாச்சியார்தோட்டம்
பொறுதியுள்ள ஐயாத்துரை.

### கலப்பு மணம்

சாதி வேற்றுமை கடுமையாக இருந்த காலத்திலும் காதலித்த வேறு ஜாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டவர்களது வரலாறுகளை நாட்டுக் கதைப் பாடல்களில் காண்கிறோம். முத்துப் பட்டன் கதை, சின்ன நாடான் கதை, தடி வீரய்யன் கதை, மதுரைவீரன் கதை முதலியன சாதிக் கலப்பு மணத்தைப் பொருளாகக் கொண்டவை. இக் கதைகளின் தலைவர்கள் சாதிப்பிரிவு என்னும் பலிபீடத்தில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்து அழியாப் புகழ் பெற்றவர்கள். இக்கதைகளுள் தென்பாண்டி நாட்டில் வழங்கும் முத்துப்பட்டன் கதை மிகச் சிறந்தது. கலப்பு மணம் என்னும் சமூகப் பிரச்சினை குறித்த இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும். முத்துப்பட்டன் பார்ப்பனக் குலத்துதித்தவன். வீட்டாரோடு சண்டை செய்து வெளியூரில் வேலை தேடிச் சென்று கொட்டாரக்கரை அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். சில ஆண்டுகளில் தனது திறமையால் அரசனை மகிழ்வித்துப் பதவி உயர்வு பெற்றுச் செல்வந்தன் ஆனன். அவனது தமையன்மார்கள் இதனை அறிந்து அவனை

ஊருக்கு அழைத்துச்செல்ல வந்தனர். முத்துப் பட்டன் அண்ணன்மாரின் அழைப்பிற்கிணங்க ஊர் திரும்பினன். வரும் வழியில் இரு சக்கிலியப் பெண் களைத் தனியே சந்தித்தான். அவர்கள் அவனிட மிருந்து தப்பியோடி விட்டனர். அவர்களை மணம் புரிந்துகொள்ள விரும்பினன். அவர்கள் அவனிட மிருந்து தப்பியோடி விட்டனர். அவர்களைப் பின் பற்றி ஓடி அவர்களது தந்தையான வாலப் பகடை யைச் சந்தித்தான். அவனிடம் இருபெண்களையும் மணம் செய்வித்துவைக்க வேண்டுமெனக் கேட் டான். வாலப் பகடை வாயடைத்துப் போனன். முடியாதென்று கூறிப் பார்த்தான். பார்ப்பன இளை ஞன் விடுவதாயில்லை. கடுமையாகப் பேசப் பக டைக்கு மனம் வரவில்லை. அவன் நிறைவேற்ற முடியா தென்று எண்ணிய நிபந்தனைகளை விதித்து இம்மணப் பேச்சைத் தடுத்துவிட எண்ணிப் பின்வருமாறு பேசு கிருன் :

"நாயல்லவோ எங்கள்குலம் ஓ நயினரே,
நாற்றமுள்ள விடக்கெடுப்போம் ஓ நயினரே,
செத்தமா டறுக்கவேணும் ஓ நயினரே,
சேரிக்கெல்லாம் பங்கிடவேணும் ஓ நயினரே,
ஆட்டுத்தோலும் மாட்டுத்தோலும்
அழுகவைப்போமே
அதையெடுத்து உனக்குநன்ருய் அடியறுப்போமே
அடியறுப்போம் சுவடுதைப்போம் வாரறுப்போமே
அதையெடுத்துக் கடைக்குக்கடை கொண்டு
விற்போமே.
சாதியிலே சக்கிலியன்நான் ஓ நயினரே."

இப்பேச்சைக் கேட்ட முத்துப்பட்டன், பகடை யின் காலைப்பற்றிக் கொண்டு பதில் சொல்லுகிருன்.

கோபம்வேண்டாம் மாமனரே சொல்லக்கேளும்நீர்
கோடிகோடி தர்மமுண்டு உமதுமக்களை
சாதிமுறை யாகத்தாலி கட்டிவைத்தாக்கால்
சகலதொழிலும் உங்கள்கூடச் செய்வேன்நானே
தாய்தகப்பன் நீயல்லவோ இன்றுமுதலுக்கு
சாதிசனம் போலநின்று வாரேன்குடிலுக்கு.

இதனைக் கேட்ட பகடை சந்தேகம் நீங்கி, தங்கள் குலத்தில் பட்டனைச் சேர்த்துக் கொள்ளச் சில நிபந் தனைகள் விதிக்கிருன். பார்ப்பனக் கோலத்தை நீக் கிப் பகடைக் குலத்துக்குரிய சின்னங்களையும், தொழிலையும் மேற்கொள்ளுவதற்கு நாற்பது நாள் விதிக்கிருன். அதனைக் கூறும் பாடல் வருமாறு:

வருகிறேன் என்றீர்சுவாமி என்ன பிரமையோ ?
வருமிடத்துச் சொல்வது வகைக்கு வருமோ ?
அப்படிச் சிவன்கற்பனை உண்டுமானல்
நாற்பதுநாளைக்குள் முப்புரி நூலும்குடுமியும்
மெய்யுடன் அறுத்தெறிந்து எங்களைப்போல்
ஒப்புடன் நீர்செருப்புக் கட்டிவந்தாக்கால்
எப்படியாகிலும் மக்களைக் கைப்பிடித்துத்
தாரேன்.

இத்தகைய சாதி மாறுதலை ஏற்றுக் கொண்ட பட்டன் நாற்பது நாட்களுக்கு முன்பாகவே அவற்றை நிறைவேற்றி விட்டான். திருமணம் நடைபெற்றது. அவர்களுடைய சமூகத்தில் ஒருவனுகக் கலந்து தொண்டாற்றி அக்குலத்தின் தலைவனுனன். அவர் களின் பொறுப்பில் விடப்பட்ட பசு மந்தைகளைப் பாது காத்தான். பசு நிரைகளைக் கவரவரும் கொள்ளைக் காரரோடு போரிட்டு விரட்டியடித்தான். எனவே கொள்ளைக்காரர்களது கோபத்திற்கு ஆளானுன்.

அவன் உடல் நலம் இன்றி இருக்கும் பொழுது அவன் பொறுப்பில் இருந்த மாடுகளை விரட்டிக் கொண்டு சென்றனர் கொள்ளைக்காரர்கள். நோயுற்றி ருந்த நிலையிலும் நள்ளிரவில் முத்துப்பட்டன் தனி யாகச் சென்று பசு நிரைகளை மீட்கப் போராடினன். தன்னேடு போர்புரிந்த அனைவரையும் கொன்ருன். அவர்களுள் ஒருவன் மறைந்து நின்று முத்துப் பட்டனைக் கொன்ருன். அவனுடைய இரு மனைவி யரும் இச் சேதியை யறிந்து அவனது உடலைத் தூக்கிச் சென்று தீ மூட்டி தாங்களும் உடன்கட்டை யேறினர்கள்.

இக்கதைப் பாடல் சாதிக் கட்டுப்பாடுகளை மீறி உண்மை அன்பைப் போற்றி மணம் செய்துகொள்ளும் இளைஞர்களது மனத் திண்மையைப் போற்றுகின்றன. அவர்களது அன்பை அழிக்கக் கிளர்ச்சி செய்த சாதி வெறியர்களின் சூழ்ச்சிகளைக் கண்டிக்கின்றன.

சில நாட்டுப் பாடல்கள், தங்களை உயர்ந்த சாதி யினர் என்று நினைத்து இறுமாந்து, சாதிக் கட்டுப்பாடு களை மீறும் இளைஞர்களையும், இள மங்கையர்களையும் துன்புறுத்திக் கொடுமை புரிபவர்களது போலி வேஷத்தைச் சந்தி சிரிக்க வைக்கின்றன.

உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவர் சைவ சிகாமணி. ஊரார் புகழ வேஷம் தாங்கியவர். ஊரில் சாதிக் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்தத் தலைமை தாங்கு பவர். வேற்றுச் சாதிகளைச் சேர்ந்த இளைஞனும், இளம் பெண்ணும் காதல் கொண்டு விட்டதையறிந் தால் சீறுவார். அவர்களைக் கட்டி வைத்து அடிப்பார். அவருக்கு மனைவி தவிர ஒரு வைப்பாட்டியும் இருந் தாள். அவள் ஜாதியோ ஊர்ச்சாதிகளில் அடங்குவ தன்று: காட்டுச் சாதி. இதைப் பற்றி அவ்வூர் இளை ஞர்கள் தம்முள் முணுமுணுத்துப் பேசிக் கொள்வதாக அமைந்துள்ளது ஒரு பாடல்.

சைவம் சைவந்தான்
சம்பிரிதிப் பிள்ளை மகன்
கோம்பைமலை உத்திரத்தி
கொண்டுவந்து சேர்த்தாரே !

நாட்டுப் பாடல்கள் பல சமூகப் பிரச்னைகளைப் பொரு ளாகக் கொண்டிருக்கின்றன என்பதை மேற்குறிப் பிட்ட உதாரணங்கள் மூலம் கண்டோம். இப்பிரச்னை கள் அனைத்தையும் உழைக்கும் மக்கள் கண்ணேட்டத் திலேயே இப்பாடல்கள் வெளியிடுகின்றன. ★

*With our best compliments of:*

# THE ORIENT LITHO PRESS

★

P. B. No. 17

SIVAKASI (S. I.)

எமது நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ ராமலிங்கா மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

அருப்புக்கோட்டை.

தந்தி: விசிறி. போன்: 216.

திபிரிமியர்
அட்வர்டைசிங் பேன் கம்பெனி,

தபால் பெட்டி எண் 112.

சிவகாசி

படக் காலண்டர்களுக்கும்,
விளம்பர விசிறிகளுக்கும் தலைசிறந்த
ஸ்தாபனம்.

Grams: "CHIPBOARDS" Phone: Office : 221, Factory : 222

"LAKSHMI" BRAND
FLUSH DOORS & CHIPBOARDS

For Panelling, False ceiling, Table Tops Etc. Etc.

*Manufactured By:*

MADRAS CHIPBOARDS LIMITED,
*Regd. Office:* "SRI BHAVANAM"
P. S. K Nagar, Rajapalayam.

*Managing Agents:*

N. R. KRISHNAMA RAJA & CO.,
RAJAPALAYAM.

**Madras Depot:**
No. 1, Giri Road,
MADRAS-17. (Phone: 444827)

# V. P. Palaniswamy Gounder,

## SRI SHANMUGA RICE MILL.

ATTAVANI PALLAGOUNDER PALAYAM (P. O.)

(Via) VIJAYAMANGALAM—ERODE. (T. K.)

★

எங்களது அரிசி ஆலே 1967-ம் வருடம் வேலே துவங்கியுள்ளது. நாங்கள் அரசினருக்கு தினம் ஒன்றுக்கு 600 மூட்டை நெல் அரவை செய்யப் போதிய அளவு களம் வசதியும் கிட்டிங்கி வசதியும் உள்ளன. எங்களிடம் நெம்பர் 1 அரவை செய்யும் இயந்திரம் உள்ளது. நாங்கள் அரசினர் ஏஜெண்டாக மாவட்ட கலெக்டர் அவர்களுக்கும், இந்திய உணவுக் கார்ப்பரேஷன் ஏஜெண் டாகவும், கூட்டுறவு சங்கங்களுக்கு ஏஜெண்டாகவும் தனி நபர் கணக்கிலும், அரசினர் கணக்கிலும் நல்ல விதத்தில் அரவைசெய்து கொடுத்தும் சொந்தமாகவும் வியாபாரம் நடத்திவருகிறோம்.

**தமிழ் வட்டத்திற்கு**

**எங்கள் நல்வாழ்த்துக்கள்!**

# செம்பியன் மாதேவி

எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

**வி**ஜயலாய சோழர் வம்சத்தரசர்கள் ஏறக் குறைய நானூறு ஆண்டுகள் (கி. பி. 850—1279) சிறப்பாகத் தமிழகத்தின் பெரும்பகுதியை ஆண்டனர். இதுவே தென்னகத்தின் பொற்காலம் எனலாம்.

இவ்வம்சத்தாரின் சமயப் பற்றும் திருப்பணித் தொண்டும் போற்றற்பாலன. சோழ மன்னர்கள் மாத்திரம் அன்றி அக்குலத் தேவிமார்களும் இத் தொண்டில் பெரும்பங்கு கொண்டுள்ளனர். அவர்களில் தலைசிறந்தவர் செம்பியன்மாதேவி ஆவர். இவர் மழவராயர் குலப்பெண், சோழ மன்னரான கண்டராதித்தரின் தேவி, உத்தம சோழரின் தாய். இவருடைய காலத்தில் புதிய கோயில்கள் கட்டப் பட்டன. பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

புதிதாக எடுக்கப்பட்ட கோயில் செம்பியன் மாதேவி என்று புதிதாக நிறுவப்பட்ட ஊரில் கட்டப் பட்ட கைலாஸநாதர் கோயில் என்பது. இவ்வூர் நாகப்பட்டினம் தாலுகாவில் கீழ்வேளூருக்குச் சமீபத் தில் உள்ளது. இக்கோயிலுக்கு இத்தேவியும், இவருடைய மருமக்கள் பலரும் நன்கொடைகள் பல வழங்கியுள்ளனர்.

இவர் புதுப்பித்த கோயில்களில் முக்கியமானது கோனேரிராஜபுரத்திலுள்ள உமாமகேசுவரர் கோயில். இவ்வூரின் பழைய பெயர் திருநல்லம் என்பது. இது பாடல் பெற்ற ஸ்தலம். அப்பர் இவ்வூரில் எழுந்தருளியுள்ள நாதரை உமைக்கு நல்லான் என்று பாடியுள்ளார். இக்கோயிலைச் செம்பியன் மாதேவி புதுப்பித்தார். இக்கற்றளியின் தென்சுவரில் கண்டராதித்தன் லிங்கத்தை வழிபட்ட வண்ணமும், பின்னால் செம்பியன் மாதேவி நிற்கும் நிலையிலும் உருவச் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. பக்கத்திலுள்ள கல்வெட்டு அச்சிலைகளுக்கு விளக்கம் தருகிறது.

"ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் ஸ்ரீ மதுராந்தக தேவரான ஸ்ரீஉத்தம சோழன் திருராஜ்யம் செய்தருளா நிற்கத் தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திரு நாமத்தால் திருநல்ல முடையாருக்குத் திருக்கற்றளி எடுத் தருளிவித்து திருக்கற்றளியிலே திருநல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளிவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர்"

### கோயில் புதுக்கும் முறையும் கல்வெட்டுக்களைக் காப்பதும்

#### திருக்கோடிக்கா

கும்பகோணம் தாலூக்காவில் திருக்கோடிக்கா என்ற ஊர் உளது. உத்தம சோழரின் 11 ஆம் ஆண்டு செம்பியன் மாதேவி இவ்வூரிலுள்ள திருக் கோடீசுவரக் கோயிலைப் புதுப்பித்தார். இதைப்பற்றிய கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு :—

"திருக்கோடிக்காவில் மஹாதேவர்க்கு ஸ்ரீ உத்தமசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த

மழவராயர் மகளார் பிராந்தகன் மாதேவடிகளான செம்பியன் மஹா தேவியார் இத் தேவர்க்கு முன் இஷ்டி கைப் படையாலான (செங்கல்) ஸ்ரீவிமானத் தைத் தவிர்த்து, கல்லாலே ஸ்ரீ விமானம் அமைப் பித்து இத்தேவருடைய படிகள் முன்பு தர்மத்துக்கு வைத்துக் கற்களில் வெட்டிக்கிடந்த அவை வெவ் வேறு கல்லால் பலவீடத்திலாய்க் கிடந்த அவை எல்லாம் இந்த ஸ்ரீ விமானத்திற்முன்...ஏற வெட்டிக் கொள்க என்று அருளிச் செய வெட்டினபடி முற் கிடந்த படிகளில் இது ஒரு படி... [கோமாறன் சடையற்கு யாண்டு 4 ஆவதினெதிர் ஒன்பதாவது பாண்டியராஜன் 15 ஆவது ஆண்டு] இதை ஸ்ரீ விமானத்திலே ஏற வெட்டினமையால் முன் நிலந்தகம் வெட்டிக்கிடந்த தனிக்கல்லால் உப யோகம் இலாமையால் அது தவிர்த்து''—

திருவிடைமருதில்

திருவிடைமருதூரிலுள்ள மஹாலிங்கேசுவரர் கோயில் ஆதியில் மண்டளியாக இருந்தது. உத்தம சோழரின் 4 ஆம் ஆண்டு 325 ஆம் நாள் இது கற்றளியாகப் புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்குமுன் வழங்கப்பட்ட பல நன்கொடைகள் தனிக்கற்பலகை களில்இருந்தன. கருவறைக்கு அருகேஒரு கள்ள அறை யில் அவைகளைச் சேமித்து வைத்திருந்தனர். கற்றளி கட்டிமுடிந்தவுடன் இக்கற்பலகைகளில் கண்டுள்ள பழைய தானங்களைப் புதிய கட்டிடத்தின் சுவர்களில் பொறிக்கும்படி திரைமூர் சபையாரும், திருவிடை மருதில் நகரத்தாரும் (வியாபாரக் குழுவினர்) திருக் கோயில் உடையாரும், கோயில் கணக்கரும், அரச னுடைய அதிகாரிகளும் கோயில் நாடக சாலையில் கூடித் தீர்மானித்தனர். அவ்வாறே பழைய கல்வெட் டுகள் புதிய கோயிற் சுவர்களில் புத்துயிர்பெற்றன. மறுபடியும் சோதித்ததில் காடுவெட்டிகள் நந்திபோத் தரையர் வழங்கியிருந்த 60 கழஞ்சு பொன் கொடை விட்டுப்போயிருந்ததால், அதையும் புதுச்சுவரின்மீது பொறிக்கும்படி உத்தரவிட்டனர்.

செம்பியன் மாதேவியின் முதலாவது கொடை உய் யக்கொண்டான் திருமலையிலுள்ள திருக்கற்குடிப் பெரு மானுக்கு மதுரை கொண்ட பரகேசரியான பராந்தக சோழனின் 34ஆம் ஆண்டில் ஒரு நந்தா விளக்குக் காக 90 ஆடுகள் வழங்கிய தானம் (கி. பி. 941). இவருடைய இறுதிப்பணி முதலாம் இராஜ ராஜனின் 16ஆம் ஆண்டு திருவக்கரைக்கோயிலைப் புதுப் பித்தது. அறுபது ஆண்டுகளும் திருத்தொண்டில் ஈடு பட்டிருந்தார். கணவனை இழந்து, மகனையும் இழந்து சமயப்பற்றில் சலியாமல் வாழ்க்கையை நடத்தினர். இறுதிக்காலம் 30 ஆண்டுகளும் கோயில் பணிதான். இக்காலத்தில் வார்க்கப்பெற்ற செப்புத் திருமேனி களுக்கு ஈடில்லை என்றே சொல்லவேண்டும். கோனேரி ராஜபுரத்திலுள்ள போகசக்தி (அம்மன்), திருபுராந்தகர், விருஷபவாஹனர், கணபதி, நடராஜர் என்பவை சீரிய கலைச்செல்வங்கள். இவ்வித செப்புத்திருமேனி களை, இவர் எடுப்பித்த இதரகோயில்களிலும் காண லாம். அக்கோயில்களில் முக்கியமானவை ஆடுதுறை (தென்குறங்காடு துறை), குத்தாலம் (திருத்துருத்தி) திருநறையூர், விருத்தாசலம் (பழமலைநாதர் கோயில்), திருவாலிநாட்டுத் திருக்கருகாவூர்த் திருவெள்ளடை மகாதேவர் கோயில் (சீர்காழிக்குச் சமீபத்திலுள்ளது), திருமணஞ்சேரி, திருவாரூர் தியாகேசர் கோயில் பிரகாரத்திலுள்ள திரு அறநெறி ஆழ்வார் கோயில் (அப்பரால் பாடப்பெற்றது) முதலியன.

கலைப்பாணியில் இக் கோயில்களில் தனிப்பட்ட சிறப்பைக் காணலாம். மூன்று அல்லது ஐந்து தேவகோஷ்டங்களே இவருக்கு முற்பட்ட கோயில் களில் இருந்தன. இவர் காலத்துக் கோயில்களில் ஒன்பது தேவகோஷ்டங்கள் அமைந்துள்ளன. அவை களில் அகத்தியர், கணபதி, நடராஜர், தட்சிணா மூர்த்தி, லிங்கோத்பவர், பிரமன், பிட்சாடனர், துர்க்கை, அர்த்தநாரீசுவரர் என்ற கற்சிலைகளைக் காணலாம்.

உடல், பொருள், ஆவி, யாவையும் அர்ப்பணம் செய்து தெய்வீக வாழ்க்கையில் ஈடுபட்டுப் பிறருக்கு வழிகாட்டியாக வாழ்ந்த மாதர் திலகம் செம்பியன் மாதேவி ஆவார்.

# T. K. KUPPUSAMI GOUNDER

PADDY & RICE MERCHANT

**SRI LAKSHMI RICE MILL**

UTTUKULI P.O.

(COIMBATORE DT.)

என்னுடைய அரிசி ஆலை 1960-ம் வருடம் வேலை துங்கியது. தினம் ஒன்றுக்கு 600 மூட்டை நெல்லைக் காயவைத்து அரவை செய்வ தற்குக் களமும் அதற்கு உண்டான தொட்டியும் கிடங்கு வசதியும் உள்ளது. என்னிடம் நெ: 1 நெல் அரவை செய்யும் இயந்திரமும் உள்ளது. அந்த இயத்திரம் தினம் ஒன்றுக்கு 500 மூட்டை காய்ந்த நெல்லை அரவை செய்யும். 5 ஆண்டுகளாக கலெக்டரின் கொள்முதல் ஏஜெண்டாகவும் உணவுத் தானியக் கார்ப்பரேஷன் கொள்முதல் ஏஜெண்டாகவும் தனியார் கணக்கிலும் அரசினர் கணக்கிலும் கொள் முதல் செய்து நெல்லை நல்ல முறையில் அரவை செய்து அரசினருக்குச் சப்ளை செய்து வருகிறோம்.

**தமிழ் வட்டத்திற்கு எங்களது நல்வாழ்த்துக்கள் !**

தமிழ் வட்டம்
இரண்டாவது ஆண்டு விழாவிற்கு
நல் வாழ்த்துக்கள்

M. அப்பாச்சிக் கவுண்டர் அன் கோ.,
ஸ்ரீ வெங்கடேசா ரைஸ் மில், சோமனூர் P. O. (CBE Dt.)

★

நாங்கள் எங்களது மில் ஆரம்பம் ஆகி பத்து ஆண்டுகாலமாக பொது மக்களுக்கும் கோவை மாவட்டத்திய கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்திற்கும் சிவில் சப்ளை உணவு கார்ப்பரேஷனுக்கும் நல்ல முறையில் அரிசி தயார்செய்து கொடுத்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

M. APPACHI GOUNDER & Co.,
SRI VENKATESA RICE MILL.
SOMANUR

# தமிழ் நூல்களில் தலைப்புப் பக்கம்

இரா. முத்துக்குமாரசாமி

நூல்களை அச்சிடுவது என்பது தனிக் கலையாகும். ஆசிரியர் மூல நூலை மட்டும் எழுதிக் கொடுப்பார். பதிப்பாளர்கள்தாம் அதற்கு முன்னும் பின்னும் சேர்க்க வேண்டிய பகுதிகளைச் சேர்த்து வெளியிட வேண்டும். முகப்புப் பக்கம் (Off-Title), தலைப்புப் பக்கம் (Title-Page), முகவுரை, பதிப்புரை, பாராட்டுரை, உள்ளுறை முதலிய பகுதிகளை முன்னால் சேர்த்து சொற்குறிப்பு (Index), நூற்ரெகை (Bibliography) முதலிய பகுதிகளைப் பின்னாலும் சேர்த்தல் வேண்டும். தமிழ் மொழியில் இன்று வெளியாகும் பல நூல்களில் இவையனைத்துமே இருப்பதில்லை. இவையனைத்தும் எல்லா நூல்களுக்கும் இருக்க வேண்டுமென்பது நியதியில்லை. எனினும் ஒவ்வொரு நூலுக்கும் நூலாசிரியர் முன்னுரையாவது பதிப்பாளரின் பதிப்புரையாவது கட்டாயம் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நூலும் ஏதாவது ஒரு நோக்கம் பற்றியே எழுதப்படுகின்றது. அந்த நோக்கத்தை நாம் முன்னுரை, பதிப்புரைகளிலிருந்துதான் தெரிந்து கொள்ள முடியும்.

நூலின் அங்கங்களாக மேற்கூறியவை பல இருப்பினும் தமிழ் நூல்களில் தலைப்புப் பக்கம் இதுவரை எவ்வாறு அமைந்திருந்தது, இப்பொழுது எப்படி அமைந்துள்ளது என்பனவற்றைச் சிறிது பார்ப்போம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல நூலுக்கு முகமாக அமைவது தலைப்புப் பக்கம். கடந்த ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் நூல்கள் அச்சிடப் பெற்று வருகின்றன. முற்காலத்தில் மேலை நாடுகளில் தமிழ் நூலை அச்சிட்டு வெளிப்படுத்தினர். அத்தகைய தொரு நூலின் தலைப்புப் பக்கம் எவ்வாறு உள்ளது என்று பார்ப்போம்:

'ஞானமந்திர செல்வ பூங்காவனம். அதினுடைய முதலாம் வகுப்பிலே பூத்துக் கற்பனைகளுடைய வரிசையின்படியே கிறிஸ்த்தவர்களுக்கொத்த புண்ணியங்களிலே வத்திக்கத்தக்கதாக செய்ய வேண்டின 48 சிவங்கள் அடங்கியிருக்குது. கிறிஸ்த்துப் பிறந்து 1749 வருஷமாகிற போது சாசோனிலே யிருக்கும் ஆலை எங்கிற பட்டணத்திலே அச்சிலே பதிப்பிக்கப்பட்டது.'

இந்நூல் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காக எழுதப்பெற்றது. ஏசு பெருமானின் பத்துக் கட்டளைகளை விவரிப்பது. இதன்கண் 48 பகுதிகள் (சிவங்கள்) உள்ளன. இந்நூல் முழுவதும் மர எழுத்துக்களால் அச்சிடப் பெற்றுள்ளது. இப்பொழுது ஹாலண்ட் என வழங்கப்பெறும் ஆலை என்கிற பட்டணத்தில் இது அச்சாகியுள்ளது. இத் தலைப்புப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி நூலின் தலைப்பு. அதாவது 'ஞான மந்திர செல்வப் பூங்காவனம்' என்பது. அடுத்தது துணைத் தலைப்பு. நூலில் அடங்கியுள்ள பொருளை விளக்குவது. மூன்றுவது அச்சான ஆண்டு. நான்காவது அச்சிடப் பெற்ற இடம்.

பிற்காலத்திலெழுந்த நூல்களிலும் இப்பகுதிகள் சற்றுக் கூடியும் குறைந்துமிருப்பதைக் காணலாம்.

இவற்றைப் பகுதிபகுதியாக ஆராயுமுன் மற்றும் ஒரு நூலின் தலைப்புப் பக்கத்திலுள்ள செய்திகள் அனைத்தையும் ஒரு சேரக்காண்போம். இதில் எடுத்தவுடன் நூல் தலைப்பு இல்லை. நூல் தலைப்பும் ஆசிரியர் பெயரும் தனித்தனியாக அச்சிடப் பெறவில்லை தலைப்புப் பக்கத்தைப் பார்த்தவுடன் இது என்ன நூல்

என்று புரிந்து கொள்வதுகூடக் கடினம். தலைப்புப் பக்கத்திலுள்ளவை அப்படியே கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

"தமிழ்ச் சங்கத்திற் றமிழ் கற்கப் புகுமவர்கள் சொல்லும் பொருளுமெளிதினுணர்தற் பொருட்டுத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பல தேசிகன் கொடுந் தமிழ் நடையொடுஞ் செந்தமிழ் நடை விராயேனைய காண்டப் பொருளுந் தொகையுறச் செய்த விராமாயணத்துத் துத்தர காண்டக் கதை தொண்டை மண்டலத்தின்கண் விளங்கிய சென்னப்பட்டணத்துத் தமிழ்ச் சங்கத் தச்செழுத்தாற் பதிப்பிக்கப்பட்டது."

இந்நூல் இராமாயண உத்தரகாண்ட உரைநடையாகும். 1815 இல் அச்சிடப் பெற்றது. நூலின் தலைப்பு நடுவில் உள்ளது. ஆசிரியர் திருச்சிற்றம்பல தேசிகனின் பெயர் முதலில் உள்ளது. இறுதியில் அச்சிடப்பெற்ற இடமும் கொடுக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியில் நூல் எதற்காக எழுதப்பட்டது என்பதன் நோக்கமும் நூல் எழுதப்பட்ட விதமும் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ச் சங்கத்தில் தமிழ் பயிலும் மாணவர்கள் எளிதாக இராமாயணத்தின் உத்தரகாண்டப் பகுதியைத் தெரிந்து கொள்வதற்காக அச்சங்கத்தில் தலைமைப் புலவராக வீற்றிருந்த திருச்சிற்றம்பல தேசிகன் என்பார் கொடுந் தமிழ் நடையோடு செந்தமிழ் நடையும் கலந்து நூலை இயற்றியுள்ளார்.

### இலக்கணச் சுருக்கம்

இனி இவ் ஆசிரியரே இயற்றிய மற்றொரு நூலான 'இலக்கணச் சுருக்கம்' என்னும் நூலில் அந்நூலெழுந்த நோக்கத்தைப் பற்றி அதன் தலைப்புப் பக்கத்தில் விளக்கியுள்ளார்:

"சகல கலைகளையும் மோதியவற்றுட்டமிழையே யினிதாகக் கண்டிலக்கிய விலக்கணங்களை நன்றாய்க் கற்றாராய்ந்துணர்ந்து உலகத்துளவாகிய கொடுந் தமிழ் நாடுஞ் செந்தமிழ் நாடாக இலக்கணங் கற்கப் புகுவார்கள் பொருட்டுத் திருச்சிற்றம்பல தேசிகனாற் செய்யப்பட்ட இந் நூலெழுதப்படுமாகிற் பிழையுறு மென்றெண்ணி யறிவாற் றமிழ்வாருதி முகந்து தாரணியிற் கல்வியமிழ்து பொழி யெல் லீசனால் எஞ்ஞான்றும் நிலைபெற...அச்செழுத்தாற் பதிப்பிக்கப்பட்டது."

1813 இல் இந்நூல் அச்சாகியுள்ளது. இதில் ஆசிரியரின் கல்வித்திறன் வெளியாகியுள்ளது. சகல கலைகளைக் கற்ற அவர் அவற்றுள் தமிழையே இனிதாகக் கண்டுள்ளார். அதன் இலக்கிய இலக்கணங் களை நன்றாகக் கற்று, ஆராய்ந்து அதன்பின் அதன் உண்மைப் பொருளும் உணர்ந்துள்ளார். இலக்கணத்தை நழுவவிடாது பயின்று வந்த செந்தமிழ் வழங்கிய பகுதிகள் நீங்க இலக்கண அறிவில் வழுவிவிட்ட கொடுந்தமிழ் வழங்கிய பகுதிகளும் செந்தமிழ் பயிலும் பகுதிகளாக மாற வேண்டுமென்று நூலாசிரியர் விரும்பியுள்ளார். எனவே இலக்கணம் பயிலும் மாணவர்கட்காக இந்நூலை இயற்றியுள்ளார்.

நூலையாத்த ஆசிரியர் இது கையால் படியெடுக்கப் பெற்றுப் படிக்கப்படுமேயானால் பிழைகள் மலிந்து விடும்; இலக்கண நூலிலேயே பிழைபுகக் கூடாது என்று எண்ணியதால் இதை அச்சிலே பதிப்பித்துள்ளார். இத்தனை செய்திகளையும் அவர் தலைப்புப் பக்கத்திலேயே விளக்கி விட்டார்.

### இரட்டைத் தலைப்பு

தலைப்புப் பக்கத்தில் ஒவ்வொரு பகுதியாக இனிப் பார்ப்போம். நூல் தலைப்பு ஒன்றேயாக அமையாது மாற்றுத் தலைப்புடனும் அமைந்துள்ளது. மறைத்திரு மறைமலையடிகள் இயற்றிய நூலுக்கு 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்ற பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த நூற்றுக் கணக்கான தமிழ்ப் புதினங்கள் இவ்வாறு இரட்டைத் தலைப்புக்கள் உடையனவே. இதன் மூலம் கதைப் போக்கைத் தலைப்பிலேயே விளக்க முயன்றிருக்கின்றனர் என்று கூறலாம். 'நங்கை மடவன்னம் அல்லது மந்திர ஜால மகா விசித்திரம்' 'இந்திராபாய் அல்லது இந்திர ஜாலக் கள்ளன்' 'சுவர்ணம்பாள் அல்லது பெருவிரல் மர்மம்' என்ற தலைப்புக்கள் அவற்றுள் சில. இவ்வாறு இரட்டைத் தலைப்புக் கொடுக்கும் முறை பின்னால் மாறிவிட்டது.

தலைப்புக்குத் துணைத் தலைப்பாக அந்நூலைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் முறையும் கையாளப்பட்டுள்ளது. இரேனியஸ் பாதிரியார் உலக பூகோள வரலாற்றைத் தமிழில் 1832ல் எழுதியுள்ளார். அதில் 'பூமி சாஸ்திரம்; இந்த பூமியுடைய தன்மையையும் அதிலுள்ள கண்டங்களையும் சமுத்திரங்களையும் அவற்றிலுள்ள தேசங்களையும் தீவுகளையும் அவைகளிலுள்ள ஆளுகை வகை முதலானவைகளையும் அந்தத் தேசத்தாருடைய சரித்திரங்களையும் விவரித்துக் காட்டியது' என்று நூலில் கூறப்பட்டுள்ள செய்தியைப் பற்றிச் சுருக்கமாகக் கூறியுள்ளார். மேலும் 'தமிழருக்கு அறிவுண்டாகும்படி செய்யப்பட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார். அறிவுண்டாகும்படி என்பது அத்துறையில் அறிவு பெருகியுண்டாகும்படி என்பதாகும்.

### ஆசிரியரின் குலமுறை

ஆசிரியரின் பெயர் கூறப்படும் பகுதியில் அவர் இன்னார் மாணாக்கர், இன்னார் உறவினர், இன்ன குலத்தைச் சார்ந்தவர், இன்ன பதவியில் இருந்தவர் அல்லது இருப்பவர் என்பன போன்ற குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தி. க. சுப்பராய செட்டியார் என்பவர் சிலம்பின் புகார்க் காண்டத்தை மட்டும் அடியார்க்கு நல்லார்

உரையோடு 1880இல் பதித்துள்ளார். அத்துடன் அடியார்க்குநல்லார் உரை கிடைக்காத பகுதியான 'கானல்வரி'க்கு அவர் தாமே உரை யெழுதியுள்ளார். அப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் 'திரிசிரபுரம் ஸ்ரீ மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கர்' என்று மாணவர் உறவுமுறை கூறப்பட்டுள்ளது. அதன் பின்னரே டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்ட சிலப்பதிகாரம் முழுவதுமாக வெளி வந்தது.

வேங்கடாசல ஆசாரியார் இயற்றிய அரிச்சந்திர மகாராஜா கீர்த்தநம் என்ற நூலின் தலைப்புப்பக்கத்தில் ஆசிரியர் 'பஞ்சமுகோத்பவதேவப்ராம்மணசந்ததி' யில் தோன்றியவர் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆசிரியரின் குலம் குறிப்பிடப் பெற்றது போல அவர் தம் உறவு முறைகளும் சில நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் நில்லாது அந்நூலை யிபற்ற வேண்டுமென்று யார் வேண்டிக் கொண்டாரோ அவர் உறவு முறைகளும் காணப்படுகின்றன.

தருமலிங்கக் கவிராயர் இயற்றிய சாரங்கதர விலாசம் என்ற நூலின் தலைப்புப் பக்கத்தில் "வேலை நகரில் வணிகர்குல திலகராயிருந்த முத்துச் செட்டியார் புத்திரர்களாகிய தாண்டவராய செட்டியாருக்கு இளையோரும் கோவிந்த செட்டியாருக்கு மூத்தோருமாகிய சுப்பராய செட்டியார் கேட்டுக் கொண்டபடி" அந்நூல் இயற்றப்பெற்றதாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரின் பதவியும் பல நூல்களில் காணப்படுகின்றது. 'கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைக் கோட்டை முன்சீபாயிருந்து இப்போது கௌரன்மெண்டு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிற சைதாபுரம் காசி விசுவநாத முதலியார்' ஆக்கியது என்று தாசில்தார் நாடக நூல் ஆசிரியர் வகித்த பதவியைக் கூறுகின்றது.

நூலை அச்சிடப் பண உதவி செய்தவர்களைப் பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை. 'இறங்கூனிலிருக்கும் சில தமிழ்ப் பிரபுக்களது காருண்ய திரவியோபகாரசகாயத்தினல்' தாம் சூளாமணியைப் பதிப்பித்ததாக சி. வை. தாமோதரம் பிள்ளை அப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'சேந்தன் திவாகர'த்தை 1839இல் பதிப்பித்த தாண்டவராய முதலியார் தாம் பதிப்பித்த முறையையே தலைப்புப் பக்கத்தில் விளக்கியுள்ளார். 'புத்தகங்கடோறு மொன்றற்கொன் றெவ்வாது வழுஉக்களாற் பொதிவுற்றுக் கிடந்தமையாலவ் வழுஉக்களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும் வேண்டுமிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறி யிட்டுச் சேர்த்தும் பெயர் பிரித்தும்' தாம் பதிப்பித்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

ஆசிரியர் தாம் எழுதிய பிற நூல்களைக் குறிப்பிட்டு அவற்றின் ஆசிரியர் என்று தம்மைக் குறிப்பிட்டுக்கொள்வதை அன்றும் இன்றும் காணலாம்.

## சமர்ப்பணம்

நூலை இயற்றிய ஆசிரியர் அதைத் தாம் விரும்புபவருக்குச் சமர்ப்பணம் செய்யும் வழக்கம் என்றும் உண்டு. ஏ. ஆர். சீநிவாச முதலியார் தாம் எழுதிய ரோமியோ ஜூலியத் என்னும் நாடக நூலை இன்னருக்குச் சமர்ப்பணம் செய்கிறேன். என்று அந்நூலின் தலைப்புப் பக்கத்திலேயே கொடுத்துள்ளார்: 'மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்க நிரந்தர அக்கிராசனபதியும் நச்சினர்க்கினியர் ஞாபகச் சின்ன ஸ்தாபகரும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷாதிகாரிகளுள்ளும் நிர்வாக சபையோருள்ளும் ஒருவருமான தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்களுக்கு அவர்களது தமிழ்த் தொண்டை வியந்து தம் குருவாகப் பாவித்து சமர்ப்பிக்கப்பெற்றது.'

நூல் பதிப்பிக்கப் பெற்ற ஆண்டையும் தலைப்புப் பக்கத்தில் கொடுக்க அவர்கள் மறக்கவில்லை. பெரும்பாலான நூல்களில் தமிழ் ஆண்டின் பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது. ஆங்கில ஆண்டும் சில நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளது. சக ஆண்டு சில நூல்களில் காணப்படுகின்றது. ஒரு சில மூன்று ஆண்டுகளையுமே குறிப்பிட்டுள்ளன. தாண்டவராய முதலியாரின் சேந்தன் திவாகரப் பதிப்பில் 'இங்கிலீஷ் 1839 சாலிவாகனம் 1762 நிகழ்கின்ற விகாரி ஆண்டு' என்று மூன்று வகை ஆண்டு முறைகளும் உள்ளன.

இறுதியாக நூலை அச்சிட்ட அச்சகத்தின் பெயரோ அல்லது பதிப்பித்த பதிப்பகத்தாரின் பெயரோ காணப்படுகின்றது. அச்சகத்தின் பெயரைக் குறிப்பிடும் பொழுது அதன் உரிமையாளர்களின் பெயர்களையும் கொடுத்துள்ளனர். திருக்குற்றாலத் தலபுராண 1872 ஆம் ஆண்டு பதிப்பு 'அம்பலவாணன் கவிராயரவர்கள், கு. சிவராம முதலியாரவர்கள், புதூர் வள்ளிநாயகம் பிள்ளையவர்கள் இவர்களது முத்தமிழாகர அச்சுக் கூடத்தில்' அச்சிடப் பெற்றதாகத் தெரிகிறது.

இத்தனை விவரங்களில் பெரும்பாலானவற்றை முன்பு அச்சான நூல்கள் தத்தம் தலைப்புப் பக்கத்திலேயே கொடுத்துள்ளன. இன்று அச்சாகும் பெரும்பாலான நூல்களில் நூல் தலைப்பு, ஆசிரியரின் பெயர், பதிப்பகத்தின் பெயர் ஆகிய மூன்று விவரங்களே கொடுக்கப் பெறுகின்றன. சில நூல்களில் முன்னுரை எழுதியவரின் பெயரும் காணப்படுகின்றது. இன்று வெளியாகும் நூல்கள் அழகு காரணமாக மிகச் சுருங்கிய விவரங்களையே கொடுக்கின்றன. முன்பு வெளியான நூல்கள் அழகைப்பற்றி யெண்ணது என்னனென்ன விவரங்கள் கொடுக்கப்பெற வேண்டுமோ அத்தனை விவரங்களையும் தலைப்புப் பக்கத்திலேயே கொடுத்துள்ளன.

★

நீர்ப் பாசனத்திற்கும் அமோக விளைச்சலுக்கும்

# ராஜா

மோட்டார் பம்பு செட்டுகளையே அமையுங்கள்

நீடித்த உழைப்புக்கும்
சிக்கன செலவுக்கும்
பெயர் பெற்றவை.

தயாரிப்பாளர்கள்

ராஜா பவுண்டரி
பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர்-18.
போன் 26533. தந்தி: RAJAPUMP

எங்களிடம் மூங்கில் வகையராக்களும் தென்னங் கீத்தும் சகாயமான விலைகளில் கிடைக்கும்

குறிப்பு: ஆர்டர் பேரில் கொட்டகை வாடகைக்கு கட்டித் தரப் படும்.

V. R. பழமலை
மூங்கில் வியாபாரம்
கடலூர் ரோடு,
விருத்தாசலம்

எங்களிடம் சகல விதமான ஷாப் சாமான்களும் பள்ளிப்பாட புத்தகங்கள், நோட்டுகள், புது வருட நாள் காட்டிகள், நாள் குறிப்பு, பொங்கல் வாழ்த்துக்கள் முதலியன கிடைக்கும்.

தி. து. சண்முகம்
ஜெனரல் மார்ச்சண்ட்
மெயின் ரோடு
திட்டக்குடி

# இளங்கோ அடிகளின் கவிதை நயம்

மயிலை. சீனி வேங்கடசாமி

காவியப் புலவர்களின் கவித்திறன் அவர்களுடைய காவியங்களிலே நன்கு புலனாகின்றன. அவர்களுடைய புலமையினால் அவர்களுடைய காவியங்கள் படிப்பவரின் மனத்தை அள்ளிக் கொள்கின்றன. உவமைகளையும் கற்பனைகளையும் கையாள்வதோடு சந்தர்ப்பத்துக் கேற்றபடி கவிதைகளை இனிமையாகவும் அழகாகவும் அமைக்கும் ஆற்றல் காவியப் புலவர்களுக்கு உண்டு. அதனாலேதான் அவர்களுடைய காவியங்கள் கற்பவர் மனத்தை ஈர்த்துத் தம்வயப் படுத்துகின்றன. காவியப் புலவர்களின் கனிந்த செய்யுட்கள் அவற்றைக் கற்பவருக்குத் தெவிட்டுவதில்லை. எத்தனை தடவை படித்தாலும் அந்தச் செய்யுட்கள் உள்ளத்தைக் கவர்ந்து மனத்தைக் கவர்ந்து மனத்துக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் அளிக்கின்றன.

தமிழிலே ஆதிகாவியத்தை அளித்த இளங்கோ அடிகள் தலை சிறந்த காவியப் புலவர். அவர் இயற்றிய சிலப்பதிகாரம் அமரகாவியம். இதனாலன்றோ தேசிய கவி பாரதியார், 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பெருமிதத்தோடு கூறினார். சிலப்பதிகாரக் காவியத்தைப் படித்த அறிஞர்கள் எல்லோரும் இதனைப் புகழ்ந்து பேசுகிறார்கள். சிலப்பதிகாரம் உலகக் காவியங்களில் ஒன்று என்பதில் தடை இல்லை.

சிலப்பதிகாரக் காவியத்திலிருந்து இளங்கோ அடிகளின் கவிதைகள் ஒரு சிலவற்றை இங்குக் காட்டுவோம்.

மதுரையில் கோவலன் மேல் சுமத்தப்பட்ட வீண் பழியை, அவன் பொற்சிலம்பைக் களவாடினான் என்னும் கறையைப் போக்கி அவன் அப்பழுக்கற்றவன் என்பதை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் கண்ணகிக்கு ஏற்பட்டது. கண்ணகி, வழக்கு மன்றத்திலே சென்று தன் கணவன் குற்ற மற்ற செம்மல், அவன் மீது பொய்யாகப் பழி சுமத்தப் பட்டது என்பதைப் பாண்டியனுக்கும் உலகத்தாருக்கும் நிரூபித்துக் காட்டினாள். தன் கணவன் மேல் சுமத்தப்பட்ட இழிந்த பழியைப் போக்கி, அவன் தூய்மையான பெருமகன் என்பதை உலகத்துக்குக் காட்டிய பிறகு, கண்ணகி தன் கணவனுக்குச் செய்ய வேண்டியிருந்த கடமையும் பொறுப்பும் முடிந்து விட்டன. அதற்குப் பிறகு அவள் உயிர் வாழ விரும்பவில்லை. கண்ணுக்குக் கண்ணான கணவன், உயிருக்கு உயிரான காதலன் மறைந்துபோன பிறகு அவளுக்கு உலகத்திலே என்ன இருக்கிறது? உலகத்தில் உயிர் வாழ அவள் விரும்பவில்லை. அவள் தந்தையான மாசாத்துவனுடைய பெருஞ் செல்வம் ஒரே மகளான அவளுக்கேயுரியது. மாமனரான மாநாய்கனுடைய அளவற்ற செல்வமும் அவளுக்கே உரியது. ஆனால் கோவலன் இல்லாத போது இச்செல்வங்கள் அவளுக்கு ஏன்? அவள் உயிரை விட்டு விடத் தீர்மானித்தாள். உணவும் உறக்கமும் கொள்ளாமல் எங்கும் தங்காமல் இரவும் பகலும் நெடுக நடந்தாள். எங்குச் செல்ல வேண்டும் என்னும் குறிக்கோளில்லாமல் பல நாள் காட்டிலும் மேட்டிலும் நெடுக நடந்தாள். பதினான்காம் நாள் ஒரு குன்றின் மேலே ஒரு வேங்கை மரத்தின் கீழே வந்து நின்றாள். அங்கு அவளுடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

இந்தப் பத்தினிப் பெண்டின் வரலாற்றைக் கேட்ட சேரன் செங்குட்டுவனின் இராணியாகிய சேரமாதேவி இந்தப் பத்தினியைப் போற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதைச் செங்குட்டுவன் ஏற்றுக்

கொண்டு கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்துச் சிறப்புச் செய்தான். அந்த விழாவைக் காணப் பத்தினிக் கோட்டத்துக்குச் சென்றவர் பற்பலர். கண்ணகி உயிரோடு இருந்த காலத்தில் அவளுடன் நெருங்கிப் பழகிய பெண்மணிகள் நால்வர் இருந்தனர். அவர்களும் பத்தினிக் கோட்டம் சென்று அந்த விழாவில் கலந்து கொண்டனர். இந்தப் பெண் மணிகள் கோவலன் கண்ணகியரின் உறவினர் அல்லர். கோவலனின் தாயும் கண்ணகியின் தாயும் தங்கள் மகனுக்கும் மகளுக்கும் அயல் நாட்டிலே நேரிட்ட துன்பங்களையும் கடைசியில் அவர்கள் இறந்து போனதையும் கேட்டு தீராத்துயரடைந்து மனவேதனையினால் முன்னமே இறந்து போனார்கள். கோவலன் தந்தையாகிய மாநாய்கன் தன் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களையும் துயரங்களையும் கண்டு மனம் வெறுத்துத் தன்னுடைய பெருஞ் செல் வத்தையெல்லாம் தான தருமம் செய்துவிட்டுப் பௌத்தமதப் பிக்ஷு ஆனான். கண்ணகியின் தந்தை யாகிய மாசாத்துவனும் அவ்வாறே மனம் வெறுத்துத் தன்னுடைய செல்வங்களையெல்லாம் தானம் செய்து விட்டு ஆசீவகமதத் துறவியாய் விட்டான். ஆகவே கோவலன் கண்ணகியரின் உறவினர் யாரும் பத்தினிக் கோட்டத்துக்கு வரவில்லை. அப்படியானால், பத்தினிக் கோட்டத்துக்கு வந்த இந்த நான்கு பெண் மணிகள் யாவர்?

நான்கு பெண்மணிகள்

இவர்களில் ஒருத்தி காவற்பெண்டு என்பவள். இவள் கண்ணகியின் தந்தையான மாசாத்துவனின் மாளிகையில் நெருக்கமாக ஊழியம் செய்து கொண்டிருந்தவள்; கண்ணகியைக் குழந்தைப் பருவத்திலிருந்து சீராட்டிப் பாராட்டி வளர்த்த செவிலித்தாய், இவளுக்கு வயது ஐம்பதுக்குமேலிருக்கும். தன்னால் வளர்க்கப்பட்ட கண்ணகியிடத்தில் இவளுக்குப் பற்றும் பாசமும் இருக்கத்தானே செய்யும்?

மற்றொரு பெண்மணி அடித்தோழி என்பவள். இவள் கோவலன் கண்ணகியர் வாழ்ந்திருந்த மாளிகையில் கண்ணகிக்கு ஊழியப் பெண்ணாக இருந்தவள். ஊழியக்காரியாகக் கண்ணகியுடன் நெடுங் காலம் பழகிய இவளுக்குப் பத்தினிக் கோட்டம் செல்ல ஆசையுண்டாயிற்று. இவளுக்கு ஏறத்தாழ முப்பது வயதிருக்கலாம்.

மற்றொரு பெண்மணி தேவந்தி என்பவள். இவள் கண்ணகியின் தோழி. காவிரிப்பூம் பட்டினத்தில் இவள் கண்ணகியுடன் பலகாலம் நெருங்கிப் பழகியவள். தன் தோழியின் பத்தினிக் கோட்டத்துக்குப் போக இவளும் ஆசை கொண்டாள்.

இந்த மூன்று பெண்மகளிரும் காவிரிப்பூப்பட்டினத்திலிருந்து ஒன்று சேர்ந்து புறப்பட்டுப் பத்தினிக் கோட்டத்துக்கு வந்தார்கள். பூம்புகாரிலிருந்து மதுரைக்கு வந்து அங்கிருந்து சேரநாட்டு வஞ்சிமா நகரத்துக்கு வந்தனர். அக்காலத்தில் வஞ்சிமா நகரத்துக்குப் போகச் செவ்வையான வழி இதுதான். மேலும் கண்ணகியும் கோவலனும் மதுரையில் மாதரியின் இல்லத்தில் தங்கியிருந்தபோது அங்கு நடந்தவைகளை நேரில் கேட்டறிய வேண்டும் என்னும் எண்ணமும் இவர்களுக்கு இருந்தது. பூம்புகாரிலிருந்து புறப்பட்ட இவர்கள் கால் நடையாக நடந்து மதுரைக்குச் செல்ல ஏறத்தாழ ஒரு மாதம் சென்றது.

மதுரைக்கு வந்த இவர்கள் வழிகேட்டுக் கொண்டு மாதரியின் வீட்டையடைந்தனர். மாதரி வீட்டில் இல்லை. அவள் மகள் ஐயை என்னும் கன்னிப் பெண்மட்டும் அவ்வீட்டில் இருந்தாள். அவளுடைய தாயான மாதரி, கோவலன் கொலையுண்டு இறந்த துக்கந் தாங்க முடியாமலும், பாண்டியன் இறந்து போன திடுக்கிடும் செய்தியறிந்தபடியாலும் அரண்மனை தீப்பற்றி எரிந்தபோது அவள் அத்தீயில் விழுந்து மாய்ந்துபோனாள். இவர்கள் இச் செய்தியைக் கேட்டுப் பெரிதும் மனங் கவன்றார்கள். பிறகு ஐயை கோவலன் கண்ணகியர் தங்கள் வீட்டில் தங்கி உணவு சமைத்து உண்டதையும் தான் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ததையும் கோவலன் கொலையுண்ட செய்தியறிந்து கண்ணகி புலம்பி அழுததையும் நகரமக்கள் திரண்டதையும் கண்ணகி வழக்குரைத்துக் கோவலன் சிலம்பைக் களவாடவில்லை, அந்தச் சிலம்பு தன்னுடையது என் பதை நிலைநாட்டியதையும் பிறகு நகரமக்கள் சீற்றங் கொண்டு அரண்மனைக்குத் தீயிட்டுக் கொளுத்தியதையும் எல்லாம் இவர்களுக்குக் கூறினாள். இவைகளையெல்லாம் கேட்ட சோழநாட்டுப் பெண்மணிகள் மூவரும் மனம் வருந்திக் கண்ணீர் விட்டார்கள்.

ஐயை, தானும் கண்ணகியின் பத்தினிக் கோட்டத்தைக் காண இவர்களுடன் வருவதாகக் கூறிப் புறப்பட்டாள். கண்ணகியுடன் பழகியிருந்த இந்த நான்கு பெண்மணிகளும் மதுரையிலிருந்து புறப்பட்டு நெடுக வழி நடந்து வஞ்சிமா நகரத்துக்கு வந்து பத்தினிக் கோட்டத்தை யடைந்தனர்.

இந்தச் செய்திகளையெல்லாம் காவியப் புலவரான இளங்கோ அடிகள் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் சுருக்கமாகக் கூறியுள்ளார். இச்செய்திகளை உரைப்பாட்டாக (வசனச் செய்யுளாக) அமைத்துள்ளார். அவ்வுரைப் பாட்டின் ஒருபகுதி இது:

"கோவலன்தன் வினையுருத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன்தன் இடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர் கண்டு மண்ணரசர் பெருந் தோன்றல் உண்ணீரற்று உயிரிழந்தமை மாமறையோன் வாய்கேட்டு மாசாத்துவான் தான் துறப்பவும் மனைக்கிழத்தி உயிரிழப்பவும் எனப் பெருந் துன்பமெய்திக் காவற்பெண்டும் அடித்தோழியுங்

கடவுட்சாத்தன் உடனுறைந்த தேவந்தியும் உடன் கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர்புகுந்து முதிரா முலைப்பூசல் கேட்டாங் கடைக் கலமிழந் துயிர் இழந்த இடைக்குல மகள் இட மெய்தி ஐயை யவள் மகளோடும் வையையொரு வழிக்கொண்டு மாமலைமிசை ஏறிக் கோமகள்தன் கோயில்புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டு வற்குத் திறமுரைப்பர்மன்.''

புதிதாக அமைக்கப்பட்ட பத்தினிக் கோட்டத் தில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தது. அரசன் செய்த விழா அல்லவா ? அந்த விழாவில் நம்முடைய நான்கு பெண்மணிகளும் கலந்துகொண்டு சிரத்தை யோடு கண்டு மகிழ்ந்தார்கள். கண்ணகி வழி பாட்டில் இவர்கள் கொண்ட சிரத்தையும் அக்கறை யும் அங்கிருந்தவரின் கருத்தைக் கவர்ந்தன. சோழ நாட்டுக்கு அப்பாலிருந்து ஆண் மக்கள் துணையில்லா மல் வந்து சிரத்தையோடு வழிபடுகிற இவர்கள் யார்? ஒருவேளை பத்தினியாகிய கண்ணகியின் உறவினராக இருக்கக் கூடுமோ? இதுபற்றி அங்கிருந்த சிலர் இவர் களை விசாரித்தார்கள். அவர்களுக்கு இவர்கள் தாங்கள் யார் என்பதையும் கண்ணகிக்கும் தங்களுக் கும் உள்ள தொடர்பு இன்னதென்பதையும் கூறினர் கள். இது சாதாரணச் சிறு நிகழ்ச்சி. இதைக் காவியப்புலவரான இளங்கோவடிகள் இனிய சுவை யுள்ள கவிதையாகச் சிலப்பதிகாரக் காவியத்தில் அமைத்திருக்கிறர். இச்செய்யுள்களைப் படியுங்கள் :

தேவந்தி சொன்னதாக இளங்கோவடிகள் கவிதை யாகக் கூறுகிறர் :

''முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்.''

காவற் பெண்டு கூறியதைச் செய்யுளாக அமைக்கிறர்:

''மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்.''

அடித்தோழி கூறியதைக் கவிதையாக வடிக்கிறர்:

'' தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கும் எனக்குமோர் சொல்லில்லைக்
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றெடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்.''

வசனமாகச் சொல்லித் தங்களை அறிமுகப்படுத் திக் கொண்டதை இளங்கோ அடிகள் கவிதையாகக் கூறிக் காவியத்தைச் சிறப்புறச் செய்துள்ளார். காவி யப் புலவரின் வாக்குத் திறமையினுல் இக்கவிதை கள் கற்பவர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்கின்றன அல்லவோ ?

•

வாய்விட்டுப் புலம்பினர்

பத்தினிக்கோட்டத்தில் வழிபாடு நடந்த பின்னர், எல்லோரும் சென்றுவிட்டனர். ஆனல், நம்முடைய பெண்மணிகள் நால்வரும் அங்கேயே தங்கியிருந் தனர். இவர்கள் தனியே கோயிலில் சென்று பத்தினித் தெய்வ உருவமாகக் காட்சியளிக்கிற கண்ணகியின் சிலையை உயிருள்ள கண்ணகியாகவே கருதிக் கொண்டு தங்கள் மனத்திலிருந்த கருத்தை வாய் விட்டுக் கூறினர்கள். இவர்கள் வாய்விட்டு வருந் திக் கூறியதையும் காவியப் புலவர் இளங்கோஅடிகள் அழகாக இனிய கவிதைகளாக அமைத்துக் கூறு கிறர். இந்தக் கவிதைகளும் எழிலோடும் இனிமை யோடும் சுவை பயக்கின்றன. கவிதையைப் படியுங் கள் :

தேவந்தி புலம்பியது :

''செய்தவம் இல்லாதேன், தீக்கனுக் கேட்டநாள்
எய்த வுணரா திருந்தேன்.மற் றேன்செய்தேன் !
மொய்குழல் மங்கை! முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ, தோழி !
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழீ !

காவற் பெண்டு புலம்பியது :

''கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்துறவுங் கேட்டாயோ, அன்னை !
மாநாய்கன் தன்துறவுங் கேட்டாயோ, அன்னை!''

அடித்தோழி புலம்பியது :

''காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா - நம்புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ, தோழீ !
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ, தோழீ !

ஐயையைக் காட்டித் தேவந்தி கூறியது:

''ஐயந்தீர் காட்சி அடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன், பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை மகளிவள்தான் அம்மணம் பட்டிலாள்
வையெயிற்று ஐயையைக் கண்டாயோ தோழீ !
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ !''

இந்தச் செய்யுள்களின் அமைப்பும் வனப்பும் செவ்வியும் நயமும் புதுமையாக இருக்கின்றன. படிப்பவர் மனத்தைக் கவர்ந்து கொள்கின்றன. எத்தனை தடவை படித்தாலும் தெவிட்டாமல் இருக்கின்றன. பல மாதங்கள் சென்று படித்தாலும் ஆண்டுகள் கடந்து படித்தாலும் எப்போதும் புது மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. இது காவியப் புலவனின் கவித் திறன் அன்றோ?

சிற்பக் கலைஞரும் ஓவியக் கலைஞரும் இசைப் புலவரும் நாட்டிய நாடகக் கலைஞரும் தத்தம் அழகுக் கலைகளை எழிலுடன் அமைக்கிறார்கள். இவர்களின் நுண்கலைகள் கண் வழியாகவும் செவி வழியாகவும் கருத்தைக் கவர்ந்து மனத்துக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. இக்கலைகள் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த உயர்ந்த கலை காவியக் கலையே. கம்பனுடைய இராமாயணமும், திருத்தக்கதேவரின் சிந்தாமணியும், தோலாமொழித் தேவரின் சூளாமணியும், சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரமும் தமிழரின் காவியச் செல்வங்கள். இந்தக் காவியங்களைப் படித்துப் படித்துச் சுவைத்து சுவைத்து இன்புறுவோர் பேரின்பம் அடைகின்றனர். இந்த இன்பத்தை நாமும் அடைவோமாக.

## பழையகாலப் பள்ளிக்கூடங்கள்

பண்டைக் காலத்தில், தமிழ் நாட்டில் ஊர்தோறும் பள்ளிக் கூடங்கள் இருந்தன. திண்ணைப் பள்ளிக்கூடங்களென்னும் பெயரால் அவை வழங்கப்பெறும். அங்கே தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குரிய அறிவை அடைவதற்குக் கருவிகளாகிய நிகண்டு, நீதிநூல்கள், பிரபந்தங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. கணிதத்துக்கு அடிப்படையான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தனர். அவற்றின் உதவியால் மிகச்சிறிய பின்னங்களையும் அமைத்துக் கணக்கிடும் ஆற்றல் மாணாக்கர்களுக்கு உண்டாகும். குடும்பத்துக்கு வேண்டிய வைத்திய முறைகளும், நாள் பார்த்தல் சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல் வழிகளும், ஆலய வழிபாட்டு முறை, குலாசாரங்கள் முதலியனவும், ஞாபகசக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் கற்பிக்கப் பட்டன. உபாத்தியாயர்கள் மாணவர்களுள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்துத் தக்க உணர்ச்சியை யடையும்படி செய்தார்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பல விஷயங்கள் அத் திண்ணைப் பள்ளிக் கூடங்களிற் கற்பிக்கப்பட்டன; ஆதலின் அவற்றிற்கு ஒரு தனிச் சிறப்பு இருந்து வந்தது. கற்பிக்கும் உபாத்தியாயர்கள் மற்ற எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றனர். "மங்கலமாகி யின்றியமையாது, யாவரும் மகிழ்ந்து மேற் கொள மெல்கிப், பொழுதின் முகமலர் வுடையது பூவே" என்பதைப் போல அவர்கள் இன்றியமையாதவர்களாகவும் யாவரும் மகிழ்ந்து மேற் கொள்ளும் இயல்பினர்களாகவும் இருந்து வந்தார்கள். கணக்காயர்கள் சிறந்த தமிழ்ப் புலமையும் நற்குண நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களாக இருந்தமையே அத்தகைய நன்மதிப்பை அவர்கள் பெறுவதற்குக் காரணமாக இருந்தது. பண்டைக்காலத்தில் மிகச் சிறந்த தமிழ்ப் புலவர்களே கணக்காயர்களாக இருந்தனரென்று தெரிகின்றது.

—டாக்டர் உ. வே. சாமிநாதையர்

("மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திர"த்திலிருந்து)

உங்கள் தேவைக்கு நம்பிக்கையுடன் அணுகுங்கள்

பைப்ரோபிளெக்ஸ்

# ரப்பரைஸ்டு பைபர்

சம அளவு ஷிட்டுகளாகவும் மற்றும் பல சைஸ்களிலும் கிடைக்கும்

எல்லாவகை கார், பஸ் ஆசனங்கள், படுக்கை மெத்தைகள்

மற்றும் அப்ஹோல்ஸ்டிரிகளுக்கும் ஏற்றது

FIBROFLEX



தந்தி: FIBROFLEX

தயாரிப்பவர்கள்:

## பாரத் மோட்டார்ஸ்

(உரிமையாளர்: N. R. பிரைவேட் லிட்.,)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மோடி சேம்பர்ஸ் பம்பாய்-4

செண்ட்ரல் ஆபீஸ்: மவுண்ட் ரோடு. சென்னை-2

தொழிற்சாலை: இண்டஸ்ட்ரியல் காலனி, திருநெல்வேலி

FIBROFLEX



## நேஷனல் படக் காலண்டர்கள்

முற்றிலும் புதுமையான படைப்பு!

முறையான வண்ண அமைப்பு!

திறமையான வேலைப்பாடுகள்!

தெய்வீக கலை அம்சங்கள்!

இவைகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்று எங்களது காலண்டர்கள் வழக்கம்போல் விற்பனைக்குத் தயாரிலிருக்கின்றன. உங்களது வியாபாரம் செழித்து வளர நேஷனல் படக் காலண்டர்கள் மூலம் விளம்பரம் செய்யுங்கள்

தேவைக்கு எழுதுக:

ஸ்தாபிதம் 1933

போன் நிர்: 58

தந்தி: Lithograph

## தி நேஷனல் லித்தோ பிரஸ்

தபால் பெட்டி எண் 30,

சிவகாசி.



## SRI KALISWARI FIRE WORKS,

POST BOX No. 133

SIVAKASI (S. I.)

★

*Manufacturers of:*

THE BEST 'COCK' BRAND SPARKLERS, CRACKERS, ROCKETS & TOY FIRE WORKS.

TEL: MILLERS.

PHONE: { OFFICE: 71 / FACTORY: 71A

## K. S. S. PERIAKARUPPA NADAR & BROR

Branches: Grains, Dholl Merchants & Rice Millers,
MADURAI Post Box No. 20,
TUTICORIN East Car Street,
KUMBAKONAM SIVAKASI.

*Stockist For:*

Madras Cements Ltd.
T. Stanes & Company Ltd.
Indian Oil Corporation Ltd.
Neively Lignite Corporation Ltd.
Southern Asbestos Cements Ltd.
T. T. Krishnamachary & Co.,

*With best compliments from:*

Telephone 37. Tel. Address: "YEYATEE",

## PRITHIVI FIREWORKS INDUSTRIES,

*Manufacturers of:*

**Sparklers, Crackers & Fancy Fireworks**

POST BOX No. 66.

**SIVAKASI.** (S. INDIA)

*With the compliments of:*

## INDIAN REINFORCING CO.

A-20, Industrial Estate,

Guindy: Madras-32.

*With best compliments from:*

Grams: "SRIVATSACO" Phone: 23184 Coimbatore
24506. Madras.

## SREEVATSA ENGINEERING & TRADING CO.,

Engineers & Contractors.

9/161, Sardar Patel Road, COIMBATORE-9.
316, Thambu Chetty Street, MADRAS-1.

*Manufacturers of:*

"SREEVATSA" Make TRACTOR HAULED TRAILERS, American Type Deep well Pumpsets, Storage Tanks, etc., etc.,

*Dealers in:* GALVANISED IRON & Black Pipes & Fittings, LISTER OIL ENGINES, A. E. I. Crompton Electric Motors. DUNLOP Beltings, Hose Pipes, A. D. V. Tyres Tubes. G. I. Bareed wires, and other G. I. wires etc., etc.,

"ஈயாத புல்லர் இருந்தென்ன? போய் என்ன?" என்று பாடினர் படிக்காசுப் புலவர். புல்லர்கள் என்ருல் அற்பர்கள். லோபிகளையே புல்லர்கள் என்று குறிப்பிட்டுப் பாடியிருக்கிருர்கள் எண்ணற்ற தமிழ்ப் புலவர்கள். இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஆழ்வார்திருநகரியில் வாழ்ந்த சிறிய இரத்தின கவிராயர் தாம் இயற்றிய "புலவராற்றுப் படை" என்ற அற்புதமான நூலில், இரக்கமில்லாத புல்லர் களைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டி அவர் களுடைய இழி குணங்களையும் செயல்களையும் விவரித் துக் கடுந்தாக்குத் தாக்கியிருக்கிருர்.

லோபிகள் மூடத்தனமும் மூர்க்க குணமும் படைத் தவர்கள்; விஷச் சத்து நிறைந்த காஞ்சிரங்கனி போன்றவர்கள். தாங்களும் கொடுக்க மாட்டார்கள்; பிறரைக் கொடுக்கவும் விடமாட்டார்கள். மாந்தோப் புக்குப் போட்ட வேலிமாதிரி தடங்கலாக இருப்பார் கள் அந்த நீசர்கள். தங்களுக்கு இந்திரப் பட்டம் கிடைத்துவிட்டதாக இறுமாந்து கண்ணிருந்தும் குருடர்கள் போல், காதிருந்தும் செவிடர்கள் போல், வாய் இருந்தும் ஊமைகள் போல் உதவி நாடி வரும் ஏழைகளிடம் நடந்து கொள்வார்கள். குடி மக்களை இம்சிப்பார்கள் அந்தக் கொடும்பாதகர்கள். வேசையரைத் தவிர வேறு யாருக்கும் பொருள் கொடுக்க அவர்களுக்கு மனம் வராது; அதிகாரி களோ, கொள்ளைக்காரர்களோ வந்து அடித்துப் பல்லை உடைத்தால், வேறு வழியின்றி கொடுப்பார்கள். ஏழைகளைக் கண்டால் இஞ்சி தின்ற குரங்கு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு நாய் மாதிரி 'வள்' ளென்று விழுவார்கள். வெளியே தள்ளி வாசல் கதவைச் சாத்துவார்கள். குண்டோதரனைப் போல் பருத்த அந்த மூடர்கள் தங்கள் செல்வத்தில் எள்ள ளவு கூட உற்ருர் உறவினருடன் பகிர்ந்து சாப்பிடா மல் புதைத்து வைத்து, கடைசியில் தேனை ஈக்கள் இழப்பது போல் இழப்பார்கள். — இப்படியெல்லாம் கூறும் சிறிய இரத்தின கவிராயரின் சுவைமிக்க செய்யுள் அடிகள் பின்வருமாறு:

"கல்லா அறிவுடைப் பொல்லா மூர்க்கரைக்,
கைப்பறப் பழுத்த காஞ்சிரை போன்றும்
உப்புநீர் போன்றும் உவர்ப்புறு செல்வரை,
நீரினுள் கிடப்பினும் நெட்டிபோல் (சிறிது) உள்
ஈரமும் இரக்கமும் இல்லாப் புல்லரை,...
மாங்கனி தொடாது வளைக்குமுள் வேலியின்
தாம்கொடா விடினும் தடுக்கும் நீசரை,

இறுமாப்பு

முற்புரி தவத்தால் அற்பவாழ் வெய்தி
இந்திரப் பட்டம் வந்தது தமக்கென
ஒருவரை எண்ணு(து) இருசெவி செவிடாய்,
விழிகண் குருடாய், மொழியும்மூங் கையுமாய்,
மெய்யும் காலும் கையும் எழாது
முன்பொரு சொல்லும் பின்பொரு மொழியும்
கண்டால் ஒன்றும் காணு தொன்றும்
உண்டால் ஒன்றும் உண்ணு தொன்றும்
பலபல பிதற்றிக் கலகலென்(று) ஒலித்துச்
சட்டம் செய்(து) உலகைத் திட்டம்செய் பவர்
போல்...

கொடுமை

அடுங்கோல் என்னக் கொடுங்கோல் செலுத்தி
அடிஅடி என்ன அடித்தடித்(து) எளிய
குடி அலைத்(து) ஓட்டும் கொடியபா தகரை...

வேசையர்

வார்அறப் புடைத்து வட்டமிட் டெழுந்து
பூரண குடம்போல் புளகிதம் செறிந்த
கொங்கையும் வாள்வளைச் செங்கையும் காட்டி
வாடையும் மருந்து மஞ்சளும் கூட்டி
மேடைமேல் நின்று வெண்ணகை கோட்டிச்
சொக்கிடும் மாய மைக்கணுல் மருட்டும்
பாசிழை அல்குல் வேசையர்க் கலது
தனம்பெரி(து) அளிக்க மனம் கூடாது

# ஈயாத புல்லர்

பல்லை உடைப்போர்

படிறுபல விளைத்துக் கொடி(று)உக உடைக்கும்
கூர்ங்கை யல்லவர்க்(கு) ஈர்ங்கை விதிராது,

ஏழைகளைக் கண்டால்

வறியவர்க் காணின் மொறுமொறுத் திகழ்ந்து
பகைத்தவர் என்னத் திகைத்(து)எதிர் நோக்கி
இஞ்சி தின்ற வெஞ்சினக் குரங்கென
அகம்கெட வாளா முகம்கடு கடுத்துக்
கல்எறிந் தன்ன வல்லுரை கூறி,
நாய்போல் குரைத்துப் பேய்போல் குனித்துத்
தள்எனத் தள்ளித் தலைக்கடை அடைத்துத்

குண்டோதரனைப்போல் தொந்தி வயிறு

தண்டிய குண்டோ தரன்போல் தொந்தியும்,
பண்டியும் பாவமும் பருக்கப் பருத்து,
'நமர் இவர்,' 'நமக்கு (இ) இவர் நண்பினர்' 'உரிய
தமர்' என அடுத்தோர் தமக்கும்எள் ளளவும்
பாத்துணு(து) அளவில் பழம்பொருள் புதைத்து
வைத்(து)
ஈத்தொகு தேன்போல் இழக்கு மூடரை..."

—கு அ.

# M. ராக்கியாக் கவுண்டர் & பிரதர்ஸ்,

தனலக்ஷிமி ரைஸ் மில், சோமனூர்.

## தமிழ் வட்டம் இரண்டாவது ஆண்டு விழா

## நல் வாழ்த்துக்கள்.

★

நாங்கள் எங்களது மில் ஆரம்பம் ஆகி சென்ற 13 ஆண்டுகளாக
பொதுமக்களுக்கும், கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு,
விநியோக விற்பனை சங்கத்திற்கும், சிவில் சப்ளை &
உணவு கார்ப்பரேஷனுக்கும் அரிசி தயார்செய்து
நல்ல முறையில் கொடுத்து வருகிறோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறோம்.

# மலேசியாவில் தமிழ் வளர்ச்சி

**முருகு சுப்பிரமணியன்**
ஆசிரியர், தமிழ்நேசன், கோலாலம்பூர்.

மலேசியாவில் குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் கடந்த 20 ஆண்டுகளில் தமிழ் மொழி பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது.

அதற்கு முன்பும் தமிழ்வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து வந்திருந்த போதிலும் கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளைத் தமிழ்வளர்ச்சியின் பொற்காலம் என்று சொல்வது பொருந்தும்.

தமிழ் வளர்ச்சிக்கு மலேசியாவில் நிலைக்களனாக விளங்கி வருபவை நாடெங்குமுள்ள ஆரம்பத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள். இப்பொழுது மொத்தம் 684 ஆரம்பத் தமிழ்ப் பள்ளிகள் நடந்து வருகின்றன. அவற்றில் போதிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 3000 ஆகும். தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 81,428 ஆகும்.

மேற்குறிப்பிட்ட புள்ளி விவரங்கள் 1968ஆம் ஆண்டுக்கு உரியவை.

கடந்த 18 ஆண்டுகளில் தமிழ்ப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை இரு மடங்குக்கும் அதிகமாகப் பெருகியிருப்பது மலேசியாவின் தமிழ் வளர்ச்சி வேகத்திற்கு நல்ல அளவு கோலாகும்.

மலேசியாவின் சூழ்நிலையில் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சி வியப்பூட்டுவதாகும். இங்கு எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் கல்வி இலவசம். ஆங்கிலம் தேசிய மொழியான மலாய், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளையும் போதனை மொழிகளாகக் கொண்ட ஆரம்பப்பள்ளிகள் அரசாங்க முழு உதவியுடன் இயங்கி வருகின்றன. மலாய் மொழி தேசிய மொழி என்பதோடு இன்று நாட்டின் ஒரே ஆட்சி மொழியாகவும் இருந்து வருகிறது. ஆங்கிலம் ஆட்சி மொழி அந்தஸ்திலிருந்து சென்ற ஆண்டு (1967) இறக்கப்பட்டுவிட்டபோதிலும் கல்வித் துறையிலும் அரசாங்க அலுவல்களிலும் அதனுடைய செல்வாக்கு சிறிதும் குறையாமல் நீடித்து வருகிறது. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லா வகுப்புக்களிலும் மலாய் மொழியும் ஆங்கிலமும் கட்டாயத் தேர்வுப் பாடங்களாகப் போதிக்கப்படுகின்றன.

ஆரம்பப் பள்ளிகளுக்குப் பிறகு இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், மலாய் மொழி ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே பயிற்று மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத் தமிழ்ப்பள்ளி, சீனப் பள்ளிகளில் படித்து வருகிற குழந்தைகளும் இடைநிலைப் பள்ளிகளில் தங்களின் கல்வியை மலாய், அல்லது ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிக்கூடங்களிலேயே தொடரவேண்டும்.

இந்த ஏற்பாட்டினால் நேராக ஆங்கில, மலாய் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து வருகிற பிள்ளைகளுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி, மலாய் மொழிப் பயிற்சி அறிவு இயற்கையாகவே கூடுதலாக இருக்கிறது. தமிழ், சீன ஆரம்பப் பள்ளிகளுக்கு இது மற்றோர் சங்கடம் என்றும் குறிப்பிடவேண்டும்.

ஆரம்ப ஆங்கிலப் பள்ளிகளுடன் ஒப்பிடும்போது தமிழ் ஆரம்பப் பள்ளிகளின் கல்வித் தரமும்

அத்துணை மனநிறைவு அளிப்பதாகச் சொல்ல முடியாது.

தமிழ்ப் பள்ளிகள் பெரும்பாலும் தோட்டப்புறங்களிலேயே நடக்கின்றன. பெரும்பாலும் பெரிய தோட்டங்கள் அனைத்திலும் தமிழ்ப்பள்ளி இருக்கிறது. தமிழ்ப் பள்ளிகளை வாழ வைக்கிறவர்கள் தோட்டப் பாட்டாளிகளும் அவர்களின் குழந்தைகளும் என்று சொல்வதும் தவறில்லை. மற்றபடி நகர்ப்புறங்களில் வாழ்கிற துறைமுகத் தொழிலாளர்கள், ரயில்வே தொழிலாளர்கள், நகரசபைத் தொழிலாளர்கள், மராமத்துத் துறைப் பாட்டாளிகள் முதலானோரும் தங்களின் குழந்தைகளைப் பெரும்பாலும் தமிழ் ஆரம்பப் பள்ளிகளுக்கே அனுப்பி வைக்கின்றனர். முக்கியமாகத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயில்கிற கல்விக் கூடங்களாகவே தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றன.

தொழிலாளர்கள், ஏழை எளியவர்களிடையே காணப்படுகின்ற இத்தமிழ்ப் பற்று, சமூகத்தின் மேல் மட்டத்தில் வசதியாக வாழுகிறவர்களிடையே இல்லை. அவர்களின் பிள்ளைகளில் பெரும்பாலோர் ஆங்கில ஆரம்பப்பள்ளிகளிலேயே பயில்கிருர்கள்.

தமிழ்ப் பள்ளிகளின் மற்ருெரு சிறப்பு அங்கு மாணவர்களைவிட மாணவிகள் அதிகம் பயில்வதாகும். பெற்ருேர்கள் தங்களுடைய புதல்வர்களை ஆங்கில ஆரம்பப் பள்ளிக்கும் புதல்விகளைத் தமிழ் ஆரம்பப் பள்ளிக்கும் அனுப்புவது இங்கு சாதாரணமாகக் காணப்படுகிற நடைமுறையாகும். தங்களின் புதல்விகள் தமிழறிந்தவர்களாக இருக்கவேண்டும் என்னும் எண்ணம் சமூகத்தின் மேல்மட்டத்தில்கூட இருக்கிறது.

## தமிழாசிரியர்கள்

தமிழ்ப் பள்ளிகளைப் பற்றிச் சொல்லும்போது தமிழாசிரியர்களைப் பற்றியும் அவசியம் குறிப்பிட வேண்டும். மலேசிய இந்திய சமூகத்திற்குப் பலவகையிலும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் தொண்டு புரிந்து வருகின்றனர். நாட்டில் பரவியிருக்கிற தமிழுணர்ச்சிக்குத் தமிழாசிரியர்களின் அயராத பணியும் முக்கிய காரணமாகும். புலவர் கல்லூரி போன்ற அமைப்புக்கள் இங்கு இல்லை. இருப்பினும் தமிழாசிரியர்கள் பலர் தங்களின் தமிழ்ப் புலமையை முனைப்பான சொந்த முயற்சிகள் மூலம் உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். மலேசியாவின் தமிழ் எழுத்தாளர்களில் ஏறத்தாழப் பத்தில் எட்டுப் பேர் தமிழாசிரியர்களாக இருப்பதும் தமிழ் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிவருகிற பணிக்கு நல்ல சான்ருகும்.

## பல்கலைக்கழகம்

மலாயாப் பல்கலைக் கழகத்தில் 1956ம் ஆண்டு முதல் இயங்கி வருகிற இந்தியப் பகுதியும் மலேசியாவில் தமிழ் வளர்க்கின்ற திருப்பணியை நன்கு ஆற்றி வருகிறது. இப்பகுதி முதலில் சிங்கப்பூரில் நிறுவப்பட்டு 1959 முதல் கோலாலம்பூரில் இயங்கி வருகிறது.

ஆரம்பத்தில் இந்தியப் பகுதியை வட மொழிப் பகுதியாக அமைப்பதற்குச் செய்த கொல்லைப்புற முயற்சிகள் மலேசியத் தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சி மூலமும் உறுதியான தாய்மொழிப் பற்று மூலமும் தடுத்து நிறுத்தப்பட்டன. மலாயா பல்கலைக் கழக அமைப்புக் குழுவினர் செய்த சிபாரிசுகளும் தமிழ்ப் பகுதி நிறுவுவதற்கு ஆதரவாக இருந்தது தமிழின் நற்பேறு என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியப் பகுதியில் தற்சமயம் பயில்கிற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 400க்கும் அதிகமாகும். இவர்களில் தமிழரல்லாத சீன மலாய் மாணவர்களும் நூற்றுக் கணக்கில் இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துத் தமிழ் இலக்கியத்தையும் பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கை மொத்தம் 50க்குள் இருக்கும். மற்றவர்கள் தமிழைப் பற்றியும் தமிழ்ப் பண்பாடு, வரலாறு முதலியவை பற்றியும் ஆங்கிலத்தில் படித்து வருகிருர்கள். வடமொழியும் இந்தியப் பகுதியில் கற்பிக்கப்படுகிறது. அதனைப் பயில்பவர்களில் பெரும்பாலான மாணவர்கள் மலாய்க்காரர்கள் ஆவர். அதனைப்போல ஆரம்பத் தமிழைப் பயில்கிறவர்களில் பெரும்பாலோர் சீன மாணவர்களாவர்.

1961ம் ஆண்டில் சுமார் 60 மாணவர்களுடன் இயங்கிய இந்தியப் பகுதி இன்று ஆறு மடங்கு மிகுதியாக மாணவர்களைப் பெற்றிருப்பதும் அதிலும் ஏராளமான தமிழரல்லாத மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயில்வதும் மலேசியாவில் தமிழ் வளர்கிறது என்பதற்குச் சரியான சான்ருகும்.

•

பல்கலைக் கழக இந்தியப்பகுதி குறிப்பாகத் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்புக்களையும் மற்ற சகோதர சமூக மாணவர்களிடையிலும் அறிஞர்களிடையிலும் பரப்புவதில் பெரு வெற்றி கண்டிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. இதன் பிரதிபலிப்பாக மலாய்க்காரர்கள் மட்டும் பயில்கிற மாரா கல்லூரியில் தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வருவதைச் சுட்டிக் காட்டலாம். தமிழ் மொழியைப் பயில வேண்டிய அவசியத்தை அண்மைய ஆண்டுகளில் சீன மலாய் மாணவர்கள் அதிகம்பேர் உணர்ந்து வருகின்றனர்.

## முதல் கருத்தரங்கு

மலாயா பல்கலைக் கழக இந்தியப் பகுதி அரசாங்கத்தின் ஆதரவோடு முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கை 1966ம் ஆண்டு

கோலாலம்பூரில் கூட்டியதன்மூலம் தமிழ் மொழியின் வரலாற்றில் ஒரு புதியத் திருப்பத்தை உண்டாக்கித் தனக்கும் பெரும்புகழை ஈட்டிக் கொண்டது. மலேசிய அரசாங்கம் இக் கருத்தரங்குக்கு 40 ஆயிரம் வெள்ளி நன்கொடை வழங்கியது. மலேசியத் தமிழ் மக்கள் வழங்கிய நன்கொடை சுமார் இரண்டு லட்சம் வெள்ளி இருக்கும். தமிழை அனைத்துலக மொழியாக உயர்த்திய இக்கருத்தரங்கை ஆரம்பித்து முன்னோடியாக விளங்கியதன்மூலம் மலேசியா தமிழ் வளர்க்கும் திருப்பணிக்கு மகத்தான துணை புரிந்திருக்கிறது. இதற்கு மூல காரணமாக விளங்கிய பல்கலைக் கழக இந்தியப் பகுதியையும் அதன் தலைவராகப்பணியாற்றி வரும் பேராசிரியர் தனிநாயக அடிகளாரையும் எத்துணைப் பாராட்டினாலும் தகும்.

பல்கலைக் கழக இந்தியப் பகுதி ஆற்றியிருக்கும் மற்றொரு சிறப்பான பணி திருக்குறளை மலாய் மொழியிலும் சீன மொழியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பதாகும். பல்கலைக் கழகத்திலுள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் அறநிறுவன நிதியிலிருந்து இவ் வெளியீடுகளுக்குப் பணம் வழங்கப்பட்டது.

கல்வித் துறையில் தமிழ் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது ஆங்கில ஆரம்பப் பள்ளிகளிலும் ஆங்கில இடைநிலைப் பள்ளிகளிலும் தமிழை விருப்பப்பாடமாக எடுத்துப் பயில்கிற மாணவர்களைப் பற்றியும் சொல்ல வேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தில் பதினைந்து பெற்றோர் விரும்பினால் அவர்களின் பிள்ளைகளுக்கு தாய்மொழி (தமிழ் அல்லது சீனம்) கற்றுத் தருவதற்கு அரசாங்கம் வகை செய்திருக்கிறது. முழு மன நிறைவு அளிக்கின்ற விதத்தில் இந்த ஏற்பாடு நடைபெறவில்லை. என்றாலும் ஆங்கிலப் பள்ளிகளில் ஆயிர கணக்கான தமிழ்க் குழந்தைகள் தமிழ் மொழியைப் பயில்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. நாளுக்கு நாள் இப்பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சொல்லலாம்.

### வானொலி

மலேசிய வானொலியும் மலேசியத் தொலைக் காட்சியும் தமிழ் வளர்ச்சிக்கு அருந்துணை புரிகிற அரசாங்க அமைப்புக்களாக இருக்கின்றன.

மலேசிய வானொலியில் நாள்தோறும் 12 மணி நேரத்திற்குத் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற பொது விடுமுறை நாட்களிலும் தமிழ் நிகழ்ச்சி ஒலி பரப்பு அதிகாலை 5-30 மணிக்குத் தொடங்கி இரவு 11-மணிக்கே முடிவடைகிறது.

வானொலியில் தமிழ்ச் செய்திகளை ஏழு முறை செவி மடுக்கலாம். கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், மகளிர் பகுதி, சிறுவர் பகுதி, இளைஞர் பகுதி, இலக்கியப் பகுதி முதலியவற்றை மலேசிய வானொலி இந்தியப் பகுதி ஒலி பரப்பி வருகிறது.

வாரந்தோறும் சராசரி ஆறு வானொலி நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு மலேசிய வானொலியில் மிகுதியான முதன்மை வழங்கப்படுகிறதென்றும் சொல்லலாம்.

பள்ளிக்கூட ஒலிபரப்பில் தமிழ் நிகழ்ச்சிகள் வாரத்திற்கு ஆறு மணி நேரம் இடம் பெறுகின்றன. இந்த ஒலி பரப்பைத் தற்சமயம் சுமார் 257 தமிழ்ப் பள்ளிகள் செவி மடுத்து வருகின்றன.

### தொலைக் காட்சி

உலக நாடுகளில் தொலைக் காட்சியில் தமிழுக்கு இடம் கிடைத்தது முதலில் சிங்கப்பூரில்; அடுத்து மலேசியாவில். தொலைக்காட்சியில் தமிழ்ச்செய்தியை நாள்தோறும் 10 நிமிடம் ஒலி பரப்பத் தொடங்கிய பெருமை மலேசியத் தொலைக் காட்சியையே சாரும்.

மலேசியத் தொலைக்காட்சியில் தினசரி 10 நிமிடம் தமிழில் செய்தி ஒளி பரப்பப் படுவதோடு வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு 20 நிமிடம் வீதம் இசை, நாட்டியம், நாடகம், பேட்டி, கண்ணோட்டம் முதலான மற்ற நிகழ்ச்சிகளும் தமிழில் இடம் பெறுகின்றன.

மலேசியத் தொலைக் காட்சியில் இரண்டு மாதத்திற்கு மூன்று தடவை பழைய தமிழ்த் திரைப் படங்களையும் முழுமையாகக் காட்டி வருகிறார்கள்.

இரண்டாவது ஒளி அலை அடுத்த (1969) ஆண்டில் தொடங்கப்பட்ட பின்னர் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இன்னும் கூடுதலாக நேரம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

### தகவல் இலாகா

மலேசிய அரசாங்கத்தின் தகவல் இலாகாவில் தமிழ்ப் பகுதி தனியே இயங்கி வருகிறது. அவர்கள் அரசாங்கப் பிரசுரங்கள், விளம்பரங்கள் முதலியவற்றைத் தமிழில் வெளியிட்டு வருகிறார்கள். 'வார்த்தா மலேசியா' என்னும் பெயரில் வாரப்பத்திரிகை ஒன்றையும் தகவல் இலாகா வெளியிட்டு வருகிறது.

தமிழில் செய்திப் படங்களையும் அரசாங்கம் தயாரித்து நாடெங்கும் காட்டி வருகிறது. மேடை நாடகங்களையும் தகவல் இலாகாவினர் நாடெங்கும் நடத்தி வருகின்றனர். குடிமைப் பயிற்சி வகுப்புக்களும் தமிழில் நடத்தப்படுகின்றன.

### சங்கங்கள்

தமிழ் வளர்ச்சிக்கு மலேசியா வெங்குமுள்ள தமிழ்ச் சங்கங்கள், மன்றங்கள் ஆற்றிவருகிற பணியும் மகத்தானதாகும். மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ் இளைஞர் மணிமன்றம், அகில மலாயா

திராவிடர் கழகம் முதலியவை தேசிய அடிப்படையில் இயங்குபவை, இந்த இயக்கங்களும் மற்றும் ஆங்காங்குள்ள படிப்பகங்கள், கழகங்கள், மன்றங்கள் முதலியனவும் தமிழுணர்ச்சியை வளர்ப்பதிலும் கதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் பெருக்கி வருவதிலும் விழாக்கள் மூலம் தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதிலும் நன்கு பணிபுரிந்து வருகின்றன.

இவ்வகையில் முன்பு தமிழ்ப்பண்ணையும் அகில மலாயா தமிழர் சங்கமும் ஆற்றியிருக்கும் நிலையான தமிழ்ப் பணிகளையும் மறப்பதற்கில்லை.

மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆற்றியிருக்கிற பணிகளில் பேராசிரியர் கல்கிக்கு எடுத்த கருத்தரங்கைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். மலாயா பல்கலைக் கழக இந்தியப் பகுதியுடன் இணைந்து செய்யப்பட்ட இம் முயற்சி உருவான பலனைத் தந்தது. இக் கருத்தரங்குக் கட்டுரைகள் 'எழுத்தாளர் கல்கி' என்னும் பெயரில் தமிழகத்தில் நூல் வடிவில் வெளியிடப்பட்டிருக்கின்றன. உள்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்கள் மீது திறனாய்வு நடத்துகிற முயற்சி இப்போது எழுத்தாளர் சங்கத்தில் மேலோங்கி நிற்கிறது.

இளைஞர்களிடையே தமிழுணர்ச்சியை வளர்ப்பதில் தமிழ் இளைஞர் மணி மன்றங்கள் பெரும்பணி புரிந்து வருகின்றன. இப்பொழுது 20-க்கு மேற்பட்ட மணிமன்றங்கள் நாடெங்கும் இயங்கிவருகின்றன. அகில மலாயா திராவிடர் கழகமும் பல கிளைகளைக் கொண்டு நாடெங்கும் சீர்திருத்தத்தைப் பரப்புவதோடு தமிழ் வளர்ச்சிக்கும் துணைபுரிந்து வருகிறது.

1952ம் ஆண்டு முதல் இங்கு நாடெங்கும் நடைபெற்று வருகிற தமிழர் திருநாள் கொண்டாட்டங்களும் அவற்றுக்குத் தமிழகத்திலிருந்து வருகை புரிந்த பேராசிரியர்களும் மலேசியாவில் தமிழ் வளர்ச்சியைப் பெரிதும் ஊக்குவித்து ஆக்கம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வது மிகையாகாது. இவ்வகையில் பொங்கல் விழாக் கொண்டாட்டங்களும் வள்ளுவர் விழா போன்ற விழாக்களும் தக்க உதவியாக அமைகின்றன.

எழுத்துத் துறை வளர்ந்திருக்கிற அளவுக்கு முறையான தமிழ்ப்புத்தக வெளியீட்டுத் துறை இங்கு வளரவில்லை. இப்பொழுதுதான் புத்தக வெளியீடுகளில் மிகுந்த அக்கறை காட்டப்படுகிறது. இது வரையில் பாடப் புத்தகங்களும் உதிரி உதிரியான சில புத்தகங்களுமே வெளிவந்திருக்கின்றன.

**பத்திரிகைகள்**

மலேசியாவின் தமிழ் வளர்ச்சியைப் பற்றி எழுதும் போது இத்தனைக்கும் முழுமுதற் காரணமாகத் திகழ்ந்து வருகிற தமிழ்ப் பத்திரிகை உலகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்வது இன்றியமையாதது.

மலேசியாவில் மூன்று தமிழ் நாளேடுகள் (தமிழ் நேசன், தமிழ் முரசு, தமிழ் மலர்) நடந்து வருகின்றன. இவற்றின் தினசரி மொத்த விற்பனை சிங்கப்பூரையும் சேர்த்து சுமார் 25 ஆயிரம் பிரதிகள். ஞாயிற்றுக் கிழமை பதிப்பு மொத்தம் 50 ஆயிரம் பிரதிகள் விற்கக் கூடும். ஒவ்வொரு பத்திரிகையையும் சராசரி எட்டுப் பேர் படிப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இக்கணக்குப்படி தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் சுமார் 4 லட்சம் தமிழர்களுடன் தொடர்பு கொள்கின்ற வாய்ப்பு இங்கு இருக்கிறது.

வார நாட்களில் எட்டுப் பக்கமும் புதன் கிழமைகளில் பன்னிரண்டு பக்கமும் ஞாயிற்றுக் கிழமை 16 பக்கமும் வெளியிடப் படுகிறது. ஆனால், எல்லா நாட்களிலும் விலை 15 காசுதான் (36 புதுக்காசு).

மூன்று பத்திரிகைகளில் மிகவும் பழமை மிக்க "தமிழ் நேசன்" 1924ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் "சுதேச மித்திர"னுக்குப் பிறகு தோன்றிய இரண்டாவது தமிழ் நாளேடு என்னும் பெருமையும் தமிழ் நேசனுக்கு உண்டு.

"தமிழ் முரசு" சிங்கப்பூரில் தொடங்கப்பட்டுக் கடந்த 33 ஆண்டுகளாக நடந்து வருகிறது. அண்மையில்தான் கோலாலம்பூரிலும் இதனை அச்சிடத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ் மலர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் தொடங்கப்பட்டது. கோலாலம்பூரில் கடந்த ஆண்டிலிருந்துதான் 'தமிழ் மலர்' அச்சிடப்படுகிறது.

நாளேடுகளைத் தவிர்த்து தமிழ் வார இதழ், மாத இதழ் வெளியீடுகள் மலேசியாவில் இன்னும் ஆக்கம் பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழ் நாளேடுகள் தமிழ் வளர்ச்சிக்குக் காரண கர்த்தாக்களாகவும் நிலைக்களமாகவும் திகழ்ந்து வருகின்றன. இத்துணை பரந்த அளவில் தமிழ் மொழி இங்கு வளர்ந்திருக்கிற தென்றால் அதற்குப் பெரும் பொறுப்பு தமிழ் நாளேடுகள் தமிழ்ப் பணியில் காட்டி வருகிற பக்தி சிரத்தையான ஈடுபாடு என்று தாராளமாகக் குறிப்பிடலாம்.

தமிழ் நாளேடுகளின் துணை இல்லா விட்டால் இத்தகைய பிரும்மாண்ட தமிழ் வளர்ச்சி மலேசியாவில் ஏற்பட்டிருக்க முடியாது என்றும் திண்ணமாகச் சொல்லலாம்.

தமிழ் நாளேடுகளின் ஞாயிறு பதிப்புக்கள் உள்நாட்டு இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்க மளித்துத் தரமான எழுத்தாளர்களும், மதிக்கத்தக்க நவீன இலக்கியங்களும் தோன்றுவதற்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்ப் பத்திரிகைகளின் விற்பனையும் இரு மடங்கு பெருகியிருக்கிற தென்று சொல்வது தமிழ் வளர்ச்சிப் பெருக்கத்திற்குச் சான்று பகர்வதாகும்.

இக்கட்டுரையில் எல்லாத் துறைகளையும் நான் தொடவேண்டியிருந்ததால் பொதுபடையாகச் சில தகவல்களை மட்டுமே கூறியிருக்கிறேன்; மலேசியாவில் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிகிற பல்வேறு துறைகளையும் பற்றித் தனித் தனியே எழுதினால் இன்னும் விரிவான அடிப்படையில் தகவல்களை வழங்க முடியும்.

★



தமிழ் வட்டம் இரண்டாவது ஆண்டு விழா நடத்த
ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் கொடுத்துதவிய

**திரு. ஏ. வி. மெய்யப்பச்செட்டியார்**

*Our Hearty Greetings for the Tamil Vattam*

**USHA KNITTING COMPANY,**
K. S. C. HIGH SCHOOL ROAD,
TIRUPUR.

**USHA RICE MILL,**
DHARAPURAM ROAD,
TIRUPUR.

**USHA THEATRE,**
DHARAPURAM ROAD,
TIRUPUR.

# ஈழத்துத் தமிழ்ச் சிறு கதைகள், நாவல்கள்

செ. கணேசலிங்கன்,
கொழும்பு.

சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியில் தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்களின் லாபகரமான ஏற்றுமதியால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி ஈழத்தில் மத்திய தர வர்க்கத்தையும் தோற்றுவித்து வளரச் செய்தது. ஆங்கிலக் கல்வியும் பலவகையிலும் ஊதியம் தரவல்லதாக அமைந்தது. இச்சூழலில், தமிழ் நாட்டைப் போலவே முதன் முதலில் நாவல் இலக்கியமே ஈழத்திலும் தோன்றி வளர்ந்தது. ஆங்கிலக் கல்வியறிவு பெற்ருேர் மொழி பெயர்ப்பாகவும் சுயமாகவும் நாவல்களை எழுதினர்.

1930-ன் பின்னரேயே இந்தியச் சஞ்சிகைகளின் தாக்கத்தால் உந்தப்பட்டு சிறுகதைகளை ஒரு சிலர் தம் ஆத்ம திருப்திக்காக எழுத முற்பட்டனர். ஆரம்பக் கதைகளில் பெரும்பாலும் களமும் சம்பவங்களும் முக்கிய இடம் பெருது உணர்வு நிலையும் சிறுகதை என்ற புதிய இலக்கிய உருவம் அமைப்பதுமே எழுத்தாளர்களின் நோக்காக இருந்ததைக் காணலாம்.

1940-ன் பின்னர் தோன்றிய 'மறுமலர்ச்சி' எழுத்தாளர் குழுவினர் ஈழத்துப் பிரச்சனைகளை வைத்து, களம் அமைத்து சிறு கதைகள் எழுத ஆரம்பித்தனர். 'ஈழகேசரி', 'மறுமலர்ச்சி' என்ற இதழ்கள் புதிய வளர்ச்சிக்கு வித்திட்டன. ஆயினும் 1956-ல் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியின் பின்னரே ஈழத்தில் சிறுகதையும் நாவலும் அவற்றின் உச்சக் கட்டத்தை நோக்கி ஏறு நடை போடத் தொடங்கின. சுதந்திரம், கட்டாய இலவசக் கல்வி முறை, பல்கலைக் கழகம் வரை தமிழ் மொழியிலே கல்வி கற்பித்தல் ஆகிய மாற்றங்கள் இவற்றின் வளர்ச்சிக்கும் புதிய திருப்பத்திற்கும் உறுதுணையாயிருந்தன. ஆங்கில மொழியில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் தனி இலக்கியப் பாரம்பரியம் தோன்றியிருப்பதுபோல ஈழத்திலும் தமிழ் மொழியில் தனித்தன்மை வாய்ந்த இலக்கியப் பாரம்பரியம்—இலக்கிய இயக்கம் தோன்றியது.

தேசீயம், யதார்த்தம், ஈழத்தில் நிலவும் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் படைக்கும் புதிய பண்புகள் நாவல், சிறுகதைகளில் ஏற்பட்டன. இக்கால கட்டத்தில் தமிழ் எழுத்தாளரை ஒன்று கூட்டிச் செல்வாக்குப்பெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இவற்றைப் பிரசாரம் மூலமும் வலியுறுத்தி வந்தது. இக்காலத்தில் 'தினகரன்' நாளிதழ், வார இதழ்களின் ஆசிரியராயிருந்த திரு. க. கைலாசபதி அவர்கள் இவ்வியக்கத்தின் முன்னேடியாக நின்றவர்களில் ஒருவராவார். மற்றும் 'புதுமை இலக்கியம்' என்ற எழுத்தாளர் சஞ்சிகை மூலமாகவும் 'இலக்கியச் சந்திப்பு'களின் வழியாகவும் சகோதர விமர்சனம் என்ற பாசத்தலைப்புடன் நாவல், சிறுகதைகள் அடிக்கடி காரசாரமாகவும் விமர்சனம் செய்யப்பட்டு வந்தன. படைப்பிலக்கியத்திலேயே

ஈடுபடாத சில சிறந்த விமர்சகர்கள் மாலுமிகளாக நின்று நல்ல இலக்கிய வளர்ச்சிக்குக் கோடிட்டு வழி காட்டிச் சென்றனர்.

ஆரம்பகால எழுத்தாளர் ஆத்ம திருப்திக்காகவே எழுதினர். பின்னர் இலட்சிய வேட்கையும் சமுதாய உணர்வும் எழுத்தாளர்களின் உயிர் நாடியாக மாறியது. தமிழ் நாட்டில் நிலவுவது போன்ற கைத் தொழில் ரீதியான சஞ்சிகைகளின் வளர்ச்சி ஈழத்தில் கிடையாது. எழுத்தையே தொழிலாகக் கொண்ட படைப்பிலக்கிய கர்த்தாக்கள் எவருமேயில்லை.

தமிழ் நாட்டில் சில சஞ்சிகைகளின் கைத் தொழில் ரீதியான பெருவளர்ச்சி ஈழத்துப் படைப்பிலக்கியங்களின் வளர்ச்சியையும் பாதிக்கின்றது என்றே கூறவேண்டும். ஈழத்தில் நாவல், சிறு கதைகளின் வெளியீட்டுச் சாதனங்கள் மிகக்குறைவு. இந்தியச் சஞ்சிகைகளின் பரவலான விற்பனை ஈழத்தில் இலக்கியச் சஞ்சிகைகள், நாவல் சிறுகதை நூல்கள் வெளியிட முடியாத நிலைக்கு வளர்ந்துள்ளன. இதனுல் இந்தியச் சஞ்சிகைகளின் இறக்குமதி தடைசெய்யப்பட வேண்டும் என்ற கூக்குரலும் ஏற்பட்டு வருவது இயல்பே.

நாவல், சிறுகதைகள் யாவும் பத்திரிகைகளின் நாளிதழ், வார இதழ்களிலேயே வெளியிடப்படுகின்றன. நூல் வடிவம் பெறுபவை குறைவே. ஆயினும் ஈழத்து எழுத்தாளரின் தரமான சில சிறு கதைத் தொகுதிகளும் நாவல்களும் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆங்கில மொழியறிவே யில்லாது ஈழத்திலே சில சிறந்த தமிழ் எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். பல்கலைக் கழகம் வரை தமிழ் மொழி மூலம் கல்வி கற்பித்தல் என்ற புதிய நிலமை ஏற்பட்டதாலும் பல்கலைக் கழகத்தில் புதுமைப்பித்தன் கதைகள் பாட நூலாக நிலவுவதாலும் பட்டம் பெற்ற பத்துக்கு மேற்பட்ட சிறுகதை எழுத்தாளர்கள் அண்மையில் தோன்றி இத் துறையின் ஒரு பகுதியைத் தற்போது தம் வசமாக்கியுள்ளனர். இவர்களின் எழுத்தில் ஒருவகை இலக்கியத் தரம் இருந்தபோதும் நடையில் எதிர்மறைப் பண்பும் புதுமைப்பித்தன், மௌனி, லா. ச. ரா. வைப் பின்பற்றி எழுதும் குருட்டுப் போக்கும் நிலவி வருகிறது.

சமூகப் பிரச்சனைகளை ஆழ்ந்து அணுகுவதும் யதார்த்தப்போக்கும் இன்றைய ஈழத்துச் சிறுகதைகள், நாவல்களின் சிறந்த பண்புகளாகும். கற்பனுவாதம், 'நாச்சுறலிஸம்' என்னும் இயற் பண்புவாதம் ஆகிய இருகடவைகளையும் கடந்து யதார்த்த இலக்கியத்தில் புகுந்துவிட்ட ஒன்றே இன்றைய ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் தனிச் சிறப்பாகும்.



தமிழ் வட்டத்திற்கு எங்களது
மனப்பூர்வமான வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்

★

A. K. R. அங்கப்ப முதலியார் & கோ
லெஸி:- குகன் ரைஸ் மில்
Registered No. 237091
A ONE KNITTING COMPANY
2/65 யுனிவர்சல் தியேட்டர் ரோடு,
திருப்பூர்–1.

# G. சுப்பையா அண்டு கோ.,

## புத்தா ரைஸ் மில்

### திருச்சி ரோடு,

சூலூர், கோவை Dt.

எங்கள் ரைஸ்மில் 1962-ம் ஆண்டு முதல் நன்முறையில் நடந்து கொண்டிருக்கிறது. தினம் 300 மூட்டை நெல் அரைவை யாகும் களம், மற்ற வசதிகளுடன் உள்ளது.

தற்போது 600 மூட்டைகள் காயவைக்க அதிகமாக்கப்பட்டுள்ளது.

25,000 மூட்டைகள் வைக்க
தக்க வசதியான குடோன்கள் அமைந்த
எங்கள் மில் சர்க்காருக்கும், கோவை
CDCCS & MSCSD க்கும்
சிறந்த முறையில் அரைவை
செய்து கொண்டிருக்கிறது.

**தமிழ் வட்டத்திற்கு எங்களது நல்வாழ்த்துக்கள்!**

# மலேசியாவில் தமிழ்ச் சிறு கதைகள்

**சி. கமலநாதன்,** கோலாலம்பூர்

மலேசிய நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரக்கூடிய தமிழ்மக்களிடையே தமிழ்மொழியைக் கற்றறிந்தவர்கள் குறைவாகவே இருக்கின்றனர்.

கடந்த நூறு ஆண்டு காலமாக ஒப்பந்தக் கூலிக ளாகக் கொண்டுவரப்பட்ட தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பரம்பரையினர், அறியாமை மிகுந்த கும்பலாக வளர்க்கப்பட்டு வந்த அவலநிலை ஓரளவு மாறுவதற்கு, 1957-இல் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் சற்றே உதவியாக அமைந்தது.

இந்தக் கவனத்தோடு மேலே சென்று பார்க்கும் போது மலேசிய நாட்டில் தமிழ்ச் சிறுகதை இலக்கி யத்தின் வளர்ச்சி, இந்நாட்டில் 'விரும்பினால் தமிழ் கற்றுக் கொள்ளலாம்' என்றுள்ள குறைந்த பட்ச வாய்ப்பின் அடிப்படையில் இயங்கி வருவதையும் காணலாம்.

இந்த நிலையிலும் இங்குள்ள தமிழ் உள்ளங்களின் ஆர்வத்தினாலும், விடாமுயற்சியினாலும், அஃதோர் தமிழியக்கமாகத் தலைதூக்கி வருவதும் போற்றற் குரியதாகும்.

கடந்த இருபது ஆண்டுகாலமாக இத்துறை படிப் படியாகப் பல சோதனைகளைக் கண்டு வந்துள்ளது. அந்த முயற்சியின் பயனாக, மலேசியாவில் தமிழ்ச் சிறு கதைப் பயிர் தலைநிமிர்ந்து பச்சைகட்டி வளர்ந்து வருகிறது என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள லாம். நிலையான பயனை எதிர்காலத்தில்தான் அறு வடை செய்யவேண்டும்.

ஒரு கோடி மக்கள் வாழக்கூடிய ஒரு நாட்டில், தேசிய மொழியான மலாய் மொழியை இங்கு வாழும் சிறுபான்மையினரான மற்ற இனத்தவரும் அரசியல் வழியாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வெகு வேகமாக வளர்க்கப்பட்டுவரும் மலேசியப் பொதுக் கலாசாரமும், புதுப்பண்பாடும், பிற சிந்தனை களும் ஒருமைப்பாட்டுடன் உருவாக வேண்டி தேசிய இலக்கியமும் மலாய்மொழியில் படைக்கப்படுகின்றது. அந்த மொழிக்குத் தேசிய அங்கீகாரமும் வரவேற்பும் அமோகமாக வளரும் சமயத்தில் சிங்கப்பூரிலும் மலேசி யாவிலும் வதியும் எட்டரை இலட்சம் தமிழர்களின் தாய்மொழியான தமிழிலும் மலேசிய இலக்கிய வடிவத் தைப் படைக்கக் குறைந்த பட்ச வாய்ப்புக்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

படைப்பிலக்கியம், தாங்கள் வாழும் மண்ணின் மணத்தோடு விளங்கவேண்டும் என்று அதற்கான துடிப்புடன் செயலாற்ற இங்குள்ள சில இளந் தமிழ்ப் பேனாக்கள் முன்வந்துள்ளது பெரிய தொரு காரிய மாகும்.

## வளர்ச்சி

மலேசியத் தமிழர்களின் தமிழியக்கப் போக்கைக் கண்ட நாற்பத்தைந்து ஆண்டுகால 'தமிழ் நேச'னும் முப்பத்திரண்டு வயதுடைய 'தமிழ் முரசு'வும் தங்க ளுடைய அன்றாட உலகச் செய்திகளுக்கிடையே, வாசகர்களின் இலக்கியச் சிந்தனைக்கும், பொழுது போக்குக்கும் புதிய பாதையை வகுத்துக்கொடுக்க முன்வந்தன.

அந்தக் காலத்தில் நாட்டு நடப்போடு முறையாகச் சிறுகதைகளையும் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்

தைப் பத்திரிகைகளுக்கு ஏற்பட வைத்ததே ஒரு பெரிய கதையாகும்.

ஆர்வம் இருந்த அளவுக்கு முறையாகச் சிறுகதைகள் எழுதக் கூடியவர்கள் இல்லை என்பதைக் கண்டுகொண்ட தினசரிக் காரர்கள், தமிழகத்திலிருந்து இறக்குமதியான "ஆனந்த விகடன்", "கல்கி" "கலைமகள்", "விடுதலை" "ஜனசக்தி" போன்ற ஏடுகளிலிருந்து நல்லனவற்றைப் பொறுக்கியெடுத்து ஞாயிறு பதிப்பின் மூலம் இலக்கிய விருந்து அளித்து வந்தனர்.

இந்த வகையில் புதுமைப்பித்தன், ரகுநாதன், கு. அழகிரிசாமி, தி. ஜானகிராமன், ந. பிச்சமூர்த்தி, கு.பா.ரா., லா. ச. ராமாமிருதம், க. நா. சுப்ரமணியம், கல்கி, கி.வா. ஜகந்நாதன், அகிலன், விந்தன் போன்றவர்களுடைய எழுத்துக்கள் இங்குள்ள அன்றைய ஆறு இலட்சம் தமிழர்களின் இலக்கிய ரசனையையும் ஆர்வத்தையும் வளர்க்க உதவின. அந்த ஆர்வத்தின் வழியாக மலேசியாவில் உள்ள தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களில் பலர், தாங்கள் போதனுமுறை வகுப்பில் பெற்ற கல்வியறிவைக்கொண்டு பத்திரிகையில் தங்களுடைய எழுத்துக்கள் வரவேண்டும் என்ற எண்ணத்தில் எதை எதையோ எழுதினர். இவர்களுடன் தமிழ் நாட்டில் கல்விகற்று இங்கு வந்த உத்தியோகஸ்தர்களும், வணிகர்களும், பிற தமிழபிமானிகளும் இந்தத் தமிழ் முனைப்பை மேலும் உருவாக்க முன்வந்தனர்.

இந்த முனைப்பு, பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுதும் கடிதங்களாக உருவெடுத்தது. நாட்டு நடப்போடு பிற அரசியல் சமுதாயப் பிரச்னைகளையும் அலசினர். நேயர்களின் அபிப்பிராயங்கள், நாளடைவில் இலக்கிய சிந்தனைகளுக்கும் இழுத்துச் சென்றது. 'புதுமைப்பித்தன் மேதையா?' என்று காரசாரமாக விவாதிக்கும் அளவுக்கு ஒரு விறுவிறுப்பும் சலசலப்பும் ஏற்பட்டது. அதன்பயனுகக் கடல் கடந்த நாட்டில் வாழும் தமிழர்களின் இதயத்தில் புதுமைப்பித்தனும் நிரந்தரமாக இடம்பெற்றுவிட்டார்.

## கதை வகுப்பும் எழுத்தாளர் பேரவையும்

இந்த வேகத்தில் சிலர் சிறு கதைகளையும் எழுத ஆரம்பித்தனர். நாளிதழ்களில் ஒன்ருன 'தமிழ் நேசன்' கதை வகுப்பு ஒன்றைப் பால பாடத்துடன் ஆரம்பித்தது.

கதை வகுப்பை முன்னின்று நடத்தியவர்கள் திருவாளர்கள் சுப-நாராயணனும் பைரோஜி நாராயணனுமாவர். இதில் பலரும் கலந்துகொண்டனர். இதற்கு அடுத்தபடியாக முறையாகவும் வழியாகவும் தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கு உறுதுணையாகத் தமிழ்ப்பண்ணை என்ற ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. 'தமிழ் நேச'னின் கதை வகுப்பைத் தொடர்ந்து சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' நாளேடும் எழுத்தாளர் பேரவையை உருவாக்கிக் கொடுத்தது. திருவாளர்கள் வை. திருநாவுக்கரசும், அ. முருகையனும், 'தமிழ் முரசு' ஆசிரியரான தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் உதவியுடன் பல நல்ல காரியங்களைச் செய்தனர்.

அதன் பின்னர் தோற்றுவிக்கப்பட்ட தமிழர் திருநாள் விழாவும், மாணவர் மணிமன்ற ஏடும் பல இளைஞர்களை வெகுவாக ஈர்த்தன. இவை மட்டுமன்றி அவ்வப்போது தமிழ் மன்றங்களும், சங்கங்களும் பெரியார்களின் நினைவுநாள் விழாக்களோடு, இந்திய நாட்டின் தேசிய விழாக்களையும் இங்கு கொண்டாடி வந்தனர். அந்த வகையில் தமிழ்க் கலாமன்றம் நல்ல பணியைச் செய்தது. "ஜனோபகாரி", "மலைநாடு", தோட்டத் தொழிலாளர்களின் வார இதழான "சங்கமணி" ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளும் தோன்றின.

## கு. அ. கண்ட இலக்கிய வட்டம்

1952-இல் தமிழகத்திலிருந்து 'தமிழ் நேச'னுக்கு ஆசிரியராகப் பணியாற்ற வந்த கு. அழகிரிசாமி அவர்கள் மலேசியாவில் தோன்றியுள்ள தமிழ் ஆர்வத்தைக் கண்டார். பல தமிழ் எழுத்தாளருக்குச் 'சிறுகதை என்ருல் என்ன? எதை எப்படி எழுதவேண்டும்? எவை நிலைத்து வாழக்கூடிய இலக்கிய சிருஷ்டிகள்?' என்பனவற்றையெல்லாம் நேரடியாகவும் கடிதங்கள் வாயிலாகவும் கற்றுக்கொடுக்கும் நல்ல பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார். இதன் மூலம், பல விதச் சிறு கதை வடிவங்கள் "தமிழ் நேச"னில் இடம் பெறலாயின. கோலாலம்பூரின் ஒரு பகுதியான செந்தூலில், அறிஞர் கி. மூர்த்தி அவர்களுடைய இல்லத்தில், மாதந்தோறும் கு. அழகிரிசாமி அவர்கள் நடத்திய இலக்கிய வட்டக் கூட்டத்தில், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், நூறு மைல்களுக்கு அப்பால் இருந்துங்கூட பல எழுத்தாளர்கள் வந்து கலந்து கொண்டனர். தமிழ் நாட்டின் சிறந்த கதைகளுடன் உலகத்துச் சிறந்த கதைகள் பலவும் பற்றிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. அதன் பயனுக 'ஒரு சிறுகதை என்ருல் எப்படி அமைய வேண்டும்' என்பதில் எழுத்தாளர்கள் தெளிந்த ஞானமும், சிறந்த தேர்ச்சியும் பெற வழி பிறந்தது.

தமிழ் இலக்கிய உலகில் இன்று சிறப்புடன் விளங்கிவரும் கு. அழகிரிசாமி அவர்கள் தம்முடைய ஐந்து ஆண்டுகால மலேசிய வாழ்க்கையில், இலக்கியப் பணியுடன் அரசியல், சமுதாயம், கல்விபோன்ற பல துறைகளிலும் ஆற்றிய பணிகளைப் பலரும் பசுமையுடன் நினைவு கூருகின்றனர். பலரைச் சிந்திக்க வைத்து சிலரைத் திறன்மிக்க எழுத்தாளர்களாகவும் ஆக்கி வைத்த பெருமை அவருக்குரியதாகும். மலேசிய எழுத்துலகில், கு.அ. பரம்பரையினரை, தேசிய மொழியான

மலாய் மொழியில் 'அங்காட்டான் லீமா பூலோ' (Angkatan lima puloh—1950-ஆம் ஆண்டு எழுத்தாளர் பரம்பரை) என்று தேசிய மொழி எழுத்தாளர்களே மகிழ்வுடன் குறிப்பிடுகிருர்கள்.

மலேசியா கண்ட தமிழ் இலக்கிய வரலாற்றில், மேற்படி இலக்கிய வட்டம் சிறப்பான இடம் பெற்றுள்ளது.

### பத்திரிகை, வாஞெலி

இந்த நாட்டில் தமிழ்ச் சிறுகதைத் துறை வளர்ச்சியடையும் பொருட்டு இன்று வழிநடத்தி வருபவர்களான "தமிழ் முரசு" ஆசிரியர் கோ. சாரங்கபாணி, "தமிழ் நேசன்" ஆசிரியர் முருகு. சுப்பிரமணியன், "தமிழ் மலர்" ஆசிரியர் செல்வ கணபதி, "வார்த்தா மலேசியா" ஆசிரியர் சி. வி. குப்புசாமி போன்றவர்களேயும், சிங்கப்பூர் மலேசியா வாஞெலிகளின் தமிழ்ப் பிரிவினரையும் இங்குள்ள தமிழ் எழுத்தாளர்கள் போற்றிப் பாராட்டுகின்றனர். "இந்தியன் மூவி நியூஸ்" "மஞேகரன்" போன்ற சினிமா இதழ்களும் அவ்வப்போது சிறுகதைகளேயும் வெளியிட்டு வருகின்றன. "பொன்னி" என்ற பெயரில் திங்கள் ஏடு ஒன்றும் கடந்த நான்காண்டுகளாக நன்கு நடைபெற்று வருகிறது.

இங்குள்ள தமிழ் ஆர்வத்தின் மற்ரெரு செயல் வடிவம்தான், மலேசியாவில் முதன் முறையாகக் கூட்டப்பெற்ற தமிழாராய்ச்சி மாநாடாகும். இது தமிழ் எழுத்தாளர்களேயும் தமிழாசிரியர்களேயும் மறந்து விட்டுக் கூட்டிய மாநாடு என்ருலும், இதன் மூலம் பல உண்மைகளே இங்குள்ளவர்களோடு, விழாவிற்கு வந்திருந்த பல நாட்டவர்களும் உணர்ந்துகொள்ள முடிந்தது. அந்த வகையில் பல உள்ளூர் எழுத்தாளர்களே நல்லபடி சிந்திக்க வைத்த இந்த ஆராய்ச்சி மாநாட்டிற்கும் எல்லாத் தமிழ் உள்ளங்களும் நன்றி கூறுகின்றன.

### எழுத்தாளர்களின் தொகை

பத்திரிகைக் கணக்குப்படி, இங்குள்ள தமிழ் எழுத்தாளர்களின் தொகை சுமார் 320 பேராக இருக்கக்கூடும். மாதந்தோறும் பத்திரிகைகளேப் புதிய முகங்கள் நிரப்பிவருகின்றன. பாரபட்சமின்றிப் பொறுக்கி எடுக்கும்போது அவர்களில் 50 பேர் தேறுவர். இவர்களில் நறுக்காக 40 பேரை நல்ல (சிறுகதை) எழுத்தாளர்கள் எனக்கொள்ளலாம். இவர்களில் சுமார் 25 பேர், தமிழ்நாட்டில் நன்குசிறுகதை எழுதக் கூடியவர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய திறமை பெற்றவர்கள்.

1958-க்குப் பின்னர் இத்துறையில் ஒரு தேக்கம் காணவும் நேர்ந்துவிட்டது.

### வருமானமில்லாத தொழில்

சில வருடங்களுக்கு முன் நன்ருக எழு[illegible] கள் இன்று எழுதாமல் நிறுத்திக்கொண்ட[illegible] வருமானம் இல்லாத தொழிலாக இருப்பதை[illegible] மதிப்பற்ற தொழிலாகச் சிலர் ஆக்கிவிட்டதை[illegible] காரணமாகச் சொல்லவேண்டும்.

வயிற்றுப்பாட்டிற்கு ஒரு தொழிலே வைத்துக் கொண்டு ஓய்வு நேரத்தில் கதை எழுதிவந்தவர்கள் அவ்வாறு எழுதுவதை விடுத்து, ஓய்வு நேரத்தில் வருமானம் கிடைக்கக்கூடிய வேறு தொழிலேத் தேடிக் கொண்டனர். எல்லோருக்குமே எழுதுவதில் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. இந்தக் காலி இடத்தை நிரப்புவதற்காக புதிய எழுத்தாளர்களே ஊக்குவிக்கிருேம் என்ற பெயரில் புதிய முகங்களேப் பத்திரிகையாளர்கள் அறிமுகப்படுத்திவருவது, ஒரு பக்கம் நல்ல சிறுகதை இலக்கியம் வள[illegible]டாமல் செய்வதுடன் மற்ரெரு பக்கம் [illegible]ன்கள் பெருகுவதற்கும் இடம் தருகிறது. இது வருந்தவேண்டிய நிலேயாகும். எழுத்தாளர்களின் பட்டியல் நூற்றுக் கணக்கில் பெருகிக்கொண்டு போகும் அதே சமயத்தில் அவர்கள் எழுத்தில் ஆழமில்லாமலும் போய்க்கொண்டு இருக்கிறது.

### சன்மானத் தொகைகள்

இன்று வாஞெலியில் ஒலிபரப்புக்கு ஏற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு சிறு கதைக்கும் பத்து வெள்ளி சன்மானம் தருகின்றனர். இந்த நாட்டில் பிரசுரமாகும் 'தமிழ் நேசன்' 'தமிழ் முரசு' 'தமிழ் மலர்' என்ற மூன்று தினசரிகளில், 'தமிழ் நேசன்' மட்டும் 1965 முதல், பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு (பெரிய) கதைக்கும் ஐந்து வெள்ளி அன்பளிப்பு கொடுக்கிறது. எல்லாப் பத்திரிகைகளும், வாஞெலி நிலேயத்தவர்களும் நல்ல எழுத்தாளர்களே மதித்து சன்மானத்தை உயர்த்திக்கொடுக்க முன்வரவேண்டும். இதே நாட்டில் தேசிய மொழிப்பத்திரிகைகளிலும் வாஞெலியிலும், (சாதாரண) பிறமொழிக் கதைகளுக்குக் குறைந்த பட்சம் ஐம்பது வெள்ளிக்கு மேல் சன்மானம் தருகின்றனர் என்பதை இங்கே குறிப்பிடவேண்டும்.

பத்திரிகைக்காரர்களால்தான் தமிழ் எழுத்துக்கள் வளரக்கூடிய நிலே இந்த நாட்டில் இருக்கின்றது. இவர்கள் மனம் வைத்தால் எதுவும் முடியும். கதைப் போட்டிகள் வைத்து ரொக்கப் பரிசுகளேக் கணிசமாகத் தரலாம். திங்கள் தோறும் நல்ல கதைகளேப் பொறுக்கி எடுத்து விமர்சனம் செய்யலாம். நல்ல கதைகளே அவர்களே நூல்வடிவில் கொண்டுவரவும் முயற்சி செய்யலாம். அதற்குரிய வசதிகள் அவர்களிடம் நிறைய இருக்கின்றன.

### பிரசுரகர்த்தர்கள்

இந்த நாட்டில் உள்ள 650 ஆரம்ப தமிழ்ப் பாடசாலேகளில் படிக்கும் ஓர் இலட்சம் குழந்தைகளுக்

...ப் புத்தகங்களை வெளியிட்டுவரும் நாலைந்து கடைக்காரர்கள் இருக்கிறார்கள். கதை... ம் நூல் வடிவில் வெளிவர உதவக் கூடிய ...ரும் இல்லை. மூலதனம் போடக்கூடியவர்கள் ...இதழுக்கு முந்துகிறார்கள்; இத்துறைக்கு வர ...றார்கள். எழுத்தாளர்களின் சுய முயற்சியால் வெளிவந்துள்ள சில நூல்களுக்கும் சரியான பத்திரிகை விளம்பரமில்லை. கூட்டு முயற்சி இங்கும் தலையெடுத்துள்ளது. அதன் பயனை எதிர்காலத்தில்தான் திட்டமாகக் கூறமுடியும். ஆனால் அது வரவேற்கத் தக்க நல்ல முயற்சியே.

## எழுத்தாளர்—வாசகர் வட்டம்

சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் தமிழ்ச் சிறுகதை வடிவங்கள் இன்னும் இளமைத் துடிப்பிலேயே இருக்கின்றன என்று "தீபம்" ஆசிரியர் திரு. நா. பார்த்தசாரதி அவர்கள், தமது மலேசிய (1967-மே) வருகையின்போது குறிப்பிட்ட வாசகத்தை இங்கு நினைவு படுத்திக்கொள்ளவேண்டும். தமிழ் எழுத்தாளர் சங்கம் இடைக்காலத் தேக்கத்திற்குப்பின், இப்பொழுது அதன் முன்னோடிகளை நினைவில் கொண்டு, பல சுறுசுறுப்பான காரியங்களைச் செய்துவருகிறது. காலாண்டுக்கு ஒரு முறை நாட்டின் பல இடங்களில் எழுத்தாளர்—வாசகர் வட்டக் கூட்டத்தை நடத்தி இந்நாட்டின் படைப்புக்களைப் படைப்பாளர்களும் வாசகர்களும் சேர்ந்து விமர்சனம் செய்து வருகின்றனர். இதற்கு கு. அ. வின் பத்து இலக்கிய வட்டங்களே முன்னோடியாகும். இந்த விமர்சனத்துறை பலமாகக் கால் ஊன்றிவிட்டது.

மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கமும், தமிழ்த் துறையினரும் இணைந்து நடத்திய கல்கி (1962) கருத்தரங்கிலும், சிங்கப்பூரில் அதே ஆண்டில் நடைபெற்ற பன்மொழி எழுத்தாளர்களின் இலக்கிய மாநாட்டிலும், புதுமைப்பித்தன் நினைவு மலரிலும், மா. செ. மாயதேவனின் இலக்கியப் பணி பற்றிய (தைப்பிங்) கூட்டத்திலும், மற்றும் மா. இராமையா, சி. வடிவேலு, மணி மன்றக் கதைகள் வெளியீட்டு விழாவிலும் இவர்களுடைய படைப்புக்கள் அவ்வப்போது விமர்சிக்கப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் தைத்திங்களில் வரும் தமிழர் திருநாள் கூட்டங்களிலும் சிறுகதை இலக்கியம் பற்றிய கருத்துப் பரிமாற்றம் நடைபெற்று வருகிறது.

நூற்றைம்பது உறுப்பினர்களைக்கொண்ட தமிழ் எழுத்தாளர் சங்கம், 1957ல் ஆரம்பிக்கப்பட்டது.

'ஏடு' என்ற பெயரில் முத்திங்கள் வெளியீட்டையும் சங்கம் நடத்தி வருகிறது. திரு. சி. வேலுசுவாமி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக இருந்து செய்த அயராப் பணியைச் சக எழுத்தாளர்களால் மறக்க முடியாது.

## சிறுகதைப் போட்டிகள்

இங்குள்ள எழுத்தாளர்களைப் பெரிதும் ஊக்குவித்த சிறுகதைப் போட்டி நிகழ்ச்சிகளைப்பற்றி இங்கே கூறவேண்டியது அவசியம்.

1956-ல் தமிழ்ப் பண்ணையார் தங்கள் ஆண்டு விழாவின் போது வழக்கம் போல் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகள் நடத்தும் நோக்கத்துடன் அப்போது "தமிழ்நேசன்" ஆசிரியராக இருந்த கு. அழகிரிசாமி அவர்களிடம் சென்று தங்கள் கருத்தை வெளியிட்டு, அந்தப் போட்டிகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கு. அ. வைக் கேட்டு கொண்டார்கள். அவ்வாறு தமிழ்ப்பண்ணையின் சார்பில் கேட்டுக் கொண்டவர்கள் அதன் தலைவர் (காலஞ்சென்ற) எஸ். பழனிவேல் பிள்ளை அவர்களும், செயலாளர் கா. சிதம்பரம் அவர்களுமே. அப்போது கு. அ. கூறினார்: "பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளுக்குப் பதிலாகச் சிறு கதைப் போட்டி நடத்துங்கள். இந்நாட்டில் சிறுகதை எழுதுகிறவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதுதான் இன்று செய்ய வேண்டிய தமிழ்ப்பணி. இந்தச் சிறந்த காரியத்தை முதல் தடவையாக நீங்கள் செய்ய வேண்டும். சிறந்த கதைகளை எழுதியவர்களுக்கு ஐந்து வெள்ளிக்கும் ஆறு வெள்ளிக்கும் புத்தகங்களை வாங்கிப் பரிசாகக் கொடுக்காமல், தங்கமாகக் கொடுக்க வேண்டும்..."

பழனிவேல் பிள்ளையும் சிதம்பரமும் உடனே தங்கள் இசைவை மகிழ்ச்சியோடு தெரிவித்தனர்.

"முதற் பரிசு 2 சவரன் பதக்கம்; இரண்டாம் பரிசு $1\frac{1}{2}$ சவரன் பதக்கம்; மூன்றாம் பரிசு ஒரு சவரன் பதக்கம். கொடுக்கலாமா? இதற்குக் குறைந்தால் கௌரமாக இராது" என்று கு. அ. சொல்லவே, அதற்கும் அவர்கள் உற்சாகத்துடன் இணங்கினர்.

தமிழ்ப் பண்ணையின் சிறுகதைப் போட்டி அறிவிப்பு வெளிவந்ததும் எழுத்தாளர்கள் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். போட்டியிலும் கலந்து கொண்டார்கள். ஆண்டு விழாவில் கு. அ. வின் சொற்பொழிவு மலாயாத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைப் படைப்புக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவதை வற்புறுத்துவதாகவே அமைந்தது. "இன்றைய நிலையில் இதையே முக்கியமான தமிழ்ப் பணியாகக் கொண்டு எல்லாத் தமிழன்பர்களும், சங்கங்களும் பாடுபட வேண்டும்" என்று அவர் கூறினார். பின்னர் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 3 பரிசுகளுக்குப் பதில் 4 பரிசுகள் வழங்கப்பட்டன! முதல் பரிசுக்கு இரண்டு கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சவரன் பதக்கம் வீதம் கொடுக்கப்பட்டது.

இதுதான் மலாயாவில் சிறுகதை எழுத்தாளர்களுக்கு மக்களிடையே மிகப்பெரிய அளவில்

அங்கீகாரமும் கௌரவமும் தேடிக் கொடுத்த முதல் நிகழ்ச்சி என்றால் அது மிகையாகாது. இந்தச் சிறந்த காரியத்தைச் செய்த தமிழ்ப் பண்ணைக்கும், அதன் நிர் வாகிகளான எஸ். பழனிவேல் பிள்ளை, கா. சிதம்பரம் முதலிய அனைவருக்கும், கதைக்குத் தங்கம் கொடுக்கச் செய்த கு. அ. விற்கும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்ட வர்கள். இந்தப் பரிசுத்திட்டம் சம்பந்தமாக மேலே நான் எழுதியிருப்பவை 1956-ல் தமிழ்ப் பண்ணை ஆண்டுவிழாச் சொற்பொழிவுகளில் வெளியிடப்பட்ட தகவல்களே.

### தனி மனிதரின் உதவி

இந்தப் போட்டியை அடுத்து நடைபெற்ற மற்றொரு சிறுகதைப் போட்டி, தேவன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியாகும். அப்போது "ஆனந்த விகடன்" ஆசிரியர் தேவன் காலமானதாகச் செய்தி வந்ததும், கோலாலம்பூரில் உள்ள அவரது நண்பரும், சிறந்த இலக்கிய அறிஞருமான கி. மூர்த்தி அவர் கள் தாமாகவே முன்வந்தது, தேவன் ஞாபகார்த்தமாக இரண்டு சிறந்த சிறு கதைகளுக்கு நூறு வெள்ளியும் ஐம்பது வெள்ளியுமாகத் தம் சொந்தப் பொறுப்பில் பரிசு வழங்குவதாக அறிவித்தார். போட்டி நடந்தது. நடுவர்கள் இரண்டு கதைகளைத் தேர்ந்தெடுத்தனர். கி. மூர்த்தி வீட்டில் கு. அ. நடத்திய மாதாந்திர இலக் கிய வட்டக் கூட்டத்தில் பரிசுத் தொகைகள் வழங்கப் பட்டன. சிறுகதை எழுத்தாளர்களுக்கு முதல் முத லாக ஒரு தனிமனிதர் முன்வந்து இந்நாட்டில் பெரிய அளவில் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்திருக்கிறார் என்றால் அந்த முதல்வர் கி. மூர்த்தி அவர்கள்தான். இவர்தான் மாதம் ஒரு முறை தமது இல்லத்தில் சிறு கதை எழுத்தாளர்களின் இலக்கிய வட்டக் கூட்டத்தை கு. அ. தலைமையில் சுமார் ஓராண்டுகாலம் நடத்துவித் தார். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொண்ட ஐம்பதுக்கு மேற்பட்ட வெளியூர் எழுத்தாளர்களுக்குத் தமது இல்லத்திலேயே சொந்தப் பொறுப்பில் உணவும் உறையுளும் கொடுத்து உபசரித்தார். இந்த விதமாகச் சிறுகதை இலக்கிய சேவை செய்த தனிமனிதரும் இந் நாட்டைப் பொறுத்த வரையில் இன்றளவும் கி. மூர்த்தி ஒருவரே.

'தமிழ் முரசு' சில ஆண்டுகளுக்கு முன்பு, சிறந்த சிறுகதைகளுக்குப் பிரமுகர்களின் மூலம் தங்கப்பதக்கம் அளித்து வந்தது. இன்று எந்தப் பத்திரிகையுமே எது வும் செய்யவில்லை.

பத்திரிகைகளும் வசதி படைத்தவர்களும் மனது வைத்தால், இன்று மனம் ஒடிந்து போய்ப் பேனாவைக் கீழே போட்டுவிட்ட சிறந்த எழுத்தாளர்கள் திரும்ப வும் ஊக்கம் பெறவும், இந்நாடு பல சிறந்த தமிழ்ச் சிறுகதைகளைப் படைத்துக் கொடுக்கவும் வழி பிறக்கும்.

### குட்டிக் கதை இலக்கியம்

மலேசியாவில் குட்டிக்கதை இலக்கியமும் தலை தூக்கி வருகிறது. இதை இங்கு முதல் முதலில் அறி முகப்படுத்திய கு. அ. அவர்களைப் பலரும் முன்னோடி யாகக் கொண்டுள்ளனர். 1955 இல் அவர் மொழி பெயர்த்து வெளியிட்ட பல நாட்டுக் குட்டிக் கதைகளைப் பலரும் ஆவலோடு படித்தனர். பின்னர் இத்துறை பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் அவர் தமிழ் நேசனில் வெளியிட்டு, ஒரு குட்டிக் கதை எப்படி அமைந்தால் நன்றாய் இருக்கும் என்பதைம் பலரும் அறியச் செய்தார். அது சம்பந்தப்பட்ட பல நூல் களையும் படிக்கச் சொல்லி ஆர்வத்தையும் வளர்த்து விட்டார்.

'தாசரதி,' மெ. அறிவானந்தன், கா. பெருமாள், கரு. சொக்கன், சாமி. மூர்த்தி போன்றவர்கள் இத் துறையில் நல்ல ஈடுபாட்டைக் காட்டி வருகின்றனர்.

'சங்கமணியில்' தி. சு. ஷண்முகம் எழுதிவந்த குட்டிக் கதைகள், தோட்டத் தொழிலாளருக்கு வாழ் வியல் துறையில் புதிய விழிப்பை ஏற்படுத்தியது.

### முடிவுரை

மூன்று இனங்கள் கூடி வாழக்கூடிய மலேசிய சிங்கப்பூர் நாடுகளில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள், நாட்டுச் சிந்தனையும் ஒருமைப்பாடும் ஒன்று பட்டு விளங்கக்கூடிய தேசிய படைப்புக்களை மேன் மேலும் புதுமையுடன் தர முயற்சி செய்ய வேண்டும். அரைத்த மாவையே அரைக்க முயலாமல், புதிய சிந்தனையை வளர்த்துக் கொண்டு, புதுமையான கோணங்களில் பேனாவைத் திருப்ப வேண்டும். இங்கு படைக்கப்படும் பலருடைய கதைகளின் ஊர் பேரை மாற்றி விட்டால், எங்கோ தமிழ் நாட்டுக் கிராமத்தில் மட்டும் நடை பெறக் கூடிய கதைகளாகச் சாயம் மாறுவதைக் காண் கிறோம். இந்தப் போக்கு முற்றிலும் மாறியே தீர வேண்டும்.

இடைக்காலத்தில் தேக்க முற்றிருந்த மலேசியச் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சி, இப்போது இங் குள்ள சூழ்நிலைகளைப் பயன்படுத்தித் தமிழ் இயக்க மாகவும் இலக்கியப் பண்ணையாகவும் 'பச்சை கட்டி' வருகிறது. இந்த நம்பிக்கை தெம்பையூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

தமிழகத்தில் தலை சிறந்த உரம்

## பி. எஸ். ஜி. ஆர். பிராண்டு

'சூபர்பாஸ்பேட்' & 'கலப்புரங்கள்'

என்பதில் வியப்பொன்றுமில்லை.

தயாரிப்பாளர்கள்:

கோயமுத்தூர் பயனீர் பெர்டிலைசர்ஸ் லிட்.,

முத்துக்கவுண்டன் புதூர் அஞ்சல்,

(வழி) திருப்பூர்—2.

டெலிபோன்: 414, 415, 416. தந்தி: "ஆண்டவர்"

## பழனி ஆண்டவர் மில்ஸ் லிமிடெட்,

உடுமலைப்பேட்டை.

தரத்திற்கும் உறுதிக்கும் தலை சிறந்தவை எங்கள்,
100, 80, 60 நெ. கோம்ப்டு கோன் & பாவு நூல்
39 (ஸ்பெஷல்) 20 நெ. பனியன் தொழிலுக்கென்றே
தயாரிக்கும் கோன் நூல். 2/17 பாவு நூல்.

| | |
|---|---|
| டெக்ஸ்மார்க் | 634 |
| இயங்கும் கதிர்கள் | 48,800 |
| டப்ளிங் | 3,600 |

மானேஜிங் ஏஜண்ட்ஸ்.

பாக்யலஷ்மி & கம்பெனி

உடுமலைப்பேட்டை.

# வில்லிசை

ச. பா. பிச்சைக்குட்டி

வில்லுப்பாட்டு, வில்லடிப்பாட்டு என்று நாட்டுப்புறத்து மக்களால் அழைக்கப்படும் வில்லிசைக்கலை தென்பாண்டிநாட்டில் தலைசிறந்த கிராமியக் கலையாகும். மணிகள் பொருத்தப்பட்ட நீளமான வில்லைப் பிரதானமான தாளக்கருவியாகப் பயன்படுத்தி நிகழக்கூடியதால் இக்கலை வில்லிசைக்கலை என்று பெயர் பெற்றது. சிறு தெய்வ வழிபாட்டுக்கு இன்றியமையாததாக இக்கலை கருதப்படுகிறது. வழிபடும் தெய்வத்தைப்பற்றிய சரித்திரங்களை வில்லிசைப் புலவர் பாட அதைக் கேட்டுப் பக்திப்பரவசமும் ஆவேசமும் அடைந்த மக்கள் தம்மை மறந்து ஆட்டபாட்டத்துடன் தெய்வ வழிபாடு செய்வதை இன்னும் காணலாம். வில்லுப்பாட்டு இல்லாமல் சிறு தெய்வங்களுக்குக் கொடைச் சிறப்புக்கள் நடை பெறுவதில்லை.

பண்டைக்காலத்தில் வில்லும் அம்பும் சிறந்த படைக்கலங்களாகக் கருதப்பட்டன; வேட்டையாடவும் தங்களை மிருகங்கள் எதிரிகள் ஆகியோரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் சிறந்த போர்க்கருவியாக வில்லைப் பயன்படுத்தி வாழ்ந்தார்கள் பண்டைய மக்கள். புராண இதிகாசங்களில் வரும் வீரபுருஷர்கள் எல்லாம் கையில் வில்லும் முதுகில் கட்டமைந்த அம்புறுத் துணியுமாக காட்சியளிக்கிறார்கள் அல்லவா? இந்த வீரபுருஷர்கள் யுத்தத்திற்குத் தயாராகும் போது தங்களுடைய வில்லில் கட்டியுள்ள நாணை இழுத்துவிட்டு ஒலி கிளப்புவார்களாம். இராமனுடைய வில்லின் நாணொலியை "என்று கேட்பேன்" என்று அசோகவனத்தில் சிறையிருந்த செல்வி ஏங்குவதையும், அருச்சுனன் காண்டீபத்தின் நாணொலியைப் பற்றி பாரதக் கதையில் சிறப்புப் பெறக் கூறப்பட்டுள்ளதையும் நாமறிவோம்.

வில்லின் நாணொலியை நமது மக்கள் கேட்டு ஆனந்தித்துள்ளார்கள். பிற்காலத்தில் வெண்கலம் போன்ற உலோகங்களினால் ஆக்கப்பட்ட சிறிய சதங்கைகளை வில்லின் இரண்டு நுனிகளிலும் பொருத்திக் கொள்ளும் வழக்கம் வந்தது. வெற்று நாணொலியை விடச் சதங்கைகள் பொருத்தப்பட்ட பின்னர் நாணினுடைய அதிர்ச்சி சதங்கைகளில் பரவ அதனால் எழுப்பப்படும் நாதமும் நாணொலியும் சேரும்போது மிகவும் இங்கிதமான இனிய ஓசை கிளம்பலாயிற்று. வேட்டையாடிக் களைத்த சமயங்களிலும் கூட்டமாக

இருந்து கேளிக்கையாகப் பொழுது போக்க விரும்பிய காலங்களிலும் சதங்கைகள் பொருத்தப்பட்ட வில்லில் நாணைத்தட்டி ஓசையெழுப்பிக் கொண்டே பாட்டுகள் பாடி ஆனந்திக்கத் தொடங்கினர்கள். இப்படி ஏற்பட்ட அனுபவம்தான் பின்னர் தங்களுக்கு நன்கு பழக்கப்பட்ட தாளக்கருவிகளாகிய குட முழவு, உடுக்கு, தாளம், பம்பை ஆகியவற்றையும் இணைத்து கூட்டு இசையாக மலரச் செய்தது.

பழைய போர்க்கருவியாக இருந்த வில்லை சற்றே பெரிதாக்கி அதன் முதுகுப்புறத்தில் பெரிய சதங்கைகளைப் பொருத்தி அசல் கலைக் கருவியாக்கி விட்டார்கள். கொலைக்கருவியாக இருந்த வில், கலைக்கருவியாக மாறின கதை இதுதான்.

வில்லிசைக்குப் பயன்படும் 8 முதல் 10 அடி நீள முள்ள வில், கூந்தல் பனை அல்லது மூங்கில் கழியினால் செய்யப்படுவது. முதுகுப்புறத்தில் எலுமிச்சை முதல் நாரத்தங்காய் வரை அளவுள்ள சதங்கைகள் பொருத்தப்பட்டிருக்கும். வில்லை வளைத்து இரண்டு நுனிகளையும் சேர்த்து இழுத்து நிற்கும் நாண், நரம்பு அல்லது தோலினால் செய்யப்படுவதாகும். திருநெல்வேலிச் சீமையில் வாழவல்லான், காரகுறிச்சி முதலிய சிற்றூர்களில் தயாராகும் குடங்களே மிகவும் சிறப்பானவை. வில்லின் வலது கோடியில் கதைபாடக் கூடிய புலவர் உட்கார்ந்திருப்பார். அவர் கையிலுள்ள இரண்டு கழியினால் (வீசுகோல்) வில்லின் நாணைத் தட்டிக் கொண்டு பாடுவார். குடத்திற்குப்பக்கத்தில் சற்று உயரமான ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு மற்றொருவர் குடத்தின் வாயில் டேபிள் டென்னிஸ் மட்டை போன்ற பத்தியினால் அடித்து ''பொம்'' ''பொம்'' என்று ஓசை எழுப்புவார். அத்துடன் உடுக்கு, ஜால்ரா, கட்டைத்தாளம் ஆகியவைகளும் சேர்த்து ஒலித்து ஒரு ஒலிப்பிரளயத்தையே உண்டாக்குவர். இந்த வாத்தியங்களுடன் பம்பை என்ற ஒரு வகை வாத்தியம் அக்காலத்தில் பயன்பட்டு வந்துள்ளது. தற்போது அத்தாளக்கருவி பயன்படுவதுமில்லை. அதனுடைய வடிவமும் யாருக்கும் புரியவில்லை.

### வீரர் சரித்திரங்கள்

பண்டைக்காலத்தில் மக்கள் வீரம் செறிந்த வாழ்க்கையுடையவர்கள். வீரத்துக்கு அதிக மதிப்புக் கொடுத்தார்கள். சமூகத்தின் பொதுநலனுக்காக வீரசாகசச் செயல்கள் புரியும் வீரர்களைத் தங்கள் தலைவனாகத் ஏற்றுக் கொள்ளுவது வழக்கம். அவ்வாறு பொதுநலன்கட்காகப் பெருவீரர்களாக சேவைசெய்து அந்த சேவையில் உயிர்துறந்த வீரர்களின், தியாகிகளின் நினைவாய் எல்லைக்கற்கள் (நினைவுச் சின்னம்) நாட்டி அவர்களைத் தெய்வமாக விளக்குவது மரபு. அந்த வீரர்கள் தெய்வமான (உயிர் நீத்த) நாளை ஆண்டுக்கொருமுறை சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். அவ்வாறு எடுக்கப்படும் விழாக்கள் கொடை அல்லது சிறப்பு என்று அழைக்கப்படும். இவ்வாறு கொண்டாடப்படும் விழாக்காலங்களில் வணக்கத்துக்குரிய அந்த தெய்வமாக வீரருடைய சரித்திரத்தை வில்லிசையின் மூலம் பாடச் செய்து மக்கள் அனைவரும் பயபக்தியுடன் கேட்டு அனுபவிப்பது இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.

இவ்வாறு தமிழகத்தில் நிலவி வரும் கதைகளில் முத்துப்பட்டன், மதுரை வீரன், சின்னத்தம்பி, மந்திரமூர்த்தி ஆகியோரது கதைகள் மக்களால் பெரிதும் விரும்பப்படுபவை. இவற்றுடன் வல்லரக்கன் கதை, சுடலைமாடன் கதை, அம்மன் கதை ஆகிய தெய்வங்களைப் பற்றிய கதைகளும் பிரபலமானவைகளே. மொத்தத்தில் பாடப்பெற்றுவந்த கதைகள் அனைத்துமே ரத்தக்கறைபடிந்த சோகக்கதைகளே என்று சொல்லாம். இக்கதைகளில் நாட்டுப்புற மக்களின் ரசனைக்கு ஏற்பப் பழகு தமிழில் சிறந்த கவிதை நயத்தோடு பெரும் புலவர்களும் அதிசயக்கத்தக்க முறையில் பாடல்கள் வருவது பாராட்டற்குரியதாகும். உதாரணத்திற்கு முத்துப்பட்டன் கதைப் பாடல்களைப் பார்ப்போம். அவன் கொள்ளைக்காரர்களால் கொலை செய்யப்பட்டுக்கிடக்கிருன். அவனுடைய மனைவியர் இருவரும் அழுது புலம்புகிருர்கள். இந்தக் கட்டம் வரும்பொழுது வில்லிசைப் புலவர் தமது உச்சகட்டக் குரலில் சோகம் பெருக்கெடுக்கும்படி பாடுவார்.

நேற்றுக்காலையில் கல்யாணம்; இன்று காலையில் மரணச்செய்தி.

பந்தலின்னும் பிரிக்கலையே!
வந்தசனம் போகலையே!
கொட்டவந்த மேளத்துக்கு
கொத்தளந்து கொடுக்கலையே!

பணியாரஞ் சுட்டசட்டி
பாதிமணம் மாறலையே!

மஞ்சள் புடவையதை
மடித்துடுக்கும் வேளையிலே
கஞ்சிப்புடவை எங்கள்
கழுத்தில்விழத் தலைவிதியோ?

இந்தப்பாடல்களைப் புலவர் உருக்கமாய்ப் பாடும் பொழுது கண்ணீர் விடாதவர்களைக் கூட்டத்தில் பார்க்க முடியாது.

இப்படிச் சிறு தெய்வக் கதைகளைப் பாடி வந்த சில புலவர்கள் இராமகாவியம், பாரதம் போன்ற பெருங்கதைகளையும் பல நாட்கள் தொடர்ந்து பாடி மக்களை மகிழ்விக்கும் திறமையைப் பெற்று வாழ்ந்துள்ளனர்.

என்ருலும் இக்கலையைக் கையாண்டு வந்துள்ள புலவர்கட்கு முறையான பயிற்சியும் விரிந்த உலகியல்

அறிவும் இல்லாமல் கர்ணபரம்பரையாக மற்றவர்கள் பாடுவதைக் கேட்டுக் கேட்டுக் பழகித் தாங்களும் புலவர்களாகும் வழக்கம் ஏற்பட்டு விட்டதால் கலையின் தரம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. வில்லிசைக் கலை, படித்தவர்கள் - நாகரிகமானவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் - கேட்கத் தகாத ஒரு பட்டிக்காட்டு—அநாகரிகமான கலையாக இடைக்காலத்தில் கருதப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட நிலை உண்டாகிவிட்டது.

## புத்துயிர் கொடுத்தவர்

இந்நிலையில் காலஞ்சென்ற கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இந்தக் கலையின் மேன்மையைப் புரிந்து கொண்டு இதை உலகத்திற்குத் துலாம்பரமாகக் காட்ட வேண்டுமென்று நிழற்படக் காட்சிகளில் தாமே வில்லுப்புலவராக நடித்து நிகழ்ச்சிகள் செய்து காட்டினார். புதுமையான கதைகளையும் நவீனக்கதைகளையும் கூட வில்லிசை நிகழ்ச்சியாக்கிச் சிறப்புறச் செய்ய முடியும் என்று நிரூபித்து காந்திமகான் கதையை அவரே வில்லுப்பாட்டாக்கி தமிழ் நாட்டின் பல இடங்களிலும் பாடிக்காட்டினார். நெல்லை, குமரி ஆகிய இரு மாவட்டங்களிலும் தேங்கிக் கிடந்த இக்கலையை தமிழ்நாடு முழுவதும், ஏன், உலகம் முழுவதற்குமே அறிமுகப்படுத்திய பெருமை கலைவாணர் அவர்களையே சாரும்.

பள்ளி ஆசிரியனாக இருந்து கொண்டு பள்ளி மாணவர்களைக் கொண்டு ஒரு வில்லிசைக்குழு அமைத்துப் பள்ளி விழாக்காலங்களில் மட்டும் பாடச் செய்த எனக்கு அந்த மாணவர் குழுவுக்கு வெளியுலகில் ஏற்பட்ட அறிமுகமும் பெரியோர்கள் காட்டிய ஆதரவும் ஆச்சரியமாகவே இருந்தது. காலஞ்சென்ற மேதை ரசிகமணி டி. கே. சி. அவர்கள் என்னிடம் காட்டிய பரிவு சொல்லுந்தரமன்று. கவிதைகளை அனுபவிக்கவும் மற்றவர்கட்கு எடுத்துச் சொல்லும் முறையையும் எனக்குப் பிச்சை கொடுத்தவர்கள் அவர்கள் தான். என்னை மேலும் வில்லிசைக் கலையில் ஈடுபடச் செய்து சமயம், இலக்கியம் சார்புடைய நல்ல காவியங்களை வில்லிசையாக்கச் செய்து தாம் கேட்டு மகிழ்ந்ததுடன் ஏனையோரையும் கேட்கவைப்பதற்காக அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். காலஞ்சென்ற 'கல்கி' அவர்கள், பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள், தமிழ்வேள் பி.டி. இராசன் அவர்கள், முன்னாள் அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் அவர்கள் ஆகிய பெருமக்கள் என்னிடம் காட்டிவரும் பேரன்புக்கும் என்னுடைய நலன்களைவிட என்னால் கையாளப்பட்டு வரும் வில்லிசைக் கலையின் வளர்ச்சிக்கு அவர்கள் காட்டிவரும் அக்கறைக்கும் நான் மட்டும் என்ன, வில்லிசைப் புலவர்கள் அனைவருமே கடமைப் பட்டுள்ளோம். சமயக்கருத்துக்களை மிகவும் சிறந்த முறையில் நயம்பட வில்லிசைக்கலை மூலம் பரிமாறும் வல்லமையையும் வாய்ப்பையும் எனக்கு நல்கியவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்று சொல்ல வேண்டும். திருவாவடுதுறை ஆதீன கர்த்தரவர்கள் சமயப் பிரசாரத்துக்காக என்னைப் பயன்படுத்தி வருவது இன்னும் சிறப்புடையதாகும்.

கிராமியக் கலைகளை நல்ல முறையில் வளர்த்து அவற்றைப் பயன்படுத்தி நமது பண்பாடுகளைக் காப்பாற்றி வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி ஆண்டுதோறும் அகில பாரதத்திலும் உள்ள கிராமியக் கலைஞர்கள், இசைஞர்கள், ஸ்தபதிகள், அர்ச்சகர்கள், வேதவிற்பன்னர்கள் ஆகியோரைக் கூட்டிவைத்து ஒவ்வொரு துறையிலும் ஆக்கம் காண அருந்தொண்டாற்றி வருபவர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்கள் என்று அழைக்கப்படும் தவச்செல்வர், ஞானசீலர் ஆவார்கள். வில்லிசைக்கலை வளர அவர்கள் கொண்டுள்ள பேரருள் மகத்தானதாகும்.

## கற்கும் விருப்பம்

இக்கலையைக் கற்றுக் கொள்ளத் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் பலர் விரும்புகிறார்கள். நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் என்னிடம் தொடர்பு கொண்டு அவர்கள் விருப்பத்தை வெளியிடுகிறார்கள். நான் அவர்கட்கு என்ன கற்றுக் கொடுப்பது? இக்கலையில் கையாளப்பட்டுவரும் பண்கள் பற்றிய ஆராய்ச்சியில் இதுவரை எவரும் ஈடுபட்டதில்லை. சிறந்த இசைக்கலைஞர்கள் ஒத்துழைப்புடன் இப்பண்களை ஆராய்ந்து அவற்றைக் கர்நாடகத்துறையில் முறைப்படுத்தி குறைந்தபட்ச இசையறிவுள்ளவர்களும் இலகுவில் புரிந்து கொள்ளும்படி அந்தப் பண்களை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்துவதுடன் இக்கலையில் கையாளப்பட்டுவரும் தாளக்கருவிகள், அவற்றின் அமைப்பு முறைகள் ஆகிய எல்லாக் குறிப்புகளும் தெளிவாக வெளியிடத்தக்க ஒரு நூலை வெளிக்கொண்டு வந்து விட்டால் எனது வாழ்வின் லட்சியம் கைகூடியதாக ஒரு நிம்மதி எனக்கு ஏற்படும். அதற்குரிய வாய்ப்பும் தெம்பும் எனக்கு அருள இறைவனைப் பணிவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்?



TVS

MADRAS AUTO SERVICE

Market Automobile

Spares of

Enduring Service

and thus

Help Reduce

Road Transport

Cost

MADRAS AUTO SERVICE (P) LIMITED.,
MADRAS :: BANGALORE
VIJAYAWADA.

*With the best compliments of:*

RANE (MADRAS) LIMITED
MADRAS-32.

Manufacturers of:

'QUINTON HAZELL RANE'
TIE ROAD ENDS
'EHRENREICH'
STEERING LINKAGES
AND
'DON-FLEX' CLUTCH DISCS

## ‘எங்கள்மால், இறைவன், ஈசன்’




‘கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்(டு)
உடல்எனக்(கு) உருகு மாலோ !.........................!’

—தொண்டரடிப்பொடியாழ்வார்

[பெல்லாரி ஜில்லா ஹொலேலு சிற்பம் : 16–ம் நூற்றுண்டு]

# 'நிறைகால் வழங்கு சிறையான்'

'விசையால் அனுங்க வடமேரு, வையம் ஒளியால் விளங்க, இசையாத்
திசையானை கண்கள் முகிழா ஒடுங்க நிறைகால் வழங்கு சிறையான் !'

—கம்பர்

[மைசூர் ராஜ்யத்தில் பாதாமிக் குகையில் உள்ள கருடன் சிலை]

# கயிலாய மலையைப் பெயர்க்கும் இராவணன்

'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி'
—கம்பர்

[எல்லோராச் சிற்பம்]

# இராவணனேடு போரிடும் ஜடாயு



'வந்தனன் எருவையின் மன்னன்; மாண்பிலான்
எந்திரத் தேர்செல(வு) ஒழிக்கும் எண்ணினன்' —சம்பர்

[எல்லோராச் சிற்பம்]

# சிவகாம சுந்தரி



ஆடும் மருட்கொண்டிங்(கு)
அம்பலத் தேநிற்கும் ஆண்டிதன்னை
தேடும் கணக்கென்னகாண்
சிவகாம சுந்தரியே !
—பட்டினத்தார்

[பனைமலைச் சுவரோவியம் : பல்லவர்காலம்]

# நாட்டிய மங்கை

'சூடக முன்கையில் வால்வளை கண்டிரு
தோள்வளை நின்ருடப்—புனை
பாடக மும்சிறு பாதமும் அங்கொரு
பாவனை கொண்டாட—நய
நாடகம் ஆடிய தோகை மயில்'

—குற்ருலக் குறவஞ்சி

[தஞ்சைப் பெரிய கோவில் சுவர்ச்சித்திரம் : 11-ம் நூற்ருண்டு]



‘வந்தொத்துத் துருத மாக்கள் விளம்பின நெறிவ ழாமல்

கந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம்...........’ —கம்பர்

[தஞ்சைப் பெரிய கோவில் சுவர்ச் சித்திரங்கள் : 11-ம் நூற்றாண்டு]

# வெறி கொண்ட காளித் தாய்!

பேயவள் காண்எங்கள் அன்னை;—பெரும்
பித்துடை யாள்எங்கள் அன்னை;
காயழல் ஏந்திய பித்தன்—தனைக்
காதலிப் பாள்எங்கள் அன்னை!

—பாரதியார்

[திருவலஞ்சுழிக் கோவில் சிற்பம்]

# யாத்திரை வாசிகளுக்குச் சில குறிப்புகள்

தொகுப்பு: ஏ. கே. செட்டியார்

[இந்திய நாட்டில் பிரயாணம் செய்த தமிழர்கள் பலர் தங்களுடைய அனுபவங்களைப் பிறர்க்கு எடுத்துரைத்தனர். சிலர் பத்திரிகைகளில் எழுதினர். ஒரு சிலர் தம் யாத்திரை குறித்து நூல் வெளியிட்டனர். தங்கள் தங்கள் அனுபவங்களுக்கேற்ப அவர்கள் புதிதாக யாத்திரை செய்பவர்களுக்குப் புத்திமதிகள் கூறினர். அவற்றைக் கூடிய வரை சேகரித்து •இங்கு தருகிறேன்.]

சேலம் பகடாலு நரசிம்மலு நாயடு
(திவ்விய தேச யாத்திரை சரித்திரம், 1885)

வடதேசத்தில் யாத்திரை செய்ய விரும்புவோர்க்குச் சில விசேஷக் குறிப்புகள்.

1. வடதேசத்தில் விசேஷமாகக் குளிர் அதிகமாகையால் குளிர் காலத்தைப் பார்க்கிலும் உஷ்ண காலமே யாத்திரைக்கு உத்தமம். மழைகாலத்தை விடக் குளிர்காலம் மத்திமம்.

2. யாத்திரை செய்வோர் போதுமான தேகாரூட்டியமும், திரவிய சகாயமும், புருஷ சகாயமும் இருந்தாலன்றி, பெண்டு பிள்ளைகள், விருத்தர், வியாதியஸ்தர் முதலானவர்களை விட்டுத் தாம் மாத்திரம் போய்வருவது உத்தமம். பெண்டு பிள்ளைகளோடு போவது மத்திமம். வியாதியஸ்தர், வியாதியஸ்தர்களைக் கூட்டிக் கொண்டு போதல் அதமம்.

3. வடதேசங்களில் பெரும்பான்மையான பட்டணங்களில் அரிசி, பருப்பு, புளி, முதலான சாமான்களும், பாத்திரங்களும் ஏராளமாக விருப்பதால், அவைகளை இங்கிருந்து வண்டிச் சத்தம் கொடுத்துக் கொண்டுபோவது வீண் செலவும், வீண் வருத்தமுமே.

4. யாத்திரைக்காரர் தமக்கு இன்றியமையாத துணிமணிகளை மாத்திரமே கொண்டு போதல் உத்தமம். அளவுக்கு மிஞ்சிய துணிகளைக் கொண்டு போவோருக்கு வண்டிகளிலும், வாடகை வீடுகளிலும் வருத்தங்களதிகமாகும்.

5. நல்ல கம்பிளி உடைகள், பூட்சுகள், இரவில் தூங்கக் கம்பிளி, படுக்கை, போர்வைக் கம்பளம், பிளேக், பேதி, ஜுரம் முதலிய வியாதிகளைக் கண்டிக்கும் காம்பர்டைன், குளோரடைன், கொயினா, சுக்கு, திப்பிலி, மிளகு முதலான மருந்துகளையும் வேண்டிய வரையில் கூடக் கொண்டுபோதல் உத்தமம்

6. தென்தேசத்துக் கரன்சி நோட்டுகள் (நாணயக் கடிதங்கள்) வட தேசத்தில் விசேஷமாகச் செலவாவது கஷ்ட சாத்தியமாகையால் கூடிய வரையில் ரூபாய் பணங்களையும், சொற்ப நோட்டுகளையும் கொண்டு போதல் உத்தமம்.

7. மணியார்டர் என்னும் சர்க்கார் தபால் நாணயம் இப்போது வழங்குவதால், வேண்டியபோது தமது சொந்த தேசத்து வீட்டுக்காரர்களுக்கும் பந்துக்களுக்கும் தெரிவித்துத் தொகையை (தந்தித் தபால் மூலமாகவும்) பெற்றுக் கொள்ளலாம்.

8. கங்கை, யமுனை, சரயூ, கிருஷ்ணை முதலான நதிகளில் அடிக்கடி முழுகுதலும், சூரிய உஷ்ணம் அதிகரிப்பதற்கு முன் முழுகுதலும் நல்லதல்ல.

9. தீர்த்தக்கரைகளிலும், ஸ்தலங்களிலும், பூஜாரிகள், பண்டாக்கள், கங்கா புத்திரர்கள், கயவாளிகள் அதிகமாக விருந்து கொண்டு பணங்களைப் பிடுங்கி விடுவார்கள். ஜாக்கிரதையாக விருந்து சிக்கனமாகச் செலவு செய்தல் உத்தமம்.

10. யாத்திரைக்காரர் தங்கும் தர்மசாலைகளிலும், சில கட்டடங்களிலும் விபசார ஸ்திரீகளும், திருடர்களும் இருக்கிருர்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை! மேலும், அத்தருமசாலைக்கு அருகிலிருக்கும் கடைகளிலேயே போஜனுதி சாமான்களை வாங்கும்படி கட்டாயப் படுத்துவார்கள். அந்தச் சாமான்களோ அநியாயமும், அதிக விலையாகவுமிருக்கும். ஜாக்கிரதையாக விருத்தல் உத்தமம்.

11. பிரயாணஞ் செய்யும் போதும், மற்றவிடங்களில் தங்கும் போதும், பழைய சாதம், தயிர், மிட்டாய், கொய்யாப் பழம், இலந்தைப் பழம், மாம்பழம், நெல்லிப்பழம், அன்னுசிப்பழம் முதலானவைகளை உண்டால் உடனே வியாதி வரும். மிளகு ரசத்துடன் புதிய சாதம், தேநீர், காப்பிநீர், ரொட்டி முதலானவைகளை மிதமாகச் சாப்பிடுதல் உத்தமம்.

12. இராக்காலங்களில் சீக்கிரம் சாப்பிட்டுக் கட்டிலின் மீது கம்பளப் போர்வையுடன் படுத்துக் கொள்ளுதல் உத்தமம். நெருப்புக் கணப்புச் சட்டியில் குளிர் காய்வதும் நலந்தரும்.

13. காசி, ஆக்ரா, டில்லி, முதலான சில பெரிய பட்டணங்களில் தாசி வேசிகளும், சால்வைத் துப்பட்டாக்களும் சில்லரைச் சாமான்களும் அதிகம். அவைகளை விரும்பாமல் வெறுத்து தூரத்தில் தள்ளுதல் உத்தமம்.

14. வடதேசங்களில் ஒற்றைமாட்டு வண்டி, ஜட்கா வண்டி முதலான சில்லரை வண்டிகள் கிடையா. எக்கா வென்ற ஒக்காத வண்டியும், கோச்சு வண்டிகளுந் தானிருக்கின்றன. கஷ்டத்துடன் கஷ்டப்பட்டு கோச்சு வண்டிகளை வாடகைக்குக் கொண்டு போகுதலே உத்தமம்.

15. வடதேசத்தில் சில்லரைச் சிப்பந்திச் சேவகர்களும், வண்டிக்காரர்களும் பொதுவாக வடதேசத்தார்களில் பெரும்பாலோர் முரடர்களும் முன் கோபிகளுமான படியால், அவர்களிடம் நயமாகவும், மரியாதையாவும் பேசினுல் நன்மை யடையலாம்.

16. வேடிக்கை விநோதங்களையும், ஸ்தல மகத்துவங்களையும் அறிய விரும்பில் அந்தந்த நாடுகளின் சுயபாஷை, இங்கிலீஷ் பாஷை முதலியவை தெரிந்த வழிகாட்டிகளுக்கு யாதாவது சிறிது பொருள் கொடுத்தால் கொண்டுபோய்க் காட்டுவார்கள்.

17. ரயில் வண்டியிற் போவோர், மிட்டாய், சாதம், காய்கறி முதலான பதார்த்தங்களைக் கொண்டு போய்த் தின்று வண்டியை அசங்கியப்படுத்துதலும், சுருட்டுக் குடித்தல், வெற்றிலை போடல், தேகத்தில் போதுமான உடையில்லாதிருத்தல், அடிக்கடி எச்சல் துப்பல் முதலான காரியங்கள் இதர பிரயாணிகளுக்கு அருவருப்பை உண்டாக்கும். யாத்ரீகர் இதனைக் கவனித்தல் உத்தமம்.

## கவித்தலம் துரைசாமி மூப்பனுர்
## ('கங்கா யாத்ரா ப்ராபவம்' 1887)

**நாசிக் :** கலியாணுக்கு 83 மைல் தூரத்திலிருக்கின்ற இந்த ஸ்டேஷனுக்கு வடமேற்கில் 6 மைல் தூரத்தில் நாசிகைப் பட்டின மிருக்கின்றது. இந்நாடு வளமிகுதியுடைத்து. எப்பருவத்திலும் வெயிலும் பனியும் குறைவு மிகுதியின்றி மிதமாக யிருத்தலால் வடதேசத்துப் புண்ணிய க்ஷேத்திரங்களுள் வாசயோக்கியமாயது இந்நாசிகையேயாம்.

எருது பூட்டுவது போலக் கழுத்தில் நுகம் வைத்து குதிரை பூட்டிய டாங்கா வண்டிகளும் தங்க இடங்களும் கிடைக்கும். நாட்டுக் கோட்டையார் சத்திரமு மிருக்கின்றது. நாசிகா வாசிகளாகிய பார்ப்பார் தலைச்சாத்தும் குப்பாயமு முடையவராய்ப் புகைச்சாடு (ரயில் வண்டி) போதரும் போதெல்லாம் ஸ்டேஷனில் காத்திருந்து யாத்திரைக்காரரை அழைத்துச் செல்வர். அவ்வேதியர் வேடத்தாலும் ஒழுக்கத்தாலும் எத்திறத்தாராயினும் குற்றமும் பேராசையு மற்றவர். ஒரு காசு கொடுப்பினும் அதனைப் பெற்று மகிழ்வர்.

நாசிகைக்கு எட்டு மைல் தூரத்திலிருக்கின்ற கங்காப்பூரில் கோதாவிரி நதி, மலையினின்று விழுகின்ற தோற்றம் நேத்திரானந்த மாயிருக்கும். ஆங்கு ஒன்பது கோயில்களிருக்கின்றன. இரண்டு ஜாம நேரத்தில் போய்ப் பார்த்து வரலாம். நாசிகைக்கு ஈசான திக்கில் எட்டு மைல் தூரத்திலிருக்கின்ற சுமார்லீனு குகைகளை நல்ல மார்க்க மில்லாமையால் போய்ப் பார்ப்பாரிலர். நாசிகையிலிருந்து இருபது மைல் தூரத்தில் கோதாவிரி உற்பத்தி ஸ்தானமாகிய திரியம்பகமிருக்கின்றது. அதற்கும் மார்க்கம் நன்ருய் இலது. யாத்திரை செய்வோர் பிணியுடலை அலைக்காமல் இரண்டு மூன்று தினம் வதிந்து சுகப்படுத்திச் செல்வதற்கு இந்நாசிகை தகுந்த இடமாம்.

நாசிகை பட்டினத்துக்குள் யாத்ரார்த்தமாய்ச் செல்வோரில் பயிராகி சந்நியாசி யல்லாதார் தலை ஒன்றுக்கு அணு நான்கு சுங்கம் கொடுத்தல் வேண்டும். ஆறிலொன்றை யன்றி சுங்கமும் அரசர்க்கு உரித்தாயினும் மக்களுக்குச் சுங்கம் வாங்குவது "வேலோடு நின்றானிடு வென்றது போலுங், கோலோடு நின்றானிரவு" என்பதை ஒக்கும்.

எவ்வித அநித வரியாலும் பொருள் பறிக்கக் குசாக்கிர புத்தியுடைய நமது சென்னை அரசாங்கத்தார் மனத்தில் இது தோன்றா நிற்பது ஏழை சனங்களின் தவமகிமையா லென்க. ஸ்ரீரங்கம் ஏகாதசி, தில்லை திருவாதிரை முதலிய உற்சவங்களில் இவ் வரியை விதித்தால் அளவிறந்த பொருள் கைகூடுமே! அந்தோ வியர்த்தாய் விட்டிருக்கின்றனரே.

## யாத்திரை செய்வோர்க்கு (ஓர் விளம்பரம் 1902)

காசி க்ஷேத்திரத்துக்கு யாத்திரை செய்யக் கூடிய சகல பிரபுக்களும், காசியில் தக்க உதவி செய்யக் கூடியவர்கள் இல்லாது கஷ்டப்படுவதை நீக்க வேணுமென்கிற பெரிய நோக்கத்தோடு, நாங்கள் எங்கள் கம்பெனியில் ஒரு டிபார்ட்மெண்டு பிரித்துமேற்கண்டவிஷயமாகவேலை பார்த்து வருகிறோமாகையால், காசியாத்திரை செய்ய வேணுமென்கிற ஒவ்வொருவரும் தாங்கள் புறப்படுவதற்கு முன்னதாகவே எங்கள் கம்பெனிக்கு விபரமான கடிதம் எழுதிவிட்டால் நாங்கள் வீடு முதலானது வாடகைக்கு அமர்த்தி வேலைக்காரர்களை நியமித்து வைத்து ரெயில்வே ஸ்டேஷனில் போய் அழைத்து வரச் செய்து, வேண்டிய சப்ளை செய்து கொடுப்போம்.

இதற்காக எங்களுக்குச் செல்ல வேண்டிய கமிஷனை பில் (Bill) செய்து பெற்றுக் கொள்வோம். முன்னமே எல்லா வசதிகளும் அமைத்து வைக்க வேணுமென்ற எண்ணமிமுள்ளவர்கள் புறப்படுவதற்கு முன்னலேயே ரூபாய் 25/- க்குக் குறையாமல் கம்பெனிக்கு அனுப்புவதோடு தந்தியாலும் தெரியப்படுத்தவேணும். அப்படிச் செய்யாதவர்கள் விஷயத்தில் அவர்கள் வந்து சேர்ந்த பிற்பாடுதான் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

A. M. S. Sundaram Iyer & Co.,
Silk Merchants & General Commission Agents,
D. 4. Door No. 31
Suklabrahmapuri.
BENARES CITY.

'சுதேசமித்திரன்' 20—8—1902
பக்கம் 4.

## சிந்தாத்திரிப்பேட்டை கொ. ஷண்முகசுந்தர முதலியார் (1902) 'காசி இராமேஸ்வர யாத்திரை'

பெஜவாடா: கோபால் ராம்தாஸ் (ஸிகின்டிராபாட் சௌகார்) சத்திரமிருக்கிறது. ரெயிலிருக்கு மிடத்திற்குச் சமீபம். கிருஷ்ணாநதி ஸ்நான கடம் சமீபம். சகல சாமான்களும் கிடைக்கும். சாப்பாட்டிற்குச் சொன்னால் அசைவாளுக்குக் கிடைக்கும்.

இராஜமகேந்திரபுரம்: கோதாவரி ஸ்நான கடம் கோடிலிங்கமிருக்கிறது. ப்ராம்மணாள் சாப்பாடு போடுவார்கள். நாளம் (பிரதர்ஸ்) சத்திரம் வந்தவாளுக்கு மிகவும் உபயோகம்.

கரக்பூர்: ரெயிலிற்கு அருகாமையிலுள்ள ரெயில் கூறையிலிறங்கி சமையல் செய்து சாப்பிட்டோம். அசௌக்யமுள்ள இடம். சாமான் குறைவு. ஒன்றரை மைல் தூரத்தில் ஊருக்குப் போனால் பால் முதலிய சகல சாமான்களும் கிடைக்கும்.

கயா: ராத்திரி பதினொரு மணிக்கு கயா ஸ்டேஷனிலிறங்கி குதுரை வண்டியில் சாமான் ஏற்றிக் கொண்டு சுமார் இரண்டரை மைல் தூரத்திலுருக்கிற கயாவிற்குப் போனோம். வண்டி ஒன்றுக்குக் கூலி அணா ஆறு. யாத்திரைக்காரரை யிட்டுக் கொண்டு போகும் குமுஸ்தாக்கள் ஒருவர்க் கொருவர் சண்டை செய்கிறார்கள். ரெயிலில் சாமானெடுக்கும் கூலியும் அப்படியே.

அலஹாபாட்: கயாவிலிருந்து அலஹாபாட்டிற்கு டிகட் வாங்கி மொகல் சேரியில் இறங்கி அன்று இரவு ஒருமணிக்கு அலஹாபாட்டிற்குப் போனோம். இதற்குப் பிரயாகை எனப்பெயர். ரெயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் 5 மயில் தூரம். இரட்டைக் குதிரை வண்டி. வண்டி 1க்கு ஒரு ரூபாய். காடி வண்டி 1க்கு ரூபாய் அரை. அலஹாபாட் ஸ்டேஷன் கூலியாட்களுக்கு (போர்டர்கட்கு) ஆள் 1க்கு ஒரு அணா. அவர்கள் வருகிறவர்களிடத்தில் கூலி அதிகம் பேசுகிறார்கள். வழக்கம் தெரியாதவர்களிடத்தில் தக்கபடி வாங்குகிறார்கள்.

காசி: அலஹாபாட்டிலிருந்து பெனாரஸ் கண்டோன்மெண்டிற்கு டிகட் வாங்கி அன்றிரவு பெனாரஸ் கண்டோன்மெண்ட் ஸ்டேஷனிலிறங்கினோம். வண்டிக்காரர் கூலி அதிகம் கேட்டபடியால் அன்று ஸ்டேஷனிலேயே இருந்து மறுநாள் உதயம் வண்டி 1க்கு ஒரு ரூபாய் பேசி மூன்று வண்டியில் காசி கேதார கடம் கேரளம் சுந்தர சாஸ்திரி சுப்ரமண்ய சாஸ்திரி வீட்டிலிறங்கினோம். இவ்விடத்தில் யாத்திரைத் தரகர் தொந்தரையும் குரங்குத் தொந்தரையும் அதிகம்.

காசி, கயா, அலஹாபாட் என்னும் ப்ரயாகை இம்மூன்று இடங்கட்கும் பட்டினமிருந்து போய்வர ரெயிலிற்கு ரூபாய் 42. மற்ற செலவு இஷ்டப்படி.

## ஒரு நிருபர் ('சுதேசமித்திரன்' 1902)

காசி ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கும் போதே கங்காபுத்திரர்களைக் காணலாம். யாத்திரைக்காரர்களை அழைத்துக்கொண்டு போக அவர்கள் அங்கே காத்திருப்பார்கள். ஜட்கா வண்டிக்காரர்கள் எப்படி ஒரு குப்பைக் காட்டானை யிழுத்திழுத்து என் வண்டியிலேறு என் வண்டியிலேறு என்று ஆட்டிவிடுவார்களோ, அப்படி அவர்கள் ஒரு பிரயாணியைச் சூழ்ந்து கொண்டு என் வீட்டுக்கு வா என் வீட்டுக்கு வாவென்று உபத்திரவம் செய்வார்கள். கங்கா புத்திரர்கள் என்பவர்கள்தான் காசிப் பிராமணர்கள்.

சக்கிரபுஷ்கரணி தீர்த்தம் சிறந்தது. வெகு அழகான படித்துறைகள் அமைத்து நாலு பக்கமும் வேலியிடப்பெற்ற சதுரக் குளமிது. அங்கே காத்திருக்கும் கங்காபுத்திரருக்குக் காணிக்கை சாதிக்காமல் அத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது.

யாத்ரிகனுல் கொள்ளப்பட்ட கங்காபுத்திரன் வெகு தந்திரமாய் அவனுடைய நிலைமையை விசாரித்து வருவான். கொஞ்சம் பெருமையாயிருக்கட்டுமென்று யாத்ரீகன் படாடோபமாய்த் தற்புகழ்ச்சி செய்துகொள்வது பெருங்கேடாகும். முதலிலேயே இவ்வளவு தர வேண்டுமென்று கங்காபுத்திரன் சொல்லிவிட மாட்டான். பின்னை அவர் யாத்ரீகனை புஷ்கரணியில் ஸ்நானம் செய்யச் சொல்லி, ஒரு தேங்காயை அவன் கையில் கொடுத்து, ஒரு பூமாலையை அவன் கழுத்தில் போட்டு, சங்கல்பம் சொல்வான். இதனிடையில் சர்வ பிராயச் சித்தத்துக்காக 100 ரூபாய் தக்ஷிணை வேண்டுமென்பான். அப்போதுதான் கங்காபுத்திரனுடைய நயவஞ்சகம் விளங்கலாகும். கொடுத்தமட்டில் திருப்தியென்ற கங்காபுத்திரன், அம்பட்டன் பாதிக்ஷவரத்தில் கைவிட்டுப் போனது போல, தக்ஷிணை மொத்தத்தை சாதியென வற்புறுத்துகிறபோது, யாத்ரீகன் என்ன செய்வான்? சங்கல்பம் தடுமாறி தக்ஷிணை பேரம் நடந்துநடந்து வேசாறி முடிவில் அதமம் தலைக்கு 5 ரூபாயாவது வைத்து சமாதானம் சொல்லித் தீர வேண்டுமாம். பிச்சைக்காரனுயிருந்தாலும் தலைக்கு ஒரு ரூபாய் விகிதமாவது வாங்காமல் விடுவதில்லை.

## K. S. M. ('சுதேசமித்திரன்' 1916)

அயோத்திபட்டணத்தில் புளி ஒன்று தவிர, மற்ற இதர சாமான்கள் எதேஷ்டமாய்க் கிடைக்கும். தேங்காயும் மெத்த அபூர்வம். தேங்காய் 1-க்கு விலை 0—2—0. நாட்டுக் கோட்டைச் செட்டிமார் சத்திரத்துக்குச் சமீபத்தில் வசதியான ஒரு பெரிய தர்மசாலை யிருக்கிறது. யாத்திரை போகிறவர்கள் மேற்படி தர்மசாலையில் தாமதிக்கலாம். நபருக்குக் கால்அணு கொடுத்துவிட வேண்டும். ஜலம் கிணற்றில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். குழாய் ஜலம் கிடையாது. நம் தென் நாட்டவர்களுக்கு மேற்படி கிணறுகளில் ஜலம் எடுப்பது கொஞ்சம் கஷ்டமாகவே தெரியும். பட்டணத்தின் மத்தியில் மிக அழகாய்க் கட்டப்பட்ட அயோத்தி இராஜாவினுடைய அரண்மனை யிருக்கிறது. மேற்படி அரண்மனையை யாவரும் போய்ப் பார்க்கலாம்.

## சமலாலயன் (வித்தியாபானு 1911)

தர்க்கீசுவரத்திலிருந்து கல்கத்தாவுக்கு சார்ஜு ரூ. 0—8—6. மறுபடியும் ஜட்காபுரி வந்துதான் கல்கத்தாவுக்கு வேறு வண்டி ஏற வேண்டும். காசியிலிருந்து கல்கத்தாவுக்கு சார்ஜு ரூ. 2—15—9. சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் சார்ஜு ரூ. 28—10—9. சென்னையிலிருக்கும் மிருகசாலையிலுள்ள மிருகங்கள் இவ்விடம் கோடீசுவரர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் பார்க்கலாம். இங்கு தோப்புத் திறவுகள் கிடையா. எங்கும் வீடுகள்தான். இங்கே நாடகக் கொட்டைகள் உள. கொட்டகை ஒவ்வொன்றும் சென்னை சென்றல் போஸ்டாபீஸ் போன்றது. நாடகம் பார்க்க சார்ஜ் புருஷர்களைவிடப் பெண்டுகளுக்கு இரண்டு மடங்கு. கல்கத்தாவில் ஜட்கா வண்டிகள் மாட்டு வண்டிகள் கிடையா. யாவும் கோச்சுவண்டிகளே. அவ்வூர் முனிசிபாலிடியாராலும், வீட்டோர் அநேகராலும் காந்த விளக்குகளால் ஏற்றப்படுகிறது. பெரிய தெருக்களில் ஐந்து நிமிஷத்திற்கொரு தரம் டிராம் வண்டி ஓடிக்கொண்டே யிருக்கும். பளிங்கினுற் கட்டப்பட்ட கொட்டக்காரன் கோவில் பார்க்கத்தக்கது. இதைத்தவிர தங்கத்தினுல் சித்திரமெழுதப்பட்ட கோடீசுவரர் வீடு, கவர்னர் மஹால், பட்டு யந்திரசாலை, காலேஜுகள், இருட்டறை முதலியனவும் காட்சிக்குரிய இடங்களே. மல்லி டிஸ்டிரிக்டில் பாடசாரிகளுக்கிறங்க இரண்டு மூன்று மெத்தையுள்ள வசதியான கட்டிடம் இருக்கிறது. நாட்டுக்கோட்டையார் மடம் மிக வசதியுள்ளது. வாசலில் கங்கையாறு போகிறது. அவர்களைக் கேட்டால் தடையின்றி இருக்கச் சொல்வார்கள். வாடகை கிடையாது. சத்திரத்தில் எங்கு வேண்டுமென்றாலும் இறங்கலாம். வாடகை ஒருநாள் இருப்பினும் அல்லது ஒரு மாதமிருப்பினும் ரூ. 25 அல்லது ரூ. 30 கொடுக்க வேண்டும். இதற்குப் பதிலாக பட்டணத்திற்கு எட்டு மயிலிலுள்ள காளிகட்டம் என்ற ஊரில் இறங்கலாம். அதற்கும் பட்டணத்துக்கும் டிராம் சார்ஜ் அணு இரண்டே. பங்குனி உத்திரத்துக்கு வருஷாவருஷம் புதுக்கோட்டையிலிருந்து இரண்டு ஜதை மேளம் கொண்டுபோய் பதினுயிர ரூபாய் வரை செலவழித்து ஷை உற்சவத்தை நடத்துகிருர்கள். இம் மடத்தாரிடம் அயோத்திக்கும் கடிதம் வாங்கிக்கொள்

ளலாம். நல்லெண்ணெய் இவ்விடம் வாங்கிக்கொள்ள வேண்டியது.

## திருவையாறு பேரி சிவராம சாஸ்திரிகள் ('கங்காயாத்ரா தீபிகை' 1911)

கீழ சமுத்திரக்கரை யோரமாய் செல்லும் ரயில் மார்க்கத்தில் தனுஷ்கோடியிலிருந்து காசிக்கு மூன்ருவது வகுப்பு மெயில் ரயில் சார்ஜ் ரூ. 21-14-0. ஆகிறது. கல்கத்தா வழியாய்ச் சென்ருல் ரூ. 22-7-0. வித்தியாசம் ஒன்பது அணுதான். நேராய் கல்கத்தா வழியாய்ப் போவதில், குழந்தை குட்டிகளையும், மூட்டை முடிச்சுகளையும் பாஷை தெரியாத தேசத்தின் ரயில்வே ஜங்ஷன்களில் இரவு பகலில்லாமல் ஏற்றி இறக்கியும் காத்திருந்து கஷ்டப்பட வேண்டியதில்லை.

சென்னப்பட்டணத்திலிருந்து நேராய் காசிக்குப் போகிறவர்கள் நபர் 1-க்கு கல்கத்தா மார்க்கமாய் மெயில் ரயில் சார்ஜ் ரூ. 17-5-0. கட்டி, சாயரக்ஷை 6 மணிக்கு கல்கத்தா மெயில் புறப்பட்டு மறுநாளில்லை, அடுத்த நாள் காலை பத்து மணிக்கு கல்கத்தாவுக்கு அதாவது 40 மணி தேச காலத்தில் போகிறது. அவிடமிறங்கி ஸ்நான பானம் சமையல் சாப்பாடு முதலியவைகளைச் சாவகாசமாய்ச் செய்துகொண்டு (ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் தர்மசாலை சமயல் செய்து சாப்பிட விடமிருக்கிறது) கல்கத்தா நம்மிந்திய தேசத்தின் பிரதான நகரமானபடியினலும். அவ்விடத்தில் ஹிந்துஸ்தானி பங்காளி பாஷையானபடியாலும் விசாரிப்பது கொஞ்சம் சிரமமாய்த் தோன்றும். இங்கிலீஷ் கற்றறிந்தோர் அவிடம் இவிடத்தைப் பார்க்கிலும் அதிகம். கல்கத்தாவிலிருந்து காசிக்குப் புறப்படுகிற வண்டி இரவு ஒன்பது மணிக்குப் புறப்படுகிறபடியால், இந்திரலோகத்துக்குச் சமானமான இப்பட்டணத்தின் முக்கியமான இடங்களையும் பார்த்துக்கொண்டு ஜாகைக்கு வந்து இராச் சாப்பாடும் செய்துகொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு எட்டரை மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும். கல்கத்தாவில் இரவு ஒன்பதரை மணிக்கேறி காசிக்கு மறுநாள் காலை ஒன்பதரை மணிக்குப் போய்விடுகிறது. ஆகவே சென்னையிலிருந்து சௌகுரியமாய் நான்காம் நாள் போய்விடுகிறது. ஆனல் ரயிலில் உட்கார்ந்து பிரயாணம் செய்யும் மொத்த நேரம் 52 மணி தேசகாலந்தான்.

மேற்படி ரயில்வே ஸ்டேஷன் அட்டவணைப்படி செல்ல கார்க்பூர் ஜங்ஷனிலும் கோமா ஜங்ஷனிலும் இறங்கி ஏற வேண்டும். பாஷை தெரியாதவும், அகாலத்தில் செல்லும்படியானவும் இந்த இரண்டு ஜங்ஷன்களிலும் யாத்திரை வாஸிகள் மேற்படி ஒன்பதணு சாதகத்துக்காக உட்பட வேண்டிய அசௌகுரியங்கள் ஜாஸ்தி. தவிரவும் கர்க்பூர், கோமா ஸ்டேஷன்களில் திருடர்கள் ஜாஸ்தி.

ஆகையால் நம் திராவிட தேசவாசிகள் கார்க்பூரில் இறங்காமல் நேராய் கல்கத்தா மார்க்கமாய் காசிக்குச் செல்லுவதே மிகவும் நல்லது. அநேகர் இதை அறியாமல் கோமா மார்க்கம் சென்று வருந்துகிருர்கள்.

## அ. மாதவையா ('பஞ்சாமிர்தம்' 1925)

பெங்களூருக்கும் மைசூருக்கும் இடையேயுள்ள மத்தூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் காலைப் போசனத்தை விரும்பியபோது, அறுசுவையும், இளஞ்சூடும், நறுமணமும் கூடிய பலவகைக் கறிகளைத் தனித்தனியே வெவ்வேறு பாத்திரங்களில் பெய்து தூய வெள்ளிய அன்னமும், நெய், தயிர் முதலியனவும், ஊறுகாயும் அவ்வாறே வெவ்வேருக அமைத்து, எல்லாவற்றையும் ஒரு பெரிய தாம்பாளத்தின் மேல் வைத்து, இலையினல் மூடி, பிறகு ஒரு சுத்தமான கட்டியான பெரிய வெள்ளைத் துணியினல் சேர்த்துக் கட்டி, ஒரு கூசாவில் குடிதண்ணீரோடு, நானிருந்த வண்டிக்குக் கொண்டுவந்து உதவிய நேர்த்தியையும் பணிக்கையையும் பார்த்தவுடன், மைசூர் ராஜ்யத்தில் பிரயாணம் செய்வோரின் சுக சௌகரியங்களை, இராசாங்க உத்தியோகஸ்தர்களும் பிறரும் எவ்வளவு கவலையோடு கவனித்து வருகின்றனர் என்பது துலங்கிற்று. இந்தியப் பிரயாணிகளும் இத்தனை ஆசார உபசாரங்களோடு ருசியான உணவு பெறுவதை, நான் வேறெந்த ரயில்வேயிலும் கண்டதில்லை.

நாட்டுப்புறத்து நகரங்களில் போல, பெங்களூரிலும் மைசூரிலும், சாதாரண ''ஜட்கா'' வண்டிகளே நடைபெற்று வருகின்றன. இந்த வண்டிகளின் விமரிசையை அதிகம் கூறவேண்டுவதில்லை. உள்ளே உட்காருவோர் பாடு அரிகண்டம் யமகண்டம் பாடுவோர் பாடேயாம். குதிரைகளோ,

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்துஇரண்டு பேர்தள்ள.........
மாதம்போம் காத வழி."

இந்தக் கஷ்டத்தை ஒருவாறு நீக்க நினைந்து, மைசூர் மகாராஜா, "ரப்பர் டயர்" போட்ட, சவாரிக்குச் சௌகரியமான "டாங்கா" வண்டிகளைச் சொந்தப் பணத்திலிருந்து செய்வித்து, அடங்கிய விலைக்கு (ஒரு வண்டியின் விலை ரூ. 200 என்று கேள்வி) ஏழை வண்டிக்காரர்களுக்கு விற்று, தவணைப்படி கிரயத்தை வசூலிக்க ஏற்படுத்தி யிருக்கின்றனராம். இவ்வளவு அற்பமான, ஆனல் பல ஜனங்களுக்குச் சௌகரிய சாதகமான ஒரு விஷயத்தையும், தன் மகோன்னத ஸ்தானத்திலிருந்து கவனித்து, அதற்

கேற்ற உபாயத்தை நாடும் அரசர், தன் தலைநகரை மனோரதப்படி அலங்கரிப்பது அதிசயமன்றே.

### ம. பாலசுப்பிரமணிய முதலியார் B.A. B.L. (நவசக்தி 1928): பிரயாணிகளுக்கு அறிக்கை

தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்குச் செல்ல விரும்புவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியன சில உண்டு.

முதலாவதாக வடநாட்டுக்குச் செல்வோர் மார்ச் அல்லது செப்டம்பர் மாதத்தில் செல்வது உசிதம். மற்றக் காலங்களில் தென்னாட்டைவிட வடநாட்டில் வெயிலின் வெப்பம் அல்லது பனியின் குளிர், அல்லது மழையின் மிகுதியால் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

இரண்டாவதாக, காசி, கயை முதலிய இடங்களில் தமிழ் தெரிந்தவர்கள் இருந்த போதிலும் இந்துஸ்தான் பாஷை தெரிந்த ஒருவரைக் கூட்டிக் கொண்டு போக வேண்டும். வடநாட்டிலுள்ள ரயில்வே, போலீஸ் முதலிய பல இலாகாக்களில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்குக்கூட இங்கிலீஷ் செவ்வையாகத் தெரியாதாகையால் இங்கிலீஷைக் கொண்டு வடநாட்டைச் சுற்றி வருதல் இயலாது.

மூன்ருவதாக, வடநாட்டில் புளி, நல்லெண்ணெய் கிடைப்பது மிகவும் கஷ்டமாகையால், அவைகளை யாத்திரைக்காரர்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.

நான்காவதாக வடநாட்டிலுள்ள அவர்கள் அடிக்கடி சச்சரவு செய்யும் சுபாவமுடையவர்கள். ஆகையால் கடைகளிலும் ஏனைய இடங்களிலும் மிகவும் ஜாக்கிரதையாகவும் தைரியமாகவும் நடந்துகொள்ள வேண்டும். பேசுகிறவன் தைரியசாலி என்று உணர்ந்தால் வடநாட்டான் சண்டையை உடனே நிறுத்தி விடுகிருன்.

ஐந்தாவதாகக் கடலுக்கு வெகு தூரத்தில் உள்ள படியால் பொதுவாக வடநாட்டில் வருட முழுதும் ஒருவகை வறட்சியுண்டு. அதற்காகத் தென்னாட்டவர்கள் பால், தயிர், தண்ணீர் இவைகளை நிரம்ப உட்கொள்ள வேண்டும்.

### ''யாத்ரா மார்க்கம்'' திருச்சி (1930)

காசிக்கும் மேலாகச் சொல்லப்படும் கோகர்ணம் என்னும் சிவக்ஷேத்திரம், இந்தியாவின் மேற்குப் பாகத்தில் அரபிக் கடற்கரையில் உள்ளது.

தென் இந்தியாவிலிருந்து இந்த க்ஷேத்திரத்திற்குச் செல்லும் யாத்ரீகர் மங்களூருக்கு ரயில் மார்க்கமாய்ச் சென்று அங்கிருந்து கப்பலேறி தாத்ரி துறை முகத்தில் இறங்கி, அங்கிருந்து மூன்று மைல் தூரத்தி லுள்ள கோகர்ணத்திற்குச் செல்ல வேண்டும்.

மங்களூர் துறைமுகத்திலிருந்து ஸ்டீமர்கள் தாத்ரி துறைமுகத்துக்கு வாரம் இருமுறை, வெள்ளிக்கிழமைகளிலும், திங்கட் கிழமைகளிலும் செல்கின்றன. துரித ஸ்டீமரில் சென்ருல் பத்து மணி நேரத்தில் தாத்ரி துறைமுகம் சேர்ந்து விடலாம். மங்களூரிலிருந்து தாத்ரிக்கு ஸ்டீமர் கட்டணம் பின்வருமாறு :- 1வது வகுப்பு ரூ. 11 இரண்டாவது வகுப்பு ரூ. 6 மூன்ருவது வகுப்பு ரூ 4-8-0 மூன்ருவது வகுப்பு ரிட்டர்ன் டிக்கட் ரூ 6-8-0.

கோகர்ணத்திற்குச் செல்லும் யாத்ரீகர்கள் மங்களூரிலிருந்து ஸ்டீமரிலோ மோட்டாரிலோ உடுப்பி சென்று அங்குள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானை தரிசனம் செய்து கொண்டு பிறகு கோகர்ணம் செல்லுவது சௌகரியமா யிருக்கும்.

உடுப்பியிலும் கோகர்ணத்திலும் அன்ன சத்திரங்களும் தங்குவதற்கு இடங்களுமிருக்கின்றன.

மங்களூரிலிருந்து உடுப்பிக்கு 30 மைல்.

உடுப்பியிலிருந்து கோகர்ணத்திற்கு 65 மைல்.

### டி. பி. தாஸ்ராவ் பி. ஏ. (இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம் 1932)

பூனுவில் ஸ்ரீ லோகமான்ய திலகர் அரண்மனை என்னும் பெரும் கட்டிடத்தில், லோகமான்னியர் 'மராட்டா' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், 'கேஸரி' என்னும் மகாராஷ்டிர தேசியப் பத்திரிகையையும் அச்சியந்திர சாலையை ஸ்தாபித்து, அப் பட்டினத்திலும் தேசத்திலும் அபூர்வ சக்தியுடன் தேச பக்தியை வளர்த்தனர்.

இக் கட்டிடத்திலுள்ள விசாலமான சபைக் கூடத்தில் ஸ்ரீ திலகர் அவர்களின் உருவச் சிலையையும் நம் தாய் நாட்டிற்காகத் தங்கள் தங்கள் உடல் பொருள் ஆவி முதலியவற்றை திரண மாத்திரமாக மதித்து நினைத்துப் பாடுபட்ட அநேகம் பெரியார்களின் அழகிய உருவப்படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன வாகலின் பூனு பட்டணம் போவோர் இக்கட்டிடத்தைப் பாராது போவரேல் பழம் நீக்கித் தோல் கொண்டவராவர்.

### பாரத் வாஜர் ('பாரத யாத்திரை' 1939)

பிரயாணத்திற்கென நாம் கொண்டு போகும் பணத்தையெல்லாம் ஒரே இடத்தில் வைத்துக் கொள்

ளக் கூடாது. பணத்தைக் காலணு, ஓரணு, இரண்டணு, நாலணுச் சில்லரையாயும், ரூபாய் நோட்டுக்களாகவும் மாற்றிக் கொள்வதவசியம். தாமிர நாணயம் செலவழிந்தபடியெல்லாம் சில்லரை மாற்றிக் கொண்டு அவசர சந்தர்ப்பங்களில் உபயோகிக்க வேண்டும். இல்லையாயின் ரூபாய்க்குப் பதினைந்தணுவும், பத்து ரூபாய் நோட்டுக்கு ஒன்பதே ரூபாயும் சில்லரையாகப் பெற வேண்டிய சந்தர்ப்பங்களேற்படும். சில்லரை கேட்டால் கடைகளில் வட்டம் பிடிப்பதுண்டு.

நாம் பிரயாணம் எவ்வளவுதூரம் செய்யப் போகிரேம், நம்மிடத்திலுள்ள பணமிவ்வளவு என்ற உளவை யாரிடமும் வெளியிடக் கூடாது. ''பணத்துக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?'' என்று சில யாத்ரீகர் அல்லது வேறு யாராவது கேட்கலாம். அப்பொழுது அவர்களிடம், ''வேண்டும் போது தருவித்துக் கொள்கிறேன்—எவ்வளவு தூரம் பிரயாணம் செய்வேனென்று நிச்சயமில்லை'' எனச் சொல்ல வேண்டும். நாம் யாத்திரீகர்களல்லவென நினைக்கும் வண்ணம் நடிக்க வேண்டும். நாம் சாமான்களெவை எங்குள்ளன வென்றே யாருக்கும் தெரியலாகாது. எல்லா விவகாரங்களிலும்-முக்கியமாய் பண விஷயத்தில்–எம்மட்டில் இரகசிய மிருக்கின்றதோ அவ்வளவு மேன்மையுண்டு.

சட்டைப் பையில் இரண்டு, மூன்று சிறிய, பெரிய உள்பைகள் தைத்து அவைகளில் அவசியமான கடிதங்கள், ஒரு நாலைந்து ரூபாய் சில்லரை வைத்துக் கொள்ள வேண்டும், இதில் திருட்டு பயமில்லை. பிரயாணத்தில் அஜாக்கிரதையினுல் தம்மிடமுள்ள எல்லாவற்றையும் பறிகொடுத்து ஈனஸ்திதி யடையும் ஜனங்களை நாம் பார்க்கலாம். ஆதலால் நாம் இரண்டு மூன்று ரூபாய்களை இடுப்பில் வைத்திருந்தால், இப்படிப்பட்ட சமயங்களில் ஒரு ரூபாய் செலவு செய்து ஊருக்குத் தந்தியடிக்கவும், மிகுந்தது பணம் வருமட்டும் செலவுக்கும் மிக உதவியா யிருக்கும்.

மேலும் பிரயாணத்தின் நடுவே இவ்வித நம் தந்தி அல்லது கடிதம் கிடைத்தவுடன் பணமனுப்பும்படி நம்பிக்கையான இரண்டு அல்லது மூன்று பேர்களிடத்தில் வேண்டிய பணம் கொடுத்து ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இது வேண்டியபோது அவர்கள் நமக்குப் பணமனுப்ப அனுகூலமாயிருக்கும்.

தவிர, நம்மிடம் இருக்கும் பணத்தை, தோல் அல்லது துணிப்பையில் அரிசி முதலிய சாமான்களுடன் மறைத்து வைத்திருப்பது மேல். சாமான் பை கெட்டித் துணியில் தைத்துக் கொள்ள வேண்டும். நம் விலாசமுள்ள காகிதம் நாலைந்து வைத்துக் கொள்ளல் நலம். இது நமக்கு வரும் பணத்தை வாங்கிக் கொள்ள தபாற்காரனுக்கோ அல்லது சில சமயங்களில் போலீசார் சகவாச மேற்படின் அவர்களிடத்திலோ நம் அடையாளத்தையும், கௌரவத்தையும் சரிவரத் தெரிவிக்க அனுகூலமாயிருக்கும்.

### மயிலை கொ. பட்டாபிராம முதலியார்
### ('விஷ்ணு தல மஞ்சரி' 1927)

**கும்பகோணம் :** ஸ்டேஷனுக்கு மேற்கே ஒரு மைலில் இருக்கிறது. இது ஒரு பெரிய பட்டணமாகையால் வண்டிகளுண்டு. 18 சத்திரங்களும் 30 ஹோட்டல்களும் 40 கிளப்புகளும் இருக்கின்றன.

**திருக்கண்ணபுரம் :** சத்திரமுண்டு, ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

**திருக்கண்ணங்குடி :** வண்டிகளுண்டு. சத்திரமில்லை; ஹோட்டலுமில்லை. முன் சொல்லி வைத்தால் சந்நிதியில் பிரசாதம் கிடைக்கும்.

**துலைவில்லி மங்கலம் :** (இரட்டைத் திருப்பதி) ஆழ்வார் திருநகரி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஆற்றின் வடகரையில் 2 மைலிலிருக்கிறது. ஆகாராதிகளுக்குக் கையில் சாமான்களிருக்க வேண்டும்.

**தலைச்சங்காடு :** சீகாழியிலிருந்தும், மாயவரத்திலிருந்தும் வண்டிகள் அகப்படும். சத்த மதிகம். சத்திரமில்லை. ஹோட்டலில்லை. சந்நிதியில் பிரசாதம் பெருமாளுக்கே கஷ்டம்.



# A. P. Kaithamalai Gounder,

## SRI VENKATESWAR RICE MILL.

UTTUKULI (P. O.) S. Ry. COIMBATORE Dt.,

★

எங்களுடைய அரிசி ஆலை 1962-ம் வருடம் வேலை துவங்கியது. நாங்கள் அரவைசெய்ய தினம் ஒன்றுக்கு 600 மூட்டை நெல் காயவைப்பதற்கு களமும், அதற்கு உண்டான தொட்டியும், குடோன் வசதியும் உள்ளது. எங்களிடம் நெ. 1 அரவை செய்யும் இயந்திரம் உள்ளது. அந்த இயந்திரம் தினம் 600 மூட்டை காய்ந்த நெல்லை அரவைசெய்யும். மற்றும் நாங்கள் கடந்த 5 ஆண்டுகளாக மாவட்ட கலெக்டர் அவர்களின் கொள்முதல் ஏஜண்டாகவும், உணவுத் தானியக் கார்ப்பரேஷனின் கொள்முதல் ஏஜண்டாகவும் தனிநபர் கணக்கிலும், அரசினர் கணக்கிலும், கொள்முதல் செய்து நெல்லை நல்ல முறையில் அரவை செய்து அரசினருக்கு சப்ளைசெய்து வருக்கிறோம்.

தமிழ் வட்டத்திற்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்!

# கிருஷ்ணபுரச் சிற்பங்கள்

படங்கள் : பி. ரங்கநாதன்

மன்மதன்

மணாளனைச் சுமக்கும் மங்கை

[திருநெல்வேலி மாவட்டம் கிருஷ்ணபுரக் கோவில் சிற்பங்கள்]

# திவ்வியப் பிரபந்தப் பண் இசை

**பேராசிரியர் எஸ். இராமநாதன்**
இசைப் பேராசிரியர்,
மத்திய கர்நாடக இசைக் கல்லூரி,
சென்னை.

ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களே திவ்வியப் பிரபந்தம் எனப்படும். இப்பாடல்களின் தொகை ஏறக்குறைய 4,000 ஆனமையால் இவை நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் பெறும்.

**முதல் ஆயிரம்**

| | |
|---|---|
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு |
| | பெரியாழ்வார் திருமொழி |
| ஆண்டாள் | திருப்பாவை |
| | நாச்சியார் திருமொழி |
| குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி |
| திருமழிசைப்பிரான் | திருச்சந்த விருத்தம் |
| தொண்டரடிப்பொடி | திருமாலை |
| | திருப்பள்ளியெழுச்சி |
| திருப்பாணாழ்வார் | அமலனாதி பிரான் |
| மதுரகவி | கண்ணி நுண் சிறுத்தாம்பு |

**இரண்டாவது ஆயிரம்**

| | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி |
| | திருக்குறுந்தாண்டகம் |
| | திருநெடுந்தாண்டகம் |

**இயற்பா என்னும் மூன்றாவது ஆயிரம்**

| | |
|---|---|
| பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி |
| திருமழிசைப் பிரான் | நான்முகன் திருவந்தாதி |
| நம்மாழ்வார் | திருவிருத்தம் |
| | திருவாசிரியம் |
| | பெரிய திருவந்தாதி |
| திருமங்கையாழ்வார் | திருவெழுகூற்றிருக்கை |
| | சிறிய திருமடல் |
| | பெரிய திருமடல் |

**நான்காவது ஆயிரம்**

| | |
|---|---|
| நம்மாழ்வார் | திருவாய்மொழி |

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்துள் மூன்றாவது ஆயிரம் இயற்பா என்று பெயர் பெற்றமையால் மற்ற மூன்று ஆயிரமும் இசையோடு பாடவேண்டியவை என்பது தெளிவாகும். இவை பண்ணோடு பாடப் பெற்றவை என்பதற்கு உரிய அகச் சான்றுகளைக் கீழே காண்போம்.

பெரியாழ்வார் :

''பண் இன்பம் வரப்பாடும் பத்தருள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவரே''

''இன்னிசை மாலைகள் இப்பத்தும்''

''பண் பல பாடிப் பல்லாண்டு இசைப்ப''

''பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன் பட்டர்பிரான்
சொன்ன பத்தே''

ஆண்டாள் :

''கோதை இன்னிசையால் சொன்ன மாலை''

குலசேகராழ்வார் :

''குலசேகரன் இன்னிசையில் மேவி
சொல்லிய இன் தமிழ் மாலை''

திருமங்கையாழ்வார் :

"கலியனது ஒலி மாலை
அரிய இன்னிசை பாடும் அடியவர்க்கு
அருவினை அடையாவே"

"பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கு
இல்லை பாவங்களே"

"பண்கள் அகம் பயின்ற சீர்ப்பாடல் இவை
பத்தும்"

"தமிழ் இன்னிசை மாலைகள்"

"கலியன தமிழிவை விழுமிய இசையினொடு
ஒலிசொலும் அடியவர் உறுதுயர் இலரே"

நம்மாழ்வார் :

"பண் ஆர் தமிழ்"

"பால் ஏய் தமிழர் இசை காரர்
பத்தர் பரவும் ஆயிரத்தின்"

திருவரங்கத்தமுதனார் :

"பண் தரு மாறன் பசுந்தமிழ்"

பட்டர் :

"மிக்க விறை நிலையும் மெய்யா முயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்
கோன்
யாழின்இசை வேதத் தியல்."

மதுரகவி :

"நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே".

அழகிய மணவாளப் பெருமாளின் ஆசாரிய ஹிரு தயத்தில், "வடமொழி வேதத்திற்கு உதாத்தாதி, பதம், கிரமம், ஜடை, வாக்கியம் முதலியன இருப்பதுபோல திவ்வியப்பிரபந்தத்திற்கும் எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொகை, யாப்பு, பண்ணிசை, தாளம் முதலான செய்கோலம் உண்டு," என்று கூறப்பட்டிருப்பதி லிருந்து இப்பாசுரங்களை பண்ணுடனும் தாளத்துடனும் பாடப்பெற்றன என்பது உறுதியாகின்றது.

திருவரங்கம் கோயிலின் நடை முறையை விளக் கும் "கோயில் ஒழுகு" என்னும் நூலின் கண்,

"திருமங்கை மன்னன் தாம் உண்டுபண்ணிய திரு வாய்மொழி, திருமொழித் திருநாளில் முதலாயிரத் தையும் திருமொழியையும் அத்யயனோற்சவத்திலே திரு வாய் மொழியையும் தேவ கானத்திலே ஏறிட்டு மதுர கவிகளைப் போலே அபிநயத்துடன், சேவித்து, வர ஏற்பாடு செய்ததாக அறிகின்றோம். இன்றும் திருவரங்கம் ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங் களில் திருவாய் மொழியை தாளத்துடன் பாடி அரையர்கள் அபிநயம் பிடித்து வருகிறார்கள்.

"என்னை வருக எனக்குறித் திட்டு
இனமலர் முல்லையின் பந்தர் நீழல்
மன்னி அவனைப் புணரப் புக்கு
மற்றுஎன்னைக் கண்டு உறழா நெகிழ்ந்தாய்
பொன்நிற ஆடையைக் கையில் தாங்கிப்
பொய்அச்சம் காட்டிநீ போதி யேலும்
இன்னம்என் கையகத்து ஈங்கு ஒருநாள்
வருதியேல் என்சினம் தீர்வன் நானே"

என்ற பெருமாள் திருமொழிக்கு இராமனுசர், எம்பார் ஆகியோருடைய முன்னிலையில் அரையர்கள் அபிநயம் பிடித்ததாகவும் "என் சினம் தீர்வன் நானே" என்ற இடத்திற்கு இப்படி அபிநயம் செய்ய வேண்டும் என்று எம்பார் திருத்தியதாகவும் வியாக்கியானத்திலிருந்து அறிகிறோம்.

**நாதமுனிகள் :** தெய்வமணம் கமழும் இத்தீஞ் சுவை இசைப் பாடல்கள் ஆழ்வார்கள் காலத்திற்குப் பின் தமிழ் நாட்டில் அருகிப்போகத் தொடங்கின. அந்நிலையில் நாதமுனிகள் திருக்குடந்தைக்குச் சென்ற போது,

"ஆரா அமுதே" என்று தொடங்கும் பாடலைக் கேட்டு அதன் சுவையில் ஈடுபட்டு மெய்ம் மறந்து போனார்.

"உழலையென்பின் பேய்ச்சி
முலையூடு அவனை உயிர் உண்டான்
கழல்கள் அவையே சரணாகக்
கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்ன ஓர்
ஆயிரத்துள் இப்பத்தும்
மழலை தீர வல்லார்
காமர் மான் ஏய் நோக்கியர்க்கே"

என்ற பாடலைக் கேட்டு இதுபோன்ற ஆரயிம் பாடல் கள் இருப்பதையும் இவை நம்மாழ்வாருடைய பாடல் கள் என்பதையும் அறிந்தார்.

உடனே குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்று, ஆழ்வார் அருளினால் நாலாயிரம் பாசுரங் களையும் தேடிக் கண்டார். தம் மருமக்களாகிய மேலை யகத்தாழ்வார், கீழையகத்தாழ்வார் என்னும் இசை வல்லுநர்களைக் கொண்டு இவற்றிற்கு இசை அமைக்கச் செய்தார். ஸ்ரீரங்கத்தில் நின்று போயிருந்த திவ்வியப் பிரபந்தத் திருவிழாவை மீண்டும் தொடங்கி வைத் தார்.

இப்போது கோயில்களில் கோஷ்டியாகத் திவ்வியப் பிரபந்தங்களை ஓதி வரும் முறை உள்ளதே அன்றி பண்

ணுடனும் தாளத்துடனும் பாடும் முறை காணப்பட வில்லை.

முன்னர் எடுத்துக் காட்டியபடி, மூன்ரும் ஆயிரம் தவிர மற்ற மூன்று ஆயிரங்களும் பண்ணுடனும் தாளத் துடனும் பாடப்பட வேண்டியவை. இராமானுசர் காலத்தில் அவ்வாறு நடந்து வந்ததை ஏற்கெனவே சுட்டியுள்ளோம்.

திவ்வியப் பிரபந்தப் பதிப்புக்களில் திருவாய் மொழிக்கு மட்டும் பண்கள் பெயர்களைக் குறித்துப் பதிப்பித்திருக்கிருர்கள். சே. கிருஷ்ணமாசாரியார் பதிப் பிலும், **சந்தமிகு தமிழ் மறை** என்ற பெயரில் கோமடம் ஸ்ரீநிவாசதாசன் பதிப்பிலும் திருவாய் மொழிக்கு மட்டும் பண்கள் காணப்படுகின்றன.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரிடம் இருக்கும்ஏட்டுச் சுவடியில் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிக் கும் (ஒரு சில பாசுரங்கள் நீங்கலாக) பண் அமைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. மர்ரே கம்பெனியார் வெளி யிட்டுள்ள பெரிய திருமொழிப் பதிப்பில் மேற்படி முறையை அச்சிட்டிருக்கிருர்கள்.

**திவ்வியப் பிரபந்தத்தில் பண்கள் :** இசைத் தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ள 103 பண்களில் ஏறக் குறைய 20 பண்களே இங்குக் காணப்படுகின்றன. தமிழ் இசைச் சங்கத்தினர் நடத்திவரும் பண் ஆராய்ச் சிக் கூட்டங்களில் தெளிவு பெற்றவை வருமாறு :—

| பண் | இராகம் |
|---|---|
| நட்டபாடை | நாட்டை |
| இந்தளம் | மாளவகௌளை |
| கொல்லி | நவரோசு |
| தக்கராகம் | காம்போதி |
| புறநீர்மை | பௌளி |
| சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| பழந்தக்க ராகம் | சுத்தசாவேரி |
| தக்கேசி | காம்போதி |
| பஞ்சமம் | ஆகிரி |
| கௌசிகம் | பைரவி |
| காந்தாரம் | நவரோசு |
| நட்டராகம் | பந்துவராளி |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| குறிஞ்சி | அரிகாம்போதி |
| மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| வியாழக் குறிஞ்சி | சௌராஷ்டிரம் |

தேவாரத்தில் காணப்பெருத பண்கள் சில திவ்வியப் பிரபந்தத்துள் உள. அவை யாவன :—

முதிர்ந்த குறிஞ்சி, வியந்தம், பாலையாழ், செருந்தி, நாட்டம், நைவளம், அந்தாளி, தோடி, கவ்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம்.

* **பாலையாழ் :** பரிபாடலிலும் சில பாடல்கள் பாலை யாழ் பண்ணில் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தி லிருந்து இது நாற்பெரும் பண்களில் ஒன்று என்றும் அரிகாம்போதி சுரங்கள் உடையதென்றும் அறிகிருேம். இதனைச் செம்பாலையுட் பிறக்கும் பண்களில் ஒன்ருகக் கொடுத்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

**நைவ்ளம் :** நட்டபாடையும் நைவளமும் ஒன்றே.

**அந்தாளி :** இது அந்தாளிக் குறிஞ்சியாக இருக் கலாம். அதாவது சாம ராகம் ஆகும்.

**தோடி :** இது தமிழ் நாட்டில் மிகவும் விரும்பப் படும் ஒரு இராகம். ஆயினும் தேவாரப் பண்களில் காணப்பெறவில்லை. ஆனல் தமிழ் நாட்டின் பண்டைய இசையில் தோடி உண்டு. ஏழிசைப் பாலைகளுள் ஒன்ருகிய செவ்வழிப் பாலை தோடி சுரங்கள் உடையதே.

செம்பாலையுட் பிறக்கும் பண்களுள் ஒன்ருகத் தோடியைக் கொடுத்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

**கவ்வாணம் :** ''படுமலை பகரிற் கவ்வாணம்'' என்பது நிகண்டு. படுமலை கல்யாணியாகும் என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரிய வருகின்றது.

தேவாரத்தில் கொல்லிக் கவ்வாணம் என்று ஒரு பண் உள்ளது. கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லிக் கவ்வாணம் ஆகிய நான்கையும் நவரோசுவிலேயே பாடுகிருர்கள். கொல்லிக் கவ் வாணம் கல்யாணியாக இருக்கக்கூடும்.

### திவ்வியப் பிரபந்தத்தில் தாளங்கள்

ஏழொத்து, இடையொத்து, நடையொத்து, ஒன்பதொத்து ஆகியவை காணப்படுகின்றன. கதா காலேட்சேபம் செய்பவர்கள் ஏழடித்தாளம் என்று ஒன்றைப் பயன்படுத்துகிருர்கள். ஏழொத்து அதைக் குறிக்கக்கூடும். இடையொத்து உசிதாளத்தையும், நடையொத்து நடை வேறுபாட்டையும் குறிக்கலாம்.

### திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களும், நாட்டியமும்

அரையர்கள் நடனத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம். ''திண் திறல் தோள் கலியன் செஞ்சொலால் மொழிந்த மாலை கொண்டிவை பாடி ஆடக் கூடுவார் நீள் விசும்பே''

''பாடி நின்று ஆடுமின் தொண்டீர்''

முதலிய பகுதிகள் இப்பாசுரங்கள் நாட்டியத்திற்கும் ஏற்றவை என்பதைத் தெளிவாக்கும்.

''மின்ஒத்த நுண்இடை யாளைக்கொண்டு
வீங்கிருள் வாய்எந்தன் வீதியூடே
பொன்ஒத்த ஆடைகுக் கூடல்இட்டுப்
போகின்ற போதுநான் கண்டுநின்றேன்.

* சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம் என்னும் நூலின் கண் இதன் விளக்கம் காண்க.

கண்ணுற்று அவனை நீ கண்ணால் இட்டுக்
கைவிளிக் கின்றதும் கண்டேநின்றேன்
என்னுக்கு அவனைவிட்டு இங்கேவந்தாய்
இன்னம் அங்கேநட நம்பிநீயே.''
''கருமலர்க் கூந்தல் ஒருத்திதன்னைக்
கடைக்கணித்து ஆங்கே ஒருத்திதன்பால்
மருவி மனம்வைத்து மற்றொருத்திக்கு
உரைத்துஒரு பேதைக்குப் பொய்குறித்து
புரிகுழல் மங்கை ஒருத்திதன்னைப்
புணர்தி அவளுக்கும் மெய்யன் இல்லை
மருது இறுத்தாய்உன் வளர்த்தியூடே
வளர்கின்ற தால்உன்தன் மாயைதானே''

முதலிய பாடல்கள் க்ஷேத்திரக்ஞர் பதங்களுக்கு முன்னோடியாக விளங்குபவை. ''குரவை கோத்த குழகனை'' ஆய்ச்சியர்கள் கடிந்துரைப்பதாக உள்ள இப்பாடல்கள் கண்டிதை முதலிய நாயகி இலக்கணத்திற்கு இலக்கியமாக உள்ளன.

சில பழைய பதிப்புக்களில் பண்ணும் இராகமும் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சில வற்றைப் பார்ப்போம்.

**சே. கிருஷ்ணமாசாரியார்** பதிப்பில் உள்ளது:

| பாடல் | பண் | இராகம் |
|---|---|---|
| வேயமரு | பஞ்சமம் | காம்போதி |
| மல்லிகை | பஞ்சமம் | சங்கராபரணம் |
| மண்ணை இருந்து | பஞ்சமம் | பிலஹரி |
| முனியே | பஞ்சமம் | கல்யாணி |
| கோவையார் | தக்கேசி | ஆரபி |
| செஞ்சொற்கவிகாள் | தக்கேசி | தன்யாசி |
| முந்நீர் | சீகாமரம் | முகாரி |
| அந்தாமத்து | சீகாமரம் | பைரவி |
| தாளதாமரை | இந்தளம் | பைரவி |

ஒரே பண்ணிற்கே வெவ்வேறு இராகங்கள் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து இது முறையானதன்று என்பது தெளிவாகும்.

1865-ல் வெளியான பதிப்பில்,

சென்னை ஆழ்வார் சபா பிரசங்கி பரசமய கோளரி ஸ்ரீமான் முடிச்சூர் அப்பாவு முதலியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டும் ஸ்தாபிக்கப்பட்டும் இருந்த ராக தாளங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. பின்னரே பதிப்பித்தவர்கள் அப் பதிப்பிலுள்ளபடியே பெயர்த்து எழுதினர். 200 ஆண்டுகளுக்கு முன்னர் வட நாட்டிலிருந்து நம் இசையில் புகுந்த த்விஜாவந்தி, தேசிய ராகம், யமுனா கல்யாணி போன்ற இராகங்கள் அவற்றுள் காணப்படுவதாலும் இவை பழைய மரபை ஒட்டியவை அல்ல என்பது புலனாகும்.

**கைசிகப்பண் :** திருக்குறுங்குடியில் நிகழ்ந்த ஒரு அற்புதம் கைசிக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் பாணன் ஒருவன் கைசிகப் பண்ணை வாசித்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது. நம்மாழ்வாருடைய ''எங்ஙனேயோ'' என்று தொடங்கும் திருக்குறுங்குடிப் பாடல் கைசிகப் பண்ணில் அமைந்திருப்பதை நோக்கும் போது பதிப்புக்களில் கொடுக்கப்பெற்றிருக்கும் பண் முறை மரபை ஒட்டியது என்று உறுதியாகிறது.

**புறநீர்மைப் பண் :** ''வண்டாகிய பள்ளி உணர்த்து வான் புறநீர்மை என்னும் பண்ணைப் பாட குவளை கண் மலர் போல் விழிப்ப'' என்று அரும்பதவுரையாசிரியர் கூறுவதால் திருப்பள்ளி யெழுச்சிக்குப் புறநீர்மைப் பண் பாடுவது மரபு என்று தெளிவாகின்றது.

**தக்கேசி :** ''தக்கேசி காம்போதி'' என்பது நிகண்டு. பண்ணாராய்ச்சி மகா நாட்டிலும் இது உறுதியாயிற்று. இது இரவுப் பண்.

**தக்கராகம் :** ஓதுவார்கள் இதனையும் காம்போதியில் பாடுகிறார்கள். இது பகற்பண் ஆனமையால் இது காம்போதியாக இருக்க முடியாது.

பிருகத்தேசி போன்ற பழைய நூல்களில் டக்க ராகம் என்பதின் இலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. முத்துசாமி தீட்சிதர் நாயன்மார்களுள் ஒருவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளைப்பற்றி டக்கராகத்தில் ஒரு கீர்த்தனம் இயற்றியுள்ளார். டக்கராகம் மாளவகௌளை யில் பிறந்தது; அல்ப பஞ்சமத்துடன் கூடியது.

**பஞ்சமம் :** ஆஹிரியில் பாடுகிறார்கள். சுரமேள களாநிதி போன்ற இசை இலக்கண நூல்களில் ஆஹிரி ராகம் தற்போதைய கீரவாணியாகும், ஆஹிரி (கீரவாணி)யின் பஞ்சம சுரத்தைக் கிரகம் செய்தால் பஞ்சமப் பண்ணின் சுரங்கள் கிடைக்கின்றன.

| | |
|---|---|
| ஆஹிரி | ச-ரிக-ம-பத-நிச்-ரிக்-ம்-ப் |
| பஞ்சமபண் | சரி$^{1}$-க$^{2}$ம$^{1}$-ப த$^{1}$-நி$^{1}$-ச் |

**இசை அமைப்பு :** தமிழ் இசைச் சங்கத்து பண்ணாராய்ச்சியில் கிடைத்த ஒளியினாலும், சிலப்பதிகாரம், பிங்கல நிகண்டு போன்ற நூல்களின் ஆராய்ச்சி முடிபுகளாலும் தெளிந்து திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் சிலவற்றிற்குப் பண்டைய மரபை யொட்டி இசை அமைக்கப்பெற்றுள்ளது.

**தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளலாகிய நாதமுனிகள்** உள்ளம் உவக்கும் வண்ணம் தெய்வப்பாடல்களாகிய இப்பாக்களை மீண்டும் தமிழ் நாடெங்கும் பண்ணுடன் ஒலிக்கச் செய்யவேண்டும் என்பது எம் பேரவா.

தமிழ் உலகமும் இசையுலகமும் இம்முயற்சியை விரும்பி ஏற்கும் என்பது எம் நம்பிக்கை.

★

# மேகலைச் செய்தி

சு. சாலமன் பாப்பையா

ஆயிற்று; மணிமேகலை நூல் நாட்டிலும் ஏட்டிலும் சப்பரம் ஊர்ந்து சரியாக எழுபது ஆண்டுகள் ஆகிவிட்டன. என்ருலும் என்ன? காட்டில் நிலவொளி; கருங்கடலுள் க(ன்)னித்தீவு; நாட்டு நெறி அறியா நலமற்ற விலங்கிடையே, கவின் காட்டி நின்றதொரு கனிச்சோலை; கொட்டிக் கவிழ்த்துவிடும் குறுமக்கள் தமக்காகக் கட்டிக் கொடுத்து விட்ட கட்டமுது; சட்டி வனப்பிற்கே சதிராட்டம் போடுவார்க்கு வட்டித்து வைத்த வானமுது; எட்டி நடை போடும் எண்ணம் இல்லார்க்குக், குன்றக் குறும் பலவில் கட்டி வைத்த தேனடை......இதுதான் மணிமேகலை நூலின் இன்றைய நிலை.

புத்த சமயத்தைப் பொருளாகக் கொண்டதாலோ, புரியாத தத்துவங்களை விரிவாகவே எழுதி நெறியாகக் காட்டியதாலோ, அந்தச் சமயத்து அங்கங்கள் இந் நாட்டில் மங்கி மடிந்து மறைந்துவிட்ட காரணத்தாலோ, உரை எழுதிக் கரை ஏற்றின் ஊருக்குள் விலை போமோ மாட்டாதோ என்ற உண்மைப் பொருட்பால்(!) துணிவாலோ ஐம்பெருங் காப்பியங்களுள் நடுவணதாக நிற்கும் பெருமையுடனேயே நின்றுவிட்டது இந்நூல்.

4,758 அகவல் வரிகளையும் 30 காதைகளையும் கொண்ட மணிமேகலை நூலின் முகபடாமாகப் பதிகம் விளங்குகிறது. 98 வரிகளைக் கொண்ட அப்பதிகக் குழந்தைக்குத் தந்தை பெயர் இல்லை. 'இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப, (95 வரி) 'வாணிகன் சாத்தன்' இந்நூலை வடித்தான் என்று பதிகம் பகருகிறது. சமணராகவோ, சமயப் பொதுமையாளராகவோ விளங்கிய இளங்கோ அடிகள் புத்த மத தத்துவத்தைப் புகலும் இந்நூலைக் கேட்டு எத்தகைய மனநிலையை அடைந்தார் என்று அவர் எழுத்தாலே விட்டுச் சென்றது விந்தையான ஒன்றே.

கதையால் கருத்தால், சொல்லால் சொற்ருெடரால், வாக்கியத்தால், வரைந்த காதை வகையால் இந்நூலிற்கும் சிலம்பிற்கும் ஒட்டும் உறவும் காணல் பழங்கதை. காதை கண்ட கவிஞர் காண்டம் விட்ட காரணம் கருதத்தக்கது.

## இந்தியாவும் பரதமும்

குமரியும், கொட்டும் பனிக் கோடும் 'கொள்ளை இன்பங் குலவு கவிதையில் எல்லையாக நின்ற செய்தி புறநானூற்றுப் பழமை உடையது. பாரதம், ராமாயணம், புராணங்கள் ஆகிய அனைத்தும் தமிழகத்திற்கும் சொத்தாய், சொந்தமாய் ஆன செய்தியும் சங்க நூற் பழமையே. வடதிசைப் பிறந்து, வழிபல நடந்து, குமரியம் பெருந்துறை ஆடிக் குணக்கேடு போக்கும் கொள்கையும் பறவையிடத்துங் கண்ட பழஞ் செய்தியே, பல்வேறு மொழியினரும் பரந்தொருங்கு ஈண்டி நல்வீறு படைத்த நடப்பினைச் சாதித்த செய்தியும் புதுமை அன்று. ஆனல் இவற்றிற்கெல்லாம் உச்சகட்டமாக

'பாடல்சால் சிறப்பிற் பரதத்து ஓங்கிய'
—பதிகம் வரி 22; 18:57

என்று கூறி இந்தியாவைப் பரதம் என்று பேரிட்டுக் காட்டும் போக்கு இந்நூலிலேயே காணும் புதிய கருத்து ஆகும்.

### பட்டி மண்டபம்

மோதும் ஆடு; ஓடும் மாடு; பொருதும் யானை; போரிடும் வீரன்; பாயுஞ் சேவல்... இந்நிகழ்ச்சிகளையே காணக் கூடிக்களித்த நாட்டில், ஒட்டியும் வெட்டியும் பேசி, கருத்தைக் கட்டி ஆளும் பட்டி மண்டபங்களுக்கு வெட்டுக் கிளியின் படை எடுப்பைப்போல் விரைந்து வரும் சுவைஞர் கூட்டம் கண்டு மகிழ்ச்சி கொண்டு ஆடுபவரும் உண்டு; இகழ்ச்சி கொண்டு வாடுபவரும் உண்டு. நாமோ இலக்கிய விசாரணை செய்ய எல்லாரும் வருவது கண்டு மகிழ்கிறோம். இத்தகைய பட்டி மண்டபங்கள்—வேறு வகை விசாரணைகளைப் பட்டினப்பாலை சொல்லும்—சொன்னால் இன்னும் உண்மையான பட்டி மண்டபங்கள் நடந்ததையும், அதன் நடைமுறை விதிபற்றிய விளக்கத்தையும் இந்த நூலில்தான் முதன் முதலாய்ப் படிக்கிறோம்.

'ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்குஅறிந்து ஏறுமின்;
பற்று மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமுஞ் செய்யாது அகலுமின்'
—1:60—3.

என்ற வரிகள் பட்டி மண்டபத்துப் பாங்கிற்கு இலக்கணம் வகுப்பதை அல்லவா காண்கிறோம்.

சிங்கமும் சிற்றுடும் சேர்ந்தே நீர் அருந்தும் கடவுள் நாட்டுக் கற்பனை கிரேக்க நாட்டு யுலிசிஸ் கதையில் உண்டு. பலஸ்தீன நாட்டு ஏசாயாவின் புத்தகத்தில் உண்டு. மேயும் மானும், பாயும் புலியும், இடிக்கும் எழிலியும், கடிக்கும் பாம்பும் தீமையற்று விளங்கும் நாட்டைப் பற்றிய கற்பனை பெரும்பாணாற்றுப் படையில் மட்டும் அன்று; சிலம்பிலும் உண்டு.

'விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்
கலங்குஅஞர் நரகரும் பேயும் கைவிடும்'
—12:95-6

என்ற மேகலை வரிகள் இந்தக் கருத்துக்களுக்கு எங்கிருந்தோ, எப்படியோ ஓர் ஒட்டும் உறவும் ஏற்பட்டிருக்கின்றன; உலகத்து நல்லார்தம் நெஞ்சில் எல்லாம் இப்படிப்பட்ட ஒரு கற்பனை உலகைக் காணும் விருப்பு நெடுநாளாக இருந்திருக்கிறது என்றும் காட்டுகின்றன.

### எடிபஸ் கதை

கிரேக்கத் துன்பியல் நாடக ஆசிரியனான சோபாக்ளிஸின் எடிபஸ் மன்னன் என்ற நாடகத்தைப் படித்தவர்கள் தாயைத் தாரமாகக் கொள்ள அமைந்த விதியின் சதியை, மதியின் கதியை எண்ணி மயங்குவார்கள்; தியங்குவார்கள். இப்படியும் விதி வினை ஆற்றுமா என்று பதறவும் கதறவும் செய்வார்கள். 'பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை'யிலும் இப்படி ஒரு நிகழ்ச்சி வருவது உண்டு. ஆனால் விக்கிரமாதித்தன் கதையில் வரும் நிகழ்ச்சியை வீழ்த்திச் சோபாக்ளிஸின் நாடக நிலைக்கே நம்மை அழைத்துச் செல்லும் அளவிற்குப் போகும் ஒரு சோக நிகழ்ச்சி—சிறுகதை—மணிமேகலையிலும் உண்டு.

'ஆள்பவர் கலக்குற மயங்கிய நல்நாட்டுக்
காருக மடந்தை கணவனும் கைவிட,
ஈன்ற குழவியொடு தான்வேறு ஆகி,
மான்றுஓர் திசைபோய், வரையாள் வாழ்வுஉழிப்
புதல்வன் தன்னைஓர் புரிநூன் மார்பன்
பதியோர் அறியாப் பான்மையின் வளர்க்க,
ஆங்குஅப் புதல்வன் அவள்திறம் அறியான்
தான்புணர்ந்து அறிந்துபின் தன்னுயிர் நீத்ததும்'
—23:104-111.

என்று வரும் வரிகள் இந்த நாட்டுப் புலவர்களும் எடிபஸ் மன்னனைப் போன்றவர்களை விதி சமைத்திருப்பதைக் கண்டிருக்கிறார்கள் என்று காட்டுகின்றன.

### சோதனைக் கருவி

கற்பனைக்குக் கருப் பொருளாய், அமர காவியங்களுக்கு உயிர்ப் பொருளாய் அமைந்த பெண்டிர், கொடுமையின் தாங்குதளமாகவும் ஆக்கப்பட்டார்கள். நில எல்லையைச் சுடும் கதிரொளி, மனிதனின் மன எல்லையைச் சுடாது போனதால் நெடுங்காலமாகவே உலகெங்கும் பெண்கள் தட்டுமுட்டுப் பொருளாகவே கருதப்பட்டார்கள். நல்லவேளை; தட்டுமுட்டுப் பொருள்களிடமும் பத்தினித் தன்மையைப் பார்க்கவில்லை. ஆனால் 'பெண்டிரிடம் மிக உயர்ந்த பத்தினித் தன்மையை ஆகுதி செய்து ஆற்றலைக் காட்டினார்கள்; பாராட்டுக்குரிய வளர்ச்சியே இது. என்றாலும் இந்தப் பத்தினித் தன்மையைப் பதம் பார்க்க ஒரு சோதனைக் கருவியைக் கண்டு பிடித்தார்கள் பாருங்கள்; அதுதான் பெரிய விந்தை. அதிலும் மணிமேகலை கண்ட கருவியிருக்கிறதே அது புதுமையிலெல்லாம் புதுமை ஆகும்.

'மண்திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிர் ஆயிற் பிறர்நெஞ்சு புகாஅர்'
—22:45-6.

படித்தீர்களா? மூடரின் நெஞ்சச் சந்தையில் மோசங்கள் எத்தனையோ பரப்பப்பட்டிருக்கலாம். அதற்கு ஏதுமற்ற அபலைகள் என் செய்வர்? கற்பைக் கணிக்க மேகலை கண்டு பிடித்த தராசு தமிழிலக்கியத்தில் ஒரு புதிய தராசு ஆகும்.

வறுமை

வாயுவாய், திரவமாய், திடப்பொருளாய் வனப் பெய்திய வையத்திற்கு வடிவ, வடிவற்ற பெருமை களும் உண்டு; சிறுமைகளும் உண்டு. வடிவற்ற சிறுமையாய் நின்று வடிவங்களைச் சிதைக்கும் வலிமை பெற்றவற்றுள் ஒன்று வறுமை. எல்லா வளமும் இருக் கும் நாட்டில், பொல்லா வறுமையின் போக்கினை மாய்க்க, நல்லார் பல்லோர் நாடுதோறும் நடப்பு தோறும் முயன்று முன்னி அயர்ந்து போனார்கள். வெற்றி என்னவோ வறுமைக்கே. இந்த வறுமைக் கொடுமையால் அல்லவா வழியெலாம் கெட்டுப் போகின்றன; 'பத்தும் பறந்திட'ச் செய்யும் பசிக் கொடுமையைப் பறந்திடச் செய்தால் 'இரப்பாரை இல்லாத ஈர்ங்கண் ஞால'மாய் எத்துணைச் செழுமை காணப்படும்; மக்கள் எவ்வளவு நல்லவர்களாக வாழ் வார்கள் என்ற கேள்வி எல்லார் உள்ளத்திலும் எழுவது இயற்கை—அவர்கள் நல்லவர்கள் என்றால், இந்தக் கேள்விக்கு விடைபோன்று ஒரு நிகழ்ச்சியைக் காட்டிச் சிந்திக்கும் மாந்தரிடை வினாவையும் எழுப்பு கிறது மணிமேகலை, பன்னிரு ஆண்டுகள் பாண்டி நன்னாடு பஞ்சத்தைப் பயிர் செய்தது. இறுதியில்

> 'வசித்தொழில் உதவ மாநிலம் கொழுப்பப்
> பசிப்புஉயிர் அறியாப் பான்மைத்து'
> —14:57-8

ஆயது. ஆனபின் உண்டான நிகழ்ச்சி என்ன? உடலைப்பற்றிய வறுமை தீர்ந்த அந்தக் கட்டுப் பாடற்ற உலகத்தில் உள்ளத்தைப் பற்றிய வறுமை தலை தூக்கியது. காமுகர் கூட்டம் பல்கி, சூதாட்ட மும் சொல்லாட்டமும் மல்கிப் பாம்புறை புற்றாய் நாடு மாறியது.

> 'விடரும் தூர்த்தரும் விட்டேற்று ஆளரும்
> நடவை மாக்களும் நகையொடு வைகி
> வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்
> முட்டா வாழ்க்கை முறைமையது ஆக'
> —14:61-64

நாடு விளங்கிய செய்தியை அறிகின்றபோது வறுமைக் கொடுமையை மட்டும் இந்த நாட்டில் ஒழித்து விடுவ தால் வளம் பல்கி விடாது; மக்களின் மன வளர்ச்சி யையும் அதே நேரத்தில் வளர்த்துச் செல்வதாக அமையவேண்டும் நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் என்பதை விளங்கிக் கொள்கிறோம். இன்றைய அரசியல் தலைவர்கள் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்தச் சமுதாயம்

மேகலைக் கதை நடைபெறும் சமுதாயத்தைத் தான் பாருங்களேன். மதமிக்க கதயானை ஒன்று புகார் நகர மக்களைப் புகார் எழுப்ப வைக்கிறது. குதிரையில் ஊர்ந்து கொடுங் களிறு அடக்கிப் பெரு மிதம் ஊர்ந்த உதயகுமரன், நாடக மடந்தையர் நலம் மிகு வீதியில் புகுகிறான். எவ்வளவு பெரிய சிற்றரசன்! அங்கொரு வீட்டில் கணிகை ஒருத்திடன் எட்டி குமரன் என்பவன் யாழொடு மயங்கிச் சாளரம் அருகில் பூவணைப் பள்ளியில் பொருந்தியிருக்கிறான். அவனுக்கும் ஒரு துயரமாம். அழகிய செப்பினுள் அடைபட்ட மலர்போல் நலமது சாம்பும் நங்கை மேகலையின் துயர் இவனை வாட்டுகிறதாம்! இதைக் கேட்ட உதயகுமரன் மலர்வனம் புகுந்த மங்கையை உடனே அணித்தேர் ஏற்றி அழைத்திங்கு வருவேன் என்று அகமகிழ்ந்து செல்கிறான். துயர் தீர்க்க வேண்டிய தூயஉள்ளம் எப்படிச் செயல்படுகிறது பாருங்கள்!......

குறை தீர்க்கும் மன்னன் முறை வழி வந்த குமரன் உவவன மருங்கில் சுதமதியைக் கண்டு, மாதவர் வாழிடம் விட்டு மலர்வன மிதற்குத் தன்னந் தனி யளாய் மேகலை வந்ததன் மர்மம் என்ன? அவளது சிறந்த கயல்விழிகள் செவிவரைச் சென்று மயல் தரும் மதனின் செயல் உரைக்கும் தன்மைய ஆயினவோ என்று கேட்கிறான்!

அவனது தீதுரை மறுத்த மாதுரை (சுதமதி) கேட்ட அரசிளங்குமரன், 'மேகலை குலவொழுக்கம் குன்றிய கோதை'—ஒழுக்கமும் குலமும் எப்படி அறிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன பார்த்தீர்களா?- 'பொருளுக்கு அருள் சுரக்கும் பொய்யாள்' என்று கூறி அவளை இகழ்ந்து செல்கிறான். அவள் பின்னா லேயே திரிகிறான் என்றால் அரசிளங் குமரனை இப்படி உருவாக்கியிருக்கின்ற சமுதாயம் எப்படி இருந்திருக் கும்?

'பாணன் மடிந்தால் யாழுக்கு என்ன வந்தது? அது பிறிதொரு பாணன் கைவழி நின்று பாடாதா என்ன? அத்தகைய யாழின் வாழ்க்கைதான் நம் வாழ்க்கை. பொருளர் பலர்க்குப் பொதுப் பெண்டிர் ஆகுவோம், தாதுண்டென்றால் பூவதில் தங்கி—தனமுண்டென்றால் அவரையே கொண்டு; வறும்பூ ஆகில் வழியது மாறும்—வறுமையர் என்றால் உரி மையை மறுக்கும்; வண்டினைப் போலும் பெண்டிரடி நாம்' என்று பெண் ஒருத்தியே தன்னையும் தன் குலத் தையும் படம் பிடித்துக் காட்டுகிற அளவிற்குச் சமு தாயச் சட்டம் துருப்பிடித்துக் கிடக்கிறது.

'ஆடரங்கு ஏறி அழகினைக் காட்டி, நீடிய பொருளரை நாடிடச் செய்து, அண்டிய அவரைக் கொண்டகம் புகுந்து, தேனெனும் மொழியால் அவரது வான்பொருள் வாங்கி, வண்டினைப் போல வறிதே விடும் கொண்டி மகளிர் யாம். எம்மை எம்குல ஒழுக் கில் நிற்க வைக்க வேண்டுவது நீள்நில வேந்தன் நெறி அல்லவா?' என்று கூறி மணிமேகலையைத்

தன் குல ஒழுக்கில் நிற்கத் துணை செய்யுமாறு உதய குமரனை வேண்டும் சித்திராபதியின் கூற்றில் குல வொழுக்கத்தைக் காக்கக் கொந்தளிக்கும் உள்ளத் தின் கொதிப்பை உணரவில்லையா!

வறுமைக்கு வெறுமை வரச் செய்து, வாட்டத்தை ஒட்டிய வனிதையாம் மேகலை உதயகுமரன் ஒழிய ஒரு துணை ஆனல் என்று உள்ளத்தே கள்ளங் கொண்ட இராசமாதேவி கல்லா ஒருவனை அழைத்துக் காண முங் (பழங்காசு) கொடுத்து, பொல்லாத வழியில் புணர்ந்து, மின் ஊரில் மேகலை நங்கை மேவினுள் என்னை என்று எல்லாரிடமும் எடுத்துரை என்று ஏவுகிருள் என்ருல் இனி அந்தச் சமுதாயப் போக் கினைப் படம் பிடித்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மேகலைக் கதை ஓரரளவவாது நடந்த நடப்பு என்று கொண்டால் இவற்றையும் எண்ணிப் பார்க்க வேண் டும் என்பதற்காகவே இவ்வளவு கூறினேன். அன்று முற்றிலுங் கற்பனையே என்று கண்டாலும் இத்தகைய கருத்துக்கள் பிறக்கச் சமுதாயத்தின் சில சில சூழல் கள் புலவனுக்கு ஏதோ ஒருவகை உந்து சக்தியாக இருந்திருக்கின்றன என்ருவது எண்ணிப் பார்க்க வேண்டும்: இல்லை, இந்தப் பகுதியே தேவையில்லை என்ருல்...

அது என்னவோ இந்நாளைய சினிமாக்காரர் களின் 'மற்றவை வெள்ளித் திரையில் காண்க' என்று கூறி ஆவலூட்டும் விளம்பரத் தந்திரம் சாத்தனுர்க்கு இல்லாது போய்விட்டது. கதைச் சுருக்கத்தை மிகத் தெளிவாகவே கூறிவிடுகிறது பதிகம். யாரோ எவரோ என்ற நினைப்பில் இதனை மறந்துவிடலாம். ஆனல் வருவது உரைக்கும் கந்திற்பாவை (21 ஆம் காதை) முடிவு வரை உள்ள கதையைச் சற்று விரிவாகவே கூறிவிடுகிறது. அதனுல் கதைக்கலத்தில் செல் வார்க்குக் கடல் நோய் வருகிறதோ என்னவோ ஒருவகையான சோர்வு பிறக்கிறது என்பது மட்டும் என்னவோ உண்மை.

### சமயப் பிரசாரம் ; வேற்றுமொழிச் சொற்கள்

பிரசாரம் இல்லாத இலக்கியம் இருக்க முடியுமா ? முடியாது என்ற கருத்தில் சாத்தனுர் சாதித்திருக்கும் சமயப் பிரசாரம் ஒரு காரணம். கடைசி நான்கு காதைகள் சமயப் பிரசாரத்தின் உச்ச கட்டம். அவற்றை விளங்கிக் கொள்ள வகையும் இல்லை: வழியும் இல்லை. தாத்தா உ. வே. சா. வின் உரை கூட நிறைவாக இல்லை. இருப்பதில்லையே மிகப் பெரிய காதையான தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதையை எல்லாம் படிக்கிறபோது கண்ணைக் கட் டிக் காட்டில் விட்ட கதையை உணர்கிருேம். அந்த அளவிற்குக் கருகலான செய்திகள். இது இந்த இலக் கியத்தின் மதிப்பை ஒரு புதிய போக்கிலே புகுந் துள்ளது என்பதால் உயர்த்துகிறது என்றும் கூறலாம்; இலக்கிய வரம்பை மீறுகிறது என்பதால் தாழ்த்து கிறது என்றும் கூறலாம்.

மேகலை ஆசிரியர் சமய தத்துவங்களை விளக்கும் போது மட்டும் பெரும்பாலும் வேற்றுமொழிச் சொற் களையே பயன்படுத்தி இருக்கும் போக்கினைப் பார்க் கும் போது தமிழில் சொல் இல்லாக் குறையா, அல்லது தத்துவம் தமிழுக்குப் புதியதா என்ற கேள்வி கள் எழுகின்றன. இவற்றை அறிஞர்கள் ஆய்ந்து பார்க்க வேண்டும்.

சமயமே தாரக மந்திரமாய்க் கொண்டுவிட்ட காரணத்தினுல் 19-ஆம் காதை வரை இலக்கியச் சுவையில் இணைந்து நம்மை இழுத்துச் செல்லும் ஆசிரியர் அதன் பின்னர் வெறுங் கல்வெட்டுச் சாசனமாகவே செதுக்கி இருப்பதைக் காண்கிருேம். அங்கு, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதாவது ஓரிரு வரிகளில் இலக்கிய உணர்வு மிளிருமே தவிரப் பெரும்பாலும் சுவை குன்றிய பகுதியே மிகுதி. சுவை கொட்டுங் காட்சிகளில்தான்......அடடா!......

### ஒரு பித்தன்

மலர்வனம் புகச் செல்கிருள் மங்கை மேகலை. அங்குமிங்குமாக வேடிக்கை பார்க்கும் கூட்டம். பூம்புகார் வீதியின் பொலிவு மிக்க காட்சி. இதைக் காட்டுவதில்தான் எத்தனை நையாண்டி... பித்தனைக் காட்டுகிருர் பாருங்களேன். 'அலரிப்பூ மாலை அகண்ட தோளில்; மொட்டவிழா எருக்கம் பூமாலை கழுத்திலே; கிழிந்து கந்தலாகிப் போன துணியோடு, உலர்ந்த சுள்ளிகளையும், பூக்களையும் மிடைந்து இடையிலே கட்டியிருக்கிருன். சாம்பலும் சந்தன மும் மேனியை மறைத்திருக்கின்றன. சொல் எப்படி ? சொல்ல முடியாது; அவ்வளவு நல்ல சொற்கள்! இவற்றைப் பலரிடமும் பேசித் திரிகிற அவன் அழு வான் ; விழுவான் ; அரற்றுவான்; கூவுவான்; தொழு வான் ; எழுவான் ; சுழலவுஞ் செய்வான் ; ஓடவும் ஓடுவான்; ஒரு பக்கமாகப் படுக்கவுஞ் செய்வான் ; நிழலைக் கண்டுகூடக் கோபங் கொள்வான். அந் நாளையப் பைத்தியக்காரர் விடுதியில்—இருந்திருந் தால்; இல்லை என்ருலும் தொல்லை; இருந்தது என்றே கொள்வோம்—சேர்க்க இன்னும் பக்குவம் வரவில்லை போலும்!

புகார் நகரம் அறிவின் எல்லையைக் கடந்த பூங்கொடியாம், பூபல தகைந்து, புனலது நிறைந்து, புள்ளொலி கலந்த அகழி அப் பூங்கொடியின் தெள்ளிய அரி மிடைந்த சிலம்பாம் ; கோட்டை உறுப் பாம் இஞ்சி அவளது ஒளிரும் மேகலையாம்; பக்கங் களில் இருக்கும் வாயில்கள் அவளது சிறந்த பணைத்த தோள்களாம்; தருநிலை, வச்சிரம் என்ற இரு கோட் டங்கள் அவளது மார்பகங்களாம்; சோழனது அரண்மனை அவளது திருமுகமாம்; கீழ்த்திசையிலே

முதிரும் நிலவு அவளுக்கு வெண்தோடாம்; மேற்றிசையிலே வீழும் கதிர், பொற்றோடாம். இப்படிக் கற்பனைத் தூவி கொண்டு காவியச் சீலையில் நகரையே நங்கையாக்கிய ஓவியம் நவில் தொறும் சுவையை நல்குகிறது. இத்தகு காட்சிகள் இந்நூலில் மேலும் பல இருக்கின்றன.

**அந்தியும் விதவையும்**

'உவமை என்னும் தவலருங் கூத்தி'யைக் 'காவிய அரங்கில்' கவினுறவே புனைந்துள்ள பகுதிகள் மிக அதிகம். சான்றிற்குச் சில. படுதிரை வையப் பல்பொருள் எல்லாம் மேனி தொடுங்கதிர் கண்டு கூசி, நாணி, கோணி அழகு காட்டி நின்ற பகற்போது சென்று விட்டது. வெள்ளைக் கோலப் பொடிக் கிண்ணம் வெளிவரக் காத்திருக்கிறது. அதை முந்திக் கொள்கிறது அந்தி. இந்த அந்தியை விதவையாகக் காணுகிறான் கவிஞன். கதிரவனும் கணவனை இழந்து விட்டாள் அந்தி நங்கை. இனி அவளுக்குப் புகலிடம் காட்டவேண்டும். கவிஞரின் காலத்து விதவையர் வாழ்வு அவன் கண் முன்னே தோன்றுகிறது. போர்க்களத்தே கணவனை இழந்துபட்ட நங்கை ஒருத்தி, தன்னந் தனியாய்த் தன் பெற்றோர் இல்லத்தில் புகுகின்ற காட்சியை நினைத்துப் பார்க்கிறார். உவமை கொண்டு கவிதை பிறக்கிறது'

'அமர்அக மருங்கிற் கணவனை இழந்து
தமர்அகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிர்ஆற்றுப் படுத்த முதிராத் துன்பமோடு
அந்தி என்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளால் மாநகர் மருங்கென்'

—5:137-141,

ஊர், உலகுக்கெல்லாம் உணவூட்டிக் களித்த ஆபுத்திரனுக்கும் அவனது அமுத சுரபிக்கும் வாங்குநர் இல்லா வருத்தம் வந்தது; வறுமை வந்தது; ஆருயிர் மருந்தை அளிக்கும் அப்பாத்திரம் பயன்படாது கிடக்கிறது. அந்நிலையைக்

'குமரி மூத்தஎன் பாத்திரம்'

—14:77

என்ற உவமையால் விளக்குகிறார். உலகத்து அழகெல்லாம் ஒருங்கேற்ற ஓர் அணங்கு இருந்தும் என்ன? மணமில்லாமலேயே மூத்து விட்டால் அவள் வாழ்வு எப்படிச் சிறக்காதோ அதைப்போல இருக்கிறது என்று உவமை காட்டுந் தொடராட்சி உள்ளத்தைத் தொடுந் தன்மையுடன் விளங்குகிறது.

இக்காப்பியக் களஞ்சியத்தில் கண்ட கருத்து அறுவடை, விளக்கம் வேண்டா வித்துக்கள் :

**இன்பமா, துன்பமா ஏன்?**

1. 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்;
பற்றின் வருவது முன்னது ; பின்னது
அற்றோர் உறுவது; அறிக.

2:64—7.

2. **உடலும் உண்மையும்;**

'வினையின் வந்தது; வினைக்குவிளைவு ஆயது
புனைவன நீங்கிற் புலால் புறத்து இடுவது;
மூப்பு; விளிவு உடையது; தீப்பிணி இருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்றுஅடங்கு அரவிற் செற்றச் சேக்கை;
அவலக், கவலை, கையாறு, அழுங்கல்
தவலா உள்ளந் தன்பால் உடையது
மக்கள் யாக்கை'

—4:113-120

3. **பசிப் பிணியா ? அதைத் தீர்த்தவரா ?**

'குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பங் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ;
நாண்அணி களையும்; மாண்எழில் சிதைக்கும்;
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது'

11:76—61

4. **அறத்தை விலைப்பொருளாக்க முடியுமா ?**

'ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்;
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை.
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'

—11:92-6

5. **விழுமியது எது ?**

'ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்; அவர்
மேற்சென்று அளித்தல் விழுத்தகைத்து என்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தனர்

—19:36-8,

6. **அறம் எது ?**

'அறம்எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல் ?

—25:228—31.

இனி, இந்நூல் மாந்தர்தம் பாத்திரப் படைப்பு, காவிய அமைப்பு, தத்துவ வளர்ச்சி என்றெல்லாம் எடை போட இடம் உண்டு. அவற்றை அறிஞர்கள் கற்று அறிவாராக.

ஐம்பெருங் காப்பிய வரிசையில் சிலம்பைப் போற்றும் அளவிற்கு இந்நூலையும் பிறவற்றையும் அரங்கிற்கு இன்னும் கொண்டு வரவில்லை. தடைக்கல்லாக இருப்பனவற்றைத் தகர்த்து, மடை திறந்த வெள்ளமாக்கி அறிவு, கவிதை, இலக்கியம் எனப் பயிர் செய்வோம்; பண்படுவோம்.

★

# குழந்தைகளுக்கு நூலகங்கள்

அழ. வள்ளியப்பா

**சோ**வியத் நாட்டில் 200,000 குழந்தை நூலகங்கள் உள்ளன. என்ற செய்தியைக் கண்டதும், அச்சிட்டவர்கள் தவருக இரண்டு மூன்று பூஜ்யங்களைச் சேர்த்துவிட்டார்களோ என்ற ஐயம் நமக்கு எழும். நகரத்திற்கு ஒரு குழந்தை நூலகங்கூட இல்லாத நாட்டிலே வாழுகின்ற நமக்கு இப்படிப்பட்ட ஐயம் எழுவது இயற்கையே. ஆனல் உண்மையிலேயே சோவியத் நாட்டில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான குழந்தை நூலகங்கள் உள்ளன.

சென்னை நகரில் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் பின்புறம் குழந்தைகளுக்கென்றே அமைக்கப்பெற்ற நூலகம் இயங்கி வருகிறது. மவுண்ட்ரோடு மத்திய நூலகத்தில் குழந்தைகளுக்கென்றே ஒரு தனிப் பகுதி இருக்கிறது. குழந்தைகளுக்கான தனி நூலகங்கள் தமிழகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலே இருந்தாலும், பெரியோர்க்கான சில நூலகங்களில் குழந்தைப் பகுதிகள் துவக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதே.

முதல் கட்டமாக, தமிழகத்திலுள்ள பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் தனியாக ஒரு குழந்தை நூலகம் அமைக்கப்படவேண்டும். அத்துடன் கூடுமானவரை எல்லாப் பொது நூலகங்களிலும் குழந்தைப் பகுதிகளைத் துவக்கி நடத்த வேண்டும்.

சின்ன வயதில் புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், வாழ்க்கை முழுதும் தொடர்ந்து அப்பழக்கம் நீடிக்கும். இளம் வயதில் பள்ளிப் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எப்புத்தகத்தையுமே தொட்டுக்கூடப் பார்த்தறியாத பலர், வளர்ந்த பிறகு படிக்கும் ஆர்வமே இல்லாதவர்களாகி விடுகின்றனர். அப்படிப்படிப்பட்டவர்கள் திடீரென ஒரு புத்தகத்தை ஆர்வமோடு எடுத்துப் படிக்கத் தொடங்கிவிட்டால், ஒருவேளை அது மர்ம நாவலாக இருக்குமோ, அல்லது இனக்கவர்ச்சி மிக்க நூலாக இருக்குமோ என்ற ஐயம் நமக்கு ஏற்பட்டுவிடுகிறது!

பள்ளிக்கூடங்களில்தான் நூலகங்கள் இருக்கின்றனவே, தனியாக எதற்குக் குழந்தை நூலகங்கள் வேண்டும் என்று சிலர் கேட்கலாம். உயர்நிலைப்பள்ளிகளில் நூலகங்கள் உள்ளன என்பது உண்மைதான். ஆயினும் நடுநிலை, ஆரம்பப் பள்ளிகளில் நூலகங்கள் அபூர்வமாகவே காணப்படுகின்றன. அத்துடன் பிள்ளைகள், பள்ளி நூலகங்களில் புத்தகம் படிப்பதற்கும், தனி நூலகங்களில் புத்தகம் படிப்பதற்கும் நிரம்ப வேற்றுமை உண்டு. சுதந்திர உணர்ச்சியுடன், சுவைத்துப் படிக்கும் சூழ்நிலை தனி நூலங்களில்தான் அமைகின்றது.

தமிழில் இதுவரை குழந்தைகளுக்காகச் சுமார் 1000 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. ஆனல், வெளி வந்துள்ள புத்தகங்கள் எல்லாமே குழந்தைகளுக்கு ஏற்றவைதாஞ? 'ஆம்' என்று தைரியமாகக் கூறுவதற்கில்லை. ஒரு சில தகுதியற்றனவாகவும் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

### தேர்தல் குழு

ஆகையால், நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்க ஒரு 'புத்தகத் தேர்தல் குழு' வேண்டும். குழந்தை உள்ளம்

அறிந்தவர்களாக, குழந்தைகளின் தேவைகளை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும் அக்குழுவில் இருப்பவர்கள்.

இப்படிப்பட்ட குழு ஒவ்வொரு குழந்தை நூலகத்திலும் இருப்பது இயலாத காரியம். பொதுவாகத் தமிழகம் முழுமைக்கும் ஒரு தேர்தல் குழு இருப்பது நலம். உடனடியாக அக்குழு தற்போது தமிழில் கிடைக்கும் குழந்தை நூல்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து, நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்துடன், இனி புதிதாக வெளிவரும் நூல்களையும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது தேர்ந்தெடுத்து ஒவ்வொரு குழந்தை நூலகத்திற்கும் சிபார்சு செய்ய வேண்டும்.

ஒரு புத்தகம் எல்லா வகையிலும் சிறந்ததுதானு என்று அக்குழுவினர் எடை போட்டு பார்க்கத் தேவையில்லை. அரசினர் பரிசுக்குக்கூட அவ்வாறு பார்ப்பதில்லையே! கதையின் ஆரம்பம் சுவையில்லா திருக்கலாம்; அல்லது முடிவு பொருத்தமில்லாதிருக்கலாம்; கதை விறுவிறுப்பு இல்லாதிருக்கலாம். அல்லது படங்கள் சாதாரணமாயிருக்கலாம். இக்காரணங்களுக்காக அவற்றை ஒதுக்கிவிடக்கூடாது.

குழந்தைகளின் அறிவையோ ஒழுக்கத்தையோ கெடுக்கும் வகையில் ஒரு புத்தகம் இருந்தால், எக்காரணம் கொண்டும் அதைத் தேர்ந்தெடுக்கவோ சிபார்சு செய்யவோ கூடாது. நூலகங்களுக்குப் புத்தகங்களைச் சிபார்சு செய்யும் குழு, பிறரது சிபார்சுக்கு இரையாகிவிடக்கூடாது!

குழந்தை நூலகங்கள், குழந்தைகள் உள்ளம் கவரும் வகையில் அழகுற அமைக்கப்படவேண்டும். குழந்தைகள் வசதியாக உட்கார்ந்து படிப்பதற்கு ஏற்ற வாறு சிறுசிறு நாற்காலிகளும், மேசைகளும், அவர்கள் விருப்பம்போல் எடுத்துப் படிப்பதற்கு ஏற்ற வகையில் புத்தக அலமாரிகளும் அங்கு இருக்கவேண்டும்.

புத்தகங்களை வயதுப் பிரிவுக்கு ஏற்றபடி வகைப் படுத்தி வைக்கலாம். இந்த ஏற்பாட்டால், குழந்தைகள் நேரத்தை வீணுக்காமல் தங்கள் வயதுக்கேற்ற புத்தகங்களை எளிதில் எடுத்துப் படிக்க வசதியாயிருக்கும். சில குழந்தைகள் தங்கள் வயதிற்கு மீறிய அறிவும் திறமையும் உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் அடுத்த வயதுப் பிரிவுக்குச் செல்வதானுல் தாராளமாகச் செல்லட்டுமே!

### சுவர்களின் வண்ண ஓவியங்கள்

நமது நாட்டில் பரம்பரையாக வழங்கிவரும் பஞ்ச தந்திரக் கதைகளிலிருந்து சில காட்சிகளைச் சுவர்களில் வண்ண ஓவியங்களாகத் தீட்டி வைத்தால், கவர்ச்சியாகவும், கதைகளை நினைவூட்டுவனவாகவும் இருக்கும். பஞ்ச தந்திரத்திலுள்ள ஐந்து பகுதிகளிலும் பகுதிக்கு ஒரு கதையாக எடுத்து, பஞ்ச தந்திரத்தில் ஐந்து காட்சிகள் என்பதுபோல் தீட்டிவைக்கலாம். இதேபோல் நம் நாட்டில் பிரபலமாயுள்ள சில கதைகளிலும் உலகப் புகழ்பெற்ற கதைகளிலும் உள்ளமையக் காட்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டியோ மரப் பலகைகளால் செய்து வண்ணங் கொடுத்தோ வைக்கலாம். குழந்தை இலக்கிய மேதைகள், குழந்தைகளுக்காகக் கல்வி, மருத்துவம் முதலிய துறைகளில் அருந்தொண்டாற்றியவர்கள் ஆகியோரின் திரு உருவப் படங்களையும், குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டிய நற்கருத்துக்களையும், புள்ளி விவரங்களையும் படங்களோடு விளக்கும் சுவரொட்டிகளையும் நூலகத்தில் வைப்பதால் நற்பயன் விளையும். தமிழ் நாட்டுப் பெரியார் வெளிநாட்டுப் பெரியார்களின் இளமைப் பருவப் படங்களைக் கிடைத்தவரை திரட்டிக் காட்சியாக வைக்கலாம். சிறுவர் பற்றிய செய்திகளைக் கரும் பலகையில் சுவைபட எழுதி வைப்பதும் அவர்களது அறிவுவளர்ச்சிக்குத் துணைபுரியும்.

நம் நாட்டில் வெளிவரும் புத்தகங்கள் பலவற்றின் அட்டைகள் ஓரளவு கவர்ச்சியாக இருந்தாலும் உறுதியாக இருப்பதில்லை. அட்டை கிழிந்து புத்தகம் பாழாகி விடக்கூடாதே என்ற கவலையில், அந்த அட்டையை அகற்றிவிட்டுக் கனத்த அட்டைகளால் பைண்ட் செய்து, மேலே ஒரு பழுப்புத்தாளை உறையாகப் போட்டு வைப்பதைச் சில இடங்களில் பார்த்திருக்கிறேன். இதனுல், புத்தகம் கவர்ச்சி இழந்துவிடுகிறது. ஏற்கெனவே இருந்த கவர்ச்சியான அட்டையையே 'பைண்ட்' செய்தபிறகு முகப்புப் பக்கத்தில் ஒட்டி, புத்தகத்திற்குக் கண்ணுடிக் காகித உறை போட்டு வைத்தால், கவர்ச்சி குறையாது. முகப்பைப் பார்த்தே புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கவும் வசதியாயிருக்கும்.

புதிதாக நூலகத்திற்கு வரும் புத்தகங்களைத் தனியாக ஓரிடத்தில் காட்சியாக ஒரு வாரம்வரை வைத்திருந்து, அதன் பிறகு பிள்ளைகள் படிக்கக் கொடுக்கலாம். அல்லது என்ன என்ன புதிய புத்தகங்கள் நூலகத்திற்கு வந்திருக்கின்றன என்பதை அங்கு ஒரு பலகையில் எழுதி வைக்கலாம். இதனுல் புதிதாகக் வெளிவரும் நூல்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது.

### கதை நேரம்

குழந்தைகளின் படிக்கும் பழக்கத்தைத் தூண்ட 'கதை நேரம்' (Story Hour) ஏற்பாடு செய்யலாம். குழந்தைகளுக்காக எழுதுவோரையும், நன்கு கதை சொல்லும் ஆசிரியர்களையும் வரவழைத்துக் கதைகளைச் சொல்லும்படி செய்தால், கதை கேட்கும் ஆர்வம் நாளடைவில் கதை படிக்கும் ஆர்வமாக மாறி நன்கு வளரும். படம் போடத் தெரிந்தவர்களாக இருந்தால், தாங்கள் சொல்லும் கதைகளில் வரும் முக்கியமான

பாத்திரங்களை ஒரு பலகையில் வரைந்து காட்டி, குழந்தைகளின் குதூகலத்தை மிகுதிப்படுத்தலாம்.

குழந்தைகளிலே சிலர் தாங்கள் படித்த கதைகளை மற்றக் குழந்தைகளுக்குக் கூறலாம். இதேபோல், சில குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான பாடல்களைப் பாடிக் காட்டலாம். தாங்கள் படித்த கதைகளை நாடகமாகக் கூடச் சில குழைந்தைகள் நடித்துக் காட்டலாம். இவற்ருல் அவர்களது திறமையையும் நினைவாற்றலும் வளர வாய்ப்புண்டு.

தாங்கள் படித்த கதைகளைப்பற்றிக் குழந்தைகளே விமர்சனம் செய்யவும், எப்படிப்பட்ட புத்தகங்கள் தங்களுக்குப் பிடித்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்தவும் ஒரு நேரம் ஒதுக்கலாம். வாரத்தில் ஒரு நாள் ஒரு மணி நேரம் ஒதுக்கினுலும் போதும்.

### கட்டுரைப் போட்டி

'எனக்குப் பிடித்த புத்தகம் என்ற தலைப்பில் போட்டிவைத்து நூலகத்திலுள்ள புத்தகங்களில் பிடித்தமான ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொல்லிக் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கலாம். கதைப் போட்டிகள் நடத்தி அவர்களது கற்பனைத் திறமும் எழுத்தாற்றலும் வளர வாய்ப்பளிக்கலாம்.

நூலகத்திலே குழந்தைகளுக்குப் பயனுள்ள திரைப் படங்களைக் காட்டி அவர்களது அறிவைப் பெருக்கலாம். திரைப் படம் மூலம் படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்தவும் வழியுண்டு. உதாரணமாக மகாத்மா காந்தி பற்றிய திரைப் படம் காட்டப்பட்டால், காந்திஜியைப் பற்றிய என்னென்ன புத்தகங்கள் அந்த நூலகத்தில் இருக்கின்றன என்பதைக் காட்சி முடிவிலோ, இடைவேளையிலோ அறிவிக்கலாம். ஆர்வமுள்ள குழந்தைகள் காந்திஜியைப் பற்றி மேலும் படித்தறிய இது உதவியாயிருக்கும்.

பள்ளிக் குழந்தைகளும், சிறுவர் சங்கங்களும் நடத்தும் கையெழுத்து இதழ்களைத் திரட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ ஆண்டுக்கு ஒரு முறையே காட்சியாக வைத்தால், சிறுவர்களின் எழுத்துத் திறமையும் ஓவிய ஆர்வமும் நன்கு வளரும்.

மேல் நாட்டுக் குழந்தை நூலகங்களில், குழந்தைகள் விளையாடுவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிருர்கள். படிப்பும் விளையாட்டும் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும். உடல் உறுதிபெற விளையாட்டு உதவுவதுபோல உள்ளம் பண்படைய நூல்கள் உதவுகின்றன.

### கிராமங்களுக்கு நகரும் நூலகம்

கடைசியாக ஒரு யோசனை. குழந்தை நூலகங்களைக் கிராமப் புறங்களிலே துவக்குவதற்கு இன்னும் நெடுநாளாகலாம். பல கிராமங்களுக்கு ஒரு நகரும் நூலகம் வீதம் அனுப்பி கிராமப்புறக் குழந்தைகளிடையேயும் படிக்கும் பழக்கத்தை வளர்க்கலாம். மக்களாட்சி நடைபெறும் இந்நாளில் சிறு சிறு கிராமங்களில் தோன்றியவர்களும், ஏழைகளும் கூடப் பெரும் பெரும் பொறுப்புக்களை ஏற்கும் நல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்றுள்ள கிராமப்புறத்துக் குழந்தைகளும், பிற்காலத்தில் நாட்டு மக்களை நன் முறையில் நடத்திச் செல்லும் அறிவுள்ள, ஆற்றலுள்ள, பண்புள்ள, தலைவராக விளங்குவதற்குப் புத்தகங்கள் பெரிதும் துணை புரியுமன்ருே ?

# கலை வள்ளல்

படம் உதவி:

அவ்வை டி. கே. ஷண்முகம், எம்.எல்.சி.

எட்டயபுரம் காசிவிசுவநாத பாண்டியன்

# தாய் மொழியில் நீதி

மா. சண்முக சுப்பிரமணியம்

**கோ**யம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கொலை வழக்கு நடந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவரைக் கொன்றதை நேரில் கண்டதாகக் கூறும் சாட்சிகள் எவரும் அவ்வழக்கில் இல்லை. இதர சூழ்நிலைச் சான்றுகளிலிருந்து கொலைக் குற்றத்தை இவர்தாம் இழைத்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது என்ற அடிப்படையில் வழக்கிடப்பட்டது.

சாட்சிகள் விசாரிக்கப் பட்டபின், இரண்டு நாட்கள் விவாதங்கள் (Arguments) நடந்தன, நேரடிச் சாட்சியம் இல்லாததால், சூழ்நிலைகளிலிருந்து எவ்வாறு 'எதிரி'யேதான் குற்றம் இழைத்தார் என்பதை ஊகித்தறிய வேண்டும் என்று நுட்பமாகவும் விவரமாகவும் அரசாங்க வழக்கறிஞர் வாதித்தார். குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் வாதாடிய வழக்கறிஞரோ குற்றம் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்று காரணங்கள் காட்டி வாதித்தார். முடிவில், நீதிபதி கொலைக் குற்றம் மெய்ப்பிக்கப் பட்டதெனத் தீர்ப்புக் கூறி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை விதித்தார். அத்தீர்ப்பினை நீதிபதி படித்து முடிந்ததும், நீதிமன்ற எழுத்தர் எழுந்து, குற்றம் சாட்டப்பட்டவரை நோக்கி, "உமக்குத் தூக்குத் தண்டனை சொல்லி யிருக்காங்க", என்று உரத்தக் குரலில் கூறினர்.

அவ்வாறு அவர் கூறியதும், நீதிமன்றத்தில் ஓர் அமைதி நிலவியது. அந்த அமைதியின் குரலாக ஒரு குரல் ஒலித்தது. கைதிக் கூண்டிலே நின்று கொண்டிருந்த குற்றவாளியின் குரல்தான் அது.

"ஜட்ஜ் துரைங்களே, இரண்டு நாளாக வக்கீலுங்க என்ன பேசினுங்கன்னு தெரியலை. நீங்க என்ன தீர்ப்புப் படிச்சீங்கங்றதும் தெரியலை. எனக்கு தூக்குத் தண்டனை போட்டிருக்கீங்க! இதுதான் தெரியுது!'' என்று இரு கைகளையும் கூப்பிக் கொண்டு கண்களிலே நீர் மல்க, உதடுகள் துடிக்க, குரல்கள் தளதளக்க நீதிபதியிடம் 'எதிரி' கேட்டார். நேர்மை நிறைந்த நீதிபதியின் முகத்திலே துயரக்களை தோன்றி மறைந்தது.

குற்றம் சாட்டப்பட்டவராக (Accused) நின்றவர் 'தீர்ப்புக் குற்றவாளி' (Convict) ஆகிவிட்டார். கைதிக் கூண்டிலிருந்து அவரை வெளியேற்றி, அவருக்குக் கைகளிலே விலங்கிட்டுக் காவல் அதிகாரிகள் சிறைக்கு இட்டுச் சென்றனர். காவல் துறையினரின் உந்துவண்டி மரணதண்டனை பெற்ற குற்றவாளியை ஏற்றிக் கொண்டு மாவட்டச் சிறையை நோக்கி விரைந்து சென்றது.

ஆனல், மரண தண்டனை பெற்றவரின் ஏக்கப் பார்வைக்கும் இதயக் குரலுக்கும் விடையே இல்லை!

இது உண்மையில் நடந்த நிகழ்ச்சி.

ஆங்கில மொழி தெரியாத நிலையில் நின்று கொண்டிருந்த குற்றம் சாட்டப் பட்டவருக்கு ஆங்கிலத்தில் நடந்த வாதங்களும், ஆங்கில மொழியில் எழுதி வாசிக்கப்பட்ட தீர்ப்பும், விளங்கவில்லை; எந்தக் காரணங்களின் அடிப்படையில் தமக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்பதும் அவனுக்குப் புரியவில்லை! ஆனல், நீதி விதித்தண்டனை அவரது உயிரைப் போக்கிவிட்டது.

இந் நிலைதான் இன்றும் நீடித்து வருகின்றது.

"நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. வழங்கப் படுவது நீதிதான் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது வழங்கப் படவேண்டும்", என்பது நீதிமுறையின் அடிப்படைக் கொள்கை யாகும். இதனுல்தான் நீதிமன்றங்கள் மக்கள் அணை வரும் காணும் வகையில் இயங்குகின்றன. நீதிமுறை யின் நேர்மையும் நெறியும், பண்பும் பயனும், நாட்டு மக்கள் நலமுற அறியும் விதத்தில் அமைதல்வேண்டும். எனவே, நீதிமன்ற மொழி மக்களுக்குப் புரியும் வகை யில் அவர்களது தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும் என்பது நீதிமுறையின் இன்றியமையாத் தேவையாகிறது.

அந்நியர் ஆட்சியின் காரணமாகவே ஆங்கிலம் இன்று நீதிமன்ற மொழியாக நிலவுகின்றது. அந்த மொழியறிவால் நாம் அடைந்துள்ள பலன்கள் பல. ஆங்கிலேயரின் நீதிமுறை நம்நாட்டின் பண்பிற்கு ஏற்றவாறு இயைந்துள்ளது. ஆங்கில ஆட்சியினுல் நம் நாட்டிற்கு ஏற்பட்ட நற்பயன்களில் தலை சிறந்தது அவர்கள் நிறுவிய நீதிமுறை என்று கூறுவது சாலப் பொருந்தும். இருப்பினும், நீதிமுறை தாய்மொழியில் அமைவது நல்லாட்சியின் நயனுகும்; நீதிமுறையின் நெறியுமாகும்.

ஆட்சிப்பணித் துறைகள் பல உள்ளன. அந்தந் தத் துறைகளுகேற்ற வல்லுநர்கள் அப்பணிகளை ஆற்று கின்றனர். ஆனுல், நீதிவழங்கும் பணியில் மட்டும், பொது மக்களும் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கடைபிடித்து, அரசியல் நாகரிகம் மிகுந்த நாடுகளில் எல்லாம், பெருங்குற்ற வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிக்கு உதவியாகச் 'சான்று தீர்ப் பாளர்' (Jurors) களும், 'சான்று மதிப்பாளர்' (Assessers) களும் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். நம் நாட்டிலும் இந்த முறை இருந்து வந்தது. மக்களை யும் சேர்த்துக் கொண்டு ஆற்றப்பட வேண்டிய நீதித் துறைப்பணி, அம்மக்களின் மொழியில் அமைதல் இன்றியமையாத தன்றே?

எனவே, ஆங்கிலச் சட்டங்களை அருந்தமிழில் ஆக்கும் வேலை தொடங்கியுள்ளது. முதற்கண், மாவட்ட நீதிமன்றங்கள் வரையிலாவது தமிழை நீதி மன்ற மொழியாக ஆக்குவதற்கான முயற்சிகள் துவங்கியுள்ளன. சட்டப்படி இப்போதும் "தமிழ்" நீதிமன்றமொழியாக உள்ளது. அதை நடைமுறையில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகின்றன. முன்னேற்பாடாகச் 'சட்டச் சொல் அகராதி, (Law Lexicon) என்ற நூலைத் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

ஆங்கிலத்தில் அரைகுறை அறிவு, தமிழின் அறி வோ அதைவிடக் குறைவு என்ற நிலையில் உள்ள பலர் சட்டத்தைத் தமிழில் எழுதுவது இயலாது, என்று கூசாமல் சொல்கின்றனர். நீதிமுறை செலுத்துவதற்கு ஆங்கிலமொழி ஏற்றதன்று என்று முந்நூறு ஆண்டு களுக்கு முன் இங்கிலாந்து நாட்டிலே பலருங் கூறினர் கள். எனவே, இலத்தீனும், பிரெஞ்சும் கலந்த மணிப் பிரவாள மொழியில்தான் அந்நாட்டில் அப்பொழுது சட்டங்கள் இயற்றப்பட்டன; தீர்ப்புகள் எழுதப் பட்டன.

"தாய்மொழியில் நீதி" என்ற கோட்பாடு, தாய் மொழிக்கு நீதி வேண்டும் என்பதன்று, நீதியின் திறம் காக்கப்பட வேண்டும் என்பதேயாம். இம்முயற்சி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அன்று, நீதியின் நீர்மைக் காகத்தான். நல்லாட்சியின் தேவை, நீதிமுறையின் நெறி, தாய்மொழியில் நீதி வழங்கபட வேண்டும் என்பது.

பிற அறிவியல் நூல்களில் புத்தம் புதிய பொருள் களை உணர்த்தும் சொற்கள் உண்டு. Proton, Neutron என்ற புதுப் பொருள்களைக் குறிக்கும் சொற்களைத் தமிழாக்கும் சிக்கல்கள் மற்ற அறிவியல்களில் தோன்ற லாம். ஆனுல் சட்டத்துறையில் இச்சிக்கல்களுக்கு இடமில்லை. சட்டக் கருத்துக்களே தமிழாக்கம் பெறு கின்றன.

"திட்பமும் நுட்பமும் சேர்ந்தன சூத்திரம்"... என்பது நன்னூல் ஆசிரியரின் உரை. தொல்காப்பியம், திருக்குறள், நன்னூல் போன்ற தமிழ் நூல்களிலே ஆளப்பட்டுள்ள சொற்கள் திட்பமும், நுட்பமும் ஒருங்கே அமைந்தவை. எனவே, அச்சொற்களைக் கொண்டு நுட்பமான சட்டக் கருத்துக்களைத் திட்ப மாகக் கூற இயலும். வளமும், வனப்பும், இழைவும் குழைவும் நுட்பமும் திட்பமும் ஒருங்கே பொருந்திய நம் தமிழ் மொழியில் கூறப்படும் பொழுது, சட்டக் கருத்துக்கள் தெளிவும் தேற்றமும் பெறுகின்றன.

"சட்டத்துறைத் தமிழ் வளர்த்து
நீதித்துறை நெறி காப்போம்."



# கலை வள்ளல்
# காசி விசுவநாத பாண்டியன்

அவ்வை தி. க ஷண்முகம், எம். எல். சி.

**1924** ஆம் ஆண்டில் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா மதுரையில் நடந்து கொண்டிருந்தது. நாடகங்களை எட்டயபுரம் அதிகாரிகளில் சிலர் வந்து பார்த்தார்கள். அவர்களின் மூலம் நாடகங்களின் சிறப்பை அறிந்த எட்டயபுரம் அரசர் தமது திவானை அனுப்பி நாடகக் குழுவை எட்டயபுரத்துக்கு அழைத்தார். அரசரின் அழைப்பினை ஏற்று நாடகக் குழுவினர் எட்டயபுரம் சென்றுர்கள். தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையில் அப்போது நானும் என் சின்ன அண்ணு டி. கே. முத்துசாமியும் நடிகர்களாக இருந்தோம்.

### தாத்தா மகாராஜா

அப்போது எட்டயபுரம் அரசராக இருந்தவர் குமார எட்டப்ப மகாராஜா அவர் வயது முதிர்ந்தவர். மிகுந்த கலை உணர்ச்சி உடையவர். தாத்தா மகாராஜா என்று தான் அவரைக் குறிப்பிடுவார்கள். மகாராஜாவுக்கு இரு பிள்ளைகள். மூத்தவர் தங்க மகாராஜா இளையவர் காசி மகாராஜா. எல்லோரும் கலையறிவு நிறைந்தவர்கள்.

### அரண்மனையில் அரங்குகள்

எட்டயபுரம் ஊருக்குப் பொதுவாக ஒரு பெரிய நாடக அரங்கம் அமைக்கப் பெற்றிருந்தது. அதைத் தவிர அரசருக்கென்றும், அவரது புதல்வர்களுக்கென்றும் தனித் தனியாக சிறிய நாடக அரங்குகள் அவரவர் அரண்மனைக்குள்ளேயே அமைந்திருந்தன. தாத்தா மகாராஜா எல்லோருக்கும் பேட்டியளிக்கும் அழகிய கூடத்திற்கு எதிரிலேயேகூட ஒரு மிகச் சிறிய நாடக அரங்கம் இருந்தது.

### அரசரின் எளிமை

எட்டயபுரம் போன இரண்டாம் நாள் குழுவினர் எல்லோரும் தாத்தா மகாராஜாவைப் பார்க்கச் சென்றோம். பிரமாண்டமான அரண்மனை; அதற்கு முன் அதைப் போன்ற ஒரு கட்டடத்தை நாங்கள் பார்த்ததே இல்லை. அரசர் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். என்ன ஆச்சர்யம்! அவர் எங்களைப்போலவே இடுப்பில் வேட்டி, மேலே சட்டையெல்லாம் போட்டுக் கொண்டு சாதாரணமாக இருந்தார். நாங்கள் அரசர் வேடங்களுக்கு நாடகங்களிலே போடும் வெல்வெட்டு சரிகை உடைகள் ஒன்றையும் காணேம். நான் அதை மனத்தில் எண்ணி அரசரை வேறு விதமாக உருவகப்படுத்தி வைத்திருந்தேன். வெல்வெட்டு சரிகையில் கால் சட்டை, மேல் அங்கி, பீதாம்பரம் எல்லாம் போட்டுக் கொண்டிருப்பாரென்று எண்ணியிருந்தேன். அரசர் சாதாரணமாகவும், எளிமையாகவும் இருக்கவே எங்கள் அச்சம் சிறிது நீங்கியது. துணிவோடு எல்லோரும் கைகூப்பி வணங்கி நின்றோம். உரிமையாளர்கள் நடிகர்களையெல்லாம் அரசருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். குழுவின் உரிமையாளர்களிடம் அரசர் சிறிது நேரம் பேசினர். பிறகு நேராகவே எங்களிடம் நாடகங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர். ஓயாமல் பேசிக் கொண்டே இருந்

தார். திடீரென்று ஒரு நிமிடம் பேச்சை நிறுத்திவிட்டு எங்கள் எல்லோரையும் உற்றுப் பார்த்தார். மீண்டும் பேசத் தொடங்கினர்.

### அறிவுரை

"நீங்களெல்லாம் குடிகாரர்களாகிக் கெட்டுப் போகக் கூடாது. எம். ஆர். கோவிந்தசாமி குடியினுல் தான் அழிந்தான். இன்னும் எத்தனையோ கலைஞர்கள் குடிப் பழக்கத்தால் நாசமாகியிருக்கிருர்கள். இந்தக் காலத்தில் பெற்ருேர்கள் கூட தம் பிள்ளைகளுக்கு 'மருந்து' என்று சொல்லி மது வகைகளைக் கொடுக்கிருர்கள். அப்படிக் கொடுத்தாலும் நீங்கள் குடிக்கக் கூடாது. பிறகு அதுவே பழக்கமாகிவிடும்" என்ருர்.

அரசர் அவ்வாறு கூறியதும் நானும், சின்ன அண்ணு (டி. கே. முத்துசாமி)வும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். 1922 இல் நாங்கள் சென்னையிலிருந்தபோது எங்கள் தந்தையார் மலேரியாக காய்ச்சலுக்கு பிராந்தியை மருந்தாகக் கொடுத்தது நினைவுக்கு வந்தது. அதை எண்ணி இருவரும் மெல்லச் சிரித்துக் கொண்டோம்.

அரசரின் எதிரே ஆள் உயரத்தில் ஒரு படம் சுவரில் மாட்டப்பெற்றிருந்தது. வேட்டியை மூலக் கச்சமாகக்கட்டி, நீண்ட கோட்டு தலைப்பாகையெல்லாம் அணிந்து அந்தப்படத்தில் ஓர் அழகிய உருவம் இருந்தது. அவரை யாரோ அரச குடும்பத்தைச் சார்ந்தவர் என எண்ணினேம். தாத்தா மகாராஜா அந்தப் படத்தை எங்களுக்குச் சுட்டிக்காட்டி மேலும் பேசத் தொடங்கினர்.

### கலைஞர் கலியாணராமையர்

"இதோ இந்தப் படத்திலிருப்பவர் தாம் பிரசித்தி பெற்ற நாடகக் கலைஞர் கலியாணராமையர். பெண்ணுக நடிப்பதற்கு அவரைப்போல இனியொருவர் பிறக்க வேண்டும். பாமா விஜயத்தில் அவர் சத்தியபாமாவாக நடித்தது இன்னும் என் கண்முன்னே நிற்கிறது. அவரது நினைவு மாருதிருக்கவே இந்தப் படத்தை என் எதிரே வைத்திருக்கிறேன். நானறிந்த வரையில் இவர் ஒருவர் தான் குடிக்காத நடிகர்" என்று கூறினர். பிறகு கலியாணராமையர் நாடகக் குழுவினர் சிறப்பையும் அக்குழுவில் நடிகராகவும் ஆசிரியராகவுமிருந்த சங்கரதாஸ் சுவாமிகளின் சிறப்பையும், ராமுடு ஐயர், பெரிய மகாதேவ ஐயர் முதலியோர்களின் பெருமைகளையும் பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். சிறுவர்களாக இருந்ததால் அவருடைய நீண்ட பேச்சு எங்களுக்கு அலுத்துப்போய்விட்டது. பிறகு சமஸ்தானத்தின் வெளியீடாகத் தாம் அச்சிட்ட கலியாணராமையரின் "பாமா விஜயம்" "லலிதாங்கி" ஆகிய இரு நாடகங்களையும் கொண்டுவரச் சொல்லி என் கையில் ஒரு பிரதியையும், சின்ன அண்ணு கையில் ஒரு பிரதியையும் கையெழுத்திட்டுக் கொடுத்தார். நாங்களும் விடைபெற்று வீடு திரும்பினேம்.

### மன்னரைக் கவர்ந்த மனேகரன்

அன்றிரவு தாத்தா மகாராஜாவின் அரண்மனை அரங்கில் பம்மல் சம்பந்தனுரின் "மனேகரா" நாடகம் நடிக்கப் பெற்றது. அரசரும், அவரது இளைய புதல்வர் காசி மகாராஜாவும், சில அதிகாரிகளும் மட்டும் கூடியிருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறம் அந்தப்புரப் பெண்கள் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். ஆனல் அங்கு இருள் சூழ்ந்திருந்ததால் எங்களுக்குத் தெரியவில்லை. ஆக இருபது இருபத்தைந்து பேர் முன்னிலையில் நாடகத்தை நடிப்பது நடிகர்களுக்கு மிகவும் சிரமமாகவும் புதுமையாகவும் இருந்தது. அன்று எனக்கும் சின்ன அண்ணுவுக்கும் மிகப் பெரிய பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. ஒவ்வொரு பதக்கமும் ஆறு பவுனில் செய்யப்பட்டிருந்ததாகச் சொன்னுர்கள். (பவுன் பதிமூன்று ரூபாய்களாக இருந்த காலம்.) காட்சிகள் நடந்து கொண்டிருக்கும் போதே இடையே காசி மகாராஜா என்னைக் கைகாட்டி அழைத்தார். நான் போய் வணங்கி நின்றேன். உடனே தமது மூத்த மகன் தேவராஜ பாண்டியனின் கழுத்திலிருந்த ஒரு வைரம் பதித்த சங்கிலியைக் கழற்றி என் கழுத்தில் போட்டார். எங்களுக்கெல்லாம் இது புதுமையாக இருந்தது. மற்றும் பல நடிகர்களுக்கும் தங்கப் பதக்கங்கள் பரிசு வழங்கினர்கள். நாடகம் முடிந்தது; வீடு திரும்பினேம்.

### தாத்தாவின் கலை உணர்வு

மறு நாள் காலையில் மீண்டும் அரசர் எங்களைக் கூப்பிட்டு அனுப்பினர். இப்போது நானும், சின்ன அண்ணுவும், எங்கள் சித்தப்பாவும் நாடகக் குழுவின் உரிமையாளர்கள் மட்டுமே சென்ருேம். முதல் நாள் சந்தித்த இடத்திலேயே தாத்தா மகாராஜா எங்களுக்குப் பேட்டி அளித்தார். அவர் எதிரிலேயே ஒரு சிறிய நாடக அரங்கு இருப்பதாகக் குறிப்பிட்டேனல்லவா? முதல் நாள் நடித்த மனேகரன் சங்கிலியறுக்கும் காட்சியை அந்த அரங்கிலே நடிக்கச் சொன்னுர். எல்லோரும் திகைத்தார்கள்; எனக்கு என்னமோ போலிருந்தது. பகல் வேளை; ஒப்பனை இல்லை; அரச உடைகள் இல்லை; சங்கிலியும் இல்லை; அரசரோ நடிக்கச் சொல்லிவிட்டார். அப்புறம் சிந்தனைக்கு நேரமேது? யாரோ அரண்மனை ஆட்கள் இரண்டு பேர் மேல் துண்டை என் கைகளிலே கட்டி இழுத்துப் பிடித்துக் கொண்டார்கள். நானும் எப்படியோ ஒரு வகையாக மனேகரன் சங்கிலியை இழுத்துக் கொண்டே ஆவேசத்தோடு வருவதுபோல் பேசி நடித்தேன். தாத்தா மகாராஜா 'பலே பலே' என்ருர். காசி மகாராஜாவின் இளைய மகன்

ஜெகதீச பாண்டியனின் கையிலே போட்டிருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றி என் கையிலே போட்டார். அரசரின் போற்றத்தகுந்த அந்தக் கலைஉணர்ச்சி அன்று எனக்குப் புரியவில்லை. இன்று தான் அதன் சிறப்பினை எண்ணியெண்ணிப் பெருமகிழ்ச்சியடைகிறேன். அந்த மோதிரம் பெரிய ஒற்றைக்கல் பதித்த வைர மோதிரம் என்பதை அறிந்தபோது எல்லோரும் வியப்படைந்தார்கள்.

## மனோகரனுக்கு மேலும் சிறப்பு

மறுநாள் காசி மகாராஜா அரண்மனையிலுள்ள நாடக அரங்கில் மனோகரன் நாடகம் நடந்தது. அன்று தாத்தா மகாராஜா வரவில்லை. மற்றவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். அன்றும் பல பரிசுகள் வழங்கப்பெற்றன. சின்ன அண்ணுவுக்கு (டி. கே. முத்துசாமி) அந்தப்புரப் பெண்கள் ஒரு பட்டுச் சேலையைப் பரிசாக அனுப்பினர்கள். நாடகம் முடிந்து வீடு திரும்பினோம். ஒருநாள் விட்டு மறுநாள் தங்க மகாராஜா அரண்மனை நாடக அரங்கில் மனோகரன் நடந்தது. அவரும் குழுவினர் அனைவருக்கும் பரிசுகள் வழங்கினர். தமது புதல்வரும் இன்று எட்டையபுரம் மன்னராக இருப்பவருமான முத்துக்குமாரசாமி பாண்டியன் போட்டிருந்த ஒரு வெல்வெட்டு வெள்ளி சரிகை அரச உடையை எனக்குப் பரிசாக வழங்கினர். மேலும் பத்து நாட்கள் எட்டையபுரத்தில் தங்கிச் சில நாடகங்களை நடித்துவிட்டுப் பெரும் புகழோடு மதுரைக்குத் திரும்பினோம்.

இதுதான் எட்டையபுரத்தாரோடு எங்களுக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு. இந்தத் தொடர்பு மேலும் வளர்ந்த செய்தியினைக் குறிப்பிடுமுன் எட்டையபுரம் சமஸ்தானத்தைப் பற்றிய சில பொதுத் தன்மைகளை இங்கு அறிவிக்க வேண்டியது என் கடமையெனக் கருதுகிறேன்.

## எட்டப்பர் பரம்பரை

வீரபாண்டிய கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்தது எட்டப்பர் பரம்பரை என்று நாம் எல்லோரும் பேசி வருகிறோம். அது உண்மை; எப்போதோ நடந்த பழைய நிகழ்ச்சி; ஆனல் அந்த எட்டப்பர் பரம்பரையில் பின்னல் தோன்றிய பல அரசர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கும் செய்துள்ள சிறந்த சேவையை நாம் நன்றியுணர்வோடு என்றென்றும் போற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதில் எவ்வாறு புகழ் பெற்று விளங்கினர்களோ அதேபோன்று தமிழ்ப் புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரிப்பதில் தாத்தா மகாராஜாவும் அவரது முந்திய பரம்பரையினரும் முன்னணியில் நின்றர்கள் எனக் கூறுவது சிறிதும் மிகையாகாது.

## தமிழை வளர்த்த தெலுங்கர்கள்

பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட வீரபாண்டியக் கட்ட பொம்மனைப் போலவே எட்டையபுரத்தை ஆண்ட மன்னர்களும் கம்பளத்து நாயக்கர் பரம்பரையைச்சேர்ந்தவர்கள். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இசை, நடனம், நாடகம், சித்திரம், சிற்பம் ஆகிய நுண்கலைகளையெல்லாம் சேர—சோழ பாண்டிய மன்னர்கள் ஆதரித்து வளர்த்தார்கள் என்பதற்குச் சான்றுக விளங்கக் கூடியவர்கள் எட்டையபுர மன்னர்கள்.

கடிகை முத்துப்புலவர், நமச்சிவாய்ப் புலவர், சீருப் புராணம் பாடிய உமறுப்புலவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் முதலிய எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் எட்டையபுரத்தின் ஆதரவில் வளர்ந்தவர்கள். முத்துசாமி தீட்சிதர், சுப்பராம தீட்சிதர், இராமச்சந்திர பாகவதர், புஷ்பவனம் ஐயர், காஞ்சிபுரம் நாயனப்பிள்ளை, கஞ்சிராமான்பூண்டியா பிள்ளை, தட்சிணுமூர்த்திப் பிள்ளை, நாதசுரம் மதுரை பொன்னுச்சாமிப் பிள்ளை, செம்பொன்ஞர் கோயில் ராமசாமிப் பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, நடேச நாயனக்காரர், பக்கிரி நாயனக்காரர், காரைக்குடி வீண சாம்பசிவய்யர் முதலிய மகா வித்வான்களெல்லாம் எட்டையபுரம் மன்னர்களின் ஆதரவைப் பெற்றவர்கள். நாடகத் துறையில் கல்யாணராமையர் முதல் எம். ஆர். கோவிந்தசாமிப் பிள்ளை, எஸ். எஸ். விசுவநாத தாஸ், சின்னமகாதேவ ஐயர், சின்னசாமி ஐயர், வேலு நாயர், அனந்த நாராயண ஐயர், கிட்டப்பா சகோதரர்கள் முதலிய கலைஞர்களுக்கெல்லாம் எட்டையபுரத்தார் பரிசு வழங்கிப் பாராட்டியிருக்கிருர்கள். கன்னட நாடகப் பெரும் புலவரான குப்பி வீரண்ணுவையும் அவரது குழுவினரையும் கூட மொழிவேற்றுமையின்றிப் பாராட்டிய பெருமை எட்டையபுரத்தார்க்கு உண்டு.

## ஜெகவீரராம வெங்கடேசுர எட்டப்பர்

ஜெகவீரராம வெங்கடேசுர எட்டப்ப மகாராஜா தாத்தா மகாராஜாவின் தமையனுர் புதல்வர். இவர் தாம் பாரதியால் பாடப்பெற்றவர். மிகச் சிறந்த கலைஞர்; தமிழிலும் தெலுங்கிலும் புலமை பெற்றவர். இவர் காலத்தில்தான் வல்லிபரதம் முதலிய நாடக நூல்கள் எழுதப் பெற்றன.

## குமார எட்டப்பர்

தாத்தா மகாராஜா எனக் குறிப்பிடப் பெற்ற குமார எட்டப்ப மகாராஜா இவருடைய சிறிய தந்தையாவார். தமையனுரின் புதல்வரான வெங்கடேசுர எட்டப்பருக்குச் சந்ததியில்லாததினுல் பட்டம் சிறிய தந்தையின் பரம்பரைக்கு வந்தது. தாத்தா மகாராஜாவின் கலையுணர்வைப்பற்றி முன்னரே கூறியிருக்கிறேன். அவரது இளைய புதல்வரான

காசி மகாராஜாவைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது என் கடமையாகும்.

### காசிவிசுவநாத பாண்டியன்

காசிப் பாண்டியன் எட்டப்பர் பரம்பரையில் தோன்றிய மன்னர்களுக்கெல்லாம் சிகரம்போன்று விளங்கியவர்; எங்கள் நாடக வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவர். இவரைப்பற்றிய செய்திகளும் பிறவும் நாங்கள் நேராக அறிந்தவையென்றே சொல்லவேண்டும். தாத்தா மகாராஜா மிகச் சிறந்த கலையுள்ளம் படைத்தவர் என்ருல் காசி மகாராஜாவைத் தகப்பன்சாமி என்று குறிப்பிடலாம். ஆம் தந்தையைப்போல் பன்மடங்கு கலையுணர்வு படைத்தவர் காசிப் பாண்டியன்.

### காசிராஜாவின் கலைத்திறமை

காசிப்பாண்டியன் ஓவியக் கலையில் கைதேர்ந்த நிபுணர். அவரது மாளிகை முழுவதும் அவர் கையால் எழுதப்பெற்ற அற்புதச் சித்திரங்கள் அழகு செய்தன. அரண்மனைகளிலிருந்த சின்னஞ்சிறு நாடக அரங்குகளிலெல்லாம் உருண்டுயரும் தர்பார், நந்தவனம், காடு, வீதி முதலிய திரைகளை அவரே எழுதினர் என்பதை அறிந்தபோது எங்களுக்குப் பெரும் வியப்பாக இருந்தது.

விரிந்த உள்ளம் படைத்த அக்கலைஞர் பிற ஓவியக்கலைஞர்களை ஆதரிக்கவும் தயங்கவில்லை. பெரிய பெரிய சித்திரக் கலைஞர்களையெல்லாம் வரவழைத்து அவர்களைப் படங்கள் எழுதச் சொல்லிப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவது அவரது இயல்பாக இருந்தது.

இசைத்துறையிலும் அபாரமான ஞானமுடையவர் அவர். வீணை, ஆர்மோனியம் முதலான இசைக் கருவிகளை அவரே நன்ருக வாசிக்கக் கேட்டிருக்கிறேன்.

### போனகிராப்

கிராமபோன் இசைத் தட்டுக்கள் வராத காலம் அது. "போனகிராப்" என்னும் ஒரு கருவியை வைத்து, மெழுகினுல் இசைத்தட்டுக்கள் தயாரித்து அதில் கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளையின் வாத்திய இசை, காஞ்சிபுரம் நாயனு பிள்ளையின் வாய்ப்பாட்டு முதலியவற்றையெல்லாம் பதிவுசெய்து வைத்திருந்தார். அந்தத் தட்டு வட்டவடிவமாக உருண்டையாக இருந்ததைப் பார்த்திருக்கிறேன். எங்களுக்குப் போட்டுக் காட்டுவதற்காக அதற்குத் தேவையான ஊசி கிடைக்கவில்லை. விலை உயர்ந்த நீலக்கல்லில் அதற்காக ஒரு ஊசியைத் தயாரித்துப் போட்டுக் காட்டினர்.

### கலைக்கூடம்

காசி ராஜாவின் மாளிகை ஒரு கலைக்கூடமாகவே காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் சித்திரங்கள்; சிற்பங்கள்; இசைக் கருவிகள். நாள் முழுவதும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

பெரிய கூடத்தின் முற்ற வெளியில் பல்வேறு வகையான பறவைகள் கூட்டங் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. அவைகள் இயல்பாகப் பறந்து திரிவதற்குரிய வகையில் ஆங்காங்கு செயற்கையான மரங்கள், செடி கொடிகள் அமைக்கப் பட்டிருந்தன. பறவைகள் வெயிலுக்கும், மழைக்கும் ஒதுங்குவதற்காகக் கூடுகளும் இருந்தன. அவை வெளியே போக இயலாதபடி மேலேயும் முற்ற வெளியைச் சுற்றியும் சிறு கம்பி வலை போடப்பட்டிருந்தது. பொதுவாகக் குறிப்பிட வேண்டுமானுல் அவரது மாளிகையை ஒரு கண்காட்சிச் சாலையாகவே குறிப்பிடலாம்.

### குளிர் பதன வசதிகள்

பெரிய அரண்மனைக்கு வெளியே தனியே அவர் சில ஆண்டுகள் வசித்தபோது அவருக்காக ஒரு மாளிகை கட்டப் பெற்றது. குளிர்பதனக் கருவிகள் இல்லாத காலமல்லவா? அந்த மாளிகையில் கோடை காலப் பாதுகாப்புக்காக அவர் செய்திருந்த ஏற்பாடுகள் புதுமையாகவும் கலைநுணுக்க முடையனவாகவும் இருந்தன. மேல் கூரையில் தண்ணீர்க் குழாய்களைக் குறுக்கும் நெடுக்குமாகப் போட்டிருந்தார். குழாய்களில் சிறுசிறு ஓட்டைகள் இருந்தன. அதன் வழியாக எப்போதும் தண்ணீர் விழுந்து கொண்டே இருக்கும். மேலே சாக்குத் துணிகளைப் போட்டு மேல் கூரை எப்போதும் ஈரமாகவேயிருக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது. மாளிகையின் உட்புறம் ஒவ்வொரு கதவையும் திறந்து வைத்துத் துணியினுல் அவற்றிற்குத் திரையிட்டு அத்திரைகள் மேலே உயரவும் கீழே இறங்கவும் வகை செய்திருந்தது. திரையின் அடியில் தகரத்தால் செய்த நீண்ட பெட்டிகள் அரையடி உயரத்தில் இருந்தன. அவற்றில் தண்ணீர் நிரப்பப் பெற்றிருந்தது. திரைகளை அவ்வப்போது கீழே இறக்கி ஈரம் உலர்ந்து விடாமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வெளியே வெப்பமான காற்று வீசினுலும் காற்று ஈரத்திரைகளின் மீது பட்டு குளிர்ச்சியாக உள்ளே வரும் முறையில் கலை நுணுக்கத்தோடு அமைந்திருந்தது. அதே சமயத்தில் தளத்தில் எங்கும் ஈரம் படாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### நிழற்பட நிபுணர்

காசிப் பாண்டியன் நிழற் படங்கள் எடுப்பதிலும் நிபுணராக இருந்தார். அவர் எடுத்த பழைய புகைப் படங்கள் சில இன்னும் எங்களிடம் இருக்கின்றன. ஆசிரியர் எம். கந்தசாமி முதலியார். எம்.கே. இராதா, கே. கே. பெருமாள், கே. பி. காமாட்சி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எஸ். வி. சகஸ்ரநாமம் முதலிய பல கலைஞர்களோடு மகாராஜா எடுத்த படங்கள் அவை. அவற்றையெல்லாம் பார்க்கும்போது எங்களுக்குப் பழைய இனிய நினைவுகள் வருகின்றன.

### மொழிப் புலமை

தாய் மொழியாகிய தெலுங்கு, தீந்தமிழ், ஆங்கிலம் மூன்று மொழியிலும் காசிராஜா புலமை பெற்றிருந்தார். கன்னடம், மலையாளம் இரு மொழிகளையும் பேசவும் தெரிந்து கொள்ளவும் திறமை பெற்றிருந்தார்.

'தயாளன்' என்னும் நாடகம் அவராலேயே எழுதப் பெற்றது. அச்சிலும் வந்துள்ளது, அவர் 1930 இல் சொந்தமாக ஒரு நாடகக் குழுவை நடத்திய போது தயாளன் நாடகமாக நடிக்கப் பெற்றது. 1937-இல் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கூட்டுறவோடு தயாளன் திரைப் படமாகவும் எடுக்கப் பெற்றது. பிரபல நடிகர் பி. யூ. சின்னப்பா கதா நாயகனாக நடித்த படம் அது. தயாளன் இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற ஒரு சரித்திர நாடகம். அரசரின் மொழிப் புலமையை வெளிப்படுத்தக்கூடிய நாடகமாக அது அமைந்திருந்தது.

### தேவராச ஜெகதீச தியேட்டரிக்கல் கம்பெனி

நாடகத் துறையில் காசி ராஜாவுக்கு ஏற்பட்ட அளவற்ற ஆர்வத்தினுல் அவரே சொந்தமாக ஒரு சிறுவர் நாடகக் குழுவையும் தொடங்கினுர். தேவராசர், ஜெகதீசன் என்ற தம் இரு புதல்வர்களின் பேரால் தேவராச ஜெதீச தியேட்டரிக்கல் கம்பெனி எனக் குழுவுக்குப் பெயர் வைத்தார். டி. பி. சங்கரநாராயணன், பி. எஸ். வெங்கடாசலம், எஸ். பி. வீராச்சாமி, நடிகமணி டி. வி. நாராயணசாமி, எம். எல்.சி. முதலிய நடிகர்களெல்லாம் காசி ராஜாவின் நாடகக் குழுவில் பயிற்சி பெற்ற நடிகர்கள் ஆவர். தமது குழுவில் இருந்த சிறுவர்கள் அத்தனை பேருக்கும் கடுக்கன், கழுத்துச் சங்கிலி, காப்பு ஆகிய அணிகளை அரசரே தம் அன்பளிப்பாகச் செய்து போட்டது அவரது வள்ளல் தன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது.

பிரகலாதா, மாருதி விஜயம், கபீர்தாஸ், ராமதாஸ், மனேகரன், வி. சி. கோபால ரத்தினம் எழுதிய ராஜபக்தி, தயாளன் முதலிய பல நாடகங்கள் அக் குழுவில் நடிக்கப் பெற்றன. குழுவினரின் நாடகங்கள் எட்டையபுரம் சுற்று வட்டாரத்திலும் சாத்தூர், மதுரை, அருப்புக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய நகரங்களிலும் நடைபெற்றன.

தம் குழுவுக்குத் தேவையான காட்சித் திரைகள் யாவற்றையும் காசிராஜா தம் கையாலேயே அழகுறத் தீட்டினுர். குப்பி வீரண்ணு அவர்களைப் பின்பற்றிப் புதிய முறைகளிலே பல்வேறு காட்சித் தட்டிகளையும் தயாரித்தார். இதற்காக அந்த நாளில் அவர் செலவு செய்த தொகை ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கு மேலிருக்கலாம்.

### ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ்

தம்முடைய நாடகங்களை நடத்துவதற்காக எட்டையபுரத்தில் வெளியேயுள்ள தமது மாளிகையின் அருகில் புதிதாக ஒரு பெரிய நாடக அரங்கையே அமைத்தார். பெரும் பொருட்செலவில் அமைக்கப் பெற்ற அவ்வரங்குக்கு ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ் தியேட்டர் என்று பெயர் சூட்டினுர். அரங்குக்குத் தம் மாளிகையிலிருந்து வர உட்புற வழி யொன்றும், பொது மக்கள் வர வெளிப்புற வழியொன்றும் அமைத்திருந்தார்.

நாடகக் குழுவை நிறுத்தியபின் இக் கொட்டகையைத் திரைப்பட அரங்காக மாற்றினுர். அப்போது தாம் குடும்பத்தினரோடு படம் பார்ப்பதற்கு வசதியாக மேடையின் பின்புறச் சுவரை இடித்துவிட்டு பத்தடி உயரமும் பதினைந்தடி அகலமும் உள்ளதாக திறப்பு அமைக்கச் செய்தார். பொது மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் தேவைப்பட்ட போது பின்புறத்தில் திறந்த வெளியில் அமர்ந்தபடியே தம் குடும்பத்தினரோடு படம் பார்த்து மகிழ்வது வழக்கம். நாங்களும் அவரோடு அமர்ந்து இந்த அற்புதத்தை ரசித்திருக்கிறேம்.

### கலையார்வத்தின் கொடுமுடி

1925-இல் நாங்கள் மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையிலிருந்து விலகினேம். சொந்தமாக ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையைத் தொடங்கினேம். 1925-இல் சாத்தூரில் எட்டையபுரம் இளையராஜா காசி பாண்டியன் எங்கள் நாடகங்களைக் காண வந்தார். வழக்கம்போல் அடிக்கடி நடிகர்களுக்குப் பரிசுகளும் வழங்கினுர்.

ஒரு நாள் அவருடைய கலையார்வத்தின் கொடுமுடியாக-உச்சநிலையாக ஒரு அற்புதம் திகழ்ந்தது. அன்று மனேகரன் நாடகம். திடீரென்று ஒரு காட்சியில் தம் புதல்வர்கள் காதில் போட்டிருந்த வைரக் கடுக்கன்களைக் கழற்றி எனக்கும் சின்னண்ணுவுக்கும் பரிசளித்தார். மற்ருெரு காட்சியில் தம் கையிலிருந்த விலையுயர்ந்த இரு வைர மோதிரங்களையும் எங்களுக்கு வழங்கினுர். இன்னெரு காட்சி நடந்துக் கொண்டிருந்தபோது தம் மனைவி கழுத்திலிருந்த கெம்பு அட்டிகையைக் கழற்றச் செய்து வசந்த சேனையாக நடித்த சின்னண்ணு கழுத்தில் போட்டார். இவற்றை யெல்லாம்விட அவர் செய்த மற்ருெரு செயல்தான் எங்களைப் பிரமிக்க வைத்தது.

வசந்த சேனையாக நடித்த சின்னண்ணு (டி. கே. முத்துசாமி) உடுத்திருந்த புடவை அவருடைய மனத்திற்குத் திருப்தியளிக்கவில்லை. அரசரின் காதற் கிழத்தி வசந்தசேனை இம்மாதிரிப் புடவையா உடுத்துக்கொள்வது என அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும். தம் மனைவியின் காதில் ஏதோ சொன்னுர். அந்த அம்மையார் வெளியே நின்றிருந்த காருக்

குச் சென்று மற்றொரு சாதாரணப் புடவையை உடுத்துக்கொண்டு திரும்பி வந்தார். அவர்கள் முதலில் உடுத்திருந்த விலை உயர்ந்த பட்டுச் சரிகைப் புடவை சின்னண்ணாவுக்குப் பரிசாக வழங்கப் பெற்றது. அடுத்த காட்சியில் அதை உடுத்துக்கொண்டு வரும் படியாகக் கட்டளையும் பிறந்தது.

காசி பாண்டியனின் இந்தக் கலையார்வம் எல்லோரையும் பிரமிக்க வைத்தது. இனி அப்படியொரு கலை வள்ளல் தோன்றுவாரா என்றே எண்ணி யெண்ணிப் பார்க்கிறோம்.

### இரசிகரைக் கவர்ந்த இரத்தினாவளி

1928-இல் இரண்டாவது முறையாக எட்டைய புரம் அரண்மனையில் நடிக்கும் பேறு எங்களுக்குக் கிடைத்தது, 1924-இல் மனோகரா சிறப்புப் பெற்றது. அதே போன்று இம்முறை பம்மல் சம்பந்தனாரின் "இரத்தினாவளி" நாடகம் சிறப்படைந்தது. ஒரேயொரு இரத்தினாவளி நாடகத்திற்காகத்தான் மதுரையிலிருந்து எட்டையபுரம் சென்றோம். ஆனால் எட்டையபுரத்தாரின் ரசனை எங்களை விடவில்லை. தாத்தா மகாராஜா, தங்க மகாராஜா, காசி மகாராஜா ஆகிய ஒவ்வொருவர் அரண்மனையிலும் இரத்தினாவளி சிறப்பாக நடைபெற்றது. அப்போது எம். கந்தசாமி முதலியார் குழுவில் ஆசிரியராக இருந்தார். அவருக்கு அரசர் ஏராளமான சன்மானங்களைச் செய்தார். தம் சமஸ்தான முத்திரை பொறித்த தங்கப் பதக்கத்தை வழங்கினார். இரத்தினாவளியாக நடித்தவர் செல்வம் என்னும் இளைஞர். அவருக்குத் தாத்தா மகாராஜா இரு கைக் கொலுசுகளைப் பரிசாக அளித்தது குறிப்பிடத்தக்க ஒரு விசேஷம். எம். கே. ராதா, எஸ். வி. சகஸ்ரநாமம், கே. கே. பெருமாள், எம். ஆர். சாமிநாதன் எல்லோரும் பரிசு பெற்றார்கள். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுக்கு காசி ராஜா வைரக் கற்கள் பதித்த தம் கைக் கடிகாரத்தையே பரிசாக வழங்கிப் பாராட்டினார்.

### வேடமின்றி நடிப்பு

இம்முறை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் "சதியநுசூயா" முதலிய நாடகங்களும் நடைபெற்றன. அதில் வரும் 'கர்வி பார்ஸ்' காசி மகாராஜாவுக்கு நிரம்பவும் பிடித்திருந்தது. சதியனுசூயா நடைபெற்ற மறுநாள் அனுபவானந்தனாக நடித்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், கர்வியாக நடித்த சின்னண்ணா (டி. கே. முத்துசாமி), ஆத்மானந்தனாக நடித்த எம். ஆர். சாமிநாதன் மூவரையும் தமது அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தார். அவர்களின் சொந்த உடையிலேயே கர்விபார்சை நடிக்கச் சொல்லி ரசித்தார். பெண்ணாக வேடம் புனையாமல் ஒரு ஆண் பிள்ளை கர்வியாக நடித்ததை ரசித்த அந்தக் கலையுள்ளத்தை இப்போதும் எண்ணிப் பார்த்து வியப்படைகிறேன்.

### கஷ்ட காலத்தில் கைகொடுத்தது

1931-இல் கும்பகோணத்தில் எங்கள் நாடகக் குழு மிகுந்த கஷ்ட நிலையில் தத்தளித்தது. எங்களை ஈன்றெடுத்த அருமை அன்னையார் காலராவினால் காலமானார். கையில் பொருளின்றி, கடன்கேட்க மனமின்றி, விடுபட வழியுமின்றி வேதனைக் கடலுள் ஆழ்ந்து கிடந்தோம். பல நாடக ரசிகர்களால் எங்களுக்குப் பரிசாக வழங்கப்பெற்ற தங்கப் பதக்கங்களும், நகைகளும் இருந்தன. எட்டையபுரத்தாரின் பரிசுகளும் சிறப்பாக காசிப் பாண்டியன் அளித்த வைரக் கடுக்கன், கெம்பு அட்டிகை, வைர மோதிரங்கள் முதலிய விலையுயர்ந்த பொருட்களும் இருந்தன. நினைவுக்காக இரு மோதிரங்களை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவைகளை யெல்லாம் விற்றுவிட நேர்ந்தது. அவை தாம் நாடகக் குழுவுக்கு உயிர் கொடுத்தன.

### பரிவு காட்டிய பெருந்தகை

1935 நவம்பரில் நாங்கள் பங்குகொண்ட "மேனகா" படப் பிடிப்புக்குப் பின் ஏறத்தாழ ஆறு மாத காலம் நாடகக்குழு நடைபெறவில்லை. குழுவைக் கலைத்துவிட்டு நாகர்கோவிலில் தங்கி வேறு தொழிலில் ஈடுபட எங்கள் பெரியண்ணா டி. கே. சங்கரன் முயன்று வந்தார். எங்கள்பால் அன்பு கொண்ட சில பெரியவர்கள் மீண்டும் நாடகக் குழுவைத் தொடங்கும்படி வற்புறுத்தி வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் இருவர்: ஒருவர் பெரியார் ஈ. வே. ராமசாமி; மற்றொருவர் இளையராஜா காசி பாண்டியன். அவர் கருணையோடு எங்களுக்கு உதவ முன் வந்தார். தாம் தமது நாடகக் குழுவைக் கலைத்துவிட்டதாகவும் அதற்காகத் தயாரித்த காட்சிகளையும், உடைகளையும் தருவதாகவும் தொடர்ந்து நாடகக் குழுவை நடத்தும்படியாகவும் கூறினார். அவருடைய அறிவுரையின்படி அவர் அன்புடன் அளித்த காட்சிகளையும் உடை முதலான சில பொருட்களையும் ஏற்றுக் கொண்டோம். குழு தொடர்ந்து நடைபெற்றது. அந்த நேரத்தில் அவருடைய உதவி காலத்தில் செய்த பேருதவியாக இருந்தது.

### மறுபிறவி

1936 மே மாதம் நாடகக்குழு மறுபிறவி எடுத்தது. விருதுநகரில் நடித்துக் கொண்டிருந்தபோது மீண்டும் படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. இம்முறை நாடகக் குழுவை நன்கு நடத்த வேண்டுமென்ற திட்டத்துடன் "பாலாமணி" படத்தில் நடிக்க முடிவு செய்தோம். எட்டையபுரம் காசிப் பாண்டியன் இதற்கு உதவினார். காட்சிகள் தயாரிப்பதற்கு வசதியாக நாடகக் குழுவை எட்டையபுரம் கொண்டு சென்றோம். இளையராஜாவின் சொந்தக் கொட்டகையாகிய இராமச்சந்திர விலாசில் சாமான்களைப் போட்டோம். மேற்கொண்டு புதிய காட்சிகளைத் தயாரிக்கவும் ஏற்

பாடுகள் செய்தோம். இளையராஜா தம் கொட்டகையை அன்புடன் தந்துதவிப் பரிவு காட்டினர். பம்பாயில் 'பாலாமணி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் போது எட்டையபுரம் கொட்டகையில் புதிய காட்சிகள் தயாராகிவந்தன.

படப்பிடிப்பு முடிந்து நாகர்கோவிலுக்குச் சென்றதும் சின்னண்ணாவின் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு எட்டையபுரம் சென்ரோம். இடையே சில மாதங்கள் கடந்தன. இம்முறை எட்டையபுரத்தில் இளையராஜாவின் கொட்டகை அருகிலேயே அவர் மாளிகையை அடுத்தே எங்களுக்குத் தங்குமிடம் தரப்பட்டிருந்தது. நல்ல வசதியான பெரிய விடுதி. அவருடைய சொந்த நாடகக் குழுவுக்காகவே கட்டிய விடுதி. காசி மகாராஜாவின் குழுவிலிருந்த நடிகர்களான நடிகமணி டி. வி. நாராயணசாமி, சங்கர நாராயணன், வெங்கடாசலம், வீராச்சாமி முதலிய நடிகர்களையும் ராஜா விரும்பியபடி எங்கள் நாடகக் குழுவில் சேர்த்துக் கொண்டோம்.

ஏறத்தாழ ஒரு மாதகாலம் எட்டையபுரத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது அந்தக் கருணைவள்ளலும் அவரது செல்வங்களான தேவராஜபாண்டின், ஜெகதீச பாண்டியன் இருவரும் இளஞ் செல்வியான கண்ணப்பாவும் (மன்னரின் ஆண் குழந்தைகளைப் பாண்டியன் என்றும், பெண் குழந்தைகளைக் கண்ணப்பா என்றும் குறிப்பது வழக்கம்) அவரது மனைவியாரும் எங்கள் பால் காட்டிய அன்பையும் பரிவையும் அளவிட்டுச் சொல்ல இயலாது. எங்கள் சொந்த இல்லத்தில் வாழ்வது போலவே இருந்தோம். பகல் பொழுதெல்லாம் பெரும்பாலும் மன்னர் மாளிகையிலேதான் இருப்போம். அவருக்காகத் தயாரிக்கப்படும் உணவு, பலகாரங்கள் அனைத்தும் எங்களுக்குக் கிடைக்கும்.

எனக்கும், தம்பி பகவதி, சகோதரர் சகஸ்ரநாமம் மூவருக்கும் தனிச் சலுகை. மாலை நேரங்களில் நாங்கள் மூவரும் வராவிட்டால் இளைய ராஜாவுக்காகத் தயாரிக்கும் சிற்றுண்டி இரவுவரை எங்களுக்காகக் காத்திருக்கும். அத்தனை அன்பு. அந்தப் பரிவையும் பாசத்தையும் எடுத்துச் சொல்ல வார்த்தைகள் இல்லை.

## இறுதி நாட்கள்

கடைசியாக 1941-இல் நாங்கள் 'சிவலீலா' நாடகத்தைப் பிரமாண்டமான காட்சிகளுடன் தொடர்ந்து நடத்தியபோது காசி மகாராஜா நாடகம் பார்க்க மதுரைக்கு வந்திருந்தார். அப்போது அவர் மிகவும் நலிவுற்றிருந்தார். மதுரையில் அவருக்குச் சிகிச்சை நடைபெற்று வந்தது.

ஒரு நாள் நாங்கள் சகோதரர்கள் நால்வரும் சென்று அவரைப் பார்த்தோம். நோயுற்ற நிலையில் படுக்கையிலிருந்தார். பேசவும் சக்தியில்லை. அந்த நிலையிலும் சிவலீலா நாடகத்தைப்பற்றித்தான் பேசினர்.

எல்லாக் கலைகளுக்கும் ஆதரவாளராய் விளங்கிய எட்டையபுரம் இளையராஜா கலை வள்ளல் காசி விசுவநாதபாண்டியன் அவர்கள் 11-11-1941 இல் எல்லோரையும் கண் கலங்கவிட்டு இறைவனடி சேர்ந்தார். கலைச்செல்வரின் மறைவுக்காகக் கலைஞர்கள் கண்ணீர் வடித்தனர். அவரது கலை உள்ளம் அமைதியடையப் பிரார்த்தனை செய்தனர்.

அப்பெருந்கையின் கலைப்புகழ் என்றும் நின்று நிலவுமாக.



## பாவம் செய்யாதே, நீ நெஞ்சே!

(வேதநாயக சாஸ்திரியார்)

பாவம்செய் யாதே, நீ நெஞ்சே!—நாளைத்
தேவன் நடுத்தீர்வை செய்வான்என் றஞ்சே!
ஆவி இருக்கின்ற கூடு—என்றும்
அழியா திருப்பதே ஆனந்த வீடு
சீவனின் பாதைகண் டோடு—சாபத்
தீட்டையும் கேட்டையும் கைவிட்டுப் போடு (பாவ)

மெய்யான வார்த்தையைச் சொல்லு—அந்த
மேலோக ராசாவின் வீதியில் செல்லு
பொய்யான மாயையை வெல்லு—மெத்தப்
புத்தியாய்ப் பத்தியாய்ச் சித்தமாய் நில்லு (பாவ)

வன்மத்தைப் பேணிவை யாதே—தீய
வஞ்சகம், சூது கவடுசெய் யாதே
கன்மத்தில் வீழ்ந்துதொய் யாதே—நல்ல
காலத்தை வீணில் கழித்துநை யாதே (பாவ)

சாபத்தைக் கட்டிக்கொள் ளாதே—பெற்ற
தந்தைதாய் பேரிலே நிந்தைவிள் ளாதே
கோபத்தைக் காட்டித்துள் ளாதே—சற்
குருவின் வார்த்தையில் ஒன்றும்தள் ளாதே (பாவ)

கல்வித் தனங்கள்பண் ணாதே—கெட்ட
காவாலித் தம்பிகள் வீட்டைநண் ணாதே
இல்லத்தை மெய்என்றெண் ணாதே—சாமிக்(கு)
ஏருத காரியம் செய்யவொண் ணாதே (பாவ)

அறிவைப் படிப்பது துங்கம்—நமக்(கு)
ஆண்டவன் தானே அபரஞ்சித் தங்கம்
பொறியை அடக்குதல் புங்கம்—அப்போ
புத்திமான் ஆர்உனைப் போல்புருஷ தங்கம்? (பாவ)

சுட்டாலும் வெண்மையே சங்கு—என்ன
துன்பம்வந் தாலும் சுகிப்பதே நங்கு
கெட்டோருக் குண்டான பங்கு—கிறிஸ்(து)
ஏசுவின் காயம் அடைக்கலம் தங்கு (பாவ)

என்ன படித்தாலும் மந்தம்—உனக்(கு)
எத்தனை புத்திசொன் னாலும்நிர்ப் பந்தம்
பின்னையும் சூழுமுத் தொந்தம்—பற்றிப்
பிடித்துக்கோ யேசுவின் பாதார விந்தம் (பாவ)

—ஞானத்தச்சன் நாடகம் : IV வகுப்பு
இயற்றியது : கி. பி. 1830

## ரசனைச் சுவை

காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில், பாரத தேசத்து இலக்கண ஆசிரியர், நமக்குத் தெரிந்த மட்டில், விவரியாமல் விட்டு விட்ட சில அமிசங்களை மேனாட்டு இலக்கண ஆசிரியர் விஸ்தாரமாக விவரித்திருக்கிறார்கள். நம் நாட்டு இலக்கண ஆசிரியர் பொருள் யாப்பு அணிகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அலங்கார சாஸ்திரத்தை நம் நூலாசிரியர் ஆழமாக ஆய்ந்திருக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் காவிய சமக்ரத்தைப் பற்றின ஆராய்ச்சிகள் இதுவரை வெளிவந்திருக்கும் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படவில்லை. பெருங் காப்பியத்தில் என்ன என்ன விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும் என்று ஓர் பெரிய ஜாபிதா இலக்கணங்களில் காணப்படும். ஆனால் காவியம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், என்ன என்ன இலக்கணங்கள் பெருங்காப்பியத்துக்கு இன்றியமையாதவை, பெருங்காப்பியங்களின் போக்குக்கும் ஏனைய காவியங்களின் போக்குக்கும் என்ன வித்தியாசம், என்ற விஷயங்கள் நம் இலக்கணங்களில் விசாரிக்கப்படவில்லை. மேனாடுகளில் அரிஸ்தோத்தலன் காலம் முதற்கொண்டு இலக்கண நூலாசிரியர் காவிய அமைப்பைப்பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்மவர் காட்டிலுள்ள மரங்களைத் தனித் தனியே கவனித்துக்கொண்டு வந்து அரணியத்தை மறந்து விட்டார்கள். மேனாட்டவர் மரங்களைக் கவனித்ததோடுகூட அரணியத்தைப் பற்றியும் விசேஷமான ஆராய்ச்சிகள் செய்துள்ளார்கள்.

—வ. வே. சு. ஐயர்
('பாலபாரதி'யிலிருந்து)

# இருவகை நிலங்கள்

தமிழ் நாட்டுச் சொற்பொழிவு மேடை, நாடக மேடை இசை, மேடை, திரைப்படமேடை, பத்திரிகை, புத்தகம் ஆகிய இலக்கியமேடை, என்னும் எல்லா வற்றையும் பொறுத்த ஒரு பொதுவான கணிப்பை இந்தக் கட்டுரையில் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவற்றில் நாம் பெருமைப் பட முடியாத சில நிலைகள் இன்னும் உள்ளன.

மேற்கண்ட துறைகளில் செய்யப்படும் எல்லா விமர்சனங்களிலிருந்தும் படைப்பாளிகள் சுலபமான ஒரு வாதத்தைச் சொல்லித் தப்பிவிடப் பார்க்கிறார்கள். 'என் ஆத்ம திருப்திக்காகச் செய்கிறேன். உங்கள் குறைகள் பற்றி எனக்குக் கவலை இல்லை'— என்று சொல்லி எளிதாகப் பலர் தப்பிவிட முயல்கிறார்கள். இந்த எல்லாத் துறைகளிலும், இவற்றை ஒத்த வேறு பல துறைகளிலும் ஆத்மதிருப்தி என்பது படைப்போன்—நுகர்வோன்—இருவரையும் பொறுத்த விஷயமே ஒழியத் தனியாக ஒருவரை மட்டும் பொறுத்த விஷயமில்லை என்பது மறைக்கப்படுகிறது. நுகர்கிறவனுடைய ஆத்மதிருப்தியும் சேர்த்துத்தான் கணக்கிடப்பட வேண்டும். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் சுவைகளின் இயல்பைப் பற்றிக் கூறும் போது எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக்கூடிய ஒரு தத்துவத்தை மிக அழகாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே'
(தொல்-பொருள்-மெய்ப்)

என்கிறார் அவர். இது நாடக நிலைக்கும் மெய்ப்பாட்டுக்கும் மட்டுமே கூறப்பட்டதாயினும் மேலே கூறிய எல்லாவற்றுக்குமே பொருந்தும். எவ்வாறு பொருந்தும் என்பதைத்தான் இனிமேல் பார்க்க வேண்டும். உய்வோர், துய்ப்போர் - இருசாரார் நிலத்தும் சுவைத்தல் நிகழவேண்டும் என்பது இந்தச் சூத்திரத்தின் பொருள். கலைக்கு உய்ப்போன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு துய்ப்போனும் முக்கியம். உய்ப்போன் நிலத்தில் விளைவதைத் துய்ப்போன் நிலமே சுவைகண்டு முடிக்க இயலும். உய்ப்போன் சுவை துய்ப்போனிடமே பரிபூரணம் அடைகிறது. ஆனால் இன்று பெரும்பாலான துறைகளில் இந்த இரண்டாவது நிலத்தைப்பற்றி கவலைப்படுவதே இல்லை. பொருட்படுத்துவதுமில்லை. உய்ப்போன் தன்னைத்தானே கலையின் அதிகாரியாகப் பாவித்துக் கொள்வதையே எங்கும் காண்கிறோம். இந்த நிலை மாறவேண்டும். மாறியே தீரும்.

சொற்பொழிவு மேடை :

துய்ப்பவர்களை எடைபோடாமல் சம்பந்தமில்லாமல் பேசப்படும் வழவழவென்ற பேச்சுக்கள் மேடைகளில் அதிகமாக நிகழ்கின்றன. கேட்போர் தொடர முடியாத சொற்பொழிவுகள். எதைக் கேட்கக் கூட்டப்பட்ட கூட்டமோ அதைக் கேட்கவே முடியாமல், கிடைத்ததை அல்லது தோன்றியதைப் பேசும் மொழித்திறமை மட்டுமே உள்ள பேச்சாளர்கள். தமிழ் மேடைச் சொற்பொழிவில் அடுக்குமொழி, மோனை, சவடால், போன்ற புறஅம்சங்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம் கருத்துக்குத் தரப்படுவதில்லை. மேடை என்ற உய்ப்போர் நிலத்துப் பேச்சு அவை என்னும் துய்ப்போர் நிலத்து இரசிகத் தன்மையோடு

நா. பார்த்தசாரதி

கலப்பதே இல்லை. இடம், பொருள், இருப்போர் நிலைமை தெரியாத பேச்சுக்களும் அதிகம். மொழிப் பிழையின்றிப் பேசவேண்டும் என்று முயலும்போதே அப்படி முயலுபவர்களாலேயே செய்யப்படும் மொழிப் பிழைகள், உச்சரிப்புப் பிழைகள் ஏராளமாயிருக்கின்றன. சொற்பொழிவைவிட நீளமான தலைமையுரை, தொடக்கவுரையைவிட நாலுமடங்கு பெரியமுடிவுரை, கடைசி சிட்டி பஸ் நேரம் முடியும்போது ஆரம்பிக்கும் முதற் பேச்சாளரின் ஆரம்பம், எல்லாவற்றையும் பார்க்கும்போது பெரும்பாலான கூட்டங்கள் கேட்போரை இன்னொரு நிலமாகக் கருதாமலேயே செயல்படுகின்றன. முழுமையாகத் தமிழறிந்தவர்கள் மட்டுமே உள்ள கூட்டத்தில் தமிழில் பேசாமல் ஆங்கிலத்திலோ இந்தியிலோ பேசுவதும், முழுவதும் ஆங்கிலமே அறிந்தவர்கள் கூட்டத்தில் தமிழில் பேசுவதும் போன்ற நிகழ்ச்சிகளும் இங்கு அதிகம். பேசுபவர் சிலர், கேட்பவர் பலர், மேடை சிறிது, அவை பெரிது—என்ற உணர்வே பலருக்கு இருப்பதில்லை. இரங்கற் கூட்டத்தில் நகைச்சுவை, நகைச்சுவையில் ரசக்குறைவு, பெண்கள் நிறைந்த கூட்டத்தில் அவர்கள் கூசித் தலைகுனியும் விரசம், இலக்கிய மேடையில் அரசியல், அரசியல் மேடையில் வேதாந்தம், எல்லா நிலக்குழப்பமும் இங்கு உள்ளன. பதினைந்து நிமிஷப் பேச்சுக்குப் பன்னிரண்டு நிமிஷ விளிப்புரை கூட உண்டு.

**பதச் சேர்க்கை :**

"தரணியிலே பரணி பாடும் தமிழ்க் குலத்தீர்! சிங்கக் குருளைகாள்! சீறியெழும் மறத்தமிழர் திலகங்களே! ஆரா அமுதனையீர்! அருமைத் தமிழ்ச் செல்வங்களே! வாராது வந்த மாமணிபோல் ஓராயிரம் சூளுரைகள் உரைத்தெழுந்த காளைகளே......" என்று அர்த்தத்துடனோ, அர்த்தமின்றியோ வார்த்தைகளைக் குப்பையாய்க் கொட்டிக் குவித்து கீரையையும் ரோமத்தையும் கலந்து கடைந்ததுபோல் கவிதை நடையில் சாதாரண அர்த்தமும்கூடத் தரமுடியாத பதச் சேர்க்கைகளை அள்ளித்தெளித்து விளிப்புரையே விரிந்து — பேசப்படுபொருள் சென்று தேய்ந்திறும் 'சொற்பெருக்கு'க்களே இன்று சண்டமாருதங்களாக பேர் பெறுகின்றன. பக்குவமடைந்த மொழியில் இவை சிறுபிள்ளைத்தனமான காரியங்களாகவே கருதப்படும். பல்லாயிரம் வெறும்வார்த்தைகளைத் தெரிந்துகொள்ள ஒரு சொற்பொழிவு தேவையில்லை- நல்ல அகராதி ஒன்றே போதும்.

**மூவகை நயங்கள் :**

சொற்கள் பேசும்போதோ, எழுதும்போதோ மூன்று விதங்களால் பொருள் நயம் தருகின்றன. அவற்றுக்கு அவாய்நிலை, அண்மைநிலை, தகுதி என்று பெயர். இந்த மூன்றையுமே இன்று பேசும் பேச்சு வாக்கியங்களிலும், எழுத்து வாக்கியங்களிலும் காண முடிவதில்லை.

சில இடங்களில், 'சாப்பிட்டான்' என்று மட்டும் எழுதினாலே 'எதைச் சாப்பிட்டான்' என்பதை அவாவி உணர முடியும். அதற்குத்தான் 'அவாய் நிலை' என்று பெயர். இன்னும் சில இடங்களில் 'எதைச் சாப்பிட்டான்' என்பதையும் சேர்த்தே வெளிப்படையாகச் சொல்ல வேண்டியிருக்கும். ஆனால் இன்று அவாய் நிலையாகவே விட்டுவிட வேண்டிய இடங்களில் சொற்களை இட்டு நிரப்பியும், சொற்களை இட்டு நிரப்பாவிட்டால் பொருள் குழம்பக் கூடிய இடங்களில் 'அவாய் நிலையாக' விடமுயன்றும் தடுமாறுகிற பேச்சுக்களும், எழுத்துக்களும், நிறைய வருகின்றன: மது, பால், காபி, டீ, எல்லாம் விற்கிற ஓர் ஹோட்டலில் ஒருவன் பால் பருகியதைக் குறிக்க விரும்பினால், 'பருகினான்'—என்று மட்டுமே அவாய் நிலையில் குறிக்க முடியாது. எதைப் பருகினான் என்றும் சொல்லியாக வேண்டும். 'சைவாள் சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டான்' என்பதைக் குறிக்க விரும்பினால் 'சாப்பிட்டான்' என்று குறித்தாலே போதும். 'குளிர்ந்த தண்ணீரைப் பருகினான்' — என்பது போலவும் 'உணவு விடுதியில் உணவு உண்டான்'— என்பது போலவும் ஒன்றோ ஒன்றிறந்தனவோ ஆகிய வெற்றுச் சொற்கள் இன்றைய எழுத்திலும் பேச்சிலும் நிறைய உண்டு. அவை வெற்றுச்சொல்லாக நினைக்கப் படுவதுமில்லை.

அடுத்தது தகுந்த அண்மைச் சொல் இணையும் சிறப்பு மிக மிக முக்கியமானது. இதனை வடமொழியாளர் 'சொற்களின் சந்நிதி' என்பர். 'அண்மை நிலைத்தன்மை' சரியாக சுருதி சேராவிட்டால் பொருள் தடுமாறும். உதாரணத்திற்கு ஒரு சமீபத்துப் பத்திரிகைத் தலையங்க வாக்கியம் தருகிறேன்:

'பொதுத் தேர்தலுக்குமுன் காங்கிரஸ் எதிர்ப்பில் கண்ணிழந்த கூட்டணியினர் இப்படி எல்லாம் வரும் என அறியாதது பாவமே'— என்றெழுத விரும்பிய தலையங்க எழுத்தாளர் ஒருவர்,

'பொதுத் தேர்தலுக்குமுன் கண்ணிழந்த காங்கிரஸ் எதிர்ப்பில் கூட்டணியினர் இப்படி எல்லாம் வரும் என அறியாதது பாவமே'— என எழுதிவிட்டார். பத்திரிகையே நூறு சதவிகிதக் காங்கிரஸ் ஆதரவுக் கொள்கையுள்ள பத்திரிகை. சொற்கள் சரியான முன்னண்மை, பின்னண்மை பெற அமையாததால்—'கண்ணிழந்த காங்கிரஸ்' என்ற இணைப்பில் காங்கிரஸையே திட்டுவது போன்ற பொருள் குழப்பம் ஏற்பட்டு வாக்கியத்தின் நினைத்த பொருள் போய் விடுகிறது. நினைப்பின் தீர்மானம் பதங்களில் அப்படியே இறங்கி நிற்க உதவுவது அண்மைநிலைத் தன்மைதான். இதையும் இன்றைய பேச்சிலும், எழுத்திலும் காணமுடியவில்லை.

இனிமேல் சொற்களின் தகுதிநிலை பற்றிக் காணலாம்.

'அவன் துன்பப்படவில்லை'— என்றோ 'அவன் துன்பத்தைத் தவிர்க்க எண்ணினான்'— என்றோ எழுதவேண்டிய அல்லது பேசவேண்டிய வாக்கியத்தை, 'அவன் துன்பப்பட விழையவில்லை'—என்று சிலர் இப்போது எழுதி வருகிறார்கள். 'விழைதல்'— என்றால் 'முனைந்து விரும்புதல்'—என்று பொருள். அந்தப்பதம் இங்கே தகுதியாக நிற்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். வசனம் எழுதுவதோ, பேசுவதோ, கவிதை எழுதுவதைவிடச் சிரமமானது.

இங்கோ வாக்கியம் எழுதத் தெரியாதவர்கள் உரைநடையும், உரைநடையே எழுதத் தெரியாதவர்கள் கவிதையும், கவிதை என்னவென்றே தெரியாதவர்கள் மகாகாவியமும் எழுத முயலுவதைக் காண்கிறோம்.

'I dont want to take risk' என்பதை நினைத்துத் தமிழில், 'நான் துன்பப்பட விழையவில்லை'— என்றெழுதுவோரும் உண்டு. முழுக்க முழுக்கத் தமிழையே படித்துக் கெட்ட சிலரும், முழுக்க முழுக்க ஆங்கிலமே படித்துக் கெட்ட சிலரும், தமிழும், ஆங்கிலமும் அரைகுறையாகப் படித்துக் கெட்ட சிலரும், என்று வகை வகையாகக் கெட்டவர்கள் இங்கே நிறைய இருக்கிறார்கள். எழுத்துக்கோ, பேச்சுக்கோ, பிறக்கும் நிலம், சென்று விளையும் நிலம், என இரண்டு நிலம் இருப்பதையே அவர்கள் அறிவதில்லை.

### நாடகம் — திரைப்படம்

சொற்பொழிவு மேடையைவிட இருவகை நிலத்தைப்பற்றிக் கவலைப்படாத ரஸக்குறைவுகள் நாடகமேடையிலும் திரைப்பட மேடையிலும் இங்கு மிக அதிகமாகவே உள்ளன. தோற்றம், நடிப்பு, பேச்சு, பாட்டு ஆகிய எல்லா வகையிலும் இருவகை நிலம் புறக்கணிக்கப்படும் இடங்கள் இவை. இயல்தமிழில் பேச்சிலோ எழுத்திலோ பொருள் உணர்ச்சி ஒன்றால் மட்டும்தான் உய்ப்போன் நிலத்தைத் துய்ப்போன் நிலம் பிறழ உணர முடியும். ஆனால் கலைத்துறையில் நாடகமும் திரைப்படமும் பேச்சு, பாட்டு, தோற்றம், மெய்ப்பாடு ஆகிய நான்கு வகையிலும் உய்ப்போன் நிலத்திலிருந்து துய்ப்போன் நிலத்துக்குக் குழப்பமும், பிறழ்ச்சியும் உண்டாகும் காரியங்களைச் செய்வதற்கு இடமும், நிலைகளும் உள்ளன என்பதை அறிய முடிகிறது. நாடகக் கதை, உரையாடல், நடிப்பு, காட்சிகள், பாட்டு, எல்லாம் உய்ப்போன் வசதிக்கும் சக்திக்கும் ஏற்பப் படைத்துக் கொள்ளப் படுவது போல் துய்ப்போன் சுவையை நினைத்தும் அமைக்கப் படுவதில்லை.

உய்ப்போன் நிலத்தில் சோகமாக நினைத்து நடிக்கப் பெறும் ஒரு நடிப்பு துய்ப்போன் நிலத்து நகைச்சுவையாகக் கொண்டு சிரிக்கப்படுவதும், துய்ப்போன் சிரிக்க வேண்டுமென்று உய்ப்போன் நிலத்து உண்டாக்கப்படும் ஒரு நகைச்சுவை துய்ப்போன் நிலத்துச் சிரிப்பை மூட்டத் தவறிவிடுவதும் ரஸ பேதங்கள். திரைப்பட மேடையிலும் இதே ரஸ பேதங்கள் உண்டு.

திரையில் காரணமின்றிக் கதைத் தலைவனும் அவன் காதலியும் ஒரு பெரிய பாடலைப் பாடி முடிகிற வரை ஒரு நீண்ட பூங்காவின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி ஓடியாடித் 'தொளிகலக்குவது' உண்டு. துய்ப்போன் நிலத்துக் களைப்பை உண்டாக்கும் காரியம் இது. துய்ப்போனை மடையனுக்கும் காரியமுமாகும். துய்ப்போன் எங்கே இரசனையில் தளர்ச்சி அடையுமாறு உய்ப்போன் சோரவிடுகிறானோ அங்கே மேடை தோற்கிறது. அவை மேடையை வெல்கிறது. மேடை தோற்க அவை வெல்லும் நிலைமை—அதாவது கலையை வென்று விழுங்கும் நிலைமை கலைக்கே அபாயமானது. துய்ப்போன் நிலத்து பொருத்தமான சுவையை விளைவிக்க முடியாத பேச்சு, தோற்றம், மெய்ப்பாடு, பாட்டு யாவுமே கலையின் ஏலாமைகளாக கருதப்படும். இருவகை நிலமும் விளையாத சுவை இன்பம் பயவாது. உணர்வோன் உணர்த்தப் படுவோன் என்ற இரண்டு எல்லைகளில், உணர்த்தப் படுவோன் சுவைகாணாத வரை இருவகை நிலமும் நிறைவதில்லை.

### இசைமேடை

நமது இசைமேடைகளில் தமிழ்ப்பாடல்கள் மிகக் குறைவாகவே பாடப்படுகின்றன. தெலுங்குப் பாடல்களும், இந்துஸ்தானிப் பாடல்களும் அதிகமாகப் பாடப்படுவதையும் காண்கிறோம். உய்ப்போன் நிலத்து இசை, துய்ப்போன் நிலத்து உணரப்பாடாமையும் புரிந்துகொள்ளப் படாமையும் உண்டு. அர்த்தமே புரியாத பாடல்களைக் கேட்டுக்கொண்டு மணிக்கணக்காக அமர்ந்திருப்பது விந்தையாகவும், விநோதமாகவும் தோன்றுகிறது. தெலுங்குப் பாடல்களையும், இந்துஸ்தானிப் பாடல்களையும் அறவே ஒழிக்க வேண்டுமென்று கூறவில்லை. கலைக்குக் கடுமையான மொழிவரம்பு கூடாதுதான். ஆனால் அதே நேரத்தில் மேடையில் பாடும் பாட்டு அவையால் உணரப்படாது போலியாகக் கண்மூடி ஓசையின்பத்தை மட்டும் இரசிப்பது பாடலுக்குத் தோல்வி. புரியவைப்பதில் மேடையும் தோற்று, புரிந்து கொள்வதில் அவையும் தோற்று — ஏனோதானோவென்று நிகழும் ஒரு கலையினால் என்னதான் பயன் விளையமுடியும்? பொருளும் உணர்ந்து இசையினிமையையும் அநுபவிப்பதுதான் உயர்ந்த இரசனை. மனிதர்களாக இருந்து இசையை இரசிப்பதிலுள்ள ஒரே பெருமை பொருளுணர்ந்து இரசிப்பதுதான். பொருளுணர்ச்சி இல்லை எனின் இசையை மனிதன் இரசிப்பதற்கும், மிருகங்கள் இசையை இரசிப்பதற்கும் வித்தியாசமே இருக்காது.

மனிதன் மனிதனைப்போல் இசையை இரசிக்க வேண்டும். மிருகத்தைப்போல் இசையை இரசிக்கக் கூடாது. மனிதனின் வசதிகளை வைத்துக்கொண்டு மிருகங்களின் அசௌகரியங்களோடு இசையை இரசித்து அல்லல் படுவது எதற்காக? ஆகவே நமது இசைமேடைகளில் இருநிலத்து உடன்பாடும் உள்ள இரசனை வேண்டும். ஏனெனில் சுவை இருவகை நிலத்தும் பிறப்பது.

முடிவாக நமது சொற்பொழிவு மேடை, நமது இலக்கிய மேடை, நமது நாடக மேடை, திரைப்பட மேடை ஆகிய அனைத்து மேடைகளிலும் ஒருவழி போக்குவரவான கைக்கிளைச் சுவை நிகழாமல் இரு வகை நிலத்தும் இயைந்த இரசிகத்தன்மை வர வேண்டும். அப்படி ஒரு பக்குவமான இரசிகத்தன்மை ஏற்படாத வரை நமது கலைகள் வெற்றியடைவதில் பின் தங்கி நிற்கவேநேரிடும் என்பதை வருத்தத்தோடு தான் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது.



## முறைப்பட ஆராய்ந்த தமிழ்

''உழக்குமறை நாலினும், உயர்ந்துலகம் ஓதும்
வழக்கினும், மதிக்கவி னினும்மரபில் நாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்''

என்ற கம்பராமாயணப் பாடலுக்கு சேது சமஸ்தான மகாவித்துவான் **ரா. இராகவையங்கார்** ஒரு கட்டுரையில் கொடுத்துள்ள அற்புதமான விளக்கம் பின்வருமாறு:

''சிவபிரான்றந்த தமிழிலக்கணத்தையே அகத்தியர் உலகிற்குத் தந்தார் என்பதே இதன் கருத்தாம்.........'நான்மறையினும் உலகவழக்கினும் கவின்பெற நூலினும் முறைப்பட ஆராய்ந்து கடவுள் தந்த தமிழ்' என்றதனுலும் அஃதிலக்கணமேயாவதறிக. நான் மறையினுராய்ந்தன:- மொழிக்கு முதற்காரணம் எழுத்தென்றலும், அச்சும் அல்லுமாம் அவற்றின் வேற்றுமையும் கலப்பும் இயக்கமும் கருதி அவற்றிற்கு உயிரையும் உடலையும் உவமையாகக் கண்டு அங்ஙனமே குறியிடுதலும், அவற்றிற்குப் பிறப்பு வருண முதலிய உணர்த்தலும், அவற்றிற்கு மாத்திரை காண்டலும், அவற்றிற் சிலவற்றிற்குப் புலுதங்கோடலும், அறம் பொருள் இன்பப்பகுதி கோடலும், நிலங்கட்குத் தெய்வங்கள் கூறலும், யாழோர் கூட்டமுடன்படலும், அந்தணர் அரசர் வணிகர் வேளாண்பமக்கத்தியல்பு காட்டலும், அங்கதம் பிசி மந்திரம் வாய்மொழி முதலியன வகுத்தலும், பிறவும் ஆம். உலக வழக்கினுராய்ந்தன :—இயற்சொல், திரிசொல், செந்தமிழ்ச் சொல், கொடுந்தமிழ்ச் சொல், மரீஇயன சொல், மருவா முதற்சொல், மங்கலச் சொல், அமங்கலச் சொல், இடக்கரடக்குக் குழூஉக்குறிச் சொல் முதலியனவும், மரபியலிற் குறித்தனவும், பிறவுமாம் மதிக்கவினினுடியன :— தமிழ்நாட்டுத் தொன்று தொட்டுக் கேள்வியான் வந்த அம்மானை வரி, ஊசல் வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, வள்ளைப் பாட்டு, உழத்திப்பாட்டு, குறத்தி பாட்டு, வெறிப்பாட்டு என்பன போன்ற பாடல்கள்பற்றி ஆராய்ந்தனவாம். மதி—நூல். அகத்தியனுராற் செய்யப்பட்டது மூன்று தமிழிலக்கணம் என அறியப்படுதலால் இம் மூன்றுகிய இயல் இசை கூத்து எனப் பாகுபாடு செய்தற்கேற்றவாறு, தமிழ் என்னும் பிண்டப் பொருள் அவரிலக்கணஞ் செய்வதற்கு முன்னே இருந்ததென்பது நன்கறியலாகும்.''

—''செந்தமிழ்''—தொகுதி 3: பகுதி 11
விசுவாவசுஞ புரட்டாசிமீ

# தமிழில் விஞ்ஞானம்

கு. ராஜாராம் பி எஸ்ஸி., பி. எல்.

தமிழ் மொழி மூலம் விஞ்ஞான அறிவு பெற இய லாது என்னும் கருத்து மலையேறி மறைந்து வெகு நாளாயிற்று. தமிழால் எதுவும் முடியும் என்கிற நம்பிக்கை வெகுவாக வளர்ந்துவிட்டது. தமிழ் மொழிக்குப் புதுச் சாத்திரங்களைப் படைக்கும் வலிமை இல்லை என்போர் இன்று மிகக் குறைவு.

ஆனாலும் தமிழில் விஞ்ஞானம் வந்துவிட்டதாக இப்போது கூறமுடியாது. அதே சமயத்தில், வரவில்லை என்றும் சொல்லிவிட இயலாது.

இதுவரை தமிழில் விஞ்ஞான அறிவையும், சாத் திரத்தையும் கொண்டு வருவதற்குச் செய்யப்பட்டுள்ள காரியங்கள், முயற்சிகள் இவை பற்றிச் சற்று கவனிக் கலாம்.

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளில் எஸ். எஸ். எல். சி. வகுப்பு வரை விஞ்ஞானப் பாடங்கள் தமிழில் பயிற்றுவிக்கப் படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை. எஸ். எஸ். எல். சி. வகுப்புவரை விஞ்ஞானத்தைத் தமிழில் போதிப்பதில், அதற்கான நூல்களை எழுது வதில் தோல்வியே ஏற்பட்டது என்பதாகச் செய்தி வரவில்லை. தமிழில் கற்பிக்கப்பட்ட விஞ்ஞானத்தை மாணுக்கர்கள் புரிந்துகொள்ள முடியாமல், வழக்க மாகத் தேர்வுகளில் மிகக்குறைந்த மதிப்பெண்களே பெற்று வருகிறார்கள் என்கிற பேச்சைக் காணோம். முப்பது ஆண்டுக் காலத்தில் சுமார் அரைக் கோடிப் பேர் அறிவியல் துறையில் அடிப்படைப் பாடங்களைத் தமிழில் கற்று வந்திருக்கின்றனர் என்று கூறலாம். வாரத்தில் ஒரு சில மணிநேர வீதம், வருடத்திற்கு ஒரு புத்தகம் வீதம் அவர்கள் படித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கற்றறிவதற்குத் தமிழ் தடையா யிருந்தது என்று சொல்ல இடமில்லை. முப்பது ஆண்டுகளாய் நடைபெற்று வரும் முயற்சி முற்றிலும் வீண் என்று கூறிவிட முடியாது.

ஆனால், முன்னேற்றம் மிகுந்த பிறநாடுகளில், உயர்நிலைப் பள்ளிப்படிப்பு வரை கல்வி கற்றவர்கள் விஞ்ஞான அறிவில் மிக மேற்பட்டவர்களாய் விளங்கு கிறார்களே, இங்கே அப்படி இல்லையே என்று கேட்க லாம். போதுமான விஞ்ஞான அறிவு இங்கே புகட்டப் படாததற்குக் காரணம் மொழிச் சங்கடம் அன்று; பாடத்திட்டத்தில் உள்ள குறைகள், கற்பிக்கும் முறை யிலுள்ள தவறுகள், பாடப் புத்தகங்கள் எழுதுவதில் கடைபிடிக்கும் சரியற்ற முறைகள் போன்றவை காரணங்களாகும், உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரை கற்றுள்ள மாணுக்கர்களின் விஞ்ஞான அறிவு நிரம்பவும் குறைந்த அளவில் இருப்பதேன், அவர் களுக்கு அறிவியல் துறையில் போதுமான ஆர்வம் இல்லாதது ஏன் என்பன ஆராயப்பட வேண்டியவை. இருந்த போதிலும், உயர்நிலைப் பள்ளி வகுப்பு வரை விஞ்ஞானத் துறையில் தமிழ் ஓரளவு பயன்பட்டு

வந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. உயர்நிலைப் பள்ளிகளில் சிறுர்க்குத் தமிழில் விஞ்ஞானம் போதிக்க இயலும் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்று முடிவு கூறலாம்.

கல்லூரிப் படிப்பிற்குத் தமிழை விஞ்ஞானப்பிரிவில் பயன்படுத்தவில்லை. இதுவரை அறிவியற் பாடங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்து வந்துள்ளன. தற்போதுதான் ஒரு சில இடங்களில் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கத் தொடங்கியுள்ளார்கள், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்களில் தொடக்கம் செய்யப் பட்டுள்ளது. புதிதாகப் பாடப் புத்தகங்கள் எழுதப் பட்டுள்ளன. அப்புத்தகங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். பட்டப்படிப்பு வகுப்புக்களுக்குத் தமிழை இதுகாறும் பயன்படுத்தவில்லை. கல்லூரிப் படிப்பில் விஞ்ஞானப் பிரிவில் இப்போது தமிழ் நுழைந்திருக்கும் நிலையை நாம் இரண்டாவதாகக் கணக்கில் எடுத்துக் கொள்வோம்.

மூன்ருவதாக நாம் கவனிக்க வேண்டியவை பொது மக்களுக்கு விஞ்ஞான அறிவு தருவதற்காக எழுதப் பட்ட நூல்கள், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் எளிமையான அறிவியல் நூல்கள் (Popular Science Books) ஒரு சில தமிழில் இதுவரை வெளிவந்துள்ளன. ஒரு சிறிய அலமாரி கொள்ளக் கூடிய அளவிற்குக்கூட அந்நூல்களின் எண்ணிக்கை இல்லை என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். அப்புத்தகங்களை எழுதியவர்களில் பெரும்பாலோர் விஞ்ஞானத் துறையில் முழுநேர ஈடுபாடு உடையவர் அல்லர். கல்வித் துறையில் விஞ்ஞானப் பிரிவில் பணியாற்றும் ஓரிருவர் பொது மக்கள் பயன்படுத்துவதற்காகச் சில அறிவியல் நூல்கள் எழுதியுள்ளார்கள். விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தம்முடைய பழுத்த அறிவினைத் தமிழில் தந்தவர் எவருமில்லை. எனினும், அந்நூல்களுக்குத் தமிழகத்தில் சிறிதளவு வரவேற்பு உண்டு. இயல்பாக விஞ்ஞான மனப்பான்மை குறைவாக உள்ள சமுதாயத்தில், அந்த நூல்களுக்குக் கிடைத்த மிகச் சிறிதளவு வரவேற்பைப் பெரிதாக மதித்துப்பேச வேண்டும். அறிவியல் நூல்கள் தமிழில் வரமுடியும் என்பதைக் காட்டும் வகையில் அந்நூல்கள் அமைந்துள்ளன.

நான்காவதாக, சில ஆண்டுகளுக்கு முன் தமிழில் வெளியிடப் பெற்ற கலைக் களஞ்சியத்தைக் குறிப்பிட வேண்டும். அறிவியல் துறையின் வெவ்வேறு பிரிவுகளைப்பற்றி அதிலே கட்டுரைகள் பல வந்துள்ளன. தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பல மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளது. அமெரிக்கத் தகவல் நிலையம் போன்றவை மொழி பெயர்ப்பு நூல்கள் சில வெளியிட்டுள்ளன.

ஆகவே, இதுகாறும் தமிழில் அறிவியல் துறையில் ஒரு சிறிதளவு முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்று அறிகிறோம்.

**கசப்பு மாத்திரை**

ஆனல், இந்த முயற்சிகள் அளித்திருக்கும் வெற்றி நிரம்பவும் கொஞ்சம். இதற்குக் காரணம் முயற்சியில் உள்ள குறைபாடுகள் என்பதை நாம் உணர வேண்டும். ஆயினும், சரிவர முயலாமல் தமிழ்மொழியின்மீது பழிபோட முற்பட்டு விடுகிறோம் நாம். விஞ்ஞானத்தைத் தருவதற்கான அளவிற்குத் தமிழை வளர்த்தால்தான் சரிப்பட்டுவரும் என்று சொல்லி விடுகிறோம். இதுவரை வெளியான நூல்கள் படிப்பவர்களை நன்கு கவரவில்லை. தமிழில் விஞ்ஞானம் படிப்போர் கசப்பு மாத்திரை விழுங்கும் தொல்லையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இனிய தமிழ், தேன் தமிழ், அமுதத் தமிழ் என்றெல்லாம் பெருமையோடு புகழப்படும் தமிழ் விஞ்ஞானத்தோடு சேரும்போது கசப்பானேன்? விஞ்ஞானத்திற்கு இயல்பாகவே கசப்பு உண்டா? அப்படியே கசப்பு உண்டு என்ருலும், தமிழ்த் தேன் சேரும்போது கசப்புச்சுவை தெரியக்கூடாதே! கசப்பு ஏன் ஏற்படுகிறது, எவ்வாறு போக்கலாம் என்பனவற்றை நாம் அறிதல் வேண்டும்.

தமிழில் இதுகாறும் வந்துள்ள விஞ்ஞான, அறிவியல் நூல்களைப் பார்ப்போமேயானல் ஒரு குறை நமக்குப் புலப்படும். பாடப் புத்தகங்களிலும் அதே குறை தென்படும். அதாவது, இன்னும் தமிழ் விஞ்ஞானத்தைத் தனதாக்கிக் கொள்ளவில்லை. புதிதாக வீட்டுக்கு வந்திருக்கும் மருமகளை, நாத்தனுர்கள் கொழுந்தனுர்கள். முதலியோர் ஐயக் கண்ணேடு அந்நியரைக் காணும் பார்வை செலுத்தி, இன்னும் முற்றிலும் வீட்டுக்குள் சேர்த்துக் கொள்ளாத ஒரு நிலையில் வைத்திருப்பார்களே அப்படி விஞ்ஞானத்தை வைத்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் தமிழெனும் இல்லத்துக்குள் விஞ்ஞானப் பெண்ணைக் கொண்டு வருபவர்கள் கவுன் போட்டபடியே அவளைக் கொணர்வது தான். தமிழ்த் துணிதான் என்ருலும் கவுனுகத் தைத்திருக்கிறது. சேலையாக அமைத்திருந்தால் செம்மையாக விளங்கும்.

இங்கே குறிப்பிடப் பெறுவது, விஞ்ஞானத்தைப் பேச வேண்டிய தமிழ் ஆங்கிலத்தையும் சேர்த்தே பேசுகிறது என்பதாகும். ஆங்கிலத்தில் விஞ்ஞானத்தைக் கற்றுத் தமிழில் அதை எழுதும் போது, ஆங்கிலத்தில் கருத்தை வெளியிடும் பாணியில் தமிழிலும் வெளியிடுகிருர்கள். அதனல், எழுதப்படும் தமிழ் நடை நன்கு புரிய முடியாத ஒன்ருக இருக்கிறது. விஞ்ஞான வண்டி சரியாயிருந்தும் இழுத்துச் செல்லும் மாடு சரியில்லாமல் போகிறது. அப்படிப் பட்ட தமிழ் காரணமாக, படிப்பவர்களுக்கு விஞ்ஞானம் விளங்குவதில்லை. அது விஞ்ஞானத்தின்

குற்றமில்லை. தமிழின் குற்றமும் இல்லை. எழுதுவோர் தாம் குற்றத்துக்கு உரியவர்களாகிருர்கள். ஏனெனில், விஞ்ஞானம் தமிழர்கள் விளங்கிக் கொள்ள முடியாத சாத்திரம் அன்று, ஆங்கிலத்தை விட்டு விஞ்ஞானத்தைப் பிரிக்க இயலாது என்று எண்ணுவதும் சரியன்று. ஆங்கில மொழி ஒன்றினுல் மட்டுமே விஞ்ஞானத்தைப் பேச முடியுமென்ருல், இன்று ரஷ்ய நாட்டில் ரஷ்ய மொழியில் அறிவியல் இவ்வளவு தூரம் உன்னத நிலைக்கு வளர்ந்திராது. ஜப்பான் நாட்டிலும் ஜப்பானிய மொழியில் வெகு உயர்ந்த நிலையை விஞ்ஞானம் எட்டியிராது. விஞ்ஞானத்தை எம் மொழியிலும் கற்கலாம், கற்பிக்கலாம், வளர்க்கலாம் என்பதற்கு ரஷ்யாவும், ஜப்பானும் நல்ல எடுத்துக்காட்டுகள்.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' என்று ஆர்வமிக்க குரலில் பாரதியார் சொல்லியிருக்கிருரே என்று மேலைநாட்டு மொழிகளில் உள்ள நூல்களை எல்லாம் கொண்டுவந்து நம்முடைய அலமாரிகளில் அடுக்கி வைத்துவிடுவதால் என்ன பயன்? வேற்று மொழி நூல்களை வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த்துச் சேகரித்து வைத்துவிட்டால் பயன் விளையுமா? வான்மீகியின் இராமாயணத்தைக் கம்பர் தமிழில் வெறும் மொழி பெயர்ப்புச் செய்திருந்தால் எப்படிப் பயன்பட்டிருக்கும்? கம்ப ராமாயணத்திற்கு மூலம் வான்மீகியின் நூல் எனினும், அதை மொழி பெயர்ப்பு நூல் என்று யாரும் கூறவில்லை. கம்பராமாயணத்தை வழிநூல் என்று சொல்வதை நாம் எல்லோரும் கவனித்திருக்கலாம். அயோத்தியைக் கூடச் சோழ நாடாக்கிக் காட்டுகிருர் கம்பர். வடமொழிக் கதையைச் சிறந்த அசல் தமிழ்க் கதையாகச் செய்திருக்கிருர் அவர்.

## மொழி பெயர்ப்பும் மொழி ஆக்கமும்

விஞ்ஞானத்தை வேற்று நாட்டுச் சாத்திரமாக, அந்நிய இரத்தத்தோடு, இங்கே கொண்டு வந்தால் கம்பன் வழி வந்த தமிழர்களுக்குப் பயன்படாது என்பதை நாம் உணர வேண்டும். தமிழ் நாடி துடிக்கும் படியாக விஞ்ஞானத்தைத் தமிழில் ஆக்க வேண்டும். இதற்கு, மொழி பெயர்ப்புக்கும், மொழி ஆக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொண்டால் நலம்.

வேறு மொழியில் எழுதப்பட்ட ஒன்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை, பத்திக்குப் பத்தி தமிழில் மாற்றிச் சொல்வது மொழி பெயர்ப்பாகும். வேறு மொழியில் சொல்லப்பட்டிருக்கும் விதத்தில், அந்நியத் தன்மையில், அமைப்பில் மாறுபாடின்றி மொழி பெயர்ப்பு அமையும். மொழி ஆக்கத்தில், வேறு மொழியில் எழுதப்பட்ட ஒன்றின் சாரத்தை நன்கு அறிந்து, தமிழில் இயல்பான முறையில், முதல் முதலில் தமிழிலே சொல்வது போலக் கொடுக்க வேண்டும். வேருெரு மொழியில் உள்ள பொருள் தமிழில் புதுப்பிறவி எடுப்பதைத் தமிழாக்கம் என்று குறிப்பிடலாம். மொழி பெயர்ப்பை Translation என்றும், மொழியாக்கத்தை Transcreation என்றும் ஆங்கிலத்தில் சொல்லப்படும். அண்மையில் சென்னை உயர் நீதி மன்றத்துத் தலைமை நீதிபதி திரு. ம. அனந்த நாராயணன் அவர்கள் ஆற்றிய உரையின் போது, வேற்று மொழியிலிருந்து தமிழில் சட்டங்கள் அல்லது சாத்திரங்கள் சமைக்கும் போது மொழியாக்கம்தான் செய்ய வேண்டும்; மொழி பெயர்ப்பை விட மொழியாக்கம் தான் பயனளிக்கும் என்று கூறியுள்ளார்கள்.

எனவே, விஞ்ஞானத்தைத் தமிழில் கொடுக்கும் போது மொழி ஆக்கம் செய்யும் வழியினைப் பின்பற்றினுல், தமிழ் விஞ்ஞானத்தைத் தனதாக்கிக் கொண்டு விடும். அப்போதுதான் தமிழில் அறிவியல் துறை அமைந்திருக்கிற தென்ற பெருமை ஏற்படும். அறிவியல் தமிழ்க் குரலில் ஒலித்தால் தமிழ் மக்களின் இதயத்தின் வழி போய் மூளையினுள் புகும். இதயத்தைத் தொடும் ஆற்றல் படைத்த தமிழ்தான் தமிழனுக்கு உண்மையான விஞ்ஞான அறிவு ஊட்டும். உரிமையோடு விஞ்ஞானம் தமிழ் கூறு நல்லுலகில் உலவி வரலாகும். அதன் விளைவாகத் தமிழன் அறிவியலை வளர்க்கும் ஆக்கமும் ஆற்றலும் பெறுவான், உலகில் விஞ்ஞானச் சாத்திரத்துக்கு அவனுடைய சிறந்த பணி கிடைக்கும்.

## கலைச் சொற்கள்

கலைச் சொற்களை உண்டாக்குவதிலும் நாம் பெருங்குறை காண்கிருேம். சிலர், கலைச் சொற்கள் தமிழில் இல்லாததால், விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறுவதற்குத் தமிழ் தகுதி அடையவில்லை என்று புலம்புகிருர்கள். முதலில் கலைச் சொற்களின் பட்டியலைத் தயாரித்துக் கொண்டால்தான் விஞ்ஞானம் தமிழுக்குள் நுழைய இயலும் என்று கதறுகிருர்கள். கலைச் சொற்கள் இல்லை, கலைச் சொற்கள் இல்லை என்னும் அழுகைக் குரல் கேட்டவண்ணம் இருக்கிறது. மேற்படி அழுகை ஒலத்தைக் கேட்கும் போது, சிவ பெருமான் தமிழ் மொழியைப் படைக்குமுன் சொற்களுக்குப் பொருள் தரும் அகராதியை அல்லது நிகண்டு வைத் தயாரித்து முடித்துவிட்டுத்தான், மொழியை வெளியே விட்டிருப்பாரோ என்னும் ஐயம் தோன்றுகிறது.

கலைச் சொற்கள் யாவும் ஏற்கனவே தமிழில் இருந்திருக்க வேண்டும்; நன்கு ஆராய்ந்தால், இன்றைய வேற்று மொழிக் கலைச் சொற்கள் எல்லாவற்றுக்கும் இணையான சுத்தமான தனித் தமிழ்ச் சொற்கள் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தன என்பதை அறியலாம் என்று கூறுவோரும்

உண்டு. இருபதாம் நூற்ருண்டில் கண்டு பிடிக்கப் பட்டுப் புதிதாகப் பெயரிடப்பட்ட ஒன்றுக்குக்கூடத் தமிழ்ச் சொல் ஆதியிலேயே உண்டு என்று 'இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே' எனும் பல்லவி பாடிக்கொண்டிருப்பவர்கள் சிலர் சொல்லுகிருர்கள். பழந் தமிழைத் துருவி ஆராய்ந்து கண்டு பிடித்தால் எல்லாம் கிடைத்துவிடும் என்று பழைய இரும்புக் கடைக்குள் தள்ளுவார்கள் அவர்கள்.

இன்னும் சிலர், 'ஆங்கிலத்தில் உள்ள கலைச் சொற்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டியதுதான். அப்போதுதான் அறிவியலைச் சரியான பொருளுடன் புரிந்துகொள்ள முடியும் என்று விரிந்த மனப்பான்மையில் விளம்புவதாகச் சொல்லிக் கொள்கிருர்கள். தனித் தமிழ், தனித் தமிழ் என்று அடித்துக் கொள்வது குறுகிய நோக்கத்தின்பாற்படும் என்பதால், விரிந்த மனப்பான்மையில் ஆங்கிலச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் துணியை மிக விரிக்கிருர்கள் இச் சாரார். இவர்களது கூற்றுப்படி, ஆங்கிலம் ஒன்றின் மூலமே தமிழ் விஞ்ஞான அறிவைச் சேகரிக்க வேண்டும் என்று ஆகிறது. ரஷ்ய நாட்டில் எத்தனையோ ஆராய்ச்சிகள் நிகழ்ந்து ரஷ்ய மொழியில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வருகின்றன. ரஷ்ய மொழியைக் கற்றுத் தமிழில் அந்த ஆராய்ச்சிகளின் பலனை எடுத்துக் கூறக் கூடாதா? அக் கட்டுரைகள் எழுதுவோர் புதிதாகப் பிறப்பித்துள்ள ரஷ்ய மொழிக் கலைச் சொற்களை எடுத்துக் கொள்வதா, அல்லது அந்த ரஷ்ய மொழிச் சொற்களுக்குச் சமமாக ஆங்கிலத்தில் சொற்கள் உண்டாக்கப்பட்டால் ஆங்கிலச் சொற்களை மட்டுமே எடுத்துக் கொள்வதா என்னும் கேள்வி எழ இடமுண்டு. இக்கேள்விக்கு என்ன பதில் சொல்வது? ஆங்கிலக் கலைச் சொற்களையே பெரும்பாலும் பயன்படுத்திக் கொண்டுவந்து, திடீரென்று பிறிதொரு மொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டால் ஓர் ஒழுங்கு கெட்டுவிடுமல்லவா?

### ஒரு நல்ல யோசனை

கலைச் சொற்களை உருவாக்குவதில் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுவது இயற்கை. பல பல பேசிக் கொண்டு ஒரு முடிவின்றி காலந் தாழ்த்துவதை விடுத்து, ஓர் உருப்படியான கொள்கையை மேற்கொண்டால் நல்லது. இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் மட்டுமின்றி, தமிழ் கூறு நல்லுலகம் முழுவதிலும் அந்த ஒரே கொள்கையைக் கைக்கொள்வது நலம். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் உரை ஆற்றிய இலங்கையைச் சேர்ந்த திருமதி மகேசுவரி அம்மையார் கலைச் சொற்கள் தயாரிப்பதற்கு நல்ல யோசனை சொன்னுர்கள். அவர்களுடைய யோசனை நடைமுறைக்கு ஒப்பக்கூடியதாக உள்ளது. அவர்கள் கருத்துப்படி, பிற மொழிச் சொல் ஒன்றுக்குத் தமிழில் வார்த்தை உண்டாக்கும்போது, முதலில் பொருத்தமான தமிழ்ச் சொல் பழைய நூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றில் இருக்குமா என்று ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். அப்படித் தேடிக் கிடைக்கவில்லையாயின், வேற்று மொழிச் சொல்லைத் தமிழுக்கு உகந்த முறையில் மாற்றி அமைத்து உபயோகிக்கலாம். அல்லது, புத்தம் புதிய தமிழ்ச் சொல் ஒன்றினை உருவாக்கலாம். புதுச் சொல், பிறந்ததிலிருந்து தனக்குரிய பொருளுடன் உலாவி வர வேண்டும். நாளடைவில் அச் சொல் வழக்கிற்கு வந்துவிடும். பிற மொழிச் சொல் ஒவ்வொன்றினுக்கும் ஆளுக்கொரு புதுச் சொல்லாக ஆயிரக் கணக்கில் உற்பத்தி செய்து, தேவையற்ற சொற் பெருக்கம் நிகழவிடக் கூடாது. உலக முழுவதிலும் உள்ள தமிழர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ள வசதியாக, குழு அல்லது குழுக்கள் அமைத்து, அவை புதுச் சொற்களை அங்கீகரித்து அனைவருக்கும் தெரியும்படி செய்ய வேண்டும். இவ்வாறு சில உருப்படியான கருத்துக்களை அந்த அம்மையார் தெரிவித்தார்கள்.

இப்போதைக்கு மேற்குறித்த கொள்கைகளைப் பின்பற்றுவது போதுமானது. வருங்காலத்தில் அறிவியல் துறை தமிழில் கப்பும் கிளையுமாக வளரும்போது, தமிழ் தன்னைத்தானே நன்கு பார்த்துக்கொள்ளும்.

புவியரசர் மணிமுடியால் தழும்பு பெற்ற
பொற்கழலான் குலோத்துங்கன் கலிங்கம் வென்று
குவிதனமும் கடகரியும் கவர்ந்து சீயக்
குருஜோபோற் பொலிந்திட்ட காட்சி கண்டு
கவியரசே! நின்னுள்ளத் துணர்ச்சி பொங்கிக்
காலத்தால் வாடாத சொற்பூக் கொண்டு
நவநவமாய் நீபுனைந்த பனுவல் சூடி
நல்வேந்தன் பூரித்தான் குன்றம் போல.

வடகலிங்கம் வென்றுசயத் தம்பம் நாட்டி
வண்டையர்கோன் தொண்டைமான் கொண்டு வந்த
திடமுடைய வாகையினிற் கவிஞர் வேந்தே!
சீராக நீமணத்தை ஏற்றி விட்டாய்!
மடல் விரிந்த தாமரையை மறந்து விட்டு
மாசற்ற திருமடந்தை யினிதே வைகத்
தடமலைபோல் அபயன்தோள் விரியச் செய்தாய்!
சயங்கொண்டாய்! செந்தமிழின் நயங்கொண்டாயே!

செவ்விமிகு பாஸ்கரன்போல் ஒளியை வீசித்
திகழ்ந்திட்ட தொண்டைமான் கலிங்கம் வென்று
வெவ்வலியால் சயத்தம்பம் நிலைநி றுத்தி
வீரர்கள்தம் நெஞ்சத்தில் தெய்வ மானுன்.
தெவ்வரிலாக் கலையுலகத் தலைவ! நீயோ
தினந்தோறும் எம்முள்ளத் துயரைச் சாய்த்துத்
திவ்வியமாய்க் கலைத்தம்பம் நாட்டு கின்ருய்!
சிரஞ்சீவி யுனையன்றிப் பிறரு முண்டோ?

மண்ணுலகைக் கவர்ந்திட்ட செல்வம் வாழ்வு
வானரசு பெருங்குன்றம் யாவும் ஓர்நாள்
பண்ணிசைத்து வருகின்ற கால வெள்ளப்
பாழ்வயிற்றில் மறைந்தொழியும் உண்மை; ஆனல்
தண்ணமுதக் கவிவேந்தே! நினது நெஞ்சத்
தடத்தினிலே மலர்ந்திட்ட பரணித் தீபம்
எண்ணரிய வுளந்தோறும் சோதி வீசி
யிடற்ற மோகத்தை வழங்கி வாழும்.

காதலர்கள் நெஞ்சத்தே மெல்ல மெல்லக்
கனிகின்ற வுணர்வுகளைப் பிரிவு நல்கும்
வேதனையை, ஊடலினைச், சொல்லுக் கப்பால்
விளைகின்ற இன்பத்தைக் கவிதை யாக்கிப்
பூதலத்துள் எம்முளத்தை உருக்கி விட்டாய்!
பொன்னுட்டி னின்பத்தை நிரப்பி வைத்தாய்!
மாதவருக் கெட்டாத காட்சி தந்தாய்!
மணிப்புலவ! சுவர்க்கத்தை யிறக்கி விட்டாய்!

எங்குமுள பேராற்றல் கல்லின் கண்ணே
எழில்மிக்க இதயத்தை வைத்த போது
மங்கலமாய் மாமல்லைச் சிற்பம் மெல்ல
மலர்ந்ததுகாண்; இசைத்தேவி குவளைக் கண்கள்
பொங்கிவரு மூங்கிலினிற் படர்ந்த போது
புவிசிலிர்க்கப் பண்பிறந்த; வுனது நாவைத்
துங்கமுறு கலைச்செல்வி மேடை யாக்கத்
தூப்புலவ! நற்பரணி எழுந்த தம்மா!

மன்னுபுகழ்க் கலைமடந்தை வேதந் தன்னை
வளஞ்சான்ற புகழ்வீணை யாக மாற்றி
நன்னயஞ்சால் ஏழிசையைப் பாடிப் பாடி
நல்லுளத்தில் அலுப்புற்றுப் புலவ ரேறே!
நின்னையருட் கரத்தினிலே மெல்ல ஏந்தி
நிகரற்ற வேய்ங்குழலாய் இனிதே மாற்றிப்
பொன்னுலகும் மண்ணுலகும் பூரிப் பெய்தப்
பொலிவுடைய நவரசத்தை வழங்கு கின்ருன்.

# சயங்கொண்டான் கனிந்தளித்த பரணி

கம்பராமன்

நிரந்தரமாய் ஒளிர்கின்ற இயற்கை பெற்ற
நிகரற்ற ஓவியமும் மூல மூர்த்தி
சுரந்த அருட் பெருக்கினிலே விரும்பித் தந்த
சுவைமிக்க நல்லிசையும், காத லித்துப்
பரந்தநின திதயமெனும் சோலை யின்கண்
பார்வியக்க விண்சிலிர்க்க நயந்து கூடிக்
கரைந்துகரைந் தொன்ருகிக் கருவி ருப்பக்
கலைப்பரணி பிறந்ததுகாண் கலைஞர் கோவே!

எண்ணரிய அண்டமெனும் கனிகள் தொங்கும்
இயற்கையெனும் தனிமரத்தின் வித்தா யுள்ள
புண்ணியநன் னெஞ்சத்தில் முடியை வைத்துப்,
போர்க்களத்தில் திருவடியைப் பைய நீட்டி,
வண்ணவண்ணப் பண்ணிசைத்து மெல்ல மெல்ல
வளர்கின்ற காதலிலே நெஞ்சைச் சார்த்திக்
கண்ணுறங்கும் போதினிலே நினது நெஞ்சக்
கனவன்ருே தவப்பரணி! கவிஞர் வேந்தே!

வையைநதிக் கரையினிலே யவத ரித்து
வளம்மிக்க சங்கத்தில் மங்கை யாகிப்
பொய்யகன்ற பாணர்கள்பால் இசையைக் கற்றுப்
பொருநர்கள்பால் நிகரற்ற கூத்தில் தேர்ந்து
செய்யமணிக் கவிச்செல்வி நினது நாவிற்
சிலம்பலம்ப வளைகுலுங்க வண்டு பாடத்
துய்யகலை வாணருளம் மையல் கொள்ளச்
சோதிநட மாடுகின்றாள் புலவர் கோவே!

சிங்கத்தின் இதயத்தில் வீரம் வாங்கித்
திரண்டுவரு முகிலின்பா லிடியை வாங்கிப்
பொங்கிவரு கடலலையில் எழுச்சி வாங்கிப்
போர்ப்புலியின் கண்களிலே செந்தீ வாங்கி
சங்கரன்றன் முகத்தினிலே சீற்றம் வாங்கிச்
சராசரத்தின் உளந்தோறும் ஆசை வாங்கி
மங்கலமாய் நீபுனைந்த பரணிப் பாடல்
மறக்குலத்து வீரத்தின் விளைவே யன்றோ?

மல்லிகையின் நறுமணத்தைச் சொற்க ளாக்கி
மதிபொழிந்த நிலாக்கடலில் ஊற வைத்து
மெல்லியலார் மணிமொழியைப் பண்க ளாக்கி
விரும்புசுவைக் கரும்பினிலே துயில வைத்து
வெல்லவொணா மதுக்களிப்பைத் தொனிக ளாக்கி
விரகதா பத்தினிலே மூழ்கச் செய்து
வல்லமையால் அவற்றையெலாம் ஒன்று கூட்டி
மணிக்காதற் கவிபுனைந்தாய்! கலைஞர் கோவே!

வெள்ளைநிற மல்லிகையில் அகிலாண் டத்தின்
வித்தான பரம்பொருளைக் காண வல்லார்
கள்ளமிலா மழலையினில் நான்கு வேதக்
கனிரசத்தின் சாரத்தைச் சுவைக்க வல்லார்,
விள்ளரிய சிவச்சுடரைக் காதல் நல்கும்
வேல்விழியிற் காணவல்லார் நினது பாவில்
வள்ளலே! துறக்கத்துக் கப்பால் மேவும்
வளமான பேரின்ப நிறைவு காண்பார்.

சுந்தரமார் கலைக்கோவே! இயற்கைத் தேவி
சுடர்கின்ற தீப்பிழம்பாம் முகிலி னாலே
அந்தியினிற் படைத்திட்ட கோபு ரங்கள்
அழகுநகர் மலர்ச்சோலை—யாவும் பாழாய்ச்
சந்ததமும் மறைவதைப்போல் அபயன் வாழ்ந்த
தனிக்கோயில் வெண்கவிகை செங்கோல் யாவும்
வந்தசுவ டில்லாமல் மறைய வெள்ளி
மாமலைபோல் நின்பரணி பொலிவ தென்னே!

மெய்ம்மையாம் சுவைத்திறந்தேர் காதற் செல்வன்
வேல்விழியாள் நாணத்தால் நிலத்தை நோக்கிச்
செம்மையார் அதரத்தே நெளிய விட்ட
சிறுநகையில் தன்னுணர்வு கரைந்த தாலே
வெம்மைதவிர் மணித்தடத்தைக் கோலக் குன்றை
விரிபொழிலை மறந்தாற்போல் கலைஞர் கோவே!
எம்முள்ளம் நின்னுடைய கடைதி றப்பில்
ஏக்குற்று மேற்செல்ல மறுக்கு தம்மா!

தொண்டைமான் கலிங்கத்து நாட்டி வைத்த
சுடர்த்தம்பம் நிற்கின்ற வீறு நோக்கி
வண்டுறங்கு பூங்குழலி விசய மங்கை
வாளபயன் திருப்புயத்து மாலை சூட்ட
மண்டியெழு காதலினால் வந்த போது
மலரடியிற் சிலிர்த்திட்ட சிலம்பி னோசை
தண்டமிழ்நா டொருகோடி காலம் நோற்ற
தவப்பயனாற் பரணியாய் விளைந்த தம்மா!

உள்ளமெனும் வானத்து நிலவுந் திங்கள்
ஒப்பில்லாக் கலைமடந்தை மகிழும் கோயில்
கள்ளமிலாக் கற்பனைகள் மலரும் பூங்கா
காலத்தா லழியாத இமயக் குன்றம்
விள்ளரிய பேரின்பம் பொழியும் மேகம்
வெந்துயரச் சருகெரிக்கும் புனிதச் செந்தீ
தெள்ளவொணா மெய்யுணர்வை வழங்கும் கீதம்
சயங்கொண்டான் கனிந்தளித்த பரணி யம்மா!



'கம்பன் புகழ் பாடிக்
கன்னித் தமிழ் வளர்'த்தார் !

படம் உதவி : ஸ்ரீதர்

"கலாநிலையம்" ஆசிரியர்

டி. என் சேஷாசலம்

(1891—1938)

# கலாநிலயம் சேஷாசலனர்

கலாநிலயம் ராஜகோபாலச்சாரியர்

'ஐயர்' என்று மாணவர்களால் அருமையின் அழைக்கப்படும், காலஞ்சென்ற அறிஞர் சேஷாசலம் அவர்கள் ஓர் அதிசயப் பிறவியே ஆவர். அவர் சென்னை புரசைவாக்கத்தில் வேளாளத் தெருவில் வாழ்ந்துவந்தார். அவரை நினைக்கும்பொழுது என் நினைவின்முன் நிற்பது 1920-ம் ஆண்டாகும். அந்த ஆண்டில்தான் எனக்கும் அப்பெரியாருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பை ஜன்மாந்தரத் தொடர்பாக நான் நினைக்கின்றேன்.

நான் படிப்பை முடித்துக்கொண்டு ஜீவனோபாயம் தேடவேண்டிய நிலையில், அன்னிபெசண்டு அம்மையார் தலைமை பூண்டு நடத்திய ஹோம்ரூல் இயக்கத்தில் கலந்துகொண்டு மேடைப் பிரசங்கம் செய்தலை மேற்கொண்டேன். அப்பொழுது எனக்கு வயது இருபத்து மூன்றுதான். ஐயர் என்னைவிட ஆறுவயது பெரியவர். அவர் 1891-இல் தஞ்சை ஜில்லாவில் பிறந்தவர்; நான் பிறந்த ஆண்டு 1897. தஞ்சை ஜில்லாவில், ஒரு சிறு கிராமத்தில் பிறந்த எனக்கும் சென்னையில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தும் அவருக்கும் இடையெழுந்த தொடர்பு, விதி கூட்டிவைத்த தொடர்பாகும்.

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவர்களுக்கும் அதற்குமேல் படிக்க முடியாதவர்களுக்கும் ஆங்கில இலக்கியப் பயிற்சி அளிக்கும் கருத்தில் சேஷாசலம் ஐயரால் நிறுவப்பெற்ற ஒரு மாலைக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரிக் கட்டிடத்தில் நடந்துவந்தது. ஒரு நாள் மாலை பச்சையப்பன் கல்லூரி சென்றேன். ஒரு பதினைந்து பேர் அங்கே இருந்தனர். ஐயர் அவர்கள் **ஜான் அரசன்** என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தை நடத்திக்கொண்டிருந்தார்.

அவர் ஓதும் முறையில் ஒரு புதுமையைக் கண்டேன். வகுப்பு முடிந்து வீடு திரும்பும்பொழுது, அவர் என்னயல் வந்து என்னைப்பற்றி விசாரித்தார். அன்றே, அவரோடு அவர் மனை சென்றேன். சிறிது நேரம் அவரோடு பேசிக்கொண்டிருந்துவிட்டுச் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள எனது ஜாகை திரும்பினேன். நான் திரும்புகையில் அவர் ஞாயிற்றுக்கிழமை யன்று காலையிலே வந்துவிடுமாறு பணித்தார். அங்ஙனே செய்தேன். அன்றைய பகல்பொழுதை அவர் மனையிலேயே கழித்து மாலை திரும்பினேன். அதுமுதல், விடுமுறை நாட்களில் அவரது மனையிலே எனது பொழுது கழியும்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை ஐயர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். "ஐயா, நீ கம்பனைப் படி. தினந்தோறும் இரவில் தூங்குமுன், படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டு, நீ செய்யுங் காரியங்கள் எக்கருத்தின் அடிப்படையின என்பதை ஆராய்ந்து பார்" என்று அவர் எனக்குக் கூறிக் கம்பராமாயணப் பாசுரங்கள் சிலவற்றையும் விளக்கலானார். பாசுரங்கள் என்னைக் கவர்ந்தன. மாலையில் அவருடன், அவர் நடத்திவந்த இரவுப்பாடசாலைக்குச் சென்று, மனை திரும்பினேன்.

மறுநாள் காலை நான் அவர் திருமனை சென்றேன். தமிழ்ப் படிக்கவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்தேன். "நன்று; ஒரு பாஷையில் பயிற்சியுள்ள தமிழன், தமிழைப் பயிலல் எளியதே" என்று கூறி, உரையுடன் கூடிய **நளவெண்பா** நூலை என்னிடம் கொடுத்து, "இந்நூலை மனப்பாடம் செய்," என்றார். ஒருமாத காலத்தில் 300 செய்யுள்களைப் பாராயணம் செய்து விட்டேன். அதன்பின் உரையுடன் கூடிய

கம்பராமாயணத்தின் பாலகாண்டத்தைக் கொடுத்து ''மனத்திற்குப் பிடித்த செய்யுள்களை மனப்பாடம் செய்'' என்ருர். மூன்றுமாத காலத்தில் 700 செய்யுள்களை மனப்பாடம் செய்தேன். அதன்பின் அவர் வாசுதேவ முதலியார் எழுதிய சிற்றிலக்கணத்தைக் கொடுத்து, ''இதை முயன்று படி. சந்தேகம் ஏற்பட்டால், என்னைக் கேள்'' என்ருர். படித்து முடித்தேன். பிறகு நன்னூலையும் அயோத்தியா காண்டத்தையும் படித்தேன். நன்னூல் முடித்த பிறகு, ''தொல்காப்பியம் படிக்க வேண்டும்'' என்றேன். ''அதைப் பின்னர் படிக்கலாம்'' என்று கூறி, இராயப்பேட்டையிலும், புரசைக்கு அருகாமையிலுள்ள கொசப்பேட்டையிலும் தாம் நடத்திவந்த இரவுப் பள்ளிகளில் ஆங்கிலமும் தமிழும் போதிக்கும் வேலையை எனக்கு அளித்தார். அவ் வேலையைச் செய்துகொண்டே கம்பராமாயணத்தைத் தொடர்ந்து படித்தேன்.

*  *  *

ஐயர், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கையிலேயே, புரசையில் இரவுப் பள்ளிக்[illegible]கூடத்தை ஆரம்பித்து நடத்திவந்தவர். சில[illegible] வருஷங்களில் பெரம்பூர், இராயப்பேட்டை, தொ[illegible]கொசப்பேட்டை ஆகிய இடங்களிலும் இரவுப் ப[illegible]ள்ளிகள் விரியலாயின. இவரால் நடத்தப்பெற்ற [illegible]பள்ளிகள், **கலாநிலய இரவுப்பாடசாலை** என்ற பெய[illegible]ன. இவரது முதல் மாணுக்கர்களில் குறிப்பிடத்[illegible]தக்கவர் திருவாளர்கள் குப்புசாமி, மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, மதுரை முதலியார், அர்ச்சுனன் ஆயவராவர். இந்நால்வரும் சிறந்த புலமையினர். இவர்களில் ஒருவரான வேணுகோபாலப் பிள்ளை **மகாவித்வான்** என்ற பட்டத்தோடு விளங்குபவர்.

எக்கருத்தில் ஐயர் இப்பாடசாலைகளை நடத்தி வந்தார் என்பதை நேயர்கள் அறிதல் அவசியமாகும். ஒரு நாள் ''எக்கருத்தில் இப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன?'' என்பதை அவர் எனக்கு எடுத்துரைத்தார். ''நான் மேற்கொண்ட வக்கீல் தொழிலில் எனக்குப் போதுமான வருவாய் கிடைக்கின்றது. கார்ப்பொரேஷன் அளிக்கும் உதவித் தொகை (Grant) என்னை இதனில் செலுத்தவில்லை. நான் செய்வது தமிழ்த் தொண்டோ, தமிழ் வளர்ச்சி கருதிய முயற்சியோ அல்ல. தொண்டு என்பது வஞ்சனையுடைய சொல். 'தொண்டு செய்தல்' என்பதில் தன்னை ஒருவன் பிரித்து உயர்த்திக் கொள்ளலே நிகழ்தற்குரியது. தமிழ் வளர்த்தலும் என் காரியம் அன்று. இறை நெறி வளர்ந்த மேன்மக்கள் வாய் மலர்ந்த நூல்களைப்படிப்பதால், வளரவேண்டியவர் நாம். அலையடங்கியவோர் நல்வாழ்க்கை கைவரப் பெறுதற்குரிய மனப் பக்குவத்தைத் தரும் செம்மையைத் தமிழ் இலக்கியங்களிலும், சிறப்பாய்க் கம்பராமாயணத்திலும் கண்டேன். நான் பெற்ற செல்வத்தை மற்றவரும் பெற்று ஆன்மச் செல்வர்களாய் வாழவேண்டும் என்னும் நினைவே என்னை இதனில் செலுத்தியது. ஆகவே நான் ஒரு தர்மத்தைச் செய்கின்றேன். தர்மம் இணைக்கும்; தொண்டு பிரிக்கும்'' என்று அவர் தமது கருத்தைத் தெரிவித்தார். அவரிடம் பயின்றவரில் பெரும்பாலோர் நெறி கடவா வாழ்க்கையினராய் இன்றும் வாழ்ந்துவருகின்றனர்.

ஐயர், தாம் மேற்கொண்ட வக்கீல் தொழிலோடு, இரவுப் பாடசாலையையும் நடத்திக் கொண்டு வந்த பொழுது நீதிக்கட்சி (Justice Party) என்ற பெயரில் ஓரியக்கம் ஓங்கி வளர்ந்து பார்ப்பனர்மேல், அல்லாதாருக்குப் பகையை எழுப்பி வந்தது. அக் காலை, ஐயரது நண்பர்களில் சிலர் (அவர்கள் பெயர் வேண்டா) பார்ப்பனரிடத்தில், அவரல்லாத தமிழர் படித்தலும் பிழையென்று, புரசையில் போட்டிப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். ஐயர், அதற்காக வருந்தவில்லை. தமது பாடசாலை மாணவர்களிடம் ''புதிய பள்ளிகளைப் பார்ப்பனர் அல்லாத நண்பர்கள் ஏற்படுத்தியுள்ளனர். அப்பள்ளியில் வந்துசேருமாறு உங்களையும் அழைப்பதாக அறிகின்றேன். நீங்கள் படிக்கவேண்டுவதுதான் முக்கியம். அங்கே போய்ச் சேரவிரும்புபவர்கள் அப்படியே செய்யலாம்'' என்று கூறினர். ''சிலர் சென்றனர். ஆனுல் சில மாதத்திற்குள் அவர்கள் இங்கே திரும்புதலும் நிகழ்ந்தது,'' என்று அவர் ஒருநாள் எனக்குச் சொல்ல நேர்ந்தது.

அப்பொழுது கார்ப்பொரேஷன் கல்விக் கமிட்டியின் தலைவராய், நீதிக்கட்சியின் பிரமுகர்களில் ஒருவராய் விளங்கிய திரு. இராமசாமி முதலியார் இருந்தார். இப்பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளான டிப்டி இன்ஸ்பெக்டர்கள் ஐயரது பள்ளிகளைப் பாராட்டி எழுதமாட்டார்கள். அரசாங்கம் அங்கீகரித்த பாடப் புத்தகங்களைக் கொள்வதில்லை என்றும், போதனு முறைப் பயிற்சிபெற்ருேர் உபாத்தியாயர்களாய் நியமிக்கப்படவில்லை என்றும், பொது அறிவைத் தரும் பூகோளம், சரித்திரம் போன்றவை பாடத்திட்டத்தில் இடம் பெறவில்லை என்றும், தமிழிற்கே தனியிடம் தரப்படுகின்றனது என்றும், காலத்தோடு ஒத்த படிப்பினை மாணவர்கள் அங்கே பெறுவதற்கில்லை என்றும், அவர்கள் எழுதுவார்கள். மேற்பார்வை அதிகாரிகளின் மதிப்பீட்டைக் கண்ட முதலியார் அவர்கள் ஐயரது பள்ளிகளையும் மற்றவர் நடத்தும் பள்ளிகளையும் பார்வையிட்டார். உதவிப் பணம் கொடுக்கும் மாதத்தில் ஒருநாள் தம்மைக் காஸ்மாபாலிட்டன் கிளப்பில் வந்து சந்திக்குமாறு, முதலியாரிடமிருந்து ஐயருக்கு ஒரு கடிதம் வந்தது. ஐயர் சென்ருர். அதிகமான உதவித்தொகையையும் (Grant) விசேஷ உதவித் தொகையையும் (Special Grant) தாங்கிய செக்கைக் கொடுத்தார். மற்றவர்களுக்கு இது வருத்தம் தந்தது. சிலர் முதலியார்மேல் கோபமுங்கொண்டனர். அவர்

களில் இரண்டொருவர் முதலியார் அவர்களைச் சந்தித்து, "ஐயா, பார்ப்பனர் நடத்தும் பள்ளிகளுக்கு அதிகப் பணம் உதவுவதேன் ?" என்று கேட்டனராம். அதற்கு அவர் "அவரது பள்ளிகளில் எளியவர்களின் கண்களைத் திறந்துவிடும் வேலை நடக்கின்றது. மற்றவர்களில் பலர் உதவித்தொகையில் நாட்டம் உடையவராகவே வேலைசெய்கின்றனர்," என்று பதில் மொழிந்தாராம். முதலியாருக்குப்பின் அக்கமிட்டியின் தலைமை தாங்கிய டாக்டர் சாமிநாதன் அவர்களும் ஐயர் பள்ளிகளுக்குத் தாராளமாய் உதவி வழங்கி வந்தது எனக்குத் தெரியும்.

இரண்டொரு வருடங்கள் சென்றன. படித்த வகுப்பார் என்பவரில் பலர் மண்ணினும் பொன்னினும் மேலான ஆன்மச் செல்வம் ஒன்றுள்ளது, அது நல் வாழ்க்கைக்கு அவசியமானது, என்ற எண்ணமில்லாதவராயும், ஈகையாதி நற்குணங்களுக்குச் செலவு கொடுத்தவராயும், யாக்கைச் செழிப்பிலே மனங் கொண்டவராயும் இருக்கின்றனர்; அவர்களைக் கம்பனோடு உறவு கொள்ளுமாறு செய்ய வேண்டும், என்று சொல்லிய ஐயர், 1928, ஜனவரியில் "கலாநிலயம்" என்னும் வார வெளியீட்டை ஆரம்பித்தார். தமிழ் படிப்பதே அகௌரவம் என்று படித்த வகுப்பாரில் பெரும்பான்மையோர் எண்ணியிருந்த காலம் அது. ஐயரின் தலைமையின் கீழ் நண்பர் குமரையா, "கலா நிலய" சஞ்சிகையின் ஆசிரியப் பதவியை ஏற்றார். நான், துணை ஆசிரியனானேன், எனது ஜாகையையும் புரசைக்கு மாற்றிக் கொண்டேன். ஐயரும் அவரது நண்பர்களும் சந்தாச் சேர்த்தனர். இந்நிலையில் எமக்குச் செட்டி நாட்டுச் செல்வர் சிலரது துணை ஏற்பட்டது. அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர், S. Rm. CT. ஜம்புலிங்கம் செட்டியார் ஆவார். கொப்பனாபட்டி **மெய்யப்ப செட்டியாரும்**, கொத்தமங்கலம் இராம. **சுப்பிரமணியம்** என்பாரும் எமது பத்திரிகை வளர்ச்சிக்கு அளவுடைய உதவி தந்தனர். 1929-இல் நான் பர்மா சென்று, தனவைசிய நண்பர்களின் துணைகொண்டு நூறுக்கு அதிகமானவர்களை வாசகர்களாய்ச் சேர்த்துக் கொண்டு திரும்பினேன். வாரப் பத்திரிகையும் இடையறாது தொடர்ந்து நடந்து வந்தது. திரு. வையாபுரி பிள்ளை போன்ற பெரியோர் எமது முயற்சியை மிகமிகப் பாராட்டினர். நாளாக நாளாக ஐயர் வக்கீல் தொழிலில் விருப்பமில்லாதவரானார். 1930-இல் நீதி ஸ்தலம் செல்வதையும் அறவே நிறுத்தி விட்டுக் கலா நிலயப் பத்திரிகை வளர்ச்சியில் முழு நேரத்தையும் செலவிட்டார். இந்த நிலையில் படித்த வகுப்பினர் என்பாரைத் தமிழ் இலக்கியங்களோடு உறவு கொள்ளுமாறு செய்யத் தமிழ் இலக்கிய வகுப்பொன்று நிறுவவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அப்பொழுது ஒய். எம். ஸி. ஏ. என்ற ஸ்தாபனத்தின் காரியதரிசியாக மாக்ளிலாண்டு என்ற அமெரிக்கர் இருந்தார். அவர் ஐயரிடம் நெருங்கிய நட்புடையவர். அவரது முயற்சியால் அங்கே ஒரு வகுப்பு ஆரம்பமாயிற்று. முதல் வகுப்பில் பத்துப் பன்னிரண்டு பேர் வந்திருந்தனர். இரண்டு மாதங்களில் எழுபதிற்கும் அதிகமானவர் இவ்வகுப்பில் கலந்து கொண்டு படித்தனர். பிறகு வண்ணாரப்பேட்டையிலும், சிந்தாதிரிப் பேட்டையிலும் வகுப்புக்கள் ஆரம்பமாயின. இவ் வகுப்புக்களை நான் நடத்தி வந்தேன். பிறகு வெங்கடாசலம் பிள்ளை என்பவரின் முயற்சியால் காஞ்சிபுரத்தில் ஒரு வகுப்பும், நண்பர் ஜம்புலிங்கத்தின் முயற்சியால் கானாடுகாத்தானில் ஒரு வகுப்பும் ஆரம்பமாயின. காஞ்சியில் வகுப்பு நடத்தும் வேலை எனக்கு அளிக்கப்பட்டது. வாரம் ஒரு முறை சென்று இரண்டு நாள் தங்கி வகுப்பை நடத்தி வந்தேன். வண்ணாரப்பேட்டை வகுப்பு ஒய். எம். ஸி. ஏ. வகுப்புடன் இணைக்கப்பட்டது. டாக்டர் ஸ்ரீநிவாஸ ஐயர், வக்கீல் சடகோபாச்சாரியார், முனிசிபல் தலைவர் சாமிநாத முதலியார், கண்ணப்ப முதலியார் போன்றோர் காஞ்சி வகுப்பில் கலந்து கொண்டனர். கானாடுகாத்தான் வகுப்பை ஐயர் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை சென்று இரண்டு நாள் தங்கி நடத்தித் திரும்புவார். ஐம்பதிற்கும் அதிகமான தனவைசிய இளைஞர் இவ்வகுப்பில் கலந்து கொண்டனர். **வகுப்புக்களில் கலந்து கொண்டாரிடம் கட்டணம் ஒன்றும் வாங்குவதில்லை.** ஆனால் அவர்கள் பத்திரிகையின் சந்தாதாராதல் எதிர் பார்க்கப்படும். பத்திரிகை வளர்ச்சிக்கு வேண்டிய வழியெல்லாம் எல்லோரும் முயன்றனர். எனினும் வருவாய் போதவில்லை. எனவே, நாடகத்தின்மூலம் பொருள் திரட்ட முயன்றோம். வேலு நாயர், அனந்த நாராயண ஐயர் என்ற நாடக வித்தகர்களின் துணை கொண்டு, தமிழில் மொழி பெயர்த்த ஷெரிடனது **பிஸாரோ** என்னும் நாடகத்தையும், ஐயர் எழுதிய **இராஜதந்திரம்** என்ற நாடகத்தையும் சென்னை, காஞ்சி, காரைக்குடி, பொன்னமராவதி, அண்ணாமலை சர்வகலாசாலை ஆகிய இடங்களில் நடித்தோம். அவை மூலம் கிடைத்த வருமானம் சிறியதே. அதன்பின், திரைப்பட முயற்சி செய்தால் போதிய பணம் கிடைக்கும் என்ற எண்ணம் எழுந்தது. திரு. ஜம்புலிங்கம் அவர்களின் துணைகொண்டு **டிரினிட்டி தியேட்டர்ஸ்** என்ற பெயரில் ஒரு லிமிடெட் கம்பெனி ஆரம்பிக்கப்பெற்றது. போதிய அளவு பங்குத்தொகை சேகரிக்கப்பட்டதும், கம்பெனியின் நிர்வாகியான ஐயர் "மாலப்பில்லா" என்ற தெலுங்குப் படத்தின் தமிழ் நாட்டு உரிமை வாங்கிப் படத்தை ஓட்டினார். நல்ல இலாபம் வந்தது. ஒரு படம் எடுக்கவும் ஏற்பாடு செய்தார். அந்த நிலையில், அதாவது 1938-ல் அவரை இறைவன் அழைத்துக் கொண்டான். அதன்பின் அவர் மேற்கொண்ட காரியங்களைத் தொடர்ந்து செய்ய முடியா நிலை எனக்கு ஏற்பட்டது. என் மனைவியும் தாயாரும் இறந்தனர். கையிலிருந்த பணமும் கரைந்தது. கொடுத்தவரிடமிருந்து பணமும் திரும்பவில்லை. தெய்வம் என்னை ஒரு மூலையில் ஒதுக்கி விட்டது. இனி அவர் வாழ்ந்த விதத்தையும்,

வாழ்க்கையின் போக்கைப்பற்றி அவர் கொண்ட கருத்தையும் பார்ப்போம்.

* * *

பொருள் வளத்தோடு வறுமையுங் கண்ட வாழ்க்கையினர் அவர். வளத்திலும் வறுமையிலும், அலையடங்கிய அமைதியில் அவரது வாழ்க்கை நடப்பதாயிற்று. தன்னை நாடி வந்தவர் வேண்டியதை இயலுமேல் செய்து கொடுப்பதைத் தர்மமாகக் கொண்டவர்.

ஒரு வான்மீகி இராமாயணப் புலவர்; இராமாயணப் பிரவசனத்தில் பெரும் புகழ் படைத்தவர். வருவாய் வளமும் மிக உடையவர். அடிக்கடி அவர் ஐயரிடம் வந்து வார்த்தையாடிச் செல்வதுண்டு, வெள்ளையர் ஆட்சி செலுத்தும் நாளில், டிசம்பர் மாதம் இச்சைவழி பிரயாணம் (Go as you please) செல்லக் குறைந்த கட்டணத்தில் பிரயாண வசதி செய்து கொடுப்பதுண்டு. அந்த டிக்கட்டைப் பெற்ற இராமாயண சாஸ்திரியார், தாம் பிரயாணம் செய்து முடித்து அதன் பின் அந்த டிக்கட்டை வேறொருவருக்குக் கொடுத்து பிரயாணம் செய்யுமாறு செய்தார். அவ்வாறு செய்வது முறையற்ற, சட்ட விரோதமான செயலாகும். ஆனால் அதை அவர் ஐயரிடம் உற்சாகத்துடன் கூறி, 'எப்படி?' என்று கேட்டார். ஐயரது முகம் கடுமை உற்றது. சிறிது நேரம் பேசாது உட்கார்ந்திருந்த ஐயர் அவரை நோக்கி, "ஐயா, எழுந்து செல்லும். இரயில்காரனை மோசம் செய்ததைப் பெருமையுடைய காரியமாக வெட்கமில்லாமல் கூறிக்கொள்கின்றீர். இராமாயணம் உம் வரையில் பயனற்றதாய் விட்டது எனின், உமது இராமாயணப் பிரவசனத்தால் யாரும் நலனடைதற்கில்லை. நான் மிகமிக வருந்துகின்றேன்" என்று கூறினார். இராமாயணப் புலவர் முகம் செத்தவராய் வீடு திரும்பினார்.

* * *

ஐயரது குடும்பம் பெரியது. அவருக்கு குழந்தைகள் பதினொருவர். வக்கீல் தொழிலை விட்டபின், வருவாய் வளம் குன்றியதால் இன்மையால் ஏற்படும் சிரமத்திற்கு ஆளாதல் நேர்ந்தது. எந்த நிலையிலும் அவர் தளர மாட்டார். 'இறைவன் ஒரு வழி செய்வான்', என்று கூறுவார். கம்பர்தான் அவரது ஆசார்யன்; இராமன் தான் அவரது வழிபடு கடவுள். 'வறுமையிற் செம்மை' என்ற முதுமொழிக்கு இலக்கியமாய் அமைந்த வாழ்க்கையினர் அவர்.

"எழுத்தறிவினால் எவனும் கல்வியுடையவன் ஆகான். ஒழுக்கத்திற்குக் கல்வி ஆதாரமாகாக்கால், அக்கல்வி வேண்டப்படாத ஒன்றே. கல்லாக்காலும், நல்லவரே கற்றவர்" என்று அடிக்கடி கூறுவார்.

**அவர் கூறிய மற்றும் பல கருத்துக்கள் :**

"நீதி நூல்களைப் படிப்பதனால் ஒருவன் நீதிமான் ஆவதற்கில்லை. நெறிகடவா வழி வாழ்க்கை நடப்பதற்கு ஒரு மனப்பக்குவம் வேண்டும். அப்பக்குவத்தைத்தரவல்லது கம்பராமாயணம். 'கம்பனால் பக்குவம் எய்திய வாழ்க்கையின் செலவு, நெறி கடவா நலத்ததா?' என்று சோதித்துப் பார்த்துத் தெளிவு கொள்வதற்கு நீதி நூல்கள் வேண்டப்படுவனவே. எனவே, எனது பள்ளிகளில் நீதி நூல்களுக்கு நான் முதலிடம் கொடுப்பதில்லை."

* * *

"நம் நாட்டின் மக்கள் அமைதியின் அமைந்த வாழ்க்கையினராய், பொய், மோசம், வஞ்சனை அறியாதவர்களாய் வாழ்வின் அமர்ந்திருந்த காலத்தில் தோன்றிய முகமதியப் படையெடுப்பு அவர்களை நிலை குலையச் செய்தது. அதன்பின், ஆங்கிலேயர் வருகையும், ஆணவ மலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆங்கிலமும், நம்மை ஆன்ம சூன்யர்களாக்கி விட்டன. சிறந்த இலக்கிய நூல்களையும், தத்துவ நூல்களையும் கொண்டதே ஆங்கிலம். ஆனால் அப்பாஷை ஆணவ பலத்தை அடிப்படைத் தத்துவமாகக் கொண்டது. 'நான்' என்ற பொருளைக் கொண்ட ஐ என்பதைப் பெரிய எழுத்தில் எழுதும் மரபினது அது. 'நான்' என்பதின் வளர்ச்சியில் இறை நினைவு குன்றும். இறையகன்ற இடத்தில் பொன்னும் பொருளும் இடங்கொள்வதாகின்றன. அவை புகுந்த இடத்தில் பகையும், பசியும், பொய்யுமே புகையும்."

* * *

"கம்பனைப் படிப்போம். திருக்குறளைப் படிப்போம். இறைவனது திருவடியின் துணை கொண்டு வாழ்வதற்குரிய பக்குவத்தை, அவை நமக்கு அளிக்க வல்லவை. பின், எல்லா மங்களங்களையும் நாம் எய்தினவராவோம். வேறு வழியெல்லாம், கானல் நீரால் தாகத்தைத் தணிக்க நினைத்தலையே ஒக்கும்."

ஐயர் அவர்கள் 1938-இல் இறையுலகு எய்தினர். அப்பொழுது அவருக்கு வயது 47. தமிழுலகம் அவரை நன்கு அறிந்து கொள்ளுமுன், அவர் அகன்றுவிட்டார்.

அவர் ஆரம்பித்த சினிமாக் கம்பெனிக்குப் பங்கு சேர்க்க ஒரு நாள் அவர் டாக்டர் திருமூர்த்தி அவர்களோடு காரில் செல்கையில், அவரது வாயிலிருந்து திடீரென்று இரத்தம் வந்தது. உடனே வயித்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இரத்தக் குழாய் உடைந்ததின் காரணமாக சில தினங்களில் உயிர் நீத்தார்.

சாகுந்தருவாயில் கண்ணீர் வடித்து நின்ற அவரது மனைவியை நோக்கி, "வருந்தாதே, இறைவன் காப்பாற்றுவான்" என்று கூறினார். அதன்பின் அவர் தமது மூத்த மகனை நோக்கி, "நான் எப்படி வாழ்ந்தேன் என்பதை அறிவாய். அவ்வழி நடந்து கொள். கம்பனைப்படி" என்று கூறினார். அவர் அகன்றபின், ஜம்புலிங்கம் செட்டியார் போன்ற நண்பர்கள் இயன்ற வழி எல்லாம் அக்குடும்பத்திற்கு உதவினர்.

இப்பொழுது அவரது மக்கள் நல்ல நிலையில் இருக்கின்றனர். அவர்களில் ஸ்ரீதர் என்ற பெயரினன், "ஆனந்த விகட"னில் கார்ட்டூனிஸ்டாக வேலை பார்க்கின்றான். மற்றவர்களும் நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றனர். இறைவன், அக்குடும்பத்திற்கு ஒரு குறைவும் செய்யவில்லை.

கம்பனைக் கற்பதும், கற்பிப்பதும், கம்பன் காட்டிய வழியில் ஒழுகுதலுமே வாழ்க்கையாகக் கொண்டவரும் பல ஏழைமாணுக்கர்களைப் பெரும் புலவர்களாக்கிய வருமான உத்தமர், உபகாரி, ஒப்பற்ற புலவர் சேஷாசலம் ஐயரின் திருநாமம் நீடுழி வாழ்க!

# அனந்தமங்கலம் அனுமன்

ஜி. சி. பட்டாபிராமன் பி. ஏ.

**வா**ல்மீகி சிருஷ்டியில் அனுமன் ஒரு அபூர்வமான பாத்திரம். வால்மீகிக்கு அனுமனிடம் ஈடுபாடு அதிகம். சுந்தரகாண்டம் முழுவதிலும் வால்மீகி அனுமனின் பெருமையை வர்ணிப்பதற்காகவே எழுதி இருக்கிறார். அனுமன் தவவியாகரண பண்டிதன். அவன் கல்லாத கலைகளே கிடையாது. சங்கீதமும் நன்ருக அறிந்தவன். இராமாயணம் படிப்பவர்களுக்கு ராமனுக்குப்பிறகு அனுமனிடம் பக்தியும் ஈடுபாடும் அதிகம். அவன் ராமனுக்கு செய்யாத தொண்டு கிடையாது.

அனுமன் ஒரு சிறந்த வீரன்மாத்திரம் அல்ல. ஆத்மீகத்துறையிலும் பிரமசரியத்தைக் கடைப்பிடித்த ஒரு பழுத்த முனி. மகாத்மா காந்தி அனுமனது அமானுஷியமான சக்திக்கு அடிப்படை அவனுடைய பிரமசரியமும் ஆத்மீக பலமும்தான் என்று எழுதுகிருர். அனுமன் ஒரு பழுத்த பக்தன் மாத்திரம் அல்ல; ஒரு ஞானியும் கர்மயோகியும் கூட. தூதனின் இலக்கணத்தை மாத்திரம் நாம் அனுமனிடம் காணவில்லை. ஸ்திதப்பிரக்ஞ லக்ஷணத்தையும் காண்கிருேம். ''தேர்த் தட்டின்மீது திகைத்து வாழ்தடக் கைவில் நெகிழ வாளா இருந்திட்ட'' அர்ச்சுனனுக்கு கண்ணன் கீதோபதேசம் செய்தபொழுது கொடிமரத்தில் இருந்து கேட்டார் அல்லவா? அதனுல் கண்ணன்வகுத்த வழியை வாழ்க்கையில் நடத்திக் காட்டியிருக்கிருர்.

ராமகாதையை தமிழ் நாட்டில் கம்பரும் ஆழ்வார்களும் பிரபலப்படுத்தினுர்கள். பரம பக்தர்களான ஆழ்வார்கள் அனுமனிடம் பரமபாகவதர்களின் இலக்கணத்தைக் கண்டார்கள். கம்பருக்கும் அனுமனிடம் அதிக ஈடுபாடு உண்டு. அனுமன் பாத்திரப் பிரவேசத்தை ராமன் வாயிலாக,

நாட்படா மறைக ளாலும்
நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே ஐயா!
குரக்கு உருக் கொண்டது

என்ற அழகிய பாட்டால் அனுமனின் உயர்ந்த பண்புகளை நமக்குக் காட்டுகிருர். ஆரம்பத்திலேயே அனுமனின் உயர்ந்த பண்புகளை அற்புதமான சித்திரமாக கதாநாயகன் ராமன்வாயிலாகத் தீட்டி இருக்கிருர். அறிஞர் வ.வே.சு. அய்யர் கம்பரின் அனுமன் வால்மீகியின் அனுமனைக் காட்டிலும் பண்பட்டவன் என்றும் குரங்கு புத்தியை அணுவளவு கூட கம்பர் அனுமனிடம் சித்திரிக்கவில்லை என்றும் தமது கம்ப ராமாயண ரசனையில் எழுதுகிருர்.

கம்பராமாயணத்தைப் படித்த தமிழர்கள் ராமனிடம் பக்தியால் ஈடுபட்டார்கள். இங்கு பல கோவில்களை ராமருக்காகவே கட்டினுர்கள். ஒவ்வொரு வைணவக் கோவிலிலும் அற்புதமான ராமவிக்ரஹங்களை காண்கிருேம். திருச்சேறை, விளநகர், வடுவூர், அடம்பர் முதலிய பல இடங்களில் நாம் அழகிய ராம விக்ரஹங்களைப் பார்க்கிருேம். ராமருக்கு அருகில் பக்தியுடன் நிற்கும் அனுமனையும் காண்கிருேம். சோழ நாட்டுச் சிற்பிகளின் அழகிய அனும விக்ரஹங்கள் பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளன. ராமனிடம் எவ்வளவு ஈடுபாடு தமிழனுக்கு உள்ளதோ அதே மாதிரி அனுமனிடமும் ஈடுபாடு உண்டு. தமிழ் நாட்டில் அனுமனுக்காகவே பல கோவில்கள் உண்டு. சரயு தீரத்தை காட்டிலும் காவேரி தீரத்தில்தான் இந்த அழகிய விக்ரஹங்களை காணலாம். கங்கையில் புனித காவேரி என்று இராமாயணப் பாத்திரங்கள் காவிரிக்

கரையிலேயே வசிக்கத்தொடங்கி விட்டார்கள். இந்த விக்கிரஹங்களை ரஸிக்கவே ஒருநடை சோழநாட்டிற்கு சொல்லவேண்டும்.

ஒரு அபூர்வமான அனுமனின் படிவத்தைப் பார்க்க வேண்டுமானுல் நாம் ஒருதரம் அனந்தமங்கலம் செல்ல வேண்டும். மாயவரம்—தரங்கம்பாடி ரோட்டில் திருக் கடவூரில் இருந்து மூன்று கல் தொலைவில் உள்ள ஒரு குக்கிராமம். ரோட்டில் இருந்து நான்கு பர்லாங் கச்சா ரோட்டில் கஷ்டப்பட்டுச் சென்ருல் அங்குள்ள ராஜ கோபாலன் கோவிலைக் காணலாம். மன்னுர்குடியில் உள்ள ராஜகோபாலன் தன் பத்னி செங்கமலவல்லி யுடன் தன்பக்தன் நாயக்க மன்னனுக்காக இங்கு புறப் பட்டு வந்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறு கின்றன. இங்கு கோவிலுட் சென்ருல் நாம் ஒரு அபூர்வ மான அனுமன் விக்கிரகத்தைக் காணலாம்.

இதை பக்தர்கள் திரிநேத்ர தசபுஜ அனுமன் என்று சொல்கிருர்கள். கலைஞன் வெகு அழகாக அனுமனின் விஸ்வரூபத்தை சித்தரித்து இருக்கிருன். இது விஸ்வரூப அனுமன். ஒரு சிறு செப்பு படிமத்தில் விஸ்வரூபத்தின் தத்துவத்தை வெகு அழகாக நமது மனக்கண்களில் நிறுத்துகிருன் சோழநாட்டு சிற்பி. நாம் நாமக்கல்லிலும் சுசீந்திரத்திலும் பிரம்மாண்டமான விஸ்வரூப அனும னின் சிலைகளை காண்கிருேம். அவைகள் பெரிய கற் பாறைகளில் செதுக்கப்பட்டவை. விஸ்வரூபத்தின் பரந்த இலக்கணத்தை உயர்ந்த சிலைகள் மூலம் சுலப மாக எடுத்துகாட்ட முடியும். ஆனுல் அதை ஒரு சிறு படிவத்தில் காட்டுவது கஷ்டம். அதை எளிதில் காட்டமுடிகிறது சோழ நாட்டு சிற்பியால்.

இந்த அழகிய விஸ்வரூப அனுமனின் விக்ரகத் தைக் கண்டதும் கம்பர்,

''சுட்டினன் நின்றனன்—தொழுத கையினன்;
விட்டுஉயர் தோளினன்; விசும்பின் மேக்குஉயர்
எட்டஅரு நெடுமுகடு எய்த நீளுமேல்
முட்டும்என்று, உருவொடு வளைந்த மூர்த்தியான்''

என்று, விஸ்வரூப அனுமனை வர்ணிக்கும் அழகான பாடல்தான் மனத்திற்கு வரும். இவ்வளவு பரந்த உருவத்தின் பாவத்தை வெகு அழகாக நமக்கு காட்டு கிருன் சிற்பி. தாராசுரத்தில் ஐராவதேஸ்வரர் கோவிலில் இருக்கும் அழகிய விஸ்வரூபத்தின் சிலையை இதற்கு ஈடாக சொல்லலாம். அங்கும் ஒரு சிறிய சிலையில் பகவானது பரந்த விஸ்வரூபத்தின் பாவத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிருன்.

விஸ்வரூப அனுமனின் பத்துக் கைகளிலும் நாம் அஷ்டதிக் பாலகர்களின் ஆயுதங்களைக் காண்கிருேம். எல்லா தேவர்களின் புஜவலிமையும் விஸ்வ ரூபத்தில் அடங்கிவிடுகிறது. இவ்வளவு ஆயுதங்களையும் தாங்க வலிமை பெற்ற விரிந்த மார்பு; திரண்ட தோள்கள்; எவற் றையும் அழிக்கும் தன்மை வாய்ந்த மூன்ருவது கண்; வேகத்தைக் குறிக்க இரண்டு சிறகுகள்; கம்பீரமான தோற்றம். இதை நேரில் பார்த்தால்தான் கலைஞன் எப்படி ஒரு சிறிய விக்கிரஹத்தில் விஸ்வரூபத்தின் தத்துவத்தைக் காட்டுகிருன் என்பது புரியும். இதை எழுத்தால் விவரிப்பது கடினம். விக்கிரஹத்தைப் பார்க் கிறவர்களுக்கு விஸ்ரூபம் பூமண்டலம் முழுதும் வியா பிக்கும் தன்மை புலனுகிறது. இதைப் பார்ப்பதற்கே அனந்தமங்கலம் செல்லலாம். ஒருவேளை அனுமந்த மங்கலம் என்பதன் மருஉ அனந்தமங்கலமோ! அதே கோவிலில் அழகிய சதுர்புஜ அனுமனது விக்கிரஹமும் ராமர் விக்கிரஹமும் உள்ளன. அவற்றின் அழகையும் அனுபவிக்கலாம்.

# கலைகளின் உயிர்

**எஸ். டி. சுந்தரம்**

''நான் ஒரு கன ராகத்தை ஒரு மணி நேரம் பாடப் போகிறேன். நீங்கள் இத்தனை பேர் இங்கே இருக்கிறீர்கள். யாராவது ஒருவர் நான் பாடும் ராகம் இன்ன ராகந்தான் என்று கண்டுபிடித்துச் சொல்லி விட்டால் அதன் பிறகு தான் பாடும் தொழிலையே விட்டுவிட்டுப் பரிசாரகத் தொழிலுக்குப் போய் விடுகிறேன்'' என்று ஒரு பயங்கரமான சபதத்தைச் செய்து, கர்ண கடூரமான ஒரு சவாலை சபையின் தலைமேலே போட்டு விட்டுக் கர்ஜித்துக் கொண்டிருந்தார். இந்த சங்கீத வித்வானுக்குக் காலையில் வீட்டிலே ஏதோ கோபதாபங்கள் ஏற்பட்டிருக்கலாம். அந்த வேகத்தை இப்படி சபையிலே வந்து காட்டியிருக்க வேண்டாம். என்னமோ பாவம். காட்டிவிட்டார்.

இப்படி அந்த சங்கீத வித்வான் பேசிய கூட்டம் கேவலம் ஒரு சுக்கும் அறியாத அப்பாவி ரசிகர் கூட்டமல்ல. இன்று ஜனங்களின் அன்புக்குப் பாத்திரமான பல வித்வான்கள் பலர் கூடியிருந்த அந்த சபையில்தான் அந்த வித்வான் இந்த சபதத்தைச் செய்தார். அவர் அப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. காரணமில்லாமல் இப்படி ஒரு கடுமையான சபதத்தை ஏன் செய்தார் என்பது எல்லோருக்குமே வியப்பாயிருந்தது.

அவரை யாரும் சங்கீதம் தெரியாதவர் என்றோ, ஞான விவகாரம் இல்லாத கத்துக்குட்டி என்றோ வாய் திறந்து சொன்னதே கிடையாது. சொல்ல வேண்டுமென்று யாரும் நினைத்தது கூட இல்லை. பல தடவையும் அந்த வித்வான் தமது கரகரப்பான குரலில் கரகரப் பிரியா பாடியிருக்கிறார். மோகனத்தின் மேல் கோபித்துக்கொண்டு முகாரியை முக்கால் மணி நேரம் முழங்கியிருக்கிறார். சங்கராபரணத்தின் மீது சலித்துக்கொண்டு சஞ்சலப் பிரியா ராகத்தைப் பாடி சபையின் பொறுமையைப் பல முறையும் சோதித்திருக்கிறார்.

நிலைமை இப்படியிருக்கையில் அவர் திடீரென்று இப்படி ஒரு சவால் என்னும் அணுகுண்டை பொறுமை மிக்க அந்த நல்ல ரசிக சபையின் தலைமேல் தூக்கிப் போட்டிருக்க வேண்டாம். என்ன செய்வது? அவருடைய அபிப்பிராயத்தில் யாரொருவர் ஒரு மணி நேரமாக, தான் பாடுவது இன்ன ராகம் என்று பிறத்தியார் தெரிந்துகொள்ள முடியாதபடி, ரசிக்க முடியாதபடி பாடுகிறாரோ அவர்தான் மகாவித்வான்; இது அவருடைய அபிப்பிராயம். அதேபோல், எவர் ஒருவர் நாள் முழுக்கக் கேட்டாலும் தான் கேட்டுக் கொண்டிருப்பது இன்ன ராகம், இன்ன தாளம், அல்லது இன்ன சாகித்தியம் என்றுகூட தெரிந்து கொள்ளாதபடி, இந்த வித்வானை உற்சாகப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, சபையில் உட்கார்ந்து, கழுத்து சுளுக்கிக் கொள்ளும்படியாக தலையை ஆட்டிக்கொண்டே இருக்கிறாரோ, அவர்தான் பரம ரசிக சிகாமணி என்பதும் அந்த மகா வித்வானின் மாற்ற முடியாத அபிப்பிராயம்.

அதாவது அவரது எண்ணப்படி சிறந்த சங்கீதம் என்பது சாதாரணமாக எளிதில் பாடக்கூடாதது! ரசிக்க முடியாதது! பாட்டு என்பது பயப்படத்தக்க, திடுக்கிடத் தக்க, திகிலை உண்டாக்கும் பல விவகாரங் களுக்குக் காரணமானது! சாதாரண மனித சமூகத்துக்கு சம்பந்தமில்லாததொரு சண்டை சவால் விஷயந்தான் சங்கீதமும், ரசனையும், என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. அதாவது தப்பித் தவறி இலக்கணம் படிக்கத் துணிந்த மாணவன் வியாகர்ண பண்டிதரிடம் எவ்வளவு பயங்கரமான அனுபவத்தைப் பெறுவானோ, அந்த பயத்தோடு ரசிகனும் இந்த வித்வானைப் பார்த்து நடுங்க வேண்டும் என்பது அவரது நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு அவரே சொந்தக்காரர். அவரே இந்த அபிப்பிராயத்தின் சிருஷ்டிகர்த்தா, சக்கரவர்த்தி எல்லாம். அவரை யாரும் மறுத்துப் பேச விரும்பவில்லை. மேலும் அவர் செய்தது சாதாரண சபதமல்ல. ஒரு மணி நேரம் பாடியபின் சபையில் யாராவது, பாடிய ராகத் தைக் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டால், பாடும் தொழிலை விட்டுப் பரிசாரகத் தொழிலுக்குப் போவ தாக ஒரு பயங்கர சபத்தையும் செய்திருக்கிறார்;

வீணாக ஒரு சங்கீத வித்வானைச் சமையல் தொழிலுக்கு அனுப்பி, அந்தத் தொழிலையும் கெடுப் பதற்கு, அங்கு கூடியிருந்த ரசிகர்களும் மற்ற வித்வான்களும் விரும்பாததால், மேற்படி சவாலின் கர்ஜனை கேட்டவுடனே மெதுவாக ஒவ்வொருவராக எழுந்து வெளியே போய் விட்டார்கள். இவ்வாறு சங்கீதமும் பிழைத்தது. சங்கீத வித்வானும் பிழைத் தார். அவர் சவால் பலிக்காததால் சாப்பாடும் பிழைத்தது. சமையல் தொழிலும் பிழைத்தது.

இப்படியெல்லாம் சவால்களும், சண்டைகளும் அவசியமற்ற வாதப் பிரதிவாதங்களும் வேண்டாத விவகாரங்களும் சேர்ந்து, சங்கீதத்தின் உண்மை யான தத்துவத்தை, தெய்வீகத்தை, அதன் மகத் தான பயனாகவரும் மனோலயத்தை, சித்த சுத்தியை, ஆனந்த அனுபவத்தை, பக்தியை, பிரேமையை, பேரருளை, பேரின்பத்தை, மனிதனை அமரனுக்கும் சித்தினை, இரண்டாம் பட்சமாக்கிவிட்டது! அதை ஒரு விவகாரத்திற்குரிய தர்க்கப் பொருளாக்கி விட்டு சங்கீதத்தையும் அதன் பயனான தெய்விக அனுபவத் தையும் தனித் தனிப் பொருளாகப் பிரித்து வைத்த ஒரு காலந்தான், மக்களும் இந்த மகத்தான கலையும் பிரிக்கப்பட்ட காலமாக இருந்தது.

கல்வி என்பது அறிவொளி பெறும் சாதனம் என்பதை மறந்து கேவலம் கவர்ன்மெண்ட வேலைக்கு மனுப்போடும் ஒரு கருவி என்று சிலர் நினைத்திருந்தது போல, சங்கீதம் என்றால், சகலவித விவகாரங்களும், தர்க்க வாதங்களும், சர்க்கஸ் வித்தைகளும் நிறைந்து, கேவலம் சாப்பாட்டுக்கு வழி காட்டும் ஒரு முதலில்லாத வியாபாரம் என்ற முறையில் சிலர் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் போலத் தெரிகிறது. அந்தச் சிலருடைய காலம் மலையேறி இன்று எல்லோரும் நமது பரம்பரைச் செல்வமாகிய சங்கீதப் பேரின்பத்தின் உண்மையை நுகர்ந்து அனுபவிக்கும் பொற்காலத்தில் நாம் வாழுகிறோம்.

இத்தகையதொரு பொற்காலத்தில் ரசிக மகா ஜனங்களுக்கு நல்ல சங்கீதச் செல்வங்களைக் கஞ்சத்தனமின்றி தாராளமாக வாரி வாரி வழங்கிய இன்னிசை வள்ளல்களை ஏராளமாகப் பெற்ற பெரும் பாக்கியத்தை நமது தலைமுறை செய்திருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நாம் பரவசமடையலாம்.

இன்று எங்கு பார்த்தாலும் சங்கீத மயமாக இருக்கிறது. பெருகிவரும் இசை மழையின் பருவ கீதத்தைக் கேட்கிறோம். நாதப் பிரம்மத்தின் நளின மான இன்பத்தை நாட்டில் நடைபெறும் நல்ல பெரும் விழாக்களில் அனுபவிக்கிறோம். நம்பிக்கை தரும் நல்ல பல இளம் வித்வான்கள் எங்கும் ஞானமுழக்கம் செய்கின்றனர்.

நூற்றுக்கு எழுபது சதவிகித கலைஞர் சுதியோடு சேர்ந்து பாடுவதால், சங்கீதத்துக்கு நல்ல எதிர் காலம் உண்டென்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. இதற்கெல்லாம் காரணமாய் இருக்கும் பெரிய வித்து வான்களுக்கும், இலட்சியக் கதிர்களாக வாழ்ந்து சங்கீதம் வளர வழிகாட்டிய ஞானிகளுக்கும் நாம் நமது நன்றியை மானசீகமாகச் செலுத்தவேண்டும்.

பெரியவர்களுக்கு நமது அஞ்சலிகளைச் செலுத் வதோடு மட்டும் நின்றுவிட்டால் போதாது. அவர் நம்மை நம்பி நமது கைகளில் ஒப்படைத்த இந்து மகத்தான கலைச்செல்வத்தை நன்கு காப்பாகள் அதன் தரங்குறையாமல், வருங்கால சந்ததிகளிந்த அச்செல்வத்தை ஒப்புவிக்கும் 'கடமையையும் ற்றி செய்யவேண்டும்.

டம்

நாம்

இந்த உலகத்தில் மிக மிகச் சிறந்த நாகரிகத் வாழ்ந்த நமது முன்னோர்கள் உருவாக்கி வளர் பல அரிய செல்வங்கள் பலவற்றை காலம் தனத்தில் இரையாக்கிக் கொண்டாலும், இன்னும் அழியாமதை நம்முடன் வாழ்கின்ற செல்வங்கள் பல இருக்கின்றன.

நமது இலக்கியங்கள், தத்துவ சாஸ்திரங்கள், அவைகளின் விளக்கமாகவும், விசுவ ரூபமாகவும் விளங்கும் நமது கோயில்கள் கோபுரங்கள், இவற்றின் பெருமைகளை எல்லா மக்களுக்கும் புரியும்படி பாடும் பக்திப் பாடல்கள், அப்பாடல்களை ஆத்மானந்த மாக்கும் இன்னிசை ஞானம் - இவைதான் நமது ஈடில்லாத கலைச்செல்வங்கள்.

இதுவரை நாம் கண்டு பிடித்த நுண்கலைகளில் எல்லாம் நுட்பமானதும் பேரின்பத்தை சுலபமாகத்

தருவதுமான இன்னிசைக் கலையை, எப்பாடு பட்டேனும் காப்பாற்ற வேண்டும்.

தஞ்சாவூர்க் கோபுரம், தில்லைத் திருத்தலம், திருவாரூர்த் திருக்குளம், மன்னார்குடி மதிற் சுவர், ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் கோயில், திருவரங்கம், மதுரை, திருச்செந்தூர், படை வீடுகள், பழங்கோயில்கள் ஆகிய இந்தச் செல்வங்களை எப்படிக் காப்பாற்றுவது நம்மவர் கடமையோ, அதேபோல், நமது கலைச் செல்வங்களையும் காப்பாற்றியே ஆக வேண்டும்.

அதற்குரிய பணிகளைப் பல வழிகளிலும் செய்ய வேண்டும். அன்று நமது கலைக்கு ஆதரவாக இருந்து இசை வளர்த்த சக்திகள் மிகப்பல. அவற்றில் முதலாவதாக விளங்கியது நமதரும் கோயில்கள்.

கோயில்களில் மணியோசை எவ்வளவு முக்கியமோ, அதேபோல் நாதஸ்வர இசையும் தேவார இன்னிசைக் குழுக்களும் முக்கியத்துவம் வகித்தன.

இன்றும் நமது நாதஸ்வரக் கலையும் தமிழிசையும் கோயில்களை நம்பித்தான் தங்கள் வளர்ச்சியைத் தொடர முடியும். பற்பல விதமான வருவாய்த் துறைகளில் பொருளைப் பெருக்கிவரும் கோயில் நிர்வாகிகள், எக்காரணம் கொண்டும் நாதஸ்வர வித்வான்களுக்கும் தேவார திவ்வியப் பிரபந்த இன்னிசைக் கலைஞருக்கும் உரிய சன்மானத்தைக் குறைத்துவிடாமல், காலத்தின் தேவைக்கேற்றவாறு, விரிவுபடுத்தி இந்தத் தொன்மையான கலையைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும்.

பல கோயில்களில் ஏற்கனவே எடுத்த இசைத் தட்டுக்களை ஒலி பெருக்குவதன் மூலமாக செலவுகளைக் குறைத்து விட்டதாகவும், அதன் மூலமாகத் தங்கள் நிர்வாகத்தின் பிரதாபத்தை மெச்சிக் கொள்வதாகவும் கேள்வி.

இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு தலைவரின் ஒலிப்பதிவுப் பேச்சை மட்டும் மக்களைக் கேட்கச் சொல்லி அவரை நேரில் கண்டது போல் எண்ணிக் கொள்ளுங்கள் என்றுகூறி திருப்திப்படுத்தி விட்டதாக எண்ணிக் கொள்ளும் பேதமையைப் போலிருக்கிறது.

இப்படி இசைத் தட்டுக்களை ஏதேனும் நெருக்கடியான காலத்தில் ஒன்றிரண்டு நாட்களுக்கு வேண்டுமானால் போடலாமே தவிர எப்போதும் இசைத்தட்டுதான் என்றால் அதன்பின் அங்கு புதிய கலைஞர்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். அந்தக் கிராமத்திலிருந்து சுதேசி இசைக்கலையைக் கொல்லும் முயற்சியாகிவிடும். அந்தக் கிராமத்தில் வாழும் பரம்பரைக் கலைக்குடும்பத்தை அவமதிப்பதாகும். இப்படி உயிருள்ள கலைஞர்களை அலட்சியம் செய்து விட்டு ஓட்டை விழுந்த இசைத் தட்டைப் போடுவதால் மிச்சமாகும் ஒரு சில ரூபாய்களைக் கொண்டு, அப்படி ஒன்றும் பிரமாதமான காரியத்தையும் கோயிலில் சாதித்துவிட முடியாது.

எவ்வளவு பணம் செலவானாலும் கொடுத்து, பாரம்பர்யமாக வாழ்ந்துவரும் கலைஞர்களை உற்சாகப் படுத்துவதே கோயில்களின் கடமையாகும். நமது கலைகள் கடவுள் பக்தியை அடிப்படையாகக் கொண்டவையாதலால்தான் கோயில்களோடு கலைகளை இணைத்து வைத்திருக்கிறார்கள் பெரியவர்கள்.

அடுத்தபடியாக கொஞ்சம் முன்னேறிய சங்கீதக் கலைஞர்களை வளர்ப்பது வானொலி நிலையங்களாகும். அந்த வானொலி நிலையங்களிலும் இப்போது முன் கூட்டியே ஒலிப்பதிவு செய்யப்பட்ட டேப்களை (நாத—நாடாக்கள்) இயக்குவதன் மூலமாகவே, கச்சேரிகள் ஒலி பரப்பப்படுகின்றன.

முன்பெல்லாம் கலைஞர்களே நேரிடையாக வானொலி நிலையங்களுக்கு வந்து, ஒலி பரப்பும் நேரத்தில் அவர்களே நேரிடையாக தத்தமது சங்கீதத்தை ஒலி பரப்பினார்கள். இந்த முறையினால் நிகழ்ச்சிகளில் ஒரு ஜீவன் இருந்தது. பாடும் வித்வானுக்கும், கேட்கும் ரசிகர்கட்கும் ஒரு மானசீகமான தொடர்பு இருந்தது. இந்த நாத—நாடாப் பதிவு முறையில் அந்த தார்மிகத்தொடர்பு அறுந்து விட்டது.

லட்சக்கணக்கான ரசிகர்கள் நமது நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்; சிறு குறையும் நேராமல் பாடவேண்டும் என்றதொரு நினைப்பினால் நிகழ்ச்சி களை கட்டியிருக்கும். இப்போது டேப்பிலும் அதே வித்வான்தான் பாடுகிறார் என்றாலும், ஒரு சிறு வித்தியாசம் இருக்கிறது. முன்கூட்டியே ரிகார்டு செய்யும்போது ஏதோ ஓரிடம் தவறி விட்டாலும் பாதகமில்லை, மறுபடியும் கலைத்துவிட்டு ரிக்கார்டு செய்து கொள்ளலாம் என்றதொரு சிறு அசிரத்தை நம்மையும் அறியாமல் ஏற்படுவது இயற்கையாகும். இந்தச் சிறு அசிரத்தை, மனோவேகத்தை, களை என்று சொல்லும் இதய ஒளியை, உணர்ச்சிக் கனலை எவ்வளவு தூரம் ஆறவைத்துவிடுகிறது என்பதை இதய உணர்வுள்ள கலைஞர்கள் உணர்வார்கள் என்பது நிச்சயம். இதற்காக ரிக்கார்டு செய்யும் நமது திறமைமிக்க ரேடியோ சவுண்ட் என்ஜினீயர்களைக் குற்றம் சொல்லுவதாக யாரும் அனுவசியமாக எண்ணக் கூடாது.

மற்றும் இந்த டேப் அடிக்கடி அறுந்து போய் விடும் அபாயங்களாலும் அதற்காக அறிவிப்பாளர்,

அடிக்கடி மன்னிப்பு கோரும் பரிதாபங்களாலும் எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் விறுவிறுப்பு இல்லாமல் ஆறிப் போன டின்னர் மாதிரி பிசுபிசுத்துப் போவதையும் நாம் அனுபவித்துக் கொண்டுதானிருக்கிருேம். வித்வான்கள் விரும்பினாலன்றி, இப்படி முன் கூட்டி டேப் செய்யும் வழக்கத்தை விட்டு, முன் போல நேரிடையாக நிகழ்ச்சிகளை ஒலி பரப்புதல் நலம்.

மேலும் பொருளாதார நிலைகூட இன்னும் கொஞ்சம் உயர்த்தப்பட வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். இசை நிகழ்ச்சிகளுக்குள்ள இதே நிலை நாடகம் முதலிய மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும். இதிலே எவ்வளவோ நடைமுறை சிரமம் உண்டு என்று சம்பந்தப்பட்டவர்கள் வாதாடலாம். நடைமுறை சிரமத்தை சரிக்கட்டப் பல வழிகள் உள்ளன. ஆனால் நாளுக்கு நாள் இழக்கப்பட்டு வரும் கலையின் ஜீவனுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட எதனாலும் முடியாது. கவின் கலைகள் வளர வேண்டுமானால் அவற்றின் உயிராக இருக்கும் மனோதர்மம் காக்கப்படவேண்டும்.



## படிப்போரை மருட்டும் தமிழ் நடை

பாஷை திரிந்து வேறு படுவதெல்லாம் தன்னியல்பாகவேயாம். ஒருவனாலுந் தான் விரும்பிய படி, தான் பேசும் பாஷையை மாற்ற முடியாது. மக்களறிவின்றியே பாஷை முதிர்ந்து கொண்டு செல்லும்; பல்லாண்டுகள் கழிந்த பின்னரே முதிர்ச்சிக் குறிகள் தோன்றும். பாஷையினியல்பு இவ்வாருக, இதனையறியப் பெருத வைத்தியநாத தேசிகர் நன்னூலாரது உட்கருத்தையும் உணராது,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற நன்னூற் சூத்திர விதியைப்

"பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்
வழுவல கால வகையினானே"

என்று மாற்றித் தமது 'இலக்கண விளக்கம்' என்ற நூலின்கட் கூறினர். எனவே தமிழ்ப் பாஷையின் ஒழுகலாற்றை மாற்றுதல் எவரானும் முடியாததாம். ஆதலால் தமிழ்ப் பாஷையின் ஒழுகலாறு இன்ன தென்று உய்த்துணர்ந்து கொண்டு, ஆற்று வெள்ளத்தின் வேகத்துடன் செல்வான் போல, அவ்வொழுகலாற்றினை யொட்டி அதனோடியைந்து தமிழ்ப் புலவருந் தம் பாஷையைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

இனிச் சிலர் 'புதியன புகுதல் தமிழிற்கு ஒக்குமாயினும் பழையன கழிதல் ஒவ்வாது' என்ற கொள்கையுடையார் போலத் தாம் எழுதும் நூல்களின்கண் பழையன கழிந்த சொற்களிலும் சொல்லுருவங்களிலும் அளவிறந்தவற்றை வழங்குகின்றனர். இவர் செயல் தம்முடைய வல்லமை காட்டிப் படிப்போரை மருட்டித் தம்மைப் பற்றி அவர்கள் நல்லெண்ணங் கொள்ளவேண்டுமென்று நினைத்துச் செய்ததாகக் கருதப்படும். பாடலால் இவர் தாம் எண்ணியபடி நன்கு மதிக்கற்பாடு பெறுவதில்லை. சாமானிய சனங்கள் இன்னார் நூல்களைத் தொடவும் அஞ்சுகின்றனர். மேலும் இங்ஙன மெழுதுவார் சுவை, போலிச் சுவையெனப் பலரும் ஒதுக்குவர்.

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி
("தமிழ் மொழியின் வரலாறு" என்ற நூலிலிருந்து)

# TIRUVALLUVAR : PROPHET OF MODERN PRAGMATISM

A. V. SUBRAMANIA AIYAR

Tiruvalluvar is considered to be the wisest Tamilian that ever lived. He is not only a supreme moralist but a great poet also. His immortal work the **Tirukkural** is a literary masterpiece embodying the spiritual vision, the ethical wisdom and the ideals of kingship and polity of India of his time. It does not deal with or develop any specific system of thought or philosophy, as such, but contains the best of all, as its greatest commentator Parimelazhagar has said. Yet, Tiruvalluvar is not an eclectic. There is a broad unity and cohesion pervading his thought, which embraces almost the totality of human life and experience.

Tiruvalluvar has eschewed metaphysics and abstruse dialectics about the Absolute and Reality and the means of its realisation which form the subject of the Indian **darsanas** or systems of philosophy. An under-current of modern Pragmatism runs through the thought of the **Tirukkural** in its four prefactory chapters and the first two books, the **Arathuppal** (Book of Aram or Dharma in 34 chapters) and **Porutpal** (Book of Porul or wealth which deals elaborately with Kingship and polity in 70 chapters.) The **Kamathupal** (the Book of Love in 25 chapters) is a brilliant poem on Love based on the ancient Tamil grammatical pattern of Aham love poetry and conventions and has no organic relationship with the preface and earlier books, which however are inter-related in thought and subject.

Most of the virtues extolled by the poet as necessary for householders, ascestics, king, Ministers and the people constituting the body politic and vices condemned by him for avoidance by them are fairly general and universal in their application whether found in the one book or the other, though their practical importance and relevence to each group has been stressed in detail and examined minutely. Another feature that has to be noted in the **Tirukkural** is that its language has been generally superlative in praise and denunciatory in condemnation. This method has been adopted by the author not only for poetic effect but also to emphasise the supreme need to take to virtue and shun vice. This aspect has to be kept in mind for interpreting the couplets and judging the relational aspect of the Poet's thought on various subjects. Tamil scholars of the past had recognised this aspect of the Poet's method and called it 'Kuralathikaramurai' to explain his superlatives either in prasie or condemnation and place them in proper perspective in his scheme of thought.

The **Payiram**, which consists of the four prefatory chapters is an epitome of the fundamental thought of the Poet. The first which is "on the Praise of God" contains the quintessence of Hindu thesim and philo-

sophy. The Second is "On the Blessing of Rain" the source of all economic prosperity. The third chapter deals with the "Greatness of those who have renounced" and outlines the spiritual ideal of India. The fourth is entitled "The Supremacy and Glory of Aram (Dharma)" which determines the nature of good life, character and conduct of Man.

In the very first chapter the concept of God as the First cause of Universel, whom Man has to worship and pray for his happiness and liberation has been given the pride of place. In the last chapter of the preface the poet says that the joy Man is ever aspiring to attain can only result from a life of "Aram" or virtue. In one of the key couplets, which can aptly be called the **Mahavakyas** of the **Tirukkural** Tiruvalluvar declares :-"That alone is bliss which cometh of virtue, all else is pain or shame". In these two chapters the faith in God and the need to lead a life of virtue, are stressed for their results which is human happiness and contain the seed of the school of Pragmatism in modern Western philosophy, about which a few words are necessary.

Pragmatism is the name given to that system of recent philosophy in which the value of a doctrine or idea is judged, not on traditional or scriptural authority but by its practical bearing and effect on Man and Society. Though this system is traced to the ancient Greek philosopher Protogoras who said that man is the measure of all things by Schiller, its founder, and its underlying idea has been found in some form in later writers, it was developed and eloborated into a distinct philosophical system by William James in the last Century in U. S. A. (he got his inspiration from C. S. Peirce) and John Dewey.

William James writes :-"We can not reject any hypothesis if consequences useful to life flow from it" and illustrates his statement by adding "If the hypothesis of God works satisfactorly in the widest sense of the word it is true". He also defines truth as :-"An idea is true so long as to believe it is profitable to our lives." Lord Russell the top philosopher of England of this Century points out that "Pragmatism, as it appeared in James, is primarily a new definition of truth". James himself maintains in his book on **Pragmatism**, "Truth is one special category of good and not as is supposed a category distinct from good and co-ordinate with it. The truth is the name of whatever proves itself to be good in the way of belief." As another writer puts it pithily, "Truth, according to James is the 'cash-value' of an idea". Dr. John Dewey developed the theory of Pragmatism into newer channels and his brand of it has been known as instrumentalism. Roughly the essence of these two allied systems of thought is that there is no such thing as Truth as an intrinsic, independent and objective entity and all ideas have to be judged by their actual social consequences in a particular context of time, place and circumstance and therefore are changing and relative in nature. It may be stated this line of approach can not be dismissed as entirely unsound, though the extravagances of James, Dewey and others in expounding them came in for severe criticism from their compeers.

There is a substantial Pragmatic element in the **Tirukkural** but it has been developed on a higher plane of thought and not been related to mere social consequences as moderns would have it. Tiruvalluvar says specifically in his opening chapter that God has to be praised and worshipped because this will lead to happiness, freeedom from mental cares, longevity and salvation in the end. The belief and faith in God are stressed by the nature of the consequences that will flow to Man by way of fulfilment of all that he needs and desires. And a tone high sublimity is maintained unlike in James who has reduced belief in God as a non-rational hypothesis, willingly submitted to by people and praises its value as it "works satisfactorly" whlch really means that people who live in such beliefs are generally contented and happy.

Coming now to the problem of Truth, Tiruvalluvar's approach to it is clearly pragmatic, but his treatment of it is so ennobling and elevating that it is free from the Vagueness and the cynical undertones of modern Pragmatism. In chapter on Voimai (speaking of truth) Tiruvalluvar defines Truth in the first two couplets in terse language. He asks "What is truthfulness" and answers "It is the speaking of that which is free from even the slightest taint of evil" (V.V.S. Aiyar's translation). Elucidating this further in the next couplet he declares :-"Even falsehood is of the nature of Truth, if it bringeth forth unmixed good". Here he explains what truth is by referring to its social consequences to Man and Society. The speaking of truth should not cause harm or evil to any one. Even if what is contrary to truth is spoken with this purpose in view it will be deemed to be truth, if it results in unalloyed good. That is the test. This is not much different from Pragmatism of James and Dewey. This conception of truth is different from

speaking out literally and unalterably what one has seen or heard, irrespective of its consequences to one's self or others and to that extent may seem to be a detraction from the ideal. On closer examination it will be found that the detraction is negligible in the context of the equally high Hindu ideal of Ahimsa or causing no harm or evil to others.

After defining truth in the abovesaid manner of Pragmatism Tiruvalluvar condemns the wilful utterance of falsehood in a few powerful and poetic coupets and concludes the chapter with the dictum:–"Many things have I seen in this world, but of all the things I have seen there is nothing that is higher than truth". This is grand utterance. In another context he says that non-killing (Kollamai) is the highest virtue and even truth comes only next to that, but such statements only illustrate what has been referred to as 'Kuralathikaramurai'.

Tiruvallvar has a few other chapters on human activity involving speech, such as 'Iniyavai Kooral' (speaking sweet words) Puramkooramai (Refraining from slander) and 'Payanila Sollamai' (Refraining from vain speaking). He says for instance in these chapters "Behold the Man who always speaketh words which gladden all hearts: Poverty, increase of sorrow, will never come to Him". "If thou slander another he will look into thine own transgressions and expose the worst of them" : "Behold the man that angereth the public by the speaking of vain words : he will be despised of all men". In all these the Pragmatic bent of the poet's mind is evident as the good that results from kind and soft speech and the evil caused by the slander of others or the speaker of vain or futile words have been clearly brought out, as reasons.

## தமிழ்ப்பாஷையின் இனிமை

பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங்காலமாக வழங்கிவரும் உண்மையாகும். அவ்வசனக் கருத்து முற்றும் மெய்யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப்பையர் லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபையார் முன்பு செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ்டாந்தம் அகப்பட்டது. திருக்குறள், திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷிலே மொழி பெயர்த்தவரும் அநேக இலக்கண நூல்கள் பிரசுரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பைத் தமிழ் நாட்டாரில் பெரும்பான்மையோர் நன்கு அறிவார்கள். இவர் சொல்கிறார்:—"அநேகர் (அதாவது அநேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் முதலிய பாஷைகளைப் போய்ப் படித்துக்கொண்டு இடர்ப்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தைத் தமிழ் கற்பதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அநேக (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்களுடைய இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும், அபிருசிக்கும் அந்தப் பாஷையைப்போல் எந்தப் பாஷையும் ஒத்துவருவதில்லை" என்கிறார். இவர் தமிழ்ப் பாஷையின் இனிமையையும் பெருமையையும் குறித்து எவ்வளவோ இலக்கியமாகப் பேசியிருக்கிறார். ஆனால் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்களோ அந்தப் பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றேனும் சிறிதும் முயல்வதில்லை.

—பாரதியார்

(1906 செப்டம்பரில் "சுதேசமித்திர"னில் எழுதிய ஒரு குறிப்பின் பகுதி: ரா. அ. பத்மநாபனின் "பாரதி புதையல்" என்ற நூலிலிருந்து)

# சங்கீதமும் சாகித்தியமும்

செல்லையா

[ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களின் குமாரர், காலஞ் சென்ற தீத்தாரப்பன் (செல்லையா) 1935-ல் எழுதிய கட்டுரை இது. இலக்கிய ஞானமும் இசை ஞானமும் ஒருங்கே பெற்றிருந்த செல்லையா, 'தீபன்' என்ற புனைபெயரிலும் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். அவற்றின் தொகுப்பு "அரும்பிய முல்லை" என்ற பெயருடன் நூல் வடிவில் வெளிவந்துள்ளது.]

நான் பண்டிதருமல்ல; பாகவதரும் அல்ல. பண்டிதர் முறையில் எனக்குத் தமிழ் இலக்கியத்தில் பாண்டித்தியம் கிடையாது. பாகவதர்களைப் போல் சாஸ்திர ரீதியான சங்கீதத்திலும் எனக்குப் பரிச்சயம் இல்லை; பக்குவமும் கிடையாது. பாகவதர்கள் எங்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் கிடையாது; நானும் அவர்கள் வீட்டுக்குள் காலெடுத்து வைத்ததும் கிடையாது. இது காரணமாக எனக்கு அனுகூலந்தான் அதிகம். பிரதிகூலம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். சிட்சை ஒன்றுமில்லாத காரணத்தினுல் என்னுடைய சங்கீதத்தில் அனேகங் குற்றங் குறைகள் உண்டு என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். கொஞ்ச காலமாக அந்தக் குற்றங் குறைகளை நீக்கிக்கொண்டு வருகிறேன். இன்னும் அவை முற்றும் நீங்கின பாடில்லை. முக்கியமாக ஒரு விஷயத்தை—அதாவது என்னிடத்திலுள்ள ஒரு குறைபாட்டை—சற்று விஸ்தாரமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பாகவதர்களைப் போல் எனக்கு ராகங்களை மணிக்கணக்காக விஸ்தாரம் பண்ணத் தெரியாது. அபூர்வ ராகங்களை அலசியெடுத்துக் கேட்பவர்களைப் பிரமிக்கச் செய்யத் தெரியாது. ஸ்வரப் போர்கள் புரியத் தெரியாது. ரவை ஜாதிகள் பிருக்கா வகைகள் முதலியவைகளை அப்படியே உலுப்பித் தள்ளும் சாமர்த்தியம் எனக்குக் கிடையாது. உச்ச ஸ்தாயியில் உரக்கக் கக்திப் பாடும் பழக்கமும் எனக்குக் கிடையாது. தெலுங்கு, சம்ஸ்கிருதம், இந்துஸ்தானி, இங்கிலீஷ் முதலிய பிறபாஷைகளில் அர்த்தந் தெரியாமலே கீர்த்தனங்கள் பாடும் அருஞ்சக்தி ஆண்டவன் எனக்குக் கொடுத்தானில்லை. எனக்கு என்னமோ கேவலம் தமிழ்ப் பாட்டுக்கள்தான் பாடத் தெரியும். தமிழ்ப் பாட்டுக்களின்மேல்தான் எனக்கு மோகம். கடைசியாக, ஒரு முக்கியமான குறைபாடு என்னவென்ருல், நான் பாடும் போது தாளத்தைப் பற்றிக் கவலையெடுத்துக் கொள்வதே கிடையாது. அங்கங்கே சமயா சமயங்களில் தப்பித்தவறி நானும் தாளத்தோடு, அதாவது தாளம் பிசகாமல், பாடிவிடுவேன். ஆனுல், பொதுவாக எனக்கும் தாளத்துக்கும் அவ்வளவு ஒத்துக்கொள்ளாது.

சங்கீதத்தில் அனேக அம்சங்களுண்டு. முதல் முதலாக பாவம், அர்த்த புஷ்டி, வார்த்தைகளைச்

சரியாக உச்சரித்தல், சிறிதும் கெடாதபடி வார்த்தைகளைச் சொல்லுதல், ஸ்பஷ்டமாக உச்சரித்தல், சௌக்கமாகப் பாடுதல்—இவற்றுடன் தாளமும் இருந்தால் அதை லட்சிய சங்கீதம் என்று சொல்ல வேண்டும். இவ்வளவு அம்சங்களும் ஒருங்கே ஒருவரிடம் அமைவது ரொம்பவும் துர்லபம். ஏதோ இரண்டொரு அம்சங்கள்தான் ஒருவரிடம் அமையும். அவற்றை நன்கு உபயோகித்துக் கொள்ள முயல வேண்டும். மேலே சொன்ன அம்சங்களிலெல்லாம் நான் தாளத்துக்குத்தான் கடைசி ஸ்தானம் கொடுப்பேன். ஆனால், பாகவதர்களெல்லாம் இந்த அம்சத்துக்கு அதிமுக்கியமான ஸ்தானம் கொடுப்பார்கள். எனக்கும் அவர்களுக்கும் இந்த விஷயத்தில் ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது, அவர்கள் தாளத்துக்காக வேண்டி மற்ற அம்சங்களைக் கவனியாமலிருப்பார்கள்; நான் மற்ற அம்சங்களை அதிகம் கவனிப்பதால், தாளத்தை அதிகம் கவனிப்பது கிடையாது. முக்கியமாக இந்த ஒரு வித்தியாசத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் 'என்னைபாகவதர் என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது' என்று நான் ஆரம்பத்தில் கேட்டுக் கொண்டது. பாடும் பொழுது எப்படி நான் தாளத்தைக் கவனியாமலிருக்கிறேனே, அதேபோல் நீங்களும் தயவு செய்து தாளத்தைக் கவனிக்கக் கூடாது. இது இரண்டு பேருடைய நன்மையையும் கோரியே சொல்லப் பட்டது. பிறகு உங்களிஷ்டம்.

இதனால், தாளத்தையும் தாள சுகத்தையும் உண்மையான தாள ஞான முள்ளவர்களையும் நான் குறை சொல்வதாக எண்ணக் கூடாது. நான் சொல்வதெல்லாம், தாளத்துக்கு அளவுக்கு மிஞ்சிய பிரதானம் கொடுத்துவிடக் கூடாது என்பதுதான். அதாவது, தாளத்துக்காகப் பாடக் கூடாது; பாட்டுக்காகத் தாளம் போட வேண்டும். பாட்டுக்காகத் தான் தாளமே ஒழிய தாளத்துக்காகப் பாட்டல்ல. ஒரு சாகித்தியத்தை ஒழுங்காக, முறையாக, உணர்ந்து அனுபவித்துப் பாடவேண்டும் என்பதே லட்சியமாக இருக்க வேண்டும். நாளடைவில் தாளம் தானே வந்து அமையும், இப்படி அமைந்த தாளந் தான் உண்மையான தாளம். இப்படி அமைந்த தாள ஞானம் சங்கீதத்திற்கு அனேக விதங்களில் உதவியாக இருக்கும். இப்படியில்லாமல் அனேக பாகவதர்களைப்போல் தாளத்தைப போட்டுக் கொண்டு கால் இடமோ, அரைக்கால் அல்லது அரை மாகாணி இடமோ பார்த்துப் பாட்டை எடுத்துப் பாடவேண்டும் என்று வைத்துக் கொண்டால் தாளம் உண்மையான சங்கீதத்திற்கு முட்டுக் கட்டையாகத் தானிருக்கும்; உதவுவதாயிருக்காது.

தாளம் கையிலும் தொடையிலும் இருப்பதாக எண்ணக் கூடாது. தொடையும் கையும் கன்றிப் போகும்படி தாளம் போட்டுப் பாடுவதே ரொம்பப் பிசகு. தாளம் மனதிலேயே இருக்க வேண்டும். வெளிப்படையாகப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருக்கக்கூடாது. மனதிலேயே தாளத்தை வைத்துக் கொண்டு பாடும் பக்குவம் வந்தவர்களைத் தான் உண்மையான தாள ஞான முள்ளவர்கள் என்று சொல்ல வேண்டும். இந்த மாதிரியான தாள ஞான முள்ளவர்கள் ரொம்ப அபூர்வம். ஆயிரத்திலொன்று என்று சொன்னால் கூடப் பொருந்தும். உண்மையான தாள ஞானத்தை அடைவது அவ்வளவு கஷ்டந்தான்.

தமிழர் அனேக துறைகளில் இப்பொழுது கொஞ்ச காலமாகத்தான் கண்ணை விழித்துப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்னெல்லாம் அறியாமை என்ற மயக்கத்தில் ஸ்மரணை யற்று இருந்தார்கள். இப்பொழுது தமிழ் நாட்டில் கலை உலகத்தில் ஒரு கிளர்ச்சி, ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கவி, வசனம், பொதுவாக இலக்கியம், பரத நாட்டியம், சங்கீதம் முதலியவை புத்துயிர் பெற்று வருகின்றன. இந்தக் கிளர்ச்சியில் முக்கிய அம்சம் என்னவென்றால், நம்முடைய தாய்மொழியின் மேல்—தமிழின் மேல்—பிறந்த மோகந்தான். தமிழுக்கு யோகம் அடிக்கிறது. இதற்கு முன்னெல்லாம் தமிழ் நாட்டில் உலகத்தில் எங்கும் நடக்காத ஓர் அற்புதம் நடந்து கொண்டிருந்தது. அதாவது, தாய் மொழியின் மேல் ஒரு வெறுப்பு; பிறமொழிகளில் ஒரு மோகம். இந்த அபூர்வமான பாவத்தை உலகத்தில் எந்த இடத்திலும் நாம் பார்க்க முடியாது; தமிழ் நாட்டில்தான் பார்க்க முடியும்.

ஆங்கிலருக்கு அடிமை: அதென்னமோ நம்முடைய கர்மபலன். அதிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறோம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். நாம் சுயராஜ்யத்தைத்தான் விரும்புகிறோம் என்று தெரிந்தாலே நம்மை அவன் அதிகமாக மதிப்பான். நமக்கு அவன் சுயராஜ்யத்தை இலகுவில் கொடுத்து விடமாட்டான். எவனாவது மனமார தன்னுடைய வயிற்றுப் பிழைப்பைக் கெடுத்துக் கொள்வானா? மாட்டவே மாட்டான் நாம் ஆங்கில சர்க்காருக்கு அடிமையாயிருப்பது இப்பொழுது தவிர்க்க முடியாதது. ஆனால் அவனுடைய நாகரிகம், நடையுடை பாவனை, பழக்க வழக்கங்கள், பாஷையிலே மோகம், அந்த இலக்கியத்தில் மோகம், அது காரணமாக நம்முடைய தாய் மொழியின் மேல் ஒரு வெறுப்பு, நம்முடைய நாகரிகத்தில், கலைகளில், இலக்கியத்திலெல்லாம் ஒரு வெறுப்பு எப்படியோ ஏற்பட்டு விட்டது. இதைக் காட்டிலும் கேவலமான நிலைமை வேறென்று உண்டா? இப்பொழுது கொஞ்ச காலமாக இந்த நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது. இது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. தமிழ் மேம்பாட்டுக்காக அனேகர் உழைக்க ஆரம்பித்து விட்டார்கள். தமிழிலக்கியம், தமிழ் நாட்டுக்

கலைகள் முதலியவைகளைப் போற்ற வேண்டும் என்ற ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மறு மலர்ச்சிக்கு அனேக காரணங்கள் உண்டு. இந்த விஷயத்தில் அரிய தொண்டு செய்தது ஆனந்த விகடனென்றே சொல்லவேண்டும். ஆனந்த விகடன் செய்த தொண்டுகளில் முக்கியமானது சங்கீத உலகத்தில் தமிழ்ப் பாட்டே பிரதான ஸ்தானம் பெறவேண்டுமென்று பிரசாரம் செய்ததே. ஆனல் ஆனந்தவிகடன் கூட இதில் முற்றிலும் இன்னும் வெற்றி பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்ருல் இன்னும் சில தமிழ்ப் பாகவதர்கள் தெலுங்குப் பாட்டுக்களே அதிகமாகப் பாடுகிருர்கள்; துக்கடாக்களில்தான் இரண்டொரு தமிழ்ப் பாட்டுக்கள். மற்றவை இந்துஸ்தானியாயிருக்கும். ஒரு தமிழ் விருத்தத்தை ராதமாலிகையில் பாடுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அப்பொழுது ''மதாராமா பதிபிதா ராமச்சந்திரா'' என்று ஒரு சுலோகத்தை எடுத்து விடுவார். இன்னும் சம்ஸ்கிருதக் கீர்த்தனங்களும் வரும். இப்படியாக தமிழ்ப் பாட்டுப் பாட நேரமில்லாமலே ஆக்கிவிடுவார். அபூர்வமாக மாரியப்பசாமி, பாபநாசம் சிவன் இவர்களிரண்டுபேரும் சொந்தச் சாகித்தியங்களையே கச்சேரி முழுவதும் பாடுகிருர்கள்.

தமிழ்ப் பாட்டு தமிழ்ப் பாட்டு என்று இவர்கள் ஏன் அடித்துக் கொள்ளுகிருர்கள் என்ற சந்தேகம் அனேகருக்கு உண்டாவது இயல்பு. அவர்கள் என்ன எண்ணுவார்கள்? இதற்குக் காரணம் தமிழின் மேல் உள்ள மோகமட்டுமல்ல, சங்கீதத்தின் மேல் உள்ள மோகமும் உண்டு. பாவமான சங்கீதம் என்பது மருந்துக்குக்கூட நம் நாட்டில் இல்லாமற் போனதற்கு முக்கியமான காரணம், அர்த்தந் தெரியாமலேயே தெலுங்குப் பாட்டுக்களைப் பாடிவந்ததுதான். முக்கியமாக தியாகராஜ கீர்த்தனைகள். தியாகராஜ ஐயர் தமிழ் நாட்டில் பிறந்தவர்தான். ஆனல் அவருக்குத் தாய் மொழி தெலுங்காக இருந்த காரணத்தினல் தெலுங்கில் கீர்த்தனங்கள் இயற்றினர். இவருடைய சிஷ்யர்களும் தமிழ் நாட்டினர். இவருடைய கீர்த்தனைகளை இப்பொழுது அதிகமாகப் பாடுபவர்கள் தமிழர். இவருக்குத் தமிழ் நாட்டிலுள்ள புகழும் பேரும் தெலுங்கு நாட்டில் கிடையாது. நம்முடைய பாகவதர்களில் அனேகர் இவருடைய கீர்த்தனங்களிலுள்ள சொல் நயம், பொருள் நயம், பாவம், கவிநயம் முதலியவைகளை யெல்லாம் கவனிப்பது கிடையாது. அந்த மெட்டை மட்டும் கவனித்துப் பாடினுர்கள். வார்த்தைகளைப் பற்றிக் கவனிக்கவேயில்லை. கவனம் மெட்டில் தான்; வார்த்தையில் அல்ல. மெட்டுக்கு மட்டும் ஒரு பாட்டை அனுபவித்துப் பாட, அதைக் கேட்டு மற்றவர்களும் அனுபவித்தார்கள். இப்படி வெகுகாலமாக நடந்து வந்திருக்கிறது. இது காரணமாக உண்மையில் அந்தச் சாகித்தியத்துக்கு உரிய மதிப்பைக் கொடுக்கவில்லை.

தமிழ்ப் பாட்டையும் இவர்கள் இதே நிலைமையில் தான் வைத்திருந்தார்கள். தமிழ் வார்த்தைகளைக் கவனிப்பதும் கிடையாது. ராக தாளத்தில் அமைக்கப்பட்ட மெட்டு ஒரு கோட்டு. அதைத் தொங்க விடுவதற்கு சாகித்தியம் ஒரு ஸ்டாண்டு. இப்படி வார்த்தையை கவனியாமலே பாடினதால் பாவமான சங்கீதம் என்ருல் என்ன என்பதே தெரியாமல் போய் விட்டது. உண்மையான சங்கீதம் என்ன என்பதே தெரியாமல் போய் விட்டது.

ஓர் உண்மையைக் காண்கிருேம். அதை மனதில் உணருகிருேம். அதை உணர உணர அதனுடைய அழகும், மதிப்பும், உயர்வும் அதிகமாகிறது. அப்படியே அந்த உண்மை மனதில் நிறைந்து விடுகிறது. மனதில் அது இடமில்லாமல் ததும்பித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தப்பித்துக்கொண்டுஇன்னுேர்இடத்துக்கு ஓடவும் தயாராக இருக்கிறது. அதவாது, யார் மனதில் அவ்வுண்மை குடி கொண்டிருக்கிறதோ அவர் அதை வெளியிலெடுத்துக் காண்பிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிருர். அந்த உண்மையில் அவர் அவ்வளவு ஈடுபட்டிருக்கிருர். அவருக்கு அதை அனுபவிப்பதில் எவ்வளவு ஆனந்தம் இருந்ததோ அதற்கு மேல் இருக்கிறது, அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதில். அவர் எவ்வளவுக் கெவ்வளவு அனுபவித்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அவர் அந்த விஷயத்தை அழுத்த மாகவும் அழகாகவும் எடுத்துச்சொல்லுவார். இப்படி எடுத்துச் சொல்லுவதை எப்படிச் செய்வது? கலைகள் மூலமாக. உண்மையான உணர்ச்சி பாவத்தை எடுத்துக் காட்டுங் கருவி, கலை. கவிஞனுக்குக் கருவி கவி. சிற்பிக்குச் சிலை. ஓவியனுக்குச் சித்திரம். பாகவதருக்குச் சங்கீதம். நடன மாதுக்கு அபிநயம். வார்த்தைகள் மூலமாக வெளியிட்டால் கவி. சப்தத்தின் மூலம் வெளியிட்டால் சங்கீதம். முகபாவங்கள் அங்க அடையாளங்கள் முதலியவை மூலமாக வெளியிட்டால் அபிநயம்.

இக்கலைகளில் மூன்று முக்கியமான கலைகளை—கவி, சங்கீதம், அபிநயம்—எடுத்துக் கொண்டு அவைகளுடைய தாரதம்மியங்களைப் பார்ப்போம். கலைக்கெல்லாம் கலை கவியென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்கடுத்தாற்போல் சங்கீதம். அதற்கடுத்தாற்போல் அபிநயக்கலை; அதாவது நடிப்புத் திறமை ஓர் அற்புதமான கலை. மனதில் எண்ணியதை முகத்திற்குக் கொண்டு வந்து காண்பிக்கும் அருஞ்சக்தி ரொம்பக் கஷ்டமானது. உலகத்திலேயே மிகச் சிலருக்குத் தான் இது சாத்தியப்படும். இந்தக் கெட்டிக்காரத்தனம் இருந்தால்தான் நடிகர் என்று பெயரெடுக்கலாம். இந்தச் சக்தியுள்ள பெண்களை மேல் நாட்டில் எவ்வளவு பிரமாதப்படுத்தி வைத்திருக்கிருர்கள் என்

பது உங்களுக் கெல்லாம் தெரிந்ததுதான். இந்தச் சக்தி ஒருத்திக்கு இருந்தால், மேல் நாட்டில் அவள் கேடு கெட்ட நிலைமையிலிருந்தாலும் இதை விருத்தி பண்ணிக் கொண்டு வந்தால் உலகப்பிரசித்தி யடைந்து, ராஜாக்களும் பேட்டி காணும் சந்தர்ப் பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் உன்னத ஸ்திதி வரலாம்.

உதாரணமாக க்ரெட்டா கார்போவின் ஜீவிய சரித்திரத்தைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். அவள் முதல் முதலில் ஒரு க்ஷவரக் கொட்டகையில் சோப்புத் தேய்த்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவளுடைய அந்தஸ்தைப் பற்றிக் கேட்க வேண் டாம். இதற்கெல்லாம் காரணமாயிருந்தது, அவளு டைய நடிப்புச் சக்திதான். இந்த நடிப்புச் சக்தியினுல் இவள் உலகப் பிரசித்தியடைந்ததற்குக் காரணம், இந்தக் கலை அனேகருக்கு விளங்குவதுதான்.

இதைக் காட்டிலும் கஷ்டமான கலை சங்கீதம். அதாவது, சங்கீத மூலமாக ஒரு பாவத்தை எடுத்துக் காட்டுவது ரொம்பக் கஷ்டம் என்பது தான். அதே மாதிரி பாவமான சங்கீதத்தை அனுபவிப்பதும் கஷ்டந் தான்.

இதைக்காட்டிலும் இரண்டு விதத்திலும் கஷ்ட மானது, கவி. இந்த உலகத்தில் வெகு சிலருக்குத் தான் இது முடியும். இதை, உண்மையாக அனுபவித்து ரசிக்கக் கூடியவர்களும் வெகு சிலர் தான். கவி இன் பத்தை உணர்ந்து அனுபவிப்பதற்குப் பொதுவாக முதிர்ந்த அனுபவம், அறிவு, படிப்பு எல்லாம் வேண்டும். கஷ்டமாக இருக்கிற காரணத்தினுல் தான் இது கலைக்கெல்லாம் கலையாகக் கருதப்படுகிறது. ஆனுல் இதைக் காட்டிலும் சங்கீதத்தில் அபிநயித் திலுந்தான் ரமிப்பு அதிகம். ரமிப்பு அதிகமாக இருப் பதற்குக் காரணம் சங்கீதமும் அபிநயமும் எளிதாக விளங்கும்படி தெளிவாக எடுத்துக் காட்டும்.

கவி ரொம்பக் கஷ்டமான கலை யென்று சொன்னேனல்லவா? கவிப் பண்பை, அதன் சுவை யை அனுபவிக்க அனுபவிக்க, கவியின் மேல் ஆசையும் இன்பமும் அதிகரிக்கும். கவியை விளக்கு வதற்குப் பெரிய அறிவாளிகளும் பெரும்பாடு படு வார்கள். பொழிப்புரை; பதவுரை, இலக்கணக் குறிப்பு, அப்புறம் புளி, குறுமண் முதலியவைகளை வைத்து விளக்கி விடலாம் என்று சிலர் எண்ணுகி ருர்கள். அது முடியாத காரியம். கவிக்கும் ரசிக ருக்கும் இடையில் வியாக்கியானக்காரர் தம்முடைய பொழிப்புரை, பதவுரை, விசேஷவுரை, அகராதி முதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு நின்ருல் பயந்தான் அதிகரிக்கும். ஞானம் உதயமாகாது. ரசி கரைக் கவியின் ஸ்தானத்திலேயே கொண்டு போய் வைத்து விடவேண்டும். கவி எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த மாதிரி மனேபாவத்தோடு அப்பாட்டை எழுதினுர், என்னென்ன விஷயங்கள் கவியை இந்தப் பாட்டை எழுதும்படி தூண்டின என்பது முதலிய வைகளை முன்னுரையாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். பிற்பாடு பாட்டில் பொதிந்துள்ள பாவத்தை மனதில் வைத்துக் கொண்டு அந்தப் பாட் டைப் பாடுகிற மாதிரியில், ரசிகர் தாமாகவே, அதாவது வியாக்கியானம் இன்றியே, அதை அனுப விக்க வேண்டும். இப்படி அனுபவிக்கும்படி செய் தால்தான் ரசிகரால் கவியின் உண்மைப் பண்பை அனுபவித்து ரசிக்க முடியும். இதற்கு, அதாவது இந்தக் கவி விளக்கத்திற்கு, முக்கியமாகக் கையாள வேண்டியது, அந்தப் பாட்டைச் சொல்லும் முறை தான். இம்முறையே உணர்ச்சி விளங்க வெளியிடல். இதற்குப் பேருதவி யாயிருப்பவை இரண்டு கலைகள்: ஒன்று சங்கீதம், இன்னென்று அபிநயம். இந்த இரு கலைகளையும் நன்ருக உபயோகித்தால், கவியை எளிதில் யாருக்கும் புலப்படும்படி செய்து விடலாம். சங்கீதம் கவியோடு சேர்ந்தே இருக்கிறது. அதைப் பிரித்து வசனத்தில் சொல்லுவது பயனற்ற காரியம். சங்கீதம் மூலமாக வார்த்தையின் அழகு, அர்த்தம், பாவம், அமைப்பு, ரிதும் முதலியவைகளை எடுத்துக் காட்டலாம். சங்கீதத்தைச் சரியானபடி உபயோகிப் பதாயிருந்தால் இப்படித்தான் உபயோகிக்க வேண் டும். அப்படியானுல் தான் சங்கீதக் கலையை நாம் மதித்தவர்களாவோம். கலை உலகத்தில் சங்கீதத்துக்கு உரிய இடத்தையும் கௌரவத்தையும் கொடுத்தவர் களாவோம். இல்லா விட்டால் கலை உலகத்தில் சங்கீதக் கலைக்கு அர்த்த மில்லாமலே போய் விடுகிறது.

கவியை விளக்கும் கைங்கரியமே சங்கீதக்கலைக்கு ஒரு லட்சியம். சாகித்தியத்தைக் கொஞ்சங் கூடக் கவனியாமல் சங்கீதத்தை மட்டும் கவனித்துப் பாடிய தனுல்தான் பாகவதர்கள் இப்பொழுது சாகித்தியத் தைக் கொலை செய்யும் கைங்கரியத்தில் தீவிரமாக முனைந்திருக்கிருர்கள். பாகவதர்கள் கச்சேரி பண்ணும் போது வயிறு பசித்தால் வார்த்தைகளையே தின்று விடுவது தான். நாலுமணிநேரம் ஐந்துமணிநேரம் சாப்பிடாமல் கொள்ளாமல் எப்படிக் கச்சேரி செய் கிருர்கள் என்ற சந்தேகம் ஒரு நாள் உதித்தது. பிற் பாடுதான் இந்த உண்மை தெரிய வந்தது. அதாவது, வார்த்தைகளையே அவர்கள் சுவைத்துச் சாப்பிடுகி ருர்கள் என்பது தான்! சாகித்தியத்தைக் கொலை செய்வதற்கு அவர்கள் கைக்கொள்ளும் ஆயுதங்கள்: ஸ்வரம், துரிதகால பிருக்காக்கள், ரவைகள்—நாட்டு ரவை, பம்பாய் ரவை - அர்த்த மற்ற சங்கதிகள், இழுப்புகள், வலிப்புகள், தாள நுணுக்கங்கள் முதலியவை.

இந்த ஆயுதங்களைக் கண்டதும் சாகித்தியமும் உண்மையான சங்கீதமும் நடுநடுங்கிக் கையைக்

கோத்துக் கொண்டு ஓடிப் போய் விடுகின்றன. ஏனென்ருல் இரண்டு பேரும் ஆப்தநண்பர்கள்—ஏன், கூடப்பிறந்த தம்பிகள் அல்லது காதலனும் காதலியும் என்றே சொல்லலாம். இவர்களிரண்டு பேரும் சேர்ந்து கலந்து சுகித்திருப்பதில் இவர்களுக்கு அளவிலா இன்பம் இருக்கும். இதைக் கெடுப்பதற்கு இந்தப் பாகவதர்கள் முயல்கிருர்கள். அதாவது இவர்களிரண்டு பேரையும் பிரிப்பதற்கு முயற்சி. தனித் தனியே ஒருவரை கொலை செய்து விட்டால் இன்னெருவருக்கு வருத்தம் இருக்கத்தானே செய்யும்? இரண்டு பேரையும் ஒரே அடியில் கொலை செய்வாரும் உளர். வாழ்க்கையில் ஒரு வேளை ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகச் சந்தோஷமாக இருந்தால் நமக்குப் பொருமை ஏற்படும். அவர்கள் பிரிந்தால் நமக்குச் சந்தோஷம் ஏற்படும்; ஆனல் இந்தச் சாகித்தியம் சங்கீதம் என்ற இரு காதலர்களும் கூடிக் குலாவி மருவி இருந்தால் நமக்குச் சந்தோஷம்; அவர்கள் பிரிந்தால் நமக்கு வருத்தம் உண்டாகிறது. அவர்கள் ஒன்ருயிருப்பதில் நமக்கு அவ்வளவு இன்பம் இருக்கிறது.

சாகித்தியத்தை விளக்குவதற்கு அருங்கருவியாய் இருப்பது சங்கீதமென்று சொன்னேனல்லவா? சாகித்தியத்தை விளக்குவதற்கு அபாரமான சங்கீத ஞானம் அவசியமில்லை. ஸ்வரப் போர்கள், தாளக் குஸ்திகள், ராகங்களை மணிக்கணக்காக அலசி அலசி ஆலாபனம் செய்யும் சாமர்த்தியம், கேட்பவர்களைப் பிரமிக்கச் செய்யும்படி பாடும் திறமை—இதெல்லாம் வேண்டாம். சங்கீதத்தில் நமக்குள்ள கெட்டிக்காரத்தனத்தைக் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணமே தலை காட்டக் கூடாது. சங்கீதத்தைப் பற்றியே அதிகம் கவலைப்படக் கூடாது. சாகித்தியத்தையே அதிகம் கவனிக்க வேண்டும். சாகித்தியத்தின் பொருள் நயம், வார்த்தைகளின் அமைப்பு அதாவது சொல்நயம் கவிநயம் முதலியவைகளில் கண்ணுங்கருத்துமாயிருத்தல் வேண்டும். சாகித்தியத்திலுள்ள பாவத்தை நன்கு உணர வேண்டும். வார்த்தைகளை ஸ்பஷ்டமாக உச்சரித்துச் சொல்ல வேண்டும். பிறருக்குச் சாகித்தியம் விளங்க வேண்டும் என்பதே குறியாயிருக்க வேண்டும். இதனுடன் சிறிது சங்கீத ஞானமிருந்தால் உண்மையான சங்கீத ஞானம் உண்டாகும். அது எளிமை நயம் பொருந்தியதாயிருக்கும்: பாவம், சௌக்க காலம், எளிமை நயம் இந்த மூன்றும் ஒன்ருகவே அமைந்திருக்கும் இந்த உண்மையான சங்கீதத்தில். இன்னெரு விசேஷம்: யாருக்கும் இது விளங்கும்; திணற அடிக்கும் விஷயம் ஒன்றும் இதில் கிடையாது. யாரும் இதை இலகுவில் அனுபவித்து விடலாம்.

திருச்செந்தூர் ஷண்முகவடிவு பாடக் கேட்டவர் யாவரும் இதை அறிவார்கள். 'மானுட மழுவாட' என்ற விருத்தமும், 'வாய்முத்தம் தாராமல்' என்ற தேசிக விநாயகம் பிள்ளை பாடலும் இதற்கு இலக்கணமாகும்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நான் பாகவதரல்ல என்று சொன்னேன். பாகவதரா யில்லாவிட்டாலும் எனக்குச் சங்கீதத்தின் மேல் பெரு மோகம் பிடித்துத் தான் அலைகிறேன். மோகம் என்று சொன்னல் கூடக் காணுது: பைத்தியம் என்றே சொல்ல வேண்டும். இதே மாதிரி சாகித்தியங்களிலும் எனக்கு மோகம் பைத்தியம் எல்லாமுண்டு.

அனேக தமிழ்ச் சாகித்தியங்கள் எனக்குப் பாடமுண்டு. அவைகளை நான் அடிக்கடி வீட்டில் தனியே பாடிக் கொண்டிருப்பது வழக்கம். இது காரணமாக அவைகளின் அருமைகளும் பெருமைகளும் ஒருவாறு எனக்குத் தெரிந்துகொண்டு வருகின்றன.

பாவத்தோடு பாடுதல், உருக்கமாகப் பாடுதல் என்றெல்லாம் அநேகரைப் பற்றிச் சொல்லுவதைக் கேட்டிருக்கலாம். இவர்கள் பாடுவது உருக்கமாயிருப்பதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் அவர்கள் பாடின பாட்டின் மகிமையாயிருக்கும். அதனுடன் நமக்கு அந்தப் பாட்டின் பாவசுகம் தெரிந்திருக்கும். அவர்கள் பாடியது உண்மையாக பாவமான சங்கீதமாகவே இருக்காது. முக்கியமாக நாடகத்தில் உருக்கமான ஒரு கட்டத்தில் நாமெல்லோரும் அதில் உள்ள பாவத்தை மனதில் வைத்துக் கொண்டிருப்போம். அந்தச் சமயத்தில் ஒரு பாட்டை நல்ல சாரீரத்தோடு பாடிவிட்டால் அதை வெகு உருக்கமாகப் பாடி விட்டதாகக் கருதுவோம். உண்மையில் அப்படியிருக்காது. உருக்கம், பாவம் என்பதாக நாம் ஏமாந்து போய் விடுவது வழக்கம். 'பட முடியா தினித் துயரம்' என்ற பாட்டு நாதநாமக்கிரியை ராகம். சிலருடைய சாரீரம் இதற்கு அமைந்ததாக இருக்கும். இந்த ஆசாமிகளுக்கு இந்த ஜன்ம முழுவதும் இந்த ஒரு பாவந்தான். இவர்கள் எந்தப் பாட்டையும், பக்தி ரசமான பாட்டாயிருந்தாலும் சரி, வீர ரசமாயிருந்தாலும் சரி, காதல் துறையில் இன்ப சாகரமாகிய லீலைகள் செய்து கொண்டிருக்கும் பாவமானுலுஞ் சரி அந்தப் பாட்டை இவர்கள் அழுகை ரசத்திலேயே தான் பாடுவார்கள். பக்தி ரசத்துடன் அழுகை ரசமும் சேர்ந்தேதான் வருவது வழக்கம். தேவாரம் என்ருல் ஒரே அழுகை. 'இவனென்னடா மணிக்கணக்காக அழுது கொண்டிருக்கிருன்' என்பதுதான் பேச்சு. பாகவதர்களிலும் சிலர் இப்படி இருக்கிருர்கள். உதாரணமாக சாதாரணமாய் எல்லோரும் பாடிவரும் ஒரு பாட்டை எடுத்துக் கொள்வோம். "என்றைக்குச் சிவ கிருபை வருமோ?" இந்தச் சாகித்தியத்தின் கர்த்தா நீலகண்ட சிவன் என்பவர். இவருடைய சாகித்தியங்கள் சுமாராக இருக்கும். இந்தப் பாட்டு அப்படித்தான். முதல் இரண்டு மூன்று வரிகளைப்

பல்லவி, அனுபல்லவி இரண்டையும் சோகரசம் கலந்த பக்தி ரசத்தில் பாடவேண்டும். பிற்பாடு சரணத்தை வெறுப்பும் கோபமும் கலந்த பாவத்தில் பாடவேண்டும். அப்படியில்லாமல் பாட்டு முழுவதையும், பக்தி ரசத்தில் இருக்கிற காரணத்தினுல், சோக பாவத்திலேயே பாடிவிடுவதுமுண்டு. இதைக் கேட்கும் போது ஜனங்கள் அப்படியே உருகி விடுவதுமுண்டு. உண்மையில் அது பாவமான சங்கீதமில்லை. காரணம் பாடினவருக்கு அந்தப் பாட்டின் பாவமே விளங்கவில்லை.

இன்னொரு பாவம் வீரரசம். இது தேசபக்தியோடு சேர்ந்தது. கதரைக் கட்ட வேண்டியது; குல்லாப் போட வேண்டியது; "இந்திய சகோதரர்களே, சகோதரிகளே, இந்த ஆங்கிலேயர்..." என்று ஆரம்பித்து விட வேண்டும்; நம்முடைய ஜனங்களுக்கோ கேட்க் வேண்டாம். அந்தச் சமயத்துக்கு எல்லோரும் வீரர்களாகி விடுவார்கள். அடுத்த நிமிஷம் எல்லாம் மறந்து விடுவார்கள். இதே தோரணையிலேயே தான் பாட்டும். பாரதி பாடல்களைப் பாடுவது இப்படித்தான். "ஆதிசிவன் பெற்று விட்டான்" என்ற பாடலைக் கேட்பது இப்படி.

இந்த இரண்டும் உண்மையான பாவம் பொருந்திய சங்கீதம் இல்லை. தீப்பொறி பறக்க வேண்டிய அவசியமே யில்லை. உண்மையான பாவ சங்கீதம் தனம்மாள் பாடுவது; அவரைப் பின்பற்றி வரும் ஜெயம்மாள், பாலசரஸ்வதி இவர்களிடத்தில் தான் அது அமைந்திருக்கிறது. நான் இதுவரைக்கும் இந்த மூன்று பேரைத் தவிர்த்து வேறொருவரிடத்தும் பாவமான சங்கீதத்தை கேட்டது கிடையாது. தனம்மாள் சங்கீதத்தை எல்லோரும் ஒரு முகமாய்ப் பிரமாதப் படுத்துவார்கள். காரணம் என்ன வென்று கேட்டால் அந்த அம்மாளுக்கு சங்கீதத்தில் நல்ல ஞானம், பூர்ண ஞானம்; சௌக்க காலத்திலேயே பாடுவார்கள். ஸ்வர சுத்தமாகப் பாடுவார்கள். அக்ஷர சுத்தம், சுருதிலயம், கமகங்கள், பிடிப்புகள் முதலியவைகளைச் சொல்லிவிட்டு, 'கேட்டால் அவர் வீணை வாசிப்பதை யல்லவோ கேட்க வேண்டும்' என்று சொல்லுவார்கள். அவருடைய வாய்ப் பாட்டைப் பற்றி அதிகம் சொல்ல மாட்டார்கள். உண்மையில் அவருடைய வாய்ப்பாட்டு மிக மிக மேலானது. அதிலிருந்துதான் அவருக்கு இவ்வளவு பாண்டித்தியம் வீணையில் வந்ததென்று சொல்லலாம். அவருடைய கெட்டிக்காரத்தனங்கள், அவருடைய சங்கீதத்தில் உள்ள அம்சங்களிலெல்லாம் மூலகாரணமாயிருப்பதும் பாவம் என்பதை இதுவரைக்கும் ஒருவரும் சொன்னது கிடையாது.

அவருடைய வாய்ப்பாட்டு மட்டுமல்ல, வீணை வாசிப்பும் பாவம் பொருந்தியதே. வார்த்தைகளை—சாகித்தியத்தை—மனதில் வைத்துக் கொண்டு வீணை வாசிப்பார். பாடாமலே அவர் வாசிப்பது கிடையாது. 'மூத்த மாமியோ பொல்லாத நீலி' என்ற தோடி ராக கிராமபோன் தட்டில் ஒரு பாட்டை மனதில் வைத்துக் கொண்டு வீணையை வாசித்திருப்பதை இதில் உணரலாம். இது ஒருவருக்கும் அர்த்தமே ஆகாது. அவருடைய பிளேட்டுகளைக் கேட்டுப் பழக வேண்டும்.

இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்துதான் நான் படித்த படிப்புக்களெல்லாம். என்னுடைய சங்கீதத்தில் நல்ல அம்சங்கள் ஏதாவது இருந்தால் அதற்கு மூலகாரணம் தனம்மாள் குடும்பந்தான். மோசமான அம்சங்களுக்கு நான் பொறுப்பு என்று சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனுல், இது உண்மையல்ல; ஏனென்ருல் மோசமான அம்சத்துக்குக் காரணம் இந்தப் பாகவதர்கள்தான். இவர்களைக் கேட்டுக் கேட்டுக் காதும் கெட்டுப் போய்விட்டது. அதை மறக்க முடியவில்லை. அதை மறக்க மறக்கத்தான் உண்மை ஞானம் பிறக்கும். இதைக் கேட்கக் கேட்க வளரும்.

—"குமரி மலர்" ஆண்டு மலர், 1944.

# KAMBA RAMAYANA—
# A LITERARY APPRECIATION

S. Nallaperumal, B.A., B. SC., (Eng)
A.M.I.E., A.A.I.E.E.,
A.M.I.I. Chem. E., M.I.S.E.

The Story of Ramayana was sung as a narrative poem by Valmiki. The story stirred the hearts of millions in India and elsewhere in the world. Many poets borrowed the story from Valmiki and have given a number of Ramayanas to the world. In Bengali, we have 'Kritivas Ramayana', in Telugu 'Renganatha Ramayana', in Canarese 'Nagachandira Ramayana', in Malayalam 'Ezhuthacha Ramayana', in Marathi 'Ekanath Ramayana', in Hindi 'Tulasidas Ramayana' and in Tamil 'Kamba Ramayana'.

Scholars say that of the many versions of Ramayana Kamban's stands foremost. Kamban has borrowed the story from Valmiki but the presentation is entirely his own. Even casual reading of Kamba Ramayana will show the greatness of Kamban as a poet challenging comparison with the master poets of the world.

The great poets of the world, to whatever country they belong have the unique quality of touching the human heart and mind. Homer, Valmiki, Milton or Dante provide endless charm to mankind in any part of the world.

Valmiki's and Homer's are primitive narrative epics. Milton wrote his 'PARADISE LOST' to "Justify the ways of God to man" and Kamban wrote Ramayana to show to the world that God comes down to the world in human form whenever Dharma is endangered. Kamban is esteemed not only as a great poet but as one who has given expression to the faith and aspiration of millions of people by giving light and delight to them. His work is a monumental tribute to the human mind. It's excellence can be enjoyed from any angle, for its thought content, poetry, art or culture. Kamban can be read in any age in ones life. Reading Kamban in young age, is like looking at the moon thro' a crevice; reading him in middle age is like viewing the moon from the courtyard; reading him in old age is like enjoying the moon from the open terrace. One test of great masters, of whom Kamban is one is that the appreciation of their poetry is a lifetime task, because at every stage of maturing and that should be ones whole life time—we are liable to understand them better. Among these great masters are Shakespeare, Dante, Homer, Virgil, Valmiki and Kamban. In the Tamil firmament, if the Sangam poets are twinkling little stars, Sekkilar, the morning star and Tiruvalluvar the full moon, Kamban is the central planet—the Sun.

Tamilians can take legitimate pride in Tiruvalluvar and Kamban. Tiruvalluvar has given a matchless 'guide book on life' prescribing with clarity and precision the right conduct. Kamban's work

abounds in exquisite literary elaborations—lyrical, dramatic—of Tiruvalluvar's maxims.

Homer is the first bard of the West (there are over 30 translations of Homer) and mankind has enjoyed Homer for over 2500 years. Virgil has given to the world his literary epic "Aeneid" and Milton his 'Paradise Lost'. Valmiki and Kamban have given an epic, which is enjoyed by a fifth of the population of the world. Kamban lived 1000 years age, but even today there are thousands of people in Tamilnad who shed tears of delight at the mere mention of his name. He has an abiding place in the hearts of millions of people for his great poetry.

There are countless moving scenes in the presentation of the Ramayana by Kamban. To mention only a few:

(1) The appearance of Rama before Kausalya immediately after he is denied the crown and banished from the Kingdom.

(2) The meeting of Guha with Bharatha.

(3) The ordeal of fire which Sita underwent.

Let us see first situation.

Bharatha goes to the forest to request Rama to return to Ayodhya and accept the crown. Bharatha and his army marched through the country and reached the banks of Ganga. Guha, the boatman, sees Bharatha at a distance. He thought Bharatha has come to the forest with evil intentions of inflicting more misery on Rama. He peps himself up to fight Bharatha. But when he sees Bharatha at close quarters, clad in bark, with sorrow-laden face, Guha's heart melts and he says to himself:

"The prince is so like dear Lord Rama
And he who stands beside him too
Is a very likeness of beloved Lakshmana".
"Oh! was I not mad to think
that a brother of Rama
Could ever do aught so vile!"

(Rajaji's translation of Kambaramayana)

Bharatha and Guha fall at each other's feet. Guha embraces Bharatha with "Greater than a father's joy" and says that a thousand Ramas will not equal his greatness. Kamban makes us shed tears of joy over the spotless love and loyalty of Guha to Rama.

How many beautiful dramatic situations in Kamba Ramayana!

(1) Rama meeting Sita for the first time.

(2) Rama attempting to take leave of Sita.

(3) Surpanaga appearing before Rama as a heaven-sent beauty.

(4) The golden deear (Maricha disguised) appearing before Sita.

(5) Lakshmana meeting Tara at Sugreeva's palace doors.

(6) Ravana abducting Sita.

Kamban has superbly dramatised the situations. Hence his work is also called 'Kambanatakam'. Many of the scenes will be fitting shots for the modern Cinema Producer.

The late Sri V. V. S. Iyer in his thesis 'Kambaramayana a study' shows how Kamban stands equal to Valmiki. In fact Kamban's is a more polished presentation. We may say Valmiki gave the characters but Kamban gave the characterization. Kamban does not have the outdoor vigour of Valmiki but his artistic grace is unsurpassed.

It will be a difficult task to bring out comparisions of Kamban with all the master poets of the world. To establish that Kamban ranks with the greatest poets of the world, it may perhaps be sufficient to show that he ranks with Milton and Shakespeare.

'Kamba Ramayana' and Milton's 'Paradise Lost' are famous literary epics. In sheer volume, Kamban is four times greater than Milton. Both are erudite scholars with poetic vision but whereas Milton can be read as duty, Kamban can be read for beauty. Kamban's description of Kosala reminds us of the description in Milton beginning with the lines 'sweet is the breath of morn'. Kamban's Ravana 'in heroic dimensions' excels Milton's Satan. Satan equals Ravana only when 'his stature reached the sky and on his crest sat horror plumed'.

When Ravana approached Sita to take her away to Lanka "The mountains shook, the birds and animals became dumb and even snakes withdrew their hoods". This reminds us Milton's "............Nature from her seat sighing through all her works gave signs of woe that was lost".

Milton is very famous for his epithets like "Studious cloisters bale", "dim religious light", "fresh fields and pastures new", "burnning midnight oil". Kamban is also famous for his epithets "Smiling lotus", "Moon shining like Dharma's face," "Sita beautifying beauty."

Great poets to whichever time and country they belong, use almost similar words.

Milton sings of the garden of Eden—

"A sylvan scene, and, as the ranks ascend
Shade above shade, a woody theatre
Of stateliest view."

Kamban sings of the gardens of Kosala—

"Cool crested peacocks dance, lotus lamps light,
Thunder in the clouds beats the drum, blue bells,
Form the audience, with wide open eyes,
Waving waters are the rolling curtains
And sweet murmur of bees, the
Music of stringed instruments."

The situation in Greek Mythology of the abduction of Proserpine, daughter of Mother Earth, by Pluto, king of Hades is described by Milton—

"..................................that fairfield
Of Enna, where Proserpine gathering flowers
Herself a fairer flower, by gloomy Dis
Was gathered, which cost Ceres all that pain
To seek her through the work."

A similar situation—the abduction of Sita, daughter of Mothar Earth, by Ravana, the King of Lanka—

"Vaidehi, with her soft bangled
Flower of a hand plucking flowers".

Kamban and Shakespeare appear like Everest and Alps, standing apart in two hemi-spheres, separated by 600 years and 6000 miles. Both poets are gifted with sight and insight to provide light and delight to mankind by treating situations and sentiments in similar style. All that is excellent in the great poets of all countries is not what is NATIONAL but what is UNIVERSAL.

A Japanese girl was asked whether she understood and followed the character and behaviour of Juliet. The girl answered "Why! Juliet is Japanese".

Let us take LOVE - a universel experience. There is similarity in the treatment of love by poets of varied times and climes.

Prof. Ryder writing about Kalidasa's Love poetry says "It rings as true in our ears as it did in his country men's, 1500 years ago."

Walking along the streets of Mithila, on the eve of the trial with the bow, Rama gets a glimpse of Sita in the balcony. At first sight, both fell in love.

In Shakespeare's plays, love starts similarly. Phoebe in "As you like it" quotes Marlowe's words "Whoever loved that did not love at first sight". Celia and oliver "no sooner met but they looked, no sooner looked but they loved". This is reminiscent of Ben Johnson's "They exchanged glances". This is the same with every pair of lovers in Shakespeare.

Kamban describes the "Unity of hearts into one". Shakespeare speaks "Combine your hearts into one" (Henry V)

Kamban says "One life and two bodies". "So, with two seeming bodies, but one heart" (Shakespeare-"A Midsummer Night's Dream) "The great vow which did incorporate us and make us one" (Shakespeare-Merchant of venice )

After the exchange of glances between Rama and Sita, follows a scene which would appear an elaboration of Shelly's picture of

"......................a high born maiden
In a palace tower
her love - laden
Soul in secret hour".

If we survey such situations in Shakespeare and Kamban, many parallels attract out attention.

Imogen (cymbeline) forcibly separated from her husband, bears a distatant resemblance to Sita in Sundara Kanda.

"But that there is this jewel in the world
That I may see again" — Imogen

"I am still keeping alive so that I may
See my bejewelled Lord again"—Sita.

Hermione's patience in "Winter's Tale" is like Sita's. Hotspur in his rashness, valour and righteous indignation is a parallel to Lakshmana. Antony and Henry in the battlefield are the counterparts of Kambans' soldiers. The tragedies of Shakespeare often depend on the whims and fancies of women, acting as instruments of Fate — Lady Macbeth, Cleopatra and Desdemona.

Three women bring the catastrophe in Kamban and they are instruments in the hands of Fate—Manthara, Kaikeyi and Sita.

The Queen of Cymbeline has something of Kaikeyi in her. The renunciation of Coriolanus is not unlike Rama's. Kent's loyalty to King Lear is similar to the loyalty of Bharatha or Lakshmana to Rama. Dasaratha, as an ideal ruler reminds us of

Plato's 'Philosopher King' and Shakespeare's 'Henry IV' and 'Henry V'.

T. S. Elliot mentions that one mark of a great poet is that he leaves behind to posterity, a language more excellent and more refined than what it was. Shakespeare, Milton and Kamban have done this. Sublime, Majestic and Graceful—almost the same expressions are used by them. 'Pendent world' is used by Milton, Shakespeare and Kamban.

"Rainy eyes" is used by Shakespeare and Kamban. Poet Crashaw speaks of the eyes of Mary Magdalene as "Compendious Oceanes." Kamban speaks of the eyes of Sita as "Greater than the Ocean". It will be a rewarding study to study these parallels.

Shakespeare by universal acclaim is the greatest poet and dramatist, the world has seen. Kamban ranks with him. Milton hails Shakespeare as "Sweetest Shakespeare! Fancy's Child". We feel like echoing Milton's words, when we think of Kamban.

No other poet enjoyed the reputation of being referred to as "Dear Shakespeare" and "My Shakespeare". The same warmth is shown bv lovers of Tamil Literature towards Kamban.



## மணிக்கொடி

நாங்கள் மூவரும் (டி. எஸ். சொக்கலிங்கம், ஸ்டாலின் ஸ்ரீனிவாசன், வ. ரா.) சேர்ந்து கட்டியதன் பலனாகத் தோன்றிய 'மணிக்கொடி' பத்திரிகையை உங்களில் பலர் அறிந்திருக்கலாம். அந்தப் பத்திரிகையில்தான் வ. ரா. தமது முழுவேகத்தையும் காட்டுவதற்கான உற்சாகம் ஏற்பட்டது. வ. ரா. வின் நடைச்சித்திரங்கள் உண்மையிலேயே தமிழுக்குப் புதுமையாய் இருந்தன. ஆங்கிலம் படித்துவிட்டுத் தமிழே படிக்க முடியாது என்று சபதம் செய்தவர்கள்கூட, அவற்றைப் படிக்கும்படி காந்தம்போல அவை இழுத்தன. 'மணிக்கொடி' பத்திரிகை வெகு காலம் நடக்காவிட்டாலும், தமிழரிடையே வெற்றிகரமான புரட்சியை அது ஏற்படுத்தியது. ஆங்கிலத்தில் உள்ளவைகளைப் போலவே தமிழிலும் எழுதமுடியுமென்பதை 'மணிக்கொடி' காட்டியது. ஆகவே தமிழ்க் கட்டுரைகளைப் படிக்கும்படி புத்திசாலிகளை வற்புறுத்தி இழுத்தது. தமிழர்களைச் சிந்திக்கும்படி செய்தது. புதிதாய்ப் பல எழுத்தாளர்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தி, எழுத்தாளரின் கூட்டத்தைப் பெருக்கியது. 'மணிக்கொடி' யுகமான 1933-1934 ஆம் வருஷம் தமிழ் நாட்டுக்கு ஒரு முக்கியமான காலம். அதில் ஏற்பட்ட மாறுதல்களை எப்பொழுதும் மறக்கமுடியாது. இன்று தமிழ் நாட்டில் தமிழ் மொழியிலும், புத்தக வளர்ச்சியிலும், பத்திரிகை வளர்ச்சியிலும் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகள் எல்லாம் அந்த 'மணிக்கொடி' காலத்திற்குப் பின்னதாக ஏற்பட்டவைதான். அந்த மாறுதலை ஏற்படுத்தியதற்கான முக்கியமான பங்கு வ. ரா. வைச் சேரவேண்டும்.

—டி. எஸ். சொக்கலிங்கம்

(வ. ரா. மணிமலர், 1948)

# THE GREATEST TAMIL MYSTIC

S. MAHARAJAN

TIRUMOOLAR is the greatest mystic and seer that Tamil Nad has ever produced. The eighteen Siddhas of Tamil Nad acknowledge him as their supreme preceptor and as the progenitor of the esoteric school of the Tamils.

Legend has it that he lived for 3,000 years, and out of the silence of his soul, brought out one song a year. It may be that is only a poetic way of saying how profound and beautiful are his three thousand songs and how long each of them must have taken to contemplate and compose. Beyond legend there is no reliable historical material to help us fix his age. In Puranic literature, however, there are references which suggest that Tirumoolar lived in 6,000 B.C.

Whatever might be his age, Tirumoolar remains valid for all time. His Thirumanthiram is an encyclopaedia of authentic spirtual experience at almost all levels, that is to say, from idolatry to a disembodied absorption in the Ultimate Void. He is about the only Indian mystic who has cared not only to record his experiences but also to evolve and communicate an elaborate technique by following which other aspirants may reach the goal he set for himself. It is true that the secrets discovered by Tirumoolar have been set down in highly symbolic language. The writer of this article once thought that the key to his symbolism has been irretrievably lost. But subsequent contact with living mystics has convinced him that the key is in safe and exclusive keeping. If there is good reason to keep the atom bomb out of the reach of the rabble, there is much greater reason to deny to it the fruits of supramaterial research.

Even the intellectual is not qualified to obtain initiation into the secrets, unless he realises the the intellect is after all one of the most contemptible and inadequate instruments given to man. It is in the awareness of human ignorance that Tirumoolar sees the beginnings of spiritual wisdom. Accordingly, in his preface to Tirumanthiram, he sings with characteristic humour:

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

Whoever knows the glories of my Lord
and who, the vastness of Infinity : (yet)
Of my ignorance of that Nameless Light
I shall sing three thousand songs.

Einstein, that great scientist, standing on the brink of the Known and peeping into the Unknown, exclaims,

"How terrifying is my ignorance!"

Consciousness of ignorance, however, holds no terrors for Tirumoolar : in fact he exults and revels in it as the liberator from the Ego.

But even the man who has become aware of his ignorance is trammelled by the Ego. Tirumoolar

would, therefore, urge him to go beyond knowledge and ignorance into Pure consciousness. The wisdom acquired through such unfettered consciousness can alone be regarded as having ultimate validity.

அறிவறி யாமை கடந்தறி வானல்
அறிவறி யாமை அழகிய வாறே!

How then are we to have access to the region of Pure conciousness where there is awareness but no thought? The exact mechanism by which the different states of conciousness can be reached has been suggested by Tirumoolar in several places.

The mind is located by Tirumoolar in a specific physical centre in the human body. This is very much like the gear box of an automobile. The mind can be said to be in the fiirst gear when we are awake, in the second gear when we are dreaming and in the third gear when we are in deep, dreamless slumber. In other words, there are three physical states in the body corresponding to the three mental conditions, viz., waking, dreaming and sleeping. When a waking man falls asleep, a corresponding involuntary change takes place in his physical condition. Likewise, when he drafts into the dreaming condition, an automatic physical change occours. In their great spiritual laboratories, our Gnanis made this most momentous discovery and put it to immediate use. By physically manipulating the centre in which the mind resides and by changing its gear they found they could enter into any of these three mental conditions voluntarily and at will, retaining at the same time their awareness. They could, for instance, get into the deep slumber condition, remaining aware or "awake". The Ego which is like a prism distorting and refracting Reality, is itself asleep in slumber, and the Gnani, who can go into slumber without losing awareness, is in a position to have a glimpse of Reality undistracted by the frolics of the Ego. Beyond slumber is the fourth condition of Turiya, where the Ego dies completely and the soul stands face to face with the Lord ready to melt in his embrace.

It is when the mystic finds himself in this condition of the utmost absorption that he is able to pierce the multifaceted crust of reality and perceive the Primordial and undifferentiated stuff of Being. Tirumoolar clarifies this truth with his famous analogy of a wooden toy elephant.

The child played, ecstatic, with his elephant proud
He cared not it was made of wood,
Unplayful man beheld but a lump of wood,
He missed, alas! the elephant's form;
Even so, the Elements hide the Real from our sight,
But the Mystic's eye pierces thro' the Elements and gets at God.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

Lest the reader should think that Tirumoolar is much too pre-occupied with the Spirit, it is necessary at this juncture to set out the place he assigns in his system to secular life. Albert Schweitzer complains that all oriental philosophers, with the wholesome exception of Tiruvalluvar, deny the reality of life and the world. Tirumoolar affirms the reality of life and the world. To him the human body is not an execrable delusion but a divine gift to be treasured and even adored. In fact he calls every human being "a walking temple of God" and adds that any offering made to this temple is more readily accepted by God than the offerings made in the stone temples of God. This principle supplies a rational basis for, and justifies all social service. Even from the spiritual stand-point, the individual, who engages himself in social service, finds that his Ego is slowly thinning out and he begins to experience a new joy which derives from his increasing liberation from the Ego.

The dignity of the body, in Tirumoolar's view, is almost as great as that of the spirit. He confesses:

"Once I thought that the body was something, vulgar and mean,
But now I know that inside the body and only through it, can I get at Reality."

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்.

At another place he says that the Body is the Temple, the Mind is the Sanctum Sanctorum and the spirit is the Lord and the five wicked-seeming senses are the eternal foot-light that light up the glory of the Lord.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுக்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

One must make spiritual hay while the bodily sun shines, for, the moment the body is lost, all experience comes to an end and consequently, the

opportunity of emancipation comes to an end, too. That is why our mystic exclaims,

உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த் தேனே.

"By developing my body
I developed my Spirit, too".

To Tirumoolar bodily health, however, is only a means to a spiritual end and not an end in itself.

Turning next to the control of the senses, we find that Tirumoolar's attitude in this respect is refreshingly unorthodox. The senses are but the servants of the mind and have no volition of their own. He, therefore declares that it is dangerous to impose any restraint upon the senses. That will be tackling the mind from the wrong end. Every such restraint is bound to create an inhibition in the mind and thereby further complicate the sub-conscious. He suggests that the mind (conscious and sub-conscious) should be independently treated in such a way that an eflective disjunction between the mind and the senses is brought about at will. When one has acquired mastery of the mind in this way, he gains freedom from the senses, not by controlling them, but by transcending them.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்(டு)
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.

The esoteric tantras (exercises) laid down by Tirumoolar for the rejuvenation of the body and the purification of the Mind and Spirit cannot be understood except through the initiation of a competent and loving Guru. The supreme necessity of seeking out the Guru is, therefore, repeatedy emphasized by Tirumoolar as in the following song :

வரும்வழி போம்வழி மாயா வழியை
கருவழி கண்டவர் காணு வழியைப்
பெருவழி யாம்நந்தி பேசும் வழியை
குருவழி யேசென்று கூடலு மாமே.

But, the acquisition of the Guru is, in Tirumoolar's view, governed by the laws of Grace. Thus Tirumoolar, like all great Mystics, ends, as he began, with a declaration of his boundless faith in Divine Grace and his absolute surrender to God.



# மலாக்கா செட்டிகள்

சி. வி. குப்புசாமி, கோலாலம்பூர்

திருமதி அபிராமியும் (வலது) அவர் மகனும் (இடது)

**நா**னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மலாக்காவிற்கு வாணிகஞ் செய்யவந்து நிலையாகத் தங்கி, குடியும் குடித்தனமுமாகிவிட்ட மலாக்கா செட்டிகள் என்று அழைக்கப்படும் இந்தியப் பரம்பரையினரைப் பற்றி பலருக்குச் சரிவரத் தெரியாது. சிலருக்கு அவர்களைப் பற்றி ஓரளவு தெரிந்திருந்தாலும் முறையான விவரங்கள் எதுவும் தெரிவதற்கு வாய்ப்பில்லாமற் போய் விட்டது. ஏனெனில் இவர்களைப் பற்றிய குறிப்புக்களை எவரும் நூலாக வடித்துக் கொடுக்கவில்லை. எனவே அவர்களில் தலையாயவர்களை நேரிற் சந்தித்துக் கேட்டறிந்தவற்றைக் கருவாகக்கொண்டு இந்தக் கட்டுரை வரையப்படுகிறது.



திரு. வேலுவும் (வலமிருந்து 4-வது) அவர்தம் குடும்பமும்



ஸ்ரீ பொய்யாத விநாயகர் கோவில் (மலாக்கா)

மலாக்கா செட்டிகளின் விவரமும் வாழ்க்கை முறையும் சுவை நிறைந்ததாய்க் காணப்படுகிறது. அவர்கள் நடை, உடை பாவனைகளில் மலாய்க்காரர்களைப் போல இருக்கிறார்களென்றாலும் சமய ஆசார அனுஷ்டானங்கள் முழுமையும் இந்துக்கள் மயமாகவே இருந்துவருகிறது. இந்து வருஷப் பிறப்பு முதல் எல்லாத் திருவிழாக்களையும் அவர்கள் முறை தவறாமல் கொண்டாடி வருகிறார்கள். வீட்டில் பெரும்பாலர் மலாய் மொழியும் சிலர் ஆங்கிலமுமே பேசுகின்றனர். தீமிதி விழாவை அவர்கள் காப்புக்கட்டி முறையாக நாற்பது நாட்கள் விரதமிருந்து கொண்டாடி வருகின்றனர். ஆண்டுதோறும் இருபது, இருபத்தைந்து பேர் தீ மிதித்து காணிக்கை செலுத்திவருவது வழக்கம்.

**கஜ பிராங்**

மலாக்கா நகரத்திலிருந்து ஒன்றரைக்கல் தொலைவிலுள்ள **"கஜ பிராங்"** என்னும் இடத்தில்தான் மலாக்கா செட்டிகள் வசித்து வருகின்றனர். நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாணிகஞ் செய்ய மலாக்கா வந்த இப்பிரிவினர் தங்கள் மனைவிமார்களையோ, பெண்களையோ தங்களுடன் அழைத்து வராததால் மலாக்காவிலுள்ள உள்ளூவர்வாசிகளையே திருமணஞ் செய்து கொண்டனர். அதனால் நடை, உடை, பாவனைகள் மாறினவென்றாலும் அவர்கள் தமது பண்டைய பழக்க வழக்கங்களைக் கிஞ்சித்தும் மாற்றவேயில்லை. வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்வது, பொங்கல் வேள்விகள் நடத்துவது, கோலம் போடுவது, இந்து சமய விழாக்களைக் கொண்டாடுவது, விரதமிருப்பது, இந்து சமய முறைப்படி திருமணம் செய்துகொள்வது, மார்கழி மாதம் முழுவதும் சாணந்தெளித்துக் கோலம்போட்டு, இறுதியில் தைப்பொங்கலை சம்பிரதாயப்படி கொண்டாடுவது, மாசிமகம், சித்திரா பருவம் போன்ற விழாக்களில் பக்தி விசுவாசத்துடன் கலந்துகொள்வது போன்ற இந்து-தமிழர் பழக்க வழக்கங்களை அவர்கள் கைவிடுவதில்லை.

துரோபதை அம்மன் கோவிலில் உள்ள விளம்பரப் பலகையில் பாற்காவடி, பாற் செம்பு, அலகு குத்துதல் போன்ற சொற்களுக்கு முறையே காவடி சூசு (Kavadi Susu) செம்பு சூசு (Chembu Susu) சோச்சோக் அலகு (Chochok Alagu) என்னும் சொற்களை மலாக்கா செட்டிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

அக்கோவிலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றைப் பார்க்க எனக்குச் சிறிது காலத்திற்கு முன்பு வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் மலாய் மொழியிலேயே தாங்கள் நடத்த விருந்த திருவிழாவைப் பற்றிப் பேசினர். ஆனால் இடைக்கிடையே சுவாமி, ஊர்வலம், அர்ச்சனை, சூடம், சாம்பிராணி, ரதம் என்று தமிழ்ச் சொற்களை அவர்கள் பயன்படுத்தினர். மொழி வேற்றுமை இருந்தபோதிலும் இந்து சமயத்தில் அவர்கள் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

**தமிழ் கற்கின்றனர்**

பெரியவர்களில் பலருக்குத் தமிழ் தெரியாதென்றாலும் இப்போதுள்ள சிறுவர் சிறுமியர் தமிழ் மொழியையும் கற்றுக்கொள்கின்றனர். வெள்ளி சனிக்கிழமை தோறும் சமயபாட வகுப்புகள் கோவிலில் நடைபெற்று வருகின்றன. தமிழ் தெரியாத பிள்ளைகள் தேவாரத்தை ஆங்கில எழுத்தில் எழுதி இசையுடன் பாடுகின்றனர்.

ஒரு காலத்தில் ஏராளமான மக்களைக் கொண்ட இப்பிரிவினர் இப்போது 200 பேர்தாம் இருக்கின்றனர். சிலர் உத்தியோக விஷயமாக வெளியூர்க்குச் சென்றுவிட்டனர். இவர்களது எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் தங்கள் முன்னோர்கள் அமைத்த மாரியம்மன், கயிலாசநாதர், அங்காளம்மன், காளியம்மன் (பச்சாங்), காத்தாயி அம்மன், கங்காதரி கோவில்களை நிர்வகித்துவருகின்றனர். இந்தக் கோவில்கள் எல்லாம் இரண்டு கல் சுற்றுவட்டாரத்திற்குள் தான் இருந்துவருகின்றன. மலாக்காவிலுள்ள பழம் பெரும் இந்துக் கோவிலாகிய ஸ்ரீ பொய்யாத விநாயகர் கோவிலிலும் மலாக்கா செட்டிகள் நீண்டகாலத் தொடர்பு கொண்டிருக்கின்றனர். இக் கோவிலின் நிர்வாகம் இன்று நகரத்தார் வசம் இருந்துவருகிறதென்றாலும், மலாக்கா செட்டிகளின் சார்பில்

திரு. ஏ. ஆர். பிள்ளை இன்று அதன் நிர்வாக டிரஸ்டிகளில் ஒருவராக இருந்துவருகிறார்.

கஜ பிராங்கிலுள்ள மலாக்கா செட்டிகளில் பெரும்பாலர் இன்று அரசாங்க பென்ஷன்தாரர்களாக இருந்துவருகின்றனர்.

எண்பத்திரண்டு வயதுள்ள வேலு என்பவர் சொந்தமாக வியாபாரம் செய்துவருகிறார்; பால்மாடுகளும் வைத்திருக்கிறார். இவர் பழமையை இன்னும் கைவிடாமல் காதில் குவளைக் கடுக்கனும், காலில் செருப்பும் அணிந்திருக்கிறார்.

மலாக்கா செட்டிகளில் அதிக காலம் வாழ்ந்தவர் அபிராமி என்பவராவர். இவர் 100 வயதில், எழுந்து நடமாடமுடியாத நிலையில் படுக்கையிலே இருந்த போது (1967) காலமானார். இவருக்குப் பலர் உபசாரங்கள் செய்ததுடன் தெய்வத்தைப் போலக் கருதி மரியாதையும் செய்துவந்தனர். அரசாங்கப் பென்ஷன் தாரராகிய ஏ. ரத்தினம் பிள்ளையின் மாமியார் ஆவார் இவர்.

## தமிழ்ப் பெண்மணிகளில் முதல் பத்திராசிரியர்; முதல் நூலாசிரியர்

ஸ்ரீமதி பண்டிதை விசாலாக்ஷியம்மாள் அவர்களைத் தமிழ்நாட்டில் அறியாதார் இரார். தமிழ்ப் பெண்மணிகளுள் முதல் பத்திராசிரியராயும், நூலாசிரியராயும் வெளிப்போந்தவர் அவர்தான். அவரது நூல்கள் யாவும் பெண்மணிகளுக்குக் கண்மணி போன்று இலங்குவனவாகும். பதிபக்தியையும், ஈசுவர பக்தியையும் போதிப்பதில் அம்மையார்க்கு அபாரமான நிபுணத்துவம் இருந்து வந்தது. அவரது நூல்களெல்லாம் உத்கிருஷ்டம் பொருந்தியவைகள். அவரது தமிழ்ப் பாஷா நயம் வேறு எவராலும் ஸ்வீகரிக்க முடியாத விதமாகப் பரிமளித்துக் கொண்டிருந்தது. அவர் 1902-ஆம் வருஷ முதல் "லோகோபகாரி" பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், பின் பத்திராசிரியாயும் விளங்கி விசேஷித்த பிரக்யாதியை யடைந்திருந்தார். லோகோபகாரிப் பத்திரிகையை விற்று விட்ட பிறகு "ஹிதகாரிணி" என்ற உயரிய மாத ஸஞ்சிகையைப் பல வருஷங்கள்வரை பிரசுரித்து வந்தார். பத்திரிகா முகமாய்ப் பிரதி பத்திரிகைகள்தோறும் சொரிந்து வந்த வேதாந்த மாரியின் அற்புதமும் அதன் அருமை பெருமைகளும் அதை வாசித்து வந்தோர்தான் அறிய வல்லார். அவரை ஒரு ஞானாசிரியை என்றும் சொல்லலாம். இளமை முதல் ஞான பக்தி வைராக்கியங்களில் சிறந்து நின்றார். அதி பால்யத்தில் பர்த்தாவை இழந்து தமது வாணாள் முற்றிலும் தபஸ்வினி போன்றும் காலங்கழித்தார். ஸங்கீதத்தில் அவருக்கிருந்த ஞானம் அபாரமானது. அதை நேரிற் பார்த்தவர்கள்தான் சொல்லவேண்டும். கன்னடம், தமிழ், ஆங்கிலம், ஸமஸ்கிருதம் இந்நான்கு பாஷைகளிலும் நன்கு தேர்ந்தவர். இவரால் எழுதப்பட்ட நாவல்கள் ஒரு முப்பதுபோல் இருக்கலாம் தர்க்கத்தில் மிகவும் வல்லவர். இத்தகைய பிரபாவங்கள் கொண்ட இந்த மாது சிரோமணியார் தமது 42-வது பிராயத்தில் சென்ற அக்டோபர் மாதம் 25-ம் தேதியன்று சென்னை ராயப்பேட்டையிலுள்ள தமது "லலிதா விலாஸ்" மாளிகையில் காலஞ்சென்று விட்டாரென்று அறிய மிகவும் துக்கிக்கின்றோம். "விசாலாக்ஷி" எனும் ஞானாசிரியை அஸ்தமனமானதால் அவரால் அறிவுச் சுடர் கொளுத்தப்பட்ட நாம் இப்போது இருளில் அகப்பட்டு விழிக்கின்றோம். நம்முடைய வியஸனத்தைப் பரிகரிப்போர் யார்? பகவானே! உம்முடைய யோசனையும் காரியமும் அற்ப மனிதர்களாகிய எங்களால் அறியமுடியுமோ? மிகச் சொற்ப வயதில் அதி சீக்கிரத்தில் ஜீவன் பிரிந்தது பரம துக்கத்துக்கிடம். பத்திரிகை உலகத்துக்கும், முக்கியமாய் ஸ்திரீ ஸமூகத்திற்கும் அவரது அந்தியம் அளப்பரிய பெரும் நஷ்டமாகும். ஞான கலா விலாஸினியான இவ்வம்மையின் எதிர்பாராத வியோகத்தை நினைக்குந்தோறும் எம்முடைய மனம் துக்கத்தால் மூடப்படுகிறது. ஆகவே, இச்சமயம் எதுவும் எழுதத் தோன்றவில்லை. அவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபம்.

—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,
("ஆநந்தகுணபோதினி," நவம்பர், 1926)

# KALINGATTUPPARANI

Kalingattupparani, by Jayamkondar is the most outstanding historical work in the filed of Tamil Literature. The work deals with the conquest of Kalinga by Rajendra Kulottunga. The Author of the work, Jayamkondar is believed to have adorned the court of Kulottunga I. It may be mentioned that Kalingattupparani recounts most of the wars, waged by Kulottunga I, during his long reign of fifty years. The conquest of Kalinga, which was the subject of Kalingattupparani, is placed in circa 1,110 A.D., late in the reign of Kulottunga. Jayamkondar should have celebrated the event, towards the end of Kulottunga's reign.

The Parani is considered to be the natal star of Goddess Kali. Since Kali as Korravai, is the giver of victory in any battle, special offerings are made to her on the victorious battle-field, which came to be called Parani. The Parani, as a literary composition, celebrates a great victory, attained by either a King or a Hero, and is usually set against a background of fantasy, in which, the devils offer special offerings to Durga, in the form Kuzh prepared with the skulls, mutilated limbs, pieces of flesh strewn in the field and other objects usually found in any disasterous war. After a sumptuous feast the devils praise the hero of the Poem.

However the main purpose of the Poem is to celebrate a signal victory gained by the hero, with **adbhutacchuvai** (**adhbhuta Rasa**) as the dominant factor of the composition.

There are at least three Paranis, besides the Kalingattupparani, known to have been composed, all in praise of Chola monarchs; one celebrates the victory of Rajendra II at Koppam; the other celebrates the Virarajendra in Kudal Sangamam and the third is said to have been on Vikrama Chola, celebrating his victory over Kalingas by Ottakkuthar. The **Koppam Parani** and the **Kudal Sangamattupparani** have not survived, and we know nothing about the works except that they are referred to in the **Ulas** of Ottakkutthar.

**Karunakarattondaiman**

Kulottunga waged two successful wars against the Kalinga country during his rule. The first one was early in his regin in which Vikrama Chola distinquished himself and the second was quite late in his life, in which his able general Karunakarattondaiman won a decisive victory. Ottakkuthar's Parani on Vikrama Chola called Kalingattupparani relates to the first war, while Jayamkondar's Kalingattu Parani relates to the later event. Ottakkutthar's Kalingattup perum Parani has also not survived.

Jayamkondar excelled in all the fields of literary composition and deals in a masterly way the various rasas like **Vira**, **Nahai** (**hasya**), **Ilichi** (**bhibatsa**) etc. Jayamkondar is lucid and effective in his appeal,

R. NAGASWAMY

so much so all the other Paranis of the period, even that of Ottakkutthar, seemed to have gone into oblivion. Jayamkondar is rightly acclaimed as the prince among Parani composers. From a late commentary it is learnt that he was a native of Dipamkudi, and that he had the title "**Kavi-chakravarthi**". Jayamkondar is also said to have composed a work called **Isai Ayiram.** on the merchants of Pumpuhar. This work has not survived.

**A Temple for Korravai**

There is an interesting chapter in Kalingattup-parani, on a temple built for Korravai with bones, skulls, mutilated limbs etc., lying scatttered in the field. Though the materials mentioned in the work are poetic exaggerations, the chapter is of particular interest to a student of Tamil Architecture for it deals with the mode of construction of a temple prevelant at the period. Beginning with the laying of Thiruk-karu, the chapter describes in detail, the carved pillars, the nasikas decorated with lion, yali, elephant and varaha motiffs, and the vimana in the form of a thatched hut. This temple was surrounded by an enclosure wall and a gopura at the entrance. In front of the gopura was planted an iron makara torana an interesting feature rarely seen in temples of recent times. The Parani refers to Catakas, the guards of Durga and Yoginis and the attendents of Kali. The The reference to Yoginis is of particular interest since it shows the connections, Kulottunga had with the Kalinga country where the yogini cult was pre-dominent.

The Parani goes on to give a long list of mythical Chola rulers, beginning with Vishnu, Kasyapa, Marici and others. The stories of Manunithi Chola, Sibi Chakravarti, Mucukunda, Todithotsembiyan who conquered the fortress of Tungeyil, and others praised in the poem were well-known even in the Sangam and post Sangam period. After giving long list of rulers, a Chola is said to have established Cholamandala and the subsequent rulers are said to have ruled the country, with the titles **Rajakesari** and **Parakesari.** Of the interesting details mentioned, are the bringing of Kaveri by one Chola, and raising embankments on either sides of it, by Karikala. This is followed by a list of prominent rulers of the Vijayalaya line. It does not however mention the rule of Gandaraditya, Arinjaya, Sundarachola, and Uttamachola and like-wise Adhirajendra the immediate predecessor of Kulottunga. The omission of Adhirajendra is considered deliberate by some scholars, but we are inclined to believe that it has no special significance as a number of other important kings, like Gandaradi-tya, Uttamachola are also omitted. The chapter on Chola kings and their exploits is called **Raja Paramparya**, in the text, while one of the verses in the same work refers to this as Chola vamsa, which reminds us of Mahavamsa, Hari Vamsa, Raghu Vamsa etc.

The birth and bringing up of Kulottunga should have taken place at the Chola capital of Gangaikonda-cholapuram. Kulothunga's mother was a dear daughter of Rajendra I and hence should have spent her days of confinement at her mother's palace.

The Parani gives a graphic account of Kulottunga's childhood and states that the queen of Gangaikonda Cholan, was greatly pleased by the baby and declared that he was fit to be her son and rule the world. This is more a poetic suggestion and must be taken in the context of the literary work which was written towards the end of Kulottunga's reign rather than to take it as a reference to Kulottunga's adoption to the Chola family as has been suggested by some Scholars.

**Kulottunga's Education**

The Kalingattupparani gives various branches of knowledge, in which Kulottunga was initiated during his boyhood. He is said to have learnt four vedas under learned scholars and mastered the arts of war-fare, horse riding, elephant riding and other adminis-tration etc. under expert guidance. The parani sug-gests that Kulottunga had his training at the Chola Court. Two possibilities suggest before us for Kulottunga's boyhood at Gangaikondacholapuram. The Chola court being the most powerful one during the period with its well organised administrative wings should have attracted the most talented in every field and was most suited for importing the best of educa-tion. Secondly the political climate at the Eastern Chalukya capital was not so conducive for young Kulottunga to have his training.

The Eastern Chalukya king, Rajaraja Narendra, the father of Kulottunga, should have thought it wise, to allow Kulottunga have his training at Gangaikonda-cholapuram. The attainment of Princehood by Kulot-tunga was celebrated with great pomp at the Chola capital by the then ruling King Virarajendra.

Immediately after this event, Kulottunga went to North Kalinga to test his prowess. The Parani

states, that Kulottunga distinguished himself at the battle of Vayiragara and Chakrakottam which he reduced to submission and earned the title of Virudharajabhayankara.

When Kulottunga was still in the North, Virarajendra passed away at the Chola capital. At this stage we have to turn to Vikramarkadeva Charita, a work which celebrates the exploits of Chalukya Vikramaditya by Bilhana. Though Chola Virarajendra, and the Chalukya Vikramaditya, fought with each other, they settled their differences towards the close of Virarajendra's reign. Vikramaditya married the daughter of Virarajendra. Hence at the demise of his father-in-law, Vikramaditya came down south, to install his brother-in-law, Adhirajendra, on the Chola throne. Vikramarkadeva Charita tells us that he met with some opposition at Kanchi and is said to have punished the **dushtas** (the wicked). The clever chola generals, with their long experience, saw a great danger posed to the Chola empire by the clever move of Vikramaditya. Adhirajendra was known as a weak ruler. If Vikramaditya's influence was allowed unquestioned in the Chola court, the mighty Chola empire would be reduced to a state of vassal of the Chalukya, with whom they were fighting all their life. Hence the Chola general resisted the inroads of Vikramaditya. The Vikramarkadeva charita tells us that, Vikramaditya having subdued the **dushtas** at Kanchi, marched to Gangaikonda, where he destroyed the enemy forces and finally secured the throne for the Chola prince. After staying there for a month, he returned to his country. The Chola generals and the people refused to reconcile themselves to this state of affairs and there was a general rebellion. Probably Adhirajendra foolishly adhered to his friendly relation with the Chalukya, which caused him, his life. He was killed in the uprising.

**Ablest Sons as Successors**

It is of interest to mention, that the Cholas always chose, not the first, but the ablest among their sons as their successors, so the empire built up so valiantly could be retained intact. True to this tradition, the Chola generals now found Kulottunga as the most suitable candidate who could wield the sceptre. They should have facilitated the smooth accession of Kulottunga to the Chola throne.

Certain interesting details of the Coronation ceremony are given by Jayamkomdar while describing Kulottunga's Coronation. At first Kulottunga was given a sacred bath, to the recitations of Four Vedas. Then he ascended the throne by placing his feet on the **aruha** grass, held by vassal kings. While describing the coronation of a king, the Satapata Brahmana states that the **aruha** grass was the king among **grass species** and the would-be king should place his leg on the grass while ascending the throne. That this custom was followed in the Chola court is confirmed by Jayamkondar. Then scholars well-versed in vedas, are said to have placed the crown on his head. The sacred water was poured over the crowned king. The tiger standard, the white parasol, the **Chendu**, and other royal insignia were said to have been presented in order.

**Kulottunga's Expedition**

After giving a conventional account of the king's sojourn in the capital, in the company of scholars, soldiers, artists and women, Kulottunga is said to have decided to go to the banks of Palaru (Kanchi) for Parivettai. Elisai vallabhi, the chief queen of Kulottunga was seated on the royal elephant by the side of her master, while Tyagavalli another queen followed him on another elephant. His retinue consisted of a number of women, subordinate chiefs and musicians and dancers. He visited Chidambaram, and Tiruvadigai enroute before reaching Kanchi.

Kulottunga is said to have been seated under the parasol in the Chitra Mandapa, on the south Western corner of the palace at Kanchi. He was surrounded by a number of women well-versed in Music and dance. The Suthar and Magathar praised his valour while musicians were busy playing various musical instruments like Veena, Yal, Flute, etc. Kulottunga is said to have spent sometime in scholarly discussions with learned men, before attending to his royal duties. He was surrounded by **Mandalikas**, subordinate rulers his Chief Minister and other Ministers, when the **Tirumandiravolai** brought to the notice of the king that the vassal kings were waiting outside the palace for offering their presents, whereupon Kulottunga ordered their admission. The tributes presented by various kings were scrutinised. The Tirumandiravolai stated that the Kalinga ruler has failed twice to pay tribute. Kulottunga considered the Kalinga ruler as a small fellow, however ordered his army to march and capture the Kalinga forts and bring the Kalinga ruler to the Chola court. On this order, Karunakara Tondaiman rose and sought the per-

# மனம் அங்கே! உடல் இங்கே!

ஓடுகிற மேகங்காள்! ஓடாத தேரில்வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள்—நாடியே
நந்திச்சீ ராமனுடை நன்னகரில் நன்னுதலைச்
சந்திச்சீ ராமாகில் தான்.

—நந்திக் கலம்பகம்

# மலரையும் உயிரையும் பறித்தவள்

முருகில் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்!

—கலிங்கத்துப் பரணி

# கண்துயின்றாலும் கனிவாயில் புன்னகை!

சொருகு கொந்தளகம் ஒருகை மேல்அலைய
ஒருகை கீழ்அலைசெய் துகிலொடே
திருவ னந்தலிலும் முகம லர்ந்துவரு
தெரிவை மீர்! கடைகள் திறமினோ!

— கலிங்கத்துப் பரணி

[கடை — வாசல்; வாசற்கதவு]

# பாடகர்போல் நடித்துத் தப்பிப்பிழைத்த கலிங்கப் போர்வீரர்கள்!

'சேனைமடி களம்கண்டேம்; திகைத்து நின்றேம்!
தெலுங்கரேம்!' என்றுசில கலிங்கர் தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துக் கும்பிட்(டு)
அடிப்பாணர் எனப்பிழைத்தார் அநேகர் ஆங்கே!

—கலிங்கத்துப் பரணி

# இராமன் எதிரில் வஞ்சமகள் சூர்ப்பநகை

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞ்ஞைஎன அன்னம்என மின்னும்
வஞ்சிஎன நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள்!

— கம்பர்

## ‘ இந்தக் கொண்டை, ஆரைக் குடிகெடுக்க ?’

கோடாலிக் கொண்டை போட்டு
கோயிலுக்குப் போற பெண்ணே !
ஆத்தாடி இந்தக் கொண்டை
ஆரைக் குடி கெடுக்க ?

—நாட்டுப் பாடல்

# வாடைபட்டுச் சூல்தரித்தாள்!

ஆத்துக்கு அக்கரையில்
அத்தைமகன் ஒருவன்உண்டு;—அவன்
வாய்திறந்து பாடையிலே
வாடைபட்டுச் சூலானேன்!

—நாட்டுப் பாடல்

## ‘என்ன பொடி போட்டானே ?’

காரைவீட்டுத் திண்ணையிலே
    கறிக்குமஞ்சள் அரைக்கையிலே,
என்னபொடி போட்டானே,
    இழைத்தரைக்க முடியல்லியே !

—நாட்டுப் பாடல்

mission of the king to capture the Kalinga king. His request was granted and he was presented with the Tiger standard as a signal for his expedition. Besides, the king's standard, the Parani tells us that the Karunakara had his own standard bearing the emblem of a Bull. As Karunakara led the army, he was preceded by a Vanguard **(Thusi)** led by **Vanakovaraiyan,** and Mudikonda Cholan. They were also assisted by Anukkappallavan who was probably a brother of Karunakara Tondaiman.

### The Battle

The Parani then gives a number of rivers crossed by the Chola Army before reaching the Kalinga country. Palaru, Kusaththalai, Ponmugari (Svarna mugari), Palavaru, Kolli, Pennai, Mannaru, Kunri were crossed and after crossing finally Godavari, Pamba and Gowdamai, the Army of Karunakara reached the Kalinga country. The people of the Kalinga ran to their king and narrated the havoc caused by the fury of the invading Chola army. The Kalinga ruler ordered general mobilisation but his Minister Yangarayan is said to have counselled against such a move for he told the king that the Chola Army was a seasoned fighting force which has seen many victorious battle fields and it would be futile to oppose them. But the ruler of Northern Kalinga, Anandha Padma choda Ganga, was not prepared to listen to the wise counsel of his Minister and ordered the fight, which is described in all its nakedness. Finally Karunakara Tondaiman is said to have lead the army to victory, whereupon the Kalinga king ran and hid himself on a hilly fort. A search for the Kalinga king was ordered and the Chola army got scent of the enemy king present on a hill fort. The hill was promptly surrounded and a careful watch was maintained throughout the night. However, Anandha Padman, seems to have made good his escape. After, further a capture of a number of places and establishing a victory pillar, Karunakara Tondaiman returned to Kanchi to report to his king the valorous fight and the submission of the Northern Kalinga.

The following titles of Kulottunga are mentioned in the Parani. Panditachola, Naratungan, Chola Kulasekharan, Virudharaja Bhayankaran, Abhayan, Akalankan, Jayatungan, Jayadharan, Karikala Valavan and Manukuladipan. Of the battles, the capture of Chakrakottam and Vaiyiragaram, in his younger days are mentioned. The defeat of the five Pandyas, the submission of Cheras, the battle of Vilinjam, the destruction of Salai (Kantalur Salai), the victory gained against Kadaram, Singalam (Ceylon), Madhurapuri and the defeat of Vatsas, Alatti and the capture of over thousand elephants at a fierce battle at Navalai are all recounted in the Parani.

It must be mentioned that the Kalingathu Parani does not mention any other expedition conducted by Kulottunga though it refers to the victories gained by him in all the fields. The Parani wounds the tale by giving a description of the **feast** by the devils, on the battle field and the praise showered on Kulottunga -chola by the attendants of Durga. Kalingathu Parani is undoubtedly one of the masterpieces of Tamil literature and should be read in its original to understand its force, lucidity and suggestion. Above all the historical material it provides for the reconstruction of South Indian History is of utmost importance to a student of Tamil Culture.

# MURUGANAR'S POEMS

Translated from Tamil Original by
Prof: **K. Swaminathan.**

1

### CONTINUED PRESENCE

" Having cured me of my separateness, must you,
As if to test me, Spirit Supreme, withdraw
Your form from sight? Where have you gone, my God,
Forsaking me? Where have you hidden yourself?"
Deep from within me comes the answer clear:
"Here in the Heart your very Self am I.
Know well this truth, the oneness of the Self."
Destroying thus in every limb
The false, deluding I, He shines
Instead in wondrous splendour now
As "I", as "I", the only Self.

### ஐக்கியானுபவம்

பங்கத்தை மாற்றியசிற் பரமா என்னைப்
பரிசோதிப் பாய்போல்உன் னுருக்க ரந்தாய்
"எங்குற்றாய் எம்பெருமான் என்னை நீங்கி
யெங்கொளித்தா" யென்னஎனக் குள்ளி ருந்தே
"இங்குற்றேன் இதயத்து நீயே நானா
இருந்தொளிர்அவ் வேகான்ம வுண்மை தே"றென்(று)
அங்கத்தே பொய்ம்மயக்க வகத்தைச் செற்றாங்(கு)
"அகம், அகம்" என் றற்புதமா அவிர்கின் றானே.

2

### MOTHER'S LAMENT

From all and sundry oft my child had heard
Of the dear might of Ramana. Much concerned,
I warned her to have naught with him. But she,
Brushing aside my fears as fancies, sought
To grasp and hold, clear, firm within her heart
His heavenly form. The world laughs now at her,
For she has tasted maddening bread, glimpsed Truth,
The poison whose sole antidote is more
And more of It, till one has eaten all.

### நற்றா யேங்கல்

அண்ணா மலைரமண னருமைப் பெற்றி
யடிக்கடியெம் போலுமவர் சாற்றக் கேட்டும்
கண்ணாய வென்போல்வார் கழறிச் சொன்ன
கட்டுரையைக் கட்டுரைபோற் கட்டி வைத்தவ்
விண்ணாய மெய்யனுரு வெளியின் றோற்றம்
விளங்கத்தன் னுள்வெளிக்கே விதும்ப லாகிப்
பெண்ணாய வென்பேதை பிறர்நகைப்பப்
பிறமருந்திற் பேராத பித்துற் றாளே.

3

### ABSORPTION

As in the ocean salt
Dissolves and disappears,
So in the body lost I lay.
But now I long to be absorbed
In the brightness of your grace.
Eat me as food, O Lord,
Digest both Me and Mine.
Convert my being wholly
Into your true body, Light.

### உட்கொள்ளல்

கடலுட் படிந்த வுப்பந்தக்
கடல்நீர் மயமாக் கரைவதுபோல்
உடலுட் கிடந்தேன் உன்னருட்பே
ரொளியுட் படிந்தவ் வொளிமயமா
கிடலுக் குவந்தேன் யானெனதென்
றிரண்டுங் கெட்டுன் னியல்பாமெய்
உடலுற் றுளிர வுதவுதிநீ
யுணவா வென்னை யுட்கொண்டே.

4

## PRAYER

Pleased with my worship, if you are inclined
To grant me some reward,
Lord of Beauty whose mated tresses wear
The infant Moon,*
Give me then, I pray,
An ever-crescent Mind.*

### பிரார்த்தனை

அடியேன் வழிபாட்டுக் காகமகிழ்ந் தேதும்
கொடையாக நல்கக் குறிக்கின்—சடைமேற்
குழந்தைமதி சூடுங் குழகரம ணேச
குழந்தைமதி யென்றுங் கொடு

* Mati means both 'moon' and 'mind'

5

## THE DESTROYER

No form He has, no name, no quality;
Still there beside the Holy Hill He dwells
In human form, known by the comely name
Of Ramana, marked by the primal power
Of love; with moist eyes showering grace for all
To see; the ethereal Being whose brightness burns
To I-less nothingness obnoxious me.

உருவும் பெயரும் ஒருகுணமு மின்மை
மருவி யிருந்தும் மனித்த—உருவால்
இனித்தபே ரின்ப ரமணப் பெயரால்
குணித்தவோர் ஆதி குணத்தால்—பனித்தவிரு
கண்ணால் அணைவருமே காணக் கடைக்கணித்(து)
அண்ணா மலைச்சார் அமருமே—புண்ணாய்
அழுங்கி அகமழிந்த ஆவியாம் என்னை
விழுங்கி யொளிரும் வெளி.

6

## BLIND SEER

Like the sun that never resting
Seeks and seeks and finds no trace
Of darkness, even so our Master
Can never see our foe
Illusion, Blind, so blind is he.

ஓரிடமும் தங்காமல் ஓடோடித் தேடியுமே
காரிருளை யென்றுந்தான் காணாத—சூரியன்போல்
வாடாத மாயை வல்லிருளைக் காணவே
கூடாதான் எங்கள் குரு.



# TIRUCHENDUR — THE SKANDALOKHA

J. M. SOMASUNDARAM

"அருவமும் உருவ மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள்பன் னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன், உலகம்
உய்ய."

—கந்த புராணம்.

The earliest (possibly) and yet the most modern of South Indian temples is that of Tiruchendur. It is of epic interest. Fashioned out of a high marine calcarius on the sea-coast at the extreme south of the peninsula, this temple is built out into the sea and its walls washed by the foaming waves of the Gulf of Munnar.

Tiruchendur is reached on the Southern Railway 443 miles from Madras and 38 from Tirunelveli by a branch line, and connected by buses from every corner of the district. As the Taluk headquarters from 1911 it is almost a modern town with all the component official institutions with a State Bank and other Banks for commercial needs. It is as well an educational centre with two High Schools, a number of Elementary Schools maintained by the Panchayat Union, and for higher studies the Adittanaar College for Arts and Sciences almost in the vicinity and under the shadow of Muruga. Also a mechanical training centre maintained by the Central Govt.

### Genesis of the Temple

The genesis and growth of this great centre of Muruga* is almost a romance. Its earliest beginnings date with the birth and exploits of Muruga-Skanda or Karthikeya, the War-Lord of the Gods. Skanda Purana relates that He was born of the five sparks of Siva and commissioned by Him to free the oppressed Celestials from the Asuras entrenched in their Oceanic fortress—the Mahendrapuram in the Underworld.

---

** Muruga, the earliest and sublimest Tamilian Concept of Godhead has been as long cherished and venerated in the Tamil land as its Sanskritised concept "Subrahmanyam," which means "the all pervading spirit of the Universe, the essence from which all things are evolved, by which they are sustained and into which they are involved." He in gracious pity for humanity takes form sometimes as the youthful God of Wisdom :—Swaminatha; God also of war when wicked Asuras have to be destroyed; Karthikeya; Sometimes as the holy child Muruga, the type of perennial tender beauty, always and everywhere at the service of his devotees.*

Skanda and His hosts encamped at this coast and Mayan, the architect of the Gods caved into the Marine sandstone hill to fashion a Siva shrine for Skanda to worship Siva, His Father and Sire. This ancient nucleus stlll exists even now to be seen as Pambarai—a circumambular corridor around the present Sanctum Sanctorum of Subramanyam with five Sivalingas enshrined therein; also of parts of the rock jutting out at places within the temple. This nucleus grew by stages in the course of centuries enlarged by successive Pandyas and Çeras with sandstone walls and pillars. This had disintegrated by salt sea air action and its foundations rocked by the waves of the sea. The condition was precarious and in 1868 a hundred years ago, it was given to two devoted Sanyasins wedded to poverty to take up as their life service to build this modern edifice in hard granite to stand for all times. The first was Mounaswami who sat before the temple doors with a cloth spread in front for offering in cash and kind which came in and in 1872 he was joined by another Kasiswami, a devotee from distant Benares. They set their hearts to this mission and collections came in from far and near and the temple grew for nearly three quarters of a century until it was completed by them as the modern Leviathan as we see now and set our hearts therein. The story of this renovation is only to be imagined and appreciated from what has been achieved by these two devoted souls. And another Desikamurthi Swami afterwards came to build the great Melagopuram, of nine storeys and of 134 ft. high. It is said that at the Kumbabishekam of this Gopura the archakas saw a tall figure like Desikamurthi to enter the sanctum and they learnt later that at this moment he had entered the feet of the Lord at distant Kandhiswaram, many miles away.

**Shanmuga Vilasa**

Of the many structures in this great temple, the Shanmuga Vilasa the majestic frontal mantapa is a magnificent one standing on 124 columns of intricate cultural designs. It is the very Skandalokha the heavenly abode of Skanda or Subramanyam facing Shanmuga in a separate shrine in the interior of the temple. Worshippers flock in here from dewy morn to far into the nights, revelling in their ecstasic realisations of the godhead. The temple has received many recent perceptible improvements for the convenience of pilgrims :-the Nadaipathai Tiruppani Committee having put up a permanent covered way for nearly half a mile from the Siva temple in the town to the main temple on the sea-shore connecting the already covered way put up around the temple. The Sendhil Andavan Viduthi or Pilgrims' Rest House with all amenities is a blessing, sumptuous rooms for the well-to-do overlooking the sea and a number of



Tiruchendur Temple on the Sea-Shore

lodgings for the floating pilgrims. The Devasthanam maintains a Library, a Siddha Vaidyasala, an Open Air Theatre, a Veda Padasala, an Orphanage for boys and a large acreage to draw their daily necessary temple needs. A word of praise has necessarily to go to Thiru. T. K. Aramvalarthanatha pillai, the genius behind all these great renovations.

The daily puja begins at 5 a. m. even before dawn for the Palliarai devotions - hundreds waiting at the great temple doors to open, and by 6 three of the series are performed and when the devotees get out of the temple the majestic rising sun greets them gently on the rippling waves of the sea dispelling the deep darkness of the night and shedding the Grace of Muruga all around. The great festivals of the temple are in Masi and Panguni, and they draw the whole Hindu congregation of the South. A whole galaxy of poets and divines have woven around this temple an immortal fabric of literature. The Sangam poets in **Purananuru** and in **Tirumurugarruppadai** of Nakkirar, Saint Kumaraguruparar, Pahalikoothar, Saint Arunagiriar, Sennikulam Annamalai Reddiar of Kavadichindhu, and much earlier, Adhi Sankarar, who had given his heart's outpourings in **Subramania Bhujangam**.

### A Mystery

A natural phenomenon has to be noticed here. Two hundred yards in front of the Shanmuga Vilasa lies a natural phenomenon. **Nazhi-Kinar** is almost imbedded in a rolling high sand-dune, and reached underneath by a flight of 34 steps. It is a small well, one foot square, inset within another larger well, 14 ft. square. **Nazhi-Kinar** contains clean good water, while the larger is filled with a milky, highly sulphurous smelling salt water. Wherefrom do these two distinct supplies of water, with different tastes spring, and how they are kept separate are matters of mystery and a problem for the geologist to solve. Pilgrims bathe in the sea, also in the sixteen sacred tirthas, each of which marked by a named stone pillar inscription opposite on the southern sea-front, prior to a bath in both these waters, for their spiritual merit and before they enter into the temple.

Another is the Valli's Grotto. A picturesque grotto with a frontal pillared mandapa is on the northern sea-front, under a cliff of overhanging hardened sandstone. Two icons are installed in front, one dedicated to Valli, the consort of Muruga, and another io **Dattatreya**. Behind the outer shrine, there is a circumambular passage with another grotto carved from within with a figure of Valli, the goddess in a niche. The grotto overlooks the sea, as its waves dash against its sides.

"வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை"
—புறநானூறு 55, ll 18-19.

"திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேய்"
அகநானூறு 266, ll 20-21.

"அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே"
—திருமுருகாற்றுப்படை— 1-125.

"சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா இறைவன்"
—சிலப்பதிகாரம்.

These are a few references of Tiruchendur found in the texts of the ancient Tamil poetical works.

Tiruchendur is a great spiritual centre drawing day in and day out devotees from far and near and any visitor is blessed of Muruga's Grace now and in the hereafter. It is a delightful spot which will ever linger in one's memory.

# திருச்செந்தூர் நொண்டி நாடகம்

கு. அழகிரிசாமி

தமிழில் அவ்வப்போது புதுப்புது வகையான இலக்கியங்கள் தோன்றி வந்திருக்கின்றன. அப்படித் தோன்றிய கால கட்டங்களுள் முக்கியமான ஒன்று 18-ம் நூற்றுண்டு. நாம் இன்று இலக்கியங்களில் வழங்கும் எளிய இனிய பழகு தமிழ் நடையை நமக்குக் கொடுத்தவர்கள் அந்த நூற்றுண்டுப் புலவர்களே. எதார்த்த வாழ்க்கையை ஆதாரமாக வைத்து இலக்கியம் புனையும் மரபையும் அவர்கள் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறுர்கள்.

திருச்செந்தூர் நொண்டி நாடகம், 18-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த முத்தாலங்குறிச்சிக் கந்தசாமிப் புலவர் தமிழுக்குக் கொடுத்த ஒரு புது வகை இலக்கியம். அதை விவரிக்கிறது இந்தக் கட்டுரை.

**சி**ந்து என்பது ஒருவகை இசைப் பாட்டு. பள்ளு நாடகங்கள், குறவஞ்சி நாடகங்கள் போன்றவற்றில் எத்தனையோ வகையான இனிய சிந்துகளைக் காண்கிறோம். இவற்றோடு நொண்டிச் சிந்து என்ற ஒரு சிந்தும் உண்டு. நொண்டி நாடகம் எனப்படும் ஒருவகை நாடகத்தின் கதா நாயகனை நொண்டியால் பாடப்படுவதனுல் இந்தச் சிந்து நொண்டிச் சிந்து எனப் பெயர் பெற்றிருக்கிறது. இந்த நொண்டிச் சிந்தின் பிறப்பிடமான நொண்டி நாடகத்தைப்பற்றிப் பார்ப்போம்.

குதிரையைத் திருடியதற்காக மாறுகால் மாறுகை வாங்கப்பட்ட திருடன் ஒருவன் தன் கதையைக் கூறுவதுபோல் இயற்றப்பட்டதே நொண்டி நாடகமாகும். தமிழில் பல நொண்டி நாடகங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒருசில அச்சிடப்பட்டுள்ளன. ஓலை ஏட்டுப் பிரதிகளில் இருப்பவையாக அல்லது இருந்தவையாகத் தெரியவரும் நொண்டி நாடகங்கள் சில; வெளியே தெரியாமல் ஏட்டுப் பிரதியோடு அழிந்தவை பலவாக இருக்கக்கூடும்.

திருச்செந்தூர் நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம் ஆகிய நான்கும் புத்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. சாத்தூர் நொண்டி நாடகமும், அவிஞசி நொண்டி நாடகமும்

பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. குளத்தூர் ஐயன் நொண்டி நாடகம் அச்சேறவில்லை. இவை போக ஞான நொண்டி நாடகம் என ஒருநூல் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது அச்சாகியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

மேலே குறிப்பிட்டவற்றுள் திருச்செந்தூர் நொண்டி நாடகமே முதலாவதாகத் தோன்றியது என்று தெரிகிறது. இந்நாடகத்தின் கதாநாயகன் திருப்பதியில் பிறந்தவன்; தஞ்சாவூர்ச் சீமையில் குதிரை திருடியவன். இவனைப்பற்றிச் சீதக்காதி நொண்டி நாடகத்திலும், சாத்தூர் நொண்டி நாடகத்திலும், குளத்தூர் ஐயன் நொண்டி நாடகத்திலும், திருமலை நொண்டி நாடகத்திலும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆனால், திருச்செந்தூர் நொண்டியில் வேறு எந்த நொண்டியைப் பற்றியும் பிரஸ்தாபம் இல்லை.

இதிலிருந்து, திருச்செந்தூர் நொண்டி நாடகமே முதலில் இயற்றப்பட்டது என்று கருதத் தோன்றுகிறது. இது முதலில் தோன்றியது என்றாலும், இது தோன்றிய பத்து அல்லது இருபது வருஷங்களுக்குள்ளாகவே சீதக்காதி, சாத்தூர் நொண்டிகள் தோன்றிவிட்டன.

முதல் நூலாகிய திருச்செந்தூர் நொண்டி தோன்றிய சிறிது காலத்திற்குள்ளாகவே, அதைப் பின்பற்றி இத்தனை நாடகங்களும் தோன்றியிருப்பதால், முதல் நூலைப் புலவர்களும், பொதுமக்களும் அக்காலத்தில் பெரிதும் வரவேற்றிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. திருவிழாக் காலங்களில் நொண்டி நாடகம் நடிக்கப் பெற்று வந்ததாகவும், அதற்கு 'ஒற்றைக்கால் நாடகம்' என்ற ஒரு பெயரும் வழங்கி வந்ததாகவும் கூறப்படுகிறது.

## ஆசிரியர் வரலாறு

திருச்செந்தூர் நொண்டி நாடகத்தை இயற்றியவர் கந்தசாமிப் புலவர் என்பவர். இவர் பிறந்த ஊர் திருநெல்வேலிக்குப் பத்து மைல் கிழக்கேயுள்ள முத்தாலங்குறிச்சி என்பதாகும். இதற்கு இவர் இயற்றிய நூலிலேயே, நொண்டியின் வாய் மொழியில் சான்று கிடைக்கிறது.

விரிபுனல் பொருநைகண் டேன்—கோட்டையுடன்
விளங்கு பாளையம்கண்டு உளம்குளிர்ந்தேன்
குருமணிச் சிகரி வளர்—முத்தாலங்
குறிச்சியில் வந்தொருநாள் தரித்திருந்தேன்.

சந்தசல சாமிஅரு ளால்—எந்நாளும்
தவறுத வாழ்வுபெற்ற கவிராயன்
கந்தசா மியைக் கண்டேன்—அவன்சொன்ன
கவித்வம் செவிபருகி மகத்வம்பெற்றேன்.

—திருச்செந்தூர் நொண்டி நாடகம், 264, 265.

இவர் வாழ்ந்த காலத்தை அறிவதற்கும் இவருடைய நூலில் ஆதாரங்கள் உண்டு.

மதுரையை ஆண்ட முத்து விஜயரங்க திருமலைச் சொக்கநாத நாயக்கரின் படைகள் தஞ்சாவூரை முற்றுகை செய்திருந்ததாகவும், அப்போது தஞ்சையை சாகோசி என்ற மராட்டிய மன்னர் ஆண்டதாகவும் இந்நூல் கூறுகிறது. நாயக்கரின் காலம் கி. பி. 1704-1731. சாகோசியின் காலம் 1688—1711. இதனால் தஞ்சாவூர் முற்றுகை 1704-லிருந்து 1711-க்குள் நடந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. முற்றுகை நடந்த சிறிது காலத்திற்குள், அதாவது 1720-க்கு முன்பாக, இந்த நூல் இயற்றப் பட்டிருக்க வேண்டும். நூலாசிரியரான கந்தசாமிப் புலவர் 1680-ம் வருஷ வாக்கில் பிறந்திருக்கலாம்.

நூலின் அகச்சான்றுகளின் மூலம் அறியப்படும் இந்த விபரங்களை உண்மையான செய்திகளாகவே நாம் கொள்ளவேண்டும். இனி இந்தப் புலவரைப் பற்றி வழங்கும் பிற செய்திகளைப் பார்ப்போம்.

கந்தசாமிப் புலவரின் வரலாற்றைக் கூறும் ஒரே நூல், புலவர் புராணமாகும். அதன் ஆசிரியரான தண்டபாணி சுவாமிகள் தாம் கேள்விப்பட்டவாறு இப் புலவரின் வரலாற்றைப் பாட்டாகப் பாடியிருக்கிறார். ஆகவே அதில் உண்மையும் இருக்கலாம்; உண்மைக்கு மாறானதும் இருக்கலாம்; இருக்கிறது. புலவர் பிறந்த ஊர் முத்தாலங்குறிச்சி என்பதைப் புலவர் புராணம் கூறவில்லை. மொத்தத்தில் அவர் பாண்டிய நாட்டினர் என்று மட்டுமே கூறுகிறது,

பாண்டிய நாட்டில் ஈழுவர் என்ற ஒரு சாதியினர் இருக்கின்றனர். அந்தக் குலத்தினரில் அநேகர் நெசவுத்தொழில் செய்பவர்கள். அவர்களிடையே தோன்றிய கந்தசாமி என்பவன் தமிழ் கற்று, பணக்காரன் ஒருவன் வீட்டில் கூலிக்குத் தறிநெய்து ஜீவனம்செய்து வந்தான். அந்த வீட்டில் அழகுமிக்க கன்னிப் பெண் ஒருத்தி இருந்தாள். கந்தசாமி அவளைக் "கைம் மலர் பற்றிடாமல் கவியொன்றுல்" வியந்து பாராட்டினான். அவளுடைய தகப்பனான பணக்காரன் இதையறிந்து, "இனிமேல் இந்த வீட்டுக்குள் வராதே, போ" என்று அவனை விரட்டிவிட்டான்.

வெளியே வந்த கந்தசாமி சிற்சில கவிகளை விரைந்து பாடவே, அவனுக்கு முருகனுடைய அருள் இருக்கிறது என்பதை உலகத்தார் அறியலானார்கள். சில பணக்காரர்கள் மனம் மகிழ்ந்து பல்லக்குக்கொடுத்துச் சன்மானங்களும் செய்தார்கள். கையில் பொன்னும் பொருளும் சேர்ந்துவிடவே, "வீட்டுக்குள் வராதே" என்று விரட்டிய பழைய முதலாளி தன் மகளைக் கந்தசாமிக்குக் கல்யாணம் செய்து கொடுத்தான்.

கந்தசாமிப் புலவர் நொண்டி நாடகத்தை இயற்றினார். குதிரையைத் திருட முயன்ற ஒருவன் செய்த மாயமும், அவன் பிடிபட்டபின் மன்னனுடைய உத்த

ரவுப்படி காலும் கையும் வெட்டப்பட்டதும், திருச்செந்தூருக்கு வந்து முருகனைத் தொழ, திரும்பவும் அவன் காலும் கையும் பெற்றதுமான செய்திகள் அடங்கிய நொண்டி நாடகத்தை அவர் இயற்றவே அவ்வகையான நாடகம் முதன்முதலில் தோன்றலாயிற்று என்கிறது புலவர் புராணம். அவர் கேரள மன்னரிடம் பரிசில்கள் பெற்றதாகவும் அதே புராணம் கூறுகிறது.

கந்தசாமிப் புலவரை அனந்தபத்மநாப பிள்ளை என்ற ஒரு வள்ளல் ஆதரித்துப் போற்றியிருக்கிறார். திருப்பதிக் கள்ளன் குதிரை திருடியதற்காகக் காலும் கையும் வெட்டப்பட்டு அனாதையாகக் கிடந்தபோது அந்த வழியாக வந்த அனந்தபத்மநாப பிள்ளை, நொண்டியின் பரிதாப நிலையைக் கண்டு மனம் இரங்கி, மருந்துச் செலவுக்கும், மற்றச் செலவுகளுக்கும் பணம் கொடுத்தார் என்று நொண்டி நாடகத்தில் கூறப்பட்டுள்ளது. தம்மை ஆதரித்த வள்ளலைத் தக்கதோர் இடத்தில் மரியாதை செய்து போற்ற வேண்டுமென்று புலவர் இவ்வாறு பாடியுள்ளார்.

அனந்தபத்மநாப பிள்ளை, நல்லூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிரபு. அவருடைய தந்தையின் பெயர் சங்கர மூர்த்திப் பிள்ளை. குற்றாலத்தில் அவர் செய்த திருப்பணிகள் பல. அதைப் பற்றிக் குறவஞ்சி கூறுவதாவது :

"நன்னகர் ஊர்கட்டிச் சாலை மடம்கட்டி
நாயகர் கோவிற் கொலுமண்ட பம்கட்டித்
தென்ன மரம்பர மானந்தத் தோப்பிட்டுத்
தெப்பக் குளம்கட்டித் தேர்மண்ட பம்கட்டிப்
பன்னும் திரிகூடத்(து) அம்பலம் கட்டிப்
பசுப்பிரை கோடி திருப்பணி யும்கட்டி
அந்நாளில் தர்மக் களஞ்சியம் கட்டும்
அனந்தபற்ப நாபன் கட்டளைப் பற்றெலாம்."

இந்த அளவுக்கு வேறு யாரும் அங்கு திருப்பணிகள் செய்ததாகக் குற்றாலக் குறவஞ்சி கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நொண்டி நாடகம்

திருச்செந்தூர் நொண்டி நாடகத்தின் ஆரம்பத்தில் பத்துப் பன்னிரண்டு ஆனந்தக் களிப்புக் கண்ணிகளும், இடை இடையே சில விருத்தங்களும் காணப்படுகின்றன. இவை தவிர பிற யாவும் நொண்டிச் சிந்துகளே. இந்நூலில் மொத்தம் சுமார் 300 பாட்டுக்கள் இருக்கின்றன. இந்த அம்சங்களிலும், கதைப் போக்கிலும் இந்நூலையே மற்ற நொண்டி நாடகங்களும் பின்பற்றியிருக்கின்றன. சாத்தூர் நொண்டியில் மட்டும் சிற்சில மாறுதல்கள் உள்ளன.

திருச்செந்தூர் நொண்டி நாடகத்தின் கதாநாயகன் மேடையில் தோன்றித் தன்னுடைய கதையைப் பாட்டாகப் பாடத் தொடங்குகிறான். இதுதான் நாடகம். இந்த மேடையில் இவனைத் தவிர வேறு பாத்திரங்கள் கிடையாது.

தெண்திரை முத்தம்கொ ழிக்கும்—திருச்
செந்தில் வடிவேலன் செம்புகழ் பாடத்
தொந்தி வயிறனைப் போற்றி—நாளும்
தொந்தோம்என் றுடிக்கொளத் துயம்கட்டி
னேனே.

"துயங் கட்டினேனே" என்பதற்குக் "கொடி கட்டினேனே" என்றுதான் பொருள். ஆனால் இங்கே "முனைந்து நிற்கிறேன்" என்று பொருள் படும்.

ஒப்பாய்க்குப் பாயமும் கட்டிக்—கொண்டைக்(கு)
உல்லாசப் பொற்சரிகைச் சல்லாவும் கட்டித்
துப்பாரும் முத்துத்தொங்கல் பூட்டி—நானும்
தொந்தோம்என் றுடிக்கொளத் துயம்கட்டி
னேனே.

(குப்பாயம்—அங்கி, துப்பு—பவளம்.)

கண்ணாடி போல்சரிகை பதித்து—நானும்
கால்வீசி வட்டமிட்டு மேல்மீசை திருத்திச்
சுண்ணாம்புக் கல்லுப்பல்லுக் கட்டி—நொண்டி
தொந்தோம்என் றுடிக்கொளத் துயங்கட்டி
னேனே.

(ஓலை ஏடு எழுதியவர்கள் இந்தப் பாட்டைச் சீதக்காதி நொண்டி நாடகத்திலும் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள்.)

தேன்மொய்த்த பூச்செண்டு கட்டிச்—சமணர்
சிரத்தையும் காலில்பனை மரத்தையும் கட்டிச்
சோமன் தலைவிருது கட்டி—நானும்
தொந்தோம்என் றுடிக்கொளத் துயங்கட்டி
னேனே.

ஒரு காலை இழந்த நொண்டி, பனைமரத்தின் கட்டையை ஆயக்காலாகக் கட்டிக்கொண்டு வந்து, தன் குண பாவங்களை முதலிலேயே அறிவித்து விடுகிறான் :

நன்மார்க்கம் அறியாத மூடம்—இந்த
நாட்டுக்குள் எத்துமெத்தச் சூட்டும் கிரீடம்
துன்மார்க்க வித்தைக்குரு பீடம்—நானும்
தொந்தோம்என் றுடிக்கொளத் துயங்கட்டி
னேனே.

இந்த முன்னறிவிப்புக்குப் பிறகு, தன் கதையை நொண்டிச் சிந்தில் பாட ஆரம்பிக்கிறான். அவன் வாய்மொழி போலவே, கதையைச் சொல்லிக்கொண்டு போவோம் :

திருப்பதியில் கள்ளர் சாதியில் நான் பிரக்யாதி பெற்றவன். என் தந்தையின் பெயர் கெப்புலி. என் பெயர் மதப்புலி. நான் புலி பாய்வதுபோல் பாய்பவன்.

சூது, பொய், களவு, புரட்டு, உருட்டு முதலிய எல்லா வற்றையும் கற்றறிந்து, அதில் பேரும் பெற்றிருந்தேன். நான் திருட நினைத்தால் வானத்துச் சந்திரன்கூட எனக்கு அபூர்வமல்ல. வீட்டில் உண்டான சொத்துக் களையும் உடைமைகளையும் எடுத்துக்கொண்டு தென் பூமியை நோக்கிப் புறப்பட்டேன். பல ஸ்தலங்களுக் குச் சென்ற பின், சிதம்பரத்துக்கு வந்தேன். அங்கே பொற்சுனையில் நீராடி, பொன்னம்பலவாணரையும், கோவிந்தராசரையும் சேவித்துவிட்டு வெளியே வந்து தெற்குத் தேரடி மண்டபத்தின் ஒரு புறத்தில் நிற்கும் போது, அம்பலவாணர் சந்நிதிக்குரிய தாசிகள் மான் கூட்டம் போல அவ்வழியே நடந்து வந்தார்கள். அவர் களில் சிதம்பரரத்னம் எனப்படும் சிதம்பரவல்லியும் ஒருத்தி. நான் அவளைத் தொடர்ந்து ஆசையோடு சென் றேன். அவளே தஞ்சம் என்று அடுத்த என்னைப் பார்த்து சிதம்பரவல்லி கைகோத்துப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய நட்பு சாஸ்வதம் என்று நினைத்துக் கொண்டேன். என் பூர்வீகத்தைச் சொல்லும்படி அவள் கேட்டதற்கிணங்க நானும் செய்தியெல்லாம் சொன்னேன். ஏதோ என் குடும்பத்தோடு பழைய உறவும் உரிமையும் உடையவள்போல, ''தொந்தம் இனி விடாது. முன்னே நடவும்'' என்று சொன்னாள்.

உடந்தைப்பொன் மான்கிளி போல்—கூடி
ஒக்கச்சென் றோர்நானும் பக்கத்திலே
தொடர்ந்தேன்என் ஆசையி னால்—சுற்றிச்
சுற்றிச் சிதம்பர ரத்னத்தையே.

பரம்என்று சென்றடுத் தேன்—என்னைப்
பார்த்துக்கை கோர்த்துப்பி டித்துக்கொண்டாள்
திரம்என்று நம்பிக்கொண் டேன்—வீட்டில்
செல்லுமுன் ''பூர்வீகம் சொல்லும்'' என் றாள்.

சொன்னேன்என் செய்தியெல் லாம்—'' உள்ள
தொந்தம் விடாதினிச் சந்தேகம் ஏன் ?
முன்னே நடவும்''என் றாள்—ஆசை
மூட்டித்தன் வீட்டினில் கூட்டிச்சென் றாள்.

அவளிடம் மனத்தைப் பறி கொடுத்து, அங்கேயே பல நாட்கள் தங்கிவிட்டேன். என்னைக் குரங்காட்டம் ஆட்டி, புத்தியை மயக்கி, என் கையிலுள்ள பணத்தை யெல்லாம் பறிப்பதற்காகப் பல விதமான கெட்டசரக்கு களைச் சேர்த்து எனக்கு மருந்திட்டார்கள். அதன்பின் சுய புத்தியை இழந்து வேலைக்காரப் பையனைப்போல் அவளுக்குப் பணிவிடைகள் செய்து வந்தேன்.

ஒருநாள், ''நடராசர் சந்நிதியில் நாட்டியம் ஆட என்னைப் போல ஓர் அழகிய பெண்ணை நீங்கள் எங்கிருந்தாவது கொண்டு வரவேண்டும்'' என்று சிதம்பரவல்லி கேட்கவே, நான் பயணம் புறப்பட்டேன். சீர்காழிக்கு வந்து சேர்ந்தேன். அங்கே என் பழைய நண்பன் பொன்னப்பனைக் கண்டேன். அவன் என்னை அழைத்துச் சென்று சாப்பாடு போட்டான். பசி தீர்ந்து நித்திரை கொண்டேன். விடிந்தபிறகு அவனிடம் விடை பெற்றுக் கொண்டு திருவாரூருக்கு வந்து, அங்கே பகட்டான பேருடன் கூடிப் பத்து நாள் தங்கியிருந் தேன். அவ்வூர்ச் செட்டித் தெருவிலே ஒரு கல்யாணம் நடந்தது. நான் கல்யாணச் சந்தடியில் உள்ளே புகுந்து, யாருக்கும் தெரியாமல் மச்சின்மேல் ஏறி உட் கார்ந்து கொண்டேன். திருமணச் சடங்குகள் முடிந் தன. சாப்பாட்டுக்குப் பிறகு பெண்ணும் மாப்பிள்ளை யும் திரை மறைவில் சென்று நித்திரை செய்யலானார் கள். நான் திரையை விலக்கி உள்ளே சென்று, என் மாயப்பொடியைத் தூவினேன். அதன் பலனாக அவர் கள் அரைநாழிகை நேரம் அசையாமல் கிடந்தார்கள். மாப்பிள்ளையின் மார்பில் கிடந்த சரப்பளி, முத்துமாலை, பதக்கம், சங்கிலி முதலிய எல்லா நகைகளையும் ஒரு நிமிஷ நேரத்திற்குள் கழற்றி எடுத்துக் கொண்டேன். பெண்ணின் கழுத்து நகைகள், காது நகைகள், உத்த ரீயம் முதலானவற்றையும் கழற்றிச் சுற்றிக்கொண்டேன். வாசல் கதவைத் திறந்து வெளியே வந்து, விடிவதற்கு முன்பாக ராசகோபால மன்னார் கோவிலுக்குச் செல்லும் சாலையில் நடக்கலானேன். சாலையிலிருந்த மடங் களிலும் சத்திரங்களிலும் தங்கி, தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்தேன். அங்கே செவ்வாய்க்கிழமை - மடத்தில் ஒரு கிழவியைக் கண்டேன். அவள் என் தாயைப் போன்றவள். என் திருட்டுச் சாமான்களைப் பத்திரமாக ஓரிடத்தில் வைத்துவைக்கும்படி சொல்லி அவளிடம் கொடுத்தேன். அவள் எனக்கு மூன்று வேளையும் சாப்பாடு போட்டு ஆதரித்தாள்.

அந்தச் சமயத்தில், மதுரை மன்னர் விசயரங்கத் திருமலைச் சொக்கநாத நாயக்கரின் தளபதியான குமாரத் தளவாய், சில முஸ்லிம் ராணுவ வீரர்களோடும், தொண்டைமானின் படை வீரர்களோடும், எட்டயபுரத் தாரின் வீரர்களோடும் வந்து திருக்காட்டுப்பள்ளியில் கூடாரம் அடித்துத் தங்கினார். சுற்றிலும் எண்ணற்ற யானைகளும் குதிரைகளும் கட்டப்பட்டிருந்தன. கூடா ரங்களின் பக்கம் கொடிகள் பறந்தன. பொந்திலியர், வடுகர், வன்னியர், மறவர் முதலான வீரர்கள் ஒவ்வொரு மரத்து நிழலிலும் நின்று கொண்டிருந்தார் கள். மலைகள் நடுங்கும்படியாகச் சேனைவீரர்கள் முன் னேக்கி வந்தார்கள்.

### சாமியார் வேஷம்

சிதம்பரவல்லிக்குப் பொன் கொடுப்பதற்காக, பாளையத்திலிருந்து ஒரு குதிரையைத் திருடுவது என்று முடிவு செய்தேன். களவுக்கு முன்னேற்பாடாக உளவறியத் தீர்மானித்தேன். அதற்காகச் சாமியார் வேஷம் பூண நினைத்து, உடம்பெல்லாம் விபூதியைப் பூசினேன். மாத்திரைக் கோலை எடுத்தேன். ருத்தி ராட்ச மாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டேன். ஒட்டுத் தெரியாமல் தலையில் சடை வைத்துக் கட்டினேன். ஒரு சங்கையும் எடுத்துக் கொண்டு,

காவி உடையோடும் கமண்டலத்தோடும் சிவயோகி போல நடந்து, பாளையத்துக்குள் நுழைந்து, தொண்டைமானின் கூடார வாசலுக்கு வந்தேன். அங்கே நின்ற சேவகர் முதலானவர்களுக்கு விபூதி கொடுத்தேன். என்னைக் கண்டு எல்லோரும் கும்பிட்டார்கள்.

பாளையத்தில் படைகள் நிறைந்திருப்பதையும், மனத் துணிவோடு சிலர் உளவு பார்த்துத் திரிவதையும் சிலர் திருட்டுத்தனமான வேலைகளில் ஈடுபட்டிருப்பதையும், காவல்காரர்கள் பறையையும் மணியையும் தட்டிக் கொண்டு காவல் புரிவதையும், சேவகர்கள் விழிப்போடு இருப்பதையும் பார்த்தேன். குமாரத் தளவாயின் அழகான குதிரையைப் பாதுகாக்கும் ராவுத்தமாருடன் பழகி நேசம் செய்து கொண்டேன். ஏவிய வேலைகளைச் செய்யும் சில்லரைப் பயல்களும் என்னை விரும்பும்படியாகச் சிநேகம் பண்ணிக்கொண்டேன். எல்லோருக்கும் உடந்தையாக நடந்து, லாயத்தில் வேலை செய்யும் பயல்களுடைய ஒத்தாசையால் பத்து நாட்களுக்குள் குதிரைகளைப் பழக்கும் தொழிலையும் படித்துக் கொண்டேன். நல்ல மழையிருட்டு மூடியிருந்த ஒருநாள் இரவு தளவாயின் குதிரையைத் திருட நினைத்து, ஒரு தனியிடத்துக்கு வந்து என் சாமியார் வேஷத்தைக் களைந்து, பிறர் கண்ணில் படாமல் என் உருவத்தை மறைக்கக்கூடிய மையை உடம்பெல்லாம் பூசி, கால் சட்டை போட்டு, கருப்புக் கச்சையை இடுப்பில் இறுக்கிக் கட்டி, புல்லுருவியையும் நரிக்கொம்பையும் தலை மயிருக்குள் வைத்து, சொக்குப் பொடியையும் திருநீற்றையும் எடுத்துக்கொண்டு குதிரை லாயத்துக்குள் மாயமாய்ப் புகுந்தேன்.

சீவரத்தினம்போல் நின்ற குதிரையைக் கண்டு சலாம் பண்ணி, அதன் முகத்தைத் தடவிக் கொடுத்து லகானைப் பூட்டினேன். கயிறுகளை அவிழ்த்து, குதிரையைப் பக்குவமாகப் பிடித்துக் கொண்டு வெளியில் வந்தேன். குதிரை நம் கைக்குள் வசமாகி விட்டது என்று எண்ணி, வலம்சுற்றிச் சவாரி ஏறப்போனபோது அது திடீரென்று கனைக்க ஆரம்பித்துவிட்டது. இந்த முழக்கம் கேட்டதும் இரட்டர்களும், குதிரை பழக்கும் சாணிகளும் எழுந்து விட்டார்கள். "குதிரையைத் தேடுங்கள், குதிரையைத் தேடுங்கள்" என்று அவர்கள் கூப்பாடு போடவே, நான் ஒரே ஓட்டமாக ஓடி, கொள்ளு வைக்கும் கொப்பரைக்குள் குதித்து ஒளிந்து கொண்டேன். லாயத்தைச் சோதித்தவர்கள், வெளிப்புறத்தில் நிற்கும் குதிரையைப் பார்த்துக் கொண்டார்கள். உடனே "திருடனை விடாதீர்கள்! எல்லா வழிகளையும் மறித்துக் கொள்ளுங்கள்!" என்று கத்தினார்கள். சில்லரைப் பயல்கள் மொட்டைத் தலைகளோடு, தீவட்டியும் கையுமாகப் பிசாசுகள்போலத் திரிந்துகொண்டு என்னைத் தேடலானார்கள்.

**எத்தனை அவஸ்தைகள்**

இனிக் கொள்ளுக் கொப்பரையிலிருந்து தப்பி விடுவதுதான் உசிதம் என்று, அங்கிருந்து கிளம்பிப் புல் குவியலுக்குள் போய் ஒளிந்தேன். அவர்கள் கடுமையாகச் சோதனையிட்டுக் கொண்டிருந்ததால் கையையும் காலையும் மடக்கிக் கொண்டு நான் மறைந்திருந்தேன். அந்தச் சமயம் பார்த்து என் காதில் எறும்பு புகுந்து துளைத்தது. காலில் நட்டுவாக்காலி பிடுங்கி விட்டது. ஒரு புறத்தில் தேள் கொட்டியது. மற்றொரு இடத்தில் பூரான் கடித்தது. இந்த வேதனைகளைத் தாங்கமாட்டாமல், அடுப்பில் போட்ட ஆரால் மீன் போலத் துடித்தேன்.

கடுப்பும், எரிப்பும், அரிப்பும்—மிகுந்திடக்
கல்லுப்போல் அசையாமல் புல்லுக்குள்ளே
இடுப்பு முறிந்தநாய் போல்—கிடந்துகொண்டு,
எத்தனை அவத்தைக்கென்று உத்தரம்
சொல்வேன்?

பதினெட்டு விதமான விஷக்கடிகளுக்கு என் பையில் மருந்துகள் இருந்தன. இருந்தும் அவற்றைக் கையால் எடுக்க முடியாமல் கிடந்தேன். விதி வந்து சுற்றி வளைந்து கொண்டால் யார்தான் என்ன செய்ய முடியும்? கடவுள் நம்மைச் சோதிக்கிறார் என்று அத்தனை வலிகளையும் பொறுத்துக்கொண்டு, பிட்டுத் தின்று விக்கியவனைப் போல் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தேன். காதுக் குருத்திலே கறும்பும் எறும்பின் இம்சையைப் பொறுக்க மாட்டாமல் நான் துடித்துக் கொண்டு இருந்தபோது, வாள்வீரர் பலர் என்ன நினைத்தார்களோ என்னவோ, "புல்லை இழுத்துப் போட்டுப் படப்பில் தீயைக் கொளுத்துங்கள்" என்றார்கள். நான் வந்து ஒளிந்திருந்த காரணத்தினால் புல் குவியலுக்கும் சனியன் பிடித்துவிட்டது என்று எண்ணிப் பேசாமல் இருந்தேன். தீ வைக்கப்பட்டது. புகை கிளம்பியது. புகை மறைவிலேயே உருண்டு தப்பிக்க முயன்றேன். இந்தத் திருட்டு வேலையைச் செய்யாமல் திருச்செந்தூர்க் குமரேசருடைய தேருக்குப் பின்னால் உருண்டு வந்திருந்தாலும் அதற்கான நல்ல பலன் கிட்டியிருக்குமே என்று நினைத்துக் கொண்டேன். நான் உருளும்போது ஏற்கெனவே உள்ள வேதனைகள் போதாதாதென்று குறண்டிமுள் துறட்டி போலத் தலைமயிரைப் பிடித்திழுத்தது. கத்தி போன்ற கற்கள் தைத்து உடம்பெல்லாம் ரத்தம் பீறிட்டது. அந்தக் காயங்களில் உப்பு மண் படவே எரிப்புத் தாங்க முடியவில்லை. நெருஞ்சி முள் தைக்கும் வலி வேறு. இந் நிலையில் உருண்டு கொண்டே குதிரையின் மூத்திரக் குழிக்குள் போய் விழுந்தேன்.

வாயிலும் மூக்கிலும் கண்ணிலும் ஒரே குதிரை மூத்திரம். ஆனால் காதுக்குள் அது புகுந்தது சமய சஞ்சீவியாக உதவியது. மூத்திரம் புகுந்த மாத்திரத்தில், எறும்பின் குடைச்சல் ஒரு வழியாக நின்றது.

வாயிலும் நாசியி லும்—விழியிலும்
மாத்திர மோகுதிரை மூத்திரம்வந்து
தீயிலும் கொடிதா க—எறும்பிருந்த
செவியுள் புகுந்ததும்உ தவியல்லவோ?

மரச்செக்கு லக்கைபோ லே—உருண்டநான்
வழிதப்பிக் கேடயக் குழியுக்குள்ளே
இரைச்சலு டனேவிழுந் தேன்;—'கள்ளன்மதி
இழந்தான்' எனவந்து வளைந்தாரே.

(கேடயம்—கெட்ட நீர்; மூத்திரம்)

செக்கு உலக்கைபோல உருண்டு, நான் மூத்திரக் குழியில் 'தொப்' என்று விழவே, 'புத்தி கெட்ட திருடன் இருந்திருந்து எங்கே போய் ஒளியப் போகிருன்!' என்று ஆச்சரியப்பட்ட வீரர்கள் என்னை வந்து வளைத்துக் கொண்டார்கள். சுற்றிலும் கூடி நின்ற துருக்கர்களும், ராச புத்திரர்களும், தெலுங்கர் களும் கூக்குரல் எழுப்பினுர்கள்; கோபத்தோடு நாக்கை வளைத்தார்கள். 'இவன் சண்டாளத் திருட்டு பயல், இவனுடைய கையை வெட்ட வேண்டும். இவன் குதிரையைத் திருடவா வந்திருக்கிருன்? இவனுக்கு எதற்குக் குதிரை? அரண்மனைப் பொக்கிஷத்தைத் திருட வந்து, இந்த நரகக் குழியிலே விழுந்து கிடக் கிருன். சலதாரை நீரும், குதிரையின் நீரும்,சாணியும் கலந்து சேருகக் கலங்கிய குழியில் ஐம்புலன்களையும் வென்ற ஞானிபோல் இவன் கிடப்பதைப் பாருங்கள்' என்றெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

மூத்திரக் குழியின் துர்நாற்றத்தை அவர்களால் பொறுக்க முடியவில்லை. அடிக்கடி தூரத்தில் சென்று மூச்சு விடுவதும், அப்புறம் திரும்ப வருவதுமாக இருந் தார்கள். 'இந்த நாற்றத்திலே கிடக்கும் இவன் மகா கெட்டிக்காரன்தான்! காசுதாரிப் பயலை வெளியே தூக்குங்கள். சீசீ! நாயும் நரியும் கூட இந்த நாற்றத் தைத் தாங்காது. அப்படியிருக்க இவன் எப்படித் தான் சகித்துக்கொண் டிருக்கிருனே? மூக்கறுந்த கழுதை போலிருக்கிறது!' என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஒரு மொட்டையன் வந்து என்னை இழுத்து வெளியே போட்டான். ருதுவான பன்னிரண்டு வயதுப் பெண்ணைக் குளிப்பாட்டுவது போல் என் தலையில் தண்ணீரைக் கொட்டினுர்கள்.

முகத்தைத்தி ருப்பிக் கொள்வார்;—அப்புறம்போய்
மூச்சுவிடு வார்; 'கெட்டி யாச்சு'தென்பார்;
'குகைக்குழி தன்னில் கிடக்கும்—காசுதாரிக்
கூத்திமக னைக்கரை யேற்றும்'என்பார்.

'நாய்க்கும் நரிக்கும் பொருந்தா—நாற்றம் இவன்
நாசிக்கும் பொறுக்குமோ? சீசீ!' என்பார்;
'மூக்குப்பூ ரினகழு தை!—இவனுக்கு
மோசம்வந் தாலும்இல ரோசம்' என்பார்.

மரத்தினும் உணர்ச்சி கெட்டு—நான் கிடந்து
வருண செபம்செபிக்கும் தருணத்திலே,
'கரைக்கிழுத் தெறிவ' னென்று—துணிந்தொரு
கழுக்காணி மொட்டையன்வந் திழுத்து
விட்டான்.

இலக்கற்ற மழுங்கல் என்னைக்—கொணர்ந்துபன்
னிரண்டு வயதுசென்று திரண்டபெண்போல்
தலைக்குத் தண்ணீர் சொரிந்தார்—சண்டாளச்
சடத்தில் அழுக்கனைத்தும் துடைத்துக்
கொண்டேன்.

அப்புறம் என்னைச் சிறைக்குள்ளே கொண்டுபோய் நான்கு முனைகளை அறைந்து கால்களையும் கைகளையும் கட்டினுர்கள். இரவெல்லாம் அங்கே கிடந்தேன். விடிந்த பிறகு ஏழெட்டு வெறிகாரப் பயல்கள் வந்து, ஏவல் பிசாசுகள் போல் சிறைக்குள் நுழைந்து, என்னை அவிழ்த்துத் தொண்டைமானுக்கு முன்னல் கொண்டு போய் நிறுத்தினுர்கள். அவர் என்னைக் குமாரத் தள வாயிடம் அனுப்பும்படி உத்தரவிட்டார்.

தளவாயின் முன்னல் போய் நின்றதும், நான் செய்த குற்றத்தை அவருக்கு எடுத்துச் சொன்னுர்கள்.

துரைஎன் முகத்தைப்பார்த் தே—'ஏமிரா?
துஞ்சத்தொழில் இட்டுவந்த லஞ்சக்கொடுக்கா!
வரலாறும் ஊரும் பேரும்—குலமும்உன்
வகையும் சொல்' என்றார்அந்த மகராசன்.

(துஞ்சத் தொழில்-தீய காரியம். லஞ்சக் கொடுக்கா!—(தெலுங்கு) கூத்தி மகனே!)

தெலுங்கும் தமிழுமாகப் பேசிய தளவாயிடம் நான் என் பூர்வீகத்தைச் சொன்னேன். அவர் சிரித்துக் கொண்டு பக்கத்திலிருந்த வேத சாஸ்திர நிபுணர் களிடம், "இந்தச் சல்லிக்கு என்ன தண்டனை விதிக் கலாம்?" என்று கேட்டார். அவர்கள், "காலையும் கையையும் வெட்டிவிடுவதே மனுநீதியில் சொல்லப்பட் டிருக்கும் தண்டனையாகும்" என்றுர்கள். தளவாயும் அவ்வாறே உத்தரவிட்டார். உடனே என்னை அரண் மனை வாசலுக்கு வெளியே கொண்டு வந்தார்கள். என் னுடைய ஒரு காலையும் ஒரு கையையும் மெய் பதற வெட்டினுர்கள். வலி பொறுக்க முடியாமல் துடித்துக் கடைசியில் பிரக்ஞையில்லாமல் சோர்ந்து விழுந்தேன்.

**வள்ளலின் உதவி**

தன்னந்தனியாக நான் பரிதவித்துக்கொண்டு கிடந்தபோது, நல்லூர் சங்கரமூர்த்திப் பிள்ளையின் குமாரர் அனந்தபத்மநாப பிள்ளையானவர், குமாரத்தள வாயைப் பார்த்துவிட்டு அந்த வழியாகப் பல்லக்கில் வந்தார். என்னைக் கண்டதும் பல்லக்கை நிறுத்தி, "நீ யார்?" என்று விசாரித்தார். என் கதையைச் சொன்னேன். என்னை இகழ்ந்து ஒரு வார்த்தையும் சொல்லாமல், காயங்களை ஆற்றுவதற்காக எண்ணெயும் எலுமிச்சம்பழமும் வாங்கக் காசு கொடுத்தார். பிறகு என்னைப் பார்த்து, "வருந்தாதே, காயங்களை ஆற்றிக் கொண்டு, திருச்செந்தூருக்கு வா. உனக்கு முருகன் காலும் கையும் கொடுப்பான்" என்று சொல்லிவிட்டுப் போனுர்.

என்னைக் கண்டு எல்லோரும் மனம் இரங்கி, எண்ணெயைக் காய்ச்சி எலுமிச்சம்பழத்தைக் கொண்டு புண் கருக ஒத்தடம் கொடுத்தார்கள். பத்தியச் சோறும் போட்டார்கள். ஆறேழு நாட்களுக்குள் காயம் ஆறி, உடம்பும் தேறியது. என் கையில் மிஞ்சிய பணத்தை முடிப்புக் கட்டி எடுத்துக் கொண்டேன். குதிரையொன்றை விலைக்கு வாங்கினேன். துணைக்கு ஒரு பயலையும் கூட்டிக்கொண்டு, நல்ல நேரம் பார்த்து, திருக்காட்டுப்பள்ளியை விட்டுப் புறப்பட்டு பல ஊர்களைக் கடந்து நான் இப்பிறவியில் செய்த பாவங்கள் தீரச் திருச்செந்தூர்த் தலத்துக்கு வந்தேன்.

### ''தொழும் திருடா! இனி எழுந்திருடா''

சூரியோதயத்தைப் போன்று பிரகாசிக்கும் கிரீடங்களோடு ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் தங்கச் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருந்த கோலத்தை கண்டேன்; செந்தில் மாநகரின் பழம்பொருளைச் சந்தித்தேன்; ஆறு படைவீடுகளிலும் எழுந்தருளி ஆடல் புரிந்த முருகனைப் பார்த்ததும் பரவசத்தோடு வணங்கினேன். நித்திரை வந்து படுத்தவன்போல் நடுச் சபையில் கிடந்தேன். முருகன் என் கனவில் தோன்றி, ''தீய காரியங்களைச் செய்து திரிந்து, கடைசியில் நம்மை வந்து தொழும் திருடா, நீ எழுந்திருடா. உனக்கு நாம் காலும் கையும் தந்தோம்'' என்றார்.

'துச்சனம் செய்து திரிந்து,—வந்துநம்மைத்
தொழும் திருடா! இனி எழுந்திருடா!
தற்செய லாக வளரக்—காலும்கையும்
தந்தோம்' என்று 'கனவில் வந்தோம்' என்றார்.

தெரிசனம் கண்டு விழித்தேன்;—காலும்கையும்
திருந்திமுன் போலவளர்ந் திருந்ததனால்
கிரிதனில் வேல்விடுத் தோன்—சமூகத்தில்
கிடந்தேன்நான் எழுந்து நடந்தேனே.

கையும் காலும் வளர்த்தே—எனைவளர்த்த
கந்தனைத் திருச்செந்தில் எந்தைதனைத்
தெய்வ யானைத் தாயை—மான்பெற்ற
தேனைத் தொழுதிறைஞ்சி ஞானம்பெற்றேன்.

(துச்சனம்—துஷ்டத்தனம். கிரிதனில் வேல் விடுத்தோன்--தாரகாசுரனைக் கொல்லுவதற்காகக் கிரௌஞ்ச மலையில் வேல் எறிந்த முருகன். மான் பெற்ற தேன்—மான் வயிற்றில் பிறந்த தேன் போன்ற வள்ளி)

இந்த கலியுகத்தில் முருகன் அருளால் திருச்செந்தூரில் எனக்குக் காலும் கையும் வளர்ந்த அதிசயத்தைக் கண்ட கோவில் பிரதானிகள் எனக்கு உபசாரங்களும், மரியாதைகளும் செய்தார்கள். ''சண்முகன் கைங்கரியத் திருப்பணி விசாரிப்போன்'' என்ற ஒரு பதவியையும் கொடுத்தார்கள். நானும் அந்தப் பதவியை ஏற்றுப் பணிவிடைகளை மறவாமல் செய்து, திருச்செந்தூரில் என் பந்து ஜனங்கள் சூழச் சிறப்பாக வாழ்ந்தேன்.

ஆறு முகங்கள் வாழி!—செங்கையில்பொன்
அயில்வாழி! சேவற்கொடி, மயில்வாழி!
பூருவ உபேந்திரன் பெற்ற—தெய்வானைப்
பொன்னும், பொன் மான்பெற்ற
மின்னும்வாழி!

வீரவா காதியர் வாழி!—இலட்சத்தெட்டு
வீரர் படைத்தலைவர் ஆரும்வாழி,
பாரிடம் முற்றும் வாழி!—திருச்செந்தில்
பதிவாழி! சண்முகன்சந் நிதிவாழி!

(அயில்-கூரிய வேலாயுதம். பூருவ உபேந்திரன்-ஆதிமூலமான திருமால். பதி-ஊர்.)

வேலாயு தன்தருணை சேர்—தலத்தார்,
மிக்க தானீகர், கரு ணிக்கர்வாழி!
மாலோன் மருகனு ன—குருபரன்
வாழி நீடுழி!தமிழ் வாழி!வாழி!

திருச்செந்தூர் நொண்டி நாடகம் இங்கே முடிவடைகிறது.

இதன் ஆசிரியர் தமிழுக்குப் புதியதொரு சிந்தையும், புது மாதிரியான ஒரு பிரபந்தத்தையும் கொடுத்திருக்கிறார். இந்தச் சிறந்த நூல் பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தோன்றியது என்பதைக் கட்டுரையின் தொடக்கத்தில் பார்த்தோம். இதே நூற்றுண்டின் தொடக்கத்திலும், சற்று முன்னும் முறையே குறவஞ்சி, பள்ளு போன்ற வேறு புதுவகை நூல்களும் தோன்றின.

புதுமை இலக்கியங்கள் தோன்றிய பதினெட்டாம் நூற்றுண்டு, தமிழ் இலக்கியச் சரித்திரத்தில் மிகவும் குறிப்பிடத் தக்க ஒரு காலகட்டமாகும்.

நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி ஆகியவை தோன்றுவதற்கு ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு முன் விறலிவிடுதூதும், இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பின் காவடிச் சிந்தும் முதல் முதலாக இயற்றப்பட்டன. இந்நூல்களில் பல குறைகள் இருந்த போதிலும், இவை தமிழ்க் கவிதைப் போக்கிலும் நடையிலும் ஒரு புது மலர்ச்சியை உண்டு பண்ணியவை. இந்த முன்னேடிகளுக்குப் பிறகு தோன்றிய பாரதியார், கவியரசராக இருந்த காரணத்தால், புது மலர்ச்சிக்கு ஒரு பூரணத்துவம் கொடுத்து, கவிதையுலகில் புதிய சகாப்தத்தையே தொடங்கிவைத்து விட்டார்.

★

# தில்லித் தமிழ்ச் சங்கம்

ஏ. வி. குப்புஸ்வாமி எம். ஏ.
(நிர்வாகத் துணைத்தலைவர், தில்லித் தமிழ்ச் சங்கம்)

பாரத நாட்டின் தலைநகரின் பெயரைத் தமிழ் மொழியில் எழுதும்போது 'தில்லி' என்று எழுதுவது சரியா, அல்லது 'டெல்ஹி' என்று எழுதுவது சரியா என்ற ஒரு கேள்விக்குத் தலைவர் ராஜாஜி அவர்களே விடை கூறினார்கள். 1948-ம் ஆண்டு காந்தி ஜயந்தி விழாவன்று காலை, டில்லி தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் சர்க்கா நூற்பு வேள்வி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச் சமயம், ராஜாஜி அவர்கள் இந்திய கவர்னர் ஜெனரலாக நாட்டுக்குப் பணியாற்றி வந்தார்கள். நூற்பு வேள்வி நிகழ்ச்சியைப் பற்றித் தினசரிப் பத்திரிகைகளில் இன்றைய நிகழ்ச்சியின் கீழ் குறிப்பிட்டிருந்தோம். அதையே பேரழைப்பாக வைத்துக்கொண்டு காலை 9-30 மணிக்குக் கவர்னர் ஜெனரல் அவர்களுடைய ஊர்தி, பாதுகாப்பு பைலட் முன்னே வழி காட்டி வர, மெய்க்காப்பாளர் இருவர் பின்னே வர, சங்கக் கட்டடத்தின் முன் வந்து நின்றது. நூற்பு வேள்வியில் அன்று சிறிதுநேரம் ராஜாஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். நான் அந் நாட்களில் சங்கத்தின் காரியதரிசியாகப் பணி புரிந்துகொண்டு இருந்தேன். அவ் வாண்டுகளில் எங்கள் சங்க வெளியீடான "சுடர்" பத்திரிகை கை எழுத்துப் பிரதியாக வெளியிடப்பட்டு வந்தது. அம் மாதம், அன்றே வெளியான மலரை ராஜாஜி அவர்களின் பார்வைக்காக அவரிடம் நான் கொடுத்தேன். மலரைப் பார்வையிட்டு முடித்தபின்— "ஒரு சிறு திருத்தம்தான் செய்ய வேண்டும்; மற்றப்படி மலர் மிகவும் நன்றாக மணம் வீசுகிறது," என்று மொழிந்து கொண்டே, **டெல்ஹித் தமிழ்ச் சங்கம்**, என்று முகப்புப் பக்கத்தில் அழகிய கட்டெழுத்துக்களில் வரையப்பட்டிருந்ததை "**தில்லித் தமிழ்ச் சங்கம்**" — என்று திருத்தித் தந்தார்கள். "பாரதியாரும், 'தில்லித் துருக்கர்', என்னும் தமது பிரயோகத்தில், இந் நகரை டெல்ஹி என்று குறிப்பிடவில்லை; தில்லி என்று தானே எழுதியிருக்கிறார்; ஆகவே **தில்லித் தமிழ்ச் சங்கம்** என்று இனி எழுதலாம்," என்று ராஜாஜி அவர்கள் காந்தி ஜயந்தி தினத்தன்று சூட்டிய பெயர்தான் இச் சங்கத்திற்கு நிலைத்து விட்டது.

1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று இச் சங்கம் துவக்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விதை ஊன்றப்பட்டது. புது தில்லியில் கன்னுட் சர்க்கஸ் என்னுமிடத்தில் உள்ள நியூ மதருஸ் போர்டிங் ஹவுஸ் என்ற சாப்பாடு விடுதியில் வசித்துவந்த நானும் கூட இருந்த மற்றும் சில நண்பர்களும் சங்கத்தை அன்று துவக்கினோம். வாரம் தவறாமல் ஏதாவது ஒரு சொற்பொழிவு, வாரம் மூன்று தினங்களில் மாலை நேரங்களில் திறந்துவைக்கப்பட வேண்டிய ஓர் புத்தகாலயம் கோலுவது என்ற இவை இரண்டும் நாங்கள் ஆரம்பத்தில் மேற்கொண்ட பணிகளாகும். எனக்கு இன்றும் நினைவிருக்கிறது, சங்கத்தின் இந்த இரு பணிகள் துவக்கப்பட்டுள்ள செய்தியைக் கேட்டு, அந் நாட்களில் தில்லி நகரிலே மத்திய

அரசாங்கக் காரியாலயம் ஒன்றில் பணி புரிந்துவந்த திரு. வி. எஸ். சுப்பய்யா அவர்கள் ஒருநாள் மாலை எனது இருப்பிடத்திற்கு வந்து, நெடுநேரம் தில்லி நகரில் தமிழ்ப் பணியின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தி, இத் துறையில் தம்மாலான எல்லா உதவியையும் அவ்வப்போது அளித்து வருவதாகக் கூறினார்கள். அதேபோல் பல வருஷங்கள், அவர் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு அரிய தொண்டாற்றி வந்தார்கள். தற்சமயம் திரு. சுப்பய்யா அவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தில் இணைக் காரிய தரிசியாக நிர்வாகம் வகித்துவருகிறார்கள். திரு. சுப்பய்யா போன்று இன்னும் பல அன்பர்களும் முக்கியமாகத் திரு. எம். பால சுப்ரமண்யம், திரு. ஆர். எஸ். வெங்கட்ராமன் (கஜமுகன்), திரு. எஸ். மகாதேவன் முதலியோர் அந்த ஆரம்ப மாதங்களில் அருந்தொண்டாற்றினார்கள்.

### தொடக்க விழா

1946 ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று நாங்கள் ஊன்றிய விதை ஒரு சிறு இளஞ்செடியாக கதுப்புகள் காட்டி முளைத்தது. ஏப்ரல் மாதம் 13-ம் தேதி தமிழ்த் புத்தாண்டு தினத்தன்று சங்கத்தின் ஆரம்ப விழாவை நடத்துவதென்று தீர்மானித்தோம். அதற்குச் சில தினங்களுக்கு முன்பு ஒரு தேர்தலை நடத்தி, நிர்வாகக் குழு ஒன்றும் ஏற்படுத்திக்கொண்டோம். மத்திய அரசாங்கத்தின் வர்த்தக இலாகா காரியாலயத்தில் உயர்ந்த உத்தியோகம் வகித்துவந்த திருவாளர் எஸ். சுப்பிரமணியன் அவர்களைத் தலைவராகவும், திருவாளர் ஏ. வி. ஒய். நாராயணன், திருமதி. சி. ஏ. ராதாபாய் இவர்களை உபதலைவர்களாகவும் என்னைக் காரியதரிசியாகவும் அங்கத்தினர்கள் நியமனம் செய்தார்கள். எங்கள் பணிக்கு உதவியாக ஓர் நிர்வாகக் கமிட்டி செயலாற்றியது. தொடக்க விழாவிற்குத் திரு. சி. குப்புஸ்வாமி முதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. க. சந்தானம் அவர்களும் திரு. ஆதித்தன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றி உதவினார்கள். அன்றைய விழாவிற்குச் சிகரமாக அமைந்தது முன், தினம் காலையில்தான் தில்லிக்கு வந்த ராஜாஜி அவர்கள் வருகை புரிந்து கலந்து கொண்டதாகும். அச்சமயம் தில்லியில், காங்கிரஸ் தலைவர்களுடனும், முஸ்லீம் லீக் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்த, பிரிட்டிஷ் தொழிற் கட்சி மந்திரிகள் திரு. பெதிக் லாரென்ஸ், ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இவர்கள் அடங்கிய " காபினெட் மிஷன் " தூதுகோஷ்டி வந்திருந்தது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் சார்பில் மௌலானா அபுல்கலாம் ஆஜாத், டாக்டர் ராஜன் பாபு, பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் வல்லபபாய் படேல், ஆசார்ய கிருபளானி முதலியோர் காந்திஜி அவர்களின் தலைமையில் இந்திய சுதந்திரம்பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்தனர். முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் திரு. ஜின்னா, திரு. லியாகத் அலிகான் முதலிய லீக் தலைவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்தனர். இந்திய சமஸ்தானங்களின் சார்பில் வந்திருந்த சமஸ்தான அதிபதிகளின் ஆலோசகர்களில் ஒருவராக ஸர். சி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் வந்திருந்தார். சி. பி. அவர்கள் விழாவுக்கு ரூபாய் 250/- நன்கொடை அனுப்பிச் சிறப்பித்தார். அதுவே சங்கம் பெற்ற முதல் நன்கொடை. காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அச்சமயம் ராஜாஜி அவர்கள் அங்கத்தினராக இல்லை. இருந்தபோதிலும், ஓர் சிறந்த அரசியல் மேதையைச் சந்திக்காமல் திரும்பிப் போவதை விரும்பாத ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், ராஜாஜி அவர்களுக்குத் தனிப்பட்ட ஹோதாவில் அழைப்பு அனுப்பி இருந்தார். அந்த அழைப்பின் பேரில் ராஜாஜி அவர்கள் தில்லிக்கு வந்தது, பழம் நழுவிப் பாலில் விழுந்த தன்மையாயிற்று, தமிழ்ச் சங்கத் தொடக்க விழா சம்பந்தப்பட்ட மட்டும். சுமார் அரைமணி நேரம், அன்றைய விழாவில் எங்களுக்கு மிகச் சிறந்த ஓர் அறிவுரை கூறி தில்லித் தமிழன்பர்களை இன்பத்தில் ஆழ்த்தினார் ராஜாஜி.

### "சுடர்" வெளியீடு

அன்று வெளியிடத் தயாரித்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியான எங்கள் சங்க மலர் "சுடர்" வெளியீட்டை ஆசிகூறி வெளியிட்டுத் தரும்படி அவர் கையில் சமர்ப்பித்தோம்.

**"சுடர்-நந்தா விளக்காய் எரிய எல்லோரும் நெய் ஊற்றுங்கள்"** என்று தமது திருக்கரத்தால் எழுதி, ஆசிமொழிந்து அதை ராஜாஜி வெளியிட்டார்கள். அவரது ஆசிபெற்ற "சுடர்" - சென்ற 22 ஆண்டுகளாக, வருடமலராகத் தமிழன்னைக்குச் சேவை செய்து வருவது தமிழுலகம் அறிந்ததே. 1968-ஆம் ஆண்டு **திருவள்ளுவர் மலராக** " சுடர் " வெளியிடப்பட்டது. 1969-ம் ஆண்டு **காந்தி மலராக** "சுடர்" வெளிவர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முந்தைய ஆண்டுகளில் பாரதிதாசன் மலர், வ.உ.சி. மலர், சத்தியமூர்த்தி மலர், தேசிய விநாயகம் பிள்ளை மலர், டாக்டர் சாமிநாத அய்யர் மலர், கல்கி மலர் என்று பலத் தமிழ்ப் பெரியார்களின் நினைவில் மலர்கள் வெளியிடப்பட்டன.

இரண்டு ஆண்டுகள் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியபின் ஓய்வு வேண்டினார் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்கள். மூன்றும் ஆண்டு திருமதி ராஜலக்ஷ்மி ராகவன் அவர்கள் தலைவராகப் பணியாற்றினார்கள். அடுத்த ஆண்டிலிருந்து டாக்டர் ஸர். கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் பல வருஷகாலம் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார். அவர் காலமானபின் மத்திய அரசாங்கத்தில் இணைக் காரியதரிசி

யாக உத்தியோகம் வகித்துவந்த திரு. கே. வி. வெங்கடாசலம் அவர்கள் சங்கத்தின் தலைமை ஸ்தானத்தை ஏற்றுத் திறம்பட நடத்தி வருகின்றார்கள்.

1950-ம் ஆண்டில் தில்லித் தமிழ்ச் சங்கம், அறிஞர் வ. வே. சு. அய்யர் ஆங்கிலத்தில் எழுதி வைத்திருந்த Kamba Ramayanam — A critical study என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டது. 1958-ம் ஆண்டு அகில இந்திய தமிழ் மகாநாட்டைத் தில்லி நகரிலே மிகச் சிறப்பாக நடத்தியது. வ. வே. சு. அய்யர் அவர்கள் எழுதிய திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பை மறுபதிப்பு பிரசுரிக்க முன்வந்து உதவியது.

கம்பர் தினம், வள்ளுவனார் தினம், சத்தியமூர்த்தி தினம், பாரதி ஜெயந்தி, சிதம்பரம் பிள்ளை தினம், டாக்டர் அய்யர் அவர்கள் தினம் முதலான தமிழ்ப் பெரியார்களின் நாட்களை ஆண்டுதோறும் சங்கம் கொண்டாடி வருகிறது.

தமிழ்த் திருநாட்களான பொங்கல் தினம், தமிழ் வருஷப் பிறப்பு நாள் இவைகளை விசேஷக் கலை நிகழ்ச்சிகள் தயாரித்துக் கொண்டாடி வருகிறது.

தமிழ் நாட்டிலிருந்து தில்லி நகருக்கு விஜயம் செய்யும் தமிழ் அறிஞர்களையும், தமிழ்க் கலைவாணர்களையும் வரவேற்புக் கூட்டங்கள் கூட்டிக் கௌரவிக்கின்றது தமிழ்ச் சங்கம்.

தில்லிப் பல்கலைக் கழக பி. ஏ. பட்ட ஆண்டுத் தேர்வுகளில் தமிழ்ப் பரீக்ஷையில் முதல் இடம் பெறும் மாணவர்களுக்கு ஒரு பரிசும், அங்ஙனமே தில்லி உயர்தரப் பள்ளிப் பரீக்ஷையில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு ஒரு பரிசும் ஆண்டுதோறும் அளித்துவருவதற்கு சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

### வட இந்தியருக்குத் தமிழ் கற்பித்தல்

சங்கம் மேற்கொண்டுள்ள மிகவும் முக்கியமான மற்றொரு பணியாவது, தமிழரல்லாத வடஇந்திய சகோதர சகோதரிகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதாகும். இதுவரை, சென்ற மூன்று ஆண்டுகளில், ஆறு முறை வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. பலபேர் இந்த வகுப்புகளில் சேர்ந்து தமிழ் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டிருக்கின்றனர். வகுப்பு முடிவில், தேர்வுகள் நடத்தி அவர்களுக்கு நற்சாக்ஷிப் பத்திரங்களும் அளிக்கப்படுகின்றன.

தற்போது தில்லித் தமிழ்ச் சங்கத்தின் அலுவலகம் கன்னாட் ஸர்க்கஸ் என்ற இடத்தில் பாராளும் மன்ற வீதியின் தொடக்கத்தில் ஒரு சிறு கட்டடத்தில் அமைந்துள்ளது. ஒரு இலவச வாசகசாலையும், திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் நினைவாக நடத்தப்பட்டுவரும் ஒரு புத்தகாலயமும் இந்தச் சிறு கட்டடத்திலேயே அடங்கியுள்ளன. சென்ற இருபது ஆண்டுகளில் தில்லி நகரிலே தமிழ் மக்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது. தற்சமயம் தமிழ்ச் சங்கத்தில் 500-க்கு மேற்பட்ட அன்பர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். வார இறுதி இலக்கியக் கூட்டங்களையும், சிறப்பு வரவேற்புக் கூட்டங்களையும் நடத்துவதற்கு தற்போது எம் வசமுள்ள இந்த இடம் போதாமல் இருப்பதனால், சென்ற சில ஆண்டுகளாகச் சங்கத்திற்குத் தனக்கென ஓர் கட்டடம் இனி தேவை என்பதை உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் சங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

### சொந்தக் கட்டடம்

இம் முயற்சியில் ஈடுபட்ட தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்கு ஒரு லக்ஷம் ரூபாய் தமிழக அரசு கொடுத்து உதவியுள்ளது. கலை நிகழ்ச்சிகள் மூலமும், செல்வந்தர்கள் பேருதவியாலும் சங்கம் மற்றொரு லக்ஷம் ரூபாய் நிதி திரட்டியுள்ளது. இந்த இரண்டு லக்ஷம் ரூபாயைக் கொண்டு புது தில்லியில் உள்ள ராமகிருஷ்ணபுரம் என்ற பேட்டையில் இப்போது ஒரு கட்டடம் எழுப்பப்பட்டு வருகின்றது. இன்னும் ஒரு லக்ஷ ரூபாய் இப் பணிக்குத் தேவையாக இருக்கிறது. மூன்று லக்ஷம் ரூபாய் செலவில் அமைக்கப்படப் போகும் இந்த மாளிகையில் தமிழ்நாட்டிலிருந்து தில்லிக்கு அவ்வப்போது விஜயம் செய்யும் பெருமக்களுக்கென, தங்குவதற்கு விடுதிகளும், ஆராய்ச்சி அரங்கு, தமிழ் வகுப்புக்கள் நடத்த அறைகள், புத்தகாலயம், வாசகசாலை, பேரரங்கு, நாடக மேடை முதலான பல ஏற்பாடுகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் வாழும் பெருமக்களும் தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் தமிழன்பர்களும் தில்லித் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டுள்ள இப் பெரும் பணியில் தங்கள் தங்களாலான பேருதவியை நல்க வேண்டும் எனத் தில்லித் தமிழ்ச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.



# கலிங்கத்துப் பரணி

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி,
எம். ஏ., பிஎச். டி.

பிற்காலச் சோழர் காலத்தில் தமிழகத்தில் அடிக்கடி போர் நிகழ்ந்தது. பொருகளத்தில் மாற்ருரை எதிர்த்துத் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் போரிட்ட வீரர்களை அக்காலத்து மக்கள் பெரிதும் பாராட்டினர். இணையற்ற வீரத்தோடு பகைவரைப் பொருதழித்து வாகை சூடிய பெருவீரனைப் பாராட்டிப் புலவர்கள் போர்ப்பாடலும் பாடினர். இதுவே பரணி எனப்படும். இவ்வாறு எழுந்த பரணி நூல்களுள் முதன்மையானது கலிங்கத்துப் பரணியாகும். வீரர்களைப் போற்றிச் சிறப்பித்துப் பாடும் பாடல்களைச் சங்க இலக்கியங்களில் காண்கிருேம். இவற்றிற்குரிய இலக்கணங்களைத் தொல்காப்பியம் விரிவாக விளக்குகிறது. ஆனல், போரைப் பொருளாகக் கொண்டு ஒரு முழு நூலாக முதன் முதல் தோன்றியது கலிங்கத்துப் பரணியேயாகும். இதற்குப் பின்பு பல பரணி நூல்கள் தோன்றின. எனினும் அவை அனைத்தினும் கலிங்கத்துப் பரணியே இணையற்று விளங்குகிறது. இது 596 தாழிசைகள் கொண்டுள்ளது.

இந்நூலைப் பாடியவர் சயங்கொண்டார் எனும் புலவராவர். இவருடைய காலம் பதினேராம் நூற்ருண்டாகும். இவர் முதற் குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். இவரைப் ''பரணிக்கோர் சயங்கொண்டான்'' எனப் பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் சிறப்பித்துப் பாடியுள்ளார். இதனின்றும் ஏனைய பரணி நூல்களிலும் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியே தலையாய சிறப்புடையது என்பது புலனுகிறதன்ருே?

பொருகளத்தில் பகைவனின் ஆயிரம் யானைகளைக் கொன்று குவித்து வெற்றிகொள்ளும் வீரனின் வீரத் திறத்தைப் பாடுவது பரணியாகும் என்பது அதன் இலக்கணம். முதற்குலோத்துங்க சோழனின் அமைச்சர் தலைவனுகிய கருணுகரத் தொண்டைமான் தன் அரசனின் ஆணையைத் தலைமேற்கொண்டு வட கலிங்கத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற்ற சிறப்பினைக் கலிங்கத்துப் பரணி பாடுகின்றது. இதன் கண் முதற்குலோத்துங்க சோழன் திருமாலின் அவதாரம் என்று போற்றப் பெறுகிருன்; அவன்தன் நேர்மையும் அருளும் நிறைந்த ஆட்சியும் வீரச் சிறப்பும் நன்கு விளங்கப்பட்டுள்ளன. கருணுகரத் தொண்டைமானின் வீரமிக்க போர்ச் செயல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

முதற்குலோத்துங்கன் காஞ்சி நகரில் தன் அரசவையில் அமைச்சர்களோடு அமர்ந்திருந்தான்.

அப்போது பாண்டியர் முதல் வியத்தர் ஈருக நாற்பத்தெட்டு நாட்டு அரசர்களும் வந்து குலோத்துங்கனை வணங்கித் திறை செலுத்தினர். கலிங்க நாட்டு மன்னனாகிய அனந்தவன்மன் மட்டும் திறைசெலுத்த வரவில்லை. அவன் திறை செலுத்தாமல் இருப்பது இரண்டாவது முறையாகும். இது குலோத்துங்கனுக்கு அறிவிக்கப்பட்டது. இதை அறிந்ததும் அவன் சீற்ற முறவில்லை; புன்முறுவல் பூத்தான். திறை செலுத்தாத மன்னன்பால் சீற்றமுற்றன்றோ அவன் எழ வேண்டும்? இதற்குப் பதிலாக குலோத்துங்கன் புன்முறுவல் பூத்தான் என்று பரணி பாடுகின்றது!

"முறுவல் கொண்ட பொருள் அறிகிலம்;
சிறிதும்
முனிவு கொண்டதிலை வதனமே"
(339)

என்று சயங்கொண்டார் பாடுகிறார். அனந்தவன்மன் சோழர் படை வலிமையை அறியாது, தன் அறியாமையினாலும், ஆணவத்தாலும் அழிவு தேடிக்கொள்ளும் அவன் சிறுமைத்தன்மையை நினைந்து குலோத்துங்கன் முறுவலித்தான். அவனுடைய அமைதியான பன்பையும் பெருவீரத்தின் பெற்றிமையையும் அப்புன்முறுவல் உணர்த்துவதாகும்.

வலிய மலைகள் நிறைந்த கலிங்க நாட்டைத் தன் படைவீரர்கள் சென்று தாக்கி அந்நாட்டு யானைகளையும் கலிங்கனையும் கைப்பற்றி வருமாறு சோழ மன்னன் ஆணையிட்டான். தான் சென்று கலிங்க நாட்டை அழித்து வருவதாக வண்டையர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான் கூறிப் பெரும்படையோடு போருக்கெழுந்தான். அவன் கலிங்கநாட்டைத் தாக்கி அழித்தான். கலிங்கர் நிலை கலங்கி ஓடி மறைந்தனர். அவன் அங்கு வெற்றிக் கொடியை நாட்டி அந்நாட்டுப் பொருள்கள் அனைத்தையும் கொண்டு திரும்பிவந்து குலோத்துங்கன் திருவடிகளை வணங்கினான். இச் செய்தியினை மையப்பொருளாகக் கொண்டு சயங்கொண்டார் தம் பரணியைப் பாடியுள்ளார்.

கலிங்கத்துப் பரணி 'கடவுள் வாழ்த்து' முதல் 'களம் பாடியது' ஈருகப் பதின்மூன்று பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. "கடவுள் வாழ்த்"தில் சயங்கொண்டார் ஒவ்வொரு கடவுளரோடும் குலோத்துங்கனைத் தொடர்புபடுத்தி அவன் நெடுங்காலம் வாழவேண்டும் என வேண்டிப் பாடியுள்ளார். தாம் குறித்த காலத்தில் வராததால் ஊடல்கொண்டு கதவைத் தாழிட்டுக் கொண்டிருக்கும் தம் காதலியரைக் கலிங்கத்துப் போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய வீரர்கள் கதவைத்திறக்குமாறு கூறுவதாகக் 'கடை திறப்பு' எனும் பகுதி அமைந்துள்ளது. காளி தேவியின் இருப்பிடமாகிய பாலைநிலத்தின் வெம்மையையும் அதைச் சார்ந்த சுடுகாட்டின் இயல்பையும் 'காடு பாடியது' என்ற பகுதி விளக்குகிறது. 'கோயில் பாடியது' என்ற பகுதியில் காளிகோயிலின் இயல்பு கூறப்பட்டுள்ளது. காளி தேவியின் சிறப்புகளைத் 'தேவி பாடியது' என்ற பகுதி கூறுகிறது. ஒரு முது பேய், பேய்க்கூட்டம் சூழக் கொலு வீற்றிருந்த காளி தேவிக்கு மாய வித்தைகளைச் செய்து காட்டுவதை 'இந்திரசாலம்' என்ற பகுதி விளக்குகிறது. 'இராச பராம்பரியம்' மனு முதல் குலோத்துங்கன் ஈருகச் சோழ மன்னனுடைய வழிமுறையைக் கூறுகிறது. பேய்கள் காளி தேவிக்குத் தம் பசியின் கொடுமை கூறிக் குறையிரப்பதும், அப்போது முது பேய் ஒன்று வந்து கலிங்க நாட்டில் தான் கண்ட தீய சகுனங்களைக் காளி தேவிக்குக் கூறுவதும், அதைக் கேட்டுக் காளி தேவி கலிங்கத்தில் பரணிப்போர் நடைபெறும் என்று கூறுவதும் 'பேய் முறைப்பாடு' என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. குலோத்துங்கனின் பிறப்பு, வளர்ச்சி, வீரம், முடிபுனைதல், பரிவேட்டையாடப் பாலாற்றங்கரைக்குச் செல்லுதல் ஆகியவை பற்றி 'அவதாரம்' என்ற பகுதி கூறுகிறது. கலிங்கப் பேய் ஒன்று காளியிடம் ஓடிவந்து கலிங்கப் போர் நிகழ்ந்ததற்குரிய காரணத்தையும் கலிங்கம் மீது படையெடுத்துச் சென்ற கருணாகரன் வீரத் திறத்தையும் 'காளிக்குக் கூளி கூறியது' என்ற பகுதி விளக்குகிறது. 'போர் பாடியது' என்ற பகுதியில் இரு திறத்துப் படைகளும் பொருத திறமும் முடிவில் கருணாகரன் கலிங்கரைப் பொருது முறியடித்த வீரச் சிறப்பும் விளக்கப்பட்டுள்ளன. காளி பேய்களுக்குக் கலிங்கப் பொருகளக் காட்சியைக் காட்டுதலும், பேய்கள் வெட்டுண்டு இறந்துபட்ட வீரர்களின் இரத்த வெள்ளத்தில் நீராடிக் கொழுப்பை ஆடையாக உடுத்து, யானைகளின் கிம்புரி, துதிக்கை, குதிரைகளின் குளம்புகள் முதலியவைகளை அணிகளாக அணிந்து கொள்ளுதலும், குதிரையின் இரத்தத்தை உலைநீராக வைத்து வீரர்களின் பற்களை அரிசியாக அதில் இட்டுக் கூழ் சமைத்துப் பேய்கள் உண்டு களிக்கும் காட்சியும் இறுதிப் பகுதியாகிய 'களம் பாடியது' என்பதில் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் இன்பச் சுவையோடு தொடங்குகிறது. கடைதிறப்புப் பகுதி முழுவதும் காதல் சுவை நிரம்பியதாகும். கடை திறப்புப் பகுதி கலிங்கப் போரை அறிமுகப்படுத்துவதுமாகும், "கலிங்கம் எறிந்த கருணாகரன்தன் களப்போர் பாடத் திறமினோ." "கலிங்கத்தை அழித்த கருணாகரத் தொண்டைமான் நிகழ்த்திய போரைப்பற்றிப் பாடப் போகிறேன்; கதவைத் திறப்பீர்களாக" என்று வேண்டுகிறான் ஒரு வீரன்.

குலோத்துங்கன் ஆட்சியில் சிறை வைக்கப்பெற்ற பகைவர் மகளிரும், திறைப் பொருளாகத் தரப்பட்ட வேற்று நாட்டு மகளிரும் தத்தம் காதலரோடு இன்ப வாழ்வு வாழ்ந்தனர் என்பதும் கடை

திறப்புப் பகுதியின் கீழ்வரும் அடிகளிலிருந்து உணர்கிறோம்.

"அலைநாடிய புனல்நாடுடை
அபயர்க்கிடு திறையாம்
மலைநாடியர் துளுநாடியர்
மணியிற்கடை திறமின்"

"மழலைத்திரு மொழியிற்சில
வடுகும் சிலதமிழும்
குழறித்தரு கருநாடியர்
குறுகிக்கடை திறமின்"

(41, 43)

இந்நூலில் ஏனைய பகுதிகளில் இன்பச் சுவைக்கு இடமேயில்லை. எனவே ஆசிரியர் முதலிலேயே கடை திறப்புப் பகுதியில் காதல் வெள்ளம் பெருக்கெடுத்தோடுமாறு பாடியுள்ளார்.

காளி தேவி போர்த் தெய்வமாகும். போர் மிகவும் கொடுமை நிறைந்தது. அக்கொடுமை தோன்ற வற்றி உலர்ந்த பாலை நிலமும் சுடுகாடும் அவள்தன் இருக்கையாகவும் இறந்துபட்ட வீரர்களின் பிணங்களைப் பிடுங்கித் தின்னும் பேய்களும் பூதங்களும் அவளைச் சூழ்ந்திருப்பதாகவும் கவிஞர் பாடியுள்ளார். பாலை நிலத்தின் வெம்மை, காளியின் இருக்கை, பேய்களின் பசிக்கொடுமை ஆகியவற்றை விளக்கும் வாயிலாகச் சயங்கொண்டார் போரின் கொடுமையை நாம் உய்த்துணருமாறு செய்துள்ளார். கருணாகரத் தொண்டைமானின் படையெடுப்பும், கலிங்கப் போர் நிகழ்ச்சிகளும் வீரச்சுவை நிரம்பியவையாகும். எனினும் இவைகளும் போரின் கொடுமையை உணர்த்துவனவேயாம். காளி பேய்களுக்குக் குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் கலிங்கப் போர்க்களத்தைக் காட்டுவது போரின் கொடுமையைக் காட்டுவதேயாம்.

அங்ஙனமாயின் கொடுமை நிறைந்த போரை அருள் நிறைந்த குலோத்துங்கன் ஏன் செய்தான் என்பது சிந்தித்தற்குரியது. இதற்குரிய அமைதியை இந்நூல் குறிப்பாக உணர்த்துகிறது. அறமூர்த்தியாகிய திருமால் இந்நிலவுலகில் பலமுறை அவதரித்துத் தீயசக்திகளை அழித்தார். இது போலவே அறமே உருவான குலோத்துங்கன் தீயசக்தியாகிய அனந்தவன்மனை அழித்தான் என்பதே இந்நூலில் காணும் அமைதி. திருமாலே குலோத்துங்கனாகத் தோன்றினான் என்று சயங்கொண்டார் பாடுகிறார்.

"அன்றிலங்கை பொருதழித்த அவனேயப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரன்
எனவுதித்தான் விளம்பக் கேண்மின்!"

(232)

"முன்பு இலங்கையைப் பொருதழித்த இராமனாகிய திருமாலே, பின்பு கண்ணனாகத் தோன்றிப் பாரதப் போரை முடித்தான். அத்திருமாலே இப்போது பகைவரை வென்று விளங்குகின்ற ஒளிவீசும் ஆணைச் சக்கரத்தையுடைய விசயதரன் என்னும் முதற்குலோத்துங்க சோழனாக இவ்வுலகில் பிறந்துள்ளான். அவன் வரலாற்றைச் சொல்கிறேன்; கேளுங்கள்" என்பது இத் தாழிசையின் பொருள்.

இதனின்றும் குலோத்துங்கன் திருமாலின் அவதாரம் என்பது தெளிவு. குலோத்துங்கன், அறம்; அனந்தவன்மன், பாவம். குலோத்துங்கன் அனந்தவன்மனை வென்றது உண்மையில் அறம் பாவத்தை வென்றதாகும்.

இந்நூலின் பலபாடல்களில் நயமான பொருள்கள் அமைந்து நம் நெஞ்சை அள்ளுகின்றன.

கணவன் தான் திரும்பி வருவதாகக் குறித்துச் சென்ற காலம் வந்தது. மனைவி அவன் தன் வருகையை எதிர்பார்த்துக் கதவைத் திறந்து வழிமேல் இமை கொட்டாமல் விழிவைத்து நின்றாள். கணவன் இன்னும் வரவில்லை. பாவம் அவளுக்குப் பெரு ஏமாற்றம். வெறுப்பால் கதவைத் 'படார்' எனச் சாத்தினாள். அடுத்த கணம் அவன் வருகையை எதிர்பார்த்து மீண்டும் திறந்தாள். இங்ஙனம் பொழுது விடியும் அளவும் 'வருவார்' என எதிர்பார்த்துக் கதவைத் திறப்பதும், 'வாரார்' எனக் கருதிக் கதவை மூடுவதுமாக அவள் இருந்தாள். இதனால் கதவிலுள்ள சுழலும் குடுமி தேய்ந்து போய்விட்டது.

"வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் எனஅடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ" (69)

மனைவி கணவன்பால் கொண்டுள்ள அன்பையும் அவள்தன் பிரிவுத் துன்பத்தையும், அவள் கணவன் வருகையை எதிர்பார்க்கும் ஆர்வத்தையும் எத்துணை நயமாக இத் தாழிசை உணர்த்துகின்றது காண்மின்!

குலோத்துங்கன் ஆட்சியில் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் எல்லாவகையான உரிமைகளும் (Individual rights and freedom) இருந்தன.

இதனை,

"கதங்களில் பொருது இறைஞ்சிடா அரசர்
கால்களில் தளையும் நூல்களின்
பதங்களில் தளையு மின்றி வேறொரு
பதங்களில் தளைகள் இல்லையே!" (274)

என்ற இவ் அடிகளில் சயங்கொண்டார் மிக நயமாக உணர்த்துகிறார்.

"சீற்றத்தோடு குலோத்துங்கனோடு போர் புரிந்து அவனை வணங்கிடாத பகையரசர் கால்களில் பூட்டிய விலங்குகளும் செய்யுள் நூல்களிலுள்ள ஆசிரியத் தளை, வெண்தளை, கலித்தளை போன்ற தளைகளும் அல்லாமல், வேறு எவ்விடத்திலும் எவ்விதத் தளையும் இல்லை'' என்பது இத்தாழிசையின் பொருள்.

ஒரு நாட்டு மக்கள் அனைவரும் எல்லாவகையான மனித உரிமைகளும் (Human rights) பெற்றால்தான் அவரவர்களின் அறிவும் ஆற்றலும் விரைந்துவளர்ந்து முடிவில் நாடும்வளமுடையதாகும். இவ்வுண்மையைக் குலோத்துங்கன் ஓர்ந்தே தன் நாட்டு மக்கள் அனை வருக்கும் எல்லாவகையான உரிமைகளும் தந்திருந் தான் என்பது இத்தாழிசையினின்றும் புலனாகிறது.

கலிங்கத்துப் பரணி ஒரு கற்பனைக் களஞ்சிய மாகத் திகழ்கிறது. இலக்கியம் படிப்போர் உள்ளத்தை உணர்ச்சி வயப்படுத்தும் நீர்மைய தாகும். அதன்கண் அமைந்துள்ள கற்பனைகளே இலக்கியத்திற்கு அந்நீர்மையை நல்குகிறது.

பொருகளத்தில் இறந்துபட்ட வீரர்கள். இறக் குந் தறுவாயில் தம் நாட்டிற்காகத் தாம் உயிர் கொடுப்பதை நினைந்து முகமலர்ச்சியுடன் உயிர் துறக் கிறார்கள். முக மலர்ந்து தோன்றும் அவ்வீரர்களின் உடலங்களை பருந்துகளும் கழுகுகளும் உண்கின்றன. விருந்தினரோடும் ஏழைகளோடும் சேர்ந்து உண்ணுங் கால் தம் முகம் மேலும் மேலும் மலர்ச்சி அடையும் மேலோர் போல அவ்வீரர்கள் தோன்றுகிறார்கள் என இதனை ஆசிரியர் கற்பனை வாயிலாக விளக்குகிறார்.

"விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண
மேன்மேலும் முகம்மலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்''
(477)

இக்கற்பனை வாயிலாக வீரர்களின் நாட்டுப் பற்றும் வீரச் சிறப்பும் விளங்குகிறது. மேலும் அது விருந்தினருக்கும் வறியவருக்கும் உணவளித்து ஆதரிப்பதே சான்றாண்மை என்ற நீதியையும் உணர்த்துகின்றது.

பொருகளத்தில் வீரர்கள் குதிரைகளோடு குதிரை களையும், வீரர்களோடு வீரர்களையும் பிடித்து மோதி அடித்தார்கள். அங்ஙனம் அடிக்கும்போது அவற்றி னின்றும் பீறிட்டெழுந்த இரத்தம் வானத்திலும் சிதறித் தெறித்தது. அதனால் வானத்தின் கண் இருந்த கரிய மேகங்கள் சிவந்த மேகங்களாகத் தோற்றமளித்தன.

"ஆடல்து ரங்கம் பிடித்தானை ஆளோ
டடித்துப்பு டைத்தவ்வி ரும்புண்ணினீர்
ஒடித்தெ றிக்கக் கருங்கொண்டல் செங்
[கொண்டல்
ஒக்கின்ற இவ்வாறு காண்மின்களோ''
(485)

போரிடுங்கால் பீறிட்ட இரத்தத்தால் விண்ணி லுள்ள கரிய மேகங்கள் செம்மேகங்களாக மாறின என்ற கற்பனை போரின் கொடுமையை உணர்த்து வதாகும்.

இந்நூலில் வீரச் சுவையும் அச்சச் சுவையும் நிரம்பியிருப்பினும் ஆங்காங்கே நகைச்சுவையும் விரவி இப்பரணியின் சுவையை மிகுவிக்கிறது.

ஒரு மூடப் பேய்க்கு ஒரு கலத்தில் கூழ் ஊற்றப் பெற்றது. அக்கலம் ஓட்டையாய் இருந்ததால் கூழ் வெளிப்பக்கத்தே ஒழுகிற்று. அம் மூடப்பேய் அதைக் கண்டு கலத்தைத் தலை கீழாகத் திருப்பிப் பார்த்தது. இதனால் கூழ் முழுதும் கீழே கொட்டி விட்டது. அதைப் பார்த்து அப்பேய் பாவம், திகைத்து நின்றது!

"பொல்லா ஓட்டைக் கலத்துக்கூழ்
புறத்தே ஒழுக மறித்துப்பார்த்து
எல்லாம் கவிழ்த்துத் திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே!''
(572)

பேயின் மடைமைத் தன்மை நமக்கு நகைப்பூட்டுகிற தன்றோ?

இன்னும் இவை போன்ற இலக்கியப் பண்புகள் நிறையப் பெற்றுக் கலிங்கத்துப் பரணி தலைசிறந்த ஒரு பனுவலாகத் திகழ்கின்றது. கலிங்கத்துப் பரணி யின் அடியொற்றிப் பல பரணி நூல்கள் தோன்றின. தக்கயாகப் பரணி, சூரபதுமன் வதைப் பரணி, அஞ்ஞ வதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி ஆகியவை குறிப்பிடுதற்குரியன. தக்க யாகப் பரணியை ஒட்டக்கூத்தர் பாடினார். இரணிய வதைப் பரணி, சூரபதுமன் வதைப் பரணி ஆகிய வற்றின் ஆசிரியர் பெயர்கள் தெரியவில்லை. முழு அளவில் அந்நூல்கள் கிடைக்கவுமில்லை. அஞ்ஞ வதைப் பரணி, மோகவதைப் பரணி ஆகிய இரண்டும் தத்துவராயரால் பாடப் பெற்றவை. இவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். பாசவதைப் பரணி பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாதர் என்பவரால் இயற்றப் பெற்றது. இப் பரணிகள் அனைத்தினும் கலிங்கத்துப் பரணியே இணை யற்று விளங்குகிறது. அடுத்துத் தக்கயாகப் பரணி சிறந்ததெனக் கூறலாம். ஆனால், புலமை மிக்கோரே அந்நூல் முழுமையும் நன்கு உணர்ந்து சுவைக்க முடி யும். அப்பரணியைப் பாடிய ஒட்டக் கூத்தரே,

"பாடற் பெரும்பரணி கேடற் கருங்கவி கவிச்
[சக்கரவர்த்தி
பரவச் செஞ் சேவகஞ் செய்த சோழன்
திருப்பெயர்''
(குலோத். பிள்ளை).

என்று சயங்கொண்டார் முதற்குலோத்துங்கன் மீது கலிங்கத்துப் பரணி இயற்றியதைச் சிறப்பித்துக் கூறு கிறார். அவர் சயங் கொண்டாரைக் கவிச் சக்கரவர்த்தி என்று பாராட்டியுள்ளார். இதனின்றும் கலிங்கத்துப் பரணியின் பெருமை நன்கு விளங்குவதாகும்.

★

# வஞ்சிக் காண்டம்: ஒரு கண்ணோட்டம்

**ம. ரா. போ. குருசாமி**
தமிழ்ப் பேராசிரியர், பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை-14.

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களாலாகிய ஒரு நூல் என்றுதான் தொன்றுதொட்டுத் தமிழ் மரபு போற்றி வந்துள்ளது. ஆயினும், இந்த நூற்றாண்டின் முன்பகுதியில் பேராசிரியர் பி. டி. சீனிவாச ஐயங்காரவர்கள், மூன்றாவதாக உள்ள வஞ்சிக் காண்டம்பற்றி ஐயத் தடைகள் எழுப்பினார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழர் வரலாறு' என்னும் சிறந்த நூலில் அந்தத் தடைகளை விரிவாகக் காணலாம்.[1] அத்தடைகளைப் பற்றி ஆராய்ந்து நான் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன்.[2] அதையே மீண்டும் இங்கே விரிவாக எடுத்துச் சொல்லாமல், அதே வஞ்சிக் காண்டம் பற்றித் தற்கால அறிஞர் ஒருவர் தெரிவித்துள்ள கருத்துக்களை ஆராய விரும்புகின்றேன்.

முதல் இரு காண்டங்களே சிலப்பதிகாரமாக மூலக் கவிஞரால் எழுதப்பட்டன என்பதும், அவரைப் போலவே நடை முதலியவற்றில் பழகிய பிற்காலத்துப் புலவர் ஒருவர் வஞ்சிக் காண்டத்தை எழுதிச் சேர்த்து விட்டார் என்பதும் செக் நாட்டுத் தமிழறிஞராகிய டாக்டர் கமீல் சுவலபில் தெரிவித்துள்ள கருத்துக்கள். சிலப்பதிகாரக் காவியத்தை அறிந்த உரையாசிரியர்களும் அறிஞர்களும் பல நூற்றாண்டுகளாக இவ் வகையில் ஏமாந்திருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வஞ்சிக் காண்டத்தை இணைப்பதால் காவியத்தின் கட்டுக்கோப்பும் ஒருமையும் (Structure and unity) சிதைவுறுகின்றன என அவர் கருதுகின்றார். வஞ்சிக் காண்டத்துச் செய்திகள் வரலாற்று மரபுக்கு முற்றிலும் இயைந்திருந்தாலும் அழகுணர்ச்சியாலும் கலை நோக்கிலும் மற்றொரு கவிஞரின் படைப்பாகத் தான் இருக்கவேண்டும் என அவர் முடிவு செய்கின்றார்.[3]

வஞ்சிக் காண்டம்பற்றி அவர் தெரிவித்துள்ள ஐயத் தடைகளைச் சுருக்கமாகப் பின்வருமாறு வகுத்துக் கொள்ளலாம்: (1) வஞ்சிக் காண்டம் முழுக் காவியத்தின் கட்டுக் கோப்பினையும் ஒருமையினையும் சிதைக்கிறது; (2) முதலிரு காண்டங்களின் அழகுணர்ச்சி, கலைநோக்கு இவற்றை வைத்து நோக்கினால், வஞ்சிக் காண்டம் வேறொருவரால் எழுதி இணைக்கப் பட்டது என்பது விளங்கும்.

பேராசிரியர் பி. டி. சீனிவாச ஐயங்காரவர்களின் தடைகளைப் பற்றி ஆராய்ந்தபோது, அவ்வாராய்ச்சிக்கு இயைந்த வகையில் டாக்டர் தெ. பொ. மீ., டாக்டர் மு. வ. ஆகியோரின் கருத்துரைகளை எடுத்துக்காட்டிக் காண்டங்கள் மூன்றும் சேர்ந்திருப்பதில்தான் காவி

1. History of the Tamils: pp. 598-606.
2. திரு. சா. கணேசன் அவர்கள் மணிவிழா மலர்
3. All India Writers' Conference Souvenir (1959): p. 44

யத்தின் கட்டுக்கோப்பும் காவியக் கற்பனையின் ஒருமையும் சிதைவுருமல் இருக்கின்றன என்பதைத் தெளிவுறுத்தியுள்ளேன். அந்தக் கருத்துக்களை மீண்டும் இங்கே பாரித்து உரைக்காமல் இரண்டு குறிப்புக்களில் தொகுத்துக் கூறுகிறேன்: (1) இளங் கோவடிகள் கண்ணகி கதையைக் கூறுவதை நோக்க மாகக் கொண்டதோடு கண்ணகி வழிபாட்டை அறி முகப்படுத்தி நிலைநாட்டிப் பரப்பவும் விரும்பினர். முதலிரு காண்டத்தில் கதையும் வஞ்சிக் காண்டத்தில் பத்தினி வழிபாடும் இடம் பெறுகின்றன. (2) தமிழ கத்தின் மூன்று பகுதிகளிலும் நடந்து தன் திருவடி களால் மண்ணை இணைத்த பெருமாட்டியின் கதையைச் சொல்லும்போதே தமிழினத்தின் மனத்தை இணைக்கும் ஒற்றுமையையும் வற்புறுத்த நினைந்தார் இளங்கோவடி கள். ஆதலால், கண்ணகி கதையைக் கருவாகக் கொண்டு, ஒற்றுமைக் காவியத்துக்கு உரிய உருவம் சமைத்தார்.

அழகுணர்ச்சி, கலைநோக்கு இவற்றுல் வஞ்சிக் காண்டம் முதலிரு காண்டங்களிலிருந்து வேறுபடுகிறது என்பது டாக்டர் கமீல் அவர்களின் மற்றொரு கருத் தாகும். குன்றக் குரவை, வாழ்த்துக் காதையின் வரிப் பாடல்கள், மற்றும் முதலிரு காண்டங்களில் கண்ண கியின் திருவடியில் சேரும் பேறு பெருத சிலம்பு மூன்ருவது காண்டத்தில் அப்பெறலரும் பேறு பெறும் காட்சி, மதுரைக் காண்டத்தில் வந்து கோவலன் மாண்பை விளக்கி அவல உணர்வு பெருக உதவிய மாடலன் வஞ்சிக் காண்டத்துள் வந்து கதைத் தொடர்ச்சி அறிவித்த பாங்கு........இன்னேரன்ன வற்றைக் காவிய ஈடுபாட்டோடு கணித்து நோக்கிஞல் அழகுணர்ச்சியும் கலைநோக்கும் வஞ்சிக் காண்டத் திலும் நிறைவுற்றுப் பொலிவதை உணரமுடியும் என்பதில் ஐயமில்லை.

மூன்று காண்டங்களையும் இணைத்துக் கண்டு, அழகிலே உள்ளம் பறிகொடுத்து, கலை நோக்கோடு இணைந்து பேரறிஞர் தெ. பொ. மீ. வரைந்துள்ள கருத்துக்களை ஈண்டு எடுத்துக்காட்டுதல் பொருத்த மாகும்:

"இன்பியல், துன்பியல், வரலாற்று நாடகம் ஆகிய முத்திறத் தொடர்பு பெற்று வளர்ந்துள்ள சிலப்பதிகாரக் காப்பியம் முப்பட்டை தீட்டப்பட்ட தொரு அற்புத மாமணியாக எனக்குத் தோன்றியது. புகார்க் கண்டத்தின் இன்பியல் அகலம், மதுரைக் காண்டத்தின் அவல ஆழம், வஞ்சிக் கண்டத்தின் வரலாற்று நீளம்; இவ்வாறு மூவளவையால் அமைந்தது சிலப்பதிகாரம். கோவலனும் கண்ண கியும் மீண்டும் கூடுகின்ற இன்பியலாக வுள்ளது புகார்க் காண்டம்; கோவலன் கொலையுறும் அவல மாக வுள்ளது மதுரைக் காண்டம்; சேரன் செங்குட்டு வனின் வெற்றிப் பயணமாகிய வரலாருக வுள்ளது வஞ்சிக் காண்டம். இந்த மூன்று காண்டங்களும் தமிழகத்து மும்முடி வேந்தர் நாடுகளையும் பிணைத் துத் தமிழக இடப்பரப்பை நிறைக்கிறது; இட ஒன்றிப்போடு பரவி விரிந்து நான்காம் அளவை யாகிய கால ஒழுங்கொடு ஒழுகிச்சென்று அமை கிறது; கால அமைதியொடு விரிந்தொழுகும் காவியம் ஐந்தாம் அளவையாகிய மனத்தையும் தொட்டு, கண்ணகி மனவளர்ச்சியைக் காட்டும் காவியமாக நிறைகிறது. அகலம், ஆழம், நீளம், இடம், காலம், மனம் ஆகிய ஐந்து அளவைகளையும் இணைத்து நிற்கும் ஒருமை நாயகியாகக் கண்ணகி பொலிவுறுகின்ருள்."[4]

சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களையும் இணைத்துக் காட்டும் இந்தக் கணிப்பிலிருந்து— வஞ்சிக் காண்டத்தைப் பிரிக்க முடியாது என்பதும், அக் காண்டத்திலும் அழகும் கலை நோக்கும் அமைந் துள்ளன என்பதும் உணர்தற்குத் தடை இராது என நம்புவோமாக.

டாக்டர் கமீல் தெரிவித்துள்ள கணிப்பின்படி, "சிலப்பதிகாரத்தின்—அதாவது முதலிரு காண்டங் களின்—தனித் தன்மைகள் நான்காகும். தனித்தன்மை வாய்ந்த இந்த நான்கு கூறுகளும் ஒருங்கிணைந்து தமிழ்ப் பண்பாட்டின் முழு உரத்தையும் அழகையும் எடுத்துக் காட்டிச் சிலப்பதிகாரத்தை நிறை மாண் புடைய தாக்குகின்றன. உலகம் முழுவதிலுமுள்ள இன்றைய மனிதனுக்கும் உயிரூட்டம் சான்ற முக்கியம் உடையதாக அது பொலிகின்றது. சிலப்பதிகாரத்தின் தலைமைசான்ற கூறுகள் நான்கும் வருமாறு: (1) குடி மக்கள் காப்பியமாக விளங்கும் அடிப்படைச் சிறப்பு, (2) மனித இனநலக் கோட்பாடு, (3) உருவச் செம்மை சான்ற முறையில் நாடகப் பாணியில் கதை நடத்திச் செல்லும் பாங்கு, (4) காவியம், உணர்ச்சிப் பாங்கான தனி இசைப் பாடல்கள் இரண்டையும் இணையற்ற தொரு முறையில் இணைத்துச் செல்லும் பாங்கு."[5]

வஞ்சிக் காண்டம் யாரோ ஒரு செங்குட்டுவன் என்னும் மன்னனின் கதை என்று வறிதே கற்பித்துக் கொள்ளாமல், குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ண கிக்குச் சிறப்புச் செய்யும் தொண்டனின் திருப்பணி யையே வஞ்சிக்காண்டம் பேசுகிறது என்று எண்ணிப் பார்த்தால் வஞ்சிக் காண்டமும் ஏனைய இரு காண்டங் களைப் போலவே குடிமக்கள் பாங்கிலே நிற்பதை உணர லாம். முதல் இருகாண்டங்களில் மன்னர்கள் பெறும் சூழ லுக்கும் வஞ்சிக்காண்டத்தில் மன்னனை நாம் காணும் சூழலுக்கும் வேற்றுமை உண்டு. புகார்க் காண்டத்தில் அரங்கேற்று காதையில் ஒருவாறு சோழனை அறிகிரும்; மதுரைக் காண்டத்தில் பாண்டியனைப் பற்றிக் கேள்விப் படுவதோடு நேரிலும் காணுகின்ருேம். சோழமன்னன்

4. The Pageant of Tamil Literature (1966)-p 21
5. The All India Writers' Conference Souvenir —pp. 44-45

மாதவிக்குச் சிறப்புச் செய்வதோடு சுவடு தெரியாமல் மறைகிருன் ; பாண்டிய மன்னன் கோவலனைக் கொல் வித்ததன் வாயிலாகக் கண்ணகியின் வாழ்விலே அழியாச் சுவடு ஆழப் பதியும் வண்ணம் தவறிழைத்து, தன் பிழைக்குத் தானே பலியாகிருன் ; சேர மன்னன் கண்ணகிக்குக் கடவுண்மங்கலம் செய்வதற்காக நெடும் பயணம் செய்து, போர் புரிந்து, கல்லெடுத்து வந்து கோயிலெழுப்புகிருன். மறைவாகவோ, நேராகவோ, ஆரவாரமாகவோ மன்னர்கள் சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிருர்கள் ; என்ருலும், அவர்களில் எவருக்கும் தலைமை தருகின்ற வகையில் காப்பியத்தை அமைக்கவே யில்லை. மூவேந்தர்களும் சிலப்பதிகாரத்தின் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்தனர் என்பது உண்மை; ஆனல், அந்த நிகழ்ச்சிகள் கண்ணகியின் வாழ்க்கைக்கதையையும் அவளுடைய தெய்வீக மாண் பையும் வளர்க்கப்பயன்பட்டனவேயல்லாமல் மன்னர் குல மாண்பை வலியுறுத்திச் சிறப்பிக்கப் பயன்பட வில்லை. வஞ்சிக்காண்டத்தில் வரும் செங்குட்டுவன் கூடக் கண்ணகித் தெய்வத்தின் தொண்டனுகவே காணப்படுகிருன்.

### மன்னர் வழி மாண்பைப் பாடவில்லை

புகார்க் காண்டத்தில் வரும் மன்னன், காவியம் கற்போரின் நெஞ்சில் ஆழப் பதியும் வண்ணம் நெடிது நிற்பவனுகப் புலப்படத் தோன்றவில்லை ; மதுரைக் காண்டத்தில் வரும் மன்னன் தலைமையானதொரு நிகழ்ச்சிக்குக் காரணனுகிருன் ; அவன் இருக்கும் இடந் தேடிக் காவியத் தலைவியே போக நேரிடுகிறது. ஆனல், அவள் தோற்றமே அவனைத் தோற்கச் செய்கிறது. மதுரைக் காண்டத்தில் வீறிய சிறப்பொடு விளங்குதற்குரிய பாத்திரமாகக் கண்ணகிக்கே இடங் கொடுத்து ஒதுங்க வேண்டியவனுகிருன் பாண்டிய மன்னன். வஞ்சிக் காண்டத்திலோ—கதைத் தலைவியே இல்லாத நிலையிலும்— கண்ணகியை வலிய நாடிச் சேரமன்னன் அவளுக்குக் கோயிலெடுக்கிருன். அவளைத் தெய்வவுருவில் கண்டு வணங்கும் அடியவனுகிருன். ஆம், மூன்று காண்டங்களும் மன்னர்வழி மாண்பைப் பாடவில்லை ; குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகி யையே சிறப்பிக்கின்றன ; அவற்றுள்ளும் குறிப்பாக வஞ்சிக் காண்டம் குடிமக்களுள் ஒருத்தியாம் கண்ண கியின் தொண்டனுக முடிமன்னனை நிறுத்திக் காட்டு கிறது.

கண்ணகியின் வாழ்க்கை மூவேந்தருக்கும் நெறி விளக்கிய வாழ்க்கையாக அமைந்ததைச் சிலப்பதி காரம் தெரிவிக்கும் கருத்தினை இங்கு நினைவுகூர்தல் நலமாகும் :

அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழுது ஏத்தும் பத்தினி யாகலின்
ஆர்புனை சென்னி அரசற்கு அளித்துச்
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலங் காவல் மன்னவற்கு அளித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவற்கு அளித்து.........

—நடுகற் காதை : 207-217

ஆளும் மன்னவர்கட்கு அரும்பெறல் உண்மைகளை உணரும் வாய்ப்பினை அளித்தவளாகக் கண்ணகியை மேம்படுத்தும் இந்த வரிகள் மன்னரை ‘இறக்கியே’ வைத்துள்ளன என்பதை உணர்தல் வேண்டும். முடியாட்சிக் காலத்தில்—கடவுளராகவே காவலர்கள் கருதப்பட்ட காலத்தில்—குடிமக்களுள் ஒருத்தியை அவரினும் மேம்பட்டவளாகக் காட்டிய புரட்சி சிலப் பதிகாரத்தால் நிகழ்த்தப்பட்டது. முதலிரு காண்டங் களுக்கும் பொருந்துவதாக டாக்டர் கமீல் காணுகின்ற உண்மை, மூன்ரும் காண்டத்துக்கு மேலும் சிறப்பாகப் பொருந்துகின்றது. சேர மன்னனின் வீரமெல்லாம்,

‘வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பின்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆக’

எனக் கண்ணகிக்குக் கல்லெடுப்பதற்கான வஞ்சினம் கூறவும், அவ்வஞ்சினத்தை நிறைவேற்றுதற்குமே பயன்படுகின்ற தென்பதை உணர்தல் வேண்டும்.

மேலும், தமிழக மன்னர்கள் மட்டு மன்றிப் பல அயல் நாட்டு மன்னர்களும் கண்ணகித் தெய்வத்திடம் வரம் கேட்கின்றனர். அயல் நாட்டு மன்னர்களும் தங்கள் நாட்டுக்குக் கண்ணகி எழுந்தருள வேண்டு மென வரம் கேட்டுப் பெறுவதை வஞ்சிக் காண்டமே புலப்படுத்துகின்றது. இச் செய்தியாலும் மன்னர்கள் இரண்டாம் நிலையே பெறுவதை உணரலாம்.

“சோழன் கரிகாலன் வருகிருன். ஆனல் அவனு டைய கதை அன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட் டில் போர் புரிகின்ருன். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்ருன். ஆனல் அவன் கதையும் அன்று. முரசு முழங்கு தானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதை யாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை. குடிமக்களில் ஒருவர் கதை; அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்ருே சிலப்பதிகாரம். கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம். இது நாம் வேறு எங்கும் காணுத ஒரு வியப்பு. முடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகப் பிற

நாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகத் தமிழ் நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடம் உண்டு. பாட்டாளி யுலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆராய்ச்சியர் குரவை வேட்டுவ வரி என்று பாட்டாளிகளைப் பாடுவதில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்கு தானை முடிமக்கள் மூவரும் தமிழ் நாட்டின் ஒருமைப்பாட்டினைச் சிதைத்து வந்தனர். குடிமக்கள் வழியாகவே தமிழ் நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள். சோழ நாட்டில் பிறக்கிறாள் கண்ணகி; பாண்டி நாட்டில் கணவனை இழக்கின்றாள்; சேர நாட்டில் தெய்வமாகின்றாள். மூவரசர் பேராசையால் முப்பெருந் துண்டாய் வெட்டுண்டு கிடக்கும் தமிழன்னை கண்ணகியின் வாழ்க்கை வழியே ஒருருவாய் உயிர்பெற்று விளங்குகிறாள்.'' டாக்டர் தெ. பொ. மீ. யின் இந்தத் தெளிவுரையினை[6] டாக்டர் கமீல் அவர்களின் சிந்தனைக்கு விருந்தாக்கி அமைவோமாக.

வஞ்சிக் காண்டமும் ஏனை இரு காண்டங்கள் போலவே குடிமக்கள் பாங்கில் நிற்பதை உணர இனித் தடை இருத்தல் இயலாது.

### மனித இன நல நாட்டம்

மனித இன நல நாட்டம் முதல் இரு காண்டங்களின் சிறப்புக் கூருக டாக்டர் கமீல் குறிப்பிடுகிறார். எவ்வாறு என்பதை அவர் விளக்கவில்லை. ஆயின், மனித இன நலத்தின் நாட்டத்தைச் சாதாரண மக்களின் நன்மைகளை வற்புறுத்துவனவாகப் புகார்க் காண்டமும் மதுரைக் காண்டமும் அமைந்துள்ளன வென்றால்—சாதாரண மக்களின் வாழ்க்கையமைதிகளை சித்தரிக்கின்றனவென்றால்—அதே பாங்கு மூன்றாவது வஞ்சிக் காண்டத்திலும் காணலாம் என்பதில் தடை இல்லை. மலைவாழ் குறவர்களின் வாழ்க்கையைப் பாடு முறையிலும், அவர்களின் குரவைப் பாடலை வாழ வைத்த பாங்கிலும் இதனை நன்கு உணரலாம். பெரும் படையுடன் வடநாடு நோக்கிப் பாய்ந்துசெல்லும் செங்குட்டுவனிடம்,

> ......................வான்பே ரிமய
> நிலயத் தேகுதல் நின்கருத் தாகலின்
> அருமறை யந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
> பெருநில மன்ன பேணல்நின் கடன்

என்று முனிவர் சிலர் விடுக்கும் வேண்டுகோளை வஞ்சிக் காண்டத்துக் கால்கோட்காதை புலப்படுத்துகின்றது. போர் வெறியிலே தவநெறியினர் என்று உணராக் கொலைவெறி மீதூர்ந்துவிடாவண்ணம் தடுக்கும் இக் குறிப்பு மனித நல நாட்டம் உடையதன்றோ? இந்தக் குறிப்பினை மறந்துவிடாமல் போர் வெற்றியுற்ற நேரத்திலும்

> வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர்
> தடவுத்தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை
> காற்றூ தாளரைப் போற்றிக் காமின்

எனத் தன் தூதுவர்க்குச் செங்குட்டுவன் கட்டளை இட்டான். இதனையும் அதே கால்கோட் காதை அறிவிக்கின்றது. எனவே, வஞ்சிக் காண்டமும் மனித இனநல நாட்டத்தை மறப்பதில்லை என்பதை உணரலாம்.

உருவச் செம்மை சான்ற முறையில் நாடகப் பாணியில் கதை நடத்திச் செல்லும் பாங்கு[7] முதலிரு காண்டங்களாகிய சிலப்பதிகாரத்தில் பொலிவுறுகின்றதை டாக்டர் கமீல் சுட்டிக் காட்டியுள்ளார். முதலிரு காண்டங்களின் அமைப்பினையே மூன்றாவது காண்டமும் பெற்றிருக்கின்றது. அதே நாடகப் பாணி மூன்றாவது காண்டத்திலும் அமைந்துள்ளது என்பதில் தடை இல்லை. மேலும், முதலிரு காண்டங்களில் மட்டுமே உள்ளதாக டாக்டர் கமீல் காணுகின்ற உருவச் செம்மை வஞ்சிக் காண்டத்தைச் சேர்த்துப் பார்த்தாலன்றி நிறைவுறாது. வஞ்சிக் காண்டம் இல்லாத சிலப்பதிகாரம் கண்ணகியின் தவ வாழ்க்கைக்குரிய முழுநிறை வடிவத்தைப் பெறுதல் இயலாது. வாழ்வாங்கு வாழ்வோர் தெய்வத்துள் வைக்கப் படுதலைப் புலப்படுத்தி, உலகிற்கு ஓங்கிய திருமாமணியாகக் கண்ணகியைக் காட்டுவது வஞ்சிக் காண்டமே யாதலால், அதனையும் சேர்த்துப் பார்க்கும்போது தான் உருவச் செம்மை நிறைவுறுகின்றது என்பதை உணரலாம்.

"காவியம், உணர்ச்சிப் பாங்கான தனி இசைப் பாடல்கள் ஆகிய இரண்டையும் இணையற்றதொரு முறையில் இணைத்துச் செல்லும் பாங்கு''[8] முதலிரு காண்டங்களாகிய சிலப்பதிகாரத்தின் தனிக்கூறு என்கிறார் டாக்டர் கமீல். காவிய இலக்கண இலக்கிய மரபுவழியில் வஞ்சிக் காண்டமும் காவிய நெறிக்குச் சற்றும் முரண்படவில்லை யென்பது சான்றோர் கருத்தாகும். உணர்ச்சி முறுக்கேறிய—இசைப்பாங்கு அமைந்த பாடல்கள் முதலிரு காண்டம் போலவே வஞ்சிக் காண்டத்திலும் உண்டு. ஏதோ ஒரு காரணம் பற்றி வஞ்சிக் காண்டத்தைப் பின்னிணைப்பாக முதலிலேயே நினைத்துவிட்டதால் எழுகின்ற தடைகளே டாக்டர் கமீலின் தடைகள். "செங்குட்டுவனின் வெற்றாரவாரமான போர் வெற்றியை நுழைத்து,

6 குடிமக்கள் காப்பியம் (1961) பக்-12-13

7. "the dramatic presentation of the story told in a perfection of form."

8. "an unique blend of the epical and lyrical element."

முதலிரு காண்டத்தின் உருவச் செம்மையையும் ஒருமை நலத்தையும் சிதைக்கக் கவிஞர் மனம் எப்படி முன் வரும்''[9] என்ற தடையை முதலில் எழுப்பிக் கொண்ட தால் விளைந்த கோளாறே தேவையில்லாத தடைகளை எழுப்பின. காப்பிய உருவச் செம்மைக்கும் கதைப் பாங்கின் ஒருமையுணர்வுக்கும் மூன்று காண்டங் களையும் இணைத்துத்தான் காணவேண்டும் என்ற உணர்வோடு காப்பியத்தைக் கற்ருல், வஞ்சிக் காண்டம் பிற்காலத்து ஒட்டிய பின்னிணைப்பு[10] என்று தோன்ருது.

மொழியமைப்பாலும் நடையமைப்பாலும் முதலிரு காண்டங்கள் போலவே வஞ்சிக் காண்டமும் அமைந் திருக்கிறது என்பதை டாக்டர் கமீல் உணர்ந்திருக் கிருர்; உணர்ந்ததை அவர் மறக்கவுமில்லை. வஞ்சிக் காண்டம்பற்றி எப்படியோ ஒரு தவருன கருத்து முதலி லேயே ஏற்பட்டுவிட்டதால், வஞ்சிக் காண்டத்தின் சொல்லமைப்பும் நடையும் முன் காண்டங்களின் 'போலி' என்று அவர் நினைத்தார்.[11] காப்பியத்தின் கருவுக்கும் உருவுக்கும் வஞ்சிக் காண்டமும் இன்றி யமையாததே என்று உணர்ந்து கொண்டால் முன் காண்டங்களைப் போலவே அமைத்த 'போலி' என்ற கருத்து மாறும்; மூன்றையும் எழுதியவர் ஒருவரே என்ற எண்ணம் மனத்திலே சேரும்.

டாக்டர் கமீல் முதலிரு காண்டங்களே சிலப் பதிகாரம் என்று கருதி, அச் சிலப்பதிகாரத்தின் தனிக் கூறுகள் நான்கு எனக் குறித்திருக்கிருர்; அதே கூறுகள் வஞ்சிக் காண்டத்திலும் உண்டு என்பதையும் வஞ்சிக் காண்டம் பிற்காலத்து இணைத்த பிற்சேர்க்கை என்று கருதுவது தவறு என்பதையும் இதுகாறும் கண்டோம்.

**வேறு சில காரணங்கள்**

வேறு சில காரணங்களாலும் வஞ்சிக் காண்டம் இன்றியமையாதது எனவும், காவிய அமைப்புக்கு எழிலும் ஏற்றமும் சேர்ப்பது எனவும் உணரலாம்.

தொல்காப்பியப் புறத்திணையியலில் வீரர்க்குச் சிறப்புச் செய்தலை விளக்க விதி உண்டு; நடுகல் மரபினை அச்சூத்திரம் வலியுறுத்துகின்றது :

> காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்
> —தொல். புறத். 5

என்ற சூத்திரப் பகுதியால் வீரர்க்குச் சிறப்புச் செய்யக் கல் நாட்டிய மரபினை உணர்கின்ரேம். பண்டை இலக்கியங்களிலும் இம் மரபுக்குரிய சான்றுகள் உண்டு.[12] ஆடவர்தம் வீரச் சிறப்புக்கு இங்ஙனம் இடம் தந்த பண்டை இலக்கிய மரபிலே பெண்டிர்தம் வீரச் சிறப்பினை விளக்க மூதின்முல்லை என்ரெரு புறத் துறை வகுத்தது உண்மை; ஏனினும், வீராங்கனை யர்க்கும் நடுகற் சிறப்பு வழங்குதல் வேண்டும் என்ற புது மரபினை முதன்முதல் இலக்கியத்திலும் இயக்கத் திலும் நிறுவிக் காட்டிய தனிப் பெருமை சிலப்பதிகாரத் துக்கே உரியது. நடுகல் விழாக் குறித்த தொல் காப்பியச் சூத்திரத்தின் தொடர்களையே வஞ்சிக் காண்டத்துக் காதைகளின் பெயராக அமைத்திருப் பதும் இங்கு நினைவுகூரத் தக்கது. அந்தப் புதுமரபு இடம் பெறுவது வஞ்சிக் காண்டத்திலேதான் என்பது தெளிவு.

சங்க மருவிய காலத்துத் தோன்றிய இக்காவியம் பெறலரும் புலனெறியினைப் போற்றிய அவ்விலக்கிய மரபினைப் புறக்கணிக்கவில்லை; புறக்கணித்தல் இய லாது. ஐந்திணை என்று பகுக்கப்பட்ட ஐவகை நிலங் களிலும் வாழும் மக்களின் வாழ்வினை யாதானுமொரு வகையில் தம் காப்பியத்துள் இடம் பெறச் செய்தல் வேண்டும் என்பது இளங்கோ வடிகளின் உள்ளக் குறிப்பாகும். "இந்திர விழவூரெடுத்த காதை, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும் பகுதிகளில் முறையே மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி என்னும் திணைகட்குரிய விழா, பாட்டு, கூத்து என்பவற்றில் ஒன்றும் பலவும் வந் துள்ளன.''[13] இவற்றுள் மருதமும் நெய்தலும் புகார்க் காண்டத்தில் இடம் பெறுகின்றன; பாலையும் முல்லையும் மதுரைக் காண்டத்தில் இடம் பெறுகின்றன. எஞ்சி யுள்ள குறிஞ்சிக்கு இடம் வஞ்சிக் காண்டத்துள் வகுக்கப்பட்டுள்ளது. வஞ்சிக் காண்டத்தை நீக்கினுல், குறிஞ்சி ஒன்று மட்டுமே இடம் பெருக் குறை நிலவும்; குன்றக் குரவையைத் தன்னகத்தே கொண்ட வஞ்சிக் காண்டம் இருப்பதால் நிறைவும் செறிவும் பெறுகின்றது சிலப்பதிகாரம்.

ஐவகை நில மக்களின் விழாவும் வரியும் கூத்தும் போற்றியது போலவே, பொருளிலக்கண மரபினையும் சிலப்பதிகார ஆசிரியர் போற்றியுள்ளார். அகப்பொருள் நெறியினைக் காப்பியத் தலைவியின் வாழ்விலேஅமைத்து விளக்கக் கதையும் இடம் தராது; புலனெறி வழக்கமும் இடம் தராது. ஆயின், அம்மரபினை இடம் பெறச் செய்தலில் கருத்தூன்றிய இளங்கோவடிகள் கானல்

9. "......how could a poet who composed the first two books of the epic break the structure and unity of the poem by introducing the vague and vain pomp of Senguttuvan's wars ?"

10. "a later appendix".

11. "......written no doubt in clever imitation of the orginal poet's language and style."

12. எடுத்துக் காட்டாக—புறம். 265, 329; குறள் 771.

13. சிலப்பதிகாரம் : நாவலர் ந.மு.வே. நாட்டார் உரைப்பதிப்பு (நான்காம் பதிப்பு) முகவுரை பக்-18

வரியில் அகத்திணைப் பகுதிகளை அமைத்தார். அவ்வாறே புறத்திணைப் பகுதிகளை வஞ்சிக் காண்டத்துக் கால்கோட் காதையில் அமைத்துள்ளார். "இளங்கோவடிகள், பழைய இலக்கிய மரபை நன்கு உணர்ந்தவர் ஆகையால், காவியத்தின் இடையிடையே அகப்பொருட் பகுதிகளும் புறப்பொருட் பகுதிகளும் அமைத்துத் தந்துள்ளார். தோழி தலைவி முன்னின்று வரைவு கடாதல், கழற்றெதிர்மறை, தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் கூறியது, தலைவன் பாங்கன் கேட்ப உற்றதுரைத்தல், பொய் பாராட்டல் முதலிய பல அகத்திணைப் பகுதிகள் கானல்வரியில் அமைந்திருக்கின்றன. கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி, மகட்பாற் காஞ்சி, எதிருன்றியகாஞ்சி குடைநிலை வஞ்சி, கொற்ற வஞ்சி, மாராய வஞ்சி, பெருஞ்சோற்று வஞ்சி, கொற்ற வள்ளை, கள வேள்வி முதலிய புறத்திணைப் பகுதிகள் கால்கோட் காதையுள் குறிப்பிடப்படுகின்றன. கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து முதலியனவும் பழைய புறத்திணை மரபை ஒட்டி அமைந்தவைகளே."[14] இவ்வாறு டாக்டர் மு. வ. தந்துள்ள விளக்கம் நம் நாட்டத்திற்கு உரியது. தமிழர்க்கே யுரிய பொருளிலக்கண மரபில் புறத்துறைகளைச் சிறப்பு வகையில் புலப்படுத்துவது மூன்றாவது வஞ்சிக் காண்டமே யாகும்.

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 'இளங்கோ புகுத்திய புதுமை' என்ற கட்டுரை ஒன்று இவண் நினைவூட்டத் தக்கதாகும். அக்கட்டுரையின் சுருக்கத்துள் பின் வரும் பகுதி காண்க: "இன்பக் காண்டம் புகார், துன்பக் காண்டம் மதுரை, தெய்வக் காண்டம் வஞ்சி; இன்பமும் துன்பமும் நிலைத்தவை அல்ல; இதைச் சுட்டவே புகாரையும் மதுரையையும் கடலாலும் எரியாலும் அழியும்படி அமைத்தார். தெய்வத் திருவருள் நிலைக்கும்; வஞ்சி நிலைக்கின்றது. காண்டங்களின் பொருண்மை மங்கல வாழ்த்தில் அமைதல்; திங்கள், ஞாயிறு, மழை-மூன்றையும் போற்றுகிறார். திங்கள் இன்ப வாழ்வு; ஞாயிறு துன்ப வாழ்வு; மழை தெய்வத் திருவருள்"[15] மூன்று காண்டத்தையும் இணைத்து நோக்குமிடத்து இத்தகைய கனிவு சான்ற நயங்கள் தோன்றுகின்றன என்பதைத் திரு. சொக்கலிங்கம் அவர்களின் கட்டுரை தெளிவுறுத்துகின்றது.

புகார்க் காண்டத்தில் மானிட மாதாகக் காட்சி தரும் கண்ணகி, வஞ்சிக் காண்டத்தில் தெய்வமாகக் காட்சி தருவதாகச் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. வையத்து வாழ்வாங்கு வாழும் மாண்புடையோர்—இம்மையுலகத்து இசையொடு விளங்குவோர் மறுமையில் தெய்வமாய்ப் பொலிவர் என்பதைச் சிலப்பதிகாரம் புலப்படுத்துகின்றது. இந்நுட்பக் கருத்தினை நிகழ்ச்சி வாயிலாகக் காட்டுவதோடு, வேறொரு வகையாலும் இளங்கோவடிகள் காட்டியுள்ளார். கண்ணகியின் வாழ்வியல் மாண்பு வரவர மேனிலை எய்திக் கொடுமுடியாம் முடிநிலையில் நிறைவுற்றது. கடற்கரைப் புகார்க் கண்ணகியை இறுதியில் குன்றின்மேல் நிறுத்திவைத்து—அதன் மேலும் வானிலே ஒளிரச் செய்து காவியத்தை இளங்கோவடிகள் முடிக்கிறார். இவ்வரிய நுட்பம் வஞ்சிக் காண்டத்தை நீக்கினால் புலப்பட்டொளிராது போகுமன்றோ?

சுருங்கச் சொன்னால், மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி விண்ணக மாதர்க்கு விருந்தாகிய கதை நிறைவுற—வழிபாட்டுணர்வோடு எழுதிய அடிகளின் அன்புக் கலைக் காணிக்கை நிறைவுற—தமிழினத்தின் ஒற்றுமையையும் உரிமையையும் நிலை நாட்டும் உருவச் செம்மை நிறைவுற வஞ்சிக் காண்டம் இன்றியமையாதது என்பது திண்ணம்; முதலிரு காண்டங்களை எழுதியவர் யாரோ அவரே வஞ்சிக் காண்டத்தையும் எழுதினார் என்பதும் உறுதி.

14. 'காலந்தோறும் தமிழ்' - இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்குக் கட்டுரை—பக். 10.

15. II International conference - Seminar of Tamil Studies (1968) Abstract of Papers — 'இளங்கோ, புகுத்திய புதுமை' திரு. தி. அ. சொக்கலிங்கம், செங்கோட்டை.

# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

ஒ. கே. சுப்பராயலு
(செயலாளர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம்)

இளமையின் துடிப்பு, செயல் திறனிலே நம்பிக்கை, எடுத்த காரியத்தினை ஏற்றமுற முடிக்கும் திடமனம், இவை அனைத்தையும் ஊக்குவித்து உயர் பணியினை உருவாக்கும் அறிவாற்றல்—இவைகள் தான் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்குமுன் தோன்றி இன்று புகழ்படப் பாரதத்தின் மேலைத் தலைவாயிலிலே பாங்குற வளர்ந்துள்ள பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் அடிப்படை.

தமிழினத்தின் உள்ளத்திலேயே—ஏன்?—தோற்றுவாயிலேயே ஒன்றி வளர்ந்து வந்த கலையார்வம், மொழியார்வம், சிறியதோர் பகுதியினராகப் பம்பாயில் வாழ்ந்த அந்த காலத்திலே, பல்கி வளரத் தொடங்கியது. தன் கலைத் திறனால், பெருமைப் பண்பாட்டினால், அடுத்து வாழும் அனைவரையும் அணைத்துச் செல்லும் தலையாய குண நலனினால் அமைந்த சிறப்பு இந்தக் கலை, - இலக்கியப் பணிக்குக் கைகொடுத்து உதவியது.

தென்னகப் பண்பாடு நிறைந்த பலப்பல கலை நிகழ்ச்சிகளை, கல்வி நிலயங்களை, இறை பணிகளை அன்று வளர்ந்து நின்ற பல தென்னகச் சமூக அமைப்புக்கள் அடக்கமாக, அழகாகச் செய்து வந்தன. இந்த நிலையில் தாய் மொழியில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள் சிலர் தமிழ் மொழியின் சிறப்பினைப் பம்பாய் வாழ் மக்களிடை எடுத்துக் காட்டவும், தமிழகப் பகுதியோடு தொடர்பு இல்லாத மாணவ, மாணவிகளுக்கு தமிழ் மொழியினை உணர்த்தவுமான தேவைகளை உணர்ந்து அதற்கான ஆக்கப் பணியினைத் தொடங்க விரும்பினர். இந்த எண்ணத்தினை உருவாக்க உதவுமாப்போலே செயலாற்ற முன்வந்தது, செயல் திறன் நிறைந்த இளைஞர் குழாம் ஒன்று.

செயலும், சிந்தையும் ஒன்றுபட்ட நிலையிலே 1940 ஆம் ஆண்டு, தமிழகப் பெருமக்களின் ஆசியோடு, பம்பாய் வாழ் தென்னக மக்களின் ஆதரவோடு தொடங்கியது சங்கப்பணி.

முதல் நான்கு ஆண்டுகள் தளர் நடை நடந்து வந்த சங்கம் 1944 முதல் திட்டவட்டமான செயல் முறைகளைத் தொடங்கியது.

### தமிழ் மலர்

தமிழிலக்கிய உயர்வுகளைத் தமிழ்க் கலைகளின் வளமைகளைப் பேச்சு மூலமாகப் பிறரிடம் எடுத்துக் கூறவும், பம்பாய்த் தமிழ் மக்களிடையே எழுத்தாற்றலை வளர்க்கவுமாக வாரந்தோறும் சொற்பொழிவுகளும், வாராந்தரக் கூட்டங்களும். "தமிழ் மலர்" என்ற கையெழுத்து மாதமலர் ஒன்றும் சங்கம் தொடங்கியது.

அன்று தொடங்கிய வாராந்தரக் கூட்டங்கள், பல்வேறு தலைப்புக்களில் பலப்பல பொருள்கள் பற்றி அமைந்த பேச்சுக்கள், பேச்சுக் கலையை வளர்த்து, சென்ற 25 ஆண்டுகளிலே சிறந்த தமிழ் பேச்சாளர்களைத் தயாரித்து உதவியது என்பதை எண்ணி மகிழ்கிறோம்.

"தோன்றில் புகழொடு தோன்றுக"

என்ற சொல்லினை ஒட்டித் தோன்றுமாப் போலே, சங்கத்தின் திட்டவட்டமான செயலாக்கத்தின் முதற்

படியாக அமைந்தது, அன்று அமரர் கல்கி கண்ட பாரதி மணிமண்டபப் பணி.

அந்தத் தமிழக நல்வாழ்வுச் சிற்பியின் புகழ் பரப்பும் உயர் பணியிலே பங்கு கொண்டதே சங்கப் பொதுப்பணியின் முதற்பணி. அந்தப் பணியில் சங்கம் கொண்ட பங்கு, அதனைச் சிறப்புச் செய்ய பம்பாய்த் தென்னிந்திய சமூகம் நீட்டிய அன்புக் கரம் என்றும் பசுமையாக நினைவு கூரத் தக்கது.

அன்று அமரர் கல்கி முதலாக இன்றுவரை தமிழகம் கண்ட அறிஞர் பெரு மக்கள் வரை அனைவரின் அறிவுரைகளும் அன்பாசிகளும் சங்கத்தின் கலை—இலக்கியத் தொண்டு வளரத் துணை நின்றன எனப் பெருமை கொள்கிறோம்.

எத்துணைப் பிறவி எடுப்பினும் தமிழ் வளரப் பணியாற்றுவதே தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையரின் தமிழ்ப் பணியும் அவர்களின் அமர சாதனையும் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க ஆதர்சமாக அமைந்தன என்பதை இந்த நிலையிலே கூற விரும்புகிறோம்.

### போட்டித் திட்டங்கள்

சங்கம் தொடங்கிய சில ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தத் தமிழ்ப் பெருமக்களின் பெயர் கூறி மாணவ, மாணவிகளுக்குத் தமிழ் வளர்க்கும் பரிசுத் திட்டத்தினைச் சங்கம் உருவாக்கியது. இத்திட்டம் மேலும் விரிவடைந்து கவியரசர் பாரதியின் பெயரையும் இணைத்துத் தமிழ்ப்பேச்சு, கட்டுரைப் போட்டித் திட்டங்களாக இன்று சங்கத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த திட்டத்தின் பயனாக இன்று தமிழக அறிஞர்களும் வியக்கும் வண்ணம் மாணவ மாணவிகளின் தமிழ்ப்பற்று நல்ல முறையில் வளர்ந்து நிற்பது சங்கத்தின் சிறந்த சாதனைகளில் ஒன்று.

தமிழ் நூல்களில் ஆக்கப்பணியும் செயலாற்றும் திறனும் கொண்ட சங்கம், தன் மாத இதழாகிய "சங்கச் செய்தி" வெளியீட்டோடு வ. உ. சி. மலர், "கவிச்சக்கர வர்த்தி" "அருணோதயம்" நாடக நூல், "அணுவைப்பற்றி" என்ற தமிழ் விஞ்ஞான நூல் மற்றும் பல்வேறு நாடக, இலக்கிய மலர்களை தமிழ் அன்னையின் பாத கமலங்களில் அர்ப்பணித்தது. தமிழ்ப் பணியில் முன்னின்ற உ. வே. சா. உருவப் படத் திறப்போடு தொடங்கி, பாரதி, இராஜாஜி போன்ற பல தமிழறிஞர்களின் உருவப் படங்களையும் திறந்து வைத்ததன் காரணமாக அவர்கள் தமிழக இலக்கிய, அரசியல் பணியின் ஆக்கத்தினை பம்பாய் வாழ் தமிழர் அனைவரும் உணர முடிந்ததென்றால் அது மிகையல்ல.

### வித்வான் வகுப்புக்கள்

தமிழின் இலக்கியத் திறனாய்வுகளை முறையாக உணரும் வண்ணம் அவ்வப்போது பெரிய புராணம், சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பன் கலை போன்ற நூல்களின் வகுப்புக்களும் அண்மையில் தொடங்கி நடைபெறும் வித்வான் வகுப்புக்களும் சங்கப் பணியின் மற்றுமோர் சிறப்பு அம்சமாகும்.

பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை வளர்க்க பம்பாய் உயர்நிலைப் பள்ளிகளில் 10-வது படிவம் பயிலும் மாணவ மாணவிகளில் தமிழில் முதலாவதாகத் தேர்வு எண் பெறுபவர்களுக்கு உபகாரச் சம்பளதிட்டம் ஒன்றைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

பம்பாய் நகரில் பல்கிப் பெருகும் தமிழ் மக்களின் அளவிற்கேற்ப, சங்க நூலகமும் பலப்பலவான நூல்களைத் தன்னுள் கொண்டுள்ளது. நூலகம் மேலும் வளரும் திட்டங்களையும் சங்கம் மேற்கொண்டுள்ளது.

### நாடகத்துறை

தமிழிலக்கிய வளர்ச்சியையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் உளம் கொண்டு தோன்றிய சங்கம் விரைவிலேயே, தமிழ்க் கலைத்துறைப் பணியையும் மேற்கொள்ளும் அளவிற்கு விரிவடைந்தது. இவ்வகையில் முத்தமிழ்த் துறையில் ஒன்றான நாடகத் துறையிலே நாட்டம் செலுத்த முற்பட்டது. முதன் முதலாக சங்க அங்கத்தினர்கள் நடத்திய "அந்தமான் கைதி" இந்த ஆர்வத்திற்கு வித்திட்டது. இதனை அடுத்து சங்க அன்பர்கள் நடத்திய "குமாஸ்தாவின் பெண்," "மனிதன்," "இன்ஸ்பெக்டர்," "உடையவர்" "நாலு வேலி நிலம்," "போலீஸ்காரன் மகள்," "தமிழ்ச் செல்வம்," "தில்லை நாயகம்," "செயலாளர் வேத ராமன்," "டாக்டருக்கு மருந்து," ஆகியவற்றோடு, சங்கப் பெண் அங்கத்தினர்கள் பங்கு கொண்ட "காதலா, கடமையா," "அழகு மயக்கம்," "பறக்கும் தட்டு," "பூவா தலையா" "திடீர் திருமணம்," "நான் கண்ட அகலிகை," "ஆண்டாள்," "கப்சிப் கல்யாணி," "ஆசைக்கொரு பெண்," "சங்கோஜி" போன்ற நாடக நிகழ்ச்சிகள், சங்க அன்பர்களின் கலைத்திறனை வளர்த்தன. அண்மையிலே நடைபெற்ற வெள்ளிவிழாவிலே "ஊழியன்" என்ற நாடகத்தினை சங்கப் பெண் அங்கத்தினர்களும், சங்க நாடக போட்டியிலே முதல் பரிசு பெற்ற "அருணோதயம்" நாடகத்திலே இரு பாலரும் பங்கு கொண்டு பணியாற்றினர். இந்தச் சங்கம் நாடகப் போட்டியில் ஈடுபட்டதுடன், சென்ற ஆண்டு தமிழகத்தின் தலைநகரிலே தங்கள் நாடகத் திறனை எடுத்துக் காட்டும் வாய்ப்பையும் பெற்றது.

இந்தக் கலைப்பகுதியின் மற்றொரு அங்கம்தான் சங்கம் முதல் முதலாக பம்பாயில் தொடங்கிய நாடக

விழா. பொருள் ஈட்டும் நோக்கம் அடித்தலமாக அமைந்தாலும், பெருமளவிற்கு நடிக, நடிகையர், களையும், காட்சி சோடனைகளையும் தமிழகத்தினின்று கொணர்ந்து கலை விழாக் கண்ட துணிவு அனை வரையும் அதிசயிக்கச் செய்தது. இந்தத் துணிவிற்கு முன் நின்று ஆசியும் ஆதரவும் தந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தம்பதிகள் சங்க நினைவில் என்றும் நிலைத்து நிற்பவர்கள். அவர்களை அடுத்து வந்த டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜ மாணிக்கம், சகஸ்ரநாமம் குழுவினர், நடிகர் திலகம் சிவாஜி குழுவினர், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். குழுவினர், அமெச்சூர் ஆர்ட்ஸ் குரூப் முதலிய நாடகக் குழுவினர்களின் பணி சங்க வளர்ச்சிக்குத் துணை நின்ற துடன், பம்பாய் நாடகக்கலை ரசிகர்களுக்குப் பெருவிருந்தாகவும் அமைந்தது.

நாடகக் கலைப்பணியோடு, சங்கம் அவ்வப்போது சங்க விழாக்களிலே அமைக்கும் நாட்டிய, இசை நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டு பெரும் பணியாற்றிய இசை, நாட்டியத் தொண்டர்களின் பணியும் பெரு மையுடன் குறிப்பிடத் தக்கது. கலைத்துறையில் மேலும் சிறப்புறத் தென்னகத்திலே சிறந்து நிற்கும் திருவாட்டி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, குமாரி கமலா குழுவினர் கலை நிகழ்ச்சிகளும் சங்கப்பணிக்கு அணி செய்தன என்பதிலே பெருமைபடுகிறோம்.

இந்த கலைப்பணியின் சிகரமாக அமைந்தது, வெள்ளிவிழா நடன நிகழ்ச்சியான திருமதி பத்மினி குழுவினரின் "இராமாயண" நாட்டிய நிகழ்ச்சி.

அவ்வப்போது சங்க இலக்கிய, கலை நிகழ்ச்சி களுக்கு நேசக்கரம் நீட்டிய பம்பாய், தாயக, தமிழக அறிஞர்கள் பட்டியல் மிக மிக நீண்டது.

### பெருமண்டபம்

மிகச் சிறிய அறையில் தொடங்கிய இலக்கியப் பணி இன்று மணிமண்டப அரங்கிலே வளர்ந்து நிற்பதற்குப் பலருடைய செயலும், அன்பும், ஆதரவுமே காரணங்களாகும்.

சங்கத் தொண்டர்களின் இடையருத ஒன்றுபட்ட உழைப்பும், பம்பாய்வாழ் மக்களின் நல்லாதரவும், அரசினரின், தொழில் அதிபர்களின், தொழில் நிறு வனங்களின் நல்ல துணையும் உடன் கொண்டு இன்று கவின்பெரு மண்டபமாகக் கட்டி நிறுத்தியுள்ளன. பாம்பாய்த் தமிழ்ச் சங்க நூல் நிலையமும், வாரக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் திறம்பட நடை பெற அமைந்துள்ள சங்க மண்டபம் சங்கத்தின் சிறந்த சாதனை. தொழில் நகரமாகவும், எழில் நகர மாகவும் விளங்கும் பம்பாய் நகருக்கு வரும் பிறபகுதி யினர் இன்று சௌகரியமாகத் தங்கிச் செல்லும் விருந்தோம்பும் இல்லமாகச் சங்க மண்டபம் அமைந்துள்ளது. சமூக, சமய நிகழ்ச்சிகளாகிய திருமணம் போன்ற பெரு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படும் வண்ணம் மண்டபம் அமைந்துள்ளது, மற்ருெரு பயனுடைச் செய்தியாகும். சிந்தையும், செயலும் ஒன்ருகித் தாயக, தமிழக, தமிழ் மொழிப் பணிக்கு என்றுமே முன்னிற்கும் சங்கத் தொண்டர் குழாமும், சங்க அமைப்பும், சங்கம் கொண்டுள்ள, இலக்கிய, கலை, சமூக, கலாசாரப் பணியின் பல்வேறு பகுதி களிலும், ஒரு மனப்பட்டு செயலாற்றுவதுடன் வருங் காலத்திலும் இத்துறைகளில் வளமுறப் பணியாற்ற விரும்புகிறது. இந்த நற்பணிக்கு, அன்புக்கரமும், ஆசி மொழிகளும் வழங்கத் தாயகப் பெருமக்களையும். குறிப்பாக, தமிழக, மகாராட்டிய மாநிலத்து வாழும் மக்களையும் வேண்டுகின்ருேம்.

# நாற்பது ஆண்டுகளில் தமிழ் நாடக வளர்ச்சி

எஸ். வி. சகஸ்ரநாமம்

1928ம் ஆண்டிலிருந்து இன்று வரை, சுமார் நாற்பதாண்டு காலத் தமிழக நாடக வரலாற்றை என்னுல் தெரிவிக்க முடியும் என்று எண்ணுகிறேன். அந்த ஆண்டில்தான் நான் நாடக உலகில் பிரவேசித்தேன். பொள்ளாச்சி உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்த என்னை அவ்வூரில் முகாமிட்டிருந்த பால் மணம் மாருத பாலகர்கள் அடங்கிய நாடகக் குழுவின் விளம்பரம் ஒன்றே நாடக உலகுக்கு இழுத்தது. அதுதான் மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா என்ற பெயரில் இயங்கி வந்த டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழு. வீட்டாருக்குத் தெரியாமல் நான் போய்ப் பார்த்த இரண்டொரு நாடகங்கள், 'நாமும் நாடகத்தில் நடிக்க வேண்டும்' என்ற வித்தை என் மனதில் ஊன்றியது. என் வயதில் உள்ள இளைஞர்கள் மக்களிடையே பெறுகின்ற பாராட்டுதல்களையும், கரகோஷங்களையும் கண்ட நான், பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு நடிகர்களில் ஒருவனுகி விட்டேன்.

அந்தக் காலத்தில் இயங்கி வந்த கட்டுப்பாடு மிக்க கம்பெனிகளில் ஒன்று மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா. வாரத்திற்கு மூன்று தினங்கள் நாடகங்கள் நடக்கும். ஒரு ஊரில் ஒன்று அல்லது இரண்டு மாதம் முகாமிடுவது வழக்கம். அநேகமாக கீற்றுகளினுல் வேயப்பட்ட கொட்டகைகளே நாடக சாலைகளாகவும், காஸ் லைட்டுகளே (Gasliglt) ஒளி விளக்குகளாகவும் இருக்கும். ஒருசில இடங்களில் தான் மின்சார வசதி உண்டு. இன்னும் சில இடங்களில் ஆயில் இஞ்சின்கள் அமைத்து மின்சார விளக்குகள் போட்டு நாடகம் நடத்தப்படும். "இன்று மின்சார விளக்குகளுடன் நாடகம் நடைபெறும்" என்று விளம்பரம் செய்யப்பட்டு அதற்கென அதிகக் கூட்டமும் வருவதுண்டு.

இன்று ஆரவாரமாகப் பேசப்பட்டுவரும் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகள் இம்மாதிரி குழுக்களில் சர்வசாதாரணமாக நடைமுறையில் செயல் பட்டு வந்தது ஒரு முக்கியமான அம்சமாகும். இன வேறுபாடின்றி, மத வேறுபாடின்றி, தெலுங்கு, தமிழ் என்ற மொழி வேறுபாடின்றி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக, ஒன்ருக உண்பது, ஒன்ருகப் பிரார்த்தனை செய்வது, ஒன்ருக உறங்குவது போன்ற செயல்களால் அந்தக் குழுக்கள் ஒரு குடும்பமாக இயங்கி வந்தன.

அன்று நடைபெற்ற நாடகங்கள் அநேகமாகப் புராணக் கதைகளாக இருந்தன. பாட்டுகளே அதிகமாகவும் அதற்கு விளக்கம் தரும் உரைநடையாக வசனமும் இருந்தன. இப்படிப் பாடுவது இயற்கைக் கோளாறினுல் முடியாமல் போய்விடும்போது அப்படிப்பட்ட நடிகர்கள், நடிப்பு சொல்லித்தருபவர்களாகவும் பாடல் சொல்லிக்கொடுப்பவர்களாகவும், பொதுவாக பால நடிகர்களைக் கட்டிமேய்க்கும் சட்டாம் பிள்ளைகளாகவும் மாறிவிடுவார்கள். இப்படி பாலர்

களை ஒருமுகப்படுத்தி செயலில் ஈடுபடுத்துவதில் இவர்களுக்கு சிரமங்கள் ஏற்படும்போது பொறுமையிழந்து கடுமையாகத் தண்டிக்கவும் செய்வார்கள்.

### புதிதாக வந்து சேர்ந்ததும்...

புதிதாக வந்து சேருபவர்களுக்கு முதல் முதலாக மேடையில் கொடுக்கப்படும் பாகம் 'பால பார்ட்' தான். அதாவது நாடகம் ஆரம்பிப்பதற்கு முன் விநோதமாக வெள்ளைக்கார கௌன் உடைகளில் மேடையில் வந்து கடவுள் வணக்கம் பாடுவதே! அதில் ஒவ்வொரு நாளும் பாடும் கடைசிப்பாட்டு, இன்னும் என் நினைவில் இருக்கிறது:

நாவில் வந்ததைப் பாடுவோம்
நாடகம் தினம் ஆடுவோம்
நாங்கள் சிறுவர் எங்கள் பிழையை
நீங்கள் பொறுப்பீர் நாளுமே— (நாவில்)

இதற்கு அடுத்தபடி குழுவில் கொஞ்சம் தேர்ச்சி பெற்ற வாலிபராயிருப்பவர்கள், இப்போது சர்க்கஸ் காட்சிகளில் வரும் ஹாஸ்ய நடிகர் உடையுடன் தோன்றும் 'பபூன்பார்ட்' காரர்கள். இதன் பின்னரே நாடகம் ஆரம்பமாகும்.

கதாநாயகன், கதாநாயகி வேடம் போடுபவர்கள் இசையில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். பாடல்களும் விருத்தங்களும் நிறையப் பாட வேண்டும். அன்றைய நாடக மேடைகளில் முக்கியமாக மோஹனம், அடாணு, பைரவி, காம்போதி, பிலஹரி, பியாகடை, சிந்துபைரவி, செஞ்சுருட்டி, கேதாரகௌளம், சுருட்டி, சங்கராபரணம், கல்யாணி, தோடி, ஸஹானு, ஸ்ரீராகம், தன்யாசி போன்ற ராகங்களே கையாளப்பட்டு வந்தன.

ஊருக்கு ஊர் முகாம் மாறும் சமயங்களில் அநேகமாக ரயிலில்தான் பயணமாவோம்.

அந்நாளில் ரயிலில் பாடிக்கொண்டே யாசகம் எடுப்பவர்கள் அதிகமாக இருப்பார்கள். இவர்களில் சிலருக்கு இயற்கையான குரல் வளமும், இசை ஞானமும் அமைந்திருப்பது உண்டு. இவர்களது இசையைக் கேட்கும் கம்பெனி நிர்வாகிகள் இவர்களைக் கம்பெனிக்கு அழைத்து வந்து நடிகர்களாக்கியதும் உண்டு. இப்படி நாடகக்கலை இயற்கைத் திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து மேல் மட்டத்திற்கு அவர்களை உயர்த்தியிருக்கிறது.

### ஸ்பெஷல் நாடகக் குழுக்கள்

இந்தச் சூழ்நிலையில் கட்டுப்பாட்டுடன் கால வரையறையுடன் கதையின் கருத்துக் கெடமால் நாடகங்கள் நடத்தி வந்த சிறுவர் குழுக்களைத்தவிர, ஸ்பெஷல் நாடகக் குழுக்களும் இருந்தன. ஒவ்வொரு பாகம் தங்குபவர்கள் ஒவ்வொரு ஊரிலிருந்து நாடகத்தன்று வந்து சேர்வார்கள். வந்தவுடன் இன்ன நாடகம், இன்னபாடம் என்று சொல்லப்படும். அநேகமாக சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் தான் இவர்களுக்குப் பாடமாயிருக்கும். ஆனால், சில நடிகர்கள் தங்கள் பாகத்திற்கு பாடல் எழுதத் தனிப்பட்ட புலவர்களையும் வைத்துக் கொள்வதுண்டு. சிலர் தாங்களாகவே பாட்டு இயற்றும் திறமையும் பெற்றிருந்தார்கள். ஆனால் இவர்கள் பங்கெடுத்துக் கொள்ளும் நாடகங்களின் பெயருக்கும் நிகழக் கூடிய கதைகளுக்கும் கருத்துகளுக்கும் வசனங்களுக்கும் சம்பந்த மில்லாமலிருக்கும். நாடகமேடை இசைப் போட்டியும், வாதத் திறமையுங் கொண்ட ஒரு மேடையாகவே மாறிவிடும்; சம்பாஷணைகளின் மூலம் ஒருவரை யொருவர் புண் படுத்திக்கொள்வதும் உண்டு.

முன் சொன்னபடி ஒருபக்கம் இரண்டு மூன்று சிறுவர் குழுக்கள் இயங்கிக்கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் நாடகம் என்ற பெயரால் இசைப் போட்டியும் வாதத்திறமையும் நடந்து வந்தன. இந்த நாட்களில் முக்கியமான இரண்டொரு நகரங்களில் அமெச்சூர் குழுக்கள் இரண்டொன்றும் இயங்கியதுண்டு. இதைத் தலைமையேற்று நடத்தி வந்தவர்களெல்லாம் சமுதாயத்திலே பெரும் பதவியிலிருந்தவர்கள். அவர்கள் பொறுப்புள்ளவர்களாகவும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவு மிருந்தார்கள். அவர்களில் இரண்டு பெரியவர்களிடம் நான் தொடர்பு கொண்டவனாக இருந்தேன் என்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

### இரண்டு பெரியவர்கள்

மேலே குறிப்பிட்டவருள் ஒருவர் பெயர் திரு. எப். ஜி. நடேசய்யர் அவர்கள். தென்னிந்திய ரயில்வேயில் பெரிய அதிகாரியாக இருந்தவர்; தொழிற் கலைஞர்களுக்குப் பலவித உதவிகளைச் செய்தவர். அன்று தமிழ் நாட்டில் பிரபலமாயிருந்த முக்கிய ஸ்திரீ பார்ட் திரு. கே. எஸ். அனந்தநாராயண அய்யர் அவர்களை இவர்களது குழுவில் சேர்த்து நாடகங்கள் நடத்தியுமிருக்கிறார். இன்னொருவர்தான் நமது பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள். வழக்கறிஞர்; நீதிபதியாகயிருந்தவர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த திறமையுள்ளவர். சமஸ்கிருத மொழியிலும், இருவருக்கு ஈடுபாடு இருந்தது. எனவே சில ஆங்கில நாடகங்களையும் சமஸ்கிருத நாடகங்களையும் தமிழாக்கியதுடன் தாமே நடிப்பவராகவும் இயக்குநராகவும் பணியாற்றி வெற்றி கண்டிருக்கிறார். இவர்களது நாடகங்களைச் சில தொழில் நாடகக்குழுக்கள் நடத்திப் பெருமையடைந்து மிருக்கின்றன!

முக்கியமாக அன்று இயங்கிவந்த சிறுவர் குழுக்களெல்லாம் சம்பந்த முதலியார் அவர்களின் மனோஹரா,

ரத்னுவளி, கள்வர் தலைவன் போன்ற நாடகங்களை நல்ல முறையில் நடத்திவந்தன. இந்த நாடகங்கள் டி. கே. எஸ். குழுவிலும் நடந்தது. அவற்றில் நானும் முக்கிய பங்கு கொண்டு நடித்திருக்கிறேன்.

### சுகுண விலாஸ் சபை

இவர்களது சுகுண விலாஸ் சபையில் இவருடன் பங்கேற்று நடித்தவர்களில் தேசபக்தர் சத்தியமூர்த்தி, சர். சி.பி. ராமசாமி அய்யர், சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஆகியோருமாவர். அன்றைய சூழ் நிலையில் நாடகம் பார்ப்பதே நல்ல குடும்பத்தாருக்கு அழகல்ல என்ற கருத்துப் பரவியிருந்தது. நாடகத் துறையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்புமில்லாமல் இருந்தது. இந்நிலையை மாற்றி நாடகக் கலையின் உயர்வையும், அந்தக் கலையில் ஈடுபட்டிருந்த கலைஞர்களுக்கு சமுதாயத்தில் பெருமையையும் தேடித்தந்தவர் திரு. பம்மல் சம்பந்த முதலியார் என்பதை மறக்க முடியாது.

மற்ற மாகாணங்களிலிருந்தும் தமிழகத்துக்கு அமெச்சூர் குழுவும், தொழில் குழுக்களும் வந்து நாடகங்களை வெற்றிகரமாக நடத்திச் சென்றுள்ளன.

அதில், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வந்த அமெச்சூர் குழுவின் முக்கியஸ்தர் பெல்லாரி ராகவாச்சாரியார் அவர்கள், ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் பாரத நாட்டுச் சரித்திர நாடகங்களையும் அவர்களது மொழியிலேயே (தெலுங்கு) நடத்தி வெற்றி கண்டவர். இவர் எந்தப் பாத்திர மேற்ருலும் அப்படியே ஒன்றிப் போய் விடுவார் என்று இவரைப் பற்றிப் பெருமையாக திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்களே பேசியதை நான் கேட்டிருக்கிறேன். தம்முடைய நாடகக்கலை ஆர்வத்தைத் தூண்டி விடுவதற்குக் காரணமாயிருந்தவர் திரு. பெல்லாரி ராகவாச்சாரியார்தான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவதாக, பார்ஸி நாடகக் குழு. நாடகங்களின் கதைகளைக் காட்டிலும் காட்சி ஜோடனைகளில் இக்குழுவினர் அதிக கவனம் செலுத்தினர்கள். அதாவது நாடக உத்திகளைப் புதிய முறையில் தமிழ் நாட்டில் கையாளுவதற்குத் தூண்டுகோலாயிருந்தவர்களும் இவர்களே. கோட்டையைத் தகர்த்துத் தூள் தூளாக்குவது போன்ற பிரமிப்பூட்டும் காட்சிகளை மேடையிலே முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நடத்திக் காட்டினர்கள். இவர்கள் கம்பெனியின் பெயர் பாலிவாலாக் கம்பெனி என்பது. இவர்கள் நடத்திய நாடகங்கள் அத்தனைக்கு முன்னுல் ''பார்ஸி'' என்ற அடைமொழி யிருந்து வந்தது. இவர்கள் பூனு நகரிலிருந்து வந்தவர்கள். ஆனுலும் இவர்களது நாடகங்களை ஹிந்துஸ்தானி மொழியில்தான் நடத்தி வந்தார்கள். பிரபலமான மஹாராஷ்டிரக் கலைஞர் பால கந்தர்வா அவர்கள் இந்தக் குழுவிலே பணியாற்றியுள்ளார். பார்ஸிக் கம்பெனி என்ற பெயர் வந்ததற்கு என்ன காரணம் என்பது இன்று வரையும் எனக்குத் தெரியவில்லை.

### கன்னையா கம்பெனி

இந்தக் குழுவைப் பார்த்துத்தான் திரு. கன்னையா அவர்களின் நாடகக் குழுவினர் பிரம்மாண்டமான முறையில் காட்சிகளை அமைத்து நாடகங்களைத் தயாரித்தார்கள். அநேகமாக எல்லா நாடகங்களுமே புராண இதிகாச — ராமாயணம், மகாபாரதம், ஆண்டாள், தசாவதாரம், பகவத் கீதை போன்ற— கதைகளே. இந்நாடகங்களின் மூலம் தமிழகத்தில் பக்திப் பரவசத்தை யூட்டிய பெருமை திரு. கன்னையா அவர்களுக்கு உண்டு. பல கோவில் திருப்பணிகளுக்கும் நாடகம் நடத்தி அவர் நிதி சேர்த்துக் கொடுத்துள்ளார். இன்றும் அவருக்குத் தமிழகத்தில் தனிப் பெருமை யிருந்து வருகிறது.

திரு பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் சுகுண விலாஸ் சபையிலிருந்து வந்து தொழில் குழுவிற்கு நிரந்தர இயக்குநராகப் பணியாற்றி வந்தவர் திரு. எம். கந்தசுவாமி முதலியார் அவர்கள். இவர் பிரபல நடிகர் திரு. எம். கே. ராதா அவர்களின் தந்தையார் ஆவர். சமூக நாடகங்களின் வளர்ச்சியில் பெரும்பங்கு இவருக்குண்டு. டி. கே. எஸ். குழுவில் பல்லாண்டு பணியாற்றினுர். இவர் ஜே. ஆர். ரங்கராஜு அவர்களின் ராஜேந்திரா, ராஜாம்பாள், சந்திரகாந்தா, மோஹனசுந்தரம் போன்ற சில நாவல்களை நாடாகங்களாக்கினுர். அவை மேடையில் பிரபலமடைந்தன. வடுவூர் துரைசாமி அய்யங்கார் அவர்களின் நாவலான மேனகாவும் நாடகமாகி இவரால்தான் மேடையில் பிரபலமடைந்தது. பிறகு அது திரையிலும் வெற்றியை நிலைநாட்டி, தமிழ்ப் படங்களின் முன்னேற்றத்திற்கு ஒரு ஒளி காட்டியது.

### என் ஆசிரியர்

இவர்தான் எனக்கு நடிப்புப் பயிற்சி யளித்த ஆசிரியர். இவரால் தயாரிக்கப்பட்ட நாடகங்களெல்லாம் முக்கிய பங்கேற்று நடித்து வந்தேன். எனது திரைப்பட வாழ்க்கைக்கு வழிகாட்டியதும் இவரால் தயாரிக்கப்பட்ட நாடகமான மேனகா தான்....

நம் நாடு அன்று வெகு வேகமாகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. ஆகவே நாடகக் கலையும் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பணியாற்றத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. நாடகங்கள் முழுவதையும் நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியைத் தூண்டுவதற்கெனத் தனியாகவே எழுதித் தயாரித்தனர். உணர்ச்சியோட்டமில்லாத நாடகங்கள் நடந்தாலும் கூட நாடகங்களின் மத்தியில் தனிப்பட்டபாடல்களையாவது பாடி மக்கள் உள்ளத்தில் தேசப்பற்றை ஊட்டி வந்தார்கள் பல கலைஞர்கள்.

## சிறை சென்ற கலைஞர்கள்

தேச விடுதலைப் போராட்டத்தில் கலையின் மூலம் கலந்து கொண்டு சிறைசென்ற கலைஞர்கள் பலர். இந்தவரிசையில் நடிகர்கள் நாடக ஆசிரியர்கள் ஆர்மோனியப் பின்பாட்டுக்காரர்கள் ஆகியோர் உண்டு. நாடக ஆசிரியர் டி. பி. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள், பாடலாசிரியர் பாஸ்கரதாஸ், நடிகர் விஸ்வநாததாஸ், எம். ஜி. நடராஜ பிள்ளை, கே. பி. ஜானகி, எம். வி. மணி. எம். எம். சிதம்பர நாதன், ஹார்மோனியம் வாசுதேவ நாயர் போன்ருேர் சிறை சென்ற கலைஞர்கள். தேச விடுதலைப் போராட்டத்தில் தமிழ் நாடகக் கலைஞர் களும் பெரிய அளவில் பங்கெடுத்துக்கொண்டு உழைத் தார்கள் என்பதை இன்றையத் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது மிக மிக அவசிய மானது.

இதே நேரத்தில் டி. கே. எஸ். குழு, வெ. சாமி நாத சர்மா எழுதிய பாணபுரத்து வீரன் என்ற நாடகத்தைத் "தேசபக்தி" என்ற பெயரில் தயாரித்து முதன் முதலாக மதுரையில் 1930-ல் நடத்தியது. அது நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. முதன் முதலாக இந்த நாடகத்தில்தான் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மகாத்மா காந்தியடி களின் வரலாற்றினை வில்லுப் பாட்டாகப் பாடி அரங் கேற்றினுர். பாடல்களை யெல்லாம் அவரே இயற்றி ஞர். அவருடைய கற்பனு சக்தியையும் கவிதையிலே அவருக்கிருந்த பற்றினையும் கண்டு அவருடன் இருந் தவர்களே பிரமிப்படைந்தார்கள்.

இதற்கு அடுத்தபடியாக நாடகங்கள் சீர்திருத்தப் பாதையில் அடியெடுத்து வைத்தன. அதாவது ஜாதி யின் பேரால் மதத்தின் பேரால் நிலவி வந்த மூடப் பழக்க வழக்கங்களைச் சாடின. மதுவினுல் வருங் கேடு, குதிரைப் பந்தயத்தால் குடும்பங்களில் ஏற்படும் சீரழிவு போன்றவற்றை மக்கள் நன்கு உணரும்படி செய்தன.

## பாரதி பாடல்கள்

தேச விடுதலைப் போராட்டத்தில் தளர்ந்த உள்ளங்களைத் தட்டியெழுப்புவதற்கு மகாகவி பாரதி யின் பாடல்கள் பெரிய அளவில் பயன்பட்டன. அவரது கவிதையின் வேகமும், இனிமையும், சொற் சுவையும், நயமும் நல்லதொரு பரம்பரையை உரு வாக்க உதவியுள்ளன. தேசப்பற்றையும், மொழிப் பற்றையும் மக்களிடையே பரப்புவதற்கு மேடை நாடகங்கள் அவரது பாடல்களை வெகுவாகப் பயன் படுத்தி வந்தன. இன்றும் பயன்படுத்தி வருகின்றன.

இன்று நாடு சுதந்திரமடைந்து விட்டது. பல நாடுகளுடன் கலாசாரப் பரிமாற்றங்கள் செய்து கொள்ளுவதற்குப் பல வழிகள் ஏற்பட்டுள்ளன. மேல் நாட்டுக் கலைஞர்கள் பலர் இங்கு வந்து நமது கலா சாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதும், நமது கலைஞர்களில் பலர் மேல் நாடுகள் சென்று அவர்களது கலாசாரப் பெருமைகளை அறிந்து வருவதுமான நிலை உருவாகியுள்ளது. இந்த உறவினுலும் நமது நாடகங் கள் சிலவகைகளில் இன்று முன்னேற்ற மடைந்திருக் கின்றன. ஆனுல் சில நாடகங்கள் முழுக்க முழுக்க அவர்களைப் பார்த்து அப்படியே காப்பியடிப்பதை நான் விரும்பவில்லை. சில கருத்தோட்டங்கள் அவர்களுக்கும் நமக்கும் ஒன்ருயிருக்கலாம். ஆனு லும் சில பிரச்னைகளை நாம் அணுகும் முறையும் நமது பழக்க வழக்கங்களும் வேறுபட்டுத்தான் இருக்க முடியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சுருக்க மாகச் சொன்னுல் உருவம் பாரத நாடாகவும், உள்ளம் மேல் நாடாகவுமில்லாமல், உருவமும் உள்ளமும் நமது கலாசாரத்தைத் தழுவி முன் னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்பதே எனது பணிவான விருப்பம். இதிலே நாம் வெற்றி காண்போம் என்பதும் எனது திடமான நம்பிக்கை. இந்த நம்பிக்கையை எனக்களித்த பராசக்தி இன்றைய நாடகக் கலையையும் கலைஞர்களையும் நாட்டு மக்களுக்குப் பயன்தரும் நற்பணியில் நடத் திச் செல்ல வேண்டும் எனப்பிரார்த்திக்கிறேன்.

# நாட்டார் பாடல்களில் பாண்டித்தியம்

வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், இலங்கை

உலகெங்கும் பேச்சுப் பாஷை வேறு; எழுத்துப் பாஷை வேறு. எழுத்துப் பாஷையிலும் செய்யுள் இலக்கணம் கற்றுருடைய வசன நடை வேறு; செய்யுள் இலக்கணம் கல்லாதாருடைய வசன நடை வேறு. செய்யுள் இலக்கணம் கற்றுருடைய வசன நடையில் செய்யுள் இலக்கணம் அமைந்த வசனங்களும் அவர் அறியாமல் வந்துவிடும்.

நாட்டார் பாடல்களிலும் நாவன்மையுடையார் பாடல்களில் வழுவற்ற செய்யுள் இலக்கணங்களுங்கூட இயல்பாகவே வந்து விடும். நாட்டார் பாடல்களில் நாம் செய்யுள் இலக்கணம் பார்த்தலாகாது. ஓசை நயமும், பொருளின் போக்கும் புலவர்களின் பாக்களில் தொனிப்பது போலத் தொனிக்கும். மேலும், நாட்டார் பாடல்கள், பேசும் பாஷையில் அமைவதனுல் கவர்ச்சி அவற்றில் அதிகம்.

எதுகை, மோனை, அடுக்கு என்னும் இவை நாட்டார் பாடல்களில் காணப்படும் நயங்களாம்.

வித்தாரக் கள்ளி
விறகெடுக்கப் போனுளாம்
கத்தாழை முள்ளு
கொத்தோடே குத்தினதாம்

என்ற வசவிலும்,

கெட்டார் தழையாரோ
கேடொருகால் நீங்காதோ
வெட்டின கட்டையிலே
வேரோ தழையாதோ

என்ற பிரலாபத்திலும்,

நண்டு நறுநறுக்க
நாய்ப்பெரியார் ஊளையிட
பெண்டு பிறுபிறுக்கப்
பேய்ப்பெரியார் ஊளையிட

என்ற பரிகாசத்திலுங்கூட, எதுகையும் மோனையும் இருக்கின்றன.

எதுகைச் சிறப்புடைய எத்தனையோ தொடர்கள் பேச்சு வழக்கில் உண்டு. ஆடல் பாடல், ஆதாள பாதாளம், உண்பனவு தின்பனவு, எண்ணெய் தண்ணி, வம்பு தும்பு, வாழ்வு தாழ்வு என்பன உதாரணங்கள்.

பேச்சு வழக்கில் மோனை நயம் அமைந்த தொடர்களுக்கும் குறைவில்லை. அக்கை ஆத்தை, ஏழை எளியது, காடு கரம்பை, சோலி சுறட்டு, பொங்கல் பூசை, வருத்தம் வாதை என்பன உதாரணங்கள்.

## பழமொழிகள்

இப்படி ஆற்றெழுக்காக வழங்கும் எதுகை மோனைகள் பழமொழிகளிலும் சிறப்பாக அமைந்திருக்

கின்றன. எதுகை அமைந்திருக்கும் பழமொழிகள் சில வருமாறு :

அடியாத பிள்ளை படியாது
ஒடியாத முருங்கை காயாது.

அவசாரி யானாலும்
முகராசி வேண்டும்.

ஆசாரி விடை கொடுத்தாலும்
பூசாரி விடை கொடான்.

கண்டவன் விலை சொன்னால்
கொண்டவன் கோடி உடான்.

கள்ளுக் கொள்ளா வயிறுமில்லை
முள்ளுக் கொள்ளா வேலியுமில்லை.

சிரிச்சுக் கெட்டது பொம்பிளை
விரிச்சுக் கெட்டது போயிலை.

அப்படியே மோனை அமைந்திருக்கும் பழமொழிகள் சில வருவது காண்க :

இல்லாதார் பொன் பூண்டால்
" எங்காலே எங்காலே "

எளியவனாய்ப் பிறந்தாலும்
இளையவனாய்ப் பிறவாதே.

கூத்துக்காரன் கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்.

பனையின் இணலும் இணலோ
பகைவர் உறவும் உறவோ !

வேலி இணலும் இணலோ
வேசை உறவும் உறவோ !

பாலாயூட்டிப் பழமாய்ச் சொரிந்தாலும்
பாவியென்ன தந்தாள் பாவக்காயுஞ்
சோறுந் தந்தாள்.

எதுகையும் மோனையும் அமைந்திருக்கும் பழமொழிகளும் உள :

பெரிய வீடென்று
பிச்சைக்குப் போனேன்
கரியை வழித்துக்
கன்னத்தில் தடவினார்கள்.

வாயாலே கேட்டால்
வாழை நாருங் கொடான்
தாயடை புரியன் வந்து
தாரேடே கொண்டு போனான்.

சேலைமேல் சேலைகட்டித்
தேவரம்பை ஆடினாலும்
ஓலைமேல் எழுத்தாணி
ஊன்றும்பெண் ஆகாது.

### விடுகதைகள்

மாடு மேய்க்கும் பையன்கள் இன்பங் காணும் விடுகதை (நொடி)களிலும் எதுகையும் மோனையும் அநேகமாய் அமைந்திருக்கக் காணலாம்.

மூக்கு மூன்றுண்டு
முகத்தாறு கண்ணுண்டு
நாக்கு நான்குண்டு
நடக்குங்கால் பத்துண்டு.

[விடை : உழவன், மாடுகள், கலப்பை.]

நீரோடி நிலங்குளிர்ந்து
நிலத்துவாழை குருத்தெறிந்து
காரோடிய மணலில்
கருவில்லா முட்டையெது ?

[விடை : காளான்.]

### தாலாட்டுப் பாடல்கள்

எதுகைக்கு இடர்ப்படாமலும், மோனைக்கு முக்கி முனகாமலும், ஏடு அறியாத, எழுத்தாணி தெரியாத, பெண்களும், கவிதை வெள்ளம் கரை புரண்டு ஓடும்படி, தாலாட்டுப் பாடல்களை உருவாக்கி விடுகின்றனர்.

கொம்புக் கனியே
கோதுபடா மாங்கனியே
வம்புக் கழுகிறீரோ
வாயெல்லாந் தேனூற.

காய்ச்சின பாலுக்கோ
கடைஞ்செடுத்த வெண்ணெய்க்கோ
தோய்த்த தயிருக்கோ
சொல்லியழு கண்ணனே.

### ஒப்பாரிப் பாடல்கள்

"இழவில் அழுதிடும் பெண்கூட இசையோடழுவது கண்கூடு" என்பர் நாமக்கல் இராமலிங்கனார். ஒப்பாரிப் பாடல்களிலும் எதுகையும் மோனையும் அநேகமாய் அமைந்திருத்தல் கண்கூடு.

தேங்காய்ப்பாற் கஞ்சியிலே—உனக்குத்
தியங்கமருந் திட்டினமோ
மாங்காய்ப்புளிச் சாற்றிலே—உனக்கு
மயங்கமருந் திட்டினமோ.

அரைத்த மருந்தோ—இங்கே
அம்மிபாழ் போகுதெணை
உரைத்த மருந்தோ—இங்கே
உருக்குலைந்து போகுதெணை.

### சிறுவர் பாடல்கள்

குழந்தைகள் விளையாடும்போது பாடும் பாடல்களிலே பொருட் பொதிவு இல்லாவிட்டாலும் ஒலிக்

குறிப்பு ஓசை நயத்தை எழுப்புவதனைக் காண்பீர். நகைச் சுவையும் இவற்றில் உண்டு.

சின்னப் பெண்ணே அம்மிணிமுத்து
தண்ணிக்குப் போறவளே
தண்ணிக் குடத்தைத் தொம்மெனப் போட்டு
என்னிலே பழியைச் சாட்டாதே.

அம்மான்ரை சின்னப்பெட்டை, வாடி வா,
அழகான மாப்பிளையும் நான்தாண்டி;
ஊரரிசிச் சோறுமடி, வாடி வா,
உசிரோடே மீனுமடி, வாடி வா.

காக்காய்க் குஞ்சுக்குக் கலியாணம்
காசுக்கு இரண்டு பணியாரம்
ஓட்டுக்கு மேலே சீதனமாம்
ஓடி வாருர் மாப்பிள்ளை

கஞ்சி காய்ச்சடி குஞ்சி
கறணம் போடடி சிங்கி
வந்த மாப்பிளை நொண்டி
வாசலைச் சாத்தடி தெண்டி.

**நாடோடும் நயமோடும்**

பாடல்கள் ஊருக்கூர் ஓடுவதில் வேறுபடும் என்பது நாட்டார் பாடற்கலை இலக்கணம். அவை உருக்குலையலாம்; சிறக்கலாம்.

தஞ்சை, சரஸ்வதி மகால் வெளியீடு, திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பதிப்பு, 1958, ''மலையருவி'' என்னும் நூலில் (பக். 7) தரப்பட்டுள்ள ஒரு பாடல் வருமாறு:

கூடி இருந்தஇடம்—குட்டி
கும்மாளம் போட்டஇடம்
வாழைப்பழம் தின்றஇடம்—குட்டி
பாழாய்க் கிடக்குதடி.

''தமிழர் நாட்டுப் பாடல்கள்,'' திரு. நா. வானமாமலை அவர்கள் தொகுப்பு, 1964, என்னும் நூலில் (பக். 186) தரப்பட்டுள்ள பாடம் இது:

கூடி இருந்தஇடம்
கும்மச்சரம் போட்டஇடம்
வாழைப்பழம் தின்னஇடம்
பாழாக் கிடக்குதுபார்.

இலங்கையில் எனக்குக் கிடைத்த பாடத்தையும் இதன் கீழ்த் தருகின்றேன்.

கூடி இருந்தஇடம்
கும்மாளம் போட்டஇடம்
பாடி மகிழ்ந்தஇடம்
பாழாய்க் கிடக்குதடி.

பிந்திய பாடத்தில் எதுகை மோனை பொருட் பொலிவு யாவும் சிறப்புற அமைந்திருக்கக் காணலாம். இதுவே பாடலின் பூர்வ பாடம் என்பது தெளிவு.

**இலக்கியம் பிறந்த பாடல்கள்**

கூதிர் காலத்தில் பூந்தட்டில் இட்டு வைத்த பிச்சியரும்பு மணங் கமழ விரிதலைக் கண்டு பொழுதறிந்தனர் பழந்தமிழ் மக்கள். பொழுதறிதல்=அந்திக் காலமென்றறிதல் (நெடுநல். 39-41).

காலையில் தாமரை மலர்கிறது. மாலையில் மல்லிகை மலர்கிறது. இரவில் குமுதம் மலர்கிறது.

நெருஞ்சிப் பூ ஞாயிறு மண்டிலம் இயங்குந்தோறும் அதற்கியையத் திரும்பி அதனை நோக்கும் இயல்புடையது.

நீள்சுடர் நெறியை நோக்கு
நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்

[பெரிய ஞாயிறுபோம் நெறியைப் பார்க்கும் நிரையிதழ்களையுடைய நெருஞ்சி மலர்களைப்போல. சீவக சிந்தாமணி 461.]

பூ மரங்களைக் கொண்டு பொழுதறியும் திறன் நாட்டு மக்களிடம் பழங்காலந் தொட்டு இருந்து வருவதைப் பின் வரும் பாடல்களால் அறியலாம்:

பொழுது அடைஞ்சிருச்சே
பூமரமும் சாஞ்சிருச்சே
இன்னம் இரங்கலையோ
எசமானே உங்கமனம்?

['பொழுதும் எறங்கிரிச்சு, பூமரமும் சாஞ்சிரிச்சு' என்றும் பாடம் உண்டு.]

வேறொரு வகையாலும் நாட்டு மக்கள் பொழுதறிந்து வந்தனர்.

தண்ணி கறுத்திரிச்சு
தவளைச்சத்தம் கேட்டிருச்சு
புள்ளை அழுதிரிச்சு
புண்ணியரே வேலைவிடு.

*   *   *

ஆயன் ஒருவன் ஆய்ச்சி ஒருத்தியைக் கண்டு, காதல் கொண்டு, அவளோடு பேசி, அவள் இசைவைப் பெற்றது. முல்லைக் கலி 10:

நின்ருய்நீ; சென்றீ; எமர்காண்பர்; நாளையும்
கன்ரெடு சேறும் புலத்து.

[இங்கு நின்ருல் என் தாய் தந்தையர் பார்த்து விடுவர்; ஆகவே இங்கிருந்து சென்று விடு. இன்றேபோல் நாளையும் கன்றுகளோடு மேய்புலத்திற்குச் செல்வேன்; ஆங்கு வருக.]

அதே போல ஒரு யோசனையைப் பாமரப்பெண் ஒருத்தியும் அவள் காதலனும் பரிமாறிக் கொள்கிறார்கள்:

வேலி பிரிந்ததென்று
விறகொடிக்க நான்வாறேன்
கண்ணு பிரிந்ததென்று
கரையோரம் நீர்வருவீர்.

முல்லைக் கலி 16ம் பாடலும் இதே பொருளைக் கொண்டுள்ளது.

* * *

பேரின்பத்தை விரும்பி நின்ற குலசேகர ஆழ்வார் தாம் ஏதேனும் ஒரு நல்வினையால் திருமால் வீற்றிருக்கும் திருவேங்கட மலையில்,

தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே

என்றும்,

அடியாரும் வானவரும் அரம்பையரும்
கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்
பேனே

என்றும் இன்னும் பலவும் சொல்லி வேண்டுகின்றார்.

சிற்றின்பத்தை விரும்பி நிற்கும் நாட்டு மகன் ஒருவன் தங்கு தடையின்றித் தன் காதலியைத் தனிமையிலும் நேரிலும் அண்மையிலும் கண்டானந்திப்பதை விரும்புகிறான் :

மானா மதுரையிலே
மயிலாள்தலை முழுகையிலே
மீனாக வந்துநானும்
மிதக்கத்தவஞ் செய்யேனா

என்கிறான். ஏதேனும் ஒரு நல்வினை தன் இச்சையைத் தீர்த்து வைக்கும் என்பது அவனது நம்பிக்கை.

நாட்டார் பாடல்களிலுள்ள உயர்ந்த கருத்துக்கள் செந்தமிழ் இலக்கியத்தில் சேர்க்கப்பட்டிருப்பது உலகறிந்த உண்மை.

### மட்டக்களப்புக் கவிகள்

இலங்கையின் தமிழ் மாகாணங்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பாலார் வாழும் இடங்கள் மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார்ப் பட்டினப் பகுதிகளாகும். இப்பிரதேசங்களிலுள்ள ஆடவர் நாவிலுங் கவி, அரிவையர் நாவிலுங் கவி என்று சொல்லுதல் மிகையாகாது.

வயலில் உழுதுகொண்டு நிற்கின்றான் ஒருவன். உழவு முன்னேறவில்லை என்கிறான் அங்கு வந்த முதலாளி.

மாடும் வயதாளி
மாட்டுக்காரன் குமராளி
நானுமொரு நோயாளி—மாடு
நடக்குதில்லை முதலாளி

என்கின்றான் உழுபவன்.

### நகைச் சுவை

நகைச் சுவைக் கவிகள் சிலவற்றைச் சந்தர்ப்பங்களுடன் ஈண்டெடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

குறியிடத்துக்கு வந்த காதலன் பொறுமையிழந்து கூரையை உருவி ஆளரவஞ் செய்தான். தாய் உறங்கி விட்டதால் மகள் அன்று தப்பினாள்.

கோடியில் வந்துநின்று
கொக்காட்டம் கொள்ளாதேகா
ஊடு நிறைந்தசனம்—எங்க
உம்மாவுந் திண்ணையிலே

என்று காதலனை மறுநாள் கடிந்தாள் காதலி. மீண்டும் ஓரிரவு வீட்டுக் கூரையை அவன் சரசரக்கச் செய்தான். அன்று தாய் உறங்கவில்லை. தானாகவே மகள் விளக்கங் கொடுக்கிறாள் :

கோடியாலே வந்தமாடு
கூரையை உருவுதென்று
ஏசாதேகா உம்மா—நம்மட
எருதுவந்து போகுதாக்கும்.

### உவமை நயம்

பண்டை இலக்கியப் பாடல்களோடு ஒப்பிட்டுப் பொருள் காணின் பின் வரும் கவியின் நயம் விரிவுறும் :

நடையழகி துடையழகி
நளினசித்திர வாயழகி
இடையழகி கதீஜா—ஒரு
இன்பமுத்தந் தாகிளியே.

நடை நயத்திற்குத் தனி மதிப்புண்டு என்பது யாவரும் அறிந்ததே. நடை கால்களின் தொழில். கால்களிலிருந்து 'துடை'யின் தரத்தை அனுமானிக்கின்றான். வாழைத் தண்டைத் தலை கீழாக்கினால் எப்படியிருக்கும் வடிவத்தில்? அதுபோல. இனி, நளினம்=தாமரை. சித்திரத்திற்கண்ட தாமரையின் அழகை ஒத்திருப்பது இவள் அதரங்களின் அழகு. இந்தியர் கொள்கை, ஓவியமானது அது சுட்டும் பொருளிலும் சிறந்தது, என்பது. மேனாட்டிலும் இவ் விலக்கணம் ஒரோ இடத்தில் கொள்ளப்படுகின்றது. ஆகையால் நாம் உலகில் காணும் தாமரையிலும் அழகானது சித்திரத்தில் காணும் தாமரை. இதனை ''ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்'' (மணிமேகலை 5-7) என்னும் அடியால் அறிக. மேனாட்டார்

சித்திரப் பொருளை முன்னிட்டுக் கொண்டு சித்திரம் வரைவராகையால், அவர்க்குச் சித்திரத்திலும் மிக்கது இயற்கைப் பொருள் என்பது பெரும்பான்மைக் கொள்கை.

**காதற் கனவு வேம்பாதல்**

மதம் பிடித்த யானைக்குச் சொந்தமான தென்னவன் கனவில் ஒரு மங்கையை நாடினன். அவளும் தன் படுக்கையிலே அவனுக்குக் கொஞ்சம் இடங் கொடுத்தாள். பக்கத்திலே படுத்துக்கொண்டு நலம் பாராட்டி அவளைத் தழுவினன். அவள் மதி மயங்கிக் கிடந்தாள். தானும் அவனைத் தழுவ நினைத்துத் தன் செங்காந்தள் அரும்பையொத்த மெல்லிய விரல்களால் தடவிப் பார்த்தாள். ஆளில்லை. திடுக்கிட்டு எழுந்தாள். அந்தக் கனவு நிலையிலேயே திரும்பவும் படுக்கையைத் தடவினள். இக் கதை இதன்கீழ் வரும் முத்தொள்ளாயிரம் 74ம் பாடலில் மிளிர்கின்றது :

களியானைத் தென்னன்
கனவில்வந்(து) என்னை
அளியான் அளிப்பானே
போன்ருன்—தெளியாதேன்
செங்காந்தள் மெல்விரலால்
சேக்கை தடவந்தேன்
என்காண்பேன் என்அலால்
யான்.

வரைபொருளின் பொருட்டுத் தலைவன் பிரிந்து விட்டான். அவன் தன் உடம்புடன் அணைதலைப் பொருந்திய மெய்போலும் தன்மையையுடைய பொய்யாகிய கனவு தலைவிக்கு மயக்கத்தை உண்டாக்கியது. அவள் துயிலுணர்ந்து எழுந்து தலைவனென எண்ணிப் படுக்கையைத் தடவி ஏமாந்தாள். இக்கதை குறுந்தொகை 30ம் பாடலில் இடம்பெற்றுள்ளது.

மட்டக் களப்புக் கவிகளுள் இவ் இலக்கியப் பொருள் கொண்ட பாடல்கள் பலவுள. அவற்றுள் மூன்று இவை :

பாயை விரிச்சுப்
படுக்கையிலே கொண்டுழுந்து
வீண்பாய் துருவி—நான்
வீண்முழுக்கு ஏன்முழுக.

கரும்பை நினைத்துமச்சான்
கண்ட கனவாலே
வெறும்பாய் திருவி—நான்
வேறுநினை வானேனே.

கரும்பே ஓரிரவு
கண்டு கனவிலும்மை
வெறும்பா யினைத்தடவி
வீணில்நான் நொந்தழுதேன்.

மத்திய இந்தியாவில் வழங்கி வரும் இப் பொருள் கொண்ட பாடலொன்று Folk-Songs of Chhattisgarh என்னும் நூலில் மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளது:

These meetings in dreams,
How sad they are !
When waking up startled
One gropes about
And there is no contact to the hand.

இங்கே எடுத்துக் காட்டியுள்ள இலக்கியப் பாடல்கள் தலைவி தோழிக்குச் சொல் கூற்றுக்களாக அமைந்திருக்கின்றன. நாட்டார் இலக்கியத்தில் காதலன் காதலியோ கணவன் மனைவியோ தோழியின் துணையை நாடுவதில்லை. எனவே அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்வதாகவோ, தம் நெஞ்சொடு புலம்பலாகவோ நாட்டார் பாடல்கள் அமைந்திருப்பது காண்க.

# வழி வழி வந்த வசன நடை

தொகுப்பு : கு. அழகிரிசாமி

## முன்னுரை

எந்த மொழியிலும் காலத்துக்குக் காலம் செய்யுள் நடை வேறுபடுவது போல், உரை நடையும் மாறிக் கொண்டே வரும். இந்த மாறுதலே ஒரு மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் சின்னம். தமிழ் மொழி, கவிச்சக்கரவர்த்தி கம்பர் கூறியது போல் ''என்றும் உள தென் தமிழ்''. இம் மொழி, கடந்த காலத்திலும் உயிரோடு இருந்திருக்கிறது ; நிகழ்காலத்திலும் உயிரோடு இருக்கிறது; எதிர்காலத்திலும் உயிரோடு இருக்கப் போகிறது. இந்த மும்மை வாழ்வு பெற்ற மொழிகள் உலகத்தில் மிகச் சிலவே. வேறொரு நோக்கில் பார்த்தால், தமிழைத் தவிர வேறு எந்த உலக மொழிக்கும் இவ்வாறு முக்கால வாழ்வு கிடையாதோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.

இலக்கியச் சிறப்புடைய லத்தீன் மொழி இன்று பேச்சு வழக்கை இழந்து விட்டது. எனவே இதற்குக் கடந்த கால வாழ்வுதான் உண்டு.

சமஸ்கிருத மொழி எந்தக் காலத்திலுமே பொது மக்களின் நாவில் வழங்கி வந்த மொழியல்ல. எனவே கடந்த கால வாழ்வும் இந்த மொழிக்குக் கிடையாது. ஆனுல் இம்மொழியின் திருந்தாத மிகப் பழைய வடிவம் வழங்கியிருக்கிறது. இதன் சிதைந்த வடிவங்களும், திரிந்த வடிவங்களும் பல்வேறு பிரதேச மொழிகளாக இன்று வழங்குகின்றன.

கிரேக்க மொழி 'என்றும் உள' ஒரு மொழி போலத் தோற்றினுலும் அக்கால கிரேக்கம் இக்கால கிரேக்கர்களுக்குப் புரியாது; வேற்று மொழி போன்றே இருக்கும்.

சீனமொழியும் பழம் பெருமை பெற்ற மொழியே. இன்றும் வழக்கில் இருக்கிறது. ஆனுல் அதில் பல பிரிவுகள் உண்டு. ஒரு பகுதியினர் இன்று பேசும் சீனத்தை மற்றொரு பகுதியினரால் புரிந்து கொள்ள முடியாது. அதை வரி வடிவில் எழுதினுல் எல்லோரும் புரிந்துகொள்ள முடியுமாம்! எழுத்து புரியும் பேச்சு புரியாது என்ற நிலையில், பேச்சு வழக்கையே ஒரு மொழியின் வாழ்வாகக் கருதி நோக்கும் போது, சீன மொழி முக்கால வாழ்வு பெற்றுலும், எல்லாச் சீனர்களும் புரிந்து கொள்ளும் முழு வாழ்வு பெருத ஒன்று என்றே கருத வேண்டியிருக்கிறது.

'என்றும் உள' தென் தமிழின் பெருமை உலக அரங்கிலேயே ஒப்பற்றுத் திகழ்வதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பாட்டையும் உரைநடையையும் இன்றும் புரிந்து கொள்ள முடிகிறது. எல்லாத் தமிழர்களுமே புரிந்து கொள்ள முடிகிறது. எனவே இந்த ஒரு மொழிக்கே 'என்றும் உள' என்ற பெருமை உண்டு என்பதைக் கண்ட கவிச்சக்கரவர்த்தியின் பேரறிவை என்னென்று புகழ்வது! தமிழின் தனிப் பெருமையை முழுமையாகக் கண்டு போற்றிய முதற்பெரும் புலவர் அவரே என்று சொல்வதற்கு இந்த ஒரு சான்றே போதும்.

### முதல் உரைநடை நூல்

நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களைக் கொண்டு பார்க்கும் போது, நக்கீரரின் களவியல் உரையே தமிழ் உரை நடையைக் கொண்ட முதல் நூலாக இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் காணும் உரைப் பாட்டு மடை போன்றவற்றையும், பெருந்தேவனுர்

பார்த வசனப் பகுதியையும் இங்கே நான் கணக்கில் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் இதுதான்: சிலப்பதிகாரத்தில் காண்பது நூற்றுக்கு நூறு உரை நடையல்ல; செய்யுளுக்கும் வசனத்துக்கும் பொதுவாக உண்டாக்கப்பட்ட ஒரு நடையாக உள்ளது. பெருந்தேவனுர் பாரதத்தில் காணும் உரை நடை பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கி. பி. 7-ம் நூற்ருண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படும் களவியல் உரையிலிருந்து "புதுமைப்பித்தன் கதைகள்" வரை—சுமார் 1300 ஆண்டுக் காலத்தில்—தமிழ் உரை நடையை எவ்வாறெல்லாம் புலவர் பெருமக்களும் பிறரும் கையாண்டுள்ளனர் என்பதை இந்தப் பகுதியில் ஓரளவுக்குக் காணலாம்.

74 பேரின் வசன நடைகளில் மாதிரிக்குக் கொஞ்சமாகக் காலக்கிரமப்படி கொடுத்திருக்கிறேன். பேச்சு வழக்கில் பயிலும் தமிழையும் கல்வெட்டுத் தமிழையும் பழைய நாடக வசனங்களையுங்கூடச் சேர்த்திருக்கிறேன். இப்படி நானுவித உரை நடைகளும் கொண்ட இந்தப் பகுதி தமிழன்பர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களும் ஒரு நல்விருந்தாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

நன்றியுரை

இங்கே காணும் உரை நடைகளில் பல, பதிப்புரிமையுள்ள நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை. அந்நூல்களின் ஆசிரியர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிரசுரகர்த்தர்களின் பெயர்களும் அந்தந்தப் பகுதியின் கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ ★ ★ ★

## 1

### நக்கீரர் (கி பி. 7-ம் நூற்ருண்டு)

இப்பெயர் கொண்ட புலவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்திருக்கிருர்கள் என்றும் களவியல் (இறையனுர் அகப் பொருள்) உரை செய்த நக்கீரர் 7-ம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த ஒரு ஜைனர் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். இவரும், சங்கச் செய்யுட்களின் ஆசிரியரான நக்கீரரும், திருமுறைப் பாடல்களின் ஆசிரியரான நக்கீரரும் வெவ்வேறு புலவர்கள். களவியல் உரையிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

#### களவியல் உரை

அக்காலத்துப் பாண்டியனுடு பன்னிரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே பசிகடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாம் கூவி, "வம்மின் யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்ருன். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னிரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர், அரசன், "இனி நாடு நாடாயிற்ருகலின், நூல் வல்லாரைக் கொணர்க" என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, "பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்" என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல்நிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

## 2

### ராஜ ராஜ சோழன் கல்வெட்டு (கி. பி. 985—1013)

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜன் வெட்டுவித்த ஒரு கல்வெட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா பி. வி. ஜகதீசய்யரால் எழுதப்பட்ட "முதலாவது ராஜ ராஜ சோழன்" (1940) என்ற நூலிலிருந்து:

#### திருவிழாத் திட்டம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியைத் தனக்கே யுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்க பாடியுந் தடியபாடியுந் நுளம்பபாடியுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் ரட்டபாடி ஏழரையிலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளருழியுளெல்லாயாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே சேழியரைத் தேசுகொள் கோராஜகெஸரி வர்மரான ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவது

உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்கு ஸ்ரீகாரியஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்கும் தக்ஷிணமேரு விடங்கர்க்குந் தூபத்தோடு காட்டுந் தீபத்துக்குக் கற்பூரத்திரியிட்டு எரிய வைத்த பொலிசைக் காசுந் திங்கடோறுந் திருவிழா எழுந்தருளுந் திருமேனிக்கும் நம்பிராட்டியார்க்குந் திருவமிதுள்ளிட்டு வேண்டுவன வற்றுக்கு பொலிசை யூட்டுக்கு வைத்த காசும் இக்காசு பொலிசை யூட்டுக்குக் கொண்ட ஊருங் கல்லில் வெட்டின.

## 3

### இளம்பூரணர் (கி. பி. 12ம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர்)

தொல்காப்பியத்திற்கு முதன் முதலில் உரை எழுதியவர். அதனுல் "உரையாசிரியர்" என்று மட்டும் சொன்னுல் அது இவரைத்தான் குறிக்கும். பாண்டிய நாட்டில் பிறந்தவர். ஜைன மதத்தினர். தொல்காப்பியம்: பொருளதிகார உரையிலிருந்து ஒருபகுதி:

#### பொருளதிகார உரை

அஃதற்ருக, இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னை யெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின் முல்லையாகிய நிலனும், வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன புயல்கள் முழங்கக் கவின் பெறும் ஆதலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப் பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங் காலம் ஆதலானும் அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங்கால மாதலானும், ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின், அதுவும் சிறந்தது ஆயிற்று. குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற் புணர்ச்சி பொருளாதலின், அப்புணர்ச்சிக்குத் தனி இடம் வேண்டுமன்றே, அது கூதிர்காலத்துப் பகலும் இரவும் நுண்துளி சிதறி இயங்குவார் இலராம் ஆதலின், ஆண்டுத் தனிப் படல் எளிதாதலின், அதற்கு அது சிறந்தது. நடு நாள் யாமமும் அவ்வாருகலின் அதுவும் சிறந்தது. மருதத்திற்கு நிலன் பழனஞ்சார்ந்த இடமாதலான், ஆண்டு உறைவார் மேல்மக்களாதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம்மனையகத்து உறைந்தமை பிறர் அறியாமை மறைத்தல் வேண்டி வைகறைக்கண் தம்மனையகத்துப் பெயரும் வழி, ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார்கிலளா மாதலால், அவை அந்நிலத்திற்குச் சிறந்தன. நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின், தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினும் இராப் பொழுது மிகுமாதலின், அப்பொழுது வருதற்கேதுவாகிய எற்பாடு கண்டார் இனி வருவது மாலையென வருத்த முறுதலின், அதற்கு அது சிறந்தது என்க.

பாலைப் பொருளாவது, பிரிவு; அப்பிரிவின் கண் தலைமகற்கு வருத்தம் உறும் என்று தலைமகள் கவலுங் கால், நிழலும் நீரும் இல்லாத வழி ஏகினர் எனவும் கவலுமாகலின், அதற்கு அது சிறந்தது என்க.

—[திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பு: முதற் பதிப்பு, ஜூன், 1953.]

## 4

### அடியார்க்கு நல்லார் (12-ம் நூற்றுண்டு)

கோயமுத்தூர் மாவட்டத்தில் நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவர். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர். சைவ சமயத்தவர் என்றும் கருதப்படுகிருர். இவர் எழுதிய சிலப்பதிகார உரையில் இரு பகுதிகள்:

#### கடலாடு காதை உரை

இதனுற் சொல்லியது: நாரதன் கலகப்பிரியனுதலால் தனது யாழைப் பகை நரம்பு பட இசைத்தலின், தான் இங்ஙனமிசைத்தற்குக் காரணமின்ருகவும் இவள் கலங்கினமைதான் நமக்கறிவித்து நம்மால் இவளை முனிவிப்பான் வேண்டி நம்மை மதியானுயினனென அவளொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கல மிழக்க; மண் மிசைத் தங்குக; இவள் மண்ணிற் போய்ப் பிறக்க வெனச் சாபம் இட்டானென்பது. வீணை மண்மிசைத் தங்குகவெனவே இவனை நீங்காவரத்தின் வந்ததாக லான் இவனும் மண்மிசைத் தங்குக வென்பதாயிற்று; எனவே இவன் மண்ணிற் பிறவானுதலுணர்க.

இவ்வீணையை உருப்பசி கையில் வீணையென்பாருமுளர்; அது பொருத்தமின்று.

#### வேனிற் காதை உரை

ஆனல், நெடியோன் குன்றமும் தொடியோன் நதியுமென்னுது பௌவமுமென்றது என்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புணர்ந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினர் காய்சின வழுதிமுதற் கடுங்கோனிருயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சமயமாகீர்த்தியனுகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினன். அக்காலத்து அவர் நாட்டுத் தென்

பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்கு மிடையே எழு நூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும் ஏழ் முன் பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ் குன்ற நாடும் ஏழ் குணகாரை நாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத் தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழித லாற் குமரியாகிய பௌவமென்றுரைரென்றுணர்க.

—[டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு (3-ம் பதிப்பு: 1927)].

## 5

## பரிமேலழகர் (13-ம் நூற்றாண்டு)

காஞ்சிபுரத்தில் பிறந்தவர். திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை எழுதியவர். தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதியவர்களில் இவரே தலை சிறந்தவர் என்று பெரும் புலவர்களால் போற்றப் படுபவர். திருக்குறள் அறத்துப்பாலுக்கு இவர் எழுதியுள்ள உரைப்பாயிரம் பின்வருமாறு:

### உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறி அறிந்து எய்து தற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல் களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே ஆம்.

அவற்றுள், அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் ஆம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார், தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே 'எனது எனது' என்று இருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் செல்வது. அது 'கடன் கோடல்' முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ் ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினரை, அந்நெறி நிறுத்துதற் பொருட்டு, ஒப்ப நாடி, அதற்குத் தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலக நெறி நிறுத்து தற் பயத்தவாவது அல்லது, ஒழுக்கம் போல மக்கள் உயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பில ஆகலானும், அவை தாம் நூலானே அன்றி உணர்வு மிகுதியானும் தேய இயற்கையானும் அறியப்படுதலாலும், அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளு வரால் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய், வருணந்தோறும் வேறுபாடு உண்மையின், சிறுபான்மையாகிய அச்சிறப் பியல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும் பான்மையாகிய பொது இயல்பு பற்றி 'இல்லறம்,' 'துற வறம்' என இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று, அதற்குத் துணை யாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுவது ஆதலின், அதனை முதற்கண் கூறுவான் தொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட் டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

## 6

## பெரியவாச்சான் பிள்ளை (1227-ல் பிறப்பு)

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு மணிப் பிரவாள நடையில் வியாக்கியானம் எழுதியுள்ள இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சேங்க நல்லூரில் பிறந்தவர். ஸ்ரீரங்கத்தில் வசித்துவந்தார். வைணவ சமயப் பெரியோர், இவர் கலியப்தம் 4329-ல் பிறந்தவர் என்று கூறியிருக்கின்றனர். அது கி. பி. 1227 ஆகும். வேதாந்த தேசிகரும் (1269-1369) இவர் காலத்தவராகக் கூறப்படு கிறார். திருப்பல்லாண்டுக்கு இவர் எழுதியுள்ள வியாக்கியானத்தின் ஒருபகுதி:

"செவ்வடி செவ்வி"

"ஆஸ்ரிதர்க்குத் தஞ்சமான ஸௌலப்யத் தையும் மிடுக்கையுங்கண்டால் நீரிங்ஙனே அஞ்சக் கடவீரோ?" என்ன (உன் செவ்வடி) அது என்னால் வருகிறதன்று, உன் வடிவின் வைலக்ஷண்யத்தாலே வருகிறது. நீதான் உன்னைக் கண்ணாடிப்புறத்திலே கண்டால், ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான நீயும் கலங்கிப் பரிய வேண்டும்படியன்றோ உன் வடிவிருப்பது. (செவ்வடி) செவ்விய அடியென்னுதல்; சிவந்த அடியென்னுதல், குடிலஹ்ருதயர்க்கும் செவ்விதாகையும், திருமேனிக்குப் பரபாகமாகையும், இரண்டும் இவர்க்கு பயஸ்தாந மாகிறதிறே. சேஷபூதன் சேஷிவடிவைக் கண்டால் "திருவடிகள்" என்றிறே வ்யவஹரிப்பது. ஆஸ்ரயண வேளையோடு போகவேளையோடு மங்களாஸாஸந

வேளேயோடு வாசியற ஆஸ்ரிதரிழியும் துறை திருவடி களிறே. (செவ்வி) (க) "அரும்பிணை யலரை" என்னு மாபோலே நித்ய யௌவநமாயிருக்கை.

## 7

## பேராசிரியர் (13-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்)

தொல்காப்பியம்: மெய்ப்பாட்டியல் முதலிய நான்கு இயல்களுக்கு உரை எழுதியவர். திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியரும் இவரே என்று கூறப்படுகிறது. இவரைப் பற்றி வேறு விவரங்கள் தெரியவில்லை.

### திருக்கோவையார் உரை

ஓர் இளம் பெண்ணைச் சந்தித்த இளைஞன் ஒருவன் அவளுடைய அழகிய தோற்றத்தை வியக்கும்போது, முகத்துக்குத் தாமரையை உவமையாக்கிப் போற்றும் செய்தி திருக்கோவையாரின் முதல்பாட்டில் கூறப்படு கிறது. அந்தப் பாட்டு "திருவளர் தாமரை" என்று தொடங்குகிறது. இந்தச் சொற்களுக்குப் பேராசிரியர் எழுதியுள்ள உரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

### "திருவளர் தாமரை"

திரு வென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமென்றது அழகு. இஃதென்சொல்லியவாறோ வெனின், யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானே அக்கண்டவற்கு அப்பொருண்மேற்சென்ற விருப்பத்தோடே கூடியவழகு. அதன் மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்தவுருவும் நலனும் ஒளியு மெவ்வகையானும் பிறிதொன்றற்கில்லாமையால். திரு வென்றது அழகுக்கே பெயராயிற்று. அங்ஙனமாயின் இது செய்யுளினொழிய வழக்கினும் வருவதுண்டோ வெனின் உண்டு; கோயிலைத் திருக்கோயிலென்றும், கோயில் வாயிலைத் திருவாயிலென்றும், அலகைத் திருவலகென்றும், பாதுகையைத் திருவடிநிலையென்றும் வழங்கும் இத்தொடக்கத்தன வெல்லாந் திருமகளை நோக்கி யெழுந்தனவல்ல. அது கண்டவனுடைய விருப்பத்தானே யெழுந்தது. ஆதலானுந் திருவென்பது அழகென்றேயறிக. அதனாற்றிரு வென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமே. அல்லதூஉந் தான்கண்ட வடிவின் பெருமையைப் பாராட்டுவானாக லான், ஒருத்தியிருந்த தவிசை இவளுக்கு முகமாகக் கூறுதல் வழுவாம். ஆதலாற் றான்கண்ட வடிவி னுயர்ச்சியையே கூறினானா மெனக் கொள்க.........

இனித் திருமகடங்குந் தாமரையெனினு மமையு மென்று அமைவுரைத்த தென்னை? இதனையுவமை யாக்கக் குறையென்னை யெனின், திருமகளாலே தாமரை யுயர்ந்ததாம். தாமரையினது சிறப்புக் கூறிற்றில்லையாம். என்னை, எல்லாராலும் விரும்பப்பட்ட அழகு அவட்குண்டாகையாலே திருமகளென்று பெய ராயிற்று. அங்ஙனம் பெருமையுடையவளும் இதன் சிறப்பு நோக்கியே யிதனி லிருந்தா ளல்லது தன்னாலே யிதற்குச் சிறப்புப் பெற வேண்டி யிருந்தாளல்லள், ஆகலாற் றாமரைக் கொத்ததும் மிக்கதுமில்லை. அங்ஙனம் பெருமையுடையவளாலும் விரும்பப்பட்ட தாகலான் திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்க மென்பது பெற்றாம்.

## 8

## நச்சினார்க்கினியர் (கி. பி. 16-ம் நூற்றாண்டு)

மதுரையில் பிறந்தவர். சைவ சமயத்தினர். "உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்று போற்றப்படும் உரையாசிரியர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி முதலிய வற்றிற்கு உரை எழுதியவர்.

### திருமுருகாற்றுப்படை உரை

இறைவன் உமையை வதுவை செய்து கொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிர வேண்டு மென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்கு உடம் பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப அதனை இருடிகளுணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறு கூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன்தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறு வடிவும் ஒன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லு வதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்ற தென்று புராணங் கூறிற்று. இதனை, "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாடற் பாட்டா னுணர்க. இவ்வாறன்றி வேறு புராணங் கூறுவாரு முளர்.........

சாபமென்றது: பிள்ளையார் அசுரரை யழித்துத் தேவரைக் காத்தற்கு இந்திரன் மகள் தெய்வயானை யாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே, பிள்ளையார் தம் கையில் வேலை நோக்கி, "நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்" என்ன, அருகிருந்த அயன், "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ" என்றானாக, "நங்கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சக்தியுண்டோ" என்று கோபித்து, "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச் செல்வாய்" என்ற சாபத்தை.

—[பத்துப்பாட்டு: டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1931]

## 9

### திருமலை நாயக்கர் காலத்துக் கையெழுத்துப் பிரதி (17-ம் நூற்றாண்டு)

இது திருமலை நாயக்கரின் படைத்தலைவனான தளவாய் ராமப்பையன், சேதுபதியுடன் செய்த போரைப்பற்றிக் கூறுகிறது. போர் நடந்த ஆண்டு கி. பி. 1637. எனவே இது அந்தச் சமயத்தில் வாழ்ந்த ஒருவர் எழுதியது என்பது தெளிவு.

#### தளவாய் ராமப்பய்யன்

இராசா திருமலைநாயக்கர் மதுரையில் பட்டங் கட்டிக்கொண்டு அவர் தம்பி குமாரமுத்து நாயக்கர் சின்னத் துரையுமாக இராச்சியம் ஆளையில், சீரங்கம் மதுரை முதல்க் கொண்டு விஷ்ட்டிணு தலங்கள் சிவஸ் தலங்களுக்கெல்லாம் தொண்ணூத்தி ஆறு கோபுரம் 'ராயர் கோபுர'மென்று கோபுரம் யெல்லாம் பெருசாய் ஒரு முகிற்தத்தில் அடிப்போட்டு சிறுது வேலையள் முடித்தார். மதுரையில்த் தெற்பக் குளமும் புது மண்ட பமும் அரமனையுங் கட்டி வைச்சார்.

அப்போது கூத்தன் சேதுபதி குமாரன் தளவாய் சேதுபதி சடைக்க தேவனென்றும் அவருக்கு இரண்டு நாமகறணம். அந்தச் சடைக்கத் தேவனென்கிறவர் அரமனைக்கிப் பணமுங் குடாமல் நிகாரித்து ரெம்பத் துற்மாற்கங்களாய் நடப்பித்துக் கொண்டு வந்தார்கள். அது சமாசாரம் இராசா திருமலை நாயக்கர் கேட்டு அவருக்குத் தாகிதையாய் நிருபம் யெளுதி அனுப்பிவிச் சார்கள். அந்த நிறுபத்தையுந் தள்ளிப் போன மனு சரையுமடித்துக் கோபம் வைத்துத் தளவாய் இராமப் பய்யரையும் சகல தளமும் யெளுபத்திரண்டு பாளையக் காரரையும் அனுப்பி இராமநாதபுரத்து வரைக்குஞ் சண்டை பண்ணிக் கோட்டையை விட்டுப்போட்டு சடைக்கத் தேவர் ராமேசுபரத்தில்ப் போயிருந்தார். தளவாயி ராமப்பய்யனவர்கள் பாம்பநாத்துக்கு குறுக்கை அணை கட்டி அதின்பேரில் தளத்தை நடத்தி இராமீசுரத்துக்குப் போய் சண்டை பண்ணி சடைக்கத் தேவனையும் பிடித்துக்கொண்டு வந்து மதுரையில் நிகள பந்தனம் பண்ணி இருந்ததில்ச் சிறுது நாளைக்கிப் பிறகு ராமேசுபரம் பாதை மாற்கங்களில்ச் சில்லறையளா யிருந்தது. அப்படியிருக்கையில் வயிராகியள் லாட சன்னாசியள் வடக்கேயிருந்து இராமேசுர யாத்திரைக்கு வந்து இராசா அரமனை வாசலில் வெகுனாள் வரைக்கும் காத்திருந்து பிருதி பண்ணிவிச்சுச் சேதுபதியை விடச் சொல்லி ரெம்ப வேண்டிக் கொண்டார்கள். ராசாவுக்கு ரெம்பத் தயவு வந்து சடைக்கன் சேதுபதியைவிட்டு இனிமேல் புத்தியாய் நடந்துக்கோவென்று வஷ்த்திர பூசனைதியளும் வெகுமதி கொடுத்து சீமையும் கொடுத்து அனுப்பிவிச்சார்கள்.

[Taylor's Oriental Historical Manuscripts. Vol. II, 24, 26 ]

## 10

### வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி) (1680—1742)

இத்தாலியில் பிறந்த இவர் 1700-ல் இந்தியா விற்கு வந்தார். தமிழகத்தின் தென் மாவட்டங் களில் கிறிஸ்தவ சமயப் பிரசாரம் செய்ததோடு தமிழுக்கும் அருந்தொண்டாற்றி, திருநெல்வேலி ஜில்லா மணப்பாடு என்னும் ஊரில் காலமானார். தமிழுக்கு முதல் அகராதியான சதுரகராதி, தேம் பாவணி காவியம், திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், அவிவேக பூரண குரு என்ற பரமார்த்த குரு கதை என்பன இவர் இயற்றிய நூல்களுட் சில.

#### தொன்னூல் விளக்கம்

...எப்பொருளினும் அதனுண்மை யுணர்தலே ஞானம். உணர்ந்த பொருளி னிவையே நல்லவையென வும் இவையே யல்லவை யெனவும் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே யல்லவை யொருவி நல்லவை மருவி யொழுகலே யொழுக்கம். இந்நல்லொழுக்கமே யனைத் தறனுகையிலிவையெலா மனமுயற்சியாலாகவேண்டுழி, மனமொவ்வா வறனெல்லாம் பொய்யென விகழப்படு வது முறையே யென்பது. அன்றியும் பிறர் நோய் கண்டு அகத்திரங்கா ஊனயோவென வாய் பொய்த்த இரக்கங் காட்டல் தயையோ; நெஞ்சங்கடுத்த சுடு பகை கொண்டான் முகநக நட்பது நட்போ; ஒன்றீந் தொருபத் தடித்துக் கொள்ளத் துணிந்தான் பிறர்க் கீந்துதவுதல் கொடையோ......

[இவர் பரமார்த்த குரு கதையில் வேறொரு வித மான நடையைக் கையாண்டிருப்பதைக் கீழே காணலாம்.]

#### பரமார்த்தனென்னும் அவிவேக பூரண குரு கதை: முதலாவது ஆற்றைக் கடந்தது

அவிவேக பூரணகுருவென்று ஒரு ஆசாரியரிருந்தார். அவர் ஏவிய ஊழியம் செய்யும்படி மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்று பெயர் பெற்ற சீஷர் கள் ஐந்து பேர் அவர் மடத்திலிருந்தார்கள். இந்தச் சீஷரும், குருவும் ஆகிய ஆறுபேரும் ஒரு நாள் மற்ற சீஷர்களை விசாரிக்கும்படிக் காலையிலெழுந்து சுற்று கிராமங்களுக்குக் கால் நடையாய் நடந்து போனார்கள். போய்த் திரும்புமளவில், வழி நடுவிலிருக்கிற ஓராற்றங் கரையில் மூன்றுஞ் சாமத்துக்கு வந்து சேர்ந்து, நதி யைப் பார்த்து, அதிலிறங்கப் பயந்து, இது மிகவும் பொல்லாத மோசமுடையது, ஆகையால் இது விழித் திருக்கும் வேளையில் இதைக் கடந்து போகக்கூடாது என்று குருவானவர், "ஆறு நித்திரை செய்கிறதோ விழித்திருக்கிறதோ, சோதித்துப் பார்," என்று மிலேச்

சனை ஏவினுர். அவன் குருவார்த்தையைச் சிரசின் மேற்கொண்டு, அப்போது புகைச் சுருட்டுப் பற்ற வைக்கும்படி தன் கையில் எடுத்த கொள்ளிக்கட்டையைக் கொண்டு போய், தான் ஆற்றில் இறங்காமல் தூர நின்று எட்டித் தண்ணீரிலே தோய்த்தவுடனே தண்ணீர் சுறீரென்று புகைந்தது கண்டு, மிலேச்சன் பதறித் தவறிக் கீழே விழுந்து பதைத்து உதைத்துக் கொண்டு, மெல்லென எழுந்து நடுங்கிப் பயந்து அலறி உளறி அழுதுகொண்டு ஓடி வந்து, ''ஐயா, ஐயா, நதியைக் கடக்கிறதற்கு இது தருணமல்ல. அது விழித்திருக்கிறது. நான் தொட்டவுடனே நஞ்சுள்ள நாகம் போலச் சீறிக் கொதித்துக் கோபித்து இரைந்து புகைந்து எழுந்து பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது. அதன் உக்கிரத்துக்கு இலக்காகாமல் தங்கள் பரம கிருபையினுலும், என்னைப் பெற்றவள் செய்த தவத்தினுலும், தப்பி நான் உயிர் பிழைத்து மீண்டு வந்தது மிகவும் அதிசயம்'' என்ருன்.

## 11

## ஆனந்தரங்கப் பிள்ளை (1709—1761)

புதுச்சேரியின் பிரெஞ்சு கவர்னர் ஜோஸப் பிரான்ஸ்வா டூப்ளே என்பவரின் மொழி பெயர்ப்பாளராகவும், ஆலோசகராகவும் இருந்தவர். சென்னையை அடுத்த பிரம்பூரில் பிறந்து, புதுச்சேரியில் வாழ்ந்து மறைந்தார். வள்ளல்; சொந்தமாகக் கப்பல் வாணிகம் செய்த செல்வந்தர்; புலவர்களின் பாமாலை சூடியவர். இவர் எழுதிய தினப்படி சேதி குறிப்பு (சொஸ்த லிகிதம்) சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிய ஆதார நூலாகத் திகழ்கிறது. அதிலிருந்து எடுத்த ஒரு பகுதியே கீழே காணப்படுகிறது:

### தினப்படி சேதி குறிப்பு

காளயுக்தி ஸு கார்த்திகை மீ 13 உ 1738 நவம்பர் மீ 25 உ செவ்வாய்க்கிழமை

காலமே சூரிய உதைய வேளைக்கு முன்னே குவர்னர் துரை வீட்டுக்குப் போனேன். அவர் நித்திரை வேளை ஆனபடியினுலே வெளியே இருந்து அவர் எழுந்திருந்தவுடனே மேல் வீட்டு மேலே போய் அவர் கபினெத்திலே யிருக்கச் செய்கையிலே கொண்டுபோன பிரசாஞ்சை மேசைமேல் வைத்து உபசரணையான வார்த்தை சொன்னேன். அதற்கு அவரிருந்துகொண்டு இந்தக் காரியமானதின் பிறகு அப்படியே கைக்கொள்ளுகிறேன் இப்போது உன் வசத்திலே இருக்கட்டும் ஆனுல் நீர் ஒரு மாசத்திற்கு முன்னே சொன்னுல் எனக்குப் பிரயாசையில்லை கோன்சேலிலே உனக்கு யார் சிநேகிதம் முசே தீருவார் (M. Dirois) உடனே போய் நீர் தெரியப்படச் சொல்லிக் கொள்ளும் நானும் கோன்சேலிலே நேராய் உனக்கு பளுவில்லாமல் தீர்த்துப் போடுகிறேன் என்று சொன்னுர். அதுக்கு நான் முசே தீருவார் (M. Dirois) அவர்களுக்கும் எனக்கும் சிநேகம் என்று சொன்னுல் இவர் மனத்திலே என்னமாய்த் தோத்துமோவென்று யோசனை பண்ணி முசே தீருவார் (M. Dirois)க்கும் எனக்கும் சிநேகம் இல்லை அவர் வீட்டுக்கு ஒருகாலும் போனதில்லை அப்படியிருக்க இது முன்னிலையாய்ப் போனுல் அவர் என்ன சொல்லுவாரோ தெரியாது முசே துலார்முக்கும் (M. Dulaurens) முசே கோலாருக்கும் எனக்கும் கொஞ்ச நஞ்சம் சிநேகமுண்டு அவர்களுக்கு வேணுமென்ருல் போய் சொல்லிக்கொள்ளுகிறேன் என்று சொல்லி அவர்கள் தொட்டு காரியம் என்ன இருக்கிறது தேவரீரவர்கள் கிருபை பண்ண வேண்டுமென்றும் காரியம் ஆகவேண்டும். அவர்கள் தொட்டு என்ன காரியம் இருக்கிறது என்று சொன்னுன்ன அதுக்கு அவரிருந்து கொண்டு நல்லது நீர் ஆலோசித்துக் கொண்டுவந்த பிரசாஞ்சை தேவாள் காப்பாற்றவேண்டும் என்று ரொம்பவும் வருந்தி சொன்ன விதத்தில் அவர் முகத்தை கடுகடுத்துக்கொண்டு கோபமாய் நீர் இந்த பிரசாஞ்சை கொண்டு போகாவிட்டால் உம்முடைய காரியம் நான் அனுகூலம் பண்ணிக் கொடுக்கிறதில்லை என்று சுருக்கமாய் சொன்ன மாத்திரத்திலே, ஆனுல் உம்முடைய அடிமையாய் இருக்கிற என் பேரிலே கிருபை பண்ணிக் காட்டி நடப்பிக்கிற காரியம் பாரம் உம்மது என்று பின்னையும் அநேக விதமாய் உபசாரம் எப்படிச் சொல்ல வேணுமோ அந்தப்படி எனக்கு தோத்தின படிக்குச் சொல்லிப்போட்டு வைத்து வந்து விட்டேன். இப்புறம் வந்து நான் யோசனை பண்ணினதும் எனக்குத் தோற்றின தென்னவென்ருல் வட்டித் தொகை விவகாரம் விஸ்தாரமாச்சுதே நாம் கொண்டுபோன gift (பிரசாஞ்சு) கொஞ்சம் என்று காரியத்திலே நம்முடைய பிரயாசையைக் காண்பித்து அதனுல் விஸ்தாரமாய் வரப் பெறலாம் என்று யோசனை பண்ணினுப் போலே காணுது என்று தோன்றினது.

[1948-ல் வெளி வந்த நூலிலிருந்து. முதற் புத்தகம், சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸ், புதுவை.]

## 12

## பச்சையப்ப முதலியார் (1754—1794)

சென்னைக்கு அருகில் உள்ள பெரியபாளையத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தம் உழைப்பால் பெரிய செல்வந்தராகி 40 வயதிற்குள் காலமானவர். பெரிய வள்ளல். சென்னைக்குக் குடியேறி ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனி மொழி பெயப்பாளராகவும். ஏஜெண்டாகவும் இருந்தார். குத்தகை எடுத்துத் தொழில் நடத்தினுர்.

ஆர்க்காட்டு நவாப், தஞ்சாவூர் மன்னர்போன்ருே ரிடம் தொடர்புகள் கொண்டவர். அவருடைய சொத்துக்களை ஆரம்ப மூலதனமாகக் கொண்டே சென்னையிலும் காஞ்சிபுரத்திலும் அவர் பெயரால் கல்லூரிகள் நடைபெறுகின்றன. சிதம்பரத்திலும் ஒரு கல்வி ஸ்தாபனம் இருக்கிறது. பல சத்திரங்கள் கட்டினர். அவர் விரும்பியவாறே திருவையாற்றில் காலமானர். அவர் தம் வாழ்நாளில் கடைசியாக எழுதிய ஒரு கடிதம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இயன்றவரை பிழைதிருத்திப் பதிப்பிக்கப்பட்டிருப்பதாக இவருடைய வரலாற்றை எழுதியுள்ள டி. பக்தவத்ஸலம் கூறுகிருர்.

**கடைசிக் கடிதம்**

சிவமயம்

**ம-ா-ா-ஸ்ரீ, நாராயண பிள்ளை அவர்கட்கு**

தேவரீர் மாமா அவர்களுக்குத் தங்கள் பச்சையப்பன் தெண்டனிட்ட விண்ணப்பம். நாளது பங்குனி மீ 14-உ வரைக்கும் இவ்விடத்திலுள்ளாரலை வரும் கும்பகோணத்தில் க்ஷேமம். இதற்கு முன் தங்களுக்கு எழுதியனுப்பியிருக்கிற கடிதாசியினல் சகலமும் விசதமாயிருக்குமே. இதற்கு முன் எழுதிய கடிதத்தில் கொஞ்சம் பளுவாயிருக்கிறதாய் எழுதியிருந்தேன். நேற்றும் இன்றும் கொஞ்சம் லகுவாயிருக்கிறது. இனி சிவகடாக்ஷம் எப்படியிருக்குமோ அறியவேண்டும். தாங்கள் ஒன்றுக்கும் அதைரியப்படத் தேவையில்லை. திருவுளக்கிருபை செம்மையாய்க் கூட்டி வைக்கும் போலே யிருக்கிறது. பங்குனி மீ 30உ வரைக்கும் பெட்டியிருப்பு இவ்வளவு என்று தெரியும் படிக்குக் கணக்கு அனுப்புவிக்கவும். இதுவுமல்லாமல் முன்னலே நான் பட்டணம் வந்திருந்தபோது சிவகங்கையாருக்காக வரதப்பிள்ளையவர்களண்டை இரண்டாயிரம் பூவராகன் கடன் வாங்கியிருந்தேனே. அதற்கு உடனே ஆயிரம் வராகன் செலுத்திப்போட்டேன். இன்னும் ஆயிர வராகனும் வட்டியும் செல்ல வேண்டும். அதுவும் செலுத்திப் போடுகிருேமென்று அவருக்குச் சொல்லவும். ஒரு வேளை சரீரத்துக்கு அபாயம் வந்தாலும் அவருக்கு ஆயிர வராகனும் அவர் கணக்காலுள்ள பிரகாரம் உள்ள வட்டியும் கொடுத்து விட வேண்டியது. அவருடனேயும் இந்தச் சம்மதி சொல்லிப் போடவும். மற்றபடி இவ்விடத்தில் நான் நடந்து கொள்ள வேண்டியதற்கு இன்னபடியென்று நிருபம் தயவு செய்யவும்.

**வேணும், விண்ணப்பம்.**

மற்ற காரியங்களெல்லாம் நானெல்லாம் வரையறை பண்ணியிருக்கிறேனே யல்லாமல் வித்தியாசமிராது. தங்கள் சித்தமறியவும்.

[டி. பக்தவத்ஸலம் எழுதிய "பச்சையப்பன்" என்ற நூலிலிருந்து. சென்னை ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் வெளியீடு, 1937.]

## 13

## சங். வேதநாயக சாஸ்திரியார் (1774 – 1864)

திருநெல்வேலியில் பிறந்து தஞ்சையில் வாழ்ந்தவர். சுவார்ட்ஸ் என்ற போதகரின் சீடர். சரபோஜி மன்னனல் கௌரவிக்கப்பட்டவர். கிறிஸ்து சமயக் கவிஞர். ஏராளமான செய்யுள் பிரபந்தங்களை இயற்றியவர். மிகச் சிறந்த பாடல்களைக் கொண்ட "பராபரன் மாலை" என்ற தமது நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை பின்வருமாறு:

**மகாப் பெரிய பக்திமான் பாடின பராபரன் மாலை**

இருபங்கானது :—1. கலிப்பா 50
2. கலித்துறை 110

**முகவுரை**

தமிழ்ப் படிப்புக்கு நாலாம் பாடமான விப்பொஸ்தகத்தைப் பராபரன்மாலை யென்றழைத் திருபங்காய்ப் பிரித்தது.

முதற்பங்கு, கலிப்பாவாகப் பாடிய வைம்பது பாடல். இருபத்திரண்டு வருடத்துக்கு முன் அல்லது 1794ஷூத்திலே பாடி முடிந்து சபையிலே யங்கங்கே வழங்கலாயிற்று.

இந்த வருடத்திலே அதைத் திருத்தி யிலக்கண விதிக்குந் தேவ வசனத்துக்கு மொத்திராத சில பாடல்களை முற்றிலும் தள்ளியதற்கு வதிலாக வேறே பாடல்களைச் சேர்த்துத் திட்டப்படுத்தப்பட்டது.

இரண்டாம் பங்கு, கலித்துறையாகப் பாடிய நூற்றுப் பத்துப் பாடலிவ் விரண்டுந் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் வழங்கப்படுகிற கதிர்காம மாலை, அம்பிகை மாலைக்கு பாடாந்திரமாய்த் தோன்றிற்று.

இவைகளிளைஞரின் வாசிப்புக்கு மாத்திரந்தானே யல்ல. பராபரனைத் துதித்து ஸ்தோத்திரம் பண்ணுகிற செபத்தியானங்களுக்கும் மகா பிரயோஜனமாயிருக்கும்.

இதைப் பற்றி 1815 ஷூத்தில் வேதநாயக சாஸ்திரி யிந்தப் பராபரன் மாலைகளை யொன்றுபடுத்தித் தாவீதினிருதயத்தைக் கொண்டவர்களுக்கு அல்லது பராபரனைச் சினேகிக்கிற ஒவ்வொரு ஆத்துமங்களுக்கு மகா எழுப்புதலையுஞ் சந்தோஷத்தையுங் கொடுக்குங் காணிக்கையாக ஸ்தாபித்தான்.

[ஞானவுலா & பராபன்மாலை : தஞ்சாவூர் சாஸ்திரியார் வீட்டுப் பதிப்பு, 1940]

## 14

### தாண்டவராய முதலியார் (19-ம் நூற்றுண்டு)

இந்தப் பன்மொழிப் புலவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் சூளும்பேட்டுக்கு அருகிலுள்ள வில்லியம்பாக்கத்தில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். செங்கற்பட்டில் நீதிபதியாகவும் பதவி வகித்திருக்கிருர். "கதா மஞ்சரி" முதலிய நூல்களையும் சில செய்யுள் நூல்களையும் இயற்றியிருப்பதுடன், சேந்தன் திவாகரம், சூடாமணி நிகண்டு, சதுரகராதி ஆகியவற்றையும் பதிப்பித்தார். 1826-ல் பஞ்சதந்திரத்தை மராத்தி மொழியிலிருந்து தமிழாக்கினுர். எளிய நடையில் தொடங்கி படிப்படியாக நடையைக் கடினமாக்கி இவர் இதனைத் தமிழாக்கியிருப்பதன் காரணம், மாணவர்கள் தமிழ் நடையைத் திறம்படக் கையாளக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

#### பஞ்ச தந்திரம்:

#### நூலின் தொடக்கத்தில் கையாளப்பட்டுள்ள நடை

சோமசன்மா, "ஒரு காட்டில் ஒரு சிங்கமும் எருதுங்கூடி மிகவும் ஒருமையாக வாழ்ந்திருந்தன. அந்தச் சிநேகத்தைக் கோட்சொல்லுதலும் உலோப குணமுமுள்ள ஒரு நரி வந்து கெடுத்தது," என்று சொல்ல, ராஜகுமாரர்கள், "அது எப்படி?" என, சோமசன்மா சொல்லத் தொடங்கினுன்:

தென்னுட்டிலே மகிழாருப்பியம் என்னும் பட்டணத்தில் வர்த்தமானன் என்று ஒரு வர்த்தகன் இருந்தான். அவனுக்கு வெகு பணமிருந்தும், இன்னுஞ் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையினுல், பின் வருகிறபடி ஆலோசிக்கலாஞன். யாதொன்று சம்பாதிப்பது அருமையோ, அதைச் சம்பாதிக்க வேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றினதை விருத்தி பண்ண வேண்டும். விருத்தி பண்ணினதைத் தானும் அனுபவித்து, உத்தமபாத்திரத்திற் செலவழிக்க வேண்டும். காப்பாற்ருத திரவியம் நாசமாகும். விருத்தி பண்ணுதது குறையும். தானும் அனுபவித்துச் சற்பாத்திரத்தில் செலவழியாதது, வீணுகும் எனச் சாஸ்திரமிருக்கிறதனுலும், மேலும், இன்பமும், புண்ணியமும், கீர்த்தியும், மனிதருக்குள்ளே பெருமையும், உறவும், நினைத்தது முடித்தலும் யாருக்கு உண்டு? திரளாகப் பணம் குவித்தவர்களுக்கே யுண்டு...

#### பஞ்ச தந்திரத்தின் கடைசிப் பகுதியில் கையாளப்பட்டுள்ள நடை பின்வருமாறு.

நாசிக தேயத்தனுகிய தத்தன் என்பவன் அன்னையை நோக்கி, யான் ஆரியன் கருமத்தாலோரூர்க்குப் போகுவல்; விடை தகுதி என, அவ்வீன்ருள், குழந்தாய், ஒருவனுயேகற்க எனக் கேட்டு, அவன் தாயே! நெறியூறின்றி இருக்கின்றதே என, அவள் மீண்டும் அப்பனே! எஃதுளதாயினும் நீ நெறித் துணையின்றிச் சேறலாகாது என்று கூபத்திலோர் நண்டைப் பற்றியோர் கலயத்திற் பெய்து கொடுத்து, இதையேனுந் துணைக் கொடு போ என, அவனவ்வாறே யாய்மொழி மேற்கொண்டேகுழி, நெறியில் வேனிலால் வேசுற்று, ஓர் தரு நீழலிற் கண்வளரா நிற்குமிடத்து, யாண்டிருந்தோ அவற்றீண்ட வந்த ஓர் அரவு, இம்மட்கலயத்திற்பெய்திருப்பதென்னென்று அதனுள் தலை நீட்டுகையில், அஞ்ஞெண்டு இஃதோர் காரரவென்றுணர்வுற்றுக் கொடுக்காலிடுக்கிக் கொன்றது. பின்னர் அந்தணன் விழித்தப் பணியைப் பார்த்து, இஃதெங்ஙனமிறந்தது எனச் சூழ்வுழி, அதன் சென்னியை அவ்வலவன் கத்தரிக்கக் கண்டு, இத்துணைச் செயலுமிதுவே புரிந்தது! மாதா தந்த வழித்துணையாற் பிழைத்தேன்...

## 15

### அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் (19-ம் நூற்றுண்டு)

சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில் தமிழ்ப் பண்டிதராகப் பணி யாற்றியவர். சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர். இவருடைய கட்டுரைத் தொகுதியான "விநோதரச மஞ்சரி" யிலிருந்து சில பகுதிகள்:

#### கற்பு நிலைமை

கொண்ட கொழுநனை மேன்மையாகப் பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக் கீழமைந்து பக்தி விநயத்துடனே, பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடையாது, என்பதனுற் பொய் பேசாமல் கறந்தபால் கறந்தபடி அவன் விஷயத்தில் உண்மையாய், ஊசியுஞ் சரடும்போல மனைவி அவன் கருத்தின் வழி ஒழுகல் வேண்டும்......

கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம் இந்த உத்தமி கல்வியிற் கலை மாதோ? கற்பில் அருந்ததியோ? கருணையிற் பார்வதியோ? பரிசுத்தத்திற் பவானியோ? என்று அதிசயக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியும் உள்ளவளாயிருக்க வேண்டும்.

பெற்ற பிதா முதலானவர்கள் தங்கள் பெண்ணைப் பார்க்கும்படிப் பெண் வாழும் ஊருக்கு வந்தால் திடீரென்று அந்த வீட்டிற்குள்ளே நுழையாமல் பெண்ணின் நடத்தையை அண்டை அயலில் விசாரிக்க வேண்டும். விசாரிக்கும் அளவில் அது கெட்டது மூதேவி அவள் ஆருக்கும் அடங்காள், ஒருவர் பேச்சுங் கேளாள், தான் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிக்கிற

வள், அவள் எல்லோருடனும் வில்லங்கமாக வல்லிடி வழக்குத் தொடுக்கின்ற ஜகஜண்டி, அவள் மூன்று லோகமும் பூசை கொண்ட முழுச்சாமியார், அவள் மானிடவடிவு எடுத்துவந்த எம ராட்சகி, அவள் கொண்டவனைத் துரும்பளவாவது மதியாள், கொஞ்ச நாளில் அவன் கழுத்துக்கே கயிறு கொண்டு வருவாள், அந்தக் கரிக்காலி முகத்தில் விழித்தாலும் கஞ்சி கிடையாது, அவள் அரை நொடியில் குடும்பத்தைக் கலைத்துக் குடுவை வேருக்குவாள், அவள் வெல்லச் சதுரி வல்லாளகண்டி, அவள் எல்லோருடைய தலைப் பாகையும் தாழ இறக்கி வைப்பாள், அந்தக் கொள்ளையை என்னென்று சொல்லுகிறது, எண்ணத் தொலையாது ஏடிடங் கொள்ளாது, ஐயோ! தர்ம தேவதை போலிருக்கிற நீங்கள் ஜன்மாந்திரத்தில் என்ன பாவம் செய்தீர்களோ? இந்தச் சண்டாளி வந்து உங்கள் வயிற்றில் பெண்ணாய்ப் பிறந்தாளே! செத்தாலும் தோஷமில்லை. இவள் பெற்றார் பிறந்தார் பெயரையும் கெடுக்க வந்தவள், இந்தக் கொடும்பாவி சமாசாரத்தைக் கேட்கிறது புண்ணியமா, புருஷார்த்தமா, இவள் சரித்திரத்தைப் பேசிய வாயை நெய் விட்டுச் சுத்தி பண்ண வேண்டுமென்று நாராசத்தைக் காய்ச்சிக் காதிலே சொருகுவது போலச் சொல்லக் கேட்டால், அந்த வீட்டில் எடுத்தடி வையாமல் முன்னிட்ட காலை பின்னிட்டபடியே திரும்பிப் போய்ச் செத்ததிலே ஒன்றாகப் பாலை வார்த்துத் தலைமுழுகி விடவேண்டுமே யல்லாமல், மறுபடி அந்தத் திசையை எட்டிப் பார்க்கலாமா வென்னும்படி துன்மார்க்கியாயிராமல் அம்மம்மா! இந்தப் புண்ணியவதிக்கொப்பாக ஆரைச் சொல்லலாம்! ......இவளைப் பெறும்படி நீங்கள் செய்த புண்ணியமே புண்ணியமென்று செவியில் அமிர்தத்தைச் சொரிவது போலச் சொல்லக் கேட்டால் அப்பொழுது புத்திர சதகுணம் புத்திரியென்று நினைத்துச் சந்தோஷித்து அவர்கள் பெண்ணுக்கு மாமி வீட்டில் தாராளமாய்ப் பிரவேசிக்கும்படி அவள் வரன் முறை தவறாதொழுக வேண்டும்.

## 16

## மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (1815—1876)

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள எண்ணெய்க் கிராமம் என்னும் ஊரில் பிறந்தவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் மீது இவர் கலம்பகம் பாடி அரங்கேற்றிய போது இவருக்கு "மகாவித்துவான்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பல ஊர்களில் வசித்தவர். பல ஊர்களுக்கு ஸ்தல புராணங்கள் இயற்றியவர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்ற பெரும் புலவர்களுக்கு ஆசிரியராக இருந்தவர். திருவாவடுதுறையில் காலமானார். சாமிநாதையர் மாணவராக இருந்த போது அவருடைய தந்தையாருக்குப் பிள்ளையவர்கள் எழுதிய கடிதம் பின்வருமாறு:

### கடிதம்

சிவமயம்

சாது குலோத்தம சாம்பவர்களாகிய ஐயரவர்களுக்கு அநேக தண்டம்.

இவ்விடம் யாவரும் க்ஷேமம். சாமிநாத ஐயரும் க்ஷேமமாக இருக்கிறார். தாங்களும் குழந்தை முதலியவர்களும் க்ஷேமமாக இருக்கிற செய்திக்குக் கடிதம் வரைந்து அனுப்ப வேண்டும்.

தாங்கள் சரீர சௌக்கியம் இல்லாமலிருந்து தலைக்கு ஜலம் போட்டுக் கொண்டதாகவும் அன்னம் செல்லாமல் இருக்கிறதென்றும் *சின்னசாமி ஐயரவர்களுக்கு எழுதிய கடிதம் இவ்விடம் வந்து சேர்ந்தது; பார்வையிட்டோம். சாமிநாத ஐயர் மிகவும் கிலேசப்பட்டு, 'இப்போதே போய் நான் பார்த்துக் கொண்டு வருவேன்' என்று தீவிரமாகப் பிரயாணப் பட்டார். அப்போது நீரும் நிழலும் இல்லாத காட்டு ராஜ்யத்தில் நிராதாரமாகப் போவது கூடாதென்று நான் தடுத்திருக்கிறேன். அப்படித் தடுத்திருந்தும் அவர் நீங்கள் என்ன சிரமப்படுகிறீர்களோ வென்று சதா கவலையுள்ளவராகவே இருக்கிறார். ஆகையால் இந்தக் கடிதம் கண்டவுடனே உங்கள் தேக சௌக்கியத்தைக் குறித்து ஒரு கடிதம் அனுப்புவதன்றியும் அவ்விடத்துக் காரியங்களைப் பார்த்துக்கொண்டு முன்பு எழுதியபடியே இங்கு வந்து சேரவேண்டும்.

உங்கள் தேக சௌக்கியத்தைக் குறித்துச் சீக்கிரம் கடிதம் அனுப்பிவிட்டால் நீங்கள் பத்துநாள் தாமதித்து வந்தாலும் வரலாம். 'சாமிநாதன் சௌக்கியந் தெரிந்தால்தான் எனக்கு சௌக்கியமாகும்' என்று எழுதியிருக்கிறீர்களே. அவர் நிரம்பவும் சௌக்கியமாக இருக்கிறார். அவரைக் குறித்து யாதொரு கவலையும் வேண்டாம். நான் இப்பொழுது திருவாவடுதுறையிலேயே இருக்கிறேன். காகிதமும் திருவாவடுதுறைக்கே அனுப்ப வேண்டுவது.†..........இக் கடிதம் சாமிநாதையர் கையெழுத்து. ஆகையால் சீக்கிரம் பதில் அனுப்ப வேண்டும்.

இங்ஙனம்,
மீனாட்சிசுந்தரம்.

ஆங்கிரச ஹு ஆவணி மீ ௱ உ
(17-8-1872)

[டாக்டர் உ. வே. சா. எழுதியுள்ள மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்: 2-ம் பாகத்திலிருந்து.]

---

* இவர் என்னுடைய சிறிய தந்தையார்—உ. வே. சா.

† கடிதத்தில் சிதைந்துள்ள பகுதி இது—உ.வே.சா.

# கழுகுமலை 'வெட்டுவான் கோவில்'



பாறையை உடைத்துத் தோண்டி உருவாக்கிய கற்கோவிலின் கோபுரசிகரமும்
அதன் வடபுறம் அமர்ந்துள்ள பிரமனும்

[பாண்டியர் சிற்பம்]

'அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!'

கழுகுமலை வெட்டுவான் கோவில் கோபுர வடபுறத் தோற்றம்:
பார்வதியும் சிவனும் அமர்ந்திருக்கும் காட்சி

## 'ஒருகையில் சங்கு; ஒருகையில் சக்கரம்'

கழுகுமலை வெட்டுவான் கோவில் கோபுரத்தின் மேற்குப்புறம் : திருமாலின் வீற்றிருந்த திருக்கோலம்

# முதன் முதலாகப் பிரசுரமாகும் மாமல்லபுரம் சிற்பப் படங்கள்



விருஷபாந்திகரான சிவன்



சிவபிரானின் மற்றொரு தோற்றம்



பூசாரி



பூக்கூடையும் தோளில் திறவுகோலும் கொண்டு செல்லும் கோவில் பணியாள்

(தர்மராஜா ரதத்தின் உச்சிப்பகுதியில் உள்ள சிற்பங்களின் இந்த நான்கு படங்களும், அடுத்த பக்கங்களில் காணும் நான்கு படங்களும் இப்பொழுதுதான் முதன் முதலாகப் பிரசுரமாகின்றன.)

சிவபிரானும் நந்தியும்



வீணாதரர்

சண்டேசானுக்கிரக மூர்த்தி



விஷ்ணுவும் கருடனும்

## 17

### ஜி. யு. போப் (1820—1903)

இவர் இங்கிலாந்தில் பிறந்து கிறிஸ்தவ சமயத் தொண்டு செய்யத் தமிழ் நாட்டுக்கு வந்து, இராமானுஜ கவிராயரிடம் தமிழ் கற்றுப் புலமையும் பெற்ருர். நாலடியார், திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றி தமது 83-வது வயதில் காலமானுர். இவர் எழுதிய "வெஸ்லியன் சங்கம்" என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிருேம்:

#### வெஸ்லியன் சங்கம்

வெஸ்லியன் சபை ஏற்பட்டதெப்படி யெனில், யோவான் வெஸ்லி (John Wesley) என்பவருடைய சகோதரராகிய சார்லஸ் வெஸ்லி (Charles Wesley) என்பவரும் மற்ற பன்னிரண்டு பெயரும் ஆக்ஸ்போர்ட் (Oxford) என்னும் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கல்விச் சாலையிலே படிக்கிற நேரத்தில் அவர்கள் வாரத்தில் இரண்டு மூன்று நாள் சாயங்காலத்திலே கூடி வந்து வேதப் பயிற்சி செய்து செபம் பண்ணி வந்தார்கள். பிற்பாடு மேற் சொல்லிய இரண்டு சகோதரரும் அமெரிக்கா கண்டத்திற்குப் போய்ப் பிரசங்கம் பண்ணி அங்கே ஏறக்குறைய ஒன்றரை வருடமட்டு மிருந்தார்கள். தங்கள் தேசத்துக்கு திரும்பி வந்த போது திரளான சனங்கள் கெட்டமார்க்கமாய் நடந்து சுவிசேஷத்தை யசட்டை பண்ணி யநேகர் வேதத்தைத் தள்ளியிருக்கிறதைப் பார்த்து மகா வயிராக்கியங் கொண்டு வீதிகளிலும் வெளிகளிலும் பிரசங்கித்து வீதிகளிலும் வேலிகளுக்கருகேயும் புறப்பட்டுப் போய் இயேசுநாதர் கட்டளையிட்டபடி சனங்களை வருந்தி நன்மைக் கழைத்தார்கள்.

இவ்விதமாய் வெளியிலே திரிந்து பிரசங்கிக்கத் துவக்குகிறதினுலே அவர்களுக்குப் பெரிய விரோதமுண்டாயிற்று. இப்படியிருக்கும்போது அநேக குருக்கள்மார் யோவான் வெஸ்லி என்பவரைத் தங்கள் கோயில்களிலே பிரசங்கியாமல் தடை செய்ததினுலே அவர் பல வூரிலுங் கிராமத்திலும் மற்ற இடங்களிலும் பிரவேசித்து ஒரு நாளிலே இரண்டு மூன்று தரம் பிரசங்கம் பண்ணிச் சுவிசேஷத்தில் நற் செய்தியை வெளிப்படுத்தினுர்.

## 18

### கடிகை நமசிவாயப் புலவர் (19-ம் நூற்ருண்டு)

இந்தப் புலவர் எட்டயபுரம் சமஸ்தானக் கவிஞராக இருந்தவர். இவர் கழுகுமலை முருகனைத் தலைவனுகக் கொண்டு இயற்றிய "வல்லீ பரதம்" என்ற நூல்தான் (வள்ளி திருமண நாடகம்) தமிழில் உள்ள ஒரே நாட்டிய நாடகம் என்று சொல்லத் தக்கதாக இருக்கிறது. 1880-ல் இது அச்சாகியிருக்கிறது. பர்த்ருஹரி சதகங்களையும் இவர் விருத்தப்பாக்களில் மொழி பெயர்த்துள்ளார். வல்லீபரதப் பாடல்களுக்கு ராக தாளங்களும், நாட்டிய ஜதிகளும் அமைத்தவர் சுப்பராம தீக்ஷிதர். சொல்லழகும், பொருட்சிறப்பும் நிறைந்த அந்தப் பாடல்களுக்கு இடையிடையே காணும் அக்கால நாடக வசனங்களில் சில பின்வருமாறு:

#### வல்லீ பரதம்

*நாரதர்* சரணஞ் சரணந்தாயே நீரிந்த ஆரணியத்திலே தனியேயிருக்கிறீர் நீர் ஆரம்மா தாயே.........

*வள்ளியம்மை:* நீர் ஆர் காணும் கிழவரே ஆரானுலென்ன பாதையே போகிறவர் ஊர் விசாரணை பண்ண வேண்டியதென்ன உம்முடைய பாட்டிலே போங் காணுங் கிழவரே.

[நாரதர் ஒரு பாட்டுப் பாடுகிருர்]

*நார:* தாயே லோகத்திலே யிங்கே கண்டதை யங்கும் அங்கே கண்டதை யிங்குஞ் சொல்வதினுலே இவன் நாரதனுக்குத் துணைப்போனவனென்று சொல்வார்கள் அந்தச் சொல்லைச் சுமந்தவனுன் நானெரு காரியந் தெரியப்படுத்துகிறேன் கருத்துக்கு எப்படி யிருக்குமோ உம்முடைய அழகுக்கிசைந்தவர் கழுகாசலக் கார்த்திகேயர்தான் அவருடைய அழகுக்கிசைந்தவர் நீர்தான் அவருக்குப் பாரியாகி அவருடன் கூடி யிருப்பதே நல்லதுதாயே இப்படிக் குறவர் குடியிருப்புங் கூத்தாடி வீற்றிருப்புமென்ற பழமொழிப்படி யிருப்பது நல்லதல்ல தாயே.

*வள்:* அரகரா சிவசிவா நீர் சந்நியாசிவேடம் பூண்டவராயிருந்தும் இப்படிச் சொல்லாத வார்த்தை சொல்லவும் நான் கேட்கவும் என் றலைவிதியா தெய்வமே.

*நார:* ஏனம்மா இப்படி விசனப்படுவானேன் இந்தப் பூமி யந்தர சுவர்க்க மூன்று லோகத்திலும் போய்க் காணுத தலங்களெல்லாங் கண்டு ஆடாத தீர்த்தமெல்லாம் ஆடி வந்தேன் எந்த இடங்களிலும் உங்களைப் போலச் சுந்தரம் ஆணிலுங் காணேம் பெண்ணிலுங் காணேம் நீங்கள் ஏதோ ஒரு காரண நிமித்தம் பூமியிலே வந்து அவதரித்தவர்களாகத் தோணுது உம்முடைய அழகுக் கிசைந்தவர் அவர்தான் அவரழகுக் கிசைந்தவர் நீர்தான் எப்படியென்ருல் அவர் திருக் கரத்தில் பிடித்திருக்கிற வேல் போலுங் கண்ணும் அவர் வாகனமாகிய மயில் போலுஞ் சாயலும் அவரது சேவற் கொடி போலும் இடையும் அவர் கோவில் கொண்

டருளிய மலைகள் போலுந் தனே பார்மும் ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்டிருப்பதால் நீங்களும் ஒருவருக் கொருவர் சம்பந்தப்பட்டுக் கூடியிருப்பது நல்லது எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு எந்தச் சொல்லையும் யூகித்துப் பார்த்துக் காரிய காரியங்களைத் தெரிந்து கொள்வது புத்திசாலிகள் கடமை என் வார்த்தை தட்ட வேண்டாந் தாயே.........

வள் : வாரீர் நாரதரே நீர் பெரியவர் போலிருந்தும் பெண் பிள்ளைகளைப் பார்த்து வாய்த்துடுக்காய் இப்படிச் சொல்லாத உத்தரஞ் சொல்லலாமா உம்முடைய வேஷத்துக்காக இந்த மட்டும் பொறுத்துப் பார்த்தேன் என்ன பேச்சுப் பேச வந்தீர் பயித்தியங் கொண்ட வரே சீ சீ தூரப் போங்காணும்.

[வள்ளியம்மையும் நாரதரும் பாடிக்கொண்டு வாதம் புரிகின்றனர்.]

வள் : ஓகே வாரும் நாரதரே லோகத்திலே சந்திர னுக்கும் ஒரு மறுவுண்டு எங்கள் குறக்குலத்துக்கு மறு வில்லையென்பது செகப்பிரசித்தமாய்த் தெரியுமே அல்லா மலும் எங்கள் பிறப்பு வளர்ப்பு பழமையெல்லாம் எங்கள் சந்திரகிரி யாதிக்கமாகிய எட்டயபுரஞ் சமஸ் தானத்து வரையுந் தெரியுமே. அப்படியிருக்க நீர் திரிலோகவாசி என்ற உமக்கு ஏன் தெரியாமற் போச்சுது. எங்கள் சாதியிலே மற்றச் சாதிபோலச் சாதிவிட்டுச் சாதி போனதுண்டா......

## 19

## ஆறுமுக நாவலர் (1822—1879)

யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் புலமை உடையவர். கிறிஸ்தவ மத போதகர்களின் வேண்டுகோளுக்கிணங்க பைபிளை மொழி பெயர்த்துக் கொடுத்தார். தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றுவதற்கே தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். பழந் தமிழ் நூல்கள் பலவற்றைத் திருத்தமாக முதன் முதலில் பதிப்பித்தவர். நாவலர் பதிப்பு என்றால், அதற்கு இன்று வரையிலும் தனிமதிப்புக் கொடுக்கப்படு கிறது. தமிழ் வசன நடையையும் முதன் முதலில் திருத்தமாகக் கையாண்டவர். அதனால் தமிழ் வசனத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். பேச்சுத்திறனிலும் நிகரற்று விளங்கியதால் இவரு டைய 27-ம் வயதிலேயே திருவாவடுதுறை ஆதீ னத்தார் இவருக்கு "நாவலர்" என்ற பட்டம் வழங் கினர். புலவருலகில் "நாவலர்" என்றால் இவரையே குறிக்கும். இவருடைய மாணாக்கர் பரம்பரை யும் சிறப்பு மிக்கது. வாழ்நாளில் பெரும் புகழும் மதிப்பும் பெற்று, எண்ணிலடங்காத அரிய சாதனை கள் புரிந்தவர். இன்று தெய்வமாக வணங்கப்படும் பெரும் புலவர் இவர்.

### உபோற்காதம்

இங்ஙனம் கூறிய சரியை முதலிய நான்கு பாதங் களிலே நின்று முத்தி பெற்ற மெய்யடியார்களுட் சிறந்த தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்ப தின்மருமாகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரத்தை, கனக சபையின் கண்ணே ஆனந்த நிருத்தஞ் செய்தருளும் கருணாநிதியாகிய சிவனது திருவருளினாலே பசுகரணமெல்லாஞ் சிவகரணமாய் நிகழப்பெற்ற சிவாநுபூதிமானாகிய குன்றத்தூர்ச் சேக் கிழார் நாயனார், தமிழுலகம் உய்தற் பொருட்டு, திருத் தொண்டர் புராணம் எனப்பெயர் தந்து விரித்தருளிச் செய்தார். இப்புராணம் தன்னை ஓதல் கேட்டல் செய்வார்க்குச் சிவனடியார்களது அத்தியற்புத பத்தித் திறத்தையும் அவர்கட்கு எளிவந்த சிவனது அத்தியற் புதப் பிரசாதத்தையும் உணர்த்தி, அவர் நெஞ்சை அழலிடைப்பட்ட மெழுகு போலக் கசிந்துருகச் செய்தலிற் றனக்கு உயர்வொப்பின்றி விளங்கும் பெருமையுடைமைபற்றி, பெரியபுராணம் எனப் பெயர் பெற்றது. இப்பெரியபுராணம் சைவ சித்தாந்த நூற்கருத் தோடு மாறுபடாத வேத முடிவாகிய உபநிஷத்துக் களின் தாற்பரியங்களை உள்ளடக்கிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் நான்கனோடு கூட்டி, கல்வியறிவு வொழுக்கங்களான் ஆன்ற மகத்துக்களாலே தொன்று தொட்டு அருட்பா என வழங்கப்படும்......

இப் பெரிய புராணமானது, தன்னை உணர்ந்தவர் களுக்கன்றி மற்றவர்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவா ரத்தின் வரலாறும் மகிமையும் ஓரோவிடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தி யந்த ஆசையுடன் ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் பத்தி வைராக்கிய ஞானங்களைப் பயக்குங் கருவியாய் இருத்த லானும், சிவஞான சித்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சைவசித்தாந்த நூல்களினும் உரைகளினும் சிவானுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலரு டைய சரித்திரங்களில் உதாரணங் காட்டுதலானும் சர்வாதிகாரிகளாகிய ஆதி சைவருக்கும் பிறருக் கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத் தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்தற்கண்ணும் அவைகளைச் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், சைவர்கள் யாவரும் ஒரு தலையாகக் கற்றுணர வேண்டும் நூலாம்.

[பெரிய புராணத்தைப் பரிசோதித்து அதற்கு எழுதிய உபோற்காதத்திலிருந்து : 7-ம் பதிப்பு : விபவ, பங்குனி, 1928.]

## 20

### இராமலிங்க சுவாமிகள் (1823—1874)

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மருதூரில் பிறந்தவர். சிறுவயதில் சென்னையில் வசித்தார். வடலூருக்கு அருகே மேட்டுக்குப்பத்தில் வாழ்ந்து சமரச சன்மார்க்க நெறியைத் தம் திருவருட்பாக்களால் பரப்பினர். "மனுமுறை கண்ட வாசகம்" என்ற வசன நூலைச் சபாபதி முதலியாருடைய வேண்டுகோளின் பேரில் அவர் இயற்றினர்.

#### மனு முறை கண்ட வாசகம்

......தேவேந்திரன் தியாகராஜ தரிசனஞ் செய்யப் போவதுபோல—அவ் வீதிவிடங்கனென்னும் இராஜ குமாரன்—தேரை நடத்தினன்.

அப்பொழுது, இரதி இந்திராணி முதலான தேவ மாதர்களையொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களெல்லாம் அப்புத்திரனைக் கண்டு மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்ததுபோலவும் இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியது போலவுஞ் சூழ்ந்துகொண்டு கலை நெகிழ்ந்தும் கைவளை சோர்ந்தும் கண்ணீர் ததும்பியும் குழல் அவிழ்ந்தும் கொங்கைகள் விம்மியும் பசலை போர்த்தும் மையலடைந்த மனத்தர்களாய், "கரும்பை வில்லாக வுடைய காமனைப் பார்க்கிலும் எண் மடங்கு அழகுடைய இளவரசே! கன்னிகைப்பருவம் உள்ளவளே நான்! என்மேற் கடைக்கண் செய்யாயோ?" என்றும், "எழுதப்படாத சுந்தர வடிவமுள்ள இளங்காளையே! புருஷர் முகம் பாராத பூவையே நான்; என்னைப் புணர்ந்து போகாயோ?" என்றும், "கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவல் அழியாத காரிகையே நான். என்னைக் கலந்து போகாயோ?" என்றும், "சுப லக்ஷணங்கள் நிறைந்த சுந்தர வடிவனே! கல்யாணமில்லாத கன்னிகையே நான். என் மேல் கருணை செய்யாயோ?" என்றும், "மநுச் சக்கரவர்த்தி பெற்ற மதயானையே! சிறு வயதுள்ளவளே நான். என்னைத் திரும்பிப் பாராயோ?" என்றும், "அதிசயிக்கத் தக்க அழகனே! நிறையழியாத நேரிழையே நான். சற்றே நின்று போகாயோ?" என்றும், "இந்த ராஜபுத்திரனுக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்ட பெரியோர்க்கு அனந்தரம் அடிக்கடி தெண்டனிட்டாலும் போதாதே" என்றும்......* பலவிதமாகத் தனித்தனி சொல்லி மோகங் கொண்டு நின்றார்கள்.

---

* ஒரு நீண்ட பாராவையும் ஒரே வாக்கியமாக எழுதுவது பெரும்பாலும் இவரது வசன நடையின் இயல்பாகக் காணப்படுகிறது. இங்கே புள்ளியிட்ட இடத்தில், அச்செழுத்துக்களில் 36 வரிகள் உள்ளன. அந்த வரிகளையும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள வரிகளையும் சேர்த்து ஒரே வாக்கியமாக அமைத்திருக்கிறார்.

[திரு அருட்பா, 2-ம் புத்தகம்—வசனப்பகுதியிலிருந்து. பதிப்பாசிரியரும் வெளியிட்டவரும்: ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பி.ஏ., எம்.எல்., "அருட்பா வளாகம்", தியாகராஜபுரம், மயிலாப்பூர், சென்னை-4. 1959.]

## 21

### வேதநாயகம் பிள்ளை (1826—1889)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளத்தூரில் பிறந்த இந்தக் கிறிஸ்தவப் பெரியார் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராகவும், பின்பு மாயூரத்தில் 13 ஆண்டுகள் முனிசீப்பாகவும் பதவி வகித்தார். சர்வமத சமரச நோக்குடையவர். நீதிமன்றத்தில் தாய்மொழியாகிய தமிழே பயன்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தியவர். பஞ்ச காலத்தில் கஞ்சித் தொட்டிகள் வைத்து ஏழைகளின் பசிப் பிணி தீர்த்தார். தமிழின் முதல் நாவலாகிய "பிரதாப முதலியார் சரித்திர"த்தை எழுதிய இவர் சில செய்யுள் பிரபந்தங்களும், சர்வசமய சமரசக் கீர்த்தனைகளும் இயற்றி வெளியிட்டார். இவர் எழுதியுள்ள "பெண்மதி மாலை"யிலிருந்து (1869) ஒருபகுதி:

#### பெண்மதி மாலை

ஒரு நாள் ஒரு எளிய ஸ்திரீ, ஒரு பிள்ளையை இடுப்பில் வைத்துக் கொண்டு, ஒரு பிள்ளையைத் தோளில் எடுத்துக் கொண்டு, சில பிள்ளைகளைக் கையிற் பிடித்து நடத்திக் கொண்டு, மிகுந்த பசி தாகத்துடனே வந்து பிக்ஷை கேட்டாள். அவள் பசியினால் வாடி மெலிந்து, பேசவும் சக்தியில்லாமலிருந்தாள். அவள் முந்திச் சாப்பிடும்படி ஒரு இலை போட்டு அன்னம் படைக்கப்பட்டது. அவள் உட்கார்ந்து, ஒரு பிடி சாதம் எடுத்து வாயில் வைத்தவுடனே இரண்டு பிள்ளைகள் ஓடி, அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டன. ஒரு பிள்ளை அவளுடைய தோளில் ஏறி, அவளுடைய வாயிலிருந்த சாதத்தைப் பலவந்தமாகப் பிடுங்கித் தன் வாயிற் போட்டுக் கொண்டது. மற்றப் பிள்ளைகள், இலையிலிருந்த சாதத்தை அள்ளி அள்ளிச் சாப்பிட்டு ஒரு நிமிஷத்தில் சாதமிருந்த வாழையிலையை வெற்றிலையாக்கி விட்டன. மலைத்துப்போய்ப் பேசாமலிருந்த அந்த ஸ்திரீ, மாலை மாலையாகக் கண்ணீர் விட்டுக் கொண்டு ஐயா! இப்படியே தினந்தோறும், இந்தப் பிள்ளைகளால் நான் பட்டினியாயிருக்கிறேன், என்று சொல்லி, உடனே பசிக் களையினால் மூர்ச்சையானாள். அப்போது, கூட இருந்தவர்கள், ஒருவராவது இதைக் கண்டு அழாமலிருக்கவில்லை. இப்படியே, எண்ணிக்கையில்லாத ஜனங்கள்

படுங் கஷ்டங்களைக் கண் கொண்டு பார்க்கக் கூடுமா! காதினுல் கேட்கக்கூடுமா! ஐயையோ! இதென்ன பரிதாபம்! அந்த ஏழைகளும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லவா? அவர்களுக்காகவும் மழை பெய்ய வில்லையா? அவர்களுக்காகவும் பூமி விளைய வில்லையா? கடவுளால் கொடுக்கப்பட்ட சகல பொருள்களிலும் அவர்களுக்கும் பாகமில்லையா? இந்த பூமியில் விளையப் பட்ட தானியங்களையும் மற்றப் பொருள்களையும் சகல மனுஷர்களுக்கும், சமபாகமாகப் பிரித்துக் கொடுத்தால், இந்த உலகத்துக்குங் கொடுத்து இன்னும் சில உலகங் களுக்குந் தானங் கொடுக்கலாமே. அப்படியிருக்கக் கோடாநு கோடி ஏழைகள், கஷ்டப்படக் காரண மென்ன? அதற்குத் தனவான்களுடைய பேராசையும் லோப குணமுமே காரணமாயிருக்கின்றன. பூமியும் பூமியில் அடங்கிய மற்றப் பொருள்களும், சகலருக்கும் சமுதாயமே தவிர, அவைகள் தனவான்களுக்கு மட்டும் சொந்தமென்று அவர்கள் கடவுளிடத்தில் சிலா சாசனம் பெற்றுக்கொள்ள வில்லையே. பஞ்ச பூதங்களில் பூமி தவிர, மற்றப் பூதங்களையும், சந்திர சூரிய நட்சத்திரங் களின் பிரகாசத்தையும், யாவரும் பொதுவாகவே அநுபவிக்கிறார்கள். அப்படியே, பூமியையும், பூமியில் உற்பத்தியாகிற தன தானியங்களையும், சகலரும், பொதுவில் அநுபவிக்க வேண்டியது நியாயமாயிருக்க, அவைகளைச் சில செல்வர்கள் மட்டும் கட்டிக் கொண்டு, மற்றவர்களுக்குப் பாகம் கொடாமையினுல், அநேகர் தரித்திரப்பட ஹேதுவாயிருக்கின்றது.

## 22

## சி. வை. தாமோதரம் பிள்ளை (1832—1901)

யாழ்ப்பாணத்தில் சிறுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்து தமிழ் நாட்டு அரசாங்கத்தில் உயர் உத்தி யோகஸ்தராகப் பணியாற்றியவர். பத்திரிகாசிரியர்; வழக்கறிஞர். ஓலைச் சுவடிகளைத் தேடிக் கொணர்ந்து கலித் தொகையையும், தொல்காப்பிய உரைகளில் சிலவற்றையும் முதல் முதலில் பதிப் பித்தவர். இவர் 1898-ல் பதிப்பித்த வசன சூளா மணி என்ற நூலுக்கு இவர் எழுதிய புறஉரை பின் வருமாறு:

**வசன சூளாமணி: புற உரை**

தமிழிலே சிறந்த இலக்கியங்களென நிலைபெற்றன சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் பெருங் காப்பியங்கள் ஐந்தும் நீலகேசி சூளாமணி உதயணன் கதை நாககுமார காவியம் யசோதரகாவியம் என்னும் சிறுகாப்பியங்கள் ஐந்துமே. இச்சிறு காப்பியங்களுட் தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியென்னும் இரண்டாவது காவியத்தை ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துச் சற்குருநாத சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளின் கட்டளைப் பிரகாரம், அடியேன் அச்சிடுவித்து வெளிப்படுத்திய பொழுது, அந்நூலை மாணவர்கள் எளிதில் கற்றுணர்தற்கு உதவியாக, அதிற் கூறிய திவிட்டகுமாரன் சரித்திரத்தை கத்திய ரூபமாக இயற்றிப் பகிரங்கஞ் செய்தால் மிகவும் உலோகோபகாரமாகுமென்று அனேகர் விரும்பிக் கேட்டுக் கொண்டனர். அது காலத்திற் புதுக்கோட்டை மகாராசாவின் ஹைகோர்ட் நியாயாதிபதிகளில் ஒருவ ராக இருந்த யான் இடையிட்ட நேரங்களில் எல்லாம் இலக்கண விளக்கத்தைப் பரிசோதனை செய்து அச்சிடு வித்துக் கொண்டிருந்தமையால் எனக்குச் சாவகாசம் நேரிடாமல், என்னேடு கூட இருந்த வித்துவான் ஸ்ரீ தாவடி அம்பிகைபாக உபாத்தியாயரைக் கொண்டு, அங்ஙனே அதனைச் சிறுவரும் வாசித்துத் தமிழ் பயிலத் தக்க தெள்ளிய நடையில் எழுதுவித்தனன்.

பின்னர் அதனைச் சென்னை சர்வகலா சங்கத்திற் பிரவேச பரீக்ஷைக்கு நியமிப்பான் கருதி அச்சங்கத்திற் திராவிட பாட சபையாருக்கு அனுப்பினேன். அவர்கள் அதிற் தற்கால வித்தியாகிரமத்திற்கு ஒவ்வா தனவும் பூகோள ககோள சாஸ்திர உண்மைக்கு மாரு னவுமாக சத்த சமுத்திர தீவக அசலாதி பழைய தமிழ் நூற் கோட்பாடுகள் பலப்பல ஆங்காங்கு விரவியிருப் பதை நோக்கி மறுத்து விட்டனர்.

அதன் மேல் அக்கோட்பாடுகளை நீக்கியுந், திவான் பஹதூர் வன்பாக்கம் கிருஷ்ணமாசாரியாரவர்கள் மாதாந்திரம் பதித்து வரும் மஹாராணி பத்திரிகையின் போக்குக் கேற்ப வாக்கியங்களையும் மொழிகளையும் மாற்றியும், அப்பத்திரிகையின் சென்ற வருடச் சம்புடத் திற் பாகம் பாகமாக அச்சிடுவித்தேன். அச்சில் வந்த பின் சபையார் சிலர் நடையை மெச்சிச் சரித்திரத்தை இன்னும் பெருக்கியும், பஞ்ச தந்திரக் கதை போலத் திரி சொற் பிரயோகத்தால் அர்த்தத்தைச் சற்றே அருக்கியும், ஒரு பொருட் பன்மொழிகள் நெருக்கியும் வரைந்தாற், பிரதம வித்தியா பரீக்ஷைக்கு இனி நிய மிக்க அருகமாகுமெனக் கருதினர்.

ஆதலால் முதனூற்கு விரோதமாகாது கதையைப் பல்லாற்ருல் அகல விரித்தும், நடையைப் பெரும்பாலும் உயரத்திரித்தும், இடைக்கிடையே ஒரு பொருட்குப் பல பரியாயங்களைத் தெரித்தும், மூல நூலிலுள்ள அனேகஞ் செய்யுட்கள் அங்கும் இங்குங் கமழ வரித்தும், முழுவதும் மாற்றி எழுதலாயினேன். ஆயினும் இடந்தொறும் இடந்தொறும் உபாத்தியாயர் புத்தக வாக்கியம் இன்னும் இருத்தலாற் பாஷை நடை இரண்டு பட்டுத் தோன்றும். அஃது யான் மேற் கூறியதற்குச் சான்று. அக்குறைவை ஆன்றோர் மன்னித்தல் வேண்டும்.

## 23

### ராமாயண வசனம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவ
கிரியில் எனக்குக் கிடைத்த ஒரு பழைய ஓலை
ஏட்டுப் பிரதியில், இடையிடையே கம்பராமா
யணச் செய்யுட்களோடு ராமாயணக் கதை வசன
மாக எழுதப்பட்டிருக்கிறது. கம்பரின் கதைப்
போக்கை வசனகர்த்தா மாற்றி விடவில்லை என்று
லும் எத்தனையோ பல சிறு விவரங்களைக் கற்பனை
யாகவே எழுதிச் சேர்த்திருக்கிறார் என்பதைக் கீழ்க்
காணும் வசனப் பகுதியைப் பார்த்தாலே தெரியும்.
ஏட்டுப் பிரதியில் உள்ளவாறு ஓர் எழுத்தைக்கூட
மாற்றாமலும் திருத்தாமலும் கீழே கொடுக்கப்பட்
டிருக்கிறது. சில இடங்களில் முற்றுப் புள்ளி
மட்டும் வைத்திருக்கிறேன்.

பெண்சாதிக்கு ஒருவன் தலை முடித்துப் பூச்சூடு
கிறான். ஒருவனு மொருத்தியுஞ் சண்டைக்கு நிற்கிறார்க
ளொருவனு மொருத்திய மிஷ்ட்ட கலாபமாயிருக்
கிறார்கள். ஒருவனுமொருத்தியுங் கோர்த்த கைவிடாமல்
விளையாடிக் கொண்டிருக்கிறார்க ளிந்த அதிசெய
மெல்லாம் பாற்த்துக் கொண்டு கடைத் தெருவீதி
வருகிர போது இருபிரமும் பலசறக்குக் கடையும் அரிசிக்
கடை சவளி பருப்பு நெய் காய்களியள் முத்துப்பவளம்
நவரற்றினங்கள் கொள்கிர பேருங் குடுக்கிர பேரு மிது
வெல்லாம் பார்த்துக்கொண்டு சீரணிக் கடையிலே
தோசை வடை பணியாரம் அப்பளம் அதிரசந் தேன்
குளல் பொரியுருண்டை பொரிவிளாங்காய் முருக்கு
இட்டிலி கொள்கிரபேருங் குடுக்கிர பேரு மிப்படிப் பல
வகையும் பார்த்துக் கொண்டு கசாப்புக் கடை வீதியின்
தோருங் கமுகுகளை நட்டி தென்னம் பிள்ளையளுண்டாகி
யதும் பார்த்துக் குலைவாழை நிறுத்தி பாவைகளாட்டமும்
சித்திரமணி மண்டபங்களுங் கண்டு அதிசெயமாகப்
பார்த்துக் கொண்டு அப்பால்ப் போரபோது சனகராசா
வின் அரமனை வீதியிலே போனார்க ளப்போது உப்
பரிகை மேடையின் பேரிலே சீதையம்மன் அனேக
பெண்களுடனே பந்தடித்து விளையாடினா ளவளை
ராமசுவாமி கண்டு ஏரிட்டுப் பார்த்து இந்தப்
பட்டணத்தில் பிரமதேவனிப்படி அளகு சவுந்திரிய
மான பெண்ணை உண்டு செய்து வைத்திருக்
கிறானே வென்று உடம்பு திமிர்ப் பிடித்து மெல்லடி
பட்டு மன்மதபாண மேலிட்டு நடந்து போகை
யில் சீதையம்மனும் ராமசுவாமியைக் கண்டு பந்தடித்த
கையுஞ் சோர்ந்து மயங்கி உலகத்திலே யிப்படிப் பிறம
தேவன் அளகிலேமிகுந்த பேரை யுண்டு பண்ணியிருக்
கிறானே வென்று பாத்தகண் பதையாமல் மனதிலே
யோசனை செய்து நான் பந்தடிக்க மாட்டே னெனக்குக்
கால்வலிக்கு தென்று சொல்லி தோளிப் பெண்களுடனே
தன்னரமனையிலே போய் சப்பிர கோள மஞ்சத்தில்
படுத்துக் கொண்டாள். இது காரணமெல்லாந் தோளி
யளரியார்கள். விசுவாமித்திரர் லட்சுமண ரிவர்கள்
அரியார்கள். ராமசுவாமிக்குஞ் சீதையம்மனுக்கு மன
துக்கு மனதே சாட்சியாய் நடந்த காரணமாயிருந்து
அப்பால்ப் போர போது பட்டணத்து வீதியிலே ஆண்
பெண் சருவரும் அதிசெயமாகப் பாற்கிரபே ரிவர்களைக்
கண்டு தெண்டம் பண்ணினாலுஞ் சகல கோடி பாவங்
கழுந் தீர்ந்து வைகுண்டம் பெறலாம். அடா மிஞ்சிப்
போறார்களே யென்று அதிசெயமாகப் பார்க்கிற பேர்
கழுங் சுவாமியைக் கண்டு மயங்கிச் சித்திரப்பாவைகள்
போலே திகைத்து நிற்கிர பேரும் சிறிது பெண்கள்
கூட்டமிட்டு நம்மட ராசாவின் மகள் சீதையழுக்குக்குஞ்
சரியாயிருக்குது ஆரோ ஒரு தவசி ரெண்டு பிள்ளையளை
உபாயமாகக் கூட்டிக் கொண்டு எவடத்துக்குப் போறா
ரிதேது காரணமென்று விசாரிக்கிர பேரும் இவர்
களெங்கே போறார்களென்று துடந்து போர பேரும்
இப்படியெல்லாம் அந்தப் பட்டணத்துச் சனங்கள்
அதிசெயமாகப் பாற்க இவர்கழும் போயறமனை வாசலி
லாசாரச் சாவடியிலே போயிருந்ததார்க ளன்னேரம்
விசுவாமித்திரர் வந்தாரென்று கெவுதமர் சதானந்தர்
முதலான ரிஷியளும் வந்து கண்டார்கள். ராசாவு
மிவர்கள் வந்திருக்கிர சாரங் கேட்டு அரமனை
யிலிருந்து சீக்கிரம் பிரப்பட்டுவந்து அடியற்ற
மறம் போலே விசுவாமித்திரரை தெண்டம் பண்ணி
இந்தப் பட்டணத்திலே தேவரீ ரெழுந்தருள எத்தனை
பூசாபலஞ் செய்தேனோ தெரிய வருதென்று துதித்து
நின்ற ராசாவைப் பாற்த்து விசுவாமித்திரர் கிட்ட
யிருத்திக் கொண்டு ஆசீர்பாதஞ் செய்தார். அப்
போது சனகராசாவும் விசுவாமித்திரரைப் பார்த்துச்
சொல்லுவார் சுவாமி யிந்த ரெண்டு பிள்ளையழும்
ஆருடைய பிள்ளையள் அடியேனுக்குத் தெரியச்
சொல்ல வேணு மென்று கேட்டா ரிவர்கள்
அய்யோற்றியாபுரிப் பட்டணத்துத் தசரத மகாராசா
வினுட பிள்ளையளிவர் பேர் ராம ரவர் பேர் லட்சுமண
ரின்னம் பரதன் சத்துருக்க னிரண்டு பிள்ளையழும்
ஊரிலிருக்கிறார்க ளிவர்களை நாங் கூட்டிவந்த தேதென்
றால் தாருகா வனத்திலே நான் செய்கிர யாகத்துக்கு
இடை கூறு செய்த தாடகையைச் சங்காரஞ் செய்து
நமக்கு யாகம் நிறவேத்திக் குடுத்தார்கள். கருங்கல்லா
யிருந்த அகிலிகையும் இவர்களாலே சாப விமோஷண
மாகிப் பிறப்பிட்டுப் போனாள். உம்முடைய அண்டைக்கு
வந்த காரிமே தென்றா லும்மட மகளை யிந்த ராமனுக்குக்
கலியாணம் பண்ணிக் குடுக்க வேணு மென்று கேட்கிர
தற்குப் பிரப்பட்டு வந்தோம் என்ன யோசனை சொல்லு
மென்றார். சனக ராசவு மிந்தப் பிள்ளையளுடைய
அளகு சவுந்தரியங்களைக் கண்டு உடம்பு பூரித்து வில்லை
நினைந்து கிலேஷப்பட்டுப் பெருமூச் செரிந்து மதி
மருண்டு நிற்கிர நினவை விசுவாமித்திர ரரிந்து உம்மட
மனதிலேயிருக்கிற நினைவைச் சொல்ல வேணுமென்றார்
சுவாமி ஒரு விண்ணப்பம் இந்தப் பிள்ளையழுக்குயென்
பெண்ணைக் குடுக்க எத்தனை பாக்கியம் பெற்றேன். ஒரு

இடையூறு குருக்கே சனியனுக இருக்குது. அதே தென்றல் அடியேன் பிள்ளையில்லாமல்ப் புத்திரயாகஞ் செய்வதற்கு யாக சாலைக்குப் பொற்க்கொழுக் கொண்டு உளுகிறபோது ஒரு பொட்டகப் பெட்டியிலே யிந்தப் பெண்ணிருந்தது. இந்தப் பெண்ணுடனே ஒரு வில்லுமிருந்திது. இதேதென்று பெண்ணையும் வில்லை யும் எடுத்துக்கொண்டு வந்ததிலந்தப் பெண் வளருகிற போது அந்த வில்லுங் கூடவே வளந்தது. ஆனுலிந்த வில்லை வளைத்தவனுக்கு இந்தப் பெண்ணைக் குடுப்போ மென்று சொல்லி ஒரு பிரிதிக்கினை பண்ணியிருக்குது யென் பிள்ளையைக் கலியாணஞ் செய்ய வேணுமானு லிந்த வில்லை வளைத்த பேற்கழுக்குக் குடுக்கிரதென்று நேமுகஞ் செய்தபடிக்கு அன்பத்தாரு தேசத்து ராசாக் கழும் வந்து வில்லையசைக்க மாட்டாம லோடிப் போனுர்கள்......

## 24

### ஸ்ரீ புராணம்

ஜைன சமயத்தவரின் ஸ்ரீபுராணத்தில் உள்ள சீவக சரித்திரப் பகுதிகள் இங்கே கொடுக்கப் பட்டுள்ளன. தமிழில் மிகுதியான வடமொழிச் சொற்களைச் சேர்த்து எழுதப்பட்ட இந்த நடைக்கு மணிப் பிரவாள நடை என்று பெயர். இந்த நடை யை முதன் முதலில் கையாண்டவர்கள் ஜைனர் களே. அப்புறம் வைணவ ஆச்சாரியர் சிலரும் இந்த நடையைக் கையாண்டனர்.

#### சீவக சரித்திரம்

ஸ்ரீ புராணத்தில் உச-ஆம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீ வர்த்தமானர் புராணத்துள்ள சீவக சரித்திரம் :

மற்றெருநாள், சிரேணிக மகாராஜன், ஸமவ சரண மடைந்து, அசோகவனத்துள் அசோக விருக்ஷ மூலத்து ரூபயௌவந சுபலக்ஷண ஸஹிதராகித் தியாநாரூடராகியிருந்த ஜீவந்தர முனிகளைக் கண்டு அத்தியந்தம் விஸ்மிதனுகி ஸுதர்ம கணதரரை அடைந்து, "பகவானே! ஈதிருச லக்ஷண ஸஹிதராகிய இந்தத் தபோதனர் யார்?" என்று வினவ அவரும் அருளிச் செய்வார் :

"ஜம்புத்வீப பரதக்ஷேத்திர ஹேமாங்கத விஷய ராஜ மஹாபுரத்து ராஜா ஸத்தியந்தரன்; தேவி விஜயை யென்பாள். இவன் மந்திரி காஷ்டாங் காரிகன்; புரோகிதன் ருத்திரதத்தனென்பான். ராஜா விஜயாதேவியுடன் அனவரதம் போகாபிலாஷி யாகை யினுல் மந்திரி பக்கலே ராஜ்யகாரிய நிர்வாஹத்தினை நியோகித்து இஷ்டவிஷய காமபோகங்களை அனு பவித்துச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள் விஜயை ஓர் அசோக விருக்ஷத்தினைப் பரசுவினுற் சேதிக்க வீழ்ந்தபின், அதன் மூலத்தே ஒரு பாலாசோகம் அஷ்ட மாலாலங்கிருதமாகித் தோற்றவும் ஸ்வப்நங் கண்டு இராஜாவுக்கு ஸ்வப்நத்தை நிவேதிப்ப இராஜாவும் சொல்லுவான் :—'எட்டுக் கல்யாணத்தை உடையனுகி எனக்குப்பின் ஸகல புவன ராஜ்ய யோக்யனுனெரு புத்திரனைப் பெறுதி' என்றனன்......

[டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த சீவக சிந்தாமணி : நான்காம் பதிப்பு—1942]

## 25

### கிறிஸ்தவ வேதாம சங்கத்தார்

#### இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் : விவிலிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பிலிருந்து

அன்றியும், நீங்கள் ஜெபஞ் செய்யும்போது மாயக் காரரைப் போல் இருக்கவேண்டாம்; மனுஷர் காணும்படி ஜெபாலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபஞ் செய்வதே அவர்களுக்குப் பிரியம்; அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்றென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபஞ் செய்யும் போது, உன் அறைக்குள் போய், உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபஞ் செய்; அப்பொழுது அந்தரங்கத்திலே பார்க்கிற உன் பிதா உனக்குப் பிரதிபலனளிப்பார். அன்றியும், நீங்கள் ஜெபஞ் செய்யும்போது புற ஜாதிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்ப வேண்டாம்; சொல் மிகுதியி னிமித்தம் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று அவர்கள் நினைக்கிறுர்கள். நீங்களோ அவர்களைப்போல் இருக்க வேண்டாம்; நீங்கள் உங்கள் பிதாவைக் கேட்கு முன்னமே உங்களுக்கு இன்னின்னது தேவை என்பது அவருக்குத் தெரியும். ஆதலால் நீங்கள் ஜெபஞ் செய்யவேண்டிய விதமாவது :

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;
உம்முடைய ராஜ்யம் வருவதாக;

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக;

அன்றன்று வேண்டிய எங்கள் ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்;

எங்கள் கடனுளிகளுக்கு நாங்கள் மன்னித்திருக் கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்;

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணுமல், தீமை யிலின்று எங்களை இரட்சித்தருளும்;

[ராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென் றைக்கும் உம்முடையவைகளே, ஆமேன்] என்பதே.

—மத்தேயு : 6 : 5—13

[இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வேதாகமச் சங்கத்தின் வெளியீடான (1964) புதிய ஏற்பாட்டி லிருந்து.]

## மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்
## (19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி)

திருநெல்வேலி மாவட்டத்தில், திருக்குற்றாலத்தின் அருகில் உள்ள மேலகரத்தில் பிறந்தவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக வீற்றிருந்த இவர் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர். டாக்டர் உ. வே. சாமிநாதையரின் ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். அக்காலத்தில் ஆதரிப்பாரின்றி விடப்பட்ட தமிழைத் தாமே முன்வந்து போற்றிவளர்த்த வள்ளல் இவர். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு இவர் எழுதிய ஒரு கடிதம்:

### சின்னப்பட்டத்தில் இருந்தபோது எழுதிய திருமுகம்

உ

சிவமயம்

சுவாமி அம்பலவாண சுவாமி திருவுளத்தினாலே இகபரசவுபாக்கிய வதான்னிய மூர்த்தன்னிய சதுஷ்டய சாதாரண திக்குவிஜய பிரபுகுல திலக மங்கள குணகணாலங்கிருத வாசாலக பரிபாக சிரோரத்ந மஹாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குச் சிவஞானமுந் தீர்க்காயுளுஞ் சிந்தித மனோரத சித்தியுந் தேவகுருப் பிரசாதமுஞ் சகல பாக்கியமு மேன்மேலுமுண்டாகுக.

நாளது விபவஹூ மீனரவி கசஉ (25-3-1869) வரையுந் தெய்வப் பொன்னித் திருநதி சூழ்ந்த நவகோடி சித்தவாசபுரமாகிய ஞானக்கோமுத்தி மாநகரத்திலெம்மை யாண்ட ஞானசற்குரு தேசிக சுவாமிகளாகிய மஹா சந்நிதானத் திருவடி நீழலின்கண் தங்களுடைய க்ஷேமாபிவிருத்தியையே சதாகாலமும் பிரார்த்தித்து வசித்திருப்பதில் ஞான நடராஜர் பூஜையு மஹேசுவர பூஜையும் வெகு சிறப்பாக நடந்து வருகின்றன. இவ்விடத்து வர்த்தமானங்களெல்லாம் இதற்கு முன்னெழுதியிருக்கிற லிகிதத்தாலுஞ் சுப்பு ஓதுவார் முகவசனத்தாலும் விசதமாகுமே. மேற்படி யோதுவாரிடமனுப்பிய வலிய மேலெழுத்துப் பிள்ளையவர்கள் லிகிதங்களுங் காகிதப் புஸ்தகங்களும் வந்து சேர்ந்த விவரமும் மகா புருஷச் செல்வச் சிரஞ்சீவி அப்பாத்துரை முதலியாரவர்கள் பிரார்த்தனைப்படி நல்ல சுபதினத்தில் நாகைப் புராணம் அரங்கேற்றி வருவதும் தெரிந்துகொண்டோம். வலிய மேலெழுத்துப் பிள்ளையவர்கள் செய்யுட்களைத் திருத்தியனுப்பி யிருப்பதில் இதுவரை சிறப்புப் பாயிரமு மமைத்தனுப்பி யிருக்கக் கூடுமே. அதற்குத் தொகையும் இதுவரை சேர்ந்திருக்கலாம். கந்தசாமி முதலியாருக்குக் காஞ்சிப் புராணம் முற்றுப்பெறச் செய்யும்படிக் கெழுதியதும் மற்றக் காரியாதிகளுந் தெரிய விவரமாயெழுதியனுப்ப வேண்டும். ஆவராணி மஹாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி முத்தையா பிள்ளையவர்கள் இவ்விடந் தரிசனத்திற்கு வருவதில் அவரைப் போன்ற கனவான்களைப் பார்க்க நாமும் விருப்பத்தோடெதிர்ப் பார்த்திருக்கிறோம். ஆசாரிய சுவாமிகளே அவ்விடந் திருக்கூட்டத்தார்களுடன் தாங்களும் போய்க் கண்டு தரிசித்த விவரமுந் தெரிந்து மகிழ்ச்சியானோம். அவ்விடம் நம்முடைய மடத்து இரண்டு கொட்டடியையுந் திறந்து விடும்படி மகாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி திருவாரூர் ஐயாப் பிள்ளையவர்களுக்கும் எழுதியனுப்பியிருக்கிறது............மற்றுள்ளன பின்பு எழுதுவதாயிருக்கும். நமது இருதய முழுவது நிறைந்து நற்றவமனைத்து மோர் நவையிலா வுருப்பெற்ற குரு புத்திர சிரோமணியாய் விளங்குகின்ற தாங்கள் அரோக திடகாத்திரராயிருந்தினும் பெரியதாயிருக்கிற திகந்த விச்ராந்த கீர்த்திப் பிரதாப ஜயகர பிரபல பெரும் பாக்கியங்களெல்லாம் மேன்மேலும் வந்து சிவக்ஷேத்ர குருக்ஷேத்ரங்களைப் பரிபாலனஞ் செய்து கொண்டிருக்க வேண்டுமென்று சிவபூஜாகாலங்களிலு மஹேச்வர பூஜை வேளைகளிலும் வேண்டிக் கொண்டிருக்கிறோம். மஹாதைசுவரிய விபூதியனுப்பினோம். வாங்கித் தரித்துக்கொண்டு நித்யானந்த சிரஞ்சீவியாயிருந்து பெருவாழ்வின் வளர்ந்தேறி வரவேண்டும்.

அம்பலவாணர் துணை.

விலாஸம்

"இது நாகபட்டினத்தில் மஹா புருஷச் செல்வச் சிரஞ்சீவி நமதாதீன மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குக் கொடுக்கற்பாலது."

[டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய "திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்" 2-ம்: பாகத்திலிருந்து.]

27

## நா. கதிரைவேற் பிள்ளை (1844—1907)

யாழ்ப்பாணத்தில் புலோலி என்ற ஊரில் பிறந்தவர். வடமொழியிலும் புலமை பெற்றவர். அவதானம் செய்யக்கூடியவர். நைடதத்திற்கு உரை செய்திருக்கிறார். இவர் தொகுத்த அகராதி யாழ்ப்பாண அகராதி எனப்படும். திரு. வி. கலியாண சுந்தர முதலியாருக்கு முதன் முதலில் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்த குரு. இவர் எழுதிய ஒரு கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

### செந்தமிழ்த் தெய்வச் சிறப்பு

இனித் தமிழ்மொழி, சம்ஸ்கிருத பாடையினின்றும் தொகுக்கப்பட்டதோர் புதுமொழியென்பார் கூற்றையுஞ்

சிறிதாய்ந்து களைகுதும். வாய் என்னுஞ் சிறந்த உறுப்பிற்குத் தனிச்சிறப்பு மொழி யொன்றேனுமின்றி, முகத்தின் பெயர்களாகிய வதனம், ஆனனம், வத்திரம், துண்டம் என்னும் மொழிகளை வைத்து வழங்கும் ஆரியத்தினின்றும், இன்னிசை வாய்ந்து உலக மெங்கணும் தன்னிசை மயமாக்கிய கரையிறந்த கடலன்ன நஞ் செந்தமிழ் தோன்றிற்றென்றல் ஒருசிறிது மொவ்வாதென்க. ஒருகால் அங்ஙனமாயின் வடமொழிக்கணில்லாத பலவியல்களும், பொருள்களும், வனப்பும், நடையும் நஞ் செந்தமிழிற் காணப்படுகின்றனவே. அன்றியுந் தமிழ்மொழிக்கட் டோன்றல் திரிதல் கெடுதல் முதலிய புணர்ச்சிச் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை, ஐம்பால் என்னுஞ் சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்குறி வகைகளும், அவற்றின் பாகுபாடுகள் ஆகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை, கைக்கிளை, பெருந்திணை, வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை என்பவும், அவற்றின் துறைகளும், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்பனவும், அவையிற்றி னினங்களும், இன்னோ ரன்ன பிறவும் வடமொழிக்க ணின்மையால் அவை யெல்லாம் எற்றினின்றுந் தொகுக்கப்பட்டன? வடமொழி வான்பொருளோடு இவையிற்றையும் புதியனவாகக் கட்டினர் எனின் அங்ஙனங் கட்ட வல்லுநர் மற்றையவற்றையுங் கட்டற்கு இயலா ராயின ரென்றல் வியப்பினும் வியப்பே. வடமொழியினின்றுஞ் தமிழ்மொழி வகுக்கப் பட்டதாயின் எஞ்ஞான்று வகுக்கப்பட்டது? யாவரே வகுத்தார்?

சகத்தின் மிகுத்த தவத்திற்கதித்த குறுமுனிவரனுர் .........வடமொழிக்கணுள்ள சொல்லையும் பொருளையும் கவர்ந்தெடுத்துத் திரித்துஞ் சிதைத்தும் புதைத்தும் இத்தமிழை வகுத்தார் கண்டீர் எனின், அதுவும் ஒல்லாமை காட்டியொதுக்குதும்.

[''செந்தமிழ்'': தொகுதி - க: பகுதி-ரு]

## 28

### சுன்னுகம் அ. குமாரசாமிப் பிள்ளை (1850 – 1922)

யாழ்ப்பாணத்தில் சுன்னுகம் என்ற ஊரில் பிறந்தவர். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். ஆசிரியராகப் பணிபுரிந்தார். மேக தூதக்காரிகை போன்ற நூல்களை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்திருப்பதுடன், சிசுபால சரிதம் போன்ற நூல்களும் இயற்றியுள்ளார். தண்டியலங்காரம், கம்பராமாயணம்: பால காண்டம் முதலிய நூல்களைச் சிறந்த முறையில் பதிப்பித்திருக்கிறுர்.

### இதமாவது யாது?

.........அறத்துறைகள் எல்லாவற்றுள்ளும் ''அறிவு விரித்தல்'' ''பயனுள படித்தல்'' ''அறங்கரை நாவினர் பள்ளி'' முதலியன மிகச் சிறந்த அறங்களாய் உயிர்க்கிதமானவேயாம். இவை யாதினுற் சிறந்தன? கல்வியையும், அதன் பயனுகிய அறிவையுங் கொடுத்தலாற் சிறந்தனவேயாம்.........

அறம், பொருள் முதலியவைகளைப் பயக்கும் அளவிறந்த நூல்களால் விளங்கும் நமது செந்தமிழ்க் கல்வியின் இப்பொழுதை நிலையை யாதென்று சொல்லுவேம்! பொருள் வரவின்மையால் எவராலும் எள்ளப்படுகின்றது. ''இல்லாரை யெல்லாரும் எள்ளுவர்'' என்பர் வள்ளுவர். எத்தனையோ நூல்கள் எடுப்பாரும், படிப்பாரும், அச்சிடுவாரும், அநுபாலனஞ் செய்வாருமின்றி அழிந்தொழிந்தன. எஞ்சியவைகளும் ஒரு பிரதி இரு பிரதிதானெனப்பட்டு ஒரு சிறை கிடந்து சரமதசை யடைகின்றன! அச்சிட்டவைகளையும் படிப்பவரரியர். அரசனெப்படிக் குடிகளுமப்படி என்றவாறே இங்கிலிசு பாஷையே யாண்டும் வளர நந்தமிழ்க் கல்வி நாளடைவிற் குன்றி வருகின்றது.

இவ்வாறு குன்றிவருகின்ற இக்காலத்திலே முத்திராசாலை, வித்தியாசாலை, புத்தகசாலை முதலியவைகளை வாயிலாகக் கொண்டு அந்திய தசையடையும் அருந்தமிழ் நூல்களை அச்சிலிட்டும், அருந்தமிழ் நூல்களைக் கற்பித்தும், பரீட்சையிற் சிறந்தோர்க்குப் பரிசிலீந்தும், பழந்தமிழ் நூல்களைத் தேடிச் சேர்த்துப் பாதுகாத்தும், பலவித வித்தியா மயமாய்ச் சிறக்குமாறு **''செந்தமிழ்''** என்னும் பத்திரிகையைப் பிரகடனஞ் செய்தும் இத் தமிழ்க்கல்வியைப் பரிபாலித்துப் பலர்க்கு முபயோகமாக வளர்த்து வருமாறெழுந்த இப்பொழுதை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழ்நாடு செய்யுங் கைம்மாறு யாது?.........

அருஞ்செயலமைந்த **இத்தமிழ்ச் சங்கம்** என்றும் நின்று நிலவித் தமிழ் நாட்டிற்கு இதஞ்செய்தலில் அதிகரிக்குமாறு ஆலவாயின் அவிர்சடைக் கடவுளுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேம்.

[''செந்தமிழ்'': தொகுதி - க, பகுதி - உ
சுபகிருது ஹு மார்கழி மீ]

## 29

### பி. சுந்தரம் பிள்ளை (1855 – 1897)

மலையாள நாட்டில் ஆலப்புழை நகரில் ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். திருவனந்தபுரத்திலும் திருநெல்வேலியிலும் கலாசாலைகளில் முறையே தத்துவப் பேராசிரியராகவும், தலைமை

ஆசிரியராகவும் பதவி வகித்தவர். கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளை வேதாந்த குருவாகக் கொண்டவர். நூற்றொகை விளக்கம், மனோன் மணீய நாடகம் (1891) முதலிய நூல்களின் ஆசிரியர். மனோன்மணீயத்திற்கு அவர் எழுதிய முகவுரையின் சில பகுதிகள் :

பழமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கிய விரிவிலும், ஏனைய சிறப்புக்களிலும் மற்றக் கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ்மொழி சிறிதும் தலை கவிழ்க்கும் தன்மையதன்று. இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமை சான்ற இத் தமிழ்மொழி பற்பல காரணச் செறிவால், சிலகாலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க, மாசடைந்து நிலைதளர்ந்து, நேற்றுதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐய முறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது. இக்குறைவு நீங்கத் தங்கள் தங்களுக்கியன்ற வழி முயல்வது, தங்களை மேம்படுத்தும் தமிழ்மொழியைத் தம்மொழியாக வழங்கும் தமிழர் யாவரும் தலைக்கொள்ள வேண்டிய தவருக் கடன் பாடன்றோ ?

2. மேற்கூறிய முயற்சிக்கேற்ற வழிகள் பலவுள வேனும் அவற்றுள் இரண்டு தலைமையானவை. முதலாவது முன்னோராற் பொருட்சுவையும் சொற் சுவையும் பொலிய இயற்றப்பட்டிருக்கிற அருமையான நூல்களுள் இறந்தவை யொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை வெளிக்கொணர்ந்து நிலைபெறச் செய்தலே யாம். இவ்வழியில் தற்காலம் உழைத்து வரும் பெரும் புகழ்படைத்த மா-া-া-ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள், பரம ஸ்ரீ வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய வித்வ சிரோமணிகளுடைய நன்முயற்சிக்கு ஈடு கூறத்தக்கது யாது ? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற திரவியங்களைப் பூர்வீகர்கள் வருந்திச் சம்பாதித்து வைத்திருக்க, அம்மக்கள் அவை இருக்குமிடந்தேடி எடுத்தநுபவியாது இரந்துண்ணும் ஏழைமை போலன்றோ ஆகும், ஈடு மெடுப்பு மற்ற நுண்ணிய மதியும் புண்ணிய சரிதமுமுடைய நம் முன்னோர் ஆயிரக் கணக்கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்து அநுபவியாது வாளா நொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய உத்தம வித்துவான்களைப் பின்றொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய பொக்கிஷங்களைச் சோதனை செய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய பூர்வார்ஜித கல்விப் பொருளை க்ஷேமப்படுத்தி அநுபவிக்க முயல்வது முக்கியமான முதற்கடமையாம்.

30

## உ. வே. சாமிநாதையர் (1855—1942)

தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்ற ஊரில் பிறந்தவர். திருவாவடுதுறை மடத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் கல்வி கற்றுக் கும்பகோணம், சிதம்பரம், சென்னை கல்லூரிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தமிழ் நாடெங்கும் சுற்றிப் பழைய ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்துச் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, புறநானூறு போன்ற எத்தனையோ தமிழிலக்கியங்களை அச்சேற்றி வெளியிட்டவர். உரை நடையிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். மறைந்துபோன பழம்பெரும் இலக்கியங்கள் பலவற்றிற்கு மறுபிறப்பு அளித்த இவரைப் பாரதியார் போற்றிப் பாடியிருக்கிறார். மகாமகோபாத்தியாய, தாட்சிணாத்திய கலாநிதி, டாக்டர் என்னும் பட்டங்கள் பெற்றவர். திருக்கழுக்குன்றத்தில் காலமானார்.

### சாமிநாத தேசிகர்

...ஒரு சமயம் திருவநந்தபுரம் திவான் மாதவராயரவர்களிடமிருந்து அந்நகரிலுள்ள மகாராஜா காலேஜிற்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வேண்டுமென்றும் அவருக்குத் தக்க சௌகரியங்கள் பண்ணிவைக்கக் கூடுமென்றும் கோபாலராயருக்குக் கடிதம் வந்தது. காலேஜில் அப்பொழுது பண்டிதராக இருந்த சாமிநாத தேசிகரை அவர் அழைத்து, "அவ்வேலைக்குத் தக்க பண்டிதர்கள் கிடைப்பார்களா ?" என்று கேட்கவே, தேசிகர், "என்னுடைய ஆசிரியராகிய பிள்ளையவர்கள் வந்திருக்கிறார்கள்; அவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன்" என்றார். "அப்படியா ? அவர்கள் இங்கே வந்திருக்கிறார்களா?" என்று சொல்லிப் பின்பு ராயரவர்கள் பிள்ளையவர்களைச் சந்தித்து, "மாதவராய ரவர்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியுமே. அவர்கள் இப்பொழுது திருவநந்தபுரத்தில் திவானாக இருக்கிறார்கள். தாங்கள் திருவநந்தபுரம் மகாராஜா காலேஜ் தமிழ்ப் பண்டிதர் வேலையை ஒப்புக் கொண்டால் முதலில் மாதவேதனம் ரூ. 100 கொடுப்பார்கள். பின்பு வேண்டிய சௌகரியங்களைச் செய்வார்கள். எங்களுக்கும் கௌரவமாக இருக்கும். ராஜாங்க வித்துவானாகவும் இருக்கலாம். ஸமஸ்தானத்திற்கும் கௌரவம் ஏற்படும்" என்று வற்புறுத்திச் சொன்னார்கள். அப்பொழுது இப் புலவர் பிரான், "பராதீனனாக இருந்தால் என்னுடைய நோக்கத்திற்கு மிகவும் அசௌகரியமாக இருக்கும். ஏழைகளாக இருக்கும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டும், அவர்களுடன் சல்லாபஞ் செய்து கொண்டும், காவேரி ஸ்நானமும் சிவ தரிசனமும் செய்து கொண்டும் இருப்பதே எனக்குப் பிரியமான காரியமாக இருக்கின்றது. சாதாரண ஜனங்களோடு பழகுதல்தான் இன்பத்தை விளைவிக்கும். திருவாவடுதுறை மடத்தில் எல்லாவிதமான சௌகரியங்களும் இப்பொழுது கிடைக்கின்றன" என்று தமக்கு உடன்பாடின்மையைத் தெரிவித்தனர். இவருக்கு வேண்டிய சௌகரியங்களைப் பண்ணிவைக்கலா மென்றெண்ணியிருந்த கோபாலரா

யர் தம் எண்ணத்தை நிறைவேற்றக் கூடவில்லையே யென்று வருத்த முற்ருர்; பின்பு, ''தங்களிடம் படித்த மாணுக்கர்களுள் சிறந்த கல்விமானுகிய ஒருவரைக் குறிப்பிட்டால் நான் அவரைப் பற்றி எழுதி அனுப்பு கிறேன்'' என்ருர். இவர், ''இப்பொழுது தங்கள் காலேஜில் உள்ள சாமிநாத தேசிகரையே அனுப்பலாம். அவர் தஞ்சாவூர் அரண்மனையிலும் சென்னைக் கல்விச் சங்கத்திலும் முன்பு தமிழ்ப் பண்டிதராக இருந்த சிவக் கொழுந்து தேசிகருடைய குமாரர். என்னிடத்திலும் வாசித்தவர். அவருக்கு அவ் வேலையைச் செய்வித் தால் நன்ருகப் பாடஞ் சொல்லுவார் ; எனக்கும் மிகவும் திருப்தியாக இருக்கும்'' என்ருர்.

[''திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்'' : முதற்பாகம்.]

## 31

### ச. ம. நடேச சாஸ்திரி (1859—1906)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பிறந்த இவரை இவருடைய புலமைப் பெருக்கின் காரணமாக பண்டித நடேச சாஸ்திரி என்று கூறுவார்கள். சாஸனை, சிற்ப ஆராய்ச்சித் துறையிலும், பத்திரப் பதிவுத் தலைமைச் செயலக நிர்வாகியாகவும் பணி யாற்றியவர். இவர் 18 மொழிகள் அறிந்தவர். தமிழ் நாட்டு நாடோடிக் கதைகளைத் தொகுத்துத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டதுடன் வால்மீகி ராமாயணம் முழுவதையும் மொழி பெயர்த் தார். ''திக்கற்ற இரு குழந்தைகள்'' முதலிய பல நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளி யிட்டிருக்கிருர். 1906, ஏப்ரல் 11-ம் தேதியன்று சென்னை திருவல்லிக்கேணி திருவிழாவின் போது ஒரு குதிரையால் தாக்கப்பட்டுக் கீழே விழுந்தார். அவரை வீட்டுக்கு எடுத்துச் சென்றதும் இறந்து விட்டார்.

#### புராதன சரித்திர விஷயங்கள்

ஆற்காட்டிலிருந்து 5 மைல் தூரம் வடமேற்குத் திசையில் பஞ்சபாண்டவ மலை என்ருெரு ஸ்தல மிருக் கிறது. அதன் அமைப்பு வெகு அழகு. மலைத் தொடர்ச் சார்பில் இயற்கையால் அமைக்கப்பட்டிருக் கும் பல கைகளோடு விளங்கும் ஓர் சிறு குன்று இது. இக்குன்றிற் பொழியும் மழை ஓர் பக்கமாய் வழிந்து ஓடி விழும்படி ஓர் தடாகமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் தாமரை பூத்து அதை ஒட்டி இப்பஞ்ச பாண்டவ மலை விளங்குவது நேத்திரானந்தமா யிருக்கும். அசைப் பில் பார்த்தாலே சென்னைக் கருகாமையிலிருக்கும் மகா பலிபுரத்தின் ஓர் பாகமோ இவ்விடம் என்று தோன்றும். சரித்திரக் கண்ணுற் பார்த்தாலோ அது ஒரு உண்மை யான சித்தாந்தம். எப்படியெனில் நமது பழைய காலத்து மன்னவர்களுட் பல்லவ வமிசத்து மன்னர்கள் குன்றுகளையே தேர்ந்தெடுத்து, அவ்விடங்களில் ஒரே கல்லாலாகிய (Monolythic) கட்டிடங்கள் பலவாய்க் கட்டியிருக்கிருர்கள். பல்லவர்கள் கட்டிடங்களை குறிப் பிட்ட நமது நாட்டார்கள் பஞ்சபாண்டவர்கள் வஸித்த விடம் என்று ஒரே ஒற்றுமையாகச் சொல்லி வருகிருர் கள். எவ்விடமாவது நாம் சென்று இங்கு என்ன விசேஷமான கட்டிடங்கள் உண்டு என்று கேட்டு, பாண்டவர்கள் குகை இருக்கின்றது, பாண்டவர்கள் மலை யிருக்கின்றது, அல்லது பாண்டவர்கள் படுக்கையிருக் கின்றது என்று யாராவது சொன்னல் அதைக் கொண்டு நாம் ஊகிக்க வேண்டியதென்ன வெனில் அது அவசியமாய்ப் பல்லவர்கள் காலத்துக் கட்டிட மாயிருக்க வேண்டும் என்பதேயாம். அவ் வண்ணமே ஆற்காட்டுக்குச் சமீபத்திலிருக்கும் பஞ்ச பாண்டவ மலையும் ஓர் பல்லவகாலத்துக் குகை. வட மொழியில் இந்த க்ஷேத்திரத்துக்கு ஸத்யகிரி என்று பெயர். தென் மொழியில் அதே அருத்தத்தை விளங் கச் செய்யத் திருப்பான் மலை என்றும் சொல்லுவார்கள். யுதிஷ்டிரருடைய மேலான குணம் சொல் திருப்பாத குணம். அக்குணத்தை நிலை நிறுத்த (சொல்திருப்பான் யுதிஷ்டிரன் வசித்த மலையாகையால் இதை) திருப்பான் மலை என்கிருர்கள்.

[''செந்தமிழ்'' : பகுதி-க; தொகுதி-உ]

## 32

### தி. செல்வக்கேசவராய முதலியார் (1864 – 1921)

சென்னைக்கு அருகில் உள்ள திருமணம் என் னும் ஊரில் பிறந்தவர். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர். சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கினர், கம்பநாடர், திருவள்ளுவர், தமிழ், அக்பர் முதலிய நூல்களை எழுதியுள்ளார் ; ''பழமொழி'' முதலிய பழைய இலக்கியங்களையும் பதிப்பித்துள்ளார். தமிழுக்குக் ''கதி''யாவார் கம்பரும் திருவள்ளுவரும் என்று சொன்ன பேரறிஞர் இவரே.

#### செய்யுள்

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆரணிய காண்டத் திலே சீராமனை நோக்கி விராதன் செய்யும் துதியை முதன் முதலில் ஓதும்போது எனக்கு இன்னதென்று தெரியாத ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று……

'கவிதா வனிதா' என்றது ஒரு வடமொழிப் பழமொழி. அஃதாவது, கவிதாலக்ஷணம் பலவிதத் திலும் வனிதா லக்ஷணத்தை ஒத்தது என்பதாம். வனிதா லக்ஷணம், புருஷரால் விரும்பப்படுதல். கவிதா லக்ஷணம் புலவரால் விரும்பப்படுதல். வனிதையரை

வலிந்து கொள்ளும் இன்பம் சிறந்ததன்று, கவிகளைப் பலவந்தம் பண்ணிப் பாடுவிக்கும் பாடலால் உண்டாகும் இன்பம் சிறந்தன்று, 'பாடு என்ருல் பாணனும் பாடான்.' விலைமகளால் உண்டாகின்ற இன்பம் பொருளளவினதான பொய்யின்பமே: கூலிக்குப் பாடுகின்ற கவியால் வரும் இன்பமும் அன்னதேயாகும். பெண்பால் தனது இயற்கை நலத்தால் விளைவிக்கும் இன்பமே சிறந்தது. கவிதையும் தனது சொன்னயத்தால் விளைவிக்கும் பொருணயமே சிறந்தது. இங்ஙனம் ஒட்டிக்கொள்ளலாம்.

காரிகை கற்றுக் கவிபாடுவார் சிலர் எக்காலத்தும் உண்டு. அவர்கள் கவிகளின் வரிசையில் வைத்தெண்ணுதற் குரியரல்லர். "காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று." மகாகவிகள் காரிகை கற்றுக் கவிபாடுவதாக எம்மொழியிலும் யாதொரு வரலாறும் வழங்கவில்லை. "தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும், அகமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்."………

தங்கள் தங்கள் உபாசன மூர்த்தியின் அருளாலே பாடல்கள் புறப்படுகின்றன என்றும் அப்படிப்பட்டவை அருள்வாக்கு என்றும் நம்மவர்கள் நம்புகின்றனர்……

"கம்பன்வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்" என்று வழங்கும் பழமொழியின் கருத்து மகாகவிகளுடைய சகவாசத்தால் சாதாரணர்களும் ஒருவாறு கவித்துவம் அடைவர் என்பதே யாம்……

[இராசதானிக் கலாசாலை மாணவர் தமிழ்ச் சங்கத்தில் ஸ்ரீ K. B. இராமநாத ஐயரவர்கள் M.A. முன்னிலையில் வாசித்தது. "செந்தமிழ்", தொகுதி- 3, பகுதி - 11 : விசுவாவசு ஞு புரட்டாசி மீ".]

## 33

## எம் எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை (1866—1947)

திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னீர்ப்பள்ளம் என்னும் ஊரில் பிறந்தவர். திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி முதலியவற்றில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றியவர். மாணவர்களுக்காக இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய நூல்கள் பல. அவற்றோடு ஆங்கிலத்தில் "தமிழ் இந்தியா," சட்ட விளக்க நூல்கள் போன்றவையும், தமிழில் "கதையும் கற்பனையும்," "தப்பிலி," "காமாட்சி" (நாடகம்) முதலிய நூல்களும் இயற்றியுள்ளார். இவரும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் ஆசிரியர்களாக இருந்து "ஞானபோதினி" என்னும் மாதப் பத்திரிகையை நடத்திஞர்கள். 1900, ஜனவரி மாதம் வெளிவந்த அப் பத்திரிகை இதழில் இவர் எழுதிய ஒரு கட்டுரையின் சில பகுதிகள்:

### இராஜ விசுவாசம்

ஆங்கிலேயர் புதிதாய் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அவர்களுக்கு இந்தத் தேசத்தினுள்ளார் செய்த மரியாதையைப் போன்று இராஜ பாஷை பரவிய இக்காலத்திலுள்ள இந்தியர்கள் செய்யவில்லை என்ற வயிற்றெரிச்சல் ஒரு பக்கம்; இந்தியர்களும் அவர்களைப் போன்று பன்னூல்களையும் பயின்று ஆங்கிலச் சோதனைகளில் உயர்ந்த கௌரவம் பெற்று அவர்கள் வகித்து வரும் உன்னத ஸ்தானங்களைப் பெற்றுவருவதனுல் அவர்களுடைய உண்டிக் கிடையூருய் வந்து விட்டனரே யென்ற மனவருத்தம் ஒரு பக்கம்; மேற்றிசைப் படிப்பால் நாடாளுகையின் குற்றங்களை யுணர்ந்து தங்கள் குறைகளை நீக்கும்பொருட்டு ஆங்காங்குச் சபை கூடித் துரைத்தனச் சிறுமைகளை இங்கிலாந்திலுள்ள சுதேசிகளறியக் கூறுகின்றனரே யென்ற துயரம் மற்றொரு பக்கம்; அன்னர் கூறுங் கூற்றுக்களையெல்லாம் இந்தியர்கள் ஆங்கிலத்திலும் சுதேச பாஷைகளிலும் உலகமெங்குமுளார் உணரும்படி வரைந்து வெளியிடும் பத்திரிகைகளை நிறுத்தல் அசாத்தியமாய்விட்டதே என்ற மனப்புழுக்கம் வேறொரு பக்கம். இத்தகைய வெப்பங் கொண்ட ஆங்கிலேயர் மட்டுமே, இந்தியர் துரோகிகள், சுய ஆளுகைக்குரியரல்லர், மேற்றிசைக் கல்விப் படிப்பித்தது பெருந்தவறு, ஆகையால் இனி, அதற்குரிய உதவியைத் துரைத்தனத்தார் நிறுத்த வேண்டும், எனப் பலவாருகப் பிதற்றுவர். ஆனுல் இந்தியர்களுடன் ஊடாடுந் துரைமக்கள் இந்தியரைப் பற்றிச் சிறிதும் சிறுமை சொல்லத் துணியார். லார்ட் ரிப்பனைப்பற்றி இந்திய ரெவரேனுங் குறை கூறியதை நாம் கேட்டிலம். அவரும் ஆங்கிலேய துரைமகனுர் தாமே.

ஊரும் புழுவும் மிதித்தாற் கடிக்கும். வறுமையறியாது மேலோர் பெருமையை. குக்ஷிவாதை பக்ஷத்தைக் கெடுக்கும். ஆதலின் எந்த நாட்டிலும் இராஜ விசுவாசம் ஓங்கவேண்டுமென்ருல் இறைமகன் குடிகளின் வறுமையை நீக்கவேண்டும்; அவர்கள் அதிருப்திப்பட விடங் கொடாதிருத்தல் வேண்டும்; அவர்கள் உயிருக்கும் பொருளுக்கும் சேதம் வராமற் காத்தல் வேண்டும்; சுய நயத்தையும் பெருமையையும் பாராட்டாமற் 'குடியுயரக் கோனுயரும்' என்ற கொள்கையைச் சிரமேற் கொள்ளவேண்டும்; குடிகளுடைய மதத்தைத் தம் மதம்போற் பார்க்க வேண்டும்; அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதிக் குறைந்த பகுதிப் பணம் கொள்ளல் வேண்டும்……

["ஞானபோதினி", சம்புடம் III, புத்தகம் VI 1900.]

## சங்கரதாஸ் சுவாமிகள் (1867—1922)

தூத்துக்குடியில் பிறந்தவர். தண்டபாணி சுவாமிகளின் மாணுக்கர். 24-ம்வயதில் நாடகத் துறையில் சேர்ந்தார். நடித்தார். நாடக சபா ஒன்றும் தொடங்கிப் பல நாடகங்களை எழுதி நடிகர்களுக்குப் பயிற்சியளித்தார். நாடகங்கள் எழுதுவதுடன் அதிதுரிதமாகப் பாடல்கள் இயற்றும் திறனும் மிக்கவர். துறவு பூண்டதால் 'சுவாமிகள்' என அழைக்கப் பெற்ருர். புதுச்சேரியில் காலமானுர். இவர் எழுதிய "கோவலன் சரித்திரம்" என்ற நாடகத்தின் முன்னுரையிலும், உரையாடல்களிலும் சில பகுதிகள் பின் வருமாறு :

### முன்னுரை

சிலப்பதிகாரத்திலுள்ள இக்கோவலன் சரிதையை நாடகமாக நடத்தி ஆனந்திக்குமாறு, நாலாவிதமான வர்ண மெட்டுகளில் பாட்டுக்கள் அமைத்து, இராகம், தாளம், இவைகளைச் சுட்டிக் காண்பித்து என்னுற்ருன் முதன் முதல் நாடகமாக நடத்திக் காண்பிக்கப்பெற்றதென்பதைச் சொல்லாமலே எல்லோரும் அறிந்த விஷயம்.

சில போலி மக்கள் என்னுல் இயற்றப்பெற்ற பாடல்களைத் திருடித் தன்னுல் வரைந்தவையென்று அச்சிட்டு வெளியிட்டிருக்கின்ருர்கள். இப்போலியர்கள் செய்த பெரும்பாதகத்திற்குத் தகுந்த தண்டனையைத் தானே அடைவார்களென்பது திண்ணம்.

"பாட்டைத் திருடிப் பகட்டுவதைப் பார்க்கிலும்
ஓட்டைத் திருடி ஊர்வழி செல்லலாம்"

பாட்டைக் திருடும் பாதகர்கள் பெருத்துவிட்டார்கள். நாட்டிலுள்ள நாடகங்களைக் கெடுத்துவிட்டார்கள். தன் பெயருக்கே அர்த்தந் தெரியாமலிருப்பவருங்கூட, நாடக ஆசிரியரென்று தெரிந்தவர்போல் தம் பாட்டைக் கட்டிக்கொண்டு முன்வந்து விட்டார்கள்......

தூ. தா. சங்கரதாஸ்,
நாடகாசிரியன்.

### கோவலன் சரித்திரம்

ஸீன்—10

காலம் :—காலை; இடம் :—காவிரிப்பூம்பட்டினம்;
பாத்திரங்கள் : கோவலன், கண்ணகி, சகி.

காவிரிப்பூம்பட்டினம் கோவலன் வீடு; கண்ணகி தனியிடத்தில் வீற்றிருக்கிருள்.

**சகி** :—அம்மா ! இதோ வருகின்ருரே ! இவர்தான் உன் நாயகர்.

**கண்ணகி** :—நாதா ! நமஸ்கரிக்கின்றேன்.

**கோவலன்** :—கல்யாண் காதலி !

(பாட்டு)

**கண்** :—பிராணபதி ! இப்பொழுதாவது அடியாள்மீது கருணை கூர்ந்து சேர்ந்தீர்களே ! இதுவும் நான் செய்த பாக்கியந்தான்.

(பாட்டு)

**கோ** :—எனதருமை நாயகி ! உன்னுடைய மகிமையை அறியாது அந்த வேசியினுடைய வலையில் அகப்பட்டு மீள வகையறியாமல் அதுவரை தத்தளித்துக் கொண்டிருந்தேன். சென்ற சில தினங்களுக்கு முன் எனக்கு எழுதியனுப்பிய உன் லிகிதத்தைக் கண்டதும் நானிங்கு வர வேண்டுமென்று மாதவியிடம் விடை கேட்டேன்! அதற்கவள் நீர் போகக் கூடாது! அப்படிக் கட்டாயம் போக வேண்டுமானுல் உம்மைப் போலொரு தங்கப்பதுமை செய்து தர வேண்டுமென்று வேண்டினுள். அதற்கு நான் என்னுல் முடியாத காரியமென்று நினைத்தேன் ! கடைசியாக, "பதி விரதையின் மகிமையால்" ஆகாதது ஒன்றுளதோ என்றெண்ணி, என் பத்தினியாகிய உன்னை தியானித்தேன் ! தியானிக்கவும் திடீரென என்னைப்போல் ஒரு பதுமை வந்து நின்றது ! அப்பொழுது அவள் பார்த்து, மீண்டும் இந்தப் பதுமை பேசவேண்டுமென்று வேண்டினுள். மீண்டும் உன்னையே நினைத்தேன் ! பதுமையே பேசியது. உடனே விடை தந்தாள் ! வந்து சேர்ந்தேன்.

**கண்** :—நாதா ! சென்ற காரியங்களை நினைந்து வருந்துவதால் பயனென்ன? இனியாவது அடியாளை விட்டுப் பிரியாது இல்லற தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டுகிறேன். ஆயினும் தங்களை இப்படித் துன்பப்படுத்திய,

(பாட்டு)

இப்பொழுதே அந்தச் சண்டாளியைச் சாம்பலாய்ப் போக எரித்து விடுகிறேன் !

**கோ** :—(பாட்டு)

பெண்ணே ! ஏன் அவள்மீது கோபங் கொள்ளுகிருய்? யார் அவர்களை நத்திச் செல்லுகிருர்களோ, அவர்களை அலங்கோலம் செய்தனுப்புவதே முறையாகையால், நீ கோபத்தைச் சாந்தப்படுத்திக் கொள்வாயாக.

**கண்** :—நாதா ! தங்கள் உத்தரவுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆகாராதிகள் தயாராயிருக்கிறது. வாருங்கள் போவோம்.

**கோ** :—கண்ணே ! வா போகலாம் (இருவரும் போகிருர்கள்).

[1955-ல் பி. எல். அருணுசல முதலியார் (70, படவட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12) வெளியிட்ட "கோவலன் சரித்திர"த்திலிருந்து.]

## 35

### அ. சண்முகம் பிள்ளை (1868—1915)

அரசஞ் சண்முகனுர் என்பவரும் இவரே. மதுரை மாவட்டம் சோழவந்தானில் பிறந்து பல ஆண்டுகள் மதுரையில் தமிழாசிரியராகப் பணி யாற்றினுர். தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக் குறள் சண்முக விருத்தி, பஞ்ச தந்திர வெண்பா முதலிய நூல்களை இயற்றியிருக்கிருர். 1913-ல் மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்வான் மு. ரா. அருணுசலக் கவிராயர் எழுதிய "திருக்குறள் வச னம்" நூலுக்கு இவர் அளித்த பாராட்டுரை பின் வருமாறு :

#### பாராட்டுரை

திருக்குறளியற்றிய திருவள்ளுவ தேவர் பிரம தேவர் அமிசமென்பதும், திருக்குறள் வடமொழி வேதத் தினும் மாண்புடைத்தென்று பெரியோர் பலரானும் பாராட்டப்பட்ட தென்மொழி வேதமென்பதும், இந்நூற் பெருமை நோக்கியே தமிழ் மக்களேயன்றிப் பிறமொழி மக்களும் நூற்றுக் கணக்காகிய பிற மொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்டாடுகின்றன ரென்பதும் எல் லோரும் அறிந்தனவே.

இத்தகைய பெருமை வாய்ந்த இத்திருக்குறள் தருமர் முதலிய பதின்மருள்ளுஞ் சிறந்த பரிமேலழகர் உரையுடன் பயின்று வழங்கப்படினும் அதிமதி நுட்ப நூலோடுடைய கற்றுர் சிலர்க்கேயன்றி மற்றுர்க்குப் பயன் படாமையால் இதுவரை மலைச் சிகரத்து விடர கத்துற்ற சாவா மருந்தாகிய கரு நெல்லிக் கனி யென விளங்கிற்று. இது பொழுது பாடசாலை மாணுக்கருக் கும் பெண்களுக்கும் விளங்கத்தக்க எளிய நடையில் வசன வடிவாகி இந்நூல் வெளி வந்தமையால் இனி, பயன் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலுமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

இத்திருக்குறளை இலக்கிய இலக்கணம் கற்றுத் தாமே ஆராய்வார்க்கும் உரைவகை கொண்டு கற்றும் கேட்டும் செல்வாக்கும் கல்வி ஆற்றலிற் பேதங்காணப் படினும் பயன் வகையிற் பேதமின்மை தேற்றமாதலின் இவ்வசன நூல் திருக்குறள் மூலமும் உரையும் கற்றுர்க் குத் தாமறிந்த பொருளோ டொப்பு நோக்கற்கும், பாடசாலை மாணுக்கர் கற்றுப் பொருளறிதற்கும், இல் லத்துள்ள பெண்கள் தாமாகப் படித்தோ தங்கள் கணவர் படிக்கக் கேட்டோ பயனடைதற்கும், நூலிற் பயில அவகாசமில்லாத பிறரும் சிறு பொழுதிற் பேரு ணர்ச்சி கொள்ளற்கும் ஏற்ற சிறப்பினதென்பது என் துணிபு.

## 36

### வி.கோ சூரிய நாராயணசாஸ்திரி (1870-1903)

மதுரைக்குத் தெற்கே 4-வது மைலில் உள்ள விளாச்சேரியில் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், வட மொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றவர். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினுர். மதிவாணன், நாடகவியல், மான விஜயம் முதலிய நூல்களை எழுதியவர். தமது பெயரைத் தூய தமிழாக மாற்ற விரும்பி "பரிதிமாற் கலைஞன்" என்று வைத்துக்கொண்டார்.

சி. வை. தாமோதரம் பிள்ளை கேட்டுக்கொண்ட படி இவர் எழுதிய மதிவாணன் என்ற நாவல் மு.சி. பூரணலிங்கம் பிள்ளை ஆசிரியராக இருந்து நடத் திய "ஞானபோதினி" என்ற மாதப் பத்திரிகையில் 1897-லிருந்து தொடர் கதையாகப் பிரசுரிக்கப் பட்டது. 1902-ல் புத்த உருவில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இதனைச் சூளும்பேடு ஜமீன்தார் சி. முத்துக்குமாரசாமி முதலியாருக்கு ஆசிரியர் சமர்ப்பணம் செய்திருக்கிருர்.

#### மதிவாணன் : முதல் அத்தியாயம்

#### மருகன் வருகை

திருவளர்ந்தோங்கும் பரத கண்டத்துப் பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரை யென்னும் மா நகரத்து வையை யாற்றின் வடகரைக்கண், ஒரு நாட் காலைப் பொழுது புலர்ந்து சிறிது நேரஞ் சென்ற பின்றைச் செவ்விய மேனியன் சிறந்த நோக்கினன் பரந்த மார்பினன் பவள வாயினன் பதினுருட்டைப் பிராயத் தான் ஓரிளந்தோன்றல் போர்க்கோலம் பூண்டு, புரவி மீதேறிக் காற்றினுங் கடுகித் தென்புல நோக்கி வாரா நின்ருன்.

அப்போழ்தத்து யாற்றினது இருகரை மருங்கினு முள்ள கோங்கு வேங்கை மாதவி சம்பகம் புன்னை பாடலம் அசோகமாதிய வான்ருேய் மரங்கள் தத்தம் மலர்களுதிர்த்து ஆரவாரித்துத் தலையசைத்தல், உலகிற் கொரு கண்ணென மிளிரும் உயர் பேரொளியுறு செஞ் ஞாயிற்றினைக் கையானருச்சித்து நாவாற்றுதித்துத் தலையான் வணங்குதல் போலா நிற்ப, யாற்றினிடை யோடு காலிற் புனல் குடையுநரும் ஆடை மாசு நீக்கு நரும், மணற்கரைப் பாங்கர் வெளியதுடீஇ வெண்ணீ றணிந்து அஞ்செழுந்தறைநரும், வெண்சாந்து பூசி வேதமோதுநருமாய்ப் பலர் குழீஇயிருப்ப, ஒரு சார் ஆதவன் பன்னிறக் கதிர்கள் மணலின்மேல் வீழலும் ஆண்டுப் பரந்து கிடக்கும் வெள்ளியம்பருக்கை வயிர மென மின்னித் திகழா நிற்ப, மற்ருெருசார் இருவர் கை கோத்துலவா நின்ருர்.

அவ்விருவரு ளொருவன் பரிமாவுகைத்துப் பாய்ந்து போதரும் பரியதோளனைப் பார்த்துளமாழ்கி மற்றவரை விளித்து ''ஆண்டுக் குதிரையிவர்ந்து ஒன்றையுங் குறிக் கலனுய்ச் செல்லுங் கோதறு வீரனை யறிவிர்கொல்?'' என்ருன். இதுகாறுஞ் சென்ற பரியாளனை வியப்புடன் நோக்கிய விந்தையங் குரவர் சிறிது போது மௌனஞ் சாதித்த பின்னர்க் ''கோரமேற் கொண்டான் சோணுட்டான் போலும்'' எனலும் ''அவனடிச் சுவடு பற்றிச் சென்று அவனிருக்கையினை யறிவாம் வம்மின்'' என்ருன் மற்றையோன். உடனே யிருவரும் ஏகினர்.

[மதுரை வி. சூ. சுவாமிநாதன், வெளியீடு.]

## 37

## ரா. இராகவையங்கார் (1870—1948)

ராமநாதபுரத்திற்கு 40 மைல் தூரத்தில் உள்ள சரையக்கோட்டையில் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமையுடையவர்; ஆராய்ச்சியாளர்; சொற்பொழிவாளர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான ''செந்தமிழ்''ப் பத்திரிகையின் முதல் ஆசிரியராகவும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், ராமநாதபுரம் சமஸ்தான வித்வானுகவும் இருந்தவர். ''தமிழ் வரலாறு,'' ''குறுந்தொகை விளக்கம்'' என்பன இவருடைய நூல்களுட் சில.

### தமிழ் வரலாறு

இத் தமிழ் மொழி, இயற்சொல்லே பயின்ற அந்தப் பழங்காலத்தே பல பிற மொழிகளுக்குத் தானே தாய் மொழியாக நின்று விளங்கிற்றென்பதற்குக் காரணங்கள் பலவுள. இத்தமிழியற் சொற்கள் பலவற்றை முதலாகக் கொண்டு கிளைத்த நாட்டினியல்பிற் கேற்பவேனும், ஒலிக்குஞ் சிறப்பியல்பு பற்றியேனும் தம் அருகிலுள்ள வடமொழி முதலிய பிறமொழிகளின் தொடர்பு பற்றியேனும், சிறிது சிறிதாக ஒலியொற்றுமை பிறந்து முறையே தெலுங்கு, கன்னடம், மலையாள முதலிய பிற துணை மொழிகளாக வழங்கலாயின. அம்மொழிக் கெல்லாந் தமிழே தாய்மொழி யென்பது ஆராய்ச்சியாளர் துணிந்ததொன்று.

இனி தமிழ் மொழியுள் ஆரியச் சொற்கள் நேரேயும் திரிந்தும் சிதைந்தும் மற்றைத் திசைச் சொற்களினு மிகுதியாக வழங்கியதற்குக் காரணங்கள் அடுத்துப் பயின்ற திசைத் தொடர்பு மட்டுமல்லாது, அறிவு ஒற்றுமையும், மனக்கோட்பாட்டிற்குப் பெரிதும் ஏற்ற பெற்றியும், எம்மொழியாயினும் அதன்கணுள்ள நல்லன வெல்லாவற்றையும் கொள்ளுஞ் சிறந்த பெரு நோக்கமும் ஆகுமென்று துணிவது தகும். அக்காலத்துப் பிற மொழியிலுள்ள நல்ல நூல் ஒன்றைக் கண்டு அதனை மொழி பெயர்க்கப் புகுவார் அந்நூற் சொல்லையும் பொன்னே போற் போற்றி வணங்குதல் காணலாம். இவ்வழக்கந்தான் பண்டு மிகுந்திருத்தல் வேண்டும். ஆரியரது வேதத்தையும், ஆகமத்தையும் மொழி பெயர்க்கப் புக்கு அவ்வாறு புரிந்த பெருந்தமிழர், அந்நூல்கட்குரிய ஆரியச் சொற்களையும் எடுத்தாண்டு தமிழ் மொழியைப் பொருளானுஞ் சொல்லானும் வளம் படுத்தினுரென்று கூறுவது பொருந்தும்..........

வடமொழியைத் தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் வழங்குகின்றளவில் தமிழ் வழங்காமையானும், அங்ஙனந் தமிழ் வழங்காமைக்குக் காரணம் எப்பொருளையுந் தன் சொல்லால் வழங்கற்குரிய சொல்லாற்றலுடைமை யென்று தெரியலாம். விந்தியமலைக்குத் தெற்குள்ள மற்ற மொழிகளுக்கில்லாமல் இத் தமிழர்கே யுரியதாகிய சொல்லாற்றற் சிறப்பு இதனுலினிது உணரப்படும். இவ்வருந்தமிழாற்றலே நாயன்மாரும் ஆழ்வார்களுமாகிய தெய்வப்பெரியாரை உண்டாக்கி இத்தென்னுட்டை மேம்படுத்தியது தெளிக.

[தமிழ் வரலாறு—2-ம் பதிப்பு: அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1952]

## 38

## பி. ஆர். ராஜமய்யர் பி.ஏ., (1872—1898)

மதுரை மாவட்டம் வத்தலக்குண்டில் பிறந்தவர். சென்னையில் விவேகானந்தர் தொடங்கிய ''பிரபுத்த பாரதா'' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் முதல் ஆசிரியராக அவராலேயே நியமிக்கப்பட்டவர். ''கமலாம்பாள் சரித்திரம்'' என்ற இவருடைய நாவல் 1893, 94, 95-ம் ஆண்டுகளில் ''விவேக போதினி'' என்ற மாதப் பத்திரிகையில் தொடர் கதையாக வெளி வந்தது. இவருடைய வேதாந்தக் கட்டுரைகளும் கதைகளும் கொண்ட ஓர் ஆங்கில நூலும் வெளியாகியிருக்கிறது. 26 ஆண்டுகளே மண்ணுலகில் வாழ்ந்தார் ராஜமய்யர்.

### கமலாம்பாள் சரித்திரம்

ஒரு காலத்தில் தமிழ் தெரியாத ஒரு பைராகிக்கும் ஒரு சாஸ்திரியாருக்கும் சண்டை உண்டாய் விட்டது. பைராகி தன் வசவுகளில் 'காரே, பூரே' என்று அபரிமிதமாய் வைய, சாஸ்திரியார், முட்டாள், போக்கிரி என்றிப்படித் தனக்குத் தெரிந்த வசவுகளை யெல்லாம் வைது பார்த்தார். அவன் வாயொடுங்குகிற வழியாக வில்லை. அய்யர் பழைய வசவுகளுக்கு இவன் கட்டுப் படமாட்டான் என்று நினைத்து புது மாதிரியாக 'அடா போடா, புஸ்தகமே, சிலேட்டே, பென்சிலே, கலப்பையே, மோர்க்குழம்பே, ஈயச் சொம்பே, வெண்கலப் பானையே' என்று இப்படி வாயில் வந்த வார்த்தையை

எல்லாம் வசவாக அடுக்கவே, அந்த பைராகி புது வசவுகள் அகப்படாமல் திண்டாடித் தத்தளித்துப் போனுன்.—அதுபோல அம்மையப்ப பிள்ளையுடன் ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் செய்ய ஆரம்பித்தால் ஆயிரக்கணக்காகப் பாட்டுகளைச் சொல்லி எதிராளியின் வாயை அடக்கி விடுவார். அந்தப் பாட்டுகள் எடுத்த விஷயத்திற்கு சம்பந்த மில்லா விட்டால் என்ன? அதனுல் என்ன குறைவு? பாட்டுகள் பாட்டுகள் தானே! அதுவும் அவர் பாட ஆரம்பித்தால் அவருக்கு சரியாக மகா வைத்திய நாதையர் கூடப் பாட முடியாது.

ஒரு நாள் மதுரை கட்டை செட்டி மண்டபத்தில் நமது புலவர் கம்பராமாயணத்தில் சீதா கல்யாணப் படலத்தை எடுத்துப் பிரசங்கம் செய்து கொண்டிருந் தார். அப்பொழுது தற்செயலாய் தெரு வழியே போன ராம பக்தன் ஒருவன் ராமன் என்ற பேரைக் கேட்டு விட்டு, ராம கதை போலிருக்கிறது கேட்போம், என்று உள்ளே வந்தான். அப்பொழுது அம்மையப்ப பிள்ளை வாயினின்றும் எச்சில் காத வழிக்குத் தெரிக்க கண்கள் சிவந்து வெகு உக்கிரமான முகத்துடனும் கடூரமான குரலுடனும் அதிக உற்சாகமாய்ப் பிரசங்கம் செய்ய, வந்த ராமபக்தன் 'ராம—ராவண யுத்தம் போலிருக் கிறது, அது தான் இவர் இவ்வளவு கோபாவேச மாயிருக்கிருர். நல்ல பக்தர் போலும்' என்று இவரை மனதுக்குள் கொண்டாடிக் கொண்டிருக்கும் போதே புலவர் 'ராமன் சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான். சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான் ராமன்' என்று கைகளை வீசிக் கொண்டு கர்ச்சித்தார். அதைக் கேட்டு அந்த ராமபக்தன் திடுக் கிட்டு எழுந்து கண்களில் தீப்பொறி பறக்க 'ராமன் அப்படித்தான் சீதையைக் கலியாணம் செய்து கொள் வான். அதற்கு நீர் என்ன ஓய் கோபிக்கிறது!' என்று அதட்டிக் கொண்டு அவரை ஓங்கி அடிக்கச் செல்லவே சுற்றியிருந்தவர்கள் அந்த ராமபக்தனைக் கைபிடித் திழுக்க, அவன் 'விடுங்கள், சீதையை மணம் செய்த தற்கு இவ்வளவு கோபம் கோபிக்கிற சண்டாளனைக் கொல்லுகிறேன்' என்று சொல்ல. 'அது கோபமல்ல, உள்ள சாந்தமே அவ்வளவு தான் அவருக்கு' என்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்தினுர்கள். பிள்ளை அவர்களோ நடுநடுங்கி பாதிக் கல்யாணத்தில் நிறுத்தி விட்டு 'ராமன் பாடு, சீதைபாடு, அவர்கள் விஷயத் திற்கு நான் வரவில்லை. போதும் போதும்' என்று அன்று முதல் பொதுஸ்தலங்களில் கதாப் பிரசங்கம் செய்வதை நிறுத்தி விட்டார்...............

[சென்னை விவேக சிந்தாமணி பதிப்பகம் வெளியிட்ட 7-ம் பதிப்பு]

## 39

## ச பவானந்தம் பிள்ளை (?—1932)

இவர் 1889ல் போலீஸ் இலாகாவில் சேர்ந்து 1918ல் போலீஸ் துணைக் கமிஷனராகப் பதவி உயர்வு பெற்றுர். 35 ஆண்டுகள் அதே இலாக் காவில் பணி புரிந்தார். இவர் சொந்தமாக நாட கங்கள் எழுதி வெளியிட்டிருப்பதுடன் பல பழைய நூல்களையும் பதிப்பித்துத் தமிழ்த் தொண்டு புரிந் தார். பவானந்தம் பிள்ளை பதிப்புக்களின் அச்சு, அழகு, அமைப்பு முதலியவை இன்று வரையிலும் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றன.

### அரிச்சந்திரன்

"அரிச்சந்திரன்" என்ற தமது நாடகத்திற்கு ஆசிரியர் எழுதியுள்ள நூன்முகத்தில் முற்பகுதி:

வலம்படச் சுழலும் வரிவடி வியன்று
குலம்படு மேன்மை குலவுபன் மொழிக்குத்
தாயாய் விளங்குந் தனித்தமிழ் மொழியோ

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுதிகளை யுடையது. அவற்றுள் இயற்றமிழ் ஒன்றே நந்தம் செந்தமிழ்ப் புலவர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. ஏனைய இரண்டும் சீராட்டும் செவிலித் தாயருமின்றிக், கல்வியறிவில்லார் கையுட் சிக்குண்டு, சவலைக் குழந்தை களாயின. இனி, நாகரிகம் பரவிய இக்காலத்தே நாடகத் தமிழே மிகப் பயனுடைத்தாதலை யுணர்ந்து, பாஷாபிமான முள்ளார் அனைவராலும் அது பெரிதும் போற்றப்படுகின்றது. ஈண்டு நாடகத் தமிழின் இன்றிய மையாச் சிறப்புக்கள் இடம் பெறுதல் மிகையாகாது. நாடகத் தமிழ், மற்றைய இரண்டையும் தன்னுட் கொள்ளும் தகுதியினையுடைய தாவதன்றி, இல்பொருளு வமை, தற்குறிப் பேற்றம் முதலாய அணிகளை ஒதுக்கி, இயற்கை நவிற்சி யொன்றனையே தனக்கோர் அணி யாகக் கொண்டு விளங்கும் அடைவினை யுடையது...

### நாடகப் பகுதிகள்

[தேவதாசனும் சந்திரமதியும் பாங்கியருடன் வீற்றிருக்கின்றனர்.]

**சந்திரமதி:** அடீ, கல்யாணி! மாலையாயிற்று. மகா ராசா கொலுவிலிருந்து வருங்காலம் இதுவே யன்றோ? சற்று எட்டிப் பார்.

**கல்யாணி:** ஆம் அம்மா, ஆம் அம்மா, அதோ வருகின்றுர். முகக் குறிப்பினுல், இன்று பெருமகிழ் வுடன் வருவதாய்க் காண்கின்றது. நாங்கள் சற்று விலகி நிற்கின்றோம். நீங்கள் மகா ராஜாவை என்ன சங்கதி யென்று கேளுங்கள்.

[சந்திரமதி நாயகன் வரவை எதிர்பார்த்து நிற்கின்றுள். அரிச்சந்திரன் வருகிருன்.]

**சந்திரமதி :** என் இன்னுயிர்த் தலைவ! நமது அருந் தவப் புதல்வன் தமது வருகையைப் பெரிதும் நாடி நிற்கின்றான்.

**அரிச்சந்திரன் :** ஆ, ஆ, அப்படியா—
[தேவதாசனைக் காட்டியணைத்து முத்தமிடுகின்றான்]
பெண்மணீ! நமது மைந்தன் அருந்தவப் புதல்வன் என்பதில் சற்றும் ஐயமில்லை. இம்மைந்தனால் நாள் தோறும் நாம் பெருமகிழ்வை யடைகின்றோம். மற்றும், இவன் காலத்தில் நமது மரபு தழைத்துச் சிறந்து விளங்கு மென்பதற்கு முற்குறி யொன்று இன்று நேர்ந்திருக்கின்றது.

**சந்திரமதி :** [மிக்க மகிழ்வுடன்] காதல அது யாது? அடியாள் அறியத் தக்கதோ?

**அங்கம்—3 : ஐந்தாங் களம்**

**வீரவாகு :** டீ செல்லி, அடியேய், ஏ—செல்லீ.

**செல்லி :** ஏ இப்படி கயிதெயாட்ட○ *கத்ரியே, இதோத் தான் வந்துகுனு கீறனே. அதுக்குள்ள வவுத்து கொடலு வாயிலே வராப்பிலே கத்ரியே, தோ வந்தனே செல்லே○அஞ்சி மூணும் அடுக்கா தேடியாந்தாயா?

**வீரவாகு :** ஏண்டி நாயாட்டங் கொலைக்கிறியெ, தோ பார்ரீ ஒரு ஆளெ இட்டாந்தெ○வேலைக்கி.

**செல்லி :** ஐயே, தீயன்னுடியக்கா, இந்த ஐயன் யார்ரீ!

**வீரவாகு :** இத்ரீ, உனக்கு வேலெ செய்ய வெலைக்கி வாய்ங்காந்தண்டீ, நீதா○வேலெ செய்ய மூக்காலே அயுவுரியே, யெம்மவுளே.

**செல்லி :** தா உன்னைதான், இந்தா இப்படி வா செத்தே, எம்தோ○குடுத்து மன்சனெ வாய்ங் காந்தே.

**வீரவாகு :** நல்ல ஐயண்டி, நல்லா நல்லா வாய்ந்த வங்க. நம்ப ஊட்லே வேலெ செய்ய வருவாங்களா பார்ரீ, நா○எம்மாத்தங் கஸ்டபட்டு வாய்ங்காந்தே ○இவுளுக்குத் தெரிதா பார்ரா.

**செல்லி :** இது இன்னுடி யம்மா, இது என்னமோ இப்படி பொவுசு கெட்டு போயி கீது எம்மாத்திக்கி வாங்கியாந்தேண்ணு என்னென்னமா ரவுசியம் பேச வருதே.

---

*○ம், ன் என்ற எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும்போது அவற்றைப் பூரணமாக உச்சரிக்காமல் இலேசான ஊங்காரத்துடன் உச்சரிப்பது வழக்கம். எனவே அந்த ஊங்காரத்தைக் குறிக்க இவ்வாறு○குறி இட்டிருக்கிறார் ஆசிரியர்.

## சில சொற்களின் பொருள்

'ஆன்மா' என்பது 'யான்', 'எனது' எனக் கருதாதது உலக நன்மையையே கருதுகின்ற பேரறிவு.

'ஜீவன்' என்பது 'யான்', 'எனது' எனக் கருதித் தனது நன்மையே கருதுகின்ற **சிற்றறிவு**.

'மனிதன்' என்பவன் சூக்ஷும ஸ்தூல உடம்புகளோடு கூடி நின்று நினைக்கின்ற **'ஜீவன்'**.

'மனம்' என்பது ஒரு சூக்ஷும அல்லது சூக்ஷீம ஸ்தூல உடம்போடு கூடிநிற்கின்ற ஜீவனது நினைப்பு.

'சூக்ஷும உடம்பு' என்பது ஸ்தூல உடம்பின் பொறிகள் வழியாகக் காணமுடியாத ஓர் உடம்பு.

'ஸ்தூல உடம்பு' என்பது அப்பொறிகள் வழியாகக் காணத்தக்க ஓர் **உடம்பு**.

'அகம்' என்பது சூக்ஷும ஸ்தூல உடம்புகளில் மனம் சஞ்சரிக்கின்ற **இடம்**.

'புறம்' என்பது ஸ்தூல உடம்பிற்கு வெளியில் மனம் சஞ்சரிக்கின்ற **இடம்**.

'பரோக்ஷஞானம்' என்பது **கேள்வியால்** அல்லது **கல்வியால்** அடையப்பட்ட அறிவு.

'அபரோக்ஷஞானம்' என்பது **மனத்தால்** அல்லது **பொறிகளால்** காணப்பட்ட அறிவு.

'துன்பம்', 'துக்கம்' என்பன முறையே 'பொறிவருத்தத்தையும்' 'மனவருத்த'த்தையும் குறிக்கும்.

'இன்பம்', 'சுகம்' என்பன முறையே 'பொறிக்களிப்பையும்' 'மனக்களிப்பையும்' குறிக்கும்.

'போட்டி' என்பது ஒருவரின் மற்றொருவர் மேம்பட வேண்டுமென்று செய்யும் முயற்சி முதலியன.

—வ. உ. சிதம்பரம் பிள்ளை,
''வலிமைக்கு மார்க்கம்'' என்ற நூலிலிருந்து.

அங்கம்—3 : ஆருங்களம்

[காலகண்ட ஐயர், சந்திரமதி, தேவதாசன் மூவரும் விட்டை யடைகின்றனர்.]

**காலகண்ட ஐயர் :** அடீ சேஷீ, அடீ, என்னடீ வார்த்தெ சொல்லாமெ ஒரெம்மெ இருக்கிரு ? ஏண்டீ.

**காலகண்டி :** போதுக்கும் இப்படி விட்டுட்டு போரீரே இங்கே யார் இருக்கிரு? நேக்கு எப்படித்தான் போது போகும்? எண்ணேக்கும் இப்படி தானே செய்ரீர். வார்த்தை என்ன சொல்ரது ?

**காலகண்ட ஐயர் :** இப்படி வாடி.

**காலகண்டி :** இதோ வந்தேன். இவா யார் ? எதோ பசுவுங் கன்னுமா இழுத்திண்டு வந்தீரே.

**காலகண்ட ஐயர் :** அன்னுடி, ஒனக்காகக்தான் இவளெ வாங்கிண்டு வந்தெ○

**காலகண்டி ;** நேக்கு ஏன் அவா ? அதென்ன விசித் திரம் பேசிரீருமே ?

**காலகண்ட ஐயர் :** விசித்திர மன்னுடீ, ஆத்திலே ஒனக்கு கஷ்டமாயிருக்கே, வேண்டிய வேலெயெ செய்து வார்த்தெ சொல்லிண்டிருப்பாண்ணு வாங் கிண்டு வந்தே○

[ராவ் ஸாஹிப் ச. பவானந்தம் பிள்ளை எப். ஆர். எச். எஸ். (லண்டன்) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்) இயற்றிய இந்த நாடகம் அவரால் 1910-ல் அச்சிடப் பெற்றது.]

40 .

**வ. உ. சிதம்பரம் பிள்ளை (1872—1936)**

திருநெல்வேலி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் பிறந்தவர். ஆங்கிலேயர் ஆட்சியை ஒழிக்க வீரப் போர் புரிந்த தேசபக்தர். கொடுமையான சிறை வாச தண்டனைகளை அனுபவித்தவர். 1906-ல் சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கிக் கப்பலோட் டியவர் பாரதியாரால் போற்றிப் பாடப்பட்டவர். தமிழிலும் புலமை பெற்றிருந்த வ. உ. சி. தொல் காப்பியம் பொருளதிகாரத்தை இளம்பூரணர் உரை யுடனும், திருக்குறளை மணக்குடவர் உரையுடனும் பதிப்பித்தார். செய்யுட்களும் பல இயற்றினர். ஆங்கில நூல்களையும் மொழி பெயர்த்தார். கோவில் பட்டியிலும், தூத்துக்குடியிலும் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். தூத்துக்குடியில் காலமானர். அவர் ஜேம்ஸ் ஆலன் எழுதிய "வலிமைக்கு மார்க்கம்" என்ற நூலை மொழி பெயர்த்து அதற்கு எழுதிய பாயிரம் பின்வருமாறு:

**வலிமைக்கு மார்க்கம்—பாயிரம்**

இந்நூல் ஸ்ரீ ஜேம்ஸ் ஆலன் அரிய நூல்களில் "எளிமையிலிருந்து வலிமைக்கு" எனப் பொருள்படும் ஓர் அழகிய நூலினது முதற் பாகத்தின் மொழிபெயர்ப்பு. முதனூலின் ஐந்தாவது அதிகாரத்தின் தொடக்கத்தில் கண்ட ஆங்கிலக் கதையை நம்மவரிற் பெரும்பாலார் கேட்டிருக்க மாட்டாராதலால் அக் கதையின் பெயரினை இந்நூலிற் குறிப்பதால் பயனில்லையென்று கருதி, அதற்குப் பதிலாகப், 'பாரதக் கதை' என்று குறித்துள் ளேன். முதனூலின் கருத்துக்களை நம்மவர்கள் எளிதில் உணருமாறு, சிற்சில இடங்களில் சில சொற்களைச் சேர்த்தும் சில சொற்களை விடுத்தும் இம்மொழி பெயர்ப்பைச் செய்துள்ளேன்.

முதனூலில் கண்ட ஆங்கிலச் செய்யுகளைத் தமிழ்ச் செய்யுள்களாக்கி இதன் கண் சேர்த்துள்ளேன். முதனூலிற் கண்ட விவிலிய நூல் கோட்பாடுகளும் மேற் கோள்களும் இதர மத நூல்களின் கோட்பாடுகளுக்கும் மேற்கோள்களுக்கும் ஒத்திருக்கின்றமையால் அவற்றை அவ்வாறே மொழிபெயர்த்துள்ளேன். இந்நூலில் நான் உபயோகித்துள்ள சில சொற்கள் குறிக்கும் பொருள் களை இதன் vii-வது பக்கத்தில் குறித்திருக்கிறேன். நான் இதுவரையில் பார்த்துள்ள இலக்கியங்களில் காணப் படாத 'எஃது' என்பது போன்ற ஒன்றிரண்டு சொற் களைப் புதியன புகுதலாக இதில் உபயோகித்துள்ளேன்.

ஸ்ரீ ஜேம்ஸ் ஆலன் நூல்களெல்லாம் உலகத்திற்கு, முக்கியமாக நம் தேயத்திற்கு, மிக்க நன்மை அளிப் பவை [யென்பது அறிவிற் சிறந்த பலருடைய அபிப் பிராயம். அந்நூல்கள் நம் வள்ளுவர் மறைக்கொப்பப் போற்றத்தக்கவை. ஆகவே, அந்நூல்களிற் கூறியுள்ள பொருள்களைக் கசடற உணர்ந்து கைக்கொண்டொழுகு பவர் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் மனிதர் அடையக்கூடிய மேலான நிலைகளை யெல்லாம் அடைவ ரென்பது திண்ணம். ஆதலால், தமிழ் மக்கள் ஒவ்வொரு வரும் அந்நூல்களால் நன்மை அடைய வேண்டும் என்பதே நான் அவற்றை மொழிபெயர்த்ததற்குக் காரணம்.

இவ்விரண்டாம் பதிப்பினை அச்சிட்டு வெளிப் படுத்துகின்றவர் சென்னபட்டணத்தில் பெரியதோர் அச்சுயந்திரசாலை அமைத்துச் சென்ற பல வருஷங் களாகத் தெலுங்கிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் கலாசாலை மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக் கும் ஏனையோர்களுக்கும் பயன்படும்படியான புத்த கங்கள் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வெளியிட்டு விற்று வரும் ஸ்ரீவாவிள்ளா. இராமஸ்வாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ் கம்பெனியார். அக்கம்பெனியின் ஆதி ஸ்தாபக ரான ஸ்ரீ வாவிள்ளா. இராமஸ்வாமி சாஸ்திரிகளின்

குமாரரும் அதிபருமான ஸ்ரீ வி. வெங்கிடேஸ்வர சாஸ்திரியாரவர்கள் எனது இராஜீய குருவாகிய ஸ்ரீ பாலகங்காதர திலகரவர்களின் அத்யந்த நண்பர்; ஸ்ரீ திலகரின் "கரும யோகம்" முதலிய பல நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திய சிறந்த தேசபக்தர்; எனக்குப் பலகால் பணம் உதவிய சீமான். அவர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் அவர்கள் கம்பெனியும் நீடூழி நின்று வாழ்க.

கோவிற்பட்டி,
25 - 7 - 30.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

## 41

### அ. மாதவையா (1872—1925)

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பெருங்குளத்தில் பிறந்தவர். உப்பு - ஆப்காரி இலாகா இன்ஸ்பெக்டராகப் பதவி வகித்து 1923-ல் அப்பதவியிலிருந்து விலகி, சென்னைக்கு வந்து "பஞ்சாமிர்தம்" என்னும் பத்திரிகையை நடத்தினர். சமூக சீர்திருத்தங்களைத் தீவிரமாக வற்புறுத்திய "பத்மாவதி சரித்திரம்", "தில்லை கோவிந்தன்" போன்ற நாவல்களையும், "பாரிஸ்டர் பஞ்சநதம்" என்ற நாடகத்தையும், குசிகர் குட்டிக் கதைகள் (3 தொகுதிகள்) என்னும் நூலையும் இயற்றினர். ஆங்கிலத்தில் எழுதிய நூல்களும் சில. 1925-ல் சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென மரணம் அடைந்தார்.

#### நரி பரியான அற்புதம்

"இன்று காலையில் அப்பா இறந்து போனர்; உடனே புறப்பட்டு வரவேண்டும்," என்ற அவசரத் தந்தி, மாலையில், கேசவையர் கச்சேரியிலிருந்து திரும்பி வந்ததும், அவருக்குக் கிடைத்தது. "ஐயோ! என் தங்கை பரம ஏழையே! சட்டையும் சவலையுமாய்க் குழந்தைகளே! இனி என்ன செய்வாள்" என்று பரிதபித்துப் புலம்பியழுதார் கேசவையர். பல்லாரி ஜில்லாவில் கலெக்டர் ஆபீஸ் ஹெட் குமாஸ்தா அவர். அவர் கூடப் பிறந்தவள் அம்மாளு அம்மாள் ஒருத்தியே; அவள் புருஷர் கொச்சி சம்ஸ்தானம் திருச்சூரில் திவான் ஆபீஸில் குமாஸ்தா; சம்பளம் சொற்பமே; சந்தான சம்பத்தோ யதேஷ்டம்; பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆறுண்டு; மூத்தவனான ரமணன் தான் தந்தி கொடுத்தவன். தன் சகோதரி புருஷர் கொஞ்ச நாளாய் சௌக்கியத் தப்பா யிருந்தது கேசவையருக்குத் தெரியும். தனது கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமலும், சில சமயங்களில் கடன் பட்டுங்கூட, வைத்தியச் செலவுக்கும் குடும்ப சம்ரக்ஷணைக்கும், அவர் சில மாதங்களாகப் பணம் அனுப்பி வந்தார்; ஆனல்; நோய் சீக்கிரமே சொஸ்தமாய் விடுமென்று நினைத்திருந்தார்; இவ்வாறு முடியு மென்று எண்ணவே யில்லை. ஆகவே திடீரென்று தந்தி வந்தவுடன், இடி விழுந்தாற் போல் திகைப்புற்றுப், பின்பு தன் சகோதரிக்கு நேர்ந்த கதியை நினைந்து பரிதபித்துப் பிரலாபிக்கலானர்.

கேசவையருக்கும் அவர் மனைவி சுந்தரிக்கும் அடிக்கடி யுண்டாகும் மனஸ்தாபங்களுக்கு, அவர் சகோதரி அம்மாளுவின் குடும்ப விஷயமே முக்கிய காரணம்; அவள் புருஷர் வியாதிப்பட்டு, மாதம் தவருமல் மணியார்டர் அனுப்பும்படி ஏற்பட்டது முதல், தம்பதிகள் ஒரு நாளேனும் சண்டையின்றி மனோ ரம்மியமாய் வாழ்ந்ததில்லை. தந்தி வந்ததும், முட்டுத் தட்டுக்குச் சில சமயங்களில் பணம் அனுப்புவது போய், மற்றெரு குடும்பப் பாரம் ஸ்திரமாகவே தந்தலைப் பொறுப்பாகி விடுமோ வென்ற பயம் சுந்தரியம்மாளுக்கு அதிகப்பட்டது. ஆயினும், தன் புருஷர் படும் துயரத்தைக் கண்டு மனம் வருந்தி, அப்பொழுது வேறென்றும் சொல்லமாமல், அவரைத் தேற்றினள்......

இன்னும் ஒரு சங்கதி அவரைப்பற்றி இங்கே சொல்லத்தக்கது. அவர் பிறந்து வளர்ந்ததோ பரம் பரையாக வைதீக சிரத்தையுள்ள குடும்பம்; அவர் கல்வி கற்ற நாடோ; பிராமண விசுவாசமும் செல்வாக்கும் தழைத்து மேலிட்டதும், புராதனப் பழக்க வழக்கங்களும் நடையுடை பாவனைகளும் மூட பக்தியும் இக்காலத்து ஆங்கிலேயக் கல்விப் பயிற்சி நாகரிகங்களையும் கூட ஒருவாறு சிதைக்கு மளவு மலிந்துள்ளதுமான திருவாங்கூர் இராச்சியம். ஆகவே, கேசவையர், கேவலம் கர்நாடக மனுஷர் என்றே சொல்ல வேண்டும். மத சம்பந்தமாயும், மற்றும் ஆசார அநுஷ்டான விஷயமாயும் நம் முன்னேர்கள் வழியை விட்டுத் தற்காலத்துக் கேற்றபடி பல சீர்திருத்தங்களைச் செய்ய முயல்வோரது முழக்கமும் கம்பலையும் அவர் காதில் விழுந்ததேயில்லை. இருபதாவது நூற்றுண்டாகிய இந்தக் காலத்தில், ஆங்கிலேய துரைத்தனத்தில், கலெக்டர் ஆபீஸ் ஹெட் குமாஸ்தா ஒருவர், வருணுசிரம தர்மம் வழுவாது எவ்வளவு நடக்கமுடியுமோ, அவ்வளவு அவரும் அனுஷ்டித்து வந்தார்; வைதீகமாக நினைக்கப்படும் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டு, தன் ஜாதியாருக்கு அவற்றினும் உத்தமமானவை வேறில்லை யென்று மதித் தொழுகி வந்தார்....

["குசிகர் குட்டிக் கதைகள்": 3-ம் பாகத்திலிருந்து சில பகுதிகள்.]

## 42

### ப. சம்பந்த முதலியார் (1873—1964)

வாழ்நாள் முழுவதும் தமிழ் நாடக வளர்ச்சியே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த இவர் சென்னை

யில் பிறந்து சென்னையிலே காலமானுர். ஏராள மான நாடங்கள் எழுதினுர்; நடித்தார்; பிற மொழி நாடகங்கள் பலவற்றையும் தமிழ்ப்படுத் தினுர். சுய சரித்திரத்தையும், நாடக மேடை நினைவுகளையும், கதைகளையும் எழுதியிருக்கிருர். சென்னை சுகுண விலாச சபையை 1891-ல் ஸ்தா பித்தவர்களில் ஒருவர். 25 ஆண்டுகள் வழக்கறிஞ ராகவும், 5 ஆண்டுகள் ஸ்மால்காஸ் கோர்ட் நீதி பதியாகவும், சில காலம் பிரதம மாகாண மாஜிஸ் திரேட்டாகவும் இருந்தார். சென்னை ஸ்ரீ கபாலீஸ் வரர் கோவில் தர்மகர்த்தாவாக 1900-ம் ஆண்டி லிருந்து 24 ஆண்டுகள் பதவி வகித்த இவருடைய முயற்சியால்தான் கோவிலின் பெரிய குளத்திற்கு கருங்கல் படிகள் மிகுந்த பொருட் செலவில் அமைக்கப்பட்டன. அதற்கு வசூல் மூலம் பொருள் திரட்டியவரும் இவரே. கோவிலுக்கு இவர் பத விக் காலத்தில்தான் கோபுரமும் கட்டப்பட்டது. 1943-ம் ஆண்டில் ஈரோடு நாடகத் தமிழ் மாகா நாட்டில் இவருக்கு ''நாடகப் பேராசிரியர்'' என்ற பட்டம் வழங்கினர்.

இவருடைய "மனோஹரன் நாடகத்"தில், வி (விஜயா), ம (மனோஹரன்), வனை (வசந்த சேனை என்ற அரண்மனைத்தாசி), பு (மனோஹர னின் தந்தையும் சோழ நாட்டு அரசனுமான புரு ஷோத்தமன்), ச (மந்திரி சத்திய சீலர்) ஆகிய பாத்திரங்கள் உரையாடும் சில கட்டங்கள் பின் வருமாறு:

**மனோஹரன்**

வி : (சிரிப்புடன்) இல்லை, பிராண நாதா, வாரும்.

ம : எங்கே வருவது?

வி : அதோ பாரும், ஆங்காங்குப் பெண்கள் தம் காதலருடன் நீர் நிரம்பிய தடாகங்களி லிறங்கி ஒரு வர் மீதொருவர் தண்ணீர் வாரி இறைத்து விளையாடி யும், நிலவை வியந்து புஷ்பம்கமழ் சோலைகளிலுலாவி யும் புஷ்பச் செண்டுகளால் ஒருவரையொருவர் அடித் தும், புஷ்பமாலைகளால் ஒருவரையொருவர் கட்டி யிழுத்தும், மகரந்தத்தைத் தூவியும், மல்லிகை மலர் களைச் சூடியும், ஒருவர் கண்ணை ஒருவர் பொத்தியும், இன்னும் இப்படி பற்பல விதமாகக் காலங்கழிக்கிருர் களே, தென்றல் சுகந்தமும் மெல்லென வீசும் இவ்வழகிய பூஞ்சோலையில்! பிராண நாதா, இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டு தனியாயிருக்க என் மனம் ஒப்புமா? ஆம், நாமும் போய் விளையாடுவோம்.

ம : கண்ணே, என் மனம் ஏதோ ஒரு மாதிரியாக இருக் கிறது. இப்பொழுது விநோதத்தின் மீது சொல்ல வில்லை.

வி: உம்! உம்! நான் எப்பொழுது அழைத்தாலும் இப் படித்தானே! உம்! உம்!—

ம : இதென்னடா பெரிய தொந்தரவா யிருக்கிறது!— என்ன செய்ய வேண்டும் என்கிருய்? நானு விளை யாடுவது?

வி : அவர்களெல்லாம் என்ன செய்கிருர்கள்? அவர்கள் விளையாட வில்லையோ?

ம : அவர்களெல்லாம் முழுமுண்டங்கள். அவர்களுக்கு வேருெரு வேலையுமில்லை, விஜயா, நான் செல்வ தைக் கேள்—

வி : நான் கேட்க மாட்டேன்.

[முகத்தை முன்தானையால் மூடிக் கொள்கிருள்.]

ம : அடடா! தீர்ந்தது!......கண்ணே, அழவேண்டாம், இதோ வந்து விட்டேன். [கண்ணீரைத் துடைத்து] என்னை வெல்லுவதற்கு இந்தப் பாணம் ஒன்று எப் பொழுதும் வைத்துக் கொண்டிருக்கிருயே!

வி : அதுதான் சரி! வாரு மிப்படி.

[புஷ்பமாலையால் அவனைக் கட்டி இழுக்கிருள்.]

..........................................................

வனை : மும்மூர்த்திகளாலும் முடியாத காரியம் இந்த வேசி மகனுல் முடியப்போகிறதோ? அவன் கெட் டான், நீ வா இப்படி.

ம : என்ன சொல்லினை! என்ன சொல்லினை? [வாளை வீசி]

அண்ணு, கேட்டீரோ வசந்த சேனை சொன்னதை?... என்ன சும்மா இருக்கிறீர்?—உமது குல பத்தினியை வேசியென்று ஒருத்தி அழைக்க நீர் கேட்டுக் கொண்டிருப்பதா?—என்ன பேசாமலிருக்கிறீர்?— நீர் உம்முடைய பத்னியின் மானத்தைக் காப்பாற்ரு விட்டாலும் நான் என் தாயாரின் மானத்தைக் காப்பாற்றவேண்டும். என் தாயை வேசியென்று கூறிய நாவை இக்ஷணம் அறுத்தெறிகிறேன்.

[வசந்த சேனையை வெட்ட அருகில் நெருங்குகிருன்]

(மனோஹரன் கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு)

பு : மனோஹரா! விடு வாளை!

ம : ஏன்?

பு : நான் சொன்னபடி கேள்...விடு வாளை!

ம : நான் விடமாட்டேன். உமக்கு வல்லமை இருந் தால் தடுத்துக் கொள்ளும். எனதன்னையைத் தூஷித்த நாவைத் துண்டித்தே விடுவேன்!

ச : (மனோஹரன் காதில் மெல்ல) மறந்தீரோ உம தன்னைக்குக் கூறியதை?

ம : (அசைவற்று நின்று) உம்மை யாரையா இங்கு வரச் சொன்னது? நல்ல சனி!

(வாளைக் கீழே எறிந்துவிட்டு கண்களில் நீர் ததும் பப் போகிருன். புருஷோத்தம மஹாராஜன் ஒரு புற மாகத் தலை குனிந்த வண்ணம் போகிருர்.)

[''மனோஹரன்'' : 1955-ம் ஆண்டுப் பதிப்பு]

## 43

### கா. நமச்சிவாய முதலியார் (1876—1931)

வட ஆற்காடு மாவட்டம் காவேரிப்பாக்கத்தில் பிறந்தவர். சென்னை எஸ். பி. ஜி. உயர் நிலைப் பள்ளியிலும், பல கல்லூரிகளிலும் தமிழாசிரியராக இருந்தவர். பெரும் புலவராக மட்டுமன்றி பெரும் செல்வந்தராகவும் வாழ்ந்தார். தமிழாசிரியர்களின் நிலை உயருவதற்குப் பாடுபட்ட பெரிய உபகாரி. மாணவ மாணவிகளுக்கான பாடப் புத்தகங்கள் எழுதினர். கீசகன், பிருதிவிராஜன் போன்ற நாடகங்களும், பல உரைநடை நூல்களும் இயற்றினர். தொல்காப்பியம் பொருளதிகாரத்தை இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்தார். வேறு சில நூல்களுக்கும் பதிப்பாசிரியர். அவற்றுள் ஒரு நூலுக்கு எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி :

#### முன்னுரை

அதிவீரராமர் தமிழ் மொழியை நன்கு கற்ற பெரும் புலவர். இவர் செய்த வேறு நூல்கள்—நைடதம், கூர்ம புராணம், காசி காண்டம் என்பன ; கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, கருவைக் கலித்துறை யந்தாதி, கருவை வெண்பா வந்தாதி என்பனவும் இவர் செய்தவை என்ப..........இவர் தமையனுர், வரதுங்க ராம பாண்டியர் என்பவர். இவர்கள் இருவருக்கும் ஏதோ காரணமாகப் பகையுண்டாயிற்று. அதனல், அதிவீரராமர், தாம் எழுதும் நைடதப் பாடல்களைப் பூசையறையில் வைத்து வெளிவருவர். வரதுங்கராமர் அதனை எடுத்துப் பார்த்துப் பிழைதிருத்தி, அவ்விடத்திலேயே வைத்து விட்டுச் செல்வர். ஒருநாள், அதிவீரராமர் தாம் எழுதிய சந்திரோபாலம்பனப் படலத்துப் பாட்டுக்களை அவ்விடத்தில் வைத்தனர். வரதுங்கர் அவற்றை எடுத்துப் பார்த்து, 'அந்தோ, இவன் அறிவு இப்படியும் கெட்டுவிடுமோ! நம்மை யொத்த அரசன் ஒருவனைப் பற்றி இவ்வாறு சிறப்பித்துப் பாடலாமோ? கடவுளைப் பாடின் கடைத்தேறலாமே' என்று கூறி, ஏடுகளை அங்கேயே வைத்து விட்டு வெளியே போயினர். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த அதிவீரராமர் நல்லுணர்வு பெற்று, அந்நூலை விரைவில் முடித்து விட்டு, கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலான தோத்திரப் பிரபந்தங்களையும், காசி காண்டம் முதலான நூல்களையும் செய்யத் தொடங்கினர் என்பர். அதனல், கருவையைப் பற்றிய நூல்கள், கற்பவர் மனத்தை உருகச் செய்வனவாகி, குட்டித் திருவாசகம் என்னும் பெயரையும் பெற்றன என்ப. கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலான நூல்களை இயற்றியவர் வரதுங்க ராம பாண்டியரே என்பர் ஒரு சாரர்.

[வெற்றி வேற்கை, உலகநீதி, நீதி வெண்பா ஆகியவற்றைப் பதிப்பித்து எழுதிய முன்னுரையிலிருந்து : ''தமிழ்க்கடல்'' வெளியீடு, 1931.]

## 44

### மறைமலையடிகள் (1876—1950)

நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள காடம்பாடி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையும், சைவத்தில் ஈடுபாடும் உடையவர். சுவாமி வேதாசலம் என்ற தமது பெயரை மறைமலையடிகள் என்று தூய தமிழாக்கி வைத்துக் கொண்டார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர். ''ஞானசாகரம்'' என்னும் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினர். 1916-ல் தமது பெயரைத் தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டது போலவே, பத்திரிகையின் பெயரையும் ''அறிவுக்கடல்'' என்று மாற்றினர். பிறமொழிச் சொற்களைக் கலக்காமல் தமிழை எழுத வேண்டும் என்று வற்புறுத்தினர். 1911-ல் காவியுடை தரிக்கத்தொடங்கினர். இதனல் 'சுவாமி' என்றும், பின்பு 'அடிகள்' என்றும் அழைக்கப் பெற்றுர். இவர் பெயரால் 1958-லிருந்து சென்னையில் ''நூல் நிலையம்'' ஒன்று நடந்து வருகிறது. ''குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி,'' ''மாணிக்க வாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும்'' போன்ற நூல்களின் ஆசிரியர். சாகுந்தல நாடகத்தை வடமொழியிலிருந்து தமிழ்ப்படுத்தினர். சென்னையை அடுத்த பல்லாவரத்தில் காலமானர்.

#### பட்டினப்பாலை ஆராய்ச்சி

இனி, இப் பெற்றித்தான அறிவுக்குப் புலப்படாத இறைவனை உண்டென்று மட்டுங் கூறுதலாற் போந்த பயன் என்னை யெனின், அறிவு நிலைக்கு அவன் புலப்படானுயினும், அதற்குமேற்பட்ட உணர்வு நிலையில் அடையப்படு பொருளாய் அவன் விளங்கித் தோன்றுமாகலின் அது கடாவன்றென மறுக்க. அற்றேல், உணர்வு நிலை நம்மனேர்பாலுண்டென்பது எற்ருற் பெறுதுமெனின் ; காதற் கிழமையிற் சிறந்தாரிருவர் அவ்வுரிமையினைத் தாங் கருதும் போதெல்லாம் அவரகத்தே ஓரின்பந் தோன்றுதல் பழக்கத்தின் வைத்து விளங்க அறியக் கிடந்த தொன்ரும். அவ்வின்பம் அது தோன்றப் பெற்ருர் தமக்கே புலனுவ தல்லது, அஃதிவ் வாறிருந்ததெனப் பிறர்க்கு அறிவிக்கவும் உரைக்கவும் படாத இயல்பிற்கும், காணவுங் கருதவு முரைக்கவும் படாத முதல்வனே டொற்றித்து நின்று அவன்றன் இன்பத்தை நுகர்தல், அவன் போற் காணவுங் கருதவும் உரைக்கவும் படாத உணர்வு நிலை யொன்றற்கு மட்டுமே வாய்ப்பதாகும். என்னை ? அகத்தே தோன்றும் அன்பும், அவ்வன்பே தனக்குண்மையுருவாய்க் கொண்ட முதற் பொருளும் வேறல்லாமையால், அவ்வன்பு வரம்பின்றி இளகி விரிந்த உணர்வு நிலையில்

அஃதின்பப் பொருளாய் முறுகித் தோன்றல் பிறழாது நிகழுமாகலின்; இவ்வுண்மை யுணர்ந்தே திருமூலரும்,

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

ஆகவே, முழுமுதற் கடவுளுண்டு என்பதனை விளங்க அறிவித்தற்குரிய அறிவு நிலையும், பின் அதனோடு வேறறக் கலந்து நின் நின்புறுதற்குரிய உணர்வு நிலையுமென்னும் இருதிற நிலையினையும் உயிர்களுக்கு முறுகுவித்துப், பின் அவ் வறிவு நிலையினையுங் கழலச் செய்து தூய அன்புருவாய் விளங்கும் உணர்வு நிலையை நிலைபேருக்கு வித்து உயிர்களுக்கு அளந்தறியப் படாத பெரும் பயனைத் தருதற்கு இன்றியமையாக் கருவியாவது தான் பாட்டென்றறிதல் வேண்டும்.

அற்றேல், உரையுஞ் செய்யுளுமென்னும் இரண்டனுள் உரையும் அவ்விருதிற நிலையினையும் முறுகுவித்துப் பயன்றருமாகலிற் செய்யுள் மட்டுமே அதனைப் பயக்குமென் றுரை கூறிய தென்னை யெனிற், பால் கறந்தவுடனே யுண்பார்க்குஞ் சுவை பயக்குமாயினும், அதனை வற்றக் காய்ச்சிக் கட்டியாகத் திரட்டிப் பின்னுண்பார்க்குக் கழி பெருஞ் சுவை தருதல் போலவும், முற்றின கருப்பங்கழியை நறுக்கிப் பிழிந்து அதன் சாற்றைப் பருகுவார்க்கு அஃதினிமை விளைக்குமாயினும், மேலும் அதனைப் பாகு திரளக் காய்ச்சிச் சருக்கரைக் கட்டியாக எடுத்துண்பார்க்கு அஃது ஆற்றவும் பேரினிமை பயத்தல் போலவும், உரையும் நலம் பயப்பதொன்றேயாயினும் அதனைக் காட்டினுஞ் செய்யுளாற் பெறப்படும் பயன் சாலவும் பெரிதாம். கறந்த பால் நீராளமாய் நெகிழ்ந்திருத்தலின் அதன் கண்ணுள்ள சுவை மிகுந்து தோன்ருது குறைந்தே காணப்படுகின்றது.........

*[மூன்றும் பதிப்பு: 1930.]*

## 45

### சி. தேசிகவிநாயகம் பிள்ளை (1876 - 1954)

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூரில் பிறந்தவர். கோட்டாறு, நாகர்கோவில், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் தமிழாசிரியராய்ப் பணியாற்றி, ஓய்வு பெற்றபின் புத்தேரி என்னும் கிராமத்தில் வசித்து வந்தார். "கவிமணி" என்று போற்றப்படும் இவர், "மலரும் மாலையும்", "ஆசிய ஜோதி" போன்ற கவிதை நூல்களை இயற்றியிருப்பதுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 1948, மே 14-ம் தேதியன்று நாகர்கோவிலில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் அவர் நிகழ்த்திய வரவேற்புரையிலிருந்து சில பகுதிகள் :

#### வரவேற்புரை

...ஆனல் நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'தமிழில் அது இருந்தது, இது இருந்தது' என்று பழம் பெருமை பேசிக்கொண்டிருக்காமல், எது தேவையோ அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்க வேண்டும். முத்தமிழ் முத்தமிழ் என்று முழக்கம் செய்கிருர்கள். இசைத்தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டை நூல்களைப் படித்து விட்டு நாம் 'பெருநாரை' 'பெருங்குருகு' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகி விடுமா? அந்த நாரைகளும் குருகுகளும் மறைந்து போய் விட்டன. இனி நம்முடைய வலைக்குள் அகப்படப் போவதில்லை. ஒரு ஏழை உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் இல்லாமல் தவிக்கிருன். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும் கொள்ளுப் பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாய் இருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனுல் என்ன பயன்?

நாடகத் தமிழ் என்பததன் பொருள் தான் என்ன? நாடகம் என்னும் சொல்லுக்கு "ட்ராமா", நடனம் என்ற இரண்டு பொருள் உண்டு. கூத்துக்கும் அப்படியே.

சில தமிழர்களிடம் இதைப் பற்றிப் பேசினுல் தமிழிலிருந்த இசைத் தமிழ் நாடகத் தமிழ் நூற்கள் கொஞ்சமா? அவை யெல்லாம் கபாட புரத்தைக் கடல் கொண்டதோடு போய்விட்டன என்று சொல்லி நம் வாயை அடைத்து விடுகிருர்கள். போய்விட்டன, போய்விட்டன என்று சொல்லிக் கரையிலிருந்து அலையை எண்ணிக் கொண்டிருந்தால் அவை வந்து கரையேறுமா? புது நூல்கள் ஆக்குவதுதானே செய்யத் தக்க முயற்சி? தமிழில் நாடகங்கள் அதிகமாக இல்லை. இசையைப்பற்றி வடமொழி தெலுங்கு முதலியவற்றில் இருப்பது போன்ற நூல்கள் தமிழில் உண்டா? தற்காலத்தில் சில அறிஞர்கள் நாடகங்கள் எழுதி வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. செந்தமிழ்ச் செல்வி பல காளிதாஸர்களையும் ஷேக்ஸ்பியர்களையும் இப்ஸன்களையும் பெர்னுட் ஷாக்களையும் பிறப்பித்து உதவுவாளாக.

*["சக்தி", மே, 1948.]*

## 46

### எஸ். அனவரத விநாயகம் பிள்ளை (1877-1940)

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்று அதே கல்லூரியிலும், கொழும்பு பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர். பல நூல் களின் ஆசிரியர் ; பல நூல்களின் பதிப்பாசிரியர். இவர் ஔவையார் நீதி நூல் திரட்டுக்கு (1906) எழுதிய ஔவையார் சரித்திரத்தில் ஒரு பகுதி :

#### ஔவையார் சரித்திரம்

பண்டைக் காலத்து நம்மவருள் பெண்மக்களில் கற்ருர் யாவரிருந்தனர் எனக் கடாவும் அறிவில்லாக் கருநாடகமாக்கள் வாயையடக்க, நல்லோர் ஔவை யார் பெயரை அடிக்கடி யெடுத்து வழங்குவதுண்டு. ஔவையாரையன்றி அஞ்சனுட்சி முதலிய சிலபெயரும் உரைப்ப. புறநானூறு முதலிய பழையதமிழ் நூல்களால் அரசர் குலத்தும் வேறுகுலத்தும் கற்ருர் பலரிருந்தன ரென்றும், அவருட்சிலர் பாடுந்திறம் பெற்றிருந்தன ரென்றும் அறிகின்ருேம். ஆயினும் அப்பெயர்க ளெல்லாம் பகலவன் முன் மின்மினிகள் ஒளிமழுங்கி மறைதல் போல ஔவையார் பெயர் முன் நில்லாதழி கின்றன. நம்மவருள் படிப்பறியாப் பெண்டிரும் ஔவை சொல்வது போல எனவசனங்கள் புகல்வதுண்டு. ஔவையாரைத் தமிழ் நாட்டில் தெய்வமாகவே கொண்டாடுகின்றனர். அவர் கலைமகளவதாரமென் பதே சாமானியர் நம்பிக்கை, தென்னுட்டில் அவள் பெயரால் ஒரு விரதம் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றது. செவ்வாய்க் கிழமையில் அவ்விரதங் கிடந்தார் ஆயுள் செல்வ முதலியன வர்த்திக்கப் பெறுவர் என்பது பெண்டிர் சித்தாந்தம்' அவ்விரத மிருக்கும் நள்ளிரவில் அவ்விடத்தில் ஆண்காகங் கூடப் பறக்கலாகா தென்பர். கள்ளத்தனமாய் நடப்ப தின்னதெனக் காண விரும்பிப் பெண்வேடந் தரித்துப் பெண்டிர் நடுவுட் சென்றும், வீட்டுக் கூரையைத் திறந்து பார்த்தும் அதிக்கிரமித்த ஆடவர் கண்கெட்டும் காலொடிந்தும் துயருழந்த வரலாறு கேள்விக்கதைகள் பலவற்றினும் முழங்கும்.

இவ்வாறு தெய்வத்தன்மையுண்டாவதற்கு ஔவை யார் இந்நிலவுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து தமிழ் நாடெங்குஞ் சஞ்சரித்துத் தம் பெருமையை விளக்கி வந்தாரென்று கொண்டாலன்றிக் காரணங் கூறல் சாத்தியமன்று.

தமிழ் மொழியில் ஔவை யென்னுஞ் சொல் சிறு பான்மை கிழவியைக் குறிக்கும். ஏனைத் தெலுங்கு கன்னட மலயாள பாஷைகளில் அவ்வை யென்னுஞ் சொல் தாய் கிழவி முதலிய பல பொருளின தென்பது அப்பாஷைகள் வல்லார்க்கெல்லாந் தெரிந்த தொன்று. அப்பாஷைகளில் எழுதுவது போல அவ்வை என்றெழுத வேண்டும். ஔவையார் பெயரையும், ஔவையென் றெழுதப்படாதெனச் சில புலவர் கொள்ளுகின்றனர். பழநூல்களும் நூலுரைகளும் அவ் வழக்கினை யாதரித்தது முண்டு.

## 47

### அ. வரதநஞ்சைய பிள்ளை (1877—1956)

சேலம் மாவட்டம் தோரமங்கலம் (ஜலகண்ட புரம்) என்னும் ஊரில் பிறந்து அவ்வூரின் கர்ண மாகவும் இருந்தார். பின்பு நாமக்கல் போர்டு உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகவும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சாதிகாரியாகவும் பதவி வகித்தார். இவர் பிறந்த ஊரின் பெயர் பெருமாள் பாளையம் என்று கலைக்களஞ்சியத்தில் காணப்படு கிறது. தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய வற்றில் புலமை பெற்ற இவர் தாம் இயற்றிய "தமி ழரசி குறவஞ்சி"யைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினுர். இவர் எழுதிய ஒரு கட்டுரை யின் பகுதி :

#### தற்காலத்துத் தமிழ் நிலைமை

தமிழிற் சில நூற்களையேனும் ஆரத்திரக் கற்கு முன்னரே சுயமாக நூதன கவிகளியற்றிக் கியாதி படைக்க வேண்டுமென்னும் ஆத்திரத்தால் ஏதோ சில செய்யுட்களியற்றி அந்த மட்டில் ஆவலடங்கித் தம் ஜனன தேசத்திற்குத் தாம் செய்ய வேண்டிய பேருப கார முற்றும் செய்தாயிற்றெனக் கருதிப் பேருவகையுற் றிருக்குங் கவிஞர் பல ரிக்காலத்தில் மலிந்துள்ளார். தமது கல்வித்திறன் கவியியற்றுவதனுலேயே நிரம்பிற் றென்ப தன்னேர் கொள்கை போலும். நம் செந்தமிழ் மாது செய்தவப்பயனுல் பூர்வத்திலேயே தெய்வத் தன்மைக் கவிஞர் பலர் தோன்றி கற்பனை, சொற்சுவை, பொருட்பொலிவு, சந்தபேதவின்பங்கள் சிறக்க, நவ ரசங்களும் சொட்டும் வண்ணம், அறிவினேனுக்குதலுக் கின்றியமையாத லௌதீக வைதிக சம்பந்தமான நுட்ப விஷயங்கள் பலவற்றையும் புராணேதிகாசங்களின் மூல மாக பத்திய (செய்யுள்) ரூபத்தில் செய்தளித்துச் சென்றனர். நம் தமிழ்க் கன்னிக்குத் தன்கட் செய்யு ணூற்கள் பல விலையே என்னுங் குறை என்று மின்று. அங்ஙனமாகவும் மீட்டும் மீட்டும் தமிழாராய்வோர் யாவரும் செய்யுணூற்களே இயற்றப் புகுவதை நோக்கு மிடத்து நந்தமிழ்த் தேயமே செய்யுட்களாற் பொதியப் படுமோ வென்றையமும், செய்யுளே படிக்கவறியாச் சாமானியருக்குத் தமிழிலுள்ள சொற்ப அபிமானமும் எங்கே நீங்கிவிடுமோ என்ருெரு பக்கத்திற் பயமும் உதிக்கின்றன.

ஆதலின், நமது பண்டித மணிகள், தமக்கும் பிறர்க்கும் பயன்கொடாக் கவிகளை இயற்றுவதிற்

காலத்தையும் புத்தியையும் வெகுவாய்ச் செலவிடாமல் பின்கண்டவிதமாகக் காலரீதிக்கேற்ற கடமைகளைப் புரிந்து ஜனன தேசத்துக்கும் ஸ்வய பாஷைக்கும் தருணசகாயம் புரிய வேண்டுமாக மிகவும் பிரார்த்திக்கின்ளும்.........

['விவேகபாநு', மதுரை, ஜூன் 1903.]

## 48

### மு. இராகவையங்கார் (1878 – 1960)

ராமநாதபுரம் மாவட்டம் அரியக்குடியில் பிறந்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகவும், "செந்தமிழ்"ப் பத்திரிகையின் ஆசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும், திருவிதாங்கூர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் பதவி வகித்த ஆராய்ச்சியாளர். "சாஸனத் தமிழ்க்கவி சரிதம்", "ஆராய்ச்சித் தொகை", "சேரன் செங்குட்டுவன்" முதலிய நூல்களின் ஆசிரியர். "பெருந்தொகை" தொகுப்பாசிரியர். மானாமதுரையில் காலமானார். இவர் எழுதிய "செந்தமிழ் வளர்த்த தேவர்கள்" என்ற நூலில் ஒரு பகுதி.

#### பாண்டித்துரைத் தேவர்

1901-ஆ மே மீ 21, 22, 23-ஆம் தேதிகளில் சென்னை மாகாண அரசியல் மகாநாடு மதுரை மாநகரிலே கூடியது. அதன் பொருட்டு அரசியல் துறையில் வல்ல நிபுணர்களும் அறிஞர்களும் அப்பெரு நகரில் ஒருங்கு கூடினர். ஹானரபிள் பி. அனந்தாசார்லு என்ற பெரியார் அம் மகாசபையில் தலைமை வகித்தார். நம் தேவரவர்கள் அதன் 'உபசரணைக் கமிட்டி' தலைவராயிருந்து, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்து இனிய பிரசங்க மொன்றும் புரிந்தனர். மூன்று நாள் வரை கூடிப் பல அரசியல் தீர்மானங்களை அம்மகாசபை நிறைவேற்றியது. அதன் முடிவில் தேவரவர்கள் எழுந்து நின்று, தம் வேண்டுகோளொன்றை அச்சபையோர்க்கு உபந்நியாச ரூபமாக வெளியிடலாயினர். அஃதாவது—தமிழ்வளர்ச்சி பெருகியிருந்த மதுரை மாநகரின் பழம் பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும், சுருங்கக்கூறி, தன் பிறப்பகமான அந்நகரில் தமிழ்மொழி நிலை பெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றைத் தாபிக்கத் தாம் உத்தேசித்திருப்பதையும்,

---

### காவடிச் சிந்துகளின் சிறப்பு

அண்ணாமலைரெட்டியாரின் காவடிச் சிந்துகள் எதுகை, மோனை, சொல்நயம், சந்தநயங்களுடன் லயநுட்பமும் வாய்ந்தவை. மிச்ரம், திச்ரம், கண்டம் என்ற நடைகள் மிகவும் அழகுற அமைந்துள்ளன.

காவடிச் சிந்து, பண்டிதர், பாமரர் இரு சாராரையுமே கவர்ந்து வந்துள்ளது. இசைத்துறையில் மகாவித்வான்களான வீணை காரைக்குடி சகோதரர்கள், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், மதுரை புஷ்பவனம் ஐயர், மழவராயனேந்தல் சுப்பராம பாகவதர் ஆகியோரிடம் காவடிச் சிந்தைப் பாடக்கேட்டவர்கள் உள்ளத்தில் அந்நினைவு இன்னும் பசுமையாக இருக்கும். திருச்செந்தூர் சண்முகவடிவு அம்மையார், எஸ். ஜி. கிட்டப்பா ஆகியோர் பாடியுள்ள காவடிச்சிந்து இசைத் தட்டுக்களில் பதிவாகியுள்ளது.

40, 50 ஆண்டுகளுக்கு முன்னர்வரை தமிழ்நாட்டில் மிகவும் முழங்கிவந்த காவடிச் சிந்துப் பாடல்கள் சிறிது சிறிதாக மறக்கப்பட்டு ஓரிரு பாடல்கள் தவிர மற்றவை அநேகமாக மறைந்தன. இந்நிலையில் அவற்றின் பழைய இசை வடிவங்களைத் தேடி வெளியிடும் பேறு எனக்குக் கிடைத்தது.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினர் என்னைத் தென்னாட்டின் இசைச்செல்வம் பற்றிய ஆராய்ச்சி நிகழ்த்த அலுவலராக (Research Officer for Survey of Arts) நியமித்தனர். அப்போது தமிழ்நாடு முழுவதும் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. ஆங்காங்கே உள்ள வித்வான்களிடமும், முருகன் தலங்களிலுள்ள சிந்து பாடுவோரிடமும் இவற்றைக் கற்று, சுரதாளக்குறிப்பு எழுதினேன். 1966-இல் கலைமகள் இசைக்கல்லூரி வெளியீடாக இந்நூல் வெளி வந்தது. காவடிச் சிந்து முழுமைக்கும் இசையமைப்புடன் வெளி வந்த முதல் நூல் இதுவே.

**அமெரிக்க வித்வான்கள் பாராட்டு**

1964-இல், நான் அமெரிக்காவிற்கு இசைப் பேராசிரியராகப் பணியாற்றச் சென்றிருந்தபோது, டிட்ராயிட் நகரத்தில் நிகழ்ந்த இசை மகாநாட்டில் கலந்து கொண்டேன். "காவடிச் சிந்து" பற்றி விளக்கவுரை தந்து பாடல்களைப் பாடிக் காட்டியபோது அங்கு வந்திருந்த அமெரிக்க இசை வல்லுநர்கள் அவற்றை மிகவும் பாராட்டினர். ஒலிப் பதிவும் செய்து கொண்டனர்.

—இசைப் பேராசிரியர் எஸ். இராமநாதன்.

மறுநாள் சேதுபதி ஹைஸ்கூல் மண்டபத்தில் கூடப் போகும் பேரவைக்கு மகாநாட்டுப் பிரதிநிதிகளும் நகர மாந்தரும் விஜயம் செய்து ஆதரவளிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டதேயாகும். அங்கு வந் திருந்தோரெல்லாம் தேவரவர்களின் இவ்வமுத மொழி யைக் கேட்டு மகிழ்ந்து, தாங்கள் மறுநாளும் வந்திருந்து அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக ஒரு முகமாக வாக்களித்தாங்கள். குறிப்பிட்ட இடத்தில் பெரிய சபையொன்று அடுத்த நாளே கூடியது. பலர் விருப்பத்தின்படி பாண்டித்துரைத் தேவரவர்களே அக் கூட்டத்தின் தலைமை வகித்தனர். அவர்களது தலை மைப் பிரசங்கத்தில் தமிழின் முற்கால பிற்கால நிலை களையும், தாய் மொழியாகிய அதற்குத் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கடமைகளையும், அம்மொழி வளர்ச்சி யின் பொருட்டுத் தாம் மதுரையிற் செய்யக் கருதியுள்ள செயல்களையும், அவற்றை ஆதரிக்க எல்லோர்க்கும் உள்ள உரிமையையும் பற்றித் தேவர் பொழிந்த சொன் மாரி எல்லா உள்ளங்களையும் குளிர்வித்தது. ஆங்குக் குழுமியிருந்த புலவர்களும் அறிஞர்களும் அப்பிரபு மேற் கொண்ட உத்தமத் தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பேசியதோடு, இயன்ற உதவியெல்லாம் புரிவதாகவும் உறுதி கூறினர்கள்.

[''செந்தமிழ் வளர்த்த தேவர்கள்'', திருச்சி தெப்பக் குளம், டி. ஜி. கோபால் பிள்ளை வெளியீடு, 1951.]

## 49

### சி. கே. சுப்பிரமணிய முதலியார் (1878–1961)

கோயமுத்தூரில் பிறந்தவர். வழக்கறிஞர். தேச பக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளைக்குப் பேருதவி புரிந்தவர். இறுதி நாட்களில் துறவு பூண்டார். ''அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத் தமிழ்'', ''மாணிக்க வாசகர் அல்லது நீத்தார் பெருமை'' முதலிய நூல்கள் இயற்றியதோடு பெரிய புராணத் திற்கு விளக்க உரையும், சுய சரிதையும் எழுதி யுள்ளார். இவருக்குச் சென்னைத் தமிழ்ச் சங்கம் ''சிவக் கவிமணி'' என்ற பட்டமும், மதுரை ஆதீனம் ''திருமுறை ஞானபாநு'' என்ற பட்ட மும் வழங்கின. கோவையை அடுத்த திருப் போரூரில் காலமானர்.

#### திருப்பேரூர்

வேகமாய், ஓடுகின்ற, அல்லது பறக்கின்ற, அல்லது நீந்துகின்ற ஊர்திகளையும், நவீன வழிகளும் கண்கவரும் மின்சார விளக்குகளும் பல நிலை மாடங் களும் போக போக்கியங்களும் கொண்டு விளங்கும் தற்காலப் புது நகரங்களின் அழகையும், புதிய அனு பவங்களையும், கண்ணுரக் கண்டு எண்ணுர நுகரும் இக்காலத்து மாக்களுக்கு இப்பேரூரினைக் கண்டால் அழகாயிருக்குமா? இதன் பழங்கூறையுடைச் சிற்றில் களையும், இடிந்த பழங்கட்டடங்களையும். தார்பூசி மெரு கிடப் பெருத புழுதி நிறைந்த தெருக்களையும், படி கட் டப் பெருத நீர்பெருகும் ஆறு குளங்களையும், இவற்றில் நாகரிக மனிதர்களால் அசுத்தப்படுத்தப்பட்ட கரை களையும், மனிதன் கைபடாது தன் வளப்பமே மிக்குத் தடையின்றி நாற்புறமும் மனம்போல் வளரும் காட்டுக் கொடி செடி மரங்களையும், கண்டால் இந்நாண் மக் களுக்கு அழகாயிராது தான்! ஆனல் நாகரிகமென்ற பேரால் செய்யப்படும் கோரங்களை நீக்கி ஆண்டவ னுடைய இயற்கையமைப்புக்களையும் ஆடம்பரமற்ற அமைதியான சுத்த உண்மை வாழ்க்கைப் பொருள் களையும் அழகாகக் காணுதற்கு வேறு உண்மைக் கண் தான் வேண்டும். நமது புதிய நாட் பொய்க் கண்கள் பேரருளின் திருநிறைந்த அழகுகளைக் கண்டு களிக் கும்படி பழம் பண்பைப் பெற்றிடுக.

பேரூர் என்பது பெரிய ஊர் எனப் பொருள்படும் என மேலே கூறினேம். ஆனல் இந்நாளில் அது ஒரு சிற்றூராகக் காணப்பவதன்றிப் பெரிய ஊராக இல்லையே என்ருல், ஆம், அது சரியே. நாம் காணும் ஊர் இது. ஆனல் முற்கால சரிதங் காண்போர் காணும் உண்மை வேறு. பேரூரானது பண்டைக் காலத்தே ஒரு பெரிய சிறந்த நகரமாகத் தானிருந்தது. ஊர் என்பது நகரம். ஓரூரிலே குடிகள் மிக நெருங்கி இனிமேலும் குடியேற வசதியற்றுப் போனல் அவ்வூர்ப் புறத்தில் பக்கத்துப் புதிதாக வேறு ஒரு சிறு ஊர் ஒருவனைத் தலைமையாய்க் கொண்டு கட்டுவித்துக் குடிபுகுதல் இந்நாட்டு இயல்பு. இவ்வாறு பழம் நகரின் பக்கத்துப் புதிதாக உண்டாகும் சிறு ஊர் புத்தூர் என்று அழைக்கப்பெறும். அது போலவே பழைய பெரிய ஊராயிருந்தமையால் பேரூர் என்று அழைக்கப்பெற்ற பேரூரின் பக்கத்திலே குடி நெருக்கம் முதலிய காரணங்களாலே கோவன் என்ற தலைவனல் புதியதாய் அமைக்கப் பெற்றது கோவன் புத்தூராம். இதுதான் இப்போது நாம் காணும் கோய முத்தூர் என்ற பெரிய நகரம்.

[திருப்பேரூர்ப் புராணம் (வசனச் சுருக்கம்) முன் னுரையிலிருந்து: தேவஸ்தான வெளியீடு, 3-ம் பதிப்பு, 1963.]

## 50

### எம். கே. எம். பொன்னுச்சாமி பிள்ளை (1879—1929)

மதுரையில் பிறந்து வாழ்ந்த மிகப் பிரபல நாதசுர வித்வான். மைசூர் சமஸ்தான வித்வா னுகவும் இருந்தவர். எட்டயபுரம் ராமச்சந்திர பாக வதரிடமும் தம் தமையனர் அய்யாசாமிப் பிள்ளை யிடமும் இசை பயின்றவர். சங்கீத சாஸ்திர

ஆராய்ச்சியில் சிறந்தவர். அவர் எழுதிய "பூர்வீக சங்கீத உண்மை" என்ற நூலில் மேளகர்த்தா ராகங்கள் 32 என்பதுதான் சாஸ்திர சம்மதம் என்பதை நிலை நாட்டியிருக்கிறார். 1930-ல் வெளியான அந் நூலின் முகவுரையிலிருந்து ஒரு பகுதி :

**பூர்வீக சங்கீத உண்மை**

17. அக்காலை வடஇந்தியாவில் ஆமதாபாத் நகரில் அகில இந்திய சங்கீத மகாநாடு ஒன்று கூட்டப் படப் போவதாய்ப் பத்திரிகைகள் விளம்பின. அதுவே சமயமெனக் கருதி மாக்ஷிமை தங்கிய ஹிஸ்ஹைனஸ் மைசூர் மகாராஜா அவர்கள் ஆசீர்வாதத்தின்மேல் அம்மகா நாட்டிற்குச் செல்ல விரும்பினேன். அவ்வாறு செல்லுமுன் மாக்ஷிமை தங்கிய ஹிஸ்ஹைனஸ் மைசூர் மகாராஜா அவர்களை, சென்ற தமிழ் ஆண்டில் தைத் திங்களில் பெங்களூர் அரண்மனையிற்போய்த் தெரிசித்து இந்நூல் ஆராய்ச்சியின் பிரதி ஒன்றை மாக்ஷிமை தங்கிய ஹிஸ்ஹைனஸ் மகாராஜா அவர்கள் சந்நிதானத்தில் சமர்ப்பித்தேன். அது விஷயத்தைப் பற்றிச் சங்கீத சாஸ்திர பண்டிதரும் பென்ஷன் ஹெட்மாஸ்டருமான பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்களுடன் மாக்ஷிமை தங்கிய ஹிஸ்ஹைனஸ் மகாராஜா அவர்கள் உத்தரவின்படி தர்க்கித்தேன். வாதத்தின் முடிவில் பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரவர்களும் பூரணமான சம்மதம் கொடுத்தனர்.

18. பின்னர் மாக்ஷிமை தங்கிய அரசர் பெருமானே நேரில் இந்நூலை மேற்படி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்களுடன் இருந்து பரிசிலனை செய்ததில் கர்நாடக சங்கீதத்தில் 72 மேளகர்த்தாக்கள் பெருங் குழப்பமே யென்றும், இந்தச் சாஸ்திர ஆராய்ச்சி உலகத்திற்கே பெரும் நன்மை தருமென்றும் ஒரு பிரிவு பிரசங்கத்தில் என்னை ஆசீர்வதித்தனுப்பினார்கள்.

## 51

### ச. சோமசுந்தர பாரதியார் (1879—1959)

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்து, மதுரை நகரில் காலமானவர். கவி பாரதியின் பள்ளித் தோழர்; ஆருயிர் நண்பர். வழக்கறிஞராகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணிபுரிந்தவர். 1944-ல் யாழ்ப்பாணத்தின் ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம் இவருக்கு "நாவலர்" என்ற பட்டமும், 1954-ல் மதுரைத் திருவள்ளுவர் கழகம் "கணக்காயர்" என்ற பட்டமும், 1955ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" பட்டமும் கொடுத்துக் கௌரவித்தன. தமிழில் ஆராய்ச்சி நூல்களும் செய்யுள் நூல்களும் எழுதியிருப்பதுடன் சிலவற்றை ஆங்கிலத்திலும் இயற்றியுள்ளார்.

**நற்றமிழ்**

கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ்சொற்களும் பொருள்பல குறித்து மருளவைக்கும் பொதுச்சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும், தெளிவும் எழுத்திலும், பேச்சிலும் எம்மொழி நடைக்கும் இனிமையும், எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு......

சொற்களின் உருவமும் முடிவும் பிறழாது அமைதலும் பேணல் வேண்டும். மரூஉச் சொல்லாட்சியை மறுப்பார் இல்லை. ஆன்றோர் வழக்கும், அறிஞர் ஆட்சியும் பெற்றவை அனைத்தும் நற்றமிழ் ஆகும். மற்றிடத்து எல்லாம் சொல் உருவோடு பொருள் முடிபின் அடைவும் போற்றுதலும் வேண்டும். கொச்சை வழக்கு எதுவும் கொள்ளல் கூடா. எடுத்துக்காட்டினும், நாடக வழக்கினும் இயைபும், தகுதியும் நோக்கி, இழி வழக்கு ஒழித்து, ஏற்பன ஏற்புழி அருகி வழங்கல் பிழை ஆகாது. அங்கும் அதனைப் பெரு வழக்காக்கும் பிழையைக் காத்தல் யாவர்க்கும் கடனும். யாண்டும் ஐயமும் திரிபும் அகற்றல் வேண்டும். சொற்கள் தொடரும் இடங்களில், ஓசையும் ஒழுக்கும் மாறு படாமல், மொழி இயலடைவு முரண்படாமல் ஓம்புதல் வேண்டும்.........இயற்கையோடு முரணி வெறுக்க விட்டிசைக்கும் எழுத்துப் புணர்ச்சியும் பிரிப்பும் வழுவாம். தமிழ் மொழி இயல்பைச் சிதைக்கும் வழக்கை எங்கும் கொள்ளாது தள்ளல் வேண்டும். இவை அனைத்தும் நல்ல தமிழ் நடைக்கு இன்றியமையாதன.

அன்றியும் தமிழில் பிறமொழிச் சொல் எதுவும் புகல் ஆகாது எனப் புகல்வாரும் உளர். இது மொழி வளர்ச்சிக்குத் தடையாகும். புதிய கருத்துக்களும் பொருள்களும் சுட்டத் தமிழில் பிறமொழிச் சொற்களை எடுத்தாளுவது தவறாகாது. ஆனால் அச்சொற்களைத் தமிழ் இயல்புக்கு இயையச் செப்பனிட்டுச் சேர்த்தல் வேண்டும்......

[திருச்சி வானொலி நிலையத்தில் 1-5-1947-ல் ஒலிபரப்பானது. சென்னை, பிராட்வே, மலர் நிலையம் வெளியிட்டுள்ள (2-ம் பதிப்பு, டிசம்பர், 1955) "நற்றமிழ்" என்ற நூலிலிருந்து.]

## 52

### மஹேச குமார சர்மா (20-ம் நூற்றாண்டின் தொடக்கம்)

சென்னையை அடுத்த மாம்பாக்கத்தில் பிறந்தவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்ற இவர் தமது இயற்பெயராகிய குப்புசாமி சாஸ்திரி என்பதனை மஹேச

குமார சர்மா என் மாற்றிக் கொண்டார். சிங்கப்பூருக்குச் சென்று நீதி மன்ற மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினர். அங்கேயே காலமானர். "பக்தியோகம்," "ஆனந்தமடம்," சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகள் போன்ற நூல்களை மொழி பெயர்த்திருக்கிருர். மஹாராஷ்டிர பாஷையில் வக்கீல் ஸ்ரீயுத பரலசந்த நாநந்த சஹா எழுதிய "ஸம்ராட் அசோகன்" என்ற கற்பனைக் கதையின் மொழி பெயர்ப்பிலிருந்து ஒரு பகுதி:

### ஸம்ராட் அசோகன்

......அக்காலத்து மகத நாட்டின் ராஜதானியாயிருந்தது பாடலிபுத்திர நகரம். அதன்கண் மௌர்ய குலத்தரசர் சிங்காசனமேறிச் செங்கோலோச்சி வந்தனர். அந்நாட்களில் பௌத்த தர்மம் பாரத வர்ஷத்திலே திநே திநே பிரபலமாகிக் கொண்டு வந்தது. அதன் சூத்திரத்தை அசோகன் தன் கையில் தாங்கியிருந்தான். பௌத்த தர்ம பிரசாரத்தைத் தவிர்த்து அசோகனுக்கு வேறு ஒன்றும் ஆற்றவேண்டுவதாய் இருந்ததில்லை. இதுவே தனது பரம கர்த்தவ்யமென அவன் நிச்சயம் செய்திருந்தான். தர்ம பிரசாரத்தின் பொருட்டு ஸம்ராட்-பதம் மிக்க உபயோகமுள்ளதென்பது அவன் கருத்து. இந்த உத்தேசத்துடன் தான் அவன் ராஜபதவிக்குரிய ஐசுவரியத்தை அநுபவித்து வந்தான். இதைத் தவிர்த்து அசோகனை ஸம்ஸாரத்தில் கட்டுண்டிருக்குமாறு செய்யக்கூடியதுபிறிதொன்றுமில்லை. அவன் அவிவாஹிதனுய் இருந்தான்—ஸம்ஸாரத்தின் மாயா பாசத்தின் கட்டுகளினின்று விடுபட்டிருந்தான். இந்த ஸம்ஸார வாழ்க்கையில் அவனது அன்பைச் செலுத்துவதற்குரிய இடமாய் இருந்தது ஒன்றேயாம். அஃது அவனது உடன் பிறந்தாளாகிய இந்திரை. அவளது தாயார் உலக வாழ்க்கையைத் துறந்து விட்டாள். அதனுல் அவள் தாயில்லாத் துர்ப்பாக்கியவதியாயினள். கூட, அவளது பிதாவும் திடீரென்று பரலோகம் அடைந்துவிட்டான். இதனுல் அவள் சொல்லொணுத சோகத்தினுல் தவித்துக் கொண்டிருந்தாள். இத்தகைய நிர்ப்பாக்கியமுள்ள இந்திரையே அசோகனுக்கு இச் சம்ஸாரத்தில்எல்லாச் செல்வமுமாய் விளங்கியது. பிதா பரகதியடைந்து விட்டமையால், பிரிய சகோதரி இந்திரையைப் பற்றிய பெரும்பாரமாகிய பொறுப்பவ்வளவும் அசோகன் மேலேயே விழுந்தது. அவளைத் தகுந்த வரனுக்கு விவாகம் செய்து தரவேண்டுமென்றும், அது நிறைவேறுகிற வரையில் நியாய நெறியில் நின்று கூடிய மட்டிலும் ஸம்ராட்-பதத்தை தர்ம பிரசாரத்தின் பொருட்டு வஹித்துவர வேண்டியதென்றும் அதன் பின்னர் ஆத்மாநந்தம் அடைய வேண்டிப் பிக்ஷுவாகி வானப்பிரஸ் தாசிரமத்தை மேற்கொள்வதென்றும் அவன் தீர்மானித்திருந்தான்.

["பாலபாரதி"யிலிருந்து.]



## வ. வே. சு. ஐயர் (1881—1925)

வ. வே. சுப்ரமணிய ஐயர் திருச்சி மாவட்டம் வரகனேரியில் பிறந்தவர். திருச்சியிலும் ரங்கூனிலும் வழக்கறிஞராக இருந்து பாரிஸ்டர் ஆவதற்கு லண்டனுக்குச் சென்ருர். அங்கு புரட்சி வீரராக மாறி இந்தியாவுக்குத் திரும்பி வந்து புதுச்சேரியில் வசித்து வந்தார். 1920-ல் "தேச பக்தன்" ஆசிரியரானர். 9 மாத சிறைவாச தண்டனையை அனுபவித்தார். 1922-ல் திருநெல்வேலி மாவட்டம் சேரமாதேவியில் குருகுலம் தொடங்கினர். பாபநாசம் கல்யாண தீர்த்த அருவியில் சிக்கி அகால மரணம் அடைந்தார். கம்பராமாயணம் பாலகாண்டச் செய்யுள் திரட்டினை விரிவான குறிப்புக்களுடனும், விளக்கங்களுடனும் பதிப்பித்த இவர் கம்பராமாயணத்தின் பெருமையை விளக்கும் ஆங்கில நூல் ஒன்றையும் எழுதினர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழ், வடமொழி, பிரெஞ்சு, லத்தீன் போன்ற பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். சேரமாதேவி குருகுலத்தில் "பால பாரதி" என்ற மாதப் பத்திரிகையையும் நடத்தி வந்தார். அதன் முதல் இதழுக்கு எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

### நமது பத்திரிகை

வெண்டாமரையில் வீற்றிருக்கும் எம் பிராட்டியின் பேரை இப் பத்திரிகைக்கு வைத்துள்ளோம். எதற்காகவெனின், இதில் சொற்பொழிவு பொழியும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வியாசங்களைத் துவக்கும்போதே சரஸ்வதியின் திருவுருவம் அவர்களுடைய நெஞ்சத்தில் எழ வேண்டும் என்றும், இதைப்படிக்கும் நேயர்களுக்கு லௌகீக அறிவையும், பாரமார்த்திக அறிவையும் ஒருங்கே தருபவளான வாக்குத் தேவியின் ஸ்மரணை அடிக்கடி ஏற்படவேண்டும் என்றுமே. தன் பெயரைக் கொண்ட இச் சிறு மாதப் பத்திரிகையை, சகல வேதங்களுக்கும், சகல சாஸ்திரங்களுக்கும், சகல மந்திரங்களுக்கும், சகல தந்திரங்களுக்கும் தலைவியாக இருக்கிற கலை மடந்தை தன் பொற்கோயிலாகக் கொண்டு, அதில் நித்திய வாசம் செய்து, எம்னேர் அனைவரையும் நிறை ஞானமுள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்.

எம் பிராட்டிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்கள் இருக்கையில் பாரதி என்ற பெயரை ஏன் தெரிந்து கொண்டோமென்ருல், அத்திரு நாமம் எமது நண்பரும் இன்றைக்கு இருபது வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளிக்க முயன்ற புண்ணியாத்மாக்

# ஸதர்ன் ரோட்வேஸ்

## இயக்குபவை



- 366 பஸ்கள்
- 225 லாரிகள்
- 48 ட்ரைலர்கள்
- 135 லாரி மார்க்கங்கள்
- 147 பஸ் மார்க்கங்கள்
- 1,56,290 கிலோமீட்டர்கள் தினத்திற்கு



## உடைமை

- 443 கிடங்கு வசதியுடன் கூடிய காரியாலயங்கள்
- 4599 பயிற்சி பெற்ற சிப்பந்திகள்

சென்னை, ஆந்திரபிரதேசம், மைசூர் மற்றும்
கேரள மக்களுக்கு சேவை புரிகிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS



FDSSR1036TM A

போன்: 631.

# S. முத்தையா & பிரதர்ஸ்,

C 2. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

பேட்டை, திருநெல்வேலி-4.

நுண்ணிய கடசல் சாமான்களுக்கு சிறந்த இடம்

வீடுகளுக்கு வேண்டிய ஜன்னல் கிராதிகள், தள்ளு கதவுகள், காம்பவுண்டு கேட்டுகள் முதலியன தயாரிக்கிறோம்.

கட்டிடங்கள், ஒர்க்ஷாப்புகள், மில்கள், தியேட்டர்களுக்கு டிரஸ் தயாரித்து, இடத்தில் மாட்டிக்கொடுத்து, அஸ்வெஸ்டாஸ் தகடுகளை மாட்டிக்கொடுத்து, மற்றும் வேலைகளை சிறந்த முறையில் பல ஆண்டுகளாக செய்து வருகிறோம்.

# SHAW WALLACE

## SELL BETTER FARMING

FERTILISER MIXTURES • COMPLEX FERTILISERS SUPER PHOSPHATE • UREA • ANIMAL FEEDS • PLANT PROTECTION EQUIPMENT & AGRO CHEMICALS SPRINKLER IRRIGATION

SHAW WALLACE & COMPANY LTD.,
8/9, Thambu Chity St., MADRAS-1.
Phone: 29307 (7 Lines)

களில் ஓர் பிரமுகருமான காலம் சென்ற சி. ஸுப்ரஹ்மண்ய பாரதியின் ஞாபகம் இம் மாஸிகையைப் படிக்கும் அனைவர் மனதிலும் என்றும் அழியாமல் பசுமையாக இருந்து வரவேண்டுமென்றேயாகும்......

......எம் உத்தேசங்களும் நோக்கங்களும் நிறை வேறுமாறு இறைவி திருவருள் புரிக என்று பிரார்த்தித் துக்கொண்டு தமிழ்த் தாயின் மடியில் இன்று நாம் தோன்றியுள்ளோம்.

[''பாலபாரதி'', கலியப்தம் 5026, ஐப்பசி, 1924].

## 54

### தூசி—இராஜகோபால பூபதி (20-ம் நூற்ருண் டின் தொடக்கம்)

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள தூசி என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. இவரைப் பற்றி வேறு விவரங்கள் தெரியவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். குறிப் பிட்ட ஒரு காலப் பகுதியைப் படம் பிடித்துக் காட்டும் இவருடைய நூலான ''மதிமோச விளக்க''த்திலிருந்து சில பகுதிகள்:

#### கட்டுப் பிடித்துப் பார்த்தல்

ஒரு புட்டுக்கூடை முண்டங்களில் பொறுக்கி யெடுத்த முண்டங்களான நம் நாட்டு மூடப் பெண் களாகிய பாழும் கிழவிகள் தங்கள் வீடுகளில் குழந்தை குட்டிகளுக்கோ பெரியவர்களுக்கோ வியாதிகள் வந்த காலத்துச் சும்மாவிருக்க மாட்டார்கள். உயிரைக் கொண்டு போகும் எமன் மறந்துவிட்டாலும், இவர்கள் அவனுக்குப் பக்கத் துணையிருந்து கூடிய சீக்கிரத்தில் தங்கள் மக்களை எமலோகம் பயணங் கூட்டியனுப்பும் வேலையில் மும்முரமாயிருப்பார்கள். எப்படியென்றல், ''இது உடம்பால் வந்த வியாதி என்றல் மருந்து கொடுக்கக் கொடுக்க வியாதி அதிகமாகுமோ? இது தெய்வக் குற்றமாயிருக்கலாம்; பணமிருக்கிறதென்று வைத்தியனுக்கு ஏன் கொட்டிக் கொடுக்கிறீர்கள்? குடலேற்றந் தெரியாமல் கோடிப் பணம் செலவழித்த கதை போல் இந்தச் சிறுக்கியும் கூத்தாடுகிருள்'' என்று கிழவி லங்கர் தூக்குவாள். உடனே வீட்டுக்குப் பெரு தனக்காரியோ அல்லது கொஞ்சம் தலைமை ஸ்தா னத்தை வகித்தவளோ ''ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்? அந்த ஆம்பிளைக்கு எத்தனை தரம் சொல்கிறது? தன் அக்காள் பெற்றது தங்கை பெற்றது ஆனல் அக்கறையிருக்கும். இதை ஏனென்று கேட் கிருரா? ஏறெடுத்துப் பார்க்கிருரா? என்னமோ என் தலைவிதி; நாலு பேரைப்போல் நாமும் குடித்தனம் ஆக வேண்டுமேயென்று என்னுலான வரையில் பார்க் கிறேன். என்ன செய்யட்டும், போயும் வந்தும் இது ஒரு குழந்தை; இது என்ன கூத்துக்கு வந்திருக்கிறதோ தெரியாது. என்னமோ என் பங்கில் அந்த ஏகாத்தா தானிருக்கிருள்'' என்று சலித்துக் கொள்வாள். பின்பு பக்கத்து வீட்டுக்காரி ''ஆமாம் போ; உன் தொண்டி வாயை யடக்கு; குழந்தைக்கு இப்படியிருக்கிறது; சும்மா நீட்ரு. இதுவெல்லாம் ஆம்புளைக்குத் தெரியுமா? அவனெரு இரண்டாங் கெட்டான். அந்தச் சுடுகாட்டுச் சாவடியண்டை ஒரு பண்டாரக் கிழவி இருக்கிருள்; நல்ல கெட்டிக்காரி; கைவாசியுமுண்டு. நான் கெடுத் தது கேடாய் அவளை அழைத்து வந்து கட்டுப் பிடித்துப் பார்த்தால் எல்லாம் தெரிந்து போகும்'' என்று சொல்லு வாள்......

#### 13 லட்சம் பிச்சைக்காரர்கள்

'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்னும் பழமொழி யைக் கவனிக்க வேண்டாமா? ஒருவன் சம்பாத்தி யத்தில் ஒன்பதுபேர் வாய் திறந்திருக்கும் தென்னிந்தி யாவே! கடந்த ஸென்ஸஸ் ரிபோர்ட்டுப்படி இப்போது பூரிதக்ஷிணை வாங்கும் பிராமணர் முதல் இராப்பட்டினி யில் பேர் பெற்றவர் வரையில் கையிருப்பிலிருக்கும் பதின்மூன்று லட்சம் பிச்சைக்காரர்களோடு இன்னம் எத்தனை குடும்பிகளைச் சேர்க்க நீ இஷ்டப்படுகிருயோ அறியேன். ஏழை இந்தியா என்ற பெயரோடு சோம் பேறி இந்தியா என்ற பெயரையும் நீ ஏற்றுக்கொள்.

### வீண்மொழி பிதற்றி யாது பயன்?

ஒவ்வொரு பாஷையினும், அஃதுடையார் முன் பின் பயின்றறியாத பொருள்களுக்குங் கருத்துக் களுக்கும் உற்ற தகு சொற்கள் நாடுதல் நேரிதன்றும். யாவருந் தெரிந்திருக்க வேண்டிய கருத்துக்களினுமே சிற்சில வேறுபாடுகள் உண்டாகுமானல் மற்றைய விஷ யங்களைக் குறித்துப் பேசவும் வேண்டுமோ? பாஷை யியல்பு இவ்வாருயிருக்கந் தமிழின் கண்ணே இதற்குத் தக்க சொல்லில்லை; அதற்குத் தக்க சொல்லில்லையென்று பலவாருக வீண்மொழி பிதற்றி வாய்ப்பறை யறை வதனல் யாது பயன்? ஒரு சொல்லுக்கொரே சொல் லாய்த்தானிருத்தல் வேண்டுமென்பது என்ன நியா யமோ? ஒரு சொற் பொருளைப் பல சொற்களாற் கூறின் அது குற்றமாதலெப்படி? 'சுருங்கச் சொல்லல்' என்ற அழகில்லையென்று கூறிற் கூறலாம். அன்றியும் இவ் விஷயத்தில் ஒருவரும் துணிந்து கூறுதலியலாது; நூற் பரப்பினுள் யாங்கேனும் தக்க சொற்கள் கிடைப்பினுங் கிடைக்கலாம். அவ்வாறு கிடைத்த தனித்தமிழ்ச் சொற்களும் பலவுள.

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி

[''தமிழ்மொழியின் வரலாறு'' என்ற நூலிலிருந்து.]

இவர்கள் மோசத்தையும் சூதையும் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற நிஷ்கபடிகளாகிய நம்மவர் இவர்களுக்குப் பிச்சையிடுவதாலன்றோ, இத்துன்மார்க்கச் செய்கைகள் அபிவிர்த்தியாகின்றன. அந்நிய தேசங்களில் கூனர், குருடர்களெல்லோரும் ஒவ்வொரு தொழில் செய்து "ஏற்பதிகழ்ச்சி" என்பதை நிலை நாட்ட, நம் நாட்டுத் தடியர்களை எல்லாம் சோம்பேறிகளாகச் செய்வது தலையெழுத்தல்லவா? சரியான தேக லட்சணம் அமைந்தவர்களும் தேசத் துரோகிகளாய் இருப்பார்களானால், தேசாபிமானம் எங்கிருந்து குதிக்கும்? இத்தகைய சோம்பேறிகளுக்கா அல்லது ஜனத் தலைவர்கள் என்று தம்மை மதிக்க வேண்டிச் சபையேறிப் பிரசங்கஞ் செய்து ஆறு மரக்கால் பேச்சிற்கு ஆழாக்குக் காரியமாவது செய்ய மனமில்லாத சுயகாரியத் துரந்தரர்களுக்கா சுயராச்சியம் வேண்டியது?

[மதிமோச விளக்கம், 4-ம் பதிப்பு: 1929, சென்னை "ஆனந்தபோதினி" வெளியீடு.]

## 55

### மு. கதிரேசச் செட்டியார் (1881—1953)

தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்ற இவர் ராமநாதபுரம் மாவட்டத்தில் மகிபாலன் பட்டியில் பிறந்தார். 1915-ல் மேலைச்சிவபுரி சன்மார்க்க சங்கத்தினர் இவருக்குப் 'பண்டிதமணி' என்ற பட்டமும், 1941-ல் அரசாங்கத்தினர் 'மகாமகோபாத்தியாய' பட்டமும் வழங்கினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 8 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர். திருவாசக உரை, 'மண்ணியல் சிறுதேர்' என்ற தமிழாக்கம் போன்றவை இவருடைய நூல்களுட் சில.

#### புலமையின் குறிக்கோள்

மதி வலி மிக்க முதுபுலவனிடத்தினின்றுந் தோன்றிய பாடல் நங்கைக்கு, திட்ப நுட்பம், தெளிவு, விளக்கம், இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்பொருட் குழுவே அழகிய உடலும், சுவை நல முந்துறும் தொனிப் பொருளே உயிருமாம். இந்நங்கைக்கு உவமை அணிகளே அணிகலன்களாம். அழகுக்கு அழகு செய்தல் போல இவ்வணிகள் சேர்க்கப் படினும், இப் பாடன் மெல்லியற் பாவை நல்லாளின் இயற்கை வனப்பு மிக்க நல்லுடலைச் சார்ந்து உவமை முதலிய அணிகளே சிறந்த அழகு பெற்றுத் திகழ்வனவாம்.

இங்ஙனம் இயற்கை நலம் மிக்குச் செயற்கை நலனையுமேற்றுத் திகழும் இத்தகைய பாடல் நங்கையைக் கூடி நுகர்தற்குரிய இள நலஞ்சான்ற மணமகனியல்பை இயம்பவும் வேண்டுங்கொல்! அன்னான் இலக்கிய நூலறிவானும் மதி நுட்பத்தானுஞ் சிறந்து மலர்ந்து மணப்பருவம் வாய்க்கப் பெற்று, கட்டழகு வாய்ந்த பாடல் நங்கையைக் காண்டலிற் காதல் மிக்குடையவனாய், அப்பேறு குறித்துத் தவம் புரிந்த தனிப்பெருஞ் செல்வனாதல் வேண்டும். வேட்கை முயற்சியும் தவப்பயனும் ஆகூழ்வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி அப்பாடல் நங்கையின் பரிசுணர்தல் அரிதாகும்.

இன்ன பாடல் நங்கையைப் பண்புடன் வேட்ட காதற்கொழுநனுங் கலைவல மணமகன், அந்நங்கை நலனெலாம் நன்னர் நுகர்ந்து புலநிரம்பின்பம் பொருந்தியவாழ்க்கையிபற்றலைப்படுங்கால்,அவ்விருவர் தம் இரண்டற்ற தன்மையினெழுந்த இன்ப நிலையே உருவெடுத்தாங்கு மழவிளம்பாடற் குழவிகள் தோன்றும். இந்நன் மக்கட் பேற்றினையுடைய நன்புல இல்லற வாழ்க்கையிற் றலைப்பட்டு நிரம்பினேரே உண்மைப் புலவராவர்.

[உரை நடைக் கோவை: 2-ம் பகுதி, 7-ம் பதிப்பு: 1963, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.]

## 56

### சி. சுப்ரமணிய பாரதியார் (1882—1921)

இவர் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் நாட்டு விடுதலைக்காக இவர் பாடிய தேசீய கீதங்கள் இன்றும் நாடெங்கும் பாடப்படுகின்றன. தமிழ் நாட்டில் நீண்ட நெடுங்கால இடைவெளிக்குப் பிறகு பிறந்த பெருங்கவிஞராகத் திகழும் இவர், சந்திரிகையின் கதை, ஞான ரதம், சின்னச்சங்கரன் கதைபோன்ற வசன நூல்களும் இயற்றினர். பகவத் கீதை, வேத ரிஷிகளின் கவிதைகள் போன்றவற்றை வடமொழியிலிருந்து தமிழாக்கமும் செய்துள்ளார். "சுதேசமித்திர"னுக்கு உதவி ஆசிரியராகவும், வேறு சில பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார். இசை ஞானமும், ஐந்தாறு மொழிகளில் தேர்ந்த பயிற்சியும் உடையவர். சென்னையில் காலமானர்.

#### ஞான ரதம்

எதிரே கடல். சந்திர கிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப் பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பது போலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பது போல மிதந்த இன்பப் படகுகள். மேலே, சந்திரன், வெள்ளி மேகங்கள்; இம்மேகங்களிலே சில வலைகள் பரப்பியிருப்பது போலத் தோன்றும்; சில அலைகளடிப்பது போலிருக்கும்; ஒன்று பூச் சிதறியது போலத் தோன்றும்; கீழே மிதக்கும் படகுகளுக்கு

வானக் கண்ணாடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி, நக்ஷத்திரங்கள்! வானக்கடலிலே வெடித் தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனமென்னும் சிறிய வண்டு போய் ஒளித் தேன் குடிப்பதற் கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசை யென்ற அநந்த வஸ்துவுடன், ஈசனறிவு என்ற அநந்த வஸ்து தாக்கிய போது பொறித்தெழுந்த சுடர்ப் பொறிகள்......

**சின்னச்சங்கரன் கதை**

சாயங்காலத்துக் கச்சேரி முடிந்தவுடன் கவுண்ட ரவர்கள் குதிரை வண்டியிலேறி ஊரைச் சுற்றி சவாரி செய்துகொண்டு வருவார். கவுண்ட நகரம், சரித்திரப் பெருமையும், ''க்ஷேத்திர மகாத்மியமும்'' வாய்ந்த ஊராயினும், அளவில் மிகவும் சிறியது. ஐந்து நிமிஷத் துக்குள் குதிரை வண்டி இதைச் சுற்றி வந்து விடும். இதற்குப் பன்னிரண்டிடத்தில் 'வாங்கா' ஊதுவார் கள்: இந்த ''வாங்கா'' என்பது பித்தளையில் ஒருவித ஊதுவாத்தியம். பறையர் இதனை ஊதிக் கொண்டு ஜமீந்தாரவர்களின் வண்டிமுன்னே குடல்தெறிக்க ஓடு வார்கள். சில தினங்களில் பல்லக்கு சவாரி நடக்கும். இன்னும் சில சமயங்களில் ஜமீந்தாரவர்கள் ஆட்டு வண்டியிலே போவதுண்டு. ''ஆட்டு வண்டி'' சவா ரிக்கு உதவுமா என்று படிப்பவர்களிலே சிலர் வியப் படையக் கூடும். இரண்டு ஆடுகளைப் பழக்கப்படுத்தி, அவற்றுக் கிணங்க ஒரு சிறு வண்டியிலே பூட்டி, வண்டி ஆடுகள் இவற்றைச் சேர்த்து நிறுத்தால், அவற்றைக் காட்டிலும் குறைந்தபக்ஷம் நாலுமடங்கு அதிக நிறை கொண்ட ஜமீந்தார் ஏறிக்கொண்டு, தாமே பயமில்லா மல் ஓட்டுவார். குதிரைகள் துஷ்ட ஜந்துக்கள். ஒரு சமயமில்லா விட்டால் ஒரு சமயம் கடிவாளத்தை மீறி ஓடி எங்கேனும் வீழ்த்தித் தள்ளிவிடும். ஆடுகளின் விஷயத்தில் அந்த சந்தேகமில்லை யல்லவா? இன்னும் சில சமயங்களில் ஜமீந்தார் ஏறு குதிரை சவாரி செய் வார். இவருக்கென்று தனியாக ஒரு சின்னக் குதிரை மட்டம்-ஆட்டைக் காட்டிலும் கொஞ்சம் பெரிது-தயார் செய்து கொண்டு வருவார்கள். அதன் மேல் இவர் ஏறி உட்கார்ந்தவுடனே, அதற்கு முக்கால் வாசி மூச்சு நின்று போகும். பிராணன் கொஞ்சம் தான் மிஞ்சி யிருக்கும். எனினும் இவருக்குப் பயந்தெளியாது......

## 57

## டி. கே. சிதம்பரநாத முதலியார் (1882—1954)

தென்காசியைச் சேர்ந்த இவர் ஸ்ரீவில்லிபுத் தூரில் தாய் மாமன் வீட்டில் பிறந்தார். வழக்கறிஞ ராகப் பதிவு செய்து கொண்டார். 1927-லிருந்து 1930 வரை மேல் சட்டசபை உறுப்பினராகவும், 1930-லிருந்து 1935 வரை இந்துமத பரிபாலன போர்டு கமிஷனராகவும் இருந்தார். வாழ்நாள் முழுவதையும் தமிழ்க் கவியின்பத்தைக் கட்டுரை களின் வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமும் பிறருக்கு வழங்குவதிலேயே செலவிட்டார். தமி ழிசை இயக்கத்தின் மூலவர். ரசிகமணி என்று போற்றப்படுபவர். கம்பர் தரும் ராமாயணம், முத் தொள்ளாயிரம் ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். 'இதய ஒலி', 'கம்பர் யார்?' என்ற நூல்கள் எழுதி யுள்ளார்.

**தமிழ் வளர்த்த மன்றங்கள்**

பள்ளிக்கூடத்தில் நான் மாணவனாக இருந்த காலத்தில், தமிழ் வியாசம் எழுதச் சொல்லுவார்கள். உயர்ந்த நடையில் எழுதவேண்டும் என்றும் சொல்லு வார்கள். 'உயர்ந்த நடை' என்றால் பேச்சு வழக்குக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத முறையில் எழுதப் படுவது என்று பொருள். பஞ்ச தந்திரக் கதைகளில் ஐந்தாம் தந்திரமான 'அசம்பிரேக்ஷிய காரியத்துவம்' என்ற கதையை நெட்டுருப் பண்ணச் சொன்னார்கள்; கதையின் பெயரைப் போல், வாய்க்குள் நுழைய மாட்டாமல் திண்டாடுகிற பாஷையிலேயே எழுதவும் சொன்னார்கள். குறளுக்குப் பொருள் சொல்லுகிற தென்றால், அல்லது சீவக சிந்தாமணிச் செய்யுளுக்குப் பொருள் சொல்லுகிறதென்றால், அந்நூல்களின் உரையா சிரியர்களான பரிமேலழகர் நச்சினார்க்கினியர் முதலிய வர்களுடைய நடையை ஒட்டியே எழுதவேண்டும் என்று சொல்லுவார்கள். எப்படியோ வழக்கொழிந்த பாஷையிலேயே தமிழ் ஆசிரியர்களுக்கு மோகம் பிறந்து விட்டது. இதற்கெல்லாம் ஆங்கிலம் போதித்த ஆசிரியர்களும் துணை புரிந்தார்கள். 'கலோக்குயல்', 'கலோக்குயல்', என்று சொல்லி, ஆங்கில வியாசம் எழுதும்போதும், பேச்சு வழக்கிலுள்ள பாஷையைக் குறைத்துப்பேசி வந்தார்கள். 'கலோக்குயல்' என்ற வார்த்தையைத் தமிழாசிரியர்களும் வளமாகக் கையாண்டு தமிழ் எழுதும் முறையை வகுத்து வந்த தால், மாணவர்கள் எழுதும் பாஷையும் பேசும் பாஷையும் வழக்கொழிந்த பாஷையாய்ப் போய்விட் டது. தமிழர்களாகிய ஆடவர் பெண்டிர் அந்த பாஷையைக் காதில் கேட்டது கிடையாது; பேசியதோ, கிடையவே கிடையாது. ஆசிரியர் அரும்பத அகரா தியை எடுத்து எடுத்து வீசுகிற அதிசயச் செயலைப் பார்த்துவிட்டு, மாணவர்களும் பேசும்போது விஷயத் திலே எவ்வித கவனமும் ஆர்வமும் இல்லாமல், அரும்பதம் எங்கே என்று தேடுவார்கள். அரும்பதம் ஒன்றைக் கண்டு பிடித்து உபயோகப்படுத்திய பின், வேறொரு அரும்பதத்தைக் கண்டுபிடிக்க முயலுவார்கள். அதையும் உபயோகித்து விட வேண்டியது; பிறகு இன்னொரு வார்த்தை. இப்படியாகப் பேசுவது அவ்வ ளவும், வெறும் வார்த்தை வேட்டையாகவே முடியும்.

இப்படித் தமிழ் கற்ற மாணவர்கள் கிராம வாசிகளிடம் போய்ப் பேசி மகிழ்ச்சி உண்டாக்க முடியுமா? கொஞ்ச நேரத்துக்கு வார்த்தைகளைக் கொண்டு அம்மாணை ஆடுகிறதையெல்லாம் பார்த்து, 'ஆ! என்று கிராம வாசிகள் வியந்து கொண்டிருக்கலாம். பிறகு, விஷயம் ஒன்றுமே புரியமல் மனமும் உடம்புமே களைத்துச் சோர்ந்துவிடும்; கிராமவாசிகள் அனுபவிப்பதற்கு ஒன்றுமே இராது என்றுல் மிகையல்ல.

ஆங்கில பாஷை எப்படி உதவாமல் போய் நம்மைத் திண்டாட விட்டுவிடுகிறதோ அப்படியே தமிழும் உபயோகமற்றுப் போய் நம்மைத் திண்டாட விட்டுவிடுகிறது.

இதெல்லாம் நமது பல்கலைக் கழகம் ஆரம்பித்துக் கையாண்டு வந்த கல்வி முறை காரணமாக வந்தது.

[இதய ஒலி—2-ம் பதிப்பு: 1947, சென்னை தமிழ்ப்பண்ணை வெளியீடு.]

## 58

### ஜனுப் ஹலரத்து சே-ஹாபிலு முகம்மது இப்ருஹீம் லெப்பை ஆலிம் சாகிபு

இவரைப்பற்றிய விபரங்கள் எவையும் தெரியவில்லை. ஜைனர்களும் வைணவர்களும், வட சொற்களை அதிகமாகக் கலந்து மணிப்பிரவாள நடை என ஒன்றை உண்டு பண்ணியது போல, அரபுச் சொற்களை அதிகமாகக் கலந்து முஸ்லிம்கள் ஒரு புது நடையைக் கையாண்டார்கள். அதற்கு ஓர் உதாரணம் கீழ்க்காணும் பகுதி:

**பத்ஹுல் மன்னுன்**

(மஸ்அலா) ஒருவன் கலா தொழுது கொண்டிருக்கும் போது ஹாலிறத் தான தொழுகைக்கு வக்து தப்பி விடுமெனத் தோன்றினுல், அதை நபிலாகப் புரட்டி முடித்துவிட்டு, ஹாலிறத் தான தொழுகையைத் தொழுவது வாஜிபாம்.

(மஸ்அலா) மஸ்பூக்கானவன் மௌமூமுடைய பாத்திஹா வைச் சுமக்கத் தகுந்த இமாமுக்குப் பிறகே, நின்ற நிலையில் தக்பீர் கட்டி அவருடைய றுக்கூ விற் போய்த் திட்டமாய்த் தரித்துக் கொண்டால், அந்த றக்அத்தை யெத்திக்கொண்டான். ஆனபோதே, இமாம் றுக்கூவை விட்டும் தலையை யுயர்த்துமுன் இவன் றுக்கூவில் தரிபடவில்லையானுலும் அல்லது அப்படித் தரிபட்டதில் ஷக்கா னுலும், அந்த றக்அத்தை இமாமுடைய ஸலாமுக்குப் பின் தொழ வேண்டும். அப்படி ஷக்கா னவன் கடைசியில் ஸஜ்தா ஸஹவு செய்வான், உலு முறிச்சல் நேம மானவனும், மறதியாக அதிகமான றக்அத்தி லிருப்பவனும், ஒலுவில்லாதவனும் பாத்திஹா வைமௌமூமில் நின்றுஞ் சுமக்தார்கள் நடுத்தரமான வோதலாக பாத்திஹாவை யோதக் காணுதென்கிற நேரத்தில் இமாமுடன் வந்து கூடின மௌமூமைத்தான் மஸ்பூ கென்பதாம்.

["பத்ஹுல் மன்னுன்" - அச்சிட்டவர்: ஹக்கீம் - பா-முஹம்மத் அப்துல்லா - இந்த நூலின் பழைய பிரதி ஒன்று முன்பகுதி கிழிந்த நிலையில் கிடைத்ததால் அச்சிட்ட ஆண்டு எது என்று தெரியவில்லை.]

## 59

### த. வே. உமாமகேசுவரம் பிள்ளை (1883–1941)

இவர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்று வழக்கறிஞர் தொழில் புரிந்தாலும், தமிழில் புலமையும் பற்றும் மிக்கவராக விளங்கினுர். 1911-ல் தஞ்சாவூரில் தம்முடைய தம்பியால் தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக வீற்றிருந்து புலவர் கல்லூரியும், "தமிழ்ப் பொழில்" என்ற மாதப் பத்திரிகையும் தொடங்கித் தமிழ்த் தொண்டாற்றினுர். வட இந்தியப் பிரயாணத்தின் போது அயோத்திக்கு அருகில் உள்ள பைசாபாத் என்னும் ஊரில் காலமானுர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய "கபிலர்" என்னும் நூலுக்கு இவர் எழுதிய பதிப்புரையில் ஒரு பகுதி பின் வருமாறு:

**கபிலர்—பதிப்புரை**

உலகத்தில் ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் முன்னேர்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ள அவாவுகின்றனர். தமது முன்னேற்றத்திற்குத் தம் முன்னேர்களைப்பற்றிய உணர்ச்சி ஒரு தலையாக வேண்டற்பால தொன்றேயாம். நம் முன்னேராகிய தமிழ் மக்கள், பழைய நாளில், பல துறைகளிலும் எத்துணை மேன்மையுற்று விளங்கினுர்கள் என்பதனை அக்காலத் தெழுந்த தமிழ் நூல்களினின்றும், தமிழ் மொழியின் திருந்திய நிலையினின்றும் அறிந்து கொள்ளலாகும். பழைய தமிழ்ப் புலவர்களின் வரலாறுகளோடு, அவர்களியற்றிய நூல்களின் பொருணுட்பங்களையும் நம்மனேர் அறிந்து கொள்ளுமாறு செய்யின், அது பொதுவாகத் தமிழகத்தின் நிலைமையையே அறிவித்ததாகும். மொழி வளர்ச்சிக்கும் அஃது ஏற்ற வழியாகும். இக்கருத்துப் பற்றியே நல்லிசைப் புலவர்களின் வரலாறுகளைத் தக்க புலவர்களைக்கொண்டு, ஆராய்ச்சி முறையில் செவ்வி பெற எழுதுவித்து வெளியிடுதலை யாம் ஓர் சிறந்த கடனுக மேற்கொண்டுள்ளோம்.

ஆனுல், இவ்வரும்பணியை யியற்றுவதில் பல இடையூறுகள் தலைப்படுகின்றன. தமிழ்ப் பெரும் புலவர்களைப் பற்றிய சான்றுகள் பழைய நூல்களில் அருகிக்

கிடக்கின்றன. அவர்களைப் புரந்த அரசர்களைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாதரவுகளைத் துருவி ஆய்ந்து, தமிழ்ப் பெரும்புலவர்களின் உண்மை வரலாறுகளையும், அவர்களின் அறிவுச் செயல் ஒழுக்கங்களையும், அவர்களின் கால இயல்பு, நிகழ்ச்சி முதலியவற்றையும் வரன் முறையாக எழுதித் தரும் ஆற்றலுடைய பெரும் புலவர்களும் மிகச் சிலர். இத்துணை முட்டுப்பாடுகளையும் கடந்து வெளி வரும் நூல்களைக் கற்கும் தகுதியுடையாரும், வாங்கி ஆதரிப்பாரும் அதனினும் சிலர். என்ருலும், இத்தடைகளால் பின்னிடாது, தக்க புலவர்களின் உதவியால், ஆராய்ச்சி முறையில் எழுதத் துணிந்து கிடைத்த சில சான்றுகளைக் கொண்டு இயற்றி முடித்த நூல்களைப் பெரியார் போற்றி, எம்மை இம்முயற்சியில் ஊக்குவார்கள் என்ற துணிபுடையேம்.

[''கபிலர்''-2-ம் பதிப்பு : 1930.]

## 60

### திரு. வி கலியாண சுந்தரனுர் (1883 – 1953)

இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் துள்ளம் என்ற கிராமத்தில் பிறந்தவர். இவருடைய முன்னோர் திருவாரூரைச் சேர்ந்தோர். சென்னை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக 2 ஆண்டுகள் பணியாற்றினர். 1917-ல் ''தேச பக்தன்'' என்ற செய்திப் பத்திரிகையையும், 1920-ல் ''நவசக்தி'' என்ற வாரப்பத்திரிகையையும் தொடங்கி நடத்தினர். காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து காந்தீய வழியில் தேசத் தொண்டு ஆற்றித் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கினர். இந்தியாவிற்கே முதலாவது தொழிலாளர் சங்கமாகிய சென்னைத் தொழிலாளர் சங்கத்தை வாடியாவின் துணையுடன் தோற்றுவித்தார். இவருடைய நூல்களுள் ''முருகன் அல்லது அழகு'', ''பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை'', ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்பன சில. ''சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து'' என்ற இவருடைய நூலிலிருந்து ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

#### சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து

தமிழருக்கெனக் காவிய மாளிகைகளிருக்கின்றன; ஓவியக் கூடங்களிருக்கின்றன; இசைப் பொழில்கள் உள்ளன; வேறு பலஞான நிலையங்களும் உள்ளன. அக்காட்சிச் சாலையைக் காணுத கண்ணென்ன கண்ணே!

காவியம் : பல மொழிகளில் இயற்கைக் காவியங்கள் அமையவில்லை. மிகச் சில மொழிகளிலேயே அவை அமைந்திருக்கின்றன. அம்மொழிகளுள் நந்தமிழ் மொழியும் ஒன்றெனக் கூற யான் வரம்பிலா இறும்பூதெய்துகிறேன். தமிழனுகப் பிறந்தமை குறித்தும் யான் இறுமாப்படைகிறேன். யான் தமிழனுகப் பிறவா திருப்பனேல்—பாட்டில்—ஆ! ஆ!! தேனென இனிக்குந் தீந்தமிழ்ப் பாட்டில்—கடல் முழங்கங் கேட்பேனு; செஞ்ஞாயிற்ருெளியில் மூழ்குவேனு? வெண் டிங்கள் நிலவில் தோய்வேனு? இளந் தென்றலில் படிவேனு? அப்பாட்டுள், பசுங்கடல் பொங்கி எழுந்தாலெனவும், கருங்கடல் பெருகி எழுந்தாலெனவும் வானளாவி நிற்கும் மலைக் குலங்களைக் காண்பேனு? வெயில் மறைத்து மென் கால் வீசும் பூம்பொழிற் பந்தரிடைப் புகுவனே? மரகதக் கதிர்ப்பரப்போவெனப் பரந்து விரிந்த பசும் புல்லணையில் கிடப்பனே? தமிழ்ப் பாவில் பொலியும்—'புயல் சுமந்து விற்குவளை பவளமலர் மதி பூத்த விரைக்கொடி'களென்ன! 'யாழுங் குழலும் அமிழ்துங் குழைந்த' மழலைக் குழந்தைகளென்ன! தமிழ்க் காவிய உலகில் எத்துணை மேக மண்டிலங்கள்! எத்துணை ஏரிகள்! எத்துணை வயல்கள்! ஊர்கள் எத்தனை! நகரங்கள் எத்தனை! நாடுகள் எத்தனை! உழவு ஒருபால்—வாணிபம் மற்ருெருபால்—அரசு இன்னொரு பால்—அறம் வேருெருபால்! யாண்டும் விருந்தோம்பல்—யாண்டுங் கொடை—எங்கணும் விழா! நம் பெருங் காவியங்களில் உலகைக் காணலாம்! உயிரைக் காணலாம்; கடவுளைக் காணலாம். காவிய இன்பம் பேரின்பம்! பேரின்பம்!

தொல்காப்பியர் பொருளின்பமும், திருவள்ளுவர் அறமும், இளங்கோவின் எழிலும், திருஞான சம்பந்தர் பண்ணும், சேக்கிழார் அன்பும், கம்பர் கவியுமல்லவோ நம் பெருஞ் செல்வம்? இவையே நமது கருவூலம்—அழியாச் சேம நிதி. இந்நிதியருகே இக்காலத் தமிழர் பலர் அணுகவும் அஞ்சுகிருர். அதனுல் அவர் வாழ்வுப் பொருளிழந்து வறியராய் வாடுகிருர். அப்பெருஞ் செல்வத்தைப் பயன்படுத்த மாணுக்கர்களே! முந்துங்கள்; முந்துங்கள்.

[''சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து'' - 4-ம் பதிப்பு: 1948.]

## 61

### சுப்பிரமணிய சிவா (1884 – 1925)

வ. உ. சிதம்பரம் பிள்ளையுடன் சேர்ந்து சுதந்திரப் போரில் ஈடுபட்ட இவர் மதுரை மாவட்டம் வத்தலக்குண்டில் பிறந்து, பல ஊர்களில் தேசீயப் பிரசாரம் செய்து, சேலம் மாவட்டம் பாப்பாரப்பட்டியில் காலமானர். பரமார்த்திகத்திலும் நாட்டம் கொண்டு துறவியாக வாழ்ந்தார். மிகக்

கொடுமையான சிறைவாசங்களை அனுபவித்தார். 30-க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். 'சிறை வாசம்' என்ற அவரது நூலில் 1908-லிருந்து 1912 வரை திருச்சி, சேலம் சிறைகளில் அவர் அனுப வித்த துன்பங்கள் பின்வருமாறு விவரிக்கப் பட்டுள்ளன.

### தினசரி நடைமுறை

காலையில் 5-மணிக்கு மணியடிப்பார்கள். பதி னைந்து நிமிஷம் கழித்து மறுபடியும் மணியடிப்பார்கள். எல்லோரும் விழித்தெழுந்து வெளியே வரத் தயாராக நிற்க வேண்டும். 5½ மணிக்கு மூன்றும் மணியடிப்பார் கள். அப்போது கொட்டறைகளைத் திறந்து விடுவார்கள். கைதிகள் வெளியே வந்து உட்காருவார்கள். அதிகாரி கள் பார்வையிட்ட பிறகு கைதிகள் கக்கூசுக்கு ஓடு வார்கள். மலஜலங்களை அப்புறப்படுத்தாமல் கிடக்கும் கக்கூஸ் ஆபாசமாக இருக்கும். தவிரவும் கைதிகள் எப்படிப்பட்ட பெரியவர்களானாலும் மலஜல சட்டிகளைத் தங்கள் கையாலேயே கக்கூசுக்குச் சுமந்து செல்ல வேண்டும். தனிக் கொட்டறைக்குள்ளே சட்டிகளிலேயே கைதிகள் மலஜல விசர்ஜனம் செய்ய வேண்டும். இந்த சட்டிகளை அப்புறப் படுத்தாவிட்டால் அது பெருங் குற்றமாகிவிடும்......

மலஜல விசர்ஜனம் முடிந்ததும் கல்லையோ மண் ணையோ கொண்டு பல் துலக்கிவிட்டுக் கஞ்சி சாப்பிடு வார்கள். பிறகு வேலை. மாலை 4½ மணிக்குக் குளிப்பு. 40, 50 பெயரும் இரண்டொரு தகரக் குவளைகள் போதாமல் கையால் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டு குளிப்பார்கள். துடைப்பதற்குத் துணியில் லாததால் கௌபீனத்தை அவிழ்த்து நிர்வாணமாக நின்று துடைப்பார்கள். மாலை 5½ மணிக்குப் பழைய படியும் கொட்டறையில் அடைத்து விடுவார்கள்.

சிறைச்சாலைக்கு ஒரு ஆஸ்பத்திரியும் உண்டு. சிறைச்சாலையைப் பல சர்க்கார் அதிகாரிகளும், பிரமுகர் களும் பார்வையிட வருவதுண்டு, அவர்களிடம் குறை களை எடுத்துச் சொல்ல கைதிகள் அஞ்சுவார்கள். காரணம் ஜெயில் அதிகாரிகளுக்குப் பயந்துகொண்டு தான். அப்போது சேலம் ஜில்லாவில் தேசாபிமானி ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் அவர்கள் சிறை களைப் பார்வையிட வருவார்கள். அவர்களால் எனக்கு நியாயமான பல நன்மைகள் ஏற்பட்டன.

சிறைச்சாலை வார்டர்கள் தங்களைச் சக்கரவர்த்தி களாக நினைத்துக்கொண்டு கைதிகளைக் கொண்டு தங்கள் உடம்பைப் பிடித்துவிடச் செய்து கொள் வார்கள்.

ராஜீயக் கைதிகளை மிகக் கொடூரமாக நடத்துவார் கள். இரவிலும்கூட ராஜீயக் கைதிகளின் கொட்டறை களைச் சோதனை போடுவார்கள்.

சகோதர, இப்பரந்த உலகில் உள்ளதைப் போலவே தீமைகளும், கஷ்ட நஷ்டங்களும் சிறைகளில் இருக் கின்றன. நாம் சத்தியத்துக்காகப் போராடுவதால் சிறைச் சாலைகள் நமக்குத் தவச் சாலைகளே. ஆகவே ஜன சமுதாயத்தினுடைய சுதந்திரத்தைக் காப்பாற்று வதற்காகக் கம்பீரமாகச் சிறைச்சாலைக்குச் செல்லுதல் வெகுமானமேயாம். ஆகையால், சகோதர, மயங்காதே பிரமிக்காதே, சத்தியாக்கிரகியாய் விடு. வந்தே மாதரம்!

[''சக்தி'', ஆகஸ்டு, 1948.]

## 62

### ந. மு. வேங்கடசாமி நாட்டார் (1884 – 1944)

இவர் தஞ்சை மாவட்டத்தில் நடுக்காவேரி என்னும் ஊரில் பிறந்தவர். திருச்சி ஹீபர் கல்லூரி, கோயமுத்தூர் தூய மிக்கேல் உயர் நிலைப்பள்ளி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய கல்வி நிலையங்களில் தமிழாசிரியராகவும், கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவராகவும் பணியாற்றியவர். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். நக்கீரர், கபிலர், பரணர் முதலிய பல வரலாற்று நூல்களும் இயற்றியிருக் கிறார். சென்னையில் 1940-ல் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் மகா நாட்டில் இவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவர் எழுதிய ''கபிலர்'' என்ற நூலிலிருந்து ஒரு பகுதி.

### கபிலர்

......இவ்வாறு வேள் பாரியானவன் கபிலர் பாடும் புகழுடையோனாய் விளங்கினான். அவனது புகழ் நாடெங்கும் பரந்தது. அக் காலத்துச் சேர, சோழ, பாண்டியர்களில் வீரத்தினும், நீதியினும் மேம்பட்ட பேரரசர் சிலரிருந்தனர், அவருடன் பகை கொண்டு அரசின்றி திரிந்தாரும் சிலருண்டு. அங்ஙனம் திரிய லுற்றுர் மூவர் ஒருங்கு கூடிப் படைகளைத் திரட்டிச் சென்று, பாரியின் பறம்பென்னும் மலையரணை முற்றுகை யிட்டனர். அவ்வரணோ, நீர், நிலன், காடு என்பவற்றுற் சூழப்பட்டது, ஏணிக் கெட்டாத வுயர்ச்சியும், புறத் தோர்க்குத் தோண்டலாகாத அடியகலமும், அகத் தோர்க்கு நின்று வினை செய்தற்காம் தலையகலமும், கல்லானும் இட்டிகையானும் செய்யப் பட்டமையின் குத்தப் படாத திண்மையும் உடைய மதிலினை யுடையது; அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றை யும் உடையது; தலைவன்மாட்டன்பும், மானமும், மறமும், சோர்வின்மையும் முதலிய நற்குணங்களுடை யராய், உற்றுழியுதவும் வீரரையுடையது. மற்றும், அரணுக்கு வேண்டும் பிற மாட்சிகளையும் உடையதாய் மடிந்திராது ஏற்ற வினையை அளவறிந்து செய்து காக்க

வல்ல வினை மாட்சி யுடையாரையும் உடைத்தாய் இருந்தது. ஆதலின் அஃது எத்துணைப் படை மாட்சி யுடையரானும் எளிதிற் பற்றப் படுவது ஒன்றன்று. மூவரது முற்றுகையும் நெடுங் காலஞ் சென்றது. அரண், அடைமதிற்பட்டிருந்த காலை, அகத்துள்ளார் உண வின்றி வருந்தாவண்ணம், அங்கிருந்த புலவர் பெருமா னுகிய கபிலர், கிளிகள் பலவற்றைப் பயிற்றி விடுத்து, அரசனுக்குப் புறத்தேயுள்ள விளைநிலங்களிலிருந்து நெற்கதிர்களை நாடோறும் கொய்து வரச் செய்து அங்குள்ள குடிகளையும், படைகளையும் உண்பித்துக் காப்பாற்றி வந்தனர்.

[''கபிலர்'', 2-ம் பதிப்பு: 1930.]

## 63

### எஸ். ஜி. இராமனுஜலு நாயுடு (1886-1935)

திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர். ''பிரஜாநு கூலன்,'' ''ஆநந்த குணபோதினி'' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர். ''அமிர்தவல்லி'' ''அபூர்வ சிந்தாமணி'' போன்ற நூல்கள் இயற்றிய வர். எழுதியுள்ள கட்டுரைகளும் கதைகளும் பல. அவர் காலத்தின் சிறந்த வசன இலக்கிய கர்த்தாக் களில் ஒருவராகப் போற்றப்பட்டவர். ஸ்ரீ ரங்கத்தில் காலமானுர். இவருடைய ஒரு கட்டுரையிலிருந்து சிலபகுதிகள்.

#### புதிய ஊக்கம்

நீ உலகத்திலே பிறந்து விட்டாய். மறுபடியும் திரும்பிப் போவது உன் ஸக்தியிலில்லை. அது உன் இஷ்டப்படி நடக்கிற காரியமு மல்ல. கடைசிகாலச் சிட்டு எப்போது வருமோ தெரியாது. மானுஷ்ய சரீரத்திலே இப்போது உன் ஆத்மா நிற்கிறது. எப்படியோ வளர்த்து உன்னை வாலிபம் செய்து விட் டார்கள். நீயும் ஒரு உருவாகி விட்டாய். சோதனை காலத் துவக்கம் இதோ தொடங்கிக் கொண்டது. இனி உனக்கு நீயே உழைத்துப் பிழைத்து உயிர்வாழ வேண்டும். நாலு பேருக்கு நடுவில் நீயும் ஒரு மனிதனுக வேண்டியிருக்கிறது. உன் ஜீவயாத்திரையில் முதல் அத்தியாயம் முடிந்து விட்டது.

* * *

இது வரையில் கழிந்த காலம் உன்னைத் ''தயார்'' செய்வதற்காகச் செலவழிந்தது. உன்னைத் தயார் செய்தது உன் தாயார்; அல்லது உன் தாயின் மற்ருெரு பாதி அம்ஸமான உன் தந்தை; அல்லது அவர்களுக்கு வேண்டிய உறவின் முறையார்—நண்பர், சுற்றம், துணைவர்கள். பாடசாலையினின்று திரும்பியதும் வீடு உன் வரவுக்கு எதிர்பார்த்து நின்றது. யாவும் நின் பிரியத்திற்கேற்பச் சித்தமாயிருந்தது. கவலையற்று உண்டு சென்ருய். அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. நீ வெளியிற் செல்வதற்குமுன் வீட்டிற்கு வேண்டிய யாவும் சித்தம் செய்துவிட்டு, பிறகே நீ புறப்படவேண்டியிருக்கிறது. நீ சித்தம் செய்யத் தவறி ஞல் அன்னப் பிடி வெல்லப் பிடி!.........

இங்குதான் நீ புதிய ஜீவன் பெறவேண்டும். நவஸக்தி உன்னில் உதயமாக வேண்டும். உன் ஜீவிய இன்பம் திருப்தியுள்ளதாக அமைக்கப்படல் வேண்டும். ஆரம்பத்திலேயே பலமான அஸ்திவாரம் போடு. ''புதிய ஊக்கம்'' கொள். பின்னொரு காலத்தில் ஹாயி யாக இளைப்பாறுதற்கான மார்க்கம் கண்டு நல்ல இடத்தில் விதையை விதை. உயர்ந்த லக்ஷியங்களையே உன் நெஞ்சில் நிறைவித்துக்கொள். புதிய ஊக்கம் பெறு. எப்பொழுதும் ஊக்கமுள்ளவனுயிரு. ஒரு வேந்தனுக இருக்க வேண்டுமென்று சிந்தனை கொள்ளா விடினும் அதற்கு அடுத்த படியில் உன்னை ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? கிடைத்தற்கரிய மானிட சரீரத்தை நீ பெற்றுவிட்டதற்குப் பிறகு—உன்னுல் எந்தக் காரியம் தான் ஆகாது? எதுதான் நடவாது? முயற்சியுள்ளவனுக்கு எதுதான் சித்திக்காது? புதிய ஊக்கம் உள்ளத்திலே நிறைந்து ததும்பப் பெற்றவனுக்கு புது நிலைகள், பதவிகள் உண்டாவதும் ஒரு புதுமையா?.........

* * *

ஹைகோர்ட் ஜட்ஜியான ஸர் முத்துஸாமி ஐயரவர் களும் ஒரு பரம ஏழையே. புதிய ஊக்கமே அவரை உன்னதத்திலிருத்தியது. ஜகத்பிரசித்தியான ''ஹிந்து'' பத்திரிகை ஆதியிலே தபாற் செலவுக்கின்றி ஒரு 12-அணு கடன் வாங்கியிருக்கிறது. இப்போது அதன் பிரபலம்—வியாபகம் எப்படி? புதிய ஊக்கமே அதை உயர்வித்தது. ''காங்கிரஸ்'' மகாசபையின் ஆரம்பம் எப்படி? அவ்விதமாக ஒரு சபை கூட்டுவிக்க வேண்டு மென்று பம்பாயில் சிலரே சேர்ந்து ஒரு சிறு சபை கூட்டினர். அது போட்ட ஒரு சிறு விதைதான் இப்போது தேச வியாப்தமான ராஜீய சபையாகப் பரிணமித்தது. இவ்வளவுக்கும் காரணம் புதிய ஊக்க மன்ருே?

[''கதாரத்னகரம்''—''சுதேசமித்திரன்'' காரியால யத்தாரின் மாதப்பத்திரிகை, அக்டோபர், 1920.]

## 64

### கா. சுப்பிரமணிய பிள்ளை (1888—1945)

திருநெல்வேலியில் பிறந்தவர். எம். ஏ. எம். எல். பட்டம் பெற்ற இவர் ''எம். எல். பிள்ளை'' என்றே அழைக்கப்பட்டார். 8 ஆண்டுகள் சட்டக் கல்லூரிப் பேராசிரியராகவும் பின்பு அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பணியாற் றினர்.

1920-ல் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் தாகூர் சட்டச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி 10,000 ரூபாய்ப் பரிசு பெற்ருர். 1940-ல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இவருக்கு "பல்கலைப் புலவர்" என்ற பட்டம் வழங்கியது. திருவாசகம், திருக்குறள் போன்ற நூல்களுக்கு இவர் உரை எழுதியிருப்பதுடன் "தமிழர் சமயம்" முதலிய உரை நடை நூல்களும் இயற்றியுள்ளார். அந்த நூலில் ஒரு பகுதி பின்வருமாறு:

### தமிழர் சமயம்

தமிழ்மக்களின் பெருங்குறை சமய வாழ்க்கையைச் செவ்விதின் நடத்தாமையே ஆகும். ஒவ்வொரு தமிழனும் காலையில் எழுந்தவுடன் இயன்ற சுத்திசெய்து கொண்டு முழுமுதற் கடவுளை மனத்தில் நினைத்து வாயினால் வாழ்த்தி மெய்யினால் தொழவேண்டும். அதற்குப் பத்து விநாடிகள் போதும். திருவள்ளுவர் நூலுக்குரிய கடவுள் இலக்கணத்தை நினைதல் நலம். அருவுருவ வழிபாடு செய்ய விரும்புவோர் சிவ பூசை செய்யலாம். வைணவர்கள் சாலக் கிராமம் முதலியவற்றை வணங்கலாம். உருவ வழிபாடு செய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் மனத்திற்கு இயன்ற திருவடிவத்தில் இறைவனை வழிபடலாம். நாள்தோறும் காலையிலாவது மாலையிலாவது கோயிலுக்குப் போக வசதியுள்ளவர்கள் அவ்வாறு செய்யலாம். அல்லது வாரத்தில் ஒரு நாளிலாவது, மாதத்தில் ஒரு நாளிலாவது, விழாக் காலத்திலாவது கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடலாம்.

ஒவ்வோர் ஊரிலும் தமிழர் சமய சங்கம் ஒன்று நிலையிட்டுக் குறித்த நேரத்தில் தமிழர் சமயத்தார் எல்லாம் அங்கே கூடி இறைவனுடைய குணங்களை ஒருங்கு நினைத்துப் பாடல் ஓதுதல் நலம். ஒரு விளக்கையோ அல்லது பிற அருவுருவ வடிவத்தையோ, அல்லது தத்தம் மனத்துக் கிசைந்த நடேசர், முருகர், பெருமாள் முதலிய உருவத் திருவடிவங்களையோ அமைத்து ஒவ்வொருவரும் மலர் தூவிப் போற்றுதல் செய்யலாம். ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இரு தரத்தாரும் ஒவ்வொருநாளும் சிலவிநாடியாவது இறைவன்பால் அன்பு செலுத்த வேண்டும் என்பதே கட்டாய விதியாய் இருத்தற்குரியது. அகவாய்மையும், தூய்மையும் இல்லாது இறைவனை வழிபடுவதால் பெரும்பயன் விளையாது. நம் முன்னோர் பயன் கருதாது வழிபடுவதிற் சிறந்து விளங்கினர். ஒழுக்கத்தோடு கூடிய வழிபாட்டினையே நம்மவர்கள் போற்றினர். "போதும் பெருவிடிற் பச்சிலையுண்டு புனலுண்டு மற்றெங்கும் ஏதும் பெருவிடில் நெஞ்சம் உண்டே," என்று பட்டினத்தடிகள் அருளிய வண்ணம் மலர், நீர், தேங்காய், பழம் முதலியன ஒன்றுங் கிடையாதவிடத்து மனத்தினால் மட்டும் அன்பு செலுத்தினாலும் இறைவனுக்கு அது போதுமானது என்பதே நம்மவர்கள் கொள்கை. 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும், இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்' என்றபடி உயிரின் கண்ணும் உடலின்கண்ணும் இறைவனை வழிபடுதலும் சிறந்த முறையே. அப்போது உயிர்கட்குச் செய்யும் ஊழியமே கடவுள் திருப்பணியாய் முடியும்.

[திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு: 2-ம் பதிப்பு, மார்ச்சு, 1953.]

## 65

## ஆர். வெங்கடாசலம் பிள்ளை (1888—1953)

தஞ்சை மாவட்டம் கந்தருவ கோட்டையில் பிறந்தவர். பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழாசிரியராகவும், கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சராகவும் பணி புரிந்தவர். இவருடைய 60-ம் ஆண்டு நிறைவு விழாவில் அந்தத் தமிழ்ச் சங்கத்தில் இவருக்கு "கரந்தைக் கவியரசு" என்ற பட்டமும் ஆறுயிரம் ரூபாயும் வழங்கிக் கௌரவித்தனர். இவர் அகநானூற்றுக்கு உரை எழுதியிருப்பதுடன் ஆசாறுற்றுப் படை, சிலப்பதிகார நாடகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

1928-ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி கரந்தைத் தமிழ்க் கல்லூரி ஆண்டு விழாவில் நடிப்பதற்கென இவர் எழுதிய "புகழேந்தி-ஒட்டக்கூத்தர்" என்ற நாடகத்தின் ஒருபகுதி:

**கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கல்லூரிச் சிருர் நடிப்பதற்குக் காலநிலையை ஒட்டி எழுதப் பெற்றதொரு சிறு நாடகம்**

**காட்சி—க**

**இடம்:**—பாண்டியன் அரசவை.

**உரியோர்:**—வீரபாண்டியன், அவன் மகள் செந்தமிழ்ச் செல்வி, புகழேந்தியார், முருகனுர், மாறனுர், மருதனுர், ஒட்டக்கூத்தர், ஏவலாளர்.

**பாண்:**—புலவர்காள்! செந்தமிழன்னைக்கு இன்று எவையேனும் புதிய அணிகள் இயற்றியிருக்கின்றீர்களா?

**முரு:**—அரசே! நம் செந்தமிழ்ச் செல்வியார் தமிழ்த் தாயின் சிறப்பினைக் குறித்து ஒரு வெண்பா யியற்றியுள்ளார்.

**பாண்:**—நன்று! அம்மா! அதனைக்கூறு, கேட்போம்.

**செல்:**—அப்பா! எளியேன் இயற்றியதும் ஒரு பாட்டு ஆகுமா? அதனையும் இப்புலவர் பெருமக்கள் முன்

கூறுவதா? அஃதிருக்கட்டும்; இப்புலவர்களியற்றிய அரிய செய்யுட்களேயும் பெரிய ஆராய்ச்சிகளேயும் கேட்டு மகிழ்வோம்.

புக :—அன்னய் வாழி! உன் செய்யுளையே முதலில் கேட்கும் அவாவுடையேம். அன்புகூர்ந்து கூறுவா யாக.

செல் :—தந்தாய்! உங்கள் பணி இதுவாயின், ஏதோ அதனைக் கூறுகிறேன்.

### வெண்பா

உதியன் வரையில் ஒழுகு சுவைத்தேனே!
பொதியி லிளங்காலின் பொற்போ!—மதுகரங்கள்
நண்ணு மலர்நாடு நல்கு திருமணமோ!
என்னே தமிழின் எழில்!

மரு :—ஓ! என்ன அழகிய வெண்பா! ''வெண்பாவிற் புகழேந்தி'' என்பாரின் அன்பார்ந்த மாணவி யன்றோ! சேர நாட்டுத் தேன், பாண்டிய நாட்டுத் தென்றல், சோழ நாட்டு மலர் இவற்றால் எய்தும் இன்பங்களைத் தருவது தமிழ் என்று பொருள்படு கின்றது. என்ன அழகிய வெண்பா! எங்கே அம்மா, இன்னொரு முறை அவ்வெண்பாவினைக் கூறு.

செல் :—உதியன் வரையில்.........தமிழின் எழில்.

முரு :—இவ்வெண்பாவில் ஐம்புல வின்பங்களையும் அமைத்துப் பாடிய அழகு வியக்கத்தக்கது. தேன் என்றதால் சுவையும், தென்றல் என்றதால் மெய்யின் பமும், மதுகரங்கள் நண்ணும் என்றதால் இனிய ஒலியும், மலர் என்றதால் அழகிய காட்சியும், திருமணம் என்றதால் நறிய மணமும் கூறியிருப்பது உற்று நோக்கத்தக்கது. (அவ்வெண்பாவினைக் கூறல்.)

மாற :—புலவர்காள்! இவ்வினிய வெண்பாவில் உள்ள உள்ளுறை ஒன்றை உற்று நோக்கினீர்களா? சோழ நாடு திருமணம் நல்குமாமோ! இத்திருமணம் பூவின் நறுமணம்தானே? அன்றி மணமக்கள் திருமணமோ? ''மதுகரங்கள் நண்ணும் மலர்நாடு நல்கு திருமணமே'' என்பதை உற்று நோக்குங்கள்.

செல் :—இப்புலவர்க்கு இதுதான் வழக்கம். எதனிலும் உள்ளுறை என்று இல்லுரைகள் பொருத்திக்கூறுவார்.

[''தமிழ்ப் பொழில்''—துணர் 3 : மலர் 9-12 பிலவ ஆண்டு.]

## 66

## வ. ரா. (1889—1951)

வ. ரா. (வ. ராமசாமி ஐயங்கார்) தஞ்சை மாவட்டம் திங்களூரில் பிறந்தவர். ''சமரச போதினி,' 'ஊழியன்,' கொழும்பு 'வீரகேசரி,' 'மணிக்கொடி,' 'நவயுகம்' ,போன்ற பத்திரிகை களில் பணியாற்றியவர். சமூக சீர்திருத்தத்தில் ஈடுபாடு கொண்டவர். சுதந்திரப் போரின் போது சிறை சென்றிருக்கிருர். சென்னேயில் காலமானுர். 'மகாகவி பாரதியார்', 'நடைச் சித்திரம்', 'சுந்தரி', 'விஜயம்' போன்ற பல நூல்களின் ஆசிரியர்.

### தேகம் அநித்தியம்

தேகம் அநித்தியம் என்று சதா பிதற்றும் முட்டாள், அந்த உண்மையைக் கண்டு பிடித்தவனல்ல. ஆனல், அதைத் தவருன போக்கில், தவருன காலத்தில், பல வீனம் நிறைந்த கூக்குரலில் (குரலில் என்று எழுத எனக்கு இஷ்டமில்லே) இப்பொழுது சொல்லித் தவிக் கிருர்கள்.

தேகம் அநித்தியம் என்று முதன் முதலில் கண்ட வர்கள், அந்த உண்மைக்கு இணங்க, உடனே தங்கள் பிராணனே விட்டுவிடவில்லே. அவர்களும் அவர்கள் சந்ததியார்களும் வேதம் ஓதினுர்கள். உபநிஷதங்களே படித்து, அவைகளேத் தழுவி வாழ்க்கை நடத்தினுர்கள். புராண இதிகாசங்களே எழுதினுர்கள். காவிய ரஸத்தை அனுபவித்தார்கள். நட்சத்திர மண்டலத்தைக் கணக் கெடுத்தார்கள். நாடகம் ஆடியும், பார்த்தும் களித் தார்கள். சங்கீதம் பயின்ருர்கள். சித்திரம் வரைந் தார்கள். சண்டைக்குச் சளேக்கவில்லே; பயப்படவு மில்லே. 'பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசா'சைக் கண்டு ஏளனம் செய்யவில்லே. நடுங்கவுமில்லே. 'பொங்கலோ பொங்கல்' என்று குடியானவர்கள் சொல்லுவதைப் போல, முற்காலத்தில் 'காதலோ காதல்' என்று கோஷம் செய்ததை கம்பன், காளி தாஸன் மூலமாய்க் காணலாம்......

தேகம் அநித்தியம் என்று போலி வேதாந்தக் கூச்சல் போடும் ஆசாமிகளே நீங்கள் பார்த்திருக்கிறீர் களா? தேகம் நிலேக்கா தானபடியால், இன்றைய பொய்யை இன்றைக்கே கோர்ட்டில் சொல்லி, அதற் காகப் படிப் பணத்தையும் ஆனந்தமாய் இரண்டு கை களேயும் நீட்டி வாங்கிக் கொள்ளுவார்கள். அவர்கள் வரன்முறையின்றி, பொய்ச் சத்தியப் பிரமாணம் செய் வதில் வல்லவர்கள். நாளேக்கு என்று சாப்பாட்டை அவர்கள் ஒத்திப்போட மாட்டார்கள்.

தேகம் அநித்தியம்; ஆகவே, ஒன்றுக்கு இரண் டாய்ப் பெண்டாட்டிகள் இருக்கட்டுமே என்பது அவர் களது முடிவு. அந்த இரண்டு பேர்கள் மாண்டுபோய் தொந்தி தரையை அணுகி, தலே நரையை நாடினுலும் அவர்கள் நெஞ்சம் கலங்குவதில்லே. மூன்ருவது சம்சா ரத்தை வீட்டில் வந்து குதிக்கும்படி செய்து விடுவார் கள். 'குழந்தே, என் தொந்தியைக் கண்டு பயப் படாதே. நீ எனக்கு சம்சாரமாய் நேரவேண்டிய பிராப்தி இருந்தது: பகவான் ஆச்ஞை!' என்று பாதிப் பற்கள்

## அடிமையுணர்வின்றி காவிய ஆராய்ச்சி

தமிழ்க்காவியப் பயிற்சியில் சில புது முறைகள் கொள்ளப்பெறுதல் நலம். கதைக்கும், பதவுரைக்கும், இலக்கணக் குறிப்புக்கும் மட்டும் காவியங்களைப் பயில்வதால் காவியங்களின் நோக்கம் நிறைவேருது. ஆங்கிலமும் தமிழும் பயின்ற சிலர் அடிமை யுணர்வின்றிக் காவியங்களை ஆராய்ந்து பல நுட்பங்களை இப்பொழுது வெளியிட்டு வருவது ஆறுதலளிக்கிறது. இடைக் காலத்தில் விழ்ந்து பட்ட தமிழ்க்காவிய உணர்வுக்கு இந்நாளில் புத்துயிரளித்தது ஆங்கில உணர்வு என்பதை மறத்தலாகாது.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

[" சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து " என்னும் நூலிலிருந்து]

செத்துச் சொத்தையாய்ப் போன வாய் நிறைய அவர்கள் அட்டஹாசம் செய்வார்கள்......

["மழையும் புயலும்"-3ம் பதிப்பு: 1950-நவயுகப் பிரசாராலயம், சென்னை-1.]

### 67

### கலாநிலையம் டி. என். சேஷாசலம் (1891—1938)

இவருடைய வரலாற்றைக் கூறும் ஒரு கட்டுரையை இதே மலரில் வேருரிடத்தில் காணலாம். தஞ்சை மாவட்டத்தில் பிறந்து சென்னையில் கால னவர். அப்போது இவருக்கு வயது 47. வழக் றிஞராக இருந்தார். ஏழை மாணவர்க்கும் பிறர்க் கும் தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தார். 'கால நிலையம்' என்ற ஒரு வாரப் பத்திரிகையைச் சுமார் 7 ஆண்டுகள் நடத்தினர். கம்பருடைய இலக்கியச் சுவையை மக்களுக்குப் புகட்டுவதும், மக்களிடையே பரப்புவதுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார். வாலியின் மனைவி தாரையைப்பற்றி அவர் எழுதி இருக்கும் ஒரு கட்டுரைப் பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

#### தாரை

தகவுடைய பெருமாட்டி இவள் இவள் என்று இத் தாரை கழறிய ஒவ்வொரு சொல்லு மழகிற் றழைத்த நிழலைப் பரப்பி நவிலலாகின்றது. வாலியை வஞ்சனையாற் கொல்வித்தான் அச்சுக்கிரீவன் என்று அவன்பால் யாதும் வன்மம் வைத்தாளலள். அப்பழியினை இன்று தீர்த்துக் கொள்ளும் வேளையொன்று தானே வந்து தன் கை புகுந்ததெனக் களித்தாளல்லள். தன்னுயிரினு மினிய நாயகனை இழப்பித்த வகையில் தனக்குத் தாங் கருந் தீங்கு செய்தானென்றச் சுக்கிரீவனை வெகுண்டொரு சொல் விளம்பாத இவ் வுயர் குணத்துத்தமி, இன்று இராமபிரான் செய்த வுதவியைக் கொன்றிச் சுக்கிரீவன் தீது இயற்றினனெனவே சினமுறச் சில சொல்லுகின்ருள். இன்னணம், தனக்குப் பிறர் தீது செய்யுங்கால், அவரை நோகாமல் தன் விதியே எனத் தனித்திருந்து, பிறர் பிறர்க்கு இன்ன செய்யுங்கால், வெகுள்கின்ற இச் செம்மைசேர் சீற்றம் உடைமையின் இந் நல்லாள் அன்று அந்நகர்ப் புறம் போந்துள இளைய காளை இலக்குவனையே ஒக்கின்ருள். செய்வதற்கரிய உதவி செய்த இராமனது துன்பத்தை நீக்கவிரையாமல் கள்ளினும் காவிநாண்மலர்க் கண்ணயர் நல்குமொரு காதலிலும் உழன்று கிடந்த சுக்கிரீவனது தகவின்மையைக் கருதி வெகுள்கின்ற வாங்கே, அதனுல் அவன் கேடடைய நிற்றலை நினைத்து மிக இரங்குமொரு தாரையின் இந்நீர்மை தனித்ததோர் சிறப்பு வாய்ந்து விளங்குகின்றது. அது தானுமன்றி, குற்றமிழைத்த தத்தனையும் சுக்கிரீவன் ஒருவனேயானுலும், அங்கதனையும் அனுமனையும் உடன் சேர்த்து முன்னிலைப்படுத்தும் இது, செய்யப்பட்ட குற்றத்தைச் சினந்து பேசுகின்ருளல்லது செய்தவனை ஏசுகின்ருள் அல்லள் என்பதை நுண்ணிதின் தெரிவிக்கும்.

["கலாநிலயம்" : 28—3—1935.]

### 68

### எஸ். வையாபுரிப் பிள்ளை (1891—1955)

திருநெல்வேலி நகரைச் சேர்ந்த சிக்க நரசையன் கிராமத்தில் பிறந்தவர். சுமார் 10 ஆண்டுகள் திருநெல்வேலியிலும் திருவனந்தபுரத்திலும் வழக்கறிஞராகப் பணியாற்றிவிட்டுத்தமிழ்த் தொண்டில் ஈடுபட்டார். சென்னை திருவனந்தபுரம் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறைத் தலைவராகவும், தமிழ் லெக்ஸிகன் என்ற பேரகராதியின் ஆசிரியராகவும் வீற்றிருந்த ஆராய்ச்சியாளர். 1938-ல் இவருக்கு அரசாங்கம் 'ராவ்சாகிப்' பட்டம் வழங்கியது'. 'தமிழர் பண்பாடு,' 'காவிய காலம்,' 'தமிழ்ச் சுடர் மணிகள்' போன்ற பல நூல்களை இயற்றியிருப்பதுடன் சுமார் 40 தமிழ் இலக்கியங்களையும் பதிப்பித்துள்ளார். தமிழ்ப் புலமையுடன், மலையாளம், வடமொழி, ஜெர்மன், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் புலமை பெற்றவர். சென்னையில் காலமானர்.